


**நான்காம் தமிழ்ச் சங்கம் - மதுரை**

**செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி**

*(தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் A தரம் பெற்றது.*
*மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைப்பு பெற்றது)*

**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்**

**அரண் தமிழ் அறக்கட்டளை**

**இணைந்து நடத்தும்**

# தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

**கருத்தரங்க நாள்: 17.10.2024 வியாழக்கிழமை**

**இடம்: வைரவிழா அரங்கம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை**


**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் **கி.வேணுகா**
இணைப்பேராசிரியர். ஆங்கிலத் துறைத்தலைவர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முனைவர் **பூ.பூங்கோதை**
இணைப்பேராசிரியர், துறைத்தலைவர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முனைவர் **பிரியா கிருஷ்ணன்**
நிர்வாக ஆசிரியர், அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

## தொகுதி - 1


**கருத்தரங்க ஆலோசனைக் குழு**

முனைவர் **ஜெ.போ.சாந்திதேவி**
முதல்வர் (பொ..)
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்**

முனைவர் **கி.வேணுகா**
இணைப்பேராசிரியர். ஆங்கிலத் துறைத்தலைவர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முனைவர் **பூ.பூங்கோதை**
இணைப்பேராசிரியர், துறைத்தலைவர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முனைவர் **பிரியா கிருஷ்ணன்**
நிர்வாக ஆசிரியர், அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

**கருத்தரங்க இணை ஒருங்கிணைப்பாளர்கள்**

முனைவர் **பா.நேருஜி**
முனைவர் **சு.மலர்விழி**
முனைவர் **பெ.இந்துராணி**
முனைவர் **சா.கணேசன்**
உதவிப்பேராசிரியர்கள், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**ஒருங்கிணைப்பு குழு**

முனைவர் **கோ.சுப்புலெட்சுமி**
முனைவர் **மா.செல்வத்தரசி**
முனைவர் **பி.ஆறுமுகம்**
முனைவர் **அ.நந்தினி**
முனைவர் **மு.செந்தில்குமார்**
முனைவர் **ஜெ.கோகிலா**
முனைவர் **தி.பிருந்தா**
திரு **வீ.அதிவீரபாண்டியன்**
திரு **உ.இராஜீவ்காந்தி**


---


மொத்த பக்கம் : xii+256= 268

ISSN : 2582 - 399x

# வாழ்த்துரை

**வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி**
செயலாளர்,
நான்காம் தமிழ்ச்சங்கம்,
மதுரை

*பழமையும் பெருமையும் ஒருங்கே அமைந்த மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் தமிழ்க் காப்புப் பணியை முதன்மை நோக்கமாகக் கொண்டு வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவரின் பெரும் முயற்சியால் 1901ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தொடங்கப்பட்ட நோக்கம் குன்றாமல் 123 ஆண்டுகளாகத் தொடர்ந்து தொய்வின்றி செயல்பட்டு வருகிறது. பழைய ஏடுகளைத் தொகுத்தும் பதிப்பித்தும் அறிஞர்களின் ஆய்வுத் திறத்தினைப் பரப்பும் நோக்கோடு 1902ஆம் ஆண்டு செந்தமிழ்த் திங்கள் இதழ் தொடங்கப்பட்டது. செம்மொழியாக அங்கீகரிக்க காரணமாய் அமைந்த பரிதிமாற் கலைஞரின் உயர்தனிச் செம்மொழி எனும் கட்டுரை வெளிவந்தது இவ்விதழில்தான். அறிஞர்களின் ஆய்வுத் திறத்தினைச் சிறப்பாக வெளியிட்டும் நற்றமிழ் கல்வியளித்தும் தமிழுக்கு அணி சேர்த்து வருகிறது. ஒரு மொழியின் பெருமை தொன்மையால் மட்டும் ஆகாது தொடர்ச்சியால் அமையப்பெறும். எனவே மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கல்லூரி தமிழ் வளர்ச்சிப் பணியின் தொடர்ச்சியாய் பல கருத்தரங்கம், பயிலரங்கம் நடத்தி தமிழாராய்ச்சிப் பணிகளுக்கு அணிசேர்த்து வருகிறது. உலகின் மூத்த மொழியாகத் தமிழும் பண்பாட்டில் சிறந்தவர்கள் தமிழராகவும் இருந்துள்ளனர் என்பது ஆய்வாளர்கள் வழி அறியப்படுகிறது. அத்தகைய சிறப்புமிக்க பண்பாட்டினை எடுத்தியம்பும் வகையில் ஐந்து நாள் ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடத்தி அதன் தொடர்ச்சியாய் பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்தத் திட்டமிட்டு பண்பாட்டு விழுமியங்கள் அடங்கி கருத்துப்பேழையாக அமைந்த ஆய்வுக் கோவையினை வெளிக்கொணர்ந்திருக்கும் ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் கி.வேணுகா மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் இணைப்பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை ஆகியோர் மேலும் பல கருத்தரங்குகள் நடத்த வாழ்த்துகள். இணை ஒருங்கிணைப்பாளர்களாச் செயல்பட்ட உதவிப் பேராசிரியர்கள் முனைவர் பா.நேருஜி, முனைவர் சு.மலர்விழி, முனைவர் பெ.இந்துராணி, முனைவர் சா.கணேசன் ஆகியோருக்கும் பாராட்டுகள். இக் கருத்தரங்கில் இணைந்து சிறப்பாக ஆய்வுக்கோவை வெளிவர துணைநின்ற அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் மற்றும் அரண் தமிழ் அறக்கட்டளை நிருவாகத்தினருக்கு நன்றியும் பாரட்டுகளும்.*

# வாழ்த்துரை

**திருமதி இராணி இலக்குமி குமரன் சேதுபதி,**
செயலர்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - 625 001

*எம் நான்காம் தமிழ்ச் சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில் பணியாற்றும் இணைப் பேராசிரியர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் கி.வேணுகா ஆகியோர் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், முதல்வர் ஆகியோர் அரண் பன்னாட்டுத் தமிழாய்விதழோடு இணைந்து 17.10.2024 அன்று நடத்தும் "தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்" என்னும் பொருண்மையிலான கருத்தரங்கில் வெளியிட இருக்கும் மலரைக் கண்டு பெருமிதமும் மட்டற்ற மகிழ்ச்சியும் அடைகின்றேன்.*

*தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழு (NAAC) நமது கல்லூரிக்கு 'A' தரச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இதற்காகக் கடுமையாக உழைத்த நான்காம் தமிழ்ச் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி, முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோருக்கு நன்றிகூறக் கடப்பாடுடையேன். நம் கல்லூரி இத்தகுதியைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு மென்மேலும் வளரவும், நன் மாணாக்கர்களை உருவாக்கவும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அர்ப்பணிப்பு உணர்வோடு செயலாற்றவும் தொடர் முயற்சிகளிலும் கடின உழைப்புகளிலும் ஈடுபட வேண்டியுள்ளது.*

*இத்தருணத்தில் 'தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்' என்னும் தலைப்பிலான, ஆழமாக ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய இந்த ஆய்வு மலரைக் கண்டேன். 'ஈன்ற பொழுதை விடத் தன் மகனைச் சான்றோனாகக் கேட்டவல்ல; கண்ட நற்றாயாகப் பெருமகிழ்ச்சி' அடைகின்றேன். இதற்காக கடினமாக உழைத்த கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் கி.வேணுகா ஆகியோரை பாராட்டுகிறேன். இதுபோன்ற ஆய்வரங்குகளும் ஆய்வுக் கட்டுரைகளும் செம்மொழியாகிய நம் தாய்மொழியின் இலக்கியச் சிறப்புக்களையும், தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவங்களையும் உலகறியச் செய்யப் பயன்படும் என்பதில் துளியளவும் ஐயமில்லை.*

*"தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்" என்னும் இந்த ஆய்வு மலரில் மொத்தம் 110 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் அனைத்தும் சங்கச் செவ்வியல் இலக்கியங்கள் காட்டும் தொல்தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டின் பன்முகத் தன்மைகளை வெளிப்படுத்துவதாக உள்ளன; இவை என்றும் பயனுள்ளவை; இனிவரும் இளைய தலைமுறையினர்க்கு நம் முன்னோர்களின் வாழ்வியல் பண்பாட்டினை அறிமுகப்படுத்துபவை.*

*படித்துப் பயன் பெறுக! வாழ்த்துக்கள்!!*

# வாழ்த்துரை

**முனைவர் ஜெ.போ.சாந்திதேவி**
முதல்வர் (பொ,.)
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

*தமிழ் இலக்கியச் சிந்தனைகள் – உலகம் வியந்து போற்றும் சிறப்புக்குரியனவாகும். தமிழ்ப் பண்பாட்டின் கருவூலமாக விளங்கும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள கனியன் பூங்குன்றனார் பாடலின் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற வரி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே பொதுவுடமை பேசி இருப்பதை அறியலாம். தொடர்ந்து தமிழ் இலக்கியங்கள் பல்வேறு நிலைகளில் பரிணாமம் பெற்று மொழி வளச்சிந்தனைக்கும் பண்பாட்டினை பறைசாற்றிடவும் பயன்படுவதை அறியலாம். அவ்வகையில் சங்க காலம் முதல் சமகால இலக்கியப் படைப்புகளில் வெளிப்படும் பண்பாட்டுப் பதிவுகளை வெளிக்கொணரும் வகையில் கட்டுரைகள் பெறப்பட்டு தொகுத்துள்ள பணி பாராட்டுதலுக்குரியது.*

*காதல், வீரம், கொடை, கல்வி, அறம், விருந்தோம்பல், பக்தி, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உணவு, உடை, கலைகள் என்ற பல்வேறு கருப்பொருளைத் தாங்கி தமிழரின் பண்பாட்டு விழுமியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலக்கியங்கள் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டுவதுடன் மனித மனங்களில் அன்பு, இரக்கம், கருணை, பொறுமை என்ற நல்உணர்வு பெருகிடப் பெருந்துணையாக விளங்குகின்றன. இத்தகைய இலக்கியத் தரவுகளைக் கொண்டு தமிழரின் பண்பாட்டுக் கூறுகளை ஆய்வுக்குட்படுத்தி ஆவணப்படுத்தும் நோக்குடன் இக்கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்டுச் சிறப்பாக ஒருங்கிணைத்த பேராசிரியர்கள் முனைவர் கி.வேணுகா மற்றும் முனைவர் பூ.பூங்கோதை ஆகியோருக்கு வாழ்த்துகள். மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரி, அரண் பன்னாட்டுத் தமிழாய்விதழ் மற்றும் அரண் தமிழ் அறக்கட்டளை இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கம்*

# அணிந்துரை

**முனைவர் வை.இராமராஜபாண்டியன்**

புலத்தலைவர்,

தமிழியற்புலம்,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,

மதுரை.

மதுரை, நான்காம் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கல்லூரி, தமிழ் உயராய்வு மையத்தினர் நடத்தும் 'தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்' என்னும் ஆய்வு மலரைப் படித்துப் பார்த்தேன்; மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். இந்த ஆய்வு மலரில் மொத்தம் 112 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

தொல்தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள் தலைமைப் பொருளுக்கேற்ப இவ்ஆய்வு மலர்க் கட்டுரைகளின் மையப் பொருள்களாக இழையோடியுள்ளன. தொல்தமிழரின் விருந்தோம்பல் பண்பாடு, திருமந்திரத்தில் வாழ்வியல் பண்பாடு, தொல்காப்பியத்தில் இசைப்பண்பாடு, நாட்டுப்புறச் சிறுவர்களின் விளையாட்டுக்களில் காணலாகும் தமிழர் பண்பாட்டுச் சிந்தனைகள், பண்பாட்டுப் பார்வையில் சங்க அக இலக்கியத் தோழி, பழந்தமிழ் இலக்கியங்களின் உணவுப் பண்பாடு, பெரும்பாணாற்றுப்படையில் பரிசில் மற்றும் உணவுப் பண்பாடு, அன்றாட வாழ்க்கையின் வாழ்வியல் பண்பாட்டு விழுமியங்கள், ஆற்றுப்படை நூல்களில் உணவுப் பண்பாடு, கலித்தொகையில் பழந்தமிழர் வீரப் பண்பாடும் காதலும், குறும்பர் இனமக்களின் உறவுமுறைப் பண்பாடு, சிறுபாணாற்றுப்படையில் புலவர்களின் பண்பாடு, புறநானூற்றில் தமிழர் பண்பாடு, அகநானூற்றில் பழந்தமிழர் பண்பாடு, சங்க இலக்கியத்தில் கொல்லரின் தொழில்முறைகள், புறப்பண்பாட்டின் போர்நெறிகள், பண்டைய மன்னர்களின் வீரப்பண்பாடு, பழந்தமிழ் இலக்கியங்களில் மகளிரின் வளையல் அணியும் பண்பாடு, பழந்தமிழ்க் கூத்துக் கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும், சங்கத் தமிழர்களின் தொழில் பண்பாடு, ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் பண்பாடு ஆகியன இவ்ஆய்வு மலர்க் கட்டுரைகளின் மையப் பொருள்களாக அமைந்திருப்பது மிகச்சிறப்பாகும்.

'தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்' என்னும் ஆய்வரங்கினைக் காலத்தின் தேவையறிந்து முயன்று நடத்திய செந்தமிழ்க் கல்லூரித் தமிழ் உயராய்வு மையத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை, ஆங்கிலத் துறைத்தலைவரும் இணைப் பேராசிரியருமான முனைவர் கி.வேணுகா ஆகியோரைப் பாராட்டி, இதுபோன்ற பணிகளை அவர்கள் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

# பதிப்புரை

**முனைவர் பூ.பூங்கோதை**
**முனைவர் கி.வேணுகா**

*மதுரை, செந்தமிழ்க் கல்லூரியின் தமிழ் உயராய்வு மையத்தில் தொல் தமிழர்களின் பண்பாட்டுப் பதிவுகளை வெளிப்படுத்தும் விதமாக 17.10.2024 வியாழக்கிழமை அன்று "***தமிழிலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்***" என்னும் கருத்தரங்கினை நடத்துவதற்கு முன் அனுமதியும் வாழ்த்துரையும் வழங்கிய செந்தமிழ்க் கல்லூரியின் செயலர் திருமதி* ***இராணி இலக்குமி குமரன் சேதுபதி*** *அவர்களுக்கும் இக்கருத்தரங்கம் செவ்வனே நடைபெறுவதற்கு ஆக்கப்பூர்வமான நல்லுரைகளை வழங்கியதோடு தேவையான பொருள் உதவி உட்பட அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்து ஊக்கப்படுத்திய மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் ஆற்றல்மிகு செயலாளர் வழக்கறிஞர்* ***ச.மாரியப்பமுரளி*** *ஐயா அவர்களுக்கும் இக்கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள் என்ற முறையில் முதற்கண் எம் பணிவான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.*

*இக்கருத்தரங்க ஆய்வு கோவை உருவாக்கத்தில் பல்வேறு நிலைகளில் தோன்றா துணையாக நின்று ஊக்கப்படுத்திய செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெ.போ.சாந்தி தேவி அவர்களுக்கு எம் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.*

*இக்கருத்தரங்க மலர்களின் கட்டுரைகளைப் படித்துப் பார்த்து அக் கட்டுரைகளின் ஆய்வுப் போக்குகளையும் திறன்களையும் தரத்தையும் மதிப்பீடு செய்து நல்லதொரு அணிந்துரை வழங்கிய மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழியற் புலத்தலைவர்* ***முனைவர் வை.இராமராஜபாண்டியன்*** *அவர்களுக்கு எம் மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*கருத்தரங்க ஆய்வு கோவை உருவாக்கத்தில் துணைநின்று உதவிய அரண் பன்னாட்டு தமிழ் ஆய்விதழ் நிருவாக ஆசிரியர்* ***முனைவர் பிரியா கிருஷ்ணன், திருமிகு வீ.அதிவீரபாண்டியன், திருமிகு உ.ராஜீவ்காந்தி, திருமிகு அருண்*** *மற்றும் அன்பார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கணினி வடிமைப்பு செய்துதவிய* ***பி.கி இராம்குமார் (ஜெயஸ்ரீ கிராபிக்ஸ்)*** *அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*கருத்தரங்க நிகழ்வில் இணை ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்ட பேராசிரியர்கள்* ***முனைவர் பா.நேருஜி, முனைவர் சு.மலர்விழி, முனைவர் பெ.இந்துராணி, முனைவர் சா.கணேசன்*** *அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

எங்களின் வேண்டுதல் மற்றும் அழைப்புக்களை ஏற்றுத் "தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்" என்னும் பொதுமைத் தலைப்பிற்கேற்பப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாகும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை விளக்கி, உரிய காலத்தில் பண்பாட்டுப் பொருண்மைகளில் தரமான ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய தமிழ்நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், முனைவர்பட்ட ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், சிந்தனையாளர்கள், முதுகலை மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இக்கருத்தரங்க ஆய்வுக்கோவை செம்மையாக அமைவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தமிழர்களின் வாழ்வியல் பண்பாடுகள்<br>- முனைவர் இரா. அகிலா | 1 |
| 2. | கவிஞர் ஜெ.பிரான்சிஸ் கிருபா கவிதைகளில் பண்பாட்டுக் கூறுகள்<br>- ம.அருண்குமார் | 5 |
| 3. | திருமந்திரம் காட்டும் பண்பாடு<br>- மு.அஜித்குமார் | 9 |
| 4. | கணினியின் வரலாறு<br>- மு. ஆயிஷாம்மா | 12 |
| 5. | கான்சாகிபு சண்டை கதைப்பாடலும் தமிழர் பண்பாடும்<br>- முனைவர் பி.ஆறுமுகம் | 18 |
| 6. | தொல்காப்பியமும் இசையும்<br>- ரா. உமாதேவி | 23 |
| 7. | நாட்டுப்புற சிறுவர் விளையாட்டில் புழங்கு பொருள் பண்பாடு<br>- மா.உமா மகேஸ்வரி | 26 |
| 8. | சங்க அகஇலக்கியப் பண்பாட்டில் 'தோழி' பாத்திரப்படைப்பு<br>- முனைவர் சா.கணேசன் | 31 |
| 9. | திறனாய்வுப் பார்வையில் தமிழ்ப் புதுக்கவிதைகளின் தோற்றம், பின்புலம், பண்பாட்டுச் சிக்கல்கள்<br>- முனைவர் உ.கருப்பத்தேவன் | 38 |
| 10. | தமிழிலக்கியங்களில் உணவுப்பண்பாடும் விருந்தோம்பலும்<br>- முனைவர் நா.காயத்ரி | 46 |
| 11. | புறநானூற்றுப் புலவர்கள் பண்பாடு<br>- முனைவர் ஜெ. கோகிலா | 51 |
| 12. | ஈரம் கசிந்த நிலம் - நாவலில் பண்பாடு<br>- இரா.சக்தி | 55 |
| 13. | சங்க இலக்கியத்தில் இசைக்கலை<br>- முனைவர் தி.சங்கரநாராயணன் | 59 |
| 14. | ஆசாரக்கோவையில் காணலாகும் பண்பாட்டுக் கூறுகள்<br>- ச.சங்கர லெட்சுமி | 63 |
| 15. | பெரும்பாணாற்றுப்படையில் பரிசில் பெறுதலும் உணவுப் பண்பாடும்<br>- முனைவர் த.சங்கீதா | 69 |

16. பண்பாடு: அன்றாடம் வாழ்க்கையின் வாழ்வியல் விழுமியங்கள் 73
- முனைவர் மு. சண்முகம்

17. ஆற்றுப்படை நூல்களில் உணவுப் பண்பாடு 77
- பா. சதீஷ் குமார்

18. பழந்தமிழர் பண்பாட்டில் ஏறு (கலித்தொகையை முன்வைத்து) 80
- பா.சரோஜினி தேவி

19. சிற்றிலக்கியங்களில் பண்பாட்டுச் சிந்தனைகள் 84
- முனைவர் ஜெ.போ.சாந்திதேவி

20. இளையான்குடி மாறனாரின் மனைவி 88
- முனைவர் த.சிவசங்கரி

21. மொழியியல் நோக்கில் தமிழரும் குறும்பரும் 92
- முனைவர் ப. சுரேஷ்குமார்

22. அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் நிகழ்காலத்தில் ஊடகங்களின் தேவையும் பாதிப்பும் 96
- க.செங்கொடி

23. “சித்திரை வீதியில் ஹைக்கூ தேர்” பண்பாட்டுச் சிந்தனைகள் 101
- முனைவர் மு.செந்தில்குமார்

24. சிறுபாணாற்றுப்படையில் புலவர்களின் பண்பாடு 104
- முனைவர் மா.செல்வத்தரசி

25. ஆரல்வாய்மொழி பெயர்காரணம் 108
- முனைவர் தி.செல்வலதா

26. சிறுபஞ்சமூலம் கூறும் மக்கள் பண்பாடு 111
- பா.தினேஷ்குமார்

27. கவிவேந்தரின் கவிதைகளில் திருமணம் பற்றிய பதிவுகள் 116
- முனைவர் சு. தீபா

28. கோட்பாட்டு நோக்கில் தன்வரலாறு 120
- முனைவர் அ.நந்தினி

29. மூதுரை நீதிநூல் உணர்த்தும் நேர் மற்றும் எதிர்மறைக் கருத்துக்கள் 126
- முனைவர் பா.நேருஜி

30. கலித்தொகைப் பண்பாட்டில் ஈகையும் விருந்தோம்பலும் 131
- திருமதி. நா. பகுஷியா பேகம்

31. தமிழர் உணவுப் பண்பாடு 134
- ம. பாரதி

32. புறநானூறு வெளிப்படுத்தும் தமிழர் பண்பாடு 140
- முனைவர் இரா. பிரியதர்சினி

33. தேரிக்காட்டு மக்களின் வாழ்வியலும் பண்பாடும் -
(கண்ணக்குமார விஸ்வரூபன் படைப்புகள்) 144
- மு.பிரியதர்ஷினி

34. நெல்லை வட்டாரத் தாலாட்டுப் பாடல்களில் பண்பாட்டுக் கூறுகள் 148
- முனைவர் தி.பிருந்தா

35. அகநானூற்றில் பழந்தமிழர் பண்பாடு 155
- முனைவர் பூ.பூங்கோதை

36. வள்ளுவரின் மேலாண்மைச் சிறப்புகள் 160
- முனைவர் சு.மலர்விழி

37. புனித அந்தோணியர் ஆலயத் திருவிழாக்கள் 163
- ஷி.ராபர்ட் டென்னிசன்

38. சங்க இலக்கியத்தில் கொல்லரின் தொழில் முறைகள் 169
- முனைவர் ஜெ.ராஜசெல்வி

39. கி.ராஜநாராயணின் படைப்புகளில் பண்பாட்டுப் பதிவுகள் 174
- ப.ராஜலெட்சுமி

40. புறம் காட்டும் போர்நெறிப் பண்பாட்டுக் கூறுகள் 178
- முனைவர் பா. ராஜன்

41. நாச்சியார் திருமொழியும், நம்ம வீட்டுக் கல்யாணமும்.. 183
- தர்மத்தூரணி இரா.இராஜேஷ்குமார்

42. இன்குலாப் கவிதைகளில் தொன்மச் சிந்தனைகள் 187
- வெ.ரேவதி

43. நற்றிணையில் ஐந்திணை மக்களின் உணவு முறைகள் 192
- முனைவர் தா.லதா

44. ஓரான் பாமுக்கின் ‘பனி’ நாவலில் குர்ஆனும் இசுலாமியமும் 196
- வெ.வடிவேல்

45. பண்டைய அரசர்களின் வீரப்பண்பாடு 201
- வளர்மதி

46. மகளிரின் வளையல் பண்பாடு 207
- முனைவர் ச.வனிதா

47. கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்துக் கலைஞர்களின்
வாழ்வியலும் பண்பாடும் 211
- ச.வாசுதேவன்

48. நற்றிணை காட்டும் வாழ்வியல் 215
- இரா.விக்னேஷ்

49. இக்கால இலக்கியங்களில் கண்ணதாசன் 219
- திருமதி.ந.விஜயலட்சுமி

50. அகநானூற்றில் கடையேழு வள்ளல்கள் 223
- முனைவர் கி.வேணுகா

51. சங்ககால மக்களின் தொழில்கள் 227
- முனைவர் ஜா.ஸ்டெல்லாமேரி

52. "ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் பண்பு" ஆய்வாளர் 232
- பெ.ஜான்சிராணி

53. தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள் 237
- திருமதி.சே.ஜோதி

54. புறப்பொருள் வெண்பாமாலையில் இடம்பெறும் போர் பண்பாடு 241
- முனைவர் அ.ஜோதிமணி

55. வரலாற்று நோக்கில் தன் வரலாறின் வரலாறு 245
- இரா.ஹேமலதா

56. ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'எண்வகை திருமணங்கள்' 252
- ரா. ஹேமா சிவகா

# தமிழர்களின் வாழ்வியல் பண்பாடுகள்

– முனைவர் இரா. அகிலா
உதவிப்பேராசிரியர்
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
இலாசுப்பேட்டை, புதுச்சேரி

சங்க காலத்தைத் தமிழர்களின் பொற்காலம் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர், தமிழ் மொழியும் தமிழர் வாழ்வும் அக்காலத்தில் மேலோங்கி இருந்ததைச் சங்க இலக்கிய நூல்கள் பறைசாற்றுகின்றன. பண்டைத் தமிழர்கள் தமிழகத்தை நான்கு நிலமாக பிரித்தனர்.இதில்குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் திரிந்து பாலை நிலம் உருவானது என்பதை சிலப்பதிகாரம்,"குறிஞ்சியும் முல்லையும் முறைமையிற்திரிந்து பாலை என்பதோர் படிவம் கொள்ளும்க" என்று கூறுகிறது.

## தொல்காப்பியர் காட்டும் நிலப்பாகுபாடு

தமிழ் இலக்கண நூல்களில் சிறந்து விளங்குவது தொல்காப்பியம். தொல்காப்பியம் அகத்திணையியல்

"கைக்கிளை முதலா பெருந்திணை இறுவாய்
முற்பட கிளந்தஎழுதிணைஎன்ப"
தொல்.பொருள் (நூ. எண்.1)

என்று ஏழு திணைகளை கூறிய தொல்காப்பியர், பின்னர்

"அவற்றுள்
நடுவண் ஐந்திணை நடுவணது ஒழிய
படுதிசை வையம் பாத்திய பண்பே"[2]
தொல்.பொருள்(நூ. எண். 2)

என்று நடுவண் ஐந்திணைகளாக குறிஞ்சி, முல்லை, மருதம்,நெய்தல், பாலை என்று குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு திணைக்கும் கருப்பொருளாக

"தெய்வம் உணவே மாமரம்புள்பறை
செய்தி யாழின்பகுதியோடு
அவ்வகை பிறவும் கருவெனமொழிப"[3]
தொல்.பொருள்(நூ. எண். 20)

என்று கூறுகிறார்.

எனவே இக்கட்டுரையில் சங்க கால மக்களின் பண்பாட்டு முறைகள் சங்க இலக்கியங்களைக் கொண்டு கீழ்வரும் தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

## நிலமும் மக்களும் தொழிலும்

தமிழர்கள் இயற்கைச் சூழலுக்கு ஏற்ப நிலங்களை நானிலமாகப் பிரித்தனர். மலையும் மலைச்சார்ந்த இடமும் குறிஞ்சி நிலமாகும்.இங்கு வாழும் மக்கள் வெற்பன்,பொருப்பன்,குறவன்,குறத்தியர் ஆவர். இவர்கள் வேட்டையாடுதலையும் தேனடை எடுத்தலையும் தொழிலாகக் கொண்டவர்கள்.

காடும் காட்டைச்சார்ந்த இடமும் முல்லை இங்கு வாழும் மக்கள் குறும்பொறையன், நாடன், ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர் இவர்கள் ஆடு மாடுகளை மேய்த்தும், பால் வியாபாரமும் செய்பவர்கள்.

வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் இங்கு வாழும் மக்கள் மகிழ்நன், ஊரன், உழவன், உழத்தியர், கடையர், கடைசியர். இவர்கள் பயிர்த் தொழிலை மேற்கொள்கின்றனர்.

கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல். இங்கு வாழும் மக்கள் கொண்கன், சேர்ப்பன், பரதவன், பரத்தி, துளையர், துளைச்சியர். இவர்கள் உப்பு விலைவித்தல், மீன்பிடித்தல் தொழில்களை மேற்கொள்கின்றனர்.

பாலை வறண்டு நிலப்பகுதி இங்கு ஆறலைக் கள்வர்கள் வாழ்வர். இவர் களது தொழில் வழிபறிக் கொள்ளை யடிப்பதாகும்.

எனவே அந்தந்த நிலத்து மக்கள் அவர்கள் வாழ்கின்ற நிலத்திற்கு ஏற்ப தொழிலை மேற்கொண்டனர்.

**உணவு**

பழந்தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் கூழ், தேன், கருப்பஞ்சாறு, கஞ்சி, கள் போன்ற உணவு வகை உண்டனர் என்பதனை இலக்கியங்கள் வாயிலாகக் காணலாம். குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுவதால் அவர்கள் உணவிற்காக, முயல் உடும்பு,தவளை, ஆகியவற்றைப் பிடிப்பர்; பிடித்த களைப்பால், கள் குடித்து மயங்குவர் என்பதனை

**"உடும்பு கொலீஇவரிநுணல்அகழ்ந்து**
**நெடுங்கோட்டுப்புற்றத்து ஈயல் கெண்டி**
**எல்லுமுயல் எறிந்த வேட்டுவச்சுவல"**

நற்றி.பா. எண். 59(1-3)வரி

என்ற பாடலும், புற்றீசலை உணவாகக் கொன்றுதலை

**"ஈயலின் இன்ன புளித்து"**[6]

புறம். பா. எண். 119

என்ற பாடலும் கூறுகின்றன. மேலும் தேன், கிழங்கு, ஊன், பன்றியின் தசை போன்ற உணவுப்பொருள்களை வட்டிலில் எடுத்துச் சொல்வர். இவ் வட்டில் பனைஓலையால் செய்யப் பட்டது. இச்செய்தியை

**"தேனீர் கிழங்கினில்ஊன் ஆர்வட்டியர்**
**சிறுகட் பன்றிப் பழுத்துளி போக்கி"**[7]

மலை - (53-54வதுவரி)

என்ற பாடல் கூறுகின்றது.

**உடை**

மனிதகுலம் வேட்டைத்தொழிலின் போது கிடைத்த விலங்குகளின் எலும்பு களையும், இலைதழைகளையும் மகிழ்ச்சி பொங்க ஆடைகளாக அணிந்து கொண்டனர். காலப்போக்கில் நாகரிகம் வளரவளர பாலின வேறுபாட்டை உணர்ந்த நிலையில் ஆண், பெண் ஆகியோருக்குத் தனித்தனி ஆடை அணிகலன்கள் தோன்றின. சங்க இலக்கியத்தில் முடத்தாமக் கண்ணியார் கரிகால் பெருவளத்தான் தனக்கு கொடுத்த ஆடையினை பின்வருமாறு கூறுகிறார். ஈறும் பேறும் நிறைந்து வேர்வையால் என்ஆடை நைந்து போய் இருந்தது மன்னனோ என் ஆடைகளை அகற்றி எனக்கு புத்தாடையைக் கொண்டு வரச் செய்தான், அதை என்னிடம் தந்தான், இழை போன வழிஅறிய முடியாத வகையில் நுட்பமாக அவ்வாடை நெய்யப்பட்டிருந்தது, பூந்தொழிலை ஒத்த பாம்பின் தோலை ஒத்திருந்தது. அப்புத்தாடையை நான் உடுத்தி மகிழ்ந்தேன் என்று புலவர் கூறுகிறார். இச்செய்தியை

**"நோக்கு நுழைகல்லா நுண்மைய**
**பூக்களித்து**
**அரவுரிஅன்ன அறுவை நல்கி"**[8]

பொருநர் (82-83-வதுவரி)

என்று பெருநராற்றுப்படை கூறுகிறது.

மன்னனுக்கு மெய்காப்பாளராக இருப்பவர்கள் நம்பிக்கையையும், நல்லொழுக்கமும், உடையவர்களாக இருந்தனர். அரசன் தம்மிடம் நீண்ட நாட்களாக பணியாற்றியவர்களையே மெய்காப்பாளராக நியமித்தான், மெய்க் காப்பாளர் தலையில் மயிற்கட்டு கட்டி 'மெய்ப்பை' எனப்படும் ஆடையை (சட்டையை) அணிந்திருந்தனர், என்பதனை

"துகில் முடித்தும் போர்த்த தூங்கல்
ஓங்குதிற பெருமூத்தாளர் ஏமம்"[9]
முல்லைப்பாட்டு (54-55 வரி)

என்று முல்லைப்பாட்டும், மெய்க் காப்பாளர்கள் தலையில் கட்டுகின்ற வெண் துகில் போர்த்திறந்தது போல அக்காலமக்களும் வெண்துகில் போர்த்தி யுள்ளனர், என்பதனை

"மீபால் வெண்டுகில் போர்க்குநர் பூட்டால்
வெண்துகில் சூழ்பக்குழன் முறுக்குநர்" [10]
பரி (பா. எண். 10)

என்று பரிபாடலும் கூறுகின்றன.

## திருமணம்

சங்க காலத்தில் திருமணம் நடைபெற்றதை

"உழுத்து தலைபெய்த கொழுங்களிறு
மிதவை ..."[11]
அகம் (86) (1-5 வரி)

என்ற பாடல் பின்வரும் கருத்து களைக்கூறுகின்றது.

ரோகிணி திங்களை அடையும் நாளாக இருந்தது. உளுந்து வடையுடன் விருந்து உணவு படைக்கப்பட்டது. மனையில் பந்தக்கால்கள் நடப்பட்டன. புது மணல் பரப்பப்பட்டது, மனையில் விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டு மணமக்களுக்கான மாலைகள் தொங்க விடப்பட்டன. முதியவர்கள் ஆகிய மங்கலப் பெண்கள் தலையில் குடம் சுமந்து கொண்டு மணப்பெண்ணைத் தொடர்ந்து வந்தனர். குழந்தையைப் பெற்ற மகளிர் நால்வர் சேர்ந்து கற்பு நெறி போற்றி நல்ல வாழ்த்துக்களைச் சொல்லி 'நீ கணவன் விரும்பும் காதலியாகுக' என வாழ்த்தினர். மணமக்களின் மேல் நெல்லும், மலரும், தூய நீரையும் தெளித்தனர் திருமண சடங்குகள் நடை பெற்றவுடன் சுற்றத்தார் ஆரவாரத்தோடு விரைந்து வந்து பெரிய இல்ல கிழத்தியாக வாழ்க என வாழ்த்தினர் என்பதை இப்பாடல் மூலம் அறியலாம்.

## விருந்தோம்பல்

உலகப் பொதுமறையாம் திருக் குறளில், வள்ளுவர் விருந்தினர்களை உபசரிக்கும் முறையை

"அகன்அமர்ந்து செய்யான் உறையும்
முகன்அமர்ந்து
நல்விருந்துஓம்புவான் இல்"[12] குறள்.84

என்று கூறுகிறார். முகமலர்ச்சியோடு விருந்தினர்களை உபசரிப்பவர்களுடைய வீட்டில் மன மகிழ்ச்சியோடு திருமகள் வாசம் செய்வாளாம். அதுபோல நம் தமிழர்கள் விருந்தினர்களை அன்போடும் பண்போடும் உபசரிப்பதைச் சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படை நூல்கள் சிறப்பாகக் கூறுகின்றன.

நல்லியக்கோடனிடத்தில் பரிசு பெற்றவன் சிறிய யாழினைக்கொண்ட பாணன். அவன் தன் எதிரே வருகின்ற, வறுமையால் வாடும் மற்றொரு பாணனை, காண்கிறான் தம்மைபோல் பரிசு பெற்று வருமாறு நல்லியக் கோடனிடத்தில் ஆற்றுப் படுத்துகிறான். அப்போதுமன்னனின் ஊருக்கு செல்லும் வழியைக் கூறினான். பாணனே! நீ வேலூர் செல்லும் வழியாகச் சென்று எயினர் குடியை அடைந்தால், அங்குள்ள எயினர் குலப்பெண்கள், சமைத்த புளிக்கறி இட்டசோற்றினையும், அம்மானினது சூட்டினை இயையும் இறைச்சியையும் உன் பசி தனியுமாறுதருவர் என்கின்றனர். இச்செய்தியை

"எயினர்இட்டஇன்புளிசெஞ்சோறு
தேமா மேனி சில்வளைஆயமோடு
ஆமான் சூட்டின் அமைவரம் பெறுகுவீர்"[13]
சிறு. பா. வரி (175-77)

என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

## இறை வழிபாடு

பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கையில் கடவுள் நம்பிக்கை நிறைந்து இருக்கின்றன. இயற்கையில் இயைந்த மக்கள் வாழ்க்கையில் துன்பங்கள் சிக்கல்கள் போன்ற போராட்டங்கள் நிறைந்த போது அதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவதற்காக இறைவனை வழிபடத் தொடங்கினர்.

தன்னால் விரும்பப்பட்ட தலைவனையே தனக்கு வாழ்க்கை துணைவானாக அளிக்க வேண்டும் என்று தன் குல முதற்கடவுளாம் குமரனை நன்னீகும் நறுமலரும் கொண்டு வழிப்பட்டாள் மலைவாழ் மங்கை ஒருத்தி, என்பதனை,

**"குன்றக் குறவன் காதின்மடமகன்**
**மன்றவேங்கை மலர்சில கொண்டு**
**மலையுரை கடவுள் குல முதல்வழுத்தி"[14]**
**ஐங். பா. எண். 259(1-9வரி)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

எண்ணிய காரியம் நிறைவேறிய பின்தெய்வ பூஜை செய்து, கொற்றவையை வழிபட்டு தெய்வக் கடன் முடிப்பது தமிழர் மரபு. இதனை

**"விடர்முகை யடுக்கத்து விறல்கெழுகளிக்குக் கடனும் பூணாங் கைந்நூல் யாவாம்"[15]**

என்ற பாடல் உணர்த்துகின்றது, அது போல இறைவழிபாட்டில் தாமரை, குவளை, நெல், மலர், அல்லி, கடம்பமலர் போன்ற மலர்களை இறைவனுக்கு அணிவித்தனர். மலர்களால் கூட்டப் பட்ட மாலை, தொடலை, தெறியல், தையல், கண்ணி என்ற மாலைகளும் சூட்டப்பட்டன. இவ்வாறு பழந்தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை விரும்பி வாழ்ந்தனர் என்பதை மேற்சொன்ன தலைப்புகள் மூலம் அறியலாம்.

## அடிக்குறிப்பு

தொல்காப்பியம் பொருளதிகாரம் நூ.எண்.1

மேலது நூ. எண். 2

மேலது நூ. எண். 20

மேலதுநூ. எண். 22

நற்.பாடல். எண் 59 (1–3) வரி

புறம். பாடல். எண் 119 (4–வதுவரி)

மலைபடுகடாம் பா. வரி (153–54 வது வரி)

பொருநர் பா. வரி82 –83

முல்லை பா. வரி54–55

பரிபா. எண் 10

அகம்பா. எண் 86 (1–15)வரி

குறள். எண். 84

சிறுபாண் பா. வரி(175–77)

ஐங். பா. எண்.259(1–9வரி )

குறு. பா. எண். 218

# கவிஞர் ஜெ.பிரான்சிஸ் கிருபா கவிதைகளில் பண்பாட்டுக் கூறுகள்

ஆய்வு நெறியாளர்:
**மு.செந்தில்குமார்**
செந்தமிழ்க் கல்லூரி,
தமிழ் உயராய்வு மையம்,
மதுரை- 625001

ஆய்வாளர் :
**ம.அருண்குமார்**
முனைவர் பட்ட ஆய்வாளர் [பகுதி நேரம்]
செந்தமிழ்க் கல்லூரி,
தமிழ் உயராய்வு மையம், மதுரை- 625001.

தமிழிலக்கியத்தின் இரு பிரிவுகளாகப் பண்டைய இலக்கியம் மற்றும் நவீன இலக்கியத்தை குறிப்பிடலாம். பண்டைய இலக்கியம் என்பது தொல்காப்பியதில் தொடங்கி பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான இலக்கியம். பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பிறகான காலத்தை நவீன இலக்கியத்தின் தொடக்கப் புள்ளி எனலாம். இந்நூற்றாண்டில் தான் படைப்பாளிகளின் எழுத்துகளில் மாற்றம் நிகழ்ந்தது. நவீன இலக்கியத்தின் முன்னோடிகள் எனப் பலர் இருந்தாலும் பாரதியார் எழுத்துகள் பண்டைய இலக்கியத்திற்கும் , நவீன இலக்கியத்திற்குமான ஒரு தொடர்பினை ஏற்படுத்தியது.

நவீன இலக்கியத்தில் மிக அரிதான ஒரு கவிஞராக திகழ்பவர் ஜெ.பிரான்சிஸ் கிருபா. தனக்கான எளிய பண்பினால் தன் படைப்புகளில் யதார்த்ததையும் , நடைமுறைக் கருத்துக்களையும் உள்ளதை உள்ளவாறு எழுதியிருக்கிறார். இவரது படைப்புகளில் பொதிந்துள்ள பண்பாட்டுக் கூறுகளை விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஜெ.பிரான்சிஸ் கிருபா

கவிஞர் ஜெ.பிரான்சிஸ் கிருபா, நெல்லை மாவட்டம் நாங்குநேரி தாலுக்கா பத்தினிப்பாறை என்ற கிராமத்தில் 1974 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் ஜெபஸ்டியான், தாயார் ஆரோக்கியம். இவர் உடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரர்கள், மூன்று சகோதரிகள். இக்குடும்பத்தில் இவர் ஏழாவது பிள்ளையாகப் பிறந்தார். கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர், பின்னர் பதினைந்து ஆண்டுகள் பம்பாயில் வாழ்ந்தார். அதன் பின்னர் சென்னையில் வாழ்ந்து வந்தார். தமிழ் எழுத்துலகிற்கு எட்டுக் கவிதை நூல்களையும் '**கன்னி**' என்ற நாவலையும் தந்தார். தன் எழுத்தின் மூலம் எழுத்துலகிலும், திரையுலகிலும் முழுநேரம் சிறப்புடன் பணியாற்றினார். இவரின் எழுத்துகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் ஜெரிமேரி விருது, கவிஞர் மீரா விருது, கவிஞர் தேவமகள் அறக்கட்டளை விருது, சுந்தர ராமசாமி விருது, ஆனந்த விகடன் விருது எனப் பல விருதுகள் அளிக்கப்பட்டன. தமிழிலக்கிய உலகிற்கு எண்ணற்ற சிறப்புகளைச் சேர்த்தவர், 16.09.2021 அன்றுடன் தன் எழுத்தை நிறுத்திக் கொண்டு இயற்கை எய்தினார்.

## பண்பாடு

பண்பாடு என்பது ஒரு இலக்கியக் கருப்பொருள். இதற்குப் பல நிலைகளில் வரையறை உண்டு. ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு

*என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது. மற்றொரு நிலையில் மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள், கருவிகள் போன்றவை பண்பாட்டுக்குள் அடங்கும். பண்பாடு மனிதர்களுடைய மொழி , எண்ணங்கள், நம்பிக்கைகள், வழக்கங்கள், தடைகள், விதிமுறைகள், நிறுவன அமைப்புகள், கருவிகள், செயல்முறைகள், காலப் பொருட்கள், சடங்குகள், விழாக்கள், அடையாளச் சின்னங்கள் போன்ற எல்லா அம்சங்களும் கலந்திருக்கும் ஒரு கலவையாகும்.* ***[சௌந்தராஜன் கே.வி, இந்தியப் பண்பாடு, பக் – (150–155)]***

## ஜெ.பிரான்சிஸ் கிருபா கவிதைகளில் பண்பாட்டுக் கூறுகள்

### சுதந்திரம்

*தனிமனிதன் முதல் ஒட்டு மொத்த சமூகம் வரை அனைவரும் விரும்புவது சுதந்திரம். பேச்சு, செயல் என அனைத்து நிலைகளிலும் மனிதன் சுதந்திரத்தோடு செயல்படுவது இன்றளவும் மிகப் பெரிய கேள்விக் குறியாகவே இருக்கிறது. இக்கவிஞரும் தனி மனிதன் தன் வாழ்க்கையில் எந்தவொரு செயலையும் சுதந்திரத்தோடு செயல்படுத்த முடிய வில்லை என்பதை ,*

**“விளையாட்டைக் கூட**
**விதிமுறைகளின்றி**
**விளையாட முடியவில்லை**
**இங்கே” - ஜெ.பிரான்சிஸ் கிருபா,**
**சம்மனசுக்காடு, ப.50**

*எனக் குறிப்பிடுகிறார்.*

*மனித சமூகம் முழுமையான விடுதலை பெற வேண்டுமென நினைக்கிறது. விடுதலை கிடைக்குமா? என்பது கேள்விக்குறியாக இருப்பினும், விடுதலை பெறுவோம் என்ற நம்பிக்கை வேண்டும் என்கிறார்.*

**“அறிந்ததிலிருந்து யாரும்**
**விடுதலை**
**அடைந்ததாகத் தெரியவில்லை**
**அடைய முடியுமென்று தான்**
**நம்புகிறோம் அனைவரும்”**
**- ஜெ.பி.கி., ச.காடு, ப.95**

### இயற்கை

*“இயற்கையின் அழகைக் கண்டு சுவைக்கும் அதே நேரத்தில் அவ் வழகில் மனிதன் கற்க வேண்டிய பாடம் என்னவென்பதையும் கவிஞன் தன் நுண்மான் நுழைப்புலத்தால் கண்டறிந்த வாறு, கவிதையைப் படிப்போரையும் உணரச்செய்வதே அவனின் கடமையாகும்”* ***– மணிவேலன், சுவை நோக்கில் சுரதா, ப.09***

*இயல்பாகத் தோன்றி இயங்கு வதற்கான பொருள், காலம் போன்றவற்றை உள்ளடக்கியதே இயற்கை. அவ்வியற்கையைக் கவிஞர் முற்றிலும் வேறொன்றாகப் பார்க்கிறார். தான் பார்த்த வித்தியாசமான இயற்கையைப் புதுக் கண்ணோட்டத்துடன் எழுத்துகளால் சொல்லோவியமாக்குகிறார். காற்றை தேவதையாக்கி, அக்காற்றில்லா காலத்தில் தான் வேதனையில் உள்ளதாகவும், நேரில் வரவில்லை என்றாலும், தபாலிலாவது ஒரு தென்றலை அனுப்பி வைக்குமாறும் இயற்கையிடம் விண்ணப்பம் வைக்கிறார்.*

**“காற்று வந்து**
**காத்து நின்று**
**பார்த்து விட்டுப்**
**போன பின்பு**
**வேர்த்து நிற்கும் வேதனையை**
**பார்த்து நிற்கும் தேவதையே**
**அஞ்சலிலாவது கொஞ்சம்**
**அனுப்பி வை**
**தென்றலை” - ஜெ.பி.கி., ச.காடு, ப.67**

*இவரது மற்றொரு கவிதையில் ,*

**புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது**
**புல்**

பசியற்ற போதிலும் புலியைத் தின்னும்
புதைத்த பிறகு!
- ஜெ.பி.கி.,ச.காடு, பக்.52

காலம் காலமாகக் கேட்டு வந்த பழமொழியை உண்மைத் தன்மை மாறாமல் சற்று வித்தியாசமாக பார்த்திருக்கிறார் கவிஞர். புலி தனக்குப் பசி வந்தாலும் புல்லைத் தின்னாது, மாறாக மாமிசத்தையே உணவாக விரும்பி உண்ணும். ஆனால் புல் தனக்கு பசியே இல்லையென்றாலும் ஒரு நாள் புலி இறந்த பின்னர் அதனைப் புதைத்த இடத்தில் புல் தோன்றும். இதன் மூலம் புல் மறைமுகமாக அங்கு புலியைத் தின்கிறது என நுண்மையால் பேசுகிறார்.

## காதல்

“மனித வாழ்வு எனும் பூந் தோட்டத்தில் நுழைந்து தவழும் இளந்தென்றலே காதல். நமக்கு ஊட்டுகின்ற சிலிர்ப்பும் நெகிழ்ச்சியும் சொல்லுக்கு அடங்காதவை. அதிலே வன்மையுண்டு, மென்மையுண்டு, மலரினும் மென்மையானது காதல்” (சாலை. இளந்திரையன், புதிய தமிழ்க் கவிதை, ப.48)

இக்காதல் மூலம் இணையும் காதலர்கள் மிகவும் விரும்புவது தனிமை. அத்தனிமையில் தங்களை ஒருவருக்கொருவர் புரிந்து கொள் வார்கள். அப்படிப்பட்ட தனிமையில் சந்தித்துக்கொள்ளும் காதலர்கள் இருக்குமிடத்தில் தேனீர் கோப்பை உள்ளது, அதனருகே இருவரும் காதலிக்கிறார்கள். இவர்கள் அருந்தும் தேனீரிலிருந்து சிந்தும் துளிகளுக்காகவும் காதலுக்காகவும் சில சிற்றெரும்புகள் வருகின்றன. அவ்விடத்தில் அச்சிற் றெறும்புகளும் காதலிக்கின்றன. அவை காதலர்களின் சாயலிலேயே இருப்பதாகக் காதல் ரசம் சொட்ட விளக்குகிறார்.

“கவிழ்த்து வைக்குமுன்
அந்த கோப்பையில் தேனீர் இருந்தது
அப்போது அதனருகில் நாமிருந்தோம்
இப்போது அதைச் சுற்றி சில சிற்றெரும்புகள்
நம் சாயலில் இருக்கின்றன !
-ஜெ.பி.கி., ச.காடு, பக் - 18

கவிஞரின் மற்றொரு காதல் கவிதையில்,

மத்தியானம் தொட்டு
கொஞ்சிக் கொண்டிருக்கும் காதலர்களை
தொந்தரவு செய்யாது
அவர்களுக்கும் சேர்த்து
தன் பாயை விரிக்கிறது
கடற்கரையில் மாலை
யார் தாமதப்பட்டது
யார் அவசரப்பட்டது
விசாரனைக்குள் நுழையாமல்
எல்லோருக்குமாக
வீசுகிறது காற்று!
- ஜெ.பி கி , ச.காடு , பக் - 33

காதலர்கள் தனிமையில் தங்களையே மறந்து காதலிப்பார்கள். அப்படி மதியம் கடற்கரைக்குச் சென்ற காதலர்கள், கொஞ்சி பேசிக் கொண்டிருக்கையில் பொழுது கடந்தது தெரியாமல் மாலை வரும் வரை அவர்கள் உரையாடல் தொடர்கிறது. அவர்களை எவ்வித தொந்தரவும் செய்யாமல் அனைவருக்குமாய் காற்று வீசுகிறது. இப்படி கடற்கரையில் காதலர்களைத் தவிர்த்து இயற்கையின் பங்கும் அங்கு பெரிதாக இருக்கிறது. காதலையும் காதலர்களையும் இயற்கையோடு இணைத்து வேறொரு கோணத்தில் பார்த்திருப்பது கவிஞரின் தனித்துவத்தைக் காட்டுகிறது.

## முடிவுரை

கவிஞர் ஜெ.பிரான்சிஸ் கிருபா கவிதைகளில் உள்ள பண்பாட்டுக் கூறுகள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு

வகையில் மனிதத்தையும், அது சார்ந்த பண்பாடு பொதிந்த வாழ்வையும் வெளிக்காட்டுவதாக இருக்கின்றன. இவரின் கவிதைகளின் வழியே தங்களின் தொலைந்த வாழ்வையோ அல்லது புரியாமல் கடந்துவிட்ட காலத்தையோ அவர்கள் வழிநின்று பதிவு செய்துள்ளார் கவிஞர்.

## மூல நூல்கள்

*ஜெ.பிரான்சிஸ் கிருபா, ஜெ.பிரான்சிஸ் கிருபா கவிதைகள், டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், சென்னை. 2021.*

*ஜெ.பிரான்சிஸ் கிருபா, சம்மனசுக் காடு, சந்தியா பதிப்பகம், சென்னை. 2016*

## துணை நூல்கள் :

*முனைவர் செ.ரவிசங்கர், புதுக் கவிதையில் உவமைகள், காவ்யா பதிப்பகம், சென்னை. 2012 – ப. 172*

*சௌந்திரராஜன்.கே.வி., இந்தியப் பண்பாடு, ப.150–155.*

# திருமந்திரம் காட்டும் பண்பாடு

நெறியாளர்:
**முனைவர் ஜ.பிரேமலதா,**
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி),
சேலம் - 636007.

ஆய்வாளர்:
**மு.அஜித்குமார்,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி),
சேலம் - 636007.

## முன்னுரை

பண்படு என்னும் சொல்லில் இருந்து அமைத்துக் கொள்ளப்பட்டது பண்பாடு என்னும் சொல்லாகும். இதற்கு செம்மைப்படுத்தல் என்ற பொருள் உண்டு. பயிரிடுவதற்கு எற்றவாறு நன்கு செய்யப்பட்ட நிலம் நன்செய் நிலம் என்கிறோம். அதுபோல பக்குவப்பட்ட உள்ளம் உடைய மக்களையே பண்பட்ட மக்கள் என்கிறோம். அந்த வகையில் தமிழருடைய பண்பாடு பண்டைய காலம் தொட்டே சிறப்பு வாய்ந்ததாக இருந்து வந்துள்ளது.இதனை தமிழ் இலக்கியங்கள் வழி அறியலாம். இத்தகைய தமிழருடைய பண்பாட்டை திருமந்திரத்தின் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

## பண்பாடு

சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படை யாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாட்டைப் பண்பாடு என்கிறார் தெ.பொ.மீ. மக்களின் வாழ்க்கையில் சமூக பழக்க வழக்கம், நம்பிக்கை, அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்புரவு, ஈகை போன்றவை பண்பாட்டில் அடங்கும். இத்தகைய அகவளர்ச்சியே பண்பாடு ஆகும்.

## திருமந்திரத்தில் பண்பாடு

திருமந்திரம் வாழ்க்கைக்குத் தேவையான தனிமனிதப் பண்பாட்டு அறங்களை விளக்கும் வாழ்வியல் நூல் ஆகும். முறையான உணவு, நல்ல பழக்க வழக்கம், உடற்பயிற்சி, புலனடக்கம், வழிபாட்டு நெறிகளைக் கூறுகிறது. ஒழுக்கம் சார்ந்த அக பண்பாடும், உணவு, உடை, உறையுள் போன்ற உலகப்பொருள் சார்ந்த புறப்பொருள் பண்பாடும் இதில் கூறப்பட்டுள்ளது. நல்லொழுக்கத்துடன் கூடிய மனித நேயம், உலகத்துடன் ஒட்ட ஒழுகல், பாடறிந்து ஒழுகல் போன்றவையும் பண்பாடு என்பதனுள் அடங்குகிறது.

**“பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்”** (1)

**“பண்புடையார் பட்டுண்டு உலகம்அது
இன்றேல் மண்புக்கு மாய்வது மன்.”** (2)

பண்பால் உலகம் நிலைத்துள்ளது என்றும், பண்பு இல்லையேல் மண்ணுள் உலகம் புதைந்துவிடும் என்கிறார் வள்ளுவர்.

## அகப் பண்பாடு

தனிமனித ஒழுக்கம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை அகப் பண்பாடு எனலாம். நிலையாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணாமை, பொறையுடைமை, வாய்மைபோன்ற அக ஒழுக்கங்கள் திருமந்திரத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. சமுதாயத்தில் மனிதன் அமைதியான, இன்பமான வாழ்க்கை வாழ அகப் பண்பாடே அவசியமாக உள்ளது.

## நிலையாமை

நிலையாமைக் கொள்கையை முதலாக வழியுறுத்துகிறார் திருமூலர். நிலையாமையை உணர்ந்தால் மட்டுமே அறநெறிக் கொள்கைகளை மக்கள் எளிதில் பின்பற்றுவர். மாயையாகிய மண்ணால் செய்யப்பட்ட உடம்பு, ஒளியுடம்பாக மாற்றப் பெற்றால், நீண்டநாள் நிலை பெறும். இல்லையெனில், பச்சை மண் பாண்டம் மழையினால் மண்ணாகக் கரைவதுபோல கரைந்துவிடும். உயிர் சென்றபின் மக்கள், மனைவி, உடன்வர மாட்டார்கள். செய்த அறங்களும், வினைகளும் மட்டுமே உடன்வரும்.

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே"
(3)

## கொல்லாமை

பிற உயிர்களைக் கொல்லக்கூடாது. கொலை செய்வோர் நரகத்தில் வீழ்வர். புலால் உண்பவரும் நரகத்தில் வீழ்வர்.இது பிற உயிர்களிடத்தில் கருணை,இரக்கம் கொள்ள தூண்டுகிறது. களவு, காமம், பொய்கூறல் முதலியவற்றை நீக்கினால் இன்பமாக வாழலாம்.

"கொல்லிடு குத்திடு கூறிய மாக்களை
வல்லிடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே" (4)

## கள்ளுண்ணாமை

கள்ளானது உண்டாரை மயங்கச் செய்யும். உண்மையை அழிக்கும். பெண்ணாசையை தூண்டும்.சிற்றின் பத்தை நாடி பேரின்பத்தை இழக்க வைக்கும். ஆகையால் கள்ளுண்பதை தவிர்க்க வேண்டும்.

"மயங்குந் தியங்குங் கள்வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தார்
இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே"
(5)

## பிறன்மனை நயவாமை

தன்மனைவியை புறக்கணித்து, பிறன் மனைவியை விரும்பித் துன்பம் எய்துதல், காம மயக்கத்தால் புளிய மரமேறி பயன்பெறாது கீழே விழுந்து கால் ஒடிவது போன்றது என்கிறார் திருமூலர்.

"திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அழுத்தமென் றெண்ணி அறையிற்
புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங் கொம்பேறி
கருத்தறி யாதவர் காலற்ற வாறே." (6)

## ஈகை, அன்பு

உண்ணும்போது ஒருப் கைப்பிடி அளவு உணவையாவது, உவகையுடன் பசியுடன் இருப்பவருக்கு கொடுக்க வேண்டும். தமிழர் என்றுமே உணவுப் பசியை ஆற்றுவதை முக்கிய பண்பாடாகப் பின்பற்றி வருகின்றனர் என்பது தனிச்சிறப்பு. அன்பின் முதிர்ச்சியால் இறையாகிய அறிவு விளங்கும். அன்புதான் இறைவனை அடையும் ஒரே வழி.

"யாவர்க்குமாம் உண்ணும் போதொரு
கைப்பிடி" (7)
"அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்"
(8)

## முடிவுரை

வாழ்க்கையை வாழும் விதங்களே பண்பாடு. திருமூலர் கூறும் அடிப்படையான ஒழுக்கத்தோடு கூடிய பண்பாட்டால் மனிதனை மனிதன் அன்பு பாராட்டுவான். அன்பைப் பொழிந்து வாழும் வாழ்க்கையே ஆன்மீக வாழ்க்கை. இத்தகைய ஆன்மீக பண்பாட்டு வாழ்க்கையையே திருமந்திரம் வலியுறுத்துகிறது.

**சான்றெண் விளக்கம்**

*கலித்தொகை, பா. 133.*

*திருக்குறள், 996*

*திருமந்திரம், பா.145*

*திருமந்திரம், பா. 198*

*திருமந்திரம், பா. 330*

*திருமந்திரம், பா. 202*

*திருமந்திரம், பா.252*

*திருமந்திரம், பா.270*

# கணினியின் வரலாறு

**மு. ஆயிஷாம்மா**
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,
மு.சா.ச. வக்பு வாரியக் கல்லூரி,
மதுரை-20

## முன்னுரை

இன்றைய உலகில் மிகப் பெரும்பாலான இடங்களில் பயன்படுத்தப்பட்டுவரும் மிக முக்கியமான இயந்திரம் கணினி ஆகும். அது நாம் கொடுக்கும் குறிப்புகளுக்குத் தக்க பணியினை மிக விரைவாகச் செய்து தரும் நவீன தானியங்கிக் கணக்கீட்டுக் கருவியாகும். இதே பணியினை நாமும் செய்யலாம். எனினும், அதன் வேகத்தோடு, நாம் ஈடுகொடுக்க இயலாது என அறுதியிட்டுக் கூறலாம்! சான்றாக, நவீன கணினிகள், எட்டு இலக்கங்கள் கொண்ட எண்களை வைத்து, வினாடிக்கு ஏறக்குறைய நான்கு இலட்சம் கூட்டல்களைச் செய்யும் திறனுடையதாகும். எனவே, எந்த ஒரு வேலையையும் விரைவாகவும், எளிதாகவும், துல்லியமாகவும் செய்ய இத்தகைய கம்ப்யூட்டர்கள் மிகவும் இன்றியமையாதவையாகின்றன.

## கணினியும், கணக்குப் பொறியும்

கணினி (Computer), கணக்கப்பொறி (Calculator) ஆகிய இரண்டுமே அடிப்படையில் கணகீட்டுக் கருவிகள் ஆனாலும், அவை இரண்டிற்குமிடையே மிக முக்கிய வேறுபாடு ஒன்று உண்டு. கணினியானது நாம் கொடுக்கும் செய்திகள் அனைத்தையும் (information) வாங்கித் தன்னுள் ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்துப் பின்னர் அதே வரிசையில் கொடுத்த குறிப்புகளுக்குத் தகுந்தவாறு பணியினைச் செய்து முடித்து, அவற்றின் முடிவுகளை வெளித்தரும் திறன் வாய்ந்தது, ஆனால், கணக்குப் பொறியால் அவ்வாறு செய்ய இயலாது. கணக்குப் பொறிக்கு ஒவ்வொரு முறையும் நாம் செய்திகளைக் கொடுத்து, கணக்கீட்டிற்குப்பின் அவற்றின் முடிவுகளை நாமே குறித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு, கணக்குப் பொறிக்கு ஒவ்வொரு நிலையிலும் இயக்கவிக்கும் தேவை இன்றியமை யாததாகிறது, ஏனெனில் அதற்குக் குறிப்புகளைச் சேர்த்து வைத்து பின்னர், கொடுத்த வரிசையில் கணக்கிடுந்திறனில்லை. ஒரே சமயத்தில் ஒரு வேலையைத்தான் செய்திகளைக் கொடுத்தால் மட்டும் போதுமானது. அதன் பின்னர்; கணினியானது நாம் கொடுத்த குறிப்புகளால் கட்டுப்படுத்தப்பட்டு, அவற்றிற்குத் தகுந்தவாறு செயல்படத் தொடங்கிவிடும். அதேபோல் ஒரு வேலையை முடித்த பின்னர் அடுத்து செயல்பட வேண்டிய வேலையின் செய்திகளும் கொடுக்கப்பட்டிருப்பின் அது தானாகவே அவ்வேலையைத் தொடரும். கணக்குப்பொறியைப் போல் ஒவ்வொரு நிலையிலும் அதனை இயக்கி வைக்கவேண்டிய அவசியமில்லை.

## கணினியின் வகைகள்

தற்காலக் கணினிகளை, (அ) குறியீட்டியல் கணினி (Analog Computer)

(ஆ) எண்ணியல் கணினி (Digital Computer) என இரண்டு முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம். குறியீட்டியல் கணினி நேரிடையாக எண்களை உபயோகித்துக் கணக்கீடுகளைச் செய்யாது. மாறாக முடிவுகளை அது அளவுகளாகத் தொடர்ந்து காட்டுகிறது. உதாரணமாக, ஒரு பேருந்தில் உள்ள வேகமானியை எடுத்துக் கொள்வோமானால், அது அப்பேருந்தின் வேகத்திற்கேற்ப தொடர்ந்து அதன் வேகத்தின் அளவைக் காட்டிக் கொண்டிருக்கிறது. அவ்வளவின் மூலம் நாம் அப்பேருந்தின் வேகத்தைத் தெரிந்து கொள்ளலாம். வெப்பமானியை இதற்கு இன்னொரு சான்றாகக் கூறலாம். அது தொடர்ந்து வெப்பநிலையைக் காட்டுகிறது. இங்குக் கூறப்பட்ட உதாரணங்களிலிருந்து நாம் ஓர் உண்மையை அறியலாம். அதாவது, குறியீட்டியல் கணினிகளில் நாம் மிகத் துல்லியமான முடிவுகளைப் பெற முடியாது என்பது. எனவே, இவ்வகைக் கணினிகள், அழுத்தம், வெப்பம், வேகம், மின்னழுத்தம் போன்றவற்றைக் கணக்கிட்டளப்பதற்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

எண்ணியல் கணினி தனது பெயருக்கேற்ப எண்களைக் கணக்கீட்டிற்கு அடிப்படையாகக் கொண்டு, தனித்தனிப் பகுதிகளாளச் செயல்படுகிறது. இவ்வகைக் கணினிகளின் மூலம் நாம் மிகத் துல்லியமான முடிவுகளைப் பெறக்கூடும். எனவே இக் கணினிகள் வியாபாரம், அறிவியல் மற்றும் பொறியியல் போன்ற எல்லா துறைகளிலும் பெரிதும் பயன் படுத்தப்படுகின்றன.

மேற்கூறிய இரண்டு வகைகள் தவிர, மற்றொரு வகைக் கணினியும் நடைமுறையில் உள்ளது. அது கூட்டியல் கணினி (Hybrid Computer) எனப்படும். அது குறியீட்டியல் மற்றும் எண்ணியல் ஆகிய இரண்டின் அடிப்படை நுட்பங்களையும், பயன்களையும் பெற்று விளங்குகிறது. அது குறிப்பிட்ட சில தனியான பயன்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றது.

### கணினிகளின் வரலாறு:

இவ்வியத்தகு இயந்திரங்களின் விவரங்களை அறியும் முன்னர். அவற்றின் வரலாற்றைப் பற்றி சிறிது காண்போம். சாதாரணமாக, சிறிய கணக்குகளைச் செய்யும்போது, நமது கைவிரல்களைப் பயன்படுத்துவது யாவருமறிந்த ஒரு கணக்கீட்டு முறையாகும். எண்களைக் குறிக்க, விரல்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகக் கருவிகள் சிலவற்றை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகளின் விளைவாகத் தான் **அபாகஸ் (ABACUS)** என்னும் கருவி தோன்றியது. அதுவே கணக்கீட்டுக் கருவிகளின் அடித்தளமாகக் கருதப் படுகிறது. அபாகஸ் இன்றும் பல நாடுகளில் குழந்தைகளின் கணிதப் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அபாகஸ் கருவி தொடர்ந்து இயக்கப்பட வேண்டியிருந்ததால், அனைத்து இயக்கங்களையும் இயந்திர மயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. முதல் இயந்திர மயமான கணக்குப்பொறி **பிளெஸ்ஸி** (Blaise Pasacal) என்னும் பிரெஞ்சுக் கணிதமேதையால் கி.பி. *1642* –ல் உருவாக்கப்பட்டது. அக்கருவி, சில பற்சக்கரங்களைப் பயன்படுத்தி, கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளை மட்டும் செய்யும் திறனுடையதாக விளங்கியது. பின்னர்; கி.பி. *1671* – இல் ஜெர்மன் கணித மேதையாகிய **லெய்ஃப்னிஸ்** (Leibniz) என்பவர் கூட்டல், கழித்தல் மற்றும் பெருக்கல் கணக்குகளைத் தாமாகத் தொடர்ந்து செய்யும் தானியங்கு

கருவிகளை உருவாக்கும் முயற்சியில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கணிதப் பேராசிரியரான, **சார்லஸ் பாபேஜ்** (Charles Babbage) கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில் ஈடுபட்டார். ஆனால், அவருடைய அம்முயற்சி முற்று பெறாமலே போய்விட்டது. எனினும், அவருடைய கருத்துக்கள்தாம் நவீன கணினியின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்தன.

## மின்னணு எண்ணியல் கணினி

கி.பி. 1940 – ஆம் ஆண்டளவில் சிறந்த நவீன மின் இயந்திர (Electro Mechanical) கணினிகள் உருவாக்கப்பட்டன. எனினும், வியத்தகு வேகமும், துல்லியமும் மிகுந்த மின்னணு எண்ணியல் கணினிகள் (Electrnic Digital computers) பெரிய தொழில் துறைகளின் கவனத்தை ஈர்த்தன. அவற்றுள் முதல் கணினியானது (ENIAC) பென்சில் வேனியா பல்கலைக் கழகத்தில் கி.பி. 1945 – இல் உருவாக்கப்பட்டது. அது வினாடிக்கு 5000 கூட்டல்களைச் செய்யுந்திறனுடையதாக இருந்தது. கி.பி. 1954 – 1958 – க்கும் இடைப்பட்ட காலத்தில் பல கணினிகள் வெவ்வேறு தயாரிப்பாளர்களால் அறிமுகப் படுத்தப்பட்டன.

மின்னணு எண்ணியல் கணினி களைப் பொறுத்தவரை, நாம் முக்கியமாக மூன்று தலைமுறைக் கணினிகளைக் காணலாம். 1954 – ஆம் ஆண்டளவில் வழக்கிலிருந்த கணினிகள் வெற்றுக் குழாய்களைப் (Vacuum Tubes) பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தன. இவை முதல் தலைமுறைக் (First generation) கணினிகளாகக் கருதப்படுகின்றன.

பின்னர் அவ்வெற்றுக் குழாய் களுக்குப் பதிலாக, டிரான்சிஸ்டர்களைப் பயன்படுத்தும் முறை 1958 – ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இவை இரண்டாம் தலைமுறைக் (Second generation) கணினிகளாகக் கருதப் படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்ட, வெற்றுக் குழாய் வானொலி செய்யும் அதே வேலையை, டிரான்சிஸ்டர்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டு வரும் நவீன வானொலியும் செய்கிறது. இது யாவருமறிந்த ஒன்று. எனினும் டிரான்சிஸ்டர் வானொலியானது, மிகச்சிறிய அமைப்புடனும், வேகமாக இயங்கக் கூடியதாகவும், குறைந்த மின்சக்தியுடன் செயல்படக்கூடியதாயும் விளங்குகிறது. இவையனைத்தும் டிரான் சிஸ்டர் கணினிகளுக்கும் பொருந்தும்.

1965 – ஆம் ஆண்டளவில், டிரான்சிஸ்டர்களுக்குப் பதிலாக, ஒருங்கிணைந்த மின்னணுப் பாதையைப் (Integrated Circuit) பயன்படுத்தும் கணினிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை மூன்றாம் தலைமுறைக் கணினிகளாகக் (Third generation) கருதப்படுகின்றன. இன்றைய கணினிகள் நடுத்தர அளவு இணைப்பு (Medium Scale Integration) அதிக அளவு இணைப்பு (Large Scale Integration) ஆகிய இரண்டு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் அதிக அளவு இணைப்பு நுட்பத்தைப் பயன்படுத்தும் கணினிகளை நான்காம் தலைமுறைக் (Fourth generation) கணினி என்று குறிப்பிடுவதுமுண்டு. ஒருங்கிணைந்த மின்னணுப் பாதைகளின் மிகச் சிறிய அமைப்பும், மிகப்பெரு வேகமும் இக்கணினிகளை வியத்தகு இயந்திரங்களாக விளங்கச் செய்கின்றன.

## பாகங்களும் அவற்றின் செயல்களும்

குறியீட்டியல், எண்ணியல் ஆகிய இருவகைக் கணினிகள் உபயோகத் திலிருந்தாலும், கணினிகளைக் குறிக்கும் வகையில்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. முன்பே குறிப்பிட்டபடி

*கணினி என்பது கணக்கீடு என்ற ஒன்றை மட்டும் செய்யும் கணக்குப் பெறியைப் போலன்றி, நாம் கொடுக்கும் செய்திகளைப் பெறுதல், தன்னுள் ஓரிடத்தில் சேர்த்து வைத்தல், கொடுத்த குறிப்புகளுக்குத் தகுந்தபடி கணக்கீடு களைத் தாமாகச் செய்யும் ஒரு கருவியாக விளங்கிகிறது. மேற்கூறிய ஒவ்வொரு செயலும் கணினியின் தனித்தனிக் கருவிகளால் நிகழ்த்தப்படுகின்றன. இருப்பினும் அனைத்துக் கருவிகளும் ஒரே கட்டுப்பாட்டின் அடிப்படையில் சீராகச் செயல்படுகின்றன.*

*பொதுவாகக் கணினியை படம் 1 – இல் காட்டியபடி ஐந்து அடிப்படைப் பகுதிகளாகப் பிரிக்கலாம்.*




## கணினியின் பாகங்கள்

*கொடுத்த குறிப்புகளுக்கு ஏற்பக் கணினியின் இயக்கங்களை வரிசைப்படுத்துதல், மற்ற பாகங்களின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்தல் போன்றவை கட்டுப் பாட்டுப் பகுதியின்* (Control Unit) *கடமைகளாகும். வரிசைப்படி கணக்கீடு களைச் செய்தல் கணக்கீட்டுப் பகுதியின்* (Arithmetic Unit) *பணியாகும். இவ்விரண்டு பகுதிகளும் ஒன்று சேர்ந்து மையச் செயல்படும் பகுதி* (Central Processing Unit) *என்று அழைக்கப்படுகிறது.*

*உள்ளீட்டுப் பகுதி* (Input unit) *மூலம் கொடுக்கும் செய்திகளை, எண்ணியல் கணினி தன்னுள் சேர்த்து வைக்கும் இடம்* **நினைவுப்பகுதி** (Memory Unit) *ஆகும். கொடுத்த குறிப்புகளுக்கேற்ப, கணக்கீடு களை முடித்த பின்னர் அவற்றின் முடிவுகள் மீண்டும் நினைவுப் பகுதியை அடைகின்றன. பின்னர் இந்நினைவுப் பகுதியிலிருந்து வெளியீட்டுப் பகுதிக்கு* (Output Unit) *அனுப்பப்படுகிறது. பெரும்பாலான கணினிகள் இருவகை நினைவகத்தைப் பெற்றிருக்கின்றன. அவற்றுள் ஒன்று முதன்மை நினைவகம்* (Main Memory). *மற்றொன்று உதவி நினைவகம்* (Auxilary memory). *முதன்மை நினைவகம் ஒரு வரையறைக்குட்பட்ட கணினியின் ஒரு முக்கிய பகுதியாகும். உதவி நினைவகம் காந்த நாடா* (Magnetic tape) *இக் காந்தத்தட்டு* (Magnetic disk) *காந்த உருளை* (Magnetic drum) *ஆகியவற்றைப் பெற்றிருக்கும். செய்திகளை நினை வகத்திற்குள் கொண்டு சேர்க்க ஆகும் நேரம், அல்லது செய்திகளை நினைவகத் திலிருந்து வெளியில் கொண்டு வர ஆகும் நேரம் இதைப் பொறுத்துத்தான் கணினியின் கணக்கீட்டு வேகம் அமைந்திருக்கும். சாதாரணமாக அந்த நேரங்கள், ஒரு வினாடியின் இலட்சத்தில் ஒரு பகுதி அளவாக* (Microseconds) *இருக்கும். அதாவது ஒரு வினாடியில் இலட்சக்கணக்கான செய்திகளை நினைவகத்தில் கொண்டு சேர்க்கவோ அல்லது செய்திகளை அங்கிருந்து வெளியில் கொண்டு வரவோ முடியும். மையச் செயல்படும் பகுதியும், இதே வேகத்தில் குறிப்புகளுக்குத் தகுந்தவாறு செயல்களைச் செய்து முடிக்கும்.*

*உள்ளீட்டுப் பகுதியும் வெளியீட்டுப் பகுதியும் மின்னணு இணைப்புகள் மூலம் கணினியுடன் இணைந்த தனித்தனிப் பகுதிகளாகும். இப்பகுதிகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கருவிகளைப் பெற்றிருக்கும்.*

இக்கருவிகள் தம் பணிகளுக்குப் பயன் படுத்தும் பொருள்களைக் கொண்டு அவற்றின் பெயர்கள் வேறுபடுகின்றன. அட்டை படிப்பி (Card Reader) காகித நாடா படிப்பி (Paper Tape Reader). காந்த நாடாக் கருவி (Magnetic tape drive) முதலியன சில உள்ளீட்டுச் சாதனங்களாகும். வரியடிப்பி (Line Printer), காந்த நாடாக் கருவி, காந்தத் தட்டுக் கருவி (Magnetic disk drive) முதலியன சில வெளியீட்டுச் சாதனங்களாகும். மேற்கூறியவற்றிலிருந்து நாம் ஓர் உண்மையைக் காணலாம். அதாவது, காந்த நாடா காந்தத்தட்டு போன்ற காந்த சக்தியுள்ள பொருள்களனைத்தையும் உள்ளீடுதல் மற்றும் வெளியிடுதல் ஆகிய இரண்டு வகைகளிலும் பயன்படுத்தலாம், ஆனால் காந்த சக்தியற்ற, அட்டை படிப்பி, வரியடிப்பி போன்றவற்றை முறையே உள்ளிடுதல், வெளியிடுதல் ஆகிய வகையில்தான் பயன்படுத்தக்கூடும்.

## நிகழ்ச்சித் தொகுப்பு

மேற்கூறப்பட்ட பாகங்கள் அனைத்தும் ஒன்று சேர்த்துப் பொதுவாகக் கணினியின் வன் பொருள், (Hardware) என்றழைக்கப் படுகிறது. கணினியைப் பயன்படுத்த நாம் கொடுக்கும் குறிப்புகளின் தொகுப்பு ஒரு நிரல் (Programme) என்றும் பல நிரல்களின் தொகுப்பு மென்பொருள் (Software) என்றும் கூறுவர். மென்பொருளினைக் கணினி அமைப்பியல் மென்பொருள் (System Software) என்றும், பயன்படுத்தப்படும் மென்பொருள் (Application Software) என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம், கணினி அமைப்பின் மென் பொருள் என்பது, அக்கணினியுடன் அதன் தயாரிப்பாளரால் கொடுக்கப் படும் மொழி செயல்படுத்தும் முறை (language processor) ஆகும். ஒவ்வொரு மொழி செயல்படுத்தும் முறையும் தனக்கென ஒரு இலக்கணத்தைப் பெற்றிருக்கும். அவ்விலக்கணப்படி, குறிப்புகளை ஏதேனும் ஒரு மொழியில் கணினியுக்குக் கொடுத்தல் வேண்டும். பின்னர் அக்குறிப்புகள் அம்மொழியினைச் சார்ந்த மொழி மாற்றியால் அக்கணினியின் மொழிக்கு (எண்களை மட்டும் பயன்படுத்தி) மாற்றப்படும். பின்னர் அப்பணியினை முடித்து அதன் முடிவினை நமக்கு வேண்டிய படிவத்தில் தரும். இவ்வாறு நாம் கொடுக்கும் நிகழ்ச்சிகளின் தொகுப்பு பயன்படுத்தப்படும் மென் பொருள் ஆகும். கோபால் (Cobol), ஃபோர்ட்ரான் (Fortran) ஆகிய இரண்டும் மிகப் பிரசித்தி பெற்ற கணினி மொழிகளாகும். இவற்றில் கோபால் வியாபாரத்துறையிலும் ஃபோர்ட்ரான் விஞ்ஞானத் துறையிலும் பயன்படுத்தப்படும் மொழியாகும்.

## பயன்கள்

பல்வேறு கணினிகள் தற்போது வழக்கில் இருப்பினும், அவற்றைத் தனி நோக்கு. கணினி, பொது நோக்குக் கணினி என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒரு தனிநோக்குக் கணினி குறிப்பிட்ட தனி உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தத்படும். விமானம் மற்றும் ஏவுகணை ஆகியவற்றைக் கட்டுப் படுத்தத் தனி நோக்குக் கணினிகள் பயன்படுத்தப்படுகின்றன.

கணினிகள் பயன்படுத்தப்படும் துறையைக் கொண்டு, விஞ்ஞான கணினிகள், வியாபார கணினிகள், தொடர்நிலைக் கணினிகள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். விஞ்ஞான கணினியும், வியாபாரக் கணினிகளும், அவற்றின் பெயருக்கேற்ப, முறையே விஞ்ஞான மற்றும் அறிவியல் துறையில் பயன்படுத்தப்படுகின்றன. தொடர்நிலைக் கணினியானது,

சூழ்நிலையின் தன்மையை இடையறாது குறிக்கப் பயன்படுகிறது. மேலும், அது தொடர்ச்சியாக, சூழ்நிலையில் ஏற்படும் விரும்பத்தக்க மாறுதல்களுக்கு ஏற்பச் செயல்படும் தன்மை உடையதாகும். உரத் தொழிற்சாலை மற்றும் இரும்புத் தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங் களைக் கட்டுப்படுத்த இவ்வகைக் கணினிகள் பயன்படுத்தப்படுகின்றன.

## முடிவுரை

இயங்கும் விதத்தைப் பொறுத்து, கணினிகளை மேலும் மூன்று வகை களாகப் பிரிக்கலாம். அவையாவன, அடுத்தடுத்துச் செயல்படும் கணினிகள், நேரப் பங்கீட்டுக் கணினி, உடனறிமுறைக் கணினி என்பனவாகும். அடுத்தடுத்துச் செயல்படும் கணினி, பணியினை ஒன்றன் பின் ஒன்றாக அடுத்தடுத்துச் செய்யும் தன்மையுடையது. நேரப் பங்கீட்டுக் கணினி ஒரே சமயத்தில் பலர் தத்தம் பணிகளுக்காகப் பயன்படுத்தும்போது ஒவ்வொருவரும் தனித் தனிக் கணினியை வைத்திருப்பது போன்ற உணர்ச்சி ஏற்படும். விமானப் போக்குவரத்துப் பதிவு செய்தல், உடனறி விசாரணை முறைகள், நூலகச் செய்திகளைப் பெறுதல் ஆகியவற்றிற்கு உடனறிமுறைக் கணினிகள் பயன்படுத்தப்படுகின்றன.

## துணைநூற் பட்டியல்


ரெபிடெக்ஸ் கம்ப்யூட்டர் கோர்ஸ், ராமநாதன். இ., ரெபிடெக்ஸ் யுனிகர்ன் பதிப்பகம்.

தமிழும் கணினியும், ராதா செல்லப்பா, கவிதை அமுதம் வெளியீடு.

கணிப்பொறி அமைப்பும்: இயக்கமும் பயன்பாடும், க.அர. பழனிச்சாமி, NCBH சென்னை.

# கான்சாகிபு சண்டை கதைப்பாடலும் தமிழர் பண்பாடும்

**முனைவர் பி.ஆறுமுகம்,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

## முன்னுரை:

கதைப்பாடல் என்பது மனித சமூகத்திற்குத் தேவையான ஒரு பண்பாட்டுப் பெட்டகமாகப் பயன் படுகிறதென்று சொன்னால் அது தவறாகாது. தமிழ் இலக்கியங்களில் மதுரை வீரன் கதைப்பாடல், வீரபாண்டிய கட்டப் பொம்மு கதைப்பாடல், ஐவர் ராசாக்கள் கதை, கான்சாகிபு சண்டை கதைப்பாடல் போன்ற கதைப்பாடல்கள் சிறப்பாகப் பேசப்படுகின்றன. இவற்றில் கான்சாகிபு சண்டை கதைப்பாடலில் பதிவாகியுள்ள தமிழர் பண்பாட்டை ஆய்ந்து வெளிக்கொணர்வது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாடு – கான்சாகிபு சண்டை கதைப்பாடல் – ஓர் அறிமுகம்:

பண்பாடு என்பது “குறிப்பிட்ட நாடு, இடம் போன்றவற்றைச் சேர்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மதம், மொழி, கலைகள், சிந்தனை வெளிப்பாடு, வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருக்கும் பொருள்கள் போன்றவற்றின் மொத்தம்; கலாச்சாரம் (Culture)[1] ஆகும்.

தமிழக வரலாற்றில் மாவீரன் மருதநாயகம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளான். இவன் தான் கான்சாகிபு என்ற மன்னன் ஆவான். இவன் இந்துவாகப் பிறந்து, இசுலாமியனாக மதம் மாறியவன். ஆங்கிலேயரால் வளர்க்கப் பட்டவன். முதலில் இவன் ஆங்கிலேயர் படையில் ஒரு சாதாரணக் காவலராகச் சேர்ந்தான், பின் படிப்படியாக அப்படையின் அதிகாரியானான், பின் ஆங்கிலேயரையே எதிர்த்துப் பல போர்கள் புரிந்துள்ளான். இறுதியில் ஆங்கிலேயரால் இருமுறை சுட்டுக் கொள்ளப்பட்டவன். ஒருவனை இருமுறை சுட்டுக் கொன்றால் அம்முறையை ஆங்கிலேயர் ‘துபாசி’ என்றழைப்பர். அவ்வாறு கான்சாகிபுவை ஆங்கிலேயர் இரண்டுமுறை சுட்டுக் கொன்று அவனுடைய உடல் உறுப்புகளைப் பல இடங்களில் புதைத்துள்ளனர். இவ்வீரனின் வரலாற்றைத்தான் உலக நாயகன் கமலஹாசன் திரைப்படமாக எடுத்துவருகிறார். மதுரையில் இவன் தங்கிய அரண்மனைப்பகுதி இன்றும் கான்சா மேட்டுத் தெரு என்றே பெயர் வழங்கி வருகிறது. இவனது வரலாற்றைப் பாடலாகக் கூறுவதுதான் கான்சாகிபு சண்டை கதைப்பாடலாகும். இப்பாடலை முதன் முதலில் வெளிக்கொணர்ந்தவர் நா.வான்மாமலை ஆவார். இவர் தமிழக நாட்டுப்புறவியலின் தந்தை எனப் படுகிறார். இக்கதைப்பாடலில் தமிழரின் பண்பாடுகள் பல இடங்களில் பதிவாகி யுள்ளன. அவற்றைப் பின்வருமாறு ஆராயலாம்.

## தமிழர் விருந்தினரை வரவேற்கும் பண்பாடு:

தமிழரின் தலையாய பண்பு விருந்தினரை நல்ல முறையில் வரவேற்று உபசரிப்பதாகும். விருந்தினர் வரும்போது 7 அடி முன்னே வந்து அவர்களை வரவேற்பதும் அதைபோல் விருந்தினர் விடைபெற்றுச் செல்லும் போதும் 7 அடி கூடவே நடந்து சென்று அவர்களை வழியனுப்புவதும் தமிழரின் பண்பாடு ஆகும். இவ்வழக்கம் தெய்வத்திற்கும் நடந்திருக்கிறது. அதனால்தான் மதுரை சித்திரைத் திருவிழாவில், ஆற்றில் அழகர் இறங்கும் நாளில், பக்தர்கள் மூன்றுமாவடி வரை சென்று அழகரை எதிர்கொண்டு அவரை வரவேற்கின்றனர். இந்நிகழ்வைத்தான் மக்கள் 'எதிர்சேவை' என்று அழைக்கின்றனர். அதே போல் அக்காலத்தில் மன்னர் வரும்போதும் பல்வேறு பரிவாரங்கள் அவரின் எதிரே சென்று அவரை வரவேற்றிருக்கின்றன. குறிப்பாகக் கான்சாகிபு மன்னன் மதுரைக்கு வரும்போது தமிழர்கள் கொடி யசைத்து, வானவேடிக்கை செய்து அதிர்வேட்டுகள் சப்தமிட, மேள தாளங்கள் முழங்க, நடனமாந்தர்கள் நடனமாட, பணிப்பெண்கள் வெண்கவரி வீசி வரவேற்றுள்ளனர். இதை,

> "கொடி முரசு தம்பூரடிக்க நல்ல
> துடியாக வானமுகடதிர நல்ல
> தோகையர்கள் நடனமிட
> வெண்கவரிவீச"[2]

என்ற கான்சாகிபு சண்டை கதைப்பாடல் வரிகளால் அறியலாம். அதேபோல் இப்பாடலில் தாண்டவராயன் (திருப்புவனக் கோட்டையின் தளபதி) வயிரவன் பட்டியை அடைந்தபோது மக்கள் பொன்னால் மலர்செய்தும் வெள்ளியால் மலர்செய்தும் அவற்றைக் கையிலெடுத்து முன்னே ஏந்தி பேரிகை முழங்க, வெண்கவரி வீச, எறியீட்டி மற்றும் வெடிக்காரர் முன்னே நடந்து வர, குடைக்காரர் சுற்றிவர தமிழ்மக்கள் தளபதியை வரவேற்றுள்ளனர். இதை

> "தடம்பரவும் பொன்மலர் செய்து நல்ல
> தங்கமலர் வெள்ளிமலர் தன் கையிலெடுத்து
> விருதுரண பேரிகை முழங்க குதிரை
> மேலிட்டா நகபயத்துங்கா முழங்க
> இருபுறமும் வெண்கவரி வீச நல்ல
> எறியீட்டி வெடிக்காரர் முன்னே நடக்க
> சுத்திக் குடைக்காரர் சூழ குதிரைக்
> காரர் படைவீரனுடனே கடல்போல் நடக்க
> வெளி வெஞ்சாமரைகள் வீசு முல்லை"[3]

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

## அரசன் வரும் போதும் செல்லும் போதும் கட்டியம் சொல்லும் பண்பாடு:

மன்னன் வரும்போது அவரை வரவேற்கும் முகமாகக் கட்டியம் சொல்லும் பண்பாடும் தமிழரிடையே இருந்துள்ளது. கட்டியம் என்றால் மன்னன் வருகைக்கு முன் ஒருவர் தங்கம் அல்லது வெள்ளிச் செங்கோல் அல்லது மரச் செங்கோலைக் கையில் வைத்துக் கொண்டு உரத்தகுரலில் மன்னன் வருகையை அறிவிப்பது ஆகும். நீதி மன்றங்களில் நீதியரசர் வரும்போது ஆமினா (கட்டியம் சொல்லும் அலுவலர்) கட்டியம் சொல்லும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளதைக் காணலாம். கோயில்களில் அரசர் வருகையைக் கட்டியம் சொல்லும்போது அரசர் பொற்காசு கொடுக்கும் வழக்கமும் இருந்துள்ளது கான்சாகிபு சண்டை கதைப் பாடலில் இராமநாதபுரத்தின் மன்னர் முத்துவடுகநாதர் வரும்போது கட்டியம் சொல்லியருக்கின்றனர். இதை,

> "இடிபோல பேரிகை முழங்க நல்ல
> இசையான சங்கீத மேளந் துலங்க
> திடமுடைய நகுலா பராக்கு உலகில்
> தேவதேவேந்திரா தீரா பராக்கு
> வடக்கரைப் புலி பெரியவுடையார் தேவர்
> வங்கிவும் விளங்க வரும்மாலே பராக்கு

இப்படி கட்டியல் கூற பூலோக
வந்திரனாதிபதி கொலுவந்து சேர்ந்து"[4]

என்று பாடல் வரிகள் தெரிவிக்கின்றன. இவ்வரிகளை நோக்கும்போது மன்னரை மக்கள் இந்திரன், திருமால், போன்ற தெய்வங்களாகப் பார்த்தனர் என்ற செய்தி புலனாகிறது. மேலும் மன்னரோ மந்திரியோ ஒரு இடத்தைவிட்டு விடை பெற்றுச் செல்லும் போதும் கட்டியம் சொல்லியுள்ளனர். கான்சாகிபு சண்டை கதைப்பாடலில் தாண்டவராயன் விடைபெற்றுச் செல்லும்போதும் கட்டியம் கூறியிருக்கின்றனர் என்ற செய்தி உள்ளது. இதை,

"தீரனும் போய்வா என்றுரைக்க அப்போ
திருப்பினான் பாளையம்தனள
தாண்டவராயன்
கட்டியம் பராக்கென்று கூற நல்ல"[5]

என்ற பாடல் வரிகளால் அறியலாம். மேலும் இராமநாதபுரம் படைத்தளபதி தாமோதரம் பிள்ளை விடைபெற்றுச் செல்லும்போதும் கட்டியம் கூறியிருக் கின்றனர், இதை,

"வெண்கவரியால் வட்டம் வீச கட்டியர்
மேலெச்சரிக்கை பராக்கென்று கூற
செயசிங்கம் தாமோதரம் வடக்கு முகம்
நோக்கி"[6]

என்ற பாடல் வரிகளால் அறியலாம். மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் தினமும் இரவு 08.00 மணிக்குப் பள்ளியறைப் பூசை நடக்கிறது. அப்போது சுந்தரேசுவரர் பாண்டிய மன்னனாகப் பள்ளியறைக்கு எழுந்தருளுவார் அவர் அம்மன் சன்னதியில் நுழைந்தவுடன் கட்டியம் சொல்பவன்,

"தேவ தேவோத்தமா! தேவதா சார்வ
பௌமா!
அகிலாண்டகோடி பிரும்மாண்ட நாயகா!
அட்சரீகா! பார்வதிப் பிரியன்! சோமசுந்தரப்
பாண்டி மகாராசா பராக்! பராக்!

என்று உரத்த குரலில் சொல்வான். இந்நிகழ்வை ஆய்வாளர் நேரில் காண முடிந்தது. இச்செய்தி இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

## பெண்ணுக்குத் தமிழர் சீரிவரிசை அளிக்கும் பண்பாடு:

தாய் தந்தையர் தாம் பெற்ற பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் போது அப்பெண்ணுக்குச் சீதனம் கொடுப்பர்.சீதனம் என்பது பெண்ணுக்குக் கொடுக்கும் சீர்வரிசைச் செல்வம் ஆகும். இப்பண்பாடு தமிழரிடையே காலங்காலமாக நடந்து வருகிறது. கான்சாகிபுவின் மனைவி மாசாவுக்கு தாண்டவராயன் பிள்ளை தங்கத்தாலான பல்லாங்குழி பலகை, ஈர்க்கொல்லி, சீப்பு மூக்குத்தி, யாழ்ப்பாணத்துப்பட்டு, சீனத்து ரவிக்கை ஆகியனவும், கானனுக்கு முத்தாலே அங்கியையும், தங்க மோதிரமும், பனிரெண்டு செங்கரும்பும், மாசாவின் மகனுக்கு வச்சிரமணிக்குல்லா, தங்கத் தொட்டில் ஆகியவைகளையும் சீர் வரிசைகளாக அனுப்புகிறான். இதை,

"மங்கையவளிருந்து விளையாட நல்ல
தங்கத்தால் பல்லாங்குழியொன்று செய்து
தங்கத்தால் பலகைகளை செய்து நல்ல
தங்கத்தால் ஈர்க்கொல்லி பொன்னாலே சீப்பும்
மாசாவுக்கு சீனத்து ரவிக்கை நல்ல
வச்சிரமணி மூக்குத்தி பொன்னினாள் செய்து
மாசாவின் மகனுக்கென்று சொல்லி நல்ல
வயிடூரியக் குல்லாவில் வச்ரரே கல்லமுத்தி
கானனுக்கு முத்தாலே அங்கி வச்சிரக்
கல்லிழைத்த மோதிரமுங்கனக்கவே செய்து
.........................................................
சேல்போலும் விழி மாசா மகிழ மதுரை
திசைநோக்கி அனுப்பினான் தாண்டவராயன்"[7]

என்ற பாடல் வரிகளால் அறியலாம். இச்செய்தியை நோக்கும்போது பெண்ணுக்குச் சீதனம் கொடுக்கும் பண்பாடு கான்சாகிபு சண்டை கதைப்

பாடல் வழி நமக்குப் புலனாகிறது.

## தமிழர் தெய்வங்களை மும்முறை வலம் வரும் பண்பாடு:

மன்னன் படையெடுத்துச் செல்லும் போதும், மக்கள் சுப காரியங்களுக்குச் செல்லும் போதும் அக்காலத்தில் தெய்வத்தை மும்முறை வணங்கிச் செல்லும் வழக்கம் தமிழரிடையே இருந்துள்ளது. கான்சாகிபு சண்டை கதைப்பாடலில் தாமோதரம்பிள்ளை ஆர்க்காடு நவாபுவை அழைத்துவர வடக்கே பயணமாகிறார். அவர் புறப் பட்டுச் செல்லும்முன் இராமேசுவரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனிடம் செல்கிறார். அவரை மும்முறை வலம் வந்து வணங்குகிறார். இதை

**"சிவாலயத்தை மூன்றுதரம் வலமாக வந்து**
**அறுபது பொன்னெடுத்து கொடுத்து**
**சுவாமிக்கு"**[8]

என்ற பாடல் வரிகளால் அறியலாம். மனிதர்கள் சுபகாரியங்களுக்குச் செல்லும்போது தெய்வத்தை வலம் வரும் வழக்கம் மட்டுமல்ல யானையை வலம் வரும் வழக்கமும் தமிழரிடையே இருந்துள்ளது. கான்சாகிபு சண்டை கதைப்பாடலில் மதிமந்திரி யானையை மூன்றுதரம் வலம் வந்து சென்றார் என்ற செய்தியும் உள்ளது. இதை

**"தளகர்த்தன் வெகுமதிகள் வாங்கி வெகு**
**தளத்துடனே யானைதனை மூன்றுதரம் சுற்றி"**[9]

என்ற பாடல் வரிகளாலும் அறியலாம்.

## நற்சொல்கேட்டுகும் பண்பாடு:

மன்னன் படையெடுத்துச் செல்லும்போதும், மக்கள் நல்ல காரியங் களுக்குச் செல்லும்போதும் நற்சொல் கேட்கும் பண்பாடு தமிழரிடம் இருந்துள்ளது. இதை விரிச்சி கேட்டல், நற்சொல் கேட்டல், கெவுளிசொல் கேட்டல், பிரசன்னம் பார்த்தல், சகுனம் பார்த்தல், தட்சிணம் கேட்டல், தட்சிண உத்தரவு கேட்டல் போன்ற சொற்களால் அறியலாம். கான்சாகிபு சண்டை கதைப்பாடலில் மாசா தன் கணவன் கான்சாகிபுவிடமும், பாசமாக இருந்தாள். தன் அண்ணன் தாண்டவ ராயப்பிள்ளையிடமும் பாசமாக இருந்தாள். கான்சாகிபுவும் தாண்டவ ராயனும் அடிக்கடி சண்டை யிட்டுக் கொள்கின்றனர். இவர்களை ஒற்றுமைப்படுத்த நினைத்த மாசா மீனாட்சி தெய்வம் யாரிடம் இருக்கிறாள் என்று கேட்பதற்காக மதுரைக் கோயிலுக்கு வந்து நற்சொல் கேட்கிறாள். மீனாட்சி தெய்வமும் நற்சொல் கொடுக்கிறது இதை,

**"துரைகானு பங்கிலே நீயிருந்தால் எனக்கு**
**துடியாக வலதுபுறஞ் சொல்ல வேணும்**
**தாயே**
**இரவிகுல மறவர் பங்கிலிருந்தால் எனக்கு**
**இடதுபுறஞ் சொல்லென்று கேட்டாளே மாசா**
**தென்புறத்தில் சொல்லாதபடிக்கு மீனாள்**
**திருவிருப்பில் இடதுபக்கம் கெவுளியது**
**சொல்ல"**[10]

என்ற பாடல் வரிகளால் அறியலாம். அதேபோல் கான்சாகிபுடன் போராட ஆர்க்காடு நவாபுவை தாமோதரம் பிள்ளை அழைத்துவரப் போகுமுன் இராமேசுவரம் கோயில் சிவனிடம் போய்த் தட்சிணம் கேட்கிறான். சிவனே நான் வடக்கே போகவேண்டுமென்றால் எனக்கு இடது புறம் தட்சணம் சொல்ல வேண்டும் என்று கேட்கிறான். அவன் கேட்ட இடத்தில் இராமநாதர் தெட்சணம் கொடுக்கிறார். இதை,

**"திடத்துடன் வடக்கே போக வென்றால் எனக்கு**
**இடதுபுறந் தெட்சணம் சொல்லவேணும் என்றான்**
**செயமாகும் வடக்கே போவென்று ராமர்**
**திருவுறுப்பில் தெட்சணங் கெவுளியது**
**சொல்ல"**[11]

என்ற கான்சாகிபு சண்டை கதைப் பாடல் வரிகளால் அறியலாம்.

இச்செய்தியை நோக்கும்போது மதுரை மீனாட்சியம்மனிடமும் இராமே சுவரத்திலுள்ள இராமநாதசுவாமியிடமும் தெட்சணம் கேட்கும் பண்பாடு தமிழரிடையே இருந்துள்ளதை நாம் கான்சாகிபு சண்டை கதைப்பாடல் வழி அறியமுடிகிறது.

## முடிவுரை:

இந்த ஆய்வுக் கட்டுரையின் மூலம் கான்சாகிபு சண்டை கதைப்பாடலில் பதிவாகியிருந்த தமிழர் விருந்தினரை வரவேற்கும் பண்பாடு, அரசர் வரும் போதும் செல்லும் போதும் தமிழர் கட்டியம் சொல்லும் பண்பாடு, பெண்ணுக்குச் சீர்வரிசை அளிக்கும் பண்பாடு தமிழர் தெய்வங்களை மும்முறை வலம் வந்து செல்லும் பண்பாடு, ஆகிய தமிழ்ப்பண்பாடுகள் குறித்து விரிவாகவும் விளக்கமாகவும் ஆராயப்பட்டன.

## அடிக்குறிப்புகள்

1. *க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி, 2008, ப – 887.*
2. *லேனா தமிழ்வாணன், (பதி.ஆ) பாடல் வடிவில் மருத நாயகத்தின் கதை, 1997, ப–19.*
3. *மேலது, ப–47.*
4. *மேலது, ப–49.*
5. *மேலது, ப–57.*
6. *மேலது, ப–62.*
7. *மேலது, பக்–36,37*
8. *மேலது, ப–66.*
9. *மேலது, ப–56.*
10. *மேலது, ப–44.*
11. *மேலது, ப–61.*

# தொல்காப்பியமும் இசையும்

– ரா. உமாதேவி,
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு,
தமிழ்த்துறை,
அன்னை மகளிர் கல்லூரி,
புன்னம்சத்திரம், கரூர்-09.

## ஆய்வு சுருக்கம்

தமிழ்மொழியின் கண் தோன்றிய இலக்கண நூல்களுள் காலத்தால் பழமை கொண்டதாகத் தொல்காப்பியம் ஆனது திகழ்கிறது. தொல்காப்பியத்தினை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒன்பது இயல்களாக வகுத்து கூறியுள்ளனர். அவற்றுள் இடம்பெற்றுள்ள இசைக்கருவிகளான தொழிலிசை, இன்ப இசையின் ஆதிக்கதினைபற்றியும் அறிய முடிகின்றது.

## முன்னுரை

தமிழர்கள் போற்றிக் கொண்டாடும் “ஒல்காப் புகழ் தொல்காப்பியம்” என்ற பொன்மொழிக்கேற்ப இலக்கண நூலை நம் தமிழுக்கும், தமிழர்களுக்கும் ஞானக் கொடையாகத்தந்துதவியவரே தொல்காப்பியர் ஆவார்.அவருடைய நூல்களில் 1610 நூற்பாக்களானது இடம்பெற்றுள்ளது. அவற்றுள் இசைப் பற்றிய செய்திகளையும் நூற்பாவழி அறியலாம். அதில் தொழிலிசை கருவியான பறையினைப் பற்றியும், இன்ப இசைக்கருவியான யாழினைப் பற்றியும் மிக்க கவனத்துடன் கூறியுள்ளார். அவ்வகையில் தொல்காப்பியத்தில் இசையினைப் பற்றி எடுத்துரைப்பது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## தொல்காப்பியம் – விளக்கம்

தமிழ் இலக்கண நூல்களில் பழமையானதாக அகத்தியம் இருப்பினும், மிகவும் பழமையான இலக்கண நூல்களுள் முதல் நூலாக தொல்காப்பியம் ஆனது அமைகிறது. இந்நூலானது தொன்மைக்கும் இலக்கிய பழமைக்கும் சான்றாக அமைகிறது. தொல்காப்பியத்தினை இயற்றியவர் தொல்காப்பியர் ஆவார். இவர் வாழ்ந்த காலமும் தொல்காப்பிய நூல் தோன்றிய காலமும் எதுவென அறியப்படவில்லை. ஆகையால், இவருடைய பெயரை மையமாகக் கொண்டே இந்நூலுக்குப் பெயரிடப்பட்டுள்ளது. இவருடைய நூலில் எழுத்துக்கும், சொல்லுக்கும், பொருளுக்கும் மட்டும் இலக்கணத்தை வகுக்கப்படவில்லை. வாழ்வியல் நெறிமுறை களுக்கும் அதாவது காதல் களவுக்கும், கற்புக்கும், போருக்கும், வீரத்திற்கும் கூட நேர்த்தியாக இலக்கணத்தை வகுத்துள்ளார். இதனை மூன்று அதிகாரங்களாகவும், உள் பிரிவு களாக ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்களானது இடம்பெற்றுள்ளது.அவை,

எழுத்ததிகாரம்– ஒன்பது இயல்கள்

சொல்லதிகாரம்– ஒன்பது இயல்கள்

பொருளதிகாரம் – ஒன்பது இயல்கள்

எழுத்து, சொல் அதிகாரங்களில் எழுத்து மற்றும் சொல் இலக்கணங் களானது விரிவாக கூறப்பட்டுள்ளன. பொருள் அதிகாரத்தில் அகப்பொருள்

*மற்றும் புறப்பொருள் என பொருள் இலக்கணமானது கூறப்பட்டுள்ளன.*

## இசை ஓர் அறிமுகம்

*இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழின் நடுவணது இசைத் தமிழ் ஆகும். இசை எழுவகை அடிப் படைகளை உடையது என்று முதன் முதலில் கூறியது தமிழர்களே ஆவர்.*

## ஏழு சுரங்கள்

- *குரல் (ச)*
- *துத்தம் (ரி)*
- *கைக்கிளை (க)*
- *உழை (ம)*
- *இளி (ப)*
- *விளரி (த)*
- *தாரம் (நி) என்பது ஏழு சுரங்களாகும்.*

*மொழிக்கு முன்னே தோன்றியது இசை. இசையில் இருந்தே மொழி எழுந்தது. எனவே மொழிக்குத் தாயாக திகழ்வது ஓசையே எனலாம். வாழ்விலே இசையையும் வாழ்வையும் கண்டவர்கள் தமிழர்கள். இசையிலே வசித்தவர்களும் இறைவனையே எழிசையாய் இசைப் பயனாய் எண்ணியவர்களும் தமிழர்களே. இசையின் ஏற்றமானது இன்புறச் செய்கிறது. அனைத்து உயிர்களையும் ஆட்டி வைப்பதும் இசையே ஆகும். இவ்வகையான இசைகளானது பல நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. இசைக் கருவிகளை அதன் தன்மைக்கேற்ப நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம். அவை,*

- *தோல் கருவி*
- *துளைக் கருவி*
- *நரம்புக் கருவி*
- *கஞ்சகக்கருவி*

*இவ்வகையான கருவிகளில் யாழ், பறைஎன்னும் இருவகையான இசைக் கருவிகளானது தொல்காப்பியத்தில் இடம்பெறுகிறது*

## தொல்காப்பியத்தில் இசை

*வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களையும், வண்ணங்களையும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். மேலும் தொல்காப்பிய அகத்திணை யியலில் உள்ள கருப்பொருள் எட்டினுள் யாழ் மற்றும் பறை பற்றிய செய்தியானது அமைகிறது. தொல்காப்பியத்தில்,*

**"அசையும் சீரும் இசையோடு சேர்த்த**
**வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே"**
***(தொல்.பொ.பஎண்509)***

*என்ற இந்நூற்பாவில் அசையும் சீரையும் இசையோடு சேர்த்து பொருளுணர்ந்து வகுத்துச் செய்யுள் இலக்கணமாக திகழ்கிறது என்கிறார் தொல்காப்பியர்.*

**"இசைப்பு இசையாகும்"**
***(தொல்.சொல்.ப. எண் 151)***

*அதாவது இசைப்பு என்பதற்கு யாழ் போன்ற இசைக்கருவிகளை இசைத்தல் என்பது பொருளாகும். இது இசைப் பொருண்மையினை உணர்த்தக் கூடியதாகும் என்கிறார். இசையோடு பொருந்திய யாழ் நூலில் இசை எழுத்துக்கள் அவற்றிற்கு உரிய மாத்திரை அளவில் ஒலித்தலும், ஒற்றுகள் நீண்டு ஒழித்தலும் உண்டு என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அதனை,*

**"அளவு இறந்து உயிர்த்தலும் ஒற்று**
**இசை நீடலும்**
**உள என மொழிப இசையோடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மகனார் புலவர்"**
***(தொல்.எழுத்து.ப. எண் 25)***

*என்ற நூற்பா வரி மூலம் அறியலாம். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில்*

அகத்திணைகளில் ஐந்திணைக்குரிய கருப்பொருட்களில் இரு வகைகளில் இசைக்கருவிகளைக் குறிப்பிட்டுள்ளார். இசையைத் தொழிலாகக் கொண்ட மக்கள் உபயோகப்படுத்தும் இசைக் கருவிக்கு பறையென்றும், இன்பமாக பொழுது போக்கும் மக்கள் பயன்படுத்தும் இசைக் கருவிக்கு யாழ் என்றும் பிரித்துக் கூறுகின்றார். இதனை,

"தெய்வம் உணவே மாமரம்புள் பறை
செய்தி யாழின் பகுதியொடு
தொகைஇ.." (தொல்.பொ: ப. எண்17)

என்ற இந்நூற்பாவில் தெய்வம், உணவு, மரம், பறவை, பறை, யாழ் ஆகிய கருப் பொருளானது சொல்லப்படுகிறது. நிலத்தை ஐந்தாக வகுத்துக் கொண்ட தமிழர் அதற்குரிய இசையையும் உருவாக்கினர் தொல்காப்பியர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களுக்கும் உரிய தொழில் இசையான பறையினைப் பற்றியும், இன்ப இசையான யாழினைப் பற்றியும் கூறியுள்ளார்.

| வ.எண் | நிலம் | யாழ் | முழங்கிய பறை |
|---|---|---|---|
| 1. | குறிஞ்சி | குறிஞ்சியாழ் | குறிஞ்சிப்பண் |
| 2. | முல்லை | முல்லையாழ் | ஏறுகோட்பறை |
| 3. | மருதம் | மருதயாழ் | மணமுழவு |
| 4. | நெய்தல் | நெய்தல்யாழ் | மீன்கோட்பறை |
| 5. | பாலை | பாலையாழ் | துடி |

## முடிவுரை

இயல் இசை நாடகம் என்ற முத்தமிழில் அனைவரையும் கவரக் கூடியது இசையே ஆகும் அவற்றில் இசையின் ஆதிக்கம் ஆனது உலகெங்கும் பரவி இருக்கிறது இருப்பினும் இக்கால கட்டத்தில் மட்டுமல்ல சங்க காலத்தில் தோன்றிய மிகவும் பழமையான நூலான தொல்காப்பியத்திலும் இவ்வகை இசையானது இடம் பெற்றுள்ளது அவற்றில் உள்ள யாழின் இசையைப் பற்றியும், பறையின் முழக்க இசையைப் பற்றிய செய்தியினையும் நேர்த்தியாக கூறியுள்ளதை இவ்வாய்வு கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

## துணைநூற்பட்டியல்


1. தொல்காப்பியம் (மூலமும் உரையும்), மாணிக்கவாசகன், உமா பதிப்பகம், முதற்பதிப்பு, 2006.
2. தொல்காப்பியம் (சொல்) மூலமும் உரையும், முனைவர் ச. திருஞான சம்பந்தம், கதிர் பதிப்பகம், முதற்பதிப்பு, 2020.
3. தொல்காப்பியம் (சொல்) மூலமும் உரையும், புலியூர்கேசிகன், பாவை பதிப்பகம், முதற்பதிப்பு, 2016.
4. தொல்காப்பியம் (பொருள்) மூலமும் உரையும், முனைவர் ச.திருஞான சம்பந்தம், கதிர் பதிப்பகம், முதற்பதிப்பு, 2020.
5. தமிழ் இலக்கிய வரலாறு, ச. விமலானந்தம், முல்லை நிலையம், முதற் பதிப்பு, 2012.
6. தமிழ் இலக்கிய வரலாறு (திருத்திய பதிப்பு), முனைவர்அ. ஜெயம், ஜனகா பதிப்பகம், முதற்பதிப்பு, 1994.

# நாட்டுப்புற சிறுவர் விளையாட்டில் புழங்கு பொருள் பண்பாடு

**முனைவர் கா.காந்தி,**
துறைத்தலைவர்,
தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும்
அறிவியல் கல்லூரி (மகளிர்),
மல்லுப்பட்டி, பாலக்கோடு - 636805.

**மா.உமா மகேஸ்வரி,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும்
அறிவியல் கல்லூரி (மகளிர்),
மல்லுப்பட்டி, பாலக்கோடு - 636805.

## முன்னுரை

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து இருப்பது விளையாட்டாகும். சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரின் மகிழ்ச்சிக்கும் வித்தாக அமைவதே விளையாட்டு என்று கூறினால் மிகையாகாது.

அப்படிப்பட்ட விளையாட்டினை விரும்பாதவர் எவரும் உண்டோ என்பதற்கிணங்க மகிழ்ச்சி, மனத்தின் உறுதி, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, சுறுசுறுப்பு, நினைவாற்றல், உடல் வளர்ச்சி, மன அமைதி, போட்டித் தன்மை, சிந்தனைத்திறன் மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கும் மனம் தெளிவு பெறவும் விளையாட்டை முக்கியமாகக் கருதமுடிகிறது.

விளையாட்டு என்பது மனிதர் களின் பண்பாட்டு செயல்பாடுகளில் ஒன்றாகும். இது மனிதர்களின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கும் பயன்படுகிறது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை மூலம் எடுத்தரைக்க முடிகிறது.

## புழங்கு பொருள்

புழங்குதல் என்பதற்குக் கழகத் தமிழ் அகராதி கையாளுதல், வழங்குதல் என்றும், மெய்யப்பன் தமிழகராதி புழங்குதல் என்றும், நர்மதாவின் தமிழகராதி உபயோகித்தில் இருத்தல், பயன்கருதி கையாளப்படுதல் என்றும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகராதி (தா.சு.சொல் முதலியன) வழக்கில் இருக்கும் நிலை என்றும், தமிழ் லெக்ஸிகன் கையாளுதல் என்றும், க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (நாணயம், சொல் முதலியன) உபயோகத்தில் அல்லது வழக்கில் இருக்கும் நிலை பயன்பாடு என்றும் புழங்குதல் என்ற சொல்லுக்குப் பல்வேறு விளக்கங்களைத் தெளிவுப்படுத்துகின்றன.

பழங்காலம் முதலே மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை அவர்களே உருவாக்கி கொண்டனர். அந்தப் பொருட்களைத் தான் புழங்கு பொருள் என்கிறோம். மனிதர்கள் பயன்படுத்தும் அனைத்து வகைப்பொருட்களும் புழங்கு பொருள் ஆகும். அந்த வகையில் சிறுவர்கள் விளையாடும் பொருட்களைப் பற்றி இங்கு தெளிவுப்படுத்தப்படுகின்றன.

## பண்பாடு

பண்பாடு என்பது ஒரு நாட்டின் கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், மரபுகள், நம்பிக்கைகள், அறிவு, கலை மற்றும் தொழிற்நுட்பம் ஆகியவற்றைக் குறிக்கும். பண்பாடு என்பதற்கு ஒரு பாரம்பரியம் அல்லது சமூகத்தின் கலாச்சாரம் என்றும் பொருள் கொள்ளலாம்.

பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்றெல்லாம் குறிப்பிடலாம். திருந்திய வாழ்க்கை முறையே பண்பாடு ஆகும். பண்பாடு என்பது பண்படுத்துதல் என்ற சொல்லிலிருந்து வந்ததாகக் காணமுடிகிறது. பண்பாடு என்ற சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இது பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது.

பண்பாடு என்ற கருத்தாக்கம் மக்களின் அறிவு சார்ந்த நிலையில் ஏற்படும் எண்ணற்ற கருத்து வடிவங்களின் முழுமை (1980, 160) என்று பக்தவத்சல பாரதி குறிப்பிடுகிறார். டெய்லர் என்பர், பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும் (1958, 85) என்கிறார். பண்பாடென்பது ஒரு தலைமுறையினர் மற்றொரு தலைமுறையினருக்கு விட்டுச் சென்ற வாழ்க்கைமுறை அல்லது ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள் வாழ்க்கை நடத்தும் முறையே என்று உணரமுடிகிறது.

பண்பாடு இலக்கியங்கள் வாயிலாக எக்காலத்திற்கும் பயன் தரும். அப்படிப்பட்ட நமது நாட்டுப் புற மக்களின் பண்பாடு கலந்த விளை யாட்டைச் சமுதாய வாழ்க்கையில் காணமுடிகிறது.

## விளையாட்டு

விளையாட்டு என்ற சொல்லுக்குப் பல்வேறு அறிஞர்கள் பல கருத்துக்களைத் தந்துள்ளனர். 'விளையாட்டு' என்னும் சொல் இரண்டு சொற்களால் ஆன தொகைச் சொல்லை 'விளை' என்றும், 'ஆட்டு' என்றும் இரண்டாகப் பிரித்து விளக்கியிருக்கின்றார்கள்.

'விளை' என்றால் விருப்பம் எனப் பொருள் கொண்டு விரும்பியாடும் ஆட்டு விளையாட்டு என்று தேவநேயப் பாவாணர் விளக்குகின்றார். ஆனால், மு.வை. அரவிந்தன் 'விளை' என்னும் சொல் 'விழை' என்று கூறி 'விழையாட்டு' என்பதே ஒலி மாற்றம் அடைந்த பின்னர் 'விளையாட்டு' என மாறியிருக்கலாம் என விளக்குகிறார்.

மனிதனில் அன்றாட வாழ்வில் சிறுபிள்ளைகள் செய்யும் ஒவ்வொரு அசைவினைக் கூட விளையாட்டு என்கின்றனர். விளையாட்டு என்பது ஒரு சிறந்த பொழுதுபோக்கு முறை ஆகும். விளையாட்டுகள் உடல் மற்றும் மன வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. விளையாடுவதால் உடல் ஆரோக்கியம் மன அமைதி, செயல்திறன், குழுப்பணி, போட்டித்தன்மை, வெற்றிக்கான உணர்வு, சமூக பந்தங்கள், கலை ஆகியன ஏற்படுகின்றன.

## சிறுவர் விளையாட்டுகள்

எட்டு முதல் பதினெட்டு வயதிற்குட்பட்ட சிறுவர்கள் விளையாடும் விளையாட்டை குறிப்பிடலாம். சிறுவர் விளையாட்டு என்பது குழந்தைகள் மனமறியவும், உடலுறுப்புகளின் வளர்ச்சிக்கும், உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும், மன அமைதியையும் மகிழ்ச்சியையும் தருவதற்கும் உதவும் ஒரு செயல்பாடு ஆகும். விளையாடும்போது சிறுவர்கள் எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சியின் உச்சத்தில் இருப்பார்கள். கிராமங்களில் சிறுவர்கள் காலை முதல் மாலை வரை உணவு கூட உண்ணாமல் விளையாடிக் கொண்டே இருப்பார்கள் என்பதை அறியமுடிகிறது.

## சிறுவர் விளையாட்டுகள்

பம்பர விளையாட்டு, பட்டம்

விடுதல், கிட்டிப்புள், ஒத்தையா? இரட்டையா?, கோலி, நுங்கு, வண்டி, சைக்கிள் விளையாட்டு, கிளித்தட்டு, கள்ளன் கோலிஸ், கால் தாண்டி..

## பட்டம் விடுதல்

பெரும்பாலும் ஏப்ரல், மே மாதங்களில் காற்று அதிகமாக வீசு வதாலும், சிறுவர்களுக்கும் பள்ளி விடுமுறை நாட்கள் என்பதாலும் அப்போது பட்டங்களுக்கு நீளமாக வால் வைத்துப் பறக்க விடுவார்கள். கையில் இருக்கும் நூலின் அளவின் அடிப்படையில்தான் பட்டம் வானில் உயரே பறக்கும். பட்டத்தை ஒரு தாள் எடுத்துக்கொண்டு அதன் பின் நான்கு குச்சி வைத்து ஒட்டி, அதன் கீழ் நூல் கட்டிப் பறக்க விடுவர். பட்டம் விடுவதால் உடல் உறுதி அதிகரிக்கும். விரைவாகச் சிந்திக்கும் திறன் மற்றும் கவனச்சக்தி அதிகரிக்கும் என்பதை உணர முடிகிறது. இவ்வாறு பட்டத்தைப் பறக்க விடும்போது

'பட்டம் அதோ பறக்குதே, பாம்பு போல பாயுதே
வட்டவானை நோக்குதே, வானில் நீந்திச் செல்லுதே
நூலில் கட்டி இருக்குதே, வளைந்துக் காற்றில் ஏறுதே
பறந்து பறந்து உயருதே, பந்து நூலைத் தீர்க்குதே
சிறுதாய் கண்ணில் காணுதே, சிந்தை எல்லாம் ஈர்க்குமே!

என்று பட்டத்தைப் பற்றிப் பாடிக் கொண்டே பறக்க விடுகின்றனர்.

## பம்பரம்

பம்பர விளையாட்டு என்பது தமிழகத்தில் பழமையான நாட்டுப்புற விளையாட்டுகளில் ஒன்றாகும். இது சிறுவர்களின் வலிமையையும் வீரத்தையும் வெளிப்படுத்தும் விளையாட்டாகும். பம்பரம் என்பது ஒரு விளையாட்டுக் கருவி. இது மரத்தால் செய்யப்பட்டது. சாட்டை எனப்படும் கயிற்றால் ஆடுவது. அந்த கயிற்றுப் பெயரே பம்பரக் கயிறு என ஆயிற்று.

ஒரு வட்டம் போட்டு அந்த வட்டத்திற்குள்ளே ஒருவனது பம்பரம் இருக்க வேண்டும். மற்றவர்கள் அந்த பம்பரத்தைக் குத்தி வெளியே தள்ளுவார்கள். உடனே குத்தப் பட்டவனையும் சேர்த்து அனைவரும் பம்பரத்தைத் தரையில் விட்டு கயிற்றால் கையில் எடுக்க வேண்டும். கடைசியில் எடுப்பவர் வட்டத்திற்குள் பம்பரத்தை வைக்க வேண்டும்.

பம்பரத்தை உள்ளங்கையில், உச்சந்தலையில் விடுவர். தரையில் படாமல் கையில் கூட எடுப்பார்கள். இது அவரவரின் திறமையைப் பொறுத்து அமையும். இந்தப் பம்பரத்தை விளையாடுவதால் கூர்ந்து கவனிக்கும் திறன் உடையவர்களாக இருப்பதை உணரமுடிகிறது.

## கிட்டிப்புள்

ஒரு நீளமான குச்சியை எடுத்துக் கொண்டு இருமுனையையும் கூர்மையாக்கப்பட்ட சிறிய குச்சி (கிட்டி) என இரண்டு குச்சிகள் வைத்திருப் பார்கள், அதன் மீது கிட்டியை வைத்து நீளக் குச்சியினால் தாக்கியடிப்பர், எதிரே உள்ளவன் அதனைப் பிடித்துவிட்டால் அடித்தவன் காயாகி (தோற்று) விடுவான்.

வட்டமான கோடு வரைந்து விளை யாடினால் அது கோட்டுக்கிட்டி ஆகும். அந்த குச்சியினை கொண்டு அடித்தவன் எவ்வளவு தூரம் அடித்துள்ளான் என்பதைக் குச்சிக்கொண்டு அளந்து வருவர். அதிகமான தூரம் யார் அடிக்கிறார்களோ அவர்கள் பழம் (வெற்றி) ஆகிவிடுவர். அதே மாதிரி

இறுதிவரை ஆடுவர். இறுதியில் ஒருவர் காயாகி (தோற்று) விடுவர்.

கிட்டி விளையாடுவதால் குழு வேலை செய்யும் திறன் வளர்கிறது. நட்புறவு வளர்கிறது மற்றும் மன அழுத்தம் குறைகிறது இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்..

## ஒத்தையா? இரட்டையா?

கிராமங்களில் சிறுவர்கள் பள்ளி முடிந்து வந்தவுடன் கைகளில் புளியங்கொட்டை அல்லது முத்துக்கொட்டை எடுத்துக் கொள்வர். கையில் அதனை மறைத்து வைத்துக் கொண்டு எதிரே இருப்பவரிடம் ஒத்தையா? இரட்டையா? என்று கேட்பார்கள். சரியாகக் கூறிவிட்டால், கொட்டை வைத்திருப்பவர் கையில் எத்தனை கொட்டை உள்ளதோ அத்தனை கொட்டை தரவேண்டும். தவறாக இருந்தால் கூறியவர்கள் அத்தனைக் கொட்டை தரவேண்டும். இந்த மாதிரி விளையாட்டிற்காகவே சிறுவர்கள் கொட்டைகளைத் தேடி சேகரித்து வைத்துக்கொள்வர். இந்த விளையாட்டின் மூலம் சிறுவர்களுக்கு சேமிக்கும் ஆர்வம் உண்டாகுவதை அறிய முடிகிறது.

## கோலி

கோலி என்பது அளவில் சிறியதாக இருக்கும். சிறுவர்கள் இந்த கோலி விளையாட்டை மிகவும் விரும்பி விளையாடுவர். இதனைக் குண்டு விளையாட்டு என்றும் கூறுவர். இதனை வட்டாடுதல், உருண்டை உருட்டுதல் என்றும் அழைக்கின்றனர்.

குழிக்குண்டு, உருட்டுக் குண்டு, பேந்தா, ஜெய் குண்டு என நான்காக வகைப்படுத்துவர். சிறுகுழித் தோண்டி, குழியில் கோலியை உருட்டி விளை யாடுவது உருட்டு குண்டு ஆகும். பேந்தா எனப்படும் செவ்வக கட்டத்தில் ஆடுவது பேந்தா குண்டு ஆகும். அரங்கிலுள்ள குண்டுகளை உருட்டி வெளியேற்றினால் தனதாக்கிக் கொள்வது, ஜெய்குண்டு என்பர். இந்த கோலி விளையாடுவதால் நன்கு குறி பார்க்கும் திறன், விரைவாக ஓடும் திறன் வளருவதைக் காணமுடிகிறது.

## நுங்கு வண்டி

சாப்பிட்ட நுங்குத் தொட்டிகளைக் கொண்டு வண்டி செய்யப்படுகிறது. இதனை சிறுவர்கள் தெருக்களில் ஓட்டி மகிழ்ச்சியடைவர். இதில், உன்னுடையது வேகமாக ஓடுகிறதா? அல்லது என்னுடைய வேகமாக ஓடுகிறதா? என்று போட்டிகளில் ஓட்டி மகிழ்வர். வெட்டிய நுங்கில் மூன்று கண்களுடைய நுங்கை எடுத்துக்கொண்டு, அதில் புளியமர, வேப்பமர, புங்க மரக் குச்சிகளைச் சிறியதாக வெட்டிக்கொண்டு, நுங்கின் நடுபகுதியில் இணைக்க வேண்டும். பின்னர் இந்த வண்டியை ஓட்ட, காய்ந்த ஆமணக்கு தட்டியைக் கொம்புகள் உள்ளவாறு வெட்டிக்கொண்டு, அதனால் நுங்கு வண்டியை ஓட்டுவர். இதனை, கவக் குச்சி, துளையிட்டக் குச்சி என்றும் கூறுவர். இந்த விளையாட்டில் சிறுவர்களுக்கிடையே போட்டி உணர்வு, சீரான நடவடிக்கை, சமூகத்தில் மற்றவர் களுடன் பழகுவதற்கும் உதவுவதைக் காணமுடிகிறது.

## காத்தாடி

கிராமங்களில் சிறுவர்கள் மாலை நேரங்களில் பனை ஓலையால் செய்யப்பட்ட காத்தாடியைப் பிடித்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடிக் கொண்டு இருப்பதை காணலாம்.

காத்தாடியைக் காய்ந்த பனை ஓலையைச் சிறியதாக எடுத்துக்கொண்டு, அதை இரண்டாகக் கிழித்து, இரண் டையும் இடைப்பட்ட பகுதியில் பிணைப்பர். பிணைந்த மையத்தில்

கூர்மையாக முள்ளை குத்தி, முள்ளின் மற்றொரு பகுதியில் காய்ந்த சோளத் தட்டையை இணைத்துக் கொள்வர். பின், சோளத்தட்டையைப் பிடித்துக்கொண்டு, வேகமாக ஓடுவர். ஓடும்போது அந்தக் காத்தாடி வேகமாக சுற்றும். சிறுவர்கள் காத்தாடியை கொண்டு விளையாடுவதால் அவர்களுக்கு கண் பார்வை வலுப்பெறும், மனத்திற்கு அமைதிக் கிடைக்கும், குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு உதவும் என்பதை இதன் மூலம் உணரலாம்.

## முடிவுரை

நமது சமூகத்தின் நாகரிகத்தையும், பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் வளர்க்க வல்லன நாட்டுப்புற விளை யாட்டுகள் ஆகும். உளவியல் ரீதியாக நோக்கும்போது, மனத்தைப் பாதுகாக்கும் ஒரு வடிகாலாக இருக்கின்றன. எந்த ஒன்றும் தோன்றும் நிலையில் இருத்தல் இயலாது என்பது விதி. நாட்டுப்புற விளையாட்டுக்களும் அதற்கு விதி விலக்கல்ல. அதே போல விளையாட்டுக்கள் பருவத்திற்கு ஏற்ப மாறிக்கொண்டே இருக்கிறது. இங்கு சிறுவர் விளையாட்டுக்களான கிட்டிப்புள், பட்டம் விடுதல் போன்ற விளையாட்டுகளைப் பற்றியும், விளை யாட்டு நமக்கும், நம் மனம், உடலிற்கு எவ்வாறு பாதுகாப்பு அளிக்கிறது என்பது பற்றியும், நாட்டுப்புற விளை யாட்டில் பண்பாடு எவ்வாறு கலந்துள்ளது என்பதையும் இந்த ஆய்வுக் கட்டுரையின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

## சான்றாதாரங்கள்


1. த.ரெஜித்குமார், புழங்கு பொருள் பண்பாடு
2. இரா.பத்மா, தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பண் பாட்டு முறைகள்
3. செ.இளையராஜா, நாட்டுப்புற விளையாட்டுகள் (காவ்யா பதிப்பகம்)
4. த.ரெஜித்குமார், நாட்டுப்புற இயல்,
5. பேரா.சு.சண்முக சுந்தரம், நாட்டுப் புறவியல் (காவ்யா பதிப்பகம்)

# சங்க அகஇலக்கியப் பண்பாட்டில் 'தோழி' பாத்திரப்படைப்பு

**முனைவர் சா.கணேசன்**
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

## ஆய்வுச் சுருக்கம் (Abstract)

*தோழியார்?, களவிற்குச் சிறந்தாள் தோழி, தோழி – சொல் விளக்கம், தோழி–பண்பு விளக்கப்பாத்திரம், சங்க இலக்கியத்தில் தோழி தலைவியின் அடிமையா?,தோழிபாப்திரப்படைப்பின் – முக்கியத்துவம் இக்கட்டுரையின் ஆய்வுப் பொருள்களாகும்.*

## தோழி யார்?

*"தோழிதானே செவிலியது மகளே" (தொல்.பொருள்.களவு.நூற். 33)* என்பது தொல்காப்பியம் களவியல் நூற்பா தரும் குறிப்பாகும். இதனைத்தவிர தோழியின் பிறப்பு, திருமணம், வாழ்க்கை ஆகியன குறித்த எந்தச் செய்தியையும் அறிய முடியவில்லை. சங்க அகப்பாடல்களில் தலைவன் – தலைவி களவுக் காதலை கற்பு வாழ்க்கைக்கு மாற்றும் இணைப்புப் பாலமாகச் சங்க அகப்பாடல்களில் செயல்படுகின்றாள். 'அகவாழ்க்கை' என்னும் காதல் மரபில் தோழி தலைவியின் காதல் வெற்றிக்காகவே செயல்படுகின்றாள். தலைவியின் விளையாட்டுப் பருவத்திலிருந்து தலைவி மகப்பேறடைந்த நிலையில் செவிலியாக முழுமை வளர்ச்சி பெறும் வரையில் தோழி தன் தலைவிக்காகவே வாழ்கின்றாள். செவிலியின் மகள் தோழி என்பதால் அவளுக்கும் திருமண வாழ்க்கை உண்டென உய்த்தறியலாம். ஆயினும் சங்க அகப்பாடல்களில் தோழியின் கணவன், குடும்பவாழ்க்கை பற்றிய குறிப்புக்கள் இல்லை.

## களவிற்குச் சிறந்தாள் தோழி

புலவர் குழந்தை, *"வினைவலர், அடியோர் என்ற ஏவலர்கள் புறத்துறையில் குறிப்பிடப்படுகின்றனர் தோழியர், ஆயத்தார் என்பவர்கள் தலைவிக்குத் துணையாக இருக்கின்றனர். தோழியரே பின்னால் செவிலியர் என்ற நிலையை அடைகின்றனர். தோழி என்றது காதல் தோழியை, தலைவியின் தோழியர் பலருள்ளும் களவிற்குச் சிறந்தாளாகையால் தானே பிரித்தார்" (தொல்காப்பியம் பொருளதிகாரம் குழந்தையுரை, ப.57)* எனத் தோழி பாத்திரப்படைப்பை விளக்கியுள்ளார். இளம்பூரணர் உரையும் இவரது கருத்தை ஏற்கின்றது *(தொல். பொருள், இளம் (உரை.ஆ) நூற்பா.42)* ஒன்றியத் தோழி *(மேலது, நூற்பா.39,40)*, ஒருமைக்கேண்மையின் உருகுறை தெளிந்தோள் *(மேலது, நூற்பா.111 இன் நச்சி உரை)* என்னும் தோழிக்கு வரும் அடைமொழிகள் தோழிக்கும் தலைவிக்கும் உள்ள அன்புறவு நிலைகளைப் புலப்படுத்துகின்றன. அக நானூற்றுப் பாடலொன்று தோழியை *"நன்னர் மாக்கள்" (அகம். 197:3)* எனக் குறிப்பிடுகின்றது.

தோழியர் பலர் இருந்ததை அகநானூற்றுப் பாடல்களும் கலித்

தொகைப் பாடல்களும் கூறுகின்றன. அவர்களுள் தலைவியின் உயிர்த்தோழியே தோழி ஆவாள். விளிநிலையிலும் அவள் தோழி என்று அண்மைச் சுட்டாகவே கூறப்படுகின்றாள். சிலப்பதிகாரத்தில் மட்டுமே தோழி, தோழீ, தோழிமீர் எனச் சேய்மைச் சுட்டாக விளிக்கப்படுகின்றாள். **(ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உரை.ஆ), சிலப்பதிகாரம் மூலமும் உரையும், கழக வெளியீடு, (1956) 29:10:34, 17: பாட்டு எண். 3,6,9)** தலைவியின் விளையாட்டுப் பருவத்தில் அகப்பாடல்களில் ஆயத்தார் குறிக்கப்படுகின்றனர். ஓரை என்னும் விளையாட்டும் பந்தும் விளையாடும் இப்பெண்கள் கூட்டமாகத் தலைவியுடன் நெடுஞ்சுனைகளில் நீராடுகின்றனர். இவர்கள் தலைவியின் உடல்நலனைப் பாதுகாப்பதோடு தலைவியைப் பிரியாமல் உடன் உறைகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் 'ஆயச் செவிலியர்' என்பவர் கூறப்பெற்றுள்ளனர் (சிலம்பு. 27:111) 'ஆயம்' என்பதற்கு அடியார்க்கு நல்லார் 'முதுபெண்டிர்' என விளக்கம் தந்துள்ளார் (சிலம்பு. 29:3) செவிலியர் நிலையில் சிலம்பில் காவற்பெண்டிரும் கூறப்பெற்றுள்ளனர்.

## 'தோழி' சொல்விளக்கம்

சங்க அகப்பாடல்களில் தலைவி என்ற பாத்திரத்துடன் சிறப்புப் பெற்றிருந்த 'தோழி' என்ற பாத்திரத்தைச் சுட்ட தோழி, இருளை, பாங்கி, சிலதி, துணைவி, இலங்கி, சேடி, சகி, என்னும் பெயர்கள் தோழி என்னும் பொருளில் பயின்று வந்துள்ளன. தோழி தலைவியைத் 'தோழி' என அழைப்பதுபோலவே, தோழி தலைவியை 'இருளை என அழைப்பதும் சங்க மரபாகும் **(நற். 64:9, குறுந்.251:4, ஐங்.467:2, அகம். 8:5)** நன்னூல் உரையாசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் இருளை என்பது சீதநாட்டுச்சொல் **(சிவஞான சுவாமிகள், நன்னூல் விருத்தியுரை, பாரி நிலையம், (1971), ப. 348)** எனக் கூறியுள்ளார்.

'பாங்கு' என்னும் சொல்லிற்கு உரிமை, பக்கம், இணக்கம், முறைமை என்னும் பொருள்கள் உள்ளன. தலைவியோடு ஒன்றிவாழும் உரிமை பெற்றவள், தலைவியின் பக்கத் திலேயே இருப்பவள், தலைவியின் கருத்துக்களுக்கு இணங்கி இருப்பவள், தலைவியைப் பேணும் முறைமை பெற்றவளாகிய தோழி இவ்வகையில் பாங்கி என்றழைக்கப்படுகின்றாள். நம்பியகப்பொருள், மாறன் அகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகிய பிற்கால இலக்கண நூல்களில் 'பாங்கி' என்னும் சொல்லாட்சி காணப்படுகின்றன.

'பாங்கு' என்னும் சொல்லிற்கு நன்மை, நல்லொழுக்கம் என்னும் பொருள்கள் உள்ளதால், அத்தகைய நல்லொழுக்கம் கொண்ட 'பாங்கி' தோழி ஆவாள் **(ஞா.தேவநேயன், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் (1964), ப. 75).** இதனால் தான் தோழி பாங்கு எனப்பட்டாள் என்பார் ஈ.கோ. பாஸ்கரதாஸ் **(அகப்பாடல்களில் தோழி, கோவை (1979), ப.1).**

கலித்தொகைப் பாடல்களில் 'தொழீஇஇ' (கலி.103) என அளபெடுத்து வருகின்றன. தொழூது நிற்றலை உடையவள் தோழி ஆவாள். தலைவியைச் சுற்றியுள்ள தொழுதியாகிய ஆயக் கூட்டத்தில் முதல்வியாக இருப்பவளே தோழி ஆவாள். தொழில் செய்வோர் தொழுவர் என அழைக்கப்படுவதைப் போல, தொழிலைக் செய்வோருள் முதன்மையானவள் தோழி ஆவாள். தோள் போன்றவள் தோழி எனவும் கொள்ளலாம்.

பிற்காலத்தில் தலைவியுடன் உரிமைச் சமவாழ்வு பெற்றிருந்த தோழி தன் நிலையிலிருந்து தாழ்ந்துவிட்டாள்.

அருமை நண்பராக இருந்த அவள் வேலைக்காரியாக இறக்கப்பட்டாள். நச்சினார்க்கினியர் 'சிலதர்' என்னும் கொல்லிற்குத் தொழில் செய்வோர் எனப் பொருள் தந்துள்ளார். இச்சொல்லின் திரியாகிய 'சிலதி' குற்றேவலுக்கு உரியவள் என்னும் பொருள் உடையது. ***(சுன்னாகம் ஆ. குமாரசாமிப்புலவர், பதப்பொருள் விளக்கம், சூடாமணி நிகண்டு, ப.53)*** என்பர். 'இணங்கி' என்னும் சொல் சங்க அகப்பாடல்களில் பயின்று வரவில்லை. பிங்கல நிகண்டில் மட்டுமே ***(பிங்கல நிகண்டு, ப.120)*** காணப்படுகின்றது. தலைவியின் செயல் களுக்கும் கருத்துக்களுக்கும் இணங்கி நடந்தமையால் தோழி இணங்கி எனப்பட்டாள்.

தோழிக்கு இணங்கி, துணைவி என்னும் ஒரு பொருட் பன்மொழி பிங்கல நிகண்டில் ***(பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு, ப.120)*** கூறப்பெற்றுள்ளன. இக்காலத்துக் கணவன் –மனைவி உறவுபோல, அது தலைவி–தோழி உறவுகளை விளக்குவதாக உள்ளது. தோழிக்கு சகி, சேடி என்னும் பெயர்கள் வடமொழித் தாக்கத்தால் வந்த பெயர்களாகும். 'சசி'கூட நிற்பவள். 'சேடி' – அனுப்பப்படுபவள். பிங்கல நிகண்டிலும் நம்பியகப் பொருளிலும் இச்சொற்கள் பயின்று வந்துள்ளன ***(நம்பியகப்பொருள், நூற்.9). 'பாலும் கசந்ததடி சகியே' (பாரதியார் கவிதைகள், வானவில் பிரசுரம் (1977), ப.338)*** எனப் பாரதியாரும் பாடியுள்ளார்.

சங்க அகப்பாடல்களில் தோழியின் அறிவாற்றலும் செயல்திறனுமே சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளன. அவளது தோற்ற வருணனைகள் இல்லை. தலைவனும், தலைவியும் தோழியை ஆயிழை, ஆயிழையால், சேயிழை, வயங்கிழை, புனையிழை, புனையிழாய், விளங்கிழாய், ஒளியிழாய், சுடரிழாய், சுடர்த்தொடீ என அணிகலன்கள் அணிந்த சங்கத்தோடு காணப்படுகின்றாள்.

## தோழி – பண்பு விளக்கப் பாத்திரம்

தலைவன் – தலைவியை இணைத்து வைக்கும் பாலமாக விளங்கும் தோழி, தலைவன்–தலைவியின் பண்புகளை விளக்கிக்கூறும் பாத்திரமாவாள். தலைவனின் பண்பு, அழகு, தோற்றம், செயல், வீரம், தலைவியிடம் அவன் கொண்டுள்ள மாறா அன்பு ஆகிய வற்றைத் தலைவியிடம் விளக்கமாக எடுத்துக் கூறுகின்றாள். தலைவியின் இயற்கை நலன், பண்பு, பிரிவுத்துயர் ஆகியவற்றைத் தலைவனுக்கு உணர்த்துகின்றாள். இவ்வாறு தோழி தலைவன் – தலைவியர் கூடுதலுக்கு உதவுகின்றாள். தலைவனை தலைவியை வரைந்து கொள்க என அறிவுறுத்துகின்றாள். வரைவு மலிதல், செல வழங்குவித்தல், ஆற்றுவித்தல், உடன்போக்கு, தலைவனுக்கு வாயில் நேர்தல், வாயில் மறுத்தல் ஆகிய துறைகளில் தோழியின் அறிவுத்திறன் சார்ந்த செயல்பாடு தோழியின் பண்பு விளக்கச் செயல்களுக்குச் சான்று களாகும். தலைவியின் கற்புடைமை தலைவனைச் சார்ந்தது இருப்பதையும், விருந்தோம்பல் பண்பாடு தலைவன்– தலைவி இருவரையும் சார்ந்திருப்பதையும் தோழி விளக்கிக் கூறுகின்றாள்.

தலைவன் பிரிவிலும், தலைவன் தலைவியை மணந்துகொள்ளாமல் காலம் நீட்டிப்பதிலும் தலைவிக்கு ஏற்படும் துன்ப உணர்வுகளை அனைவரும் அறியச் செய்பவளும் தோழியே. தோழி தலைவனுக்கு வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் ஆகிய துறைகளில் தலைவனின் பரத்தமையொழுக்கம் வன்மையாகவும் மென்மையாகவும் கடியப்படுவதோடு, தலைவியின் துன்பத்திற்கும் குடும்ப அமைப்புச் சிதறலுக்கும் காரணமான

பரத்தமை நீங்கவும் தோழி வழிகாட்டு கின்றார்.

## சங்க இலக்கியத் தோழி, தலைவியின் அடிமையா?

தொல்காப்பியர் காலத் தமிழ்ச் சமூகத்தில் தலைமக்கள், வினைவலர், அடிமைகள் ஆகிய சமுதாயப்பிரிவினர் இருந்துள்ளனர். இதனை

**"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்**
**கடிவரை இல்புற மென்மனார் புலவர்"**
(தொல்.பொருள்.அகத்.நூற்பா.23)

என்னும் நூற்பாவினால் அறியலாம். இந்நிலை சிலப்பதிகார காலத்திலும் தொடர்ந்துள்ளது. (சிலம்பு.16:84–85). உரிமையற்றுத் தாழ்ந்த நிலையிலிருந்து அடியோர் புலவரால் பாடப்பெறும் சிறப்பற்றவர் ஆவர். 'வினைவலர்' என்போர் குற்றேவல் செய்வோர் ஆவர். இவர்களுக்கு அன்பினை ஐந்திணை வாழ்க்கை உரியதாகப் பாடப் படவில்லை.

தலைவன் – தலைவியர் களவு – கற்பு வாழ்க்கையைப் பாடிய புலவர்கள் தோழியின் மணவாழ்க்கையைப் பாடாததால் அவள் அடிமைப் பெண்ணோ என்ற ஐயம் ஏற்படுதல் இயல்பே. இதனைத் தவிர்க்க சரளா – ராசகோபாலனின் பின்வரும் விளக்கம் துணை செய்கின்றது.

"அகப்பொருட் புலவர்கள் தலைவியின் வாழ்வைப் பற்றிப் பாடியது போலத் தோழியின் களவையும் கற்பையும் உடனமைத்துப் பாடியிருந்தால் அது ஒரு நாடகமேடையில் ஒரே சமயத்தில் இரு நாடகங்களை நடத்துவது போன்றதாக அமையும். அவளைப் பற்றி விரித்துரைக்கப்புகின் அது அளவிறந்து செல்லும். அன்றியும், மற்றது விரித்தல் என்ற குற்றத்தின்பாற்படும். புலவரின் நோக்கம் தலைவியின் வாழ்முறையை விளக்குவதேயன்றித் – தோழியின் வாழ்வை விளக்குவதன்று. எனவே பாவலர்கள் தலைவி ஒருத்தியின் மன்றலை மட்டும் பாடினர். அதைச் செம்மைப்படுத்தும் துணை உறுப்பாகத் தோழி பாத்திரத்தை அமைத்தனர். பிறமொழி இலக்கியக் கண்ணோட்டத்தில் தோழியை அடிமைப் பெண்ணாகப் பார்ப்பது மரபு வழு" **(சரளா ராசகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, ஒளிப்பதிப்பகம், சென்னை, 1986, ப.18.)**

தோழி அனைத்து நிலைகளிலும் தலைவிக்கு இணையானவள், அவள் – தலைவியைவிட அறிவு, ஆற்றல் மற்றும் செயல்பாட்டுச் சிறப்புக்களைக் கொண்டவள். அவளைத்தொல்காப்பியர் "தாங்கருஞ்சிறப்பின் தோழி" (இளம் (உரை.ஆ). தொல்.பொருள். நூற்.112:46) எனக் குறித்துள்ளார். தலைவன் பெரும்பாலும் தோழியிடமே உரையாடி அவள் உதவியைக் கேட்கின்றான். தலைவனின் பாங்கனை விடத் தோழி உயர்ந்தவள். தலைவியின் ஒப்புதல் பெற்றே நொதுமலர் வரைவில் (வேற்றுவரைவு) தோழி அறத்தோடு நிற்கின்றாள். தலைவியின் வாழ்க்கைச் சிக்கல் என்பதால் தலைவியைக் கலந்து ஆலோசிக்கும் தோழி பிறர் பழிப்புக்கு இடம் தறாமல் அறத்தோடு நிற்கின்றாள். அகப்பொருள் இலக்கண, இலக்கிய வாழ்க்கையில் இது தவிர்க்க இயலாத உலகியல் கடமை ஆகின்றது.

தலைவியுடன் தன்னையும் உளப்படுத்தி 'எம்' என உரிமையுடன் உரையாடும் தோழியின் பேச்சைத் தொல்காப்பியர் "புரைதீர் கிளவி" (இளம் (உரை.ஆ., தொல்.பொருள்நூற்.105: 11–12) எனப் பெருமைப்பட உயர்த்திக் கூறியுள்ளார்.

தோழியானவள் தலைவன் –

தலைவியர் வாழ்க்கையில் உரிமையுடன் எடுத்துக் கொள்ளும் பங்கேற்புக்கள் அவள் அடிமையில்லை என்பதைக் காட்டுகின்றன. தலைவி தோழி ஆகிய இருவருமே சங்க அகப்பாடல்களில் தோழி, அன்னாய், அன்னாப் என ஒருவரையொருவர் விளித்துக் கொள்கின்றனர். அவர்கள் இருவருமே தலைவனை நம்களவு, நம்காதலர், என உளப்பாட்டுத் தன்மைப் பன்மையில் உரையாடிக் கொள்கின்றனர். தலைவனிடம் தோழி தலைவியின் செலய்களைத் தன் செயல்களாகக் கூறுகின்றாள். குறியிடம் கூறுதல், உடன்போக்கு, செலவழுங்குவித்தல், வாயில் மறுத்தல் ஆகிய துறைகளில் தோழி தன் முடிபாகவே செயல் படுகின்றாள்.

தோழி தலைவியிடம் கேட்காமல் தலைவனுக்குக் குறைநேர்கின்றாள். அவள் தலைவியிடம் தலைவனைக் கொடியன், அறவிலாலின், வண்கணாளன் என நேருக்குநேர் பழித்துக் கூறுகின்றாள். தலைவனைத் தோழி மகனல்லை, நாணிலை, கொடியை, மாஅல்மகன், மடவைமன்ற என நேரடியாகவே கடிந்து கூறுகின்றாள். தோழி தலைவனைச் சேட்படுத்தும்போதும் பகல், இரவுக்குறிகளிலும் தான் விரும்பியவாறு அலைக்கழிக்கின்றாள். தலைவன் கூட்டத்தைச் சேர்ந்த பாணன் மற்றும் விறலியைத் தோழி வன்மையாகக் கடிந்து தலைவனுக்கு வாயில் மறுக்கின்றாா்.

இக்காரணங்களால் சங்க இலக்கியத்தோடு அடிமையில்லை என்பது உறுதியாகின்றன.

## 'தோழி' பாத்திரப்படைப்பின் முக்கியத்துவம்

சங்கப் புறப்பாடல்கள் நடந்ததை நடந்தவாறே கூறுவதால் அவை வரலாற்றுக்குப் பெரிதும் பயன் படுகின்றன. அவற்றுள் உலகியல் நிகழ்ச்சிகள் வரலாற்றுப் போக்கில் தொடர்புபடக் கூறப்படுகின்றன. ஆயினும் இருவர் உள்ளம் ஒன்றிய அகவாழ்க்கையின் காதல். நிகழ்வுகளை அவ்வாறு கூற இயலாது. ஆதலால் அக இலக்கியப் பாடல்கள் நாடகப் பாங்கில் படைக்கப்படுகின்றன. 'சுவைபட வரும் அகப்பாடல்களில் உலகியல் வழக்கும் குறிக்கோள் தன்மையும் காணப் படுகின்றன. **(தமிழண்ணல், குறிஞ்சிப்பாட்டு (1961), ப.90).** இதற்குக் காரணம் அகப்பாடல்களின் முதல், கரு, உரிப்பொருள்களாக வரும் அக வாழ்வியல் விளக்கங்கள் ஆகும்.

சங்க அகப்பாடல்கள் பொதுவாகத் தலைவியின் களவு வாழ்க்கையைப் பற்றியன. அதனால்தான் தலைவன்–தலைவியர் பிறப்பு முதலான நிகழ்வுகள் கூறப்படாமல் தலைவியின் காதல் வாழ்க்கை மட்டும் தொடக்கமாக உள்ளன. தலைவியின் காதல் வாழ்க்கைக்குத் தடைகளை விதிக்கும் செவிலி மாறுபட்ட பாத்திரமாக அமைகின்றாள். பகல், இரவுக்குறி இடையீடுகள், தலைவனின் பிரிவு, தாயின் கடிகாவல், நொதுமலர் வரைவு ஆகிய நிகழ்வுகள் திருப்புமுனைகளாக அமைந்து களவு நாடகத்தை விறுவிறுப்பாகவும் சுவைபடவும் நடத்திச் செல்கின்றன. தலைவன்–தலைவி களவுக் காதலுக்காகவே தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் ஆகியோர் புனைவுப் பாத்திரங்களாகப் படைக்கப் பட்டுள்ளனர்.

சங்க அகப்பாடல் புலவர்கள் தலைவியின் காதலை மட்டுமே மையப் பொருளாகக் கொண்டதால் தலைவியின் நற்றாய் (பெற்றவள்) தந்தை, தமர், தமையன், தலைவனின் தாய் தந்தையர் ஆகியோரைப் பற்றிய விளக்கக் குறிப்புக்கள் தேவையில்லையென விடுத்துள்ளனர். தோழியும் செவிலியும்

தலைவன்–தலைவி காதலுக்குத் தடையாகவும் துவீணாயகவும் இருக்கும் குறிப்புக்களே அகப்பாடல்களி; மிகுதி.

அகத்துறை சங்கப்பாடல்கள் ஒற்றைக்காட்சி நாடகமாக (One act play) அல்லது ஒரு கூற்று நாடகமாக (Dramatic monologue) அமைந்துள்ளன. **(ம.ரா.போ.குருசாமி, சங்க கால நாடகம், நாடக இசைவிழா மலர், பம்பாய் தமிழ்ச் சங்கம், 1971, ப.37).** ஆனால் கலித் தொகையின் பல பாடல்கள் ஓரங்க நாடகமாக (One act play) விளங்குகின்றன. முல்லைக்கலியின் ஏறுதழுவுதல் பாடல்கள் நாடகப்பாங்கின **(கி.வா. ஜகந்நாதன், குறிஞ்சித்தேன். 1952), ப.77).**

அகத்துறையில் கற்பனையாகப் படைக்கப்படும் மாந்தர்களின் இயற்பெயர்கள் குறிக்கப்படுபவதில்லை. அகப்பொருள் இலக்கியம் குடும்ப இலக்கியமாகும். சங்க அகப்பாடல்களில் முக்கியப் பாத்திரமாக அமையும் தோழி நாடகப் பாங்கில் நயமாக உரையாடுவதில் வல்லவள், அறிவு சான்ற தோழி கூற்றுப் பாடல்களில் உள்ளுறைகளும் இறைச்சிகளும் இடம் பெறுகின்றன. திருக்கிறளின் காமத்துப் பால், குறன்கள் மட்டுமே கூற்றுமுறையில் அமைந்துள்ளன. தலைவன் சிறைப் புறமாக, தோழி தலைவியிடம் பேசுவது நாடகப் பாங்கானது ஆகும்.

தோழி முக்கியப்பாத்திரமாக வரும் குறிஞ்சிப்பாட்டு ஒரு நாடகமாகும். ஆண்–பெண் மாந்தர்களின் காதல் உணர்வு இயல்பானதே. அக்காதலுக்கும் ‘தோழி’ போன்ற பெண்ணொருத்தி உதவுவது அன்றும் இன்றும் இயல்பே. தங்கப்புலவர்கள் இந்த அடித்தளத்தில் தான் ‘தோழி’ போன்ற கற்பகை மாந்தர்களை நாடகப் பாங்கில் புனைந்துள்ளனர்.

“அன்பின் ஐந்திணை ஒழுகலாற்றில் புலவர் நிலையில் நின்று பேசும் வாயிலார் யாரேனும் உளரோவென்றால் அத்தகைய அறிவு நிரம்பிய வாயில் தோழியே என்று சுருக்கமாகக் கூறி விடலாம்” **(க.வெள்ளைவாரணர், குறிஞ் சிப் பாட்டு – பத்துப்பாட்டுச் சொற் பொழிவுகள், கழகம், சென்னை, 1952, ப. 252)** எனவும்

“தோழி கூற்றாக வரும் இடங்களில் தான் அவர்தம் கருத்தை மறைமுகமாக அறிவுறுத்துவது எளிதாகின்றது (“தமிழண்ணல் இராம.பெரியகருப்பன், குறிஞ்சிப்பாட்டு, ப.73). எனவும்

“தலைவனும், தலைவியும் இணைந்த மகிழ்ச்சியான சூழலைப் புகழ்ந்து பாடவிரும்பிய புலவர் தானே தோழியாக நோக்குநிலை கற்பித்துக் கொண்டு பாடுகிறார்” (நா.ஜெராமன். முல்லைப்பாடல்கள், ப.56) எனவும்

“கபிலர்தம் கற்பனையையோ உணர்வையோ கருத்தையோ நேரடியாகக் கூறாமல் தாம் படைத்த கற்பனை மாந்தராகிய தலைவன், தலைவி, தோழி ஆகியவர்களின் வாயிலாகவே வெளிப்படுத்துகிறார்” **(எஸ்.விஜயபாரதி, கபிலர், கவிநயம், ப.12).** எனவும்

“சங்க கால அகப்பாடல்கள் அனைத்திலும் இவ்வாறே பாத்திரங்கள், வாயிலாகப் புலவர்களின் உணர்ச்சிகளும் கருத்துகளும் உணர்த்தப் பெறுகின்றன” **(தா.ஏ.ஞானமூர்த்தி, சங்க கால இலக்கியக்கொள்கை, சுப்பையாபிள்ளை, பவளவிழா, மலர், ப.8)**

எனவும் வரும் திறனாய்வுக் கூற்றுக்களால் சங்க அக இலக்கியப் பண்பாட்டில் தோழியின் முதன் மையையும் முக்கியத்துவத்தையும் அறியலாம்.

## நிறைவுரை

சங்க அகப்பாடல்களில் தலைவிக்கு இருந்த பல தோழியர்களில் தலைவியின் உயிர்த்தோழியே 'தோழி' எனப்பட்டாள். 'தோள்' போன்றவள் தோழி ஆவாள். அகப்பாடல்களில் அறிவுசான்ற தோழியின் சொல்லாடல்கள் வெளிப்படுகின்றன. சங்க அகப்பாடல்களின் ஒற்றைக் காட்சி நாடகப் பாங்கிற்குத் தோழி சிறப்பான பங்களிப்பைச் செய்கின்றாள். சங்க அகப்பாடல் புலவர்கள் தோழி கூற்றுப்பாடல்களிலேயே தம் கருத்துக் களை வெளிப்படுத்தியுள்ளனர்.

## பயன்பட்ட நூல்கள்


இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், கழக வெளியீடு, சென்னை 1956

இராகவையங்கார்.மு. தொல் காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி, தமிழ்ச்சங்க வித்தியா சாலை, மதுரை, 1929

உமாபதி, த.சே. பாட்டும் தொகையும், முத்தமிழ் நூலகப் பிரசுரம், சென்னை, 1960

குருசாமி, ம.ரா.போ., சங்ககாலம், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயம்புத்தூர், 1974

புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், பாரிநிலையம், சென்னை, 1959

செயராமன், நா.முல்லைப் பாடல்கள், குமரன் வெளியீடு, மதுரை 1976

தமிழண்ணல், குறிஞ்சிப்பாட்டு – இலக்கியத்திறனாய்வு விளக்கம், வளர்தமிழ்; வெளியீடு, சென்னை, 1961

தேவநேயன், ஞா.சொல்லாராய்சிக் கட்டுரைகள், கழக வெளியீடு, சென்னை 1964

பாஸ்கரன், ஈ.கோ, சங்க அகப் பாடல்களின் தோழி, திருமனை வெளியீடு, கோவை 1979

மாணிக்கம், வ.சுப.தமிழ்க்காதல், பாரிநிலையம், சென்னை 1962

ஜகந்நாதன் கி.வா. குறிஞ்சித் தேன், அமுதநிலையம், சென்னை ,1962

ஞானமூர்த்தி, தா.ஏ. சங்க கால இலக்கியக் கொள்கை, வ.சுப்பையாவிள்ளை பவளவிழா, மலர், கழகம் சென்னை, 1973.

# திறனாய்வுப் பார்வையில் தமிழ்ப் புதுக்கவிதைகளின் தோற்றம், பின்புலம், பண்பாட்டுச் சிக்கல்கள்

**முனைவர் உ.கருப்பத்தேவன்,**
உதவிப்பேராசிரியர் (ம) தலைவர் (பொ),
இலக்கியத் திறனாய்வியல்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை -21.

## முன்னுரை

"திறனாய்வுப் பார்வையில் தமிழில் புதுக்கவிதைகளின் தோற்றம், பின்புலம், பண்பாட்டுச் சிக்கல்கள்" என்பது இவ் ஆய்வுக் கட்டுரையின் தலைப்பாகும். 1934–இல் 'மணிக் கொடி' இதழில் ந.பிச்சமூர்த்தியும் கு.ப.ராஜகோபாலனும் யாப்புக்கட்டற்ற "புதுக்கவிதை" என்ற இலக்கிய வகையைத் தோற்றுவித்தனர். யாப்பு, பொருள் அடிப்படைகளில் புதுக்கவிதை களுக்குக் கடுமையான எதிர்ப்புக்கள் தோன்றின. எனினும் 'முற்போக்குச் சிந்தனை' எனக் கூறிப் புதுக்கவிதைகளை எழுதியவர்களால் பின்னர் எதிர்ப்புக் குறைந்தன. தமிழியக்க மரபில் வந்தவர்களே புதுக்கவிதைகளை எழுதினர்.

காலப்போக்கில் தமிழ்ப் புதுக் கவிதைகளில் நகர்மயமாதலின் தீங்குகள், தனிமனித ஆளுமை வெளிப்பாடுகள், அந்நியமாதல், வாழ்க்கையின் கடுந்துயரங்களும் நம்பிக்கை யின்மையும், கிராம வாழ்வியல், தலித்தியம், பெண்ணியம் ஆகியன வற்றின் எழுச்சி, பண்பாட்டுச் சிக்கல்கள் ஆகியன புதுக்கவிதைகளின் பொருண்மை வெளிப்பாடுகளாயின. ஹைகூ, சென்ரியூ, லுமரிக், குக்கூ கவிதைகள் தோன்றி வளர்ந்து வரும் நிலையில் புதுக்கவிதைகள் இன்று மரபுக் கவிதைகளாகிவிட்டன. எனினும் புதுக்கவிதையின் தோற்றம், பின்புலம், அவை தோற்றுவித்த பண்பாட்டுச் சிக்கல்கள் ஆகியனவற்றைத் திறனாய்ந்து வெளிப்படுத்துவதே, இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## புதுக்கவிதை

யாப்புக் கட்டுப்பாடுகளை உடைத்து கருத்து விளக்கத்தையே முதன்மை நோக்கமாகக் கொண்டு தோன்றிய புதுக்கவிதைகளில் வழி வழியான பண்பாட்டின் நடைமுறைச் செயல்கள் சிதைந்து, பாலியல் வன்முறைகள், வக்கிரங்கள், உறவுகளில் சிதைவு, விலகல், தமிழுணர்ச்சியை வைத்துப் பணம் ஈட்டல், ஆத்திகம் – நாத்திகம் என்னும் இருநிலைகளிலும் ஆன்மீக வீழ்ச்சி, சாதியம் புதுவடிவம் பெறுதல், நகரங்களிலும் சமயவெறி, மதச்சடங்குகளால் ஏற்படும் பேரழிவு, மூடநம்பிக்கை வயப்பட்ட பழமைக்கும் புதுமைக்கும் வளர்நிலையில் உள்ளன.

## புதுக்கவிதை எழுத்தாளர்கள்

1934–இல் "மணிக்கொடி" இதழில் ந.பிச்சமூர்த்தி எழுதிய "காதல்" என்ற கவிதையோடு புதுக்கவிதையின் தோற்றம் தொடங்குகின்றது. புதுக் கவிதை என்பது யாப்புக்கட்டற்ற கவிதை யாகும். மணிக்கொடி இதழில் கு.ப.ராஜகோபாலனும் புதுக்கவிதையை எழுதியுள்ளார். இவர்கள் இருவருமே தமிழில் புதுக்கவிதை மரபைத் தோற்று வித்தவர்கள் ஆவர். ஆயினும் இவர்கள்

காலத்தில் புதுக்கவிதை பெரிய அளவில் ஏற்பினைப் பெறவில்லை. 1942இல் 'கலாமோகினி' இதழில் ந.பிச்சமூர்த்தி மேலும் பல புதுக்கவிதைகளை எழுதினார். 1939இல் 'சூறாவளி' இதழில் க.நா.சுப்பிரமணியன் 'மயன்' என்ற பெயரில் புதுக்கவிதைகளை எழுதினார். இதைக் கேலி செய்து அ.சீனிவாசராகவன் (நாணல்) எழுதிய கடிதம் சூறாவளியில் வந்தது. அதற்கு மறுப்பாக கு.ப.ராஜகோபாலன் 'கவிதைத் தொண்டன்' என்ற பெயரில் பதில் எழுதினார். இவ்வாறு எதிர்ப்புடன் தொடங்கிய புதுக்கவிதை மரபு 1959க்குப் பின்னர் புதிய மறுமலர்ச்சி இலக்கிய வகையாக நிலைத்துவிட்டது.

1959இல் சி.சு.செல்லப்பா தொடங்கிய 'எழுத்து' இதழ் புதுக் கவிதையை வீறுடன் வளர்த்தது. புதுக் கவிதைக்கு மீண்டும் 1968இல் பேராசிரியர் நா.வானமாமலை எழுதிய கட்டுரைகளில் புதுக்கவிதைகளின் உள்ளடக்கப் பொருள்கள் குறித்து விவாதிக்கப் பட்டன.

1971இல் நா.காமராசன் போன்றோர் புதுக்கவிதைகளை எழுதிய பின்னர் புதுக் கவிதைக்கு எதிர்ப்புக்கள் குறைந்தன. யாப்பு, பொருள் அடிப்படைகளில் புதுக்கவிதைக்குக் கடுமையான எதிர்ப்புக்கள் தோன்றியபோதும் முற்போக்குச் சிந்தனை என்று கூறி புதுக் கவிதைகளை எழுதியவர்களால் எதிர்ப்புக் குறைந்தன. புதுக்கவிதைகளை எழுதியவர்கள் தமிழியக்க மரபில் வந்தவர்களே (வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், பக்.19–26). தமிழியக்க மரபின் திராவிட அரசியல் இயக்கத் தலைவரான சி.என்.அண்ணாதுரை 29.04.1951இல் வால்ட் விட்மன் கவிதை யொன்றினைப் புதுக்கவிதையாக மொழிபெயர்த்து வெளியிட்டார். அவர் யாப்பில் அடங்காத பல கவிதைகளை எழுதியுள்ளார். வால்ட் விட்மன் கவிஞனைப் பற்றி எழுதியதை அண்ணாதுரை,

"எதுகை மோனை எழில்தரும் உவமை / வசீகர வர்ணனை பழமைக்கு மெருகு / இத்தனையும் தேடி எங்கெங்கோ ஓடி / வார்த்தை முடையும் வலைஞன் அல்ல" (து.சீனிச்சாமி, "அண்ணாவின் புதிய கவிதை ஆக்க முயற்சி", இனமானப் பேராசிரியர் க.அன்பழகன் பவழமாலை, ப.273) என மொழிபெயர்த்துள்ளார். அவர் மீண்டும் வால்ட் விட்மன் கவிதையொன்றை மொழி பெயர்த்துத் 'திராவிட நாடு' இதழில் 12.06.1955இல் வெளியிட்டார். ந.பிச்சமூர்த்தி புதுக்கவிதை எழுதத் தூண்டுதலாக இருந்தவரும் வால்ட் விட்மனே. அண்ணாதுரையும் புதுக்கவிதை முயற்சியை மேற் கொண்டுள்ளார் (து.சீனிச்சாமி, மு.நூ., ப.275). புதுக்கவிதை, புதினம், சிறுகதை ஆகிய இலக்கிய வகைகள் அயல்நாட்டு இலக்கியத் தாக்கத்தினால் தமிழில் தோன்றி வளர்ந்தவைகளாகும்.

## அறிஞர்களின் கருத்துக்கள்

உலக அளவில் தொழிலிய முதலாளித்துவம் பெரிய அளவில் நிறுவப்பட்டன. தொழிலிய முதலாளித்துவப் போட்டிகளால் உலகப்போர்கள் நடந்து, அறிவியல் கண்டு பிடிப்புக்களினால் மனித சமூகம் பேரழிவுகளைச் சந்தித்த அனுபவம் மேலைநாடுகளுக்கு உண்டு. இந்தியாவில் தொழிலிய முதலாளித்துவம் கால்கொண்டு வளர்ந்த போதும், உலகப் போர்களில் பாதிப்பு அவ்வளவாக இல்லை; பழைய வேளாண்மைப் பொருளாதார வாழ்க்கை இந்தியாவில் முற்றிலுமாக அழியவில்லை.

இந்தியா பொருளாதார நிலையில் தொழிலிய முதலாளித்துவத்திற்கு ஆட்பட்டபோதும் அதன் பழம் பண்பாட்டு மதிப்புக்களும் செல்வாக்கும் முற்றிலுமாக ஒழிக்கப்படவில்லை. இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் பழைய நிலவுடைமைக்கால வழிப்பட்ட மத வாழ்க்கைக்கு மீண்டும் திரும்ப வேண்டும் என்ற இயக்கமும் வளர்ந்தது. சாதிய மேலடுக்கில் உயர்சாதியினர் புதிய சனநாயக அரசியலால் பழங்கால அதிகாரத்தை இழந்து விடுவோமோ என்ற பயத்தில் பழைய மதவழிப்பட்ட சமூக அரசியலின்பின் ஒன்று திரண்டனர். இத்தகைய சமூக அரசியல் குழப்பத்தில் தொழிலிய முதலாளித்துவமும் நுகர்வுக் கலாச்சாரமும் கூடவே வளர்ந்து வந்தன. இதனால் பழம்மரபு ஃ புதிது இவற்றுக்கிடையே முரண்களும் மோதல் களும் சிதைவுகளும் வலுப்பெற்றன. இத்துடன் தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியாவில் கட்சி அரசியலும் தகவல் தொடர்பியல் ஊடக வணிகமும் இணைந்து பல்வேறு தேக்க நிலைகளையும் பண்பாட்டுக் குழப்பத்தையும் விளைவித்தன. இந்தியாவில், "மேலைநாடுகளில் ஏற்பட்டது போன்ற முற்றான முதலாளி த்துவச் சமூக அமைப்பு உருவாகவில்லை. மேலைநாட்டில் புதிய தொழிலிய வளர்ச்சிக்கான போராட்டங்கள் காரணமாகவே தாராளச் செயல் பாடுகள், தனிமனிதத்துவ உரிமைகள், மக்களிடையே சமத்துவ மதிப்பு போன்றவை தோன்றின" (Dipankar Gupta, India Another Millennium, "India's Un modern modernity.88) ஆயினும் உலகப்போர்கள் மேலைநாட்டு மக்களின் வாழ்க்கை நம்பிக்கைகளைச் சீர்குலைத்தன. இந்தப் பின்னணியில் 'நவீனத்துவம்' (Modernism) என்ற சிந்தனைப் போக்கு தோன்றியது. முதல் உலகப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட சிந்தனைப் போக்கு சமூக ஒழுங்கமைவு, ஒழுக்க அறவியல், மனிதனின் சுயம் பற்றிய மரபு முறையிலான பார்வைகள், உறுதி நிலைகள் ஆகியன குறித்த கேள்விகளாகவே நவீனத்துவம் தோன்றியது (M.H.Abrams, Glossary of Literary Terms, Prism Books, Bangalore, 1993, p.118,119)

## வால்ட் விட்மனின் தாக்கம்

1890இல் நவீனத்துவம் தோன்றினும், நவீனத்துவத்தின் பரவலும் உச்சமும் 1922 இலிருந்துதான் வளர்நிலை பெற்றது. இந்த நவீனத்துவச் சிந்தனைப் போக்கினால் தோன்றியதே புதுக்கவிதையாகும். 1912க்குப் பின்னர் தோன்றிய உருவவியக் கவித்துவ இயக்கமே (Symbolic, Imagist Literary Movements) நவீனத்துவ அறிதலுக்கும் புதுக்கவிதையின் தோற்ற வளர்ச்சிக்கும் அடிப்படை (Vivan de sola pinto, crisis in English poetry 1880&1940, Hutchinson University Library, London, 1972, Pp.135&138). முதன்முதலாகத் தமிழில் புதுக்கவிதையை எழுதிய ந.பிச்சமூர்த்தி தான் புதுக்கவிதையை எழுத வால்ட் விட்மனே தூண்டுகோலாக இருந்தார் (ந.பிச்சமூர்த்தி, காட்டுவாத்து, முன்னுரை) எனக் கூறியுள்ளார்.

தமிழில் யாப்புக் கட்டில்லா கவிதை எழுதுவதற்கு மூலவராக அமெரிக்கக் கவிஞன் வால்ட் விட்மன் கருதப்படுகின்றான். 1855இல் வால்ட் விட்மனின் "Leaves of Grass" என்ற கவிதை 'புல்லின் இதழ்கள்' எனத் தமிழில் வெளிவந்து செல்வாக்குப் பெற்றது. சனநாயக மற்றும் தேசிய உணர்வின் வெளிப்பாடுகளாகவே வால்ட் விட்மன் தன் கட்டற்ற கவிதைகளை எழுதினான்; அவன் யாப்பு வடிவத்தை நிலவுடைமைச் சமூக வெளிப்பாடு என்றான். அவனது வசனகவிதை தமிழ்நாட்டில்

சுப்பிரமணிய பாரதியார் வசனகவிதை எழுதுவதற்கு முக்கியத் தூண்டலாக அமைந்தது (V.Sachithanandan, The Impact of western thought on Bharathi, p.83).

தமிழில் புதுக்கவிதையின் தோற்றம் பற்றிக்கூறும் தமிழவன், "இன்றைய தமிழ்ச் சூழலில் ஏற்பட்ட புதுஅம்சத்தை முதன்முதலாகச் சொன்ன இலக்கிய வடிவம் புதுக்கவிதை. நவீன யுகத்தில் நெருக்கடி மிக்க வாழ்க்கையை வாழும் தமிழனை அது காட்டுகின்றது. மாறிய வாழ்க்கை, அதனால் ஏற்பட்ட நெருக்கடி, தனிமை, அவலம், புலம்பல், வாழ்வின் மீதான அவநம்பிக்கை பற்றி முதன்முதலில் சொன்னது புதுக் கவிதை" (தமிழவன், இருபதில் நவீனத்தமிழ் விமர்சனங்கள், பக்.50–51) எனக் கூறியுள்ளார். வால்ட் விட்மனும் ஐரோப்பாவில் தோன்றிய நவீனத்துவச் சிந்தனைகளுமே தமிழில் புதுக்கவிதைகள் தோன்றத் தூண்டுகோல்களாகும்.

கவிதைகளைச் சங்கப்பாடல் களைப் போன்று சுருக்கம், செறிவு, நுட்பம் கொண்டதாகப் படைக்க வேண்டும்; கவிதையை இசை மற்றும் சந்தங்களிலிருந்து விடுவித்து தனிக்கலையாக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் தொடக்க காலத்தில் சி.சு.செல்லப்பா, க.நா. சுப்பிரமணியம் ஆகிய இருவரும் மிகுதியாக புதுக்கவிதைகள் குறித்து எழுதினர். இதனை சி.சு.செல்லப்பா "மாற்று இதயம்" என்ற கவிதைத் தொகுப்பின் முன்னுரையில், "புதுக் கவிதைக்குச் சரியான உதாரணம் சங்கக் கவிதைகள் என்பது என்முடிவு. அவை வெகு நவீனமாக இருக்கின்றன. தற்காலப் புதுக்கவிதைதான் சங்க இலக்கியத்தின் வாரிசாக மீட்சி ஏற்படுத்துகிறதாகப்படுகிறது எனக்கு" எனக் கூறியுள்ளார் (சி.சு.செல்லப்பா, மாற்று இதயம், முன்னுரை).

சி.சு.செல்லப்பா, 'புதுக்கவிதை' என்பது அதனடிப்படையில் கவிதையே. அதன் நவீன பரிமாணத்தைப் புதிதாக அறிமுகப்படுத்தும் நிலையில் அதைப் 'புதுக்கவிதை' என்றழைத்தனர். இப்புதினம் நிலைநாட்டிவிட்டால் அதைப் புதுக்கவிதை என்று சொல்லத் தேவையில்லை. 'நவீன கவிதை' என்றே அழைக்கலாம் எனக் கூறியுள்ளார். புதுக் கவிதைகளில் பொதுவாக அதன் வடிவம், சந்தம், ஓசை நயக்கூறுகள் ஆகியனவற்றை மீறி, சனநாயக காலத்துப் பொதுநெறி மனோபாவங்களே உள்ளார்ந்து செயல்படுகின்றன.

## பண்பாட்டுச் சிக்கல்கள்

இருபதாம் நூற்றாண்டுத் தொழிலிய உலகில் உருவான நடுத்தட்டு மக்களின் (Middle class people) விடுதலை உணர்வுகளின் கலைவெளிப்பாடே புதுக் கவிதைகளாகும். 1971க்குப் பின்னர் தமிழ்க்கவிதைகளில் புதியதாக முற்போக்குச் சிந்தனைகளே இடம் பெற்றன. இருபதாம் நூற்றாண்டின் கடைசி முப்பதாண்டுகளில் கிராம வாழ்வியல் வெளிப்பாடு, ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் தனித்துவமான உணர்வு வெளிப்பாடுகள், ஒடுக்கப் பட்ட பெண்களின் நிலை ஆகியன தமிழ்க்கவிதையுலகின் உள்ளடக்கங் களாயின. தமிழில் தோன்றிய புதுக் கவிதைகள் நகர்வயமாதல், தனிமனிதத்துவம், பண்பாட்டுச் சிக்கல்கள், வாழ்க்கையின் கடுந்துயரங் களும் நம்பிக்கையின்மையும், அந்நிய மாதல், முற்போக்குச் சிந்தனைகள், கிராம வாழ்வியல், தலித்தியம், பெண்ணியம் என்னும் பொருண்மைகளை உள்ளடக்கங் களாகக் கொண்டுள்ளன.

ஒரு சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், தொழில்கள், நுட்பம், மொழி, சமூகப்பயன் மதிப்புக்கள் போன்ற பல்வேறு கூறுகளடங்கிய

நடத்தையே பண்பாடாகும். இவையே ஒரு சமூக அமைப்பின் பல்வேறு சமூக நிறுவனங்களை நிலைபெறச் செய்கின்றன. சமூக அமைப்பு உருவாக்கத்தில் பொருளாதார உற்பத்தி உறவுகளும் முக்கியமானவை. ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பின் பண்பாட்டு மதிப்புக்கள் மாறும்போது அவ்வமைப்பும் படிப்படியாக மாறிவிடும். புதிய மதிப்புக்கள் தோன்றும். புதிய அமைப்பிற்கும் பழைய அமைப்புக்கும் மோதல்களும் முரண்களும் தோன்றி அவையே பண்பாட்டுச் சிக்கல்களாகி விடுகின்றன.

இந்திய, தமிழகப் பண்பாட்டு உருவாக்கத்தில் சாதி, மதம், கல்விமுறை, குடும்பம் ஆகியனவற்றில் பெரும் மறுமலர்ச்சியும் புத்தெழுச்சியும் ஏற்பட்டன. எனினும் புதிய வளர்ச்சித் திட்டங்களால் பழைய பண்பாட்டு மரபை முற்றிலுமாக மாற்றிவிட இயலவில்லை. இது குறித்து டேவிட்ஜி மண்டல்பாம் "Social Organization and Planned Culture change in India" என்ற கட்டுரையில், "சாதியமைப்பு நெருக்கமான பொருளாதாரப் பின்னணி கொண்டது. சமூக மதரீதியான தோரணைகளால் இது ஒழுங்குபடுத்தப் பெற்றது. வளர்ச்சித் திட்டங்களான போக்குவரத்துத் தகவல் தொடர்பு மாற்றங்கள், மேலைநாகரிக அறிமுகம் ஆகியன சாதி உறவுகளைப் பாதித்தன. ஆயினும் சடங்கு ரீதியான சாதியப்படிநிலையில் மாற்றமில்லை. சில தளர்வுகள் இருப்பினும் கலப்புத் திருமணத்தை எளிதில் நடத்த இயலாது. நடுத்தர சாதிகள் சில பொருளாதார சமநிலையைப் பெற்றன் அவர்கள் உயர்சாதிய நிலைக்கு முயன்றனர். வளர்ச்சித் திட்டங்களால் நிலமற்ற கீழ்ச்சாதி தொழிலாளருக்கு எந்த நன்மையும் இல்லை" (A.R.Desai (Edr), Rural Sociology, Pp.693–694) எனக்கூறியுள்ளார். ஆதலால் சாதியம், மதம், கல்வி, மொழி, குடும்பம் குறித்த புதிய சிந்தனைகளும் சிக்கல்களும் 20ஆம் நூற்றாண்டில் தோன்றின. இவை தமிழ்ப்பண்பாட்டுச் சூழலில் சிக்கல்களாகத் தமிழ்க்கவிதைகளில் வெளிப் பட்டுள்ளன. இதனை மாலன் "உனக்கு" என்னும் கவிதையில் 'இது அழுக்கினைப் பாடும்காலம்' எனப் பாடுவதிலிருந்து அறியலாம். சாதிய இறுக்கம் கொண்ட தமிழ்ச்சமூகத்தில் திராவிட இயக்கம் போன்ற சாதிய மறுப்பு இயக்கங்கள் தோன்றின் ஆயினும் சாதியம் புதுவடிவம் கொண்டது. இதனைப் "பிரமிள்" "மேல்நோக்கிய பயணம்" என்ற கவிதையில்,

"புரட்சித் தத்துவ / சித்தாந்தியின் சிலை / ஜோடி மீது / ஓர் ஆயிரம் / நாயன்மார்களின் / வண்ணக் கதைகள் / .... / அறுபத்துமூவர் / ஆயிரவரானது /எப்படி என்றேன் / ஒவ்வொரு கதையும் / ஒவ்வொரு சாதி / ஆயிரம் உண்டிங்கு /அத்தனை பேரையும் / புதுயுகப் புரட்சியில் / நாயனார் ஆக்கினோம் / ஜாதியை விடாத / மாபெரும் புரட்சி" (பிரமிள், மேல்நோக்கிய பயணம், பக்.23–24) எனச் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் 'புகைகள்' என்ற கவிதையில் கலப்பு சாதிக்காதல் கலகத்தில் முடிவதைக் கூறுவதும், சனநாயகப் பின்னணியில் பண்பாட்டுக் குழப்பமே. அவர் இக்கவிதையில் கீழடுக்குச் சாதியினர் எரிக்கப்படும் வன்கொடுமையையும் கூறியுள்ளார்.

"உயர் ஜாதிக்காரி / ஒருத்தி நகத்தோடு / என்பறை நகம் மோதி / ஊர் அதிர்ந்தது/ ஐயாயிரம் வருஷத்து / இரவு சிவந்து / எரிந்தது என்சேரி / புகைகள் கலந்தது / இருண்டது இன்றென் / உதய நெருப்பு" (பிரமிள், மு.நூ., ப.55)

ஆத்மாநாம் 'இயக்கம் ஒன்று' என்ற கவிதையில் மத உணர்வில், மாறுதல் பெற்ற நகர வாழ்க்கையின் இயக்கத்திலும் விடாத வெறியுடன் கடவுள் சிலைகளைத் தெருக்களில் இழுத்துவரும் அறியாமையைக் காட்டுகின்றார்.

"நகரத்தின் இயக்கத்தில் / சிதறிய மக்கள் / மூச்சுத்திணற ஓடுகின்றார்/மேலும் கீழும் ஏறி இறங்கி / எதிர்கொண்டு / மூச்சுமுட்ட ஒருநிலை வருகையின் /காலம் கடந்த உணர்வில் / உருத்தெரியாமல் நசுங்கி / கோணல் முகங்களுடன் /தம்மையே காணவெட்கி / கெட்டியாய்ப் பற்றிக்கொண்டு / உடும்புப்பிடியில் சிதைந்த / கடவுளை / இழுத்துத் தெருவில் வருகின்றனர்" (ஆத்மாநாம் கவிதைகள், ப.71)

இவ்வாறு மத நம்பிக்கைகளும் மதச்சடங்குகளும் பெரிய அழிவில் முடிவதை ரவி சுப்பிரமணியன் கும்பகோணம் மகாமகம் நிகழ்ச்சியைக் காட்டி விளக்கியுள்ளார்.

"தனிமையில் தவிக்கும் / குளத்தோர கரையெல்லாம் / திமிறி படர்ந்து ஊர்ந்தது ஜனங்கள் / தாகித்த தண்ணீரில் / தலைமுழுக / ... ... / மூழ்கி மூழ்கி / கலங்கிய நீரில் / அடுத்து மூழ்க / ஆயிரம் பேர் / அருவருப்பின்றி / மனிதப் பிஞ்சுகள் / குருத்துக்கள் / முற்றல்கள் / தின்று செரித்து / அசுரனாய்ச் சிரித்தது / மகம்" (ரவி சுப்பிரமணியன், காத்திருப்பு, ப.41)

மூடநம்பிக்கை வயப்பட்ட பழமைக்கும் புதிய தலைமுறைக்கும் இடைடயிலான மோதலை காசியபன் தன் மகளிடம் கூறுவது போல,

"நீ பிறந்த பொழுது மகளே! / உச்சத்தில் நின்ற நட்சத்திரம் யாது?/ பளிச்சிட்டு மின்னி! பின் உருகி மறைந்த நட்சத்திரம் யாது? / உன்னில் உயிர்ப்பும் துடிப்பும் அகந்தையும் தந்து / என் மூளையில் சிலந்தி வளையும் பின்னி/ சென்றது யாது? / உன்னைப்போல, உன் கண்களைப் போல / ஜெட்யுகச் சீறல் வலு எனக்கில்லை / பழமைப் பேய்கள் இன்னும் பிடித்தாட்டும் / எனக்கு/ நீயும் உன்வசந்தமும் / உள்ளத்தைக் கீறும் துலங்கா தூமகேதுகள்" (ஞானக் கூத்தன், ஆர்.ராஜகோபாலன், எஸ்.வைத்திய நாதன், அழகிய சிங்கர் (தொகு.ஆ.), 'ழ' கவிதைகள், விருட்சம், சென்னை, 1990, ப.15) எனக் கவிதையாக்கியுள்ளார். புத்தர், ஏசு, காந்தி நெறிகளில் செயல்பட்ட சமய வாழ்வின் உள்ளீடு அழிந்துவிட்டது. நாத்திகம், ஆத்திகம் என்னும் இரு நிலைகளிலும் ஆன்மீகம் வீழ்ந்துவிட்டது என்னும் சமயச்சூழலை தேவதேவன் 'உருமாற்றம்' என்னும் கவிதையில்,

"காந்தியும் சந்துஷ்டியும் காட்டும் புன்னகையுடன் / தியானத்தில் அமர்ந்திருந்தார் புத்தர் முழு நிர்வாணத்தை நோக்கி / அரை நிர்வாணத்துடன் ராட்டை சுற்றிக்கொண்டிருந்தார் காந்தி /ரத்தம் சொட்ட தன்னைத்தானே சிலுவையில் அறைந்து கொண்டிருந்தாள்/ மரிக்கவும் உயிர்த்தெழவும் அறிந்த மேதை (இயேசு)". (அழகிய சிங்கர் (தொகு.ஆ.), விருட்சம் கவிதைகள், தொ.1,பக்.33–34) எனக் குறிப்பிட்டுள்ளார். கோவலன், "புழுக்கம்" என்ற கவிதையில் கலையென்பது பாலியல் வெறியைத் தூண்டுகின்றது என்கின்றார்.

"அறையுள் புழுக்கமதிகம் / கடற்கரைக்குச் செல்லலாம் /ஞ்ஞ். ஞ்ஞ். ஞ்ஞ்/ போஸ்டரைப் பார்த்து / சினிமாக் கொட்டகைக்கு / நடந்தார் நண்பர்" ('நடை' இதழ்த் தொகுப்பு,ப.81)

'அ/க்' இதழில் வெளியாகியுள்ள 'வாக்குச் சீட்டுகள்' என்னும் கவிதை

தேர்தலை சனநாயகக் கற்பழிப்பு எனச் சாடுகின்றது.

"ஊரே கூடி / ஒப்பாரி குலவையிட / கழுதையாய்க் கத்திக் /குரங்காய் மேடைவிட்டு / மேடை தாவி / சாதிப் பெயரைத்/ தெருப்பெயரைச் / சந்திக்கிழுத்து / மணவறை சுற்றி வந்து / தனியறையில் ஒரு / சயன மண்டப மெடுத்து / ஜனநாயகக் கற்பழித்து / முத்திரை குத்தி" (அ/க்.பரந்தாமன், அ/க்இதழ்த்தொகுப்பு, சந்தியா பதிப்பகம், சென்னை, 2006,ப.457)

தமிழின உணர்வு, தமிழ்ப்பண்பாடு குறித்த கொள்கைகளும் உரைகளும் பேச்சுக்களும் வன்முறையில் செயல் படுவதை முகில் என்னும் புதுக்கவிஞன் 'அடலேறு' என்னும் கவிதையில்,

"இன்று மாலை / மாபெரும் கூட்டம் / தமிழ்வாழ / தமிழ்இனம் வாழ / அடலேறே / அலையெனத் திரண்டுவா / கூலித்தமிழனும் / வேலித்தமிழனும் / மோதிக் கொண்டால் / கொள்கைத் தமிழன் / பார்த்துக் கொள்வான்" (முகில், பழகிய மரணம், ப.23) என வெளிப்படுத்தியுள்ளான். அவர் 'இங்கே' என்னும் கவிதையில் தமிழுணர்ச்சி என்பது பணத்திற்கான செயல் என்பதைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

"ஆகாயம் முதல் / பூமிவரை / அனைத்தும் விற்பனைக்கே / நிலமும் வீடும்/ மானமும் மரியாதையும் / அதிகவிலையில் / மொழியும் இனமும்" (முகில், பழகிய மரணம், ப.32)

குழப்பங்களும் பண்பாட்டுச் சிக்கல்களும் மிகுந்துவரும் இன்றைய சூழலில் உறவுகள் சிதைந்து போலியாகி வருகின்றன. இதனை மெய்நெறிப்பித்தன் என்ற கவிஞன் 'இந்த நூற்றாண்டில் இந்தியாவில்' என்னும் கவிதையில்,

"பாசத்தைத் / தலை முழுகியாயிற்று / சாவைப் பற்றிய பயம்/ இல்லை துளியும்/ ஆத்தாள் அப்பன் / சிசுருகைஷுக்குப் / பணியாள் / மடியல்ல / தலையணையில்தான்/ உயிர்பிரிகின்றது" ('அ/க்' தொகுப்பு, ப.459) எனக் கூறியுள்ளான். உறவுகள் விலகலை ஆ.ராஜகோபாலன் தம் கவிதையொன்றில்,

"நீ / நான் / அவள் / அவன் / இவர்கள் / அவர்கள் / ..... / ..... / அவன் / அவள் / நாள் / நீ" ('சிற்றகல்' இதழ்த்தொகுப்பு, ப.168)

இவ்வாறாக உறவுகள் பிரிந்து உட்தொடர்பற்று வாழும் வாழ்க்கையே இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்மக்களின் வாழ்வியல் பண்பாடாகியது. இது பண்பாட்டு மரபுக்குள் பெரும் குழப்பத்தை விளைவித்தது. மொத்தமாக இன்றைய தமிழர்கள் சிந்தனைகளாலும் அரசியலாலும் தம் மனங்களைச் சீரழித்து வாழ்வதை ஆத்மாநாம்

"நாளை நமதே" என்ற கவிதையில்,

"கண்களில் நீர்தளும்ப இதைச் சொல்லுகிறேன் / இருபதாம் நூற்றாண்டு செத்துவிட்டது / சிந்தனையாளர் சிறு குழுக்களாயினர் / கொள்கைகளை வெளியேற்றி / ஊர்வலம் வந்தனர் தலைவர்கள் / மனச் சீரழிவே கலையாகத் துவங்கிற்று / மெல்லக் கொல்லும் நஞ்சை / உணவாய்ப் புசித்தனர்" (ஆத்மாநாம் கவிதைகள், ப.29)

வழிவழியான பண்பாட்டுச் செயல்கள் உடைந்து சிதறும் காட்சிகளை இக்கவிதை காட்டுகின்றது. ஆபாசங்களால் அன்பும் காதலும் அழிந்து வருவதிலிருந்து மீள ஒருவருக் கொருவர் வெளிப்படையாக முத்தம் கொடுங்கள் என்று அவர் 'முத்தம்' என்ற கவிதையில் கூறுகின்றார்.

"உம் சீக்கிரம் / உங்கள் அடுத்தகாதலி / காத்திருக்கிறாள் / முன்னேறுங்கள் /கிறிஸ்து பிறந்து / இரண்டாயிரம் வருடங்கள் கழித்து / இருபத்தியோராம் நூற்றாண்டை / நெருங்கிக் கொண்டிருக்கிறோம் / ஆபாச உடலசைவுகளை ஒழித்து / சுத்தமாக / முத்தம் / என்று / முத்த சகாப்தத்தை / துவக்குங்கள்" ('சிற்றால்' தொகுப்பு, ப.26)

புதுக்கவிஞர் ஆத்மாநாம் பாலியல் வெறிகளும் குழப்பங்களும் மிகுந்த பண்பாட்டுச் சூழலில் நேரடி அன்புக்கான புதியதைத் தேடுகின்றார். இதற்கு 'முத்தப் பரிமாற்றம்' உதவும் என்ற நிலையில் பல கவிஞர்கள் இப்போக்கில் பல கவிதைகளை எழுதியுள்ளார். உண்மையில் புதுக் கவிதைகள் பண்பாட்டுச் சிக்கல் களைப் பலகோணங்களில் வெளிப்படுத்தி யுள்ளன.

## நிறைவுரை

"திறனாய்வுப் பார்வையில் தமிழ்ப் புதுக்கவிதைகளின் தோற்றம், பின்புலம், பண்பாட்டுச் சிக்கல்கள்" என்னும் பொருளிலான இவ்ஆய்வுக் கட்டுரை, தமிழ்ப் பண்பாட்டில் புதுக்கவிதைகள் ஏற்படுத்தியுள்ள பண்பாட்டுச் சிக்கல்கள் தக்க சான்றுகளுடன் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றைப் புதுக்கவிதைகள் காட்டும் பண்பாட்டுச் சிக்கல்கள் எனக் கூறமுடியாது. சமூக மாற்றத்தால் தமிழர் வாழ்க்கையின் வாழ்வியலில் நடைமுறையில் காணப்படும் சிக்கல்களாகவே கொள்ள வேண்டும்.

## பயன்பட்ட நூல்கள்

1. அஃக் பரந்தாமன், 'அஃக்' இதழ்த் தொகுப்பு, சந்தியா பதிப்பகம், சென்னை, 2006.
2. சீனிச்சாமி, து., 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை, புதிய போக்குகளின் தோற்றம் –வளர்ச்சி', சந்தியா பதிப்பகம், சென்னை, 2010.
3. செல்லப்பா, சி.சு., 'மாற்று இதயம்', ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1984.
4. ஞானக்கூத்தன், ஆர். ராஜா கோபாலன், எஸ்.வைத்தியநாதன், அழகிய சிங்கர் (தொகு.ஆ.), 'ழ' கவிதைகள், விருட்சம், சென்னை, 1990.
5. தமிழவன், 'இருபதில் நவீனத்தமிழ் விமர்சனங்கள்', காவ்யா, சென்னை, 2000.
6. பிரமிள், 'மேல்நோக்கிய பயணம்', இன்ப நிலையம், சென்னை, 1996.
7. ரவி சுப்பிரமணியன், 'காத்திருப்பு', யுனைடெட் ரைட்டர்ஸ், சென்னை, 2002.
8. பிச்சமூர்த்தி, ந, 'காட்டு வாத்து', சிகரம் பதிப்பகம், சென்னை, 1993.
9. வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், அகரம், கும்பகோணம், 1999.
10. Abrams, M.H., Glossary of Literary Terms, Prism Books, Bangalore, 1993.
11. Dipankar Gupta, India another Millennium, "India's Unmodern Modernity", Oxford University Press, New Delhi, 2005.
12. Desai, A.R. (Edr.), Rural Sociology, Indian publishers Distributors, Delhi, 2006.
13. Sachithanandan, V., The impact of Western Thought on Bharathi, Annamalai Nagar, Annamalai University, 1970.
14. Sharma, K.L., Indian Social structure and Change, Rawat, Jaipur, 2007.
15. Virian de Solopinto, Crisis in English poetry (1880&1940), Hutchinson University Library, London, 1972.
16. Yogendra Singh, Social Stratification and change in India, Manohar, New Delhi, 2006.

# தமிழிலக்கியங்களில் உணவுப்பண்பாடும் விருந்தோம்பலும்

**முனைவர் நா.காயத்ரி**
உதவிப்பேராசிரியர்,
தாகூர் அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரி,
புதுச்சேரி-605008.

பண்பாடு என்பது வாழ்வின் வழிமுறை ஆகும். நாம் உண்ணும் உணவு, உடுத்தும் உடை, பேசும் மொழி, வழிபடும் தெய்வம் ஆகிய இவையனைத்தும் பண்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சுருங்கக் கூறின், நமது சிந்தனை மற்றும் செயல் வடிவத்தின் முழு உருவமாகப் பண்பாடானது பிரதிபலிக்கின்றது. இதுவே நம் சமுதாயத்தின் அங்கமாகச் செயல்படவைக்கிறது. பண்பாடு என்பது நமது இயற்கையான பண்புகளுடன் நாம் வாழும் வாழ்க்கை மற்றும் நமது சிந்தனைகளின் வெளிப்பாடாகும். இந்நிலையில், சங்கத் தமிழிலக்கியங்களில் சங்ககாலத்தில் வாழ்ந்த தமிழர்களின் உணவுப் பண்பாட்டினைக் குறித்தும், விருந்தோம்பலுடன் பின்னிப் பிணைந்திருக்கும் நிலையினைக் குறித்தும் விளக்குவதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

## சங்ககாலத் தமிழரின் வாழ்வு

சங்ககால மக்களின் வாழ்வியல் அடையாளங்களில் அவர்கள் கைக் கொண்ட உணவுப் பழக்கம் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றது. உண்ணுதல் என்பது ஓர் உடல் சார்ந்த தேவையாக இல்லாமல் சமூகத்தைச் சார்ந்த செயலாக்கமாக அக்காலத்தில் இருந்து வந்ததை அறியமுடிகிறது. மேலும் அக்காலத்தில் விருந்தினருக்குக் கொடுக்கப்பட்ட முதன்மையும், குடும்பம், ஊர் சார்ந்த நிகழ்ச்சிகளில் உணவு பெற்றிருந்த முக்கியத்துவத்தையும் நம்மால் உணர்ந்துக் கொள்ளமுடிகிறது.

## உணவு வரையறை

உண், ஊன், உணவு போன்ற சொற்களின் வேர்ச்சொல் "உள்" என்பதாகும். உட்கொள்ளுதல் என்ற செயலிலிருந்து பிறந்ததாக ஆய்வறிஞர்கள் கூறியுள்ளனர். மனித குலத்தின் உணவு தொடர்பான தேடலே அவர்களது பண்பாட்டு வளர்ச்சிக்கு வழிவகுத்தது என்பர். சங்ககால மக்களின் வளர்ச்சியில் உணவுப் பாரம்பரியத்தின் பங்கு முக்கியமான ஒன்றாக இருந்துள்ளதை இலக்கியங்ள் வழி அறியமுடிகின்றது.

## சங்க இலக்கியங்களில் உணவு

நெருப்பைக் கண்டறிந்து அதைத் தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த பிறகே 'சமையல் முறை' தொடங்கியது. நெருப்பு மூட்டிச் சமைக்கும். அடுப்புகள் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் உள்ளன. சங்ககாலத்தில் சமையல் செய்வதற்கான அடுப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அடுப்பு என்ற சொல் அக்காலத்திலிருந்தே வழக்கில் இருந்துள்ளதை,

"முத்தலை அடுப்பு" (புறநானூறு-28-6)
"ஆடுநனிமறந்த கோடுயர் அடுப்பு"
(புறநானூறு - 164)

**"ஆண்டலை அணங்கபுபின்"**
**(மதுரைக்காஞ்சி - 29)**
**"முரியப்பு"**
**(பெரும்பாணாற்றுப்படை - 99)**
**"களிபடுக்குழிசிக் கல்அடுப்பு ஏற்றி"**
**(அகநானூறு - 393-14)**

ஆகிய பாடலடிகளிலிருந்து அறிய முடிகின்றன. வேட்டைக்குச் செல்பவர்கள் காட்டிலேயே தீயை உண்டாக்கி இறைச்சியை வேக வைத்து உண்டனர். உணவுப் பண்பாடு வளர்ச்சியின் உயர்ந்த நிலையாக வீடுகள்தோறும் அமைந்துள்ள சமையல் அறைகளைக் குறிப்பிடலாம். மனிதன் வாழ்ந்த வீடுகளில் சமையலறை இருந்துள்ளது என்பதற்கான சான்று களை இலக்கியங்களின் வழியாக அறிய முடிகிறது. இதனை,

**"உதியனட்டில் போல் ஒலியெழுந்து அருவியார்க்கும்" (அகநானூறு - 168-7)**

**"புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்" (சிறுபாணாற்றுப்படை - 132)**

**"அறநிலை இயயிய அகனட்டில்"**
**(பட்டினப்பாலை - 43)**

போன்ற பாடலடிகளால் உணரலாம்.

## சங்கத்தமிழரின் பல்வேறு விதமான சமையல் முறைகள்

சங்ககாலத் தமிழர்கள் பல்வேறு விதமான சமையல் முறைகளைப் பயன் படுத்தியுள்ளதை அறியலாம். நீரிலிட்டு அவித்தல், அவித்து வேகவைத்தல், வறுத்து அவித்தல், சுடுதல், வற்றல் செய்தல், நெய்யில் பொரித்தல், வேக வைத்து ஊறவைத்தல் போன்ற சமையல் முறைகள் தமிழ் இலக்கியங்களில் கூறப் பெற்றுள்ளன.

## சோறு

'சோறு' என்பதற்கு அடிசில், அழினி, கூழ், அவிழ், சொன்றி, நிமிரல், புழுங்கல், மிதவை, பருக்கை, பிசி, அன்னம் என்ற பெயர்கள் பொதுவாகத் தென்னிந்தியாவில் உள்ளன. இப் பெயர்கள் திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில் வழக்கில் இருப்பதை அறியலாம். சோறுடன் பிற உணவுப் பொருட்களைக் கலந்து சங்ககால மக்கள் சாப்பிட்டுள்ளனர் என்பதை இலக்கியங்கள் நமக்கு சுட்டிக் காட்டியுள்ளன. இவ்வாறு தமிழர்களால் போற்றப்பட்ட உணவுப் பண்பாடு இயற்கையுடனும், காலநிலைகளுடனும் இணைந்து இன்று அபார வளர்ச்சி அடைந்துள்ளதை அறியமுடிகிறது.

## விருந்தோம்பல்

பழங்காலத்தில் இல்லம் தேடி வரும் முன்பின் அறிமுகமில்லாதவர் 'விருந்தினர்' எனப்பட்டனர். தொல் காப்பியம் "விருந்து" என்பதற்குப் புதுமை என்ற பொருள் தருகிறது. அமிழ்தே கிடைத்தாலும் விருந்தினருக்கு கொடுத்து உண்பதே தமிழர் பண்பாடாகப் போற்றப்பட்டது. குழந்தை பிறப்பு, பெயர் வைத்தல், காதுகுத்தல், திருமண நிகழ்வு, வளைகாப்பு என எல்லா வற்றிலும் விருந்துவைத்தல் தமிழரின் விருந்தோம்பல் பண்பாட்டை பறைசாற்றகிறது. இலக்கியங்களில் விருந்தோம்பல் பற்றிய கருத்துகள் ஆங்காங்கே பொதிந்து உள்ளதைக் காணலாம்.

## இலக்கியங்களில் விருந்தோம்பல்

தமிழர்களின் தனித்துவமான அடையாளங்களில் முதன்மையானது விருந்தோம்பல் ஆகும். விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று இன்முகத்தோடு உணவிடுவது விருந் தோம்பலின் அடிப்படைப் பண்பு ஆகும். தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் விருந்தோம்பலை முதன்மை அறமாக எடுத்தியம்புகின்றன.

## திருக்குறளில் விருந்தோம்பல்

வள்ளுவர் இல்லறத்தின் அடிப் படைப் பண்பு விருந்தோம்பல் என்கிறார். ஆணும் பெண்ணும் இணைந்து விருந்தோம்பலில் ஈடுபடு கின்றனர். இது இல்லறத்தின் கடமையாகப் பார்க்கப்பட்டது. பொருளீட்டி அதனைக் காத்து இல்லறம் நடத்துதல் விருந்தினரைப் பேணி அவர்களைப் பாதுகாப்பதற்குத்தான் என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"
(திருக்குறள் - 81)

வந்த விருந்தினரைப் போற்றி இனிவரும் விருந்தினரை எதிர்பார்த்துக் காத்து இருக்கும் பண்பாளனை வானில் உள்ளோர் சிறப்பு விருந்தினராக ஏற்றுக்கொள்வர் என்கிறார் வள்ளுவர். இதனைப் பின்வரும் குறளின்வழி உணர்த்துகிறார்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"
(திருக்குறள் - 86)

சாகா மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் விருந்தினராக வந்தவரை வெளியே விட்டுத் தான் மட்டும் உண்பதைப் பண்பாளர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். இதனை,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"
(திருக்குறள் - 82)

என்னும் குறள்வழி அறியலாம். விருந்தினருக்கு முதலில் உணவு படைத்து பின் உள்ள உணவை உண்டு வாழும் பண்பாளன் நிலத்தில் விதைக்க தேவையா? அவன் சிறந்த நிலையை அடைவான் என வள்ளுவர் விருந்தோம்பலின் சிறப்பை முன்வைக்கிறார். விருந்தோம்பலில் உபசரிக்கும் பாங்கு முதன்மையானது. மலரினும் மென்மையானவர் விருந்தினர், அனிச்சம் மலர் முகர்ந்து பார்த்த அளவில் வாடும். அதுபோல் விருந்தினரை நோக்கும் தன்மையில் மாறுபாடு ஏற்பட்டால் அவர்களின் முகம் வாடிவிடும். இன்முக வரவேற்பு கூழாக இருந்தாலும் சிறப்பாக அமையும் என்பதை வள்ளுவர்,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"
(திருக்குறள் - 90)

என்ற குறளின்வழி எடுத்துக் காட்டி யுள்ளனர்.

## சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பல்

"விருந்தோடு புக்க பெருந்தோள் கணவரொடு
உடன்உறைவு மரீஇ ஒழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின் மனையுறை மகளிர்
மாதர்வாள் முகத்து மணித்தோட்டுக் குவளைப்
போது புறங்கொடுத்துப் போகிய செங்கடை
விருந்தின் தீர்ந்திலது ஆயின் யாவும்
மருந்தும் தரும்கொல்இம் மாநில வரைப்பு எனக்
கையற்று நடுங்கும் நல்வினை நாடுநாள்"
(இந்திரவிழாவூரெடுத்தகாதை -227-234

கணவரோடு கலந்திருந்த அருந்ததி போன்ற சிறப்பினை உடைய மனைவியர் ஊடிச் சினந்தனர். அவ்வேளையில் விருந்தினரால் அவள் மேலும் ஊடல் பாராட்ட இயலாது வந்திருந்த விருந்தினரை உபசரித்தாள். அழகிய ஒளிபொருந்திய கண்களில் கோபத்தால் தோன்றிய கருஞ்சிவப்பு விருந்தினரைக் கண்டதால் மறைந்துவிட்டது. அவளின் கோபம் நீங்காமல் போயிருந்தால் இந்த உலகில் அவளுயை கோபம் நீங்க வேறு ஒரு மருந்தைத் தர வேண்டி இருக்குமோ என கணவன்மார்கள் நடுங்கி நின்றதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இதன் மூலம் விருந்தோம்பலின் சிறப்பு வெளிப்படுவதைக் காணலாம். மேலும் கொலைக்களக்காதையில்,

**"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"**

**(கொலைக்களக்காதை- 71-73)**

என்ற பாடல்வரிகள் அறநெறி செல்வோர்க்கு உணவு, உடை அளித்து அவர்களைப் பேணிப் பாதுகாத்தல், நல்தவவாழ்வு மேற்கொண்டவர்களை வரவேற்று உபசரித்தல். மிகச் சிறப்புடையதாகக் கருதப்படும் விருந்தினர்களுக்கு உணவளித்து காத்தல் போன்ற விருந்தோம்பல் முறைகளைக் கோவலன் பிரிவினால் கண்ணகி செய்யாமலிருந்தாள் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## புறநானூற்றில் விருந்தோம்பல்

பகல்பொழுது கடந்து இரவுப் பொழுதில் தன் மனைவியுடன் வந்த முதியவரான பாணனை ஓர் இல்லத் தரசி மிகவும் இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பல் செய்வதாகப் புறநானூறு கூறுகிறது.

பழஞ்சாடியில் செம்மண் நிலத்து ஊற்றுநீர் உள்ளது. முற்றத்தில் தினைச்சோறும், சுட்ட முயல் இறைச்சியும் உள்ளது. அதனைத் தற்போது உண்ணுமாறும் தலைவன் வினை முடிந்து திரும்பிய பின் நிறைய பரிசு பெறலாம் எனவும் வறுமையுற்ற பாணனிடம் கூறுவதாகப் பின்வரும் பாடல் வரிகள் அமைகின்றன. இவ் வரிகள் விருந்தோம்பலின் மேன்மையைச் சிறப்பிக்கின்றன.

**"முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி**
**யாங்கஃ்கு உட்டென வறிது மாசின்று**
**படலை முன்றிற் சிறுதினை உணங்கல்**
**புறவம் இதலும் அறவும் உண்கெனப்**
**பெய்தற்கு எல்லின்று பொழுதே அதனால்**
**முயல்சுட்ட வாயினும் தருகுவேம் தந்து**
**ஈங்குஇருந் தீமோ முதுவாய்ப்பாண"**

**(புறநானூறு.319. 3-9)**

தம்மை நாடி வந்தவரை உபசரிக்க வேண்டிய கடமை தலைவனுக்கு உள்ளதால் தன்னுடைய வாளினைப் பணயமாக வைத்துத் தினையைக் கடனாகப் பெற்று பாணனின் பசியைப் போக்கிய தலைவனின் விருந்தோம்பல் செயலை,

**"நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**
**இரும்புடைப் பழவாள் வைத்தனன்"**

**(புறநானூறு.316. 5-6)**

என்ற வெண்ணாகனார் பாடல்வழி அறியலாம்.

## முடிவுரை

சங்ககால மக்களின் உணவுப் பண்பாட்டையும் உணவு முறைகளையும் இக்கட்டுரைவழி அறியலாம். மேலும் தம்மை நாடி வந்த புதியவர்களிடம் மென்மையான சொல் பேசி, அவர்களுடன் உள்ளம் கலந்து உறவாடி விருந்தோம்பி உள்ளனர் என்பதையும், மாற்றாரின் பசியை உணர்ந்து அதை நீக்குவதை தங்கள் கடமையென பண்பாடெனக் கொண்டு வாழ்ந்தனர் என்பதையும், விருந்தோம்பலில் தமிழர்கள் தலைசிறந்தவர்கள் என்பதையும் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது என்பதையும் இக்கட்டுரைவழி உணரலாம்.

## துணைநூல் பட்டியல்

புறநனூறு, கழக வெளியீடு, சென்னை.

மதுரைக்காஞ்சி, கழக வெளியீடு, சென்னை.

பெரும்பாணாற்றுபடை, கழக வெளியீடு, சென்னை.

நற்றிணை, கழக வெளியீடு, சென்னை.

திருக்குறள், பழிமேலழகர் உரை, பாரிநிலையம், சென்னை.

சிலப்பதிகாரம், கழக வெளியீடு, சென்னை.

# புறநானூற்றுப் புலவர்கள் பண்பாடு

**முனைவர் ஜெ. கோகிலா**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - 625 001.

உலகில், ஒரு நாட்டினுடைய மனித இனத்தின் சிறப்பையும், செம்மையையும் உயர்வையும், மேன்மையையும் உணர்த்த நாகரிகம் மற்றும் பண்பாடு என்னும் இரண்டு அளவுகோல்கள் பயன்படுத்தப் படுகின்றன. நாகரிகம் மற்றும் பண்பாடு ஆகிய இரண்டு தன்மைகளும் மனித இனத்தைப் பிற உயிரினங்களான விலங்கினம் பறவையினம், ஊர்வன, நீந்துவன, நெளிவன போன்ற வற்றினின்றும் முற்றிலும் வேறுபடுத்திக் காட்டப் பயன்படும் தன்மைகளாக இருந்து வருகின்றன. மனிதனின் அகநல ஆக்கமாக விளங்கும் அன்பு, அறிவு, ஆற்றல், இன்பம், இயல்பு, உணர்ச்சி எழுச்சி. வீரம், ஈவு. இரக்கம், அமைதி, அடக்கம், ஒப்புரவு, ஒழுக்கம், உண்மை, ஊக்கம், சினம், சீற்றம் போன்றவற்றின் மேன்மையையும், உயர்வையும் உணர்த்துவது ‘பண்பாடு’ என்று அழைக்கப்படுகிறது.

தமிழர் பண்பாட்டை 2500 ஆண்டுகளாகத் தமிழ்மக்கள் வளர்த்து வந்த இலக்கியங்களும், கவின் கலை களும் எடுத்துக் காட்டுகின்றன. எனினும் ஒருசில நூல்கள் மட்டுமே தமிழர் பண்பாட்டின் களஞ்சியங் களாகக் குறிப்பிடப்படுகின்றன. பண்டைத் தமிழ்நாட்டில் தமிழ்ப் பெருங்குடி மக்கள் நாகரிகச் சிறப்பிலும், பண்பாட்டு மேன்மையிலும் சிறந்து விளங்கினார்கள் என்பதைப் பழம்பெரும் வரலாற்றுச் சின்னங்களும், சங்ககாலப் பைந்தமிழ் இலக்கியங்களும் சான்று பகிர்கின்றன. சங்ககாலப் பைந்தமிழ்ப் புலவர் பெருமக்கள் சிறந்த மக்கட் பண்புகளைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். நல்லொழுக்கத்திற்கு உயர்ந்த மதிப்பு அளித்துள்ளார்கள் வீரத்தையும், தீரத்தையும் பெரிதும் பாராட்டியுள்ளார்கள். புகழையும், பெருமையையும் பாராட்டி உள்ளார்கள், நீதி, நேர்மை, நட்பு, பண்பு, வலிமை. வாய்மை போன்றவற்றைச் சிறப்பாக வலியுறுத்தியுள்ளார்கள். இவற்றை நம் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே எக்காலத்திலும் புலவர்கள் பாடியிருக்கின்றனர். தாம் வாழ்ந்த சூழலை மிகவும் சிறப்பான முறையில் எடுத்துக்காட்டியுள்ளனர். ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்கள். அவர்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றைத் தாம் இயற்றிய இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

## புறநானூற்றுப் புலவர்கள்

புறநானூற்றுப் பாடல்களைப் பாடிய புலவர்கள் 157க்கும் மேற்பட்டவர்கள் 120 பேர் பாட்டுடைத் தலைவர்கள். பாடியோர் ஒரே காலத்தினர் அல்லர். ஒரு குலத்தினர் அல்லர். ஒரு சமயத்தினர் அல்லர். ஒருகொள்கையினர் அல்லர். அவர்கள் பலவேறுபட்ட காலத்தவர்கள், கொள்கையுடையவர்கள். முச்சங்கப்

புலவர்களின் பாடல்களும் புறநானூற்றில் உள்ளது. புலவர்களில் அரசர்கள் உண்டு. குறுநில மன்னர்கள் உண்டு. பெண்பாற்புலவர்களும் உண்டு. பாடிய புலவர்களில் பலர் வள்ளல்களைப் பாராட்டிப் பாடியுள்ளனர். தங்கள் வறுமையினைத் தீர்க்கும்படி வள்ளல் களைப் புகழ்ந்துள்ளனர். எனவே அவர்களுடைய பாடல்களில் பல உண்மைகளும், மக்கள் பண்புகளும் அறியலாம்.

## புலவர்களின் தன்மான உணர்வு

புலவர்கள் பெரும்பாலும் மன்னர் களின் ஆதரவால் வாழ்ந்தவர்கள். பெருநிலக் கிழவர்களாகிய வள்ளல் களைப் பாடி அவர்கள் வழங்கிய பொருள்களைக் கொண்டும் வறுமை தீர்ந்து வாழ்ந்தார்கள். எனினும் தங்கள் அறிவை. நேர்மையை யாருக்கும் அடகு வைத்துவிடவில்லை. உண்மையை உரைப்பதற்கு அஞ்சியதில்லை. தன்மானத்துடனே தங்கள் வாழ்வை நடத்தி வந்தனர். இதனை பெருஞ் சித்திரனார் குமணனைப் பற்றிப் பாடியுள்ள பாடலின் வாயிலாக அறியலாம்.

**"உயர்ந்து ஏந்து மருப்பின் கொல்களிறு பெறினும்**
**தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென், உவந்து நீ**
**இன்புற விடுதியாயின், சிறிது**
**குன்றியும் கொள்வல், கூர்வேல் குமண"**
**(புறம். 159)**

சிறந்த, உயர்ந்த தந்தங்களையுடைய ஆண் யானைகள் கிடைப்பினும், அன்பின்றிக் கிடைக்கும் அப்பரிசிலை வாங்கிக் கொள்ளமாட்டேன். நீ மனம் உவந்து. மகிழ்வுடன் கொடுக்கும் சிறிய குன்றிமணியளவுள்ள பொருளானாலும் பெற்றுக் கொள்வேன் குமணனே, இதனை நீ உணர்ந்து கொள்வாயாக என்று கூறுவதிலிருந்து பெருஞ் சித்திரனாரின் தன்மான உணர்வு புலப்படுகின்றது.

பெருந்தலைச் சாத்தனார் என்னும் மற்றொரு புலவர் கடிய நெடுவேட்டுவன் என்னும் குறுநில மன்னனிடம் பரிசில் வேண்டிச் சென்றார். அவன் காலம் கடத்தினான் உடனே புலவர் அவன் வெட்கித் தலைகுனியும்படி தன் பெருந்தன்மையைக் கூறிவிட்டுத் திரும்பினார்.

**"முற்றிய திருவின் மூவராயினும்**
**பெட்பின்று ஈதல் யாம் வேண்டலமே"**
**(புறம்.205)**

நிறைந்த செல்வமுடைய மூவேந்தர் களாகட்டும், அவர்கள் எம்மிடம் அன்பில்லாமல் மதிப்பில்லாமல் எவ்வளவு பொருளைக் கொடுத்தாலும் அதை யாம் ஏற்க மாட்டோம் என்று பெருந்தலைச் சாத்தனார் கூறுவ திலிருந்து பெருந்தலைச் சாத்தனாரின் உயர்ந்த தன்மையினையும், தன்மான உணர்வினையும் அறியமுடிகிறது.

## புலவர்கள் மன்னர்கள் நட்பு

சங்ககாலத்தில் மன்னர்களிடையே புலவர்கள் மிகச்சிறந்த நட்புடன் இருந்தமையைப் புறநானூற்றுப் பாடல்கள் வழி அறியலாம் அதியமான் ஔவையார் நட்பு கபிலர் பாரியின் நட்பு கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையார் நட்பு என்று பல்வேறு நட்பு நிலைகளைக் குறிப்பிடலாம்.

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தை யாரைப் பற்றிக் குறிப்பிடுகையில் தென் திசையில் உள்ள பிசிர் என்னும் ஊரிலுள்ள என் நண்பன் எப்பொழுதும் என்னையே நினைத்து இருப்பான் அவன் நான் மகிழ்ச்சியுடன் இருந்த காலத்தில் வராவிட்டாலும் நான் துன்புறுகின்ற காலத்தில் தவறாமல் வருவான் என்ற

கருத்தை வெளிப்படுத்தும் விதமாக,

**"சுவைக்கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்
தாதெரு மறுகில் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்தயிர் கொளீஇ
பிசிரோன் என்பான் உயிர்ஓம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே"**
(புறம் 215)

என்ற பாடல் சிறப்பாக எடுத்துரைக் கின்றது.

## புலவர்கள் மன்னர்களின் தவறைத் திருத்தும் பண்பு

புலவர்கள் மன்னர்களைப் புகழ்ந்து பாடி பரிசில் பெறுவது மட்டும் அவர்களது தொழில் அல்ல. மன்னர்கள் தவறிழைக்கும் பொழுது அவர்களைத் தடுத்து நிறுத்தித் திருத்தும் பண்புடையவர்களாகவும் திகழ்ந்தனர். இவை பற்றிய குறிப்புகள் புறநானூற்றுப் பாடல்களில் மிகுதியும் காணப் படுகின்றது. சோழன் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் திருமுடிக்காரியின் குழந்தைகளை யானைக் காலில் இட்டுக் கொல்ல முயன்ற போது கோவூர்க்கிழார் என்னும் புலவர் தடுத்து நிறுத்தினார் என்பதனை,

**"நீயே புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
கேட்டனை யாயின் நீ வேட்டது
செய்ம்மே"** (புறம் 46)

என்று கிள்ளிவளவனிடம் நீ புறா அடைந்த துன்பம் மட்டுமின்றி மற்ற உயிரினங்களின் துன்பத்தையும் களைந்த சிபி சக்கரவர்த்தியின் வழித்தோன்றல். ஆனால் இவர்களோ தம்மிடத்தில் உள்ளவற்றைப் பகிர்ந்து உண்ணும் இரக்க குணம் உள்ளவர்களின் மரபில் வந்தவர்கள் ஆவர். அதனால் இவர்களை விட்டு விடுவாயாக எனப் பாடுவதாக அமைந்துள்ளது.

## புலவர்களின் சமாதான முயற்சி

நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்பதே புலவர்களின் விருப்பம் புலவர்களில் பலர் வறுமையில் வாடினவர்களாக இருப்பினும் மன்னர்கள் சண்டை சச்சரவின்றி ஒன்று பட்டு வாழ்வதற்குப் பாடுபட்டு வந்தனர். அதியமான் நெடுமான் அஞ்சி தகடூரை ஆண்ட சிற்றரசன் ஔவையின் ஆருயிர் நண்பன் புகழைக் கண்டு பொறாமை கொண்ட தொண்டைமான், அதியமானுடன் போர் செய்ய கருதினான். இதனை அறிந்த அதியமான் ஔவையாரிடம் கூறினான். ஔவையார் போர் நிகழாமல் தடுக்கும் பொருட்டுச் சமாதானத் தூதராகத் தொண்டைமானிடம் சென்ற நிகழ்வினை

**"இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டிக்
கணதிரள் நோன்காழ் திருத்தி, நெய்யணிந்து
கடியுடைவியன் நகர் அவ்வே; அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றுஇல மாதோ; என்றும்
உண்டாயின் பதங்கொடுத்து
இல்ஆயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எம் கோமான் வைந்நுதி
வேலே"** (புறம். 95)

இப்பாடல் வழி அறியலாம். இதுவே ஔவையாரின் அறிவுரைப் பாட்டு. அதியமான் சண்டை செய்வதில் வல்லவன். உனக்குப் போர் பழக்கம் இல்லை. ஆனால், அதியமான் மக்களின் அதரவைப் பெற்றவன். உனக்கு மக்கள் ஆதரவு இல்லை போரில் நீ இறங்கினால் தோல்வியடைவாய் என்ற கருத்தை இப்பாடலில் காணலாம்.

சண்டையைக் காட்டிலும் சமாதானமே நாட்டுக்கு நலந்தரும். மக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்வளிக்கும் என்பதே புலவர்களின் கருத்து. இக்

கருத்தையே வலியுறுத்த முயன்றார்கள் என்பதனைப் புறநானூற்றுப் பாடல்கள் வழி உணரலாம்.

### புலவர்களின் ஒற்றுமைப் பண்பு

ஒருவரை ஒருவர் மதித்து வாழ்ந்த பெருமை உடையவர்களாய் புலவர்கள் திகழ்ந்தனர். பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் முதிரமலைத் தலைவன் குமணனிடம் சென்று. கடையெழு வள்ளல்கள் அனைவரும் மாய்ந்த பின் அவ்வெழுவரும் தாங்கிய ஈகைச் செந்நுகத்தினை அவன் ஒருவனே தாங்கியதைக் கூறினார். அப்பொழுது,

> **"திருந்து மொழி மோசி பாடிய ஆயும்"**
> (புறம். 158)

என்கிறார். ஏணிச்சேறி முடமோசியார் அவர் திருந்திய மொழியாளர் எனப் பாராட்டுதலை இப்பாடல் வரி மூலம் அறியலாம்.

எருமை நாட்டை ஆண்ட இருங்கோவேளிடம் பாரி மகளிரை அழைத்துச் சென்று அவர்களை மணந்து கொள்ளுமாறு கபிலர் வேண்டியபோது அவன் இகழ்ந்தான். அப்போது கபிலர், உனது முன்னோர் ஒருவன் கழாத்தலை யாரை இகழ்ந்தமையால். சிற்றரையம், பேரரையம் என்னும் வளஞ்சான்ற பகுதிகள் பயனற்றுப் போயின என்று எடுத்துக் கூறினார். இதனை,

> **"நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்**
> **புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலையை**
> **இகழ்ந்ததன் பயனே இயல்தேர் அண்ணல்."**
> (புறம். 202)

என்ற பாடல் வழி அறியலாம். இக் கபிலரை அக்காலப் புலவருலகம் பாராட் டியது போல் யாரையும் பாராட்ட வில்லை. மாறோக்கத்து நப்பசலையார்.

> **"பொய்யா நாவிற் கபிலன் பாடிய**
> **மையணி நெடுவரை"** (புறம். 174)

எனக் காரியின் மலையைப் புகழ்வார். அதியமான் கோவலூரை வென்றபோது அவனை ஔவையார் பாராட்டும்போது,

> **"அன்றும் பாடுநர்க் கரியை இன்றும்**
> **பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ**
> **முரண்மிகு கோவலூர் நூறிநின்**
> **அரணடு திகிரி யேந்திய தோளே"**
> (புறம் . 99)

என்று கூறிப் பாராட்டியுள்ளதனைக் காணலாம். இதன் மூலம் ஔவையார் பரணர் மீது கொண்டிருந்த மதிப்பினை உணரமுடிகின்றது.

### முடிவுரை

பண்பாடு இல்லாதவனைக் காட்டுமிராண்டி என்கிறோம். ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும், தன்னைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும் என்பார் மாத்யூ அர்னால்டு, அவ் வகையில் சங்கப் புலவர்கள் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமை கின்ற உள்ளப் பாங்கினையும், சிறந்த சிந்தனைகளையும் உலகுக்கு உயரிய குறிக்கோள்களையும் சுட்டிக்காட்டும் தன்மைப் படைத்தவர்களாகவும். வறுமையிலும் செம்மையைப் போற்றிய பெருமை உடையவர்களாகவும் விளங்கியுள்ளனர்.

# ஈரம் கசிந்த நிலம் - நாவலில் பண்பாடு

**முனைவர் த.மு.ஆனந்த்**
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும் அறிவியல் கல்லூரி மகளிர்,
மல்லுப்பட்டி, பாலக்கோடு - 636805.

**இரா.சக்தி,**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்),
தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும் அறிவியல் கல்லூரி மகளிர்,
மல்லுப்பட்டி, பாலக்கோடு - 636805.

## முன்னுரை

பண் + பாடு = பண்பாடு ஆகும். ஒரு குழுவின் அல்லது தனிப்பட்ட மனிதனின் பழக்க வழக்கங்கள், வாழ்வியல் நெறிமுறைகளின் தன்மையைப் பற்றி குறிப்பது பண்பாடு ஆகும். நம் சிந்தனை மற்றும் செயல் வடிவத்தின் முழுமையான பிரதிபலிப்பே பண்பாடு. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்னும் கணியன் பூங்குன்றனின் பாடல்வரி தமிழர்களின் மிகச்சிறந்த பண்பாட்டிற்கு உதாரணம் ஆகும். இந்தியப் பண்பாடானது மனித குலத்தின் மிகவும் பழமையான பண்பாடாகும். தமிழர்களுடைய பண்பாட்டில் ஒருவனுக்கு ஒருத்தி, விருந்தோம்பல் என்ற பண்பாடானது மிகச்சிறந்த பண்பாடு ஆகும்.

நட்பு, காதல், வீரம், உறவுகள், திருவிழாக்கள், உணவு, தொழில்சார் தெரிவுகள், சமய நம்பிக்கைகள், பயன்படுத்தும் கருவிகள் ஆகியன பண்பாட்டின் உட்கூறுகள் ஆகும். இந்த வகையில், சி.ஆர்.ரவீந்திரனின் 'ஈரம் கசிந்த நிலம்' என்னும் நாவலில் இடம்பெறும் நட்பு, காதல், திருவிழா சார்ந்த பண்பாட்டு கூறுகளை இக்கட்டுரை வாயிலாக விளக்கலாம்.

## நட்பு

நட்பு என்பது எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லாமல், இரத்த சொந்த பந்தங்கள் இன்றி, ஒருவர் மற்றொருவரின் மீது கொள்ளும் நம்பிக்கை மற்றும் அன்பு ஆகும். வயது, மொழி, இனம் மற்றும் பாலினப் பாகுபாடு இன்றி இருவர் தங்களுக்குள் புரிந்துகொள்ளும் 'அனுசரித்தலே' நட்பு எனலாம்.

நட்பினை, ஆண் – ஆண் நட்பு, ஆண் – பெண் நட்பு, பெண் – பெண் நட்பு நட்பு, முதியவர் – இளையவர் நட்பு என வகைப்படுத்தலாம். நட்பில் எந்தவொரு எதிர்ப்பார்ப்பும் இருக்காது. பணம், பதவியை பார்த்தும் பழகாத உறவாக நட்பு இருக்கும்.

சங்க இலக்கியப் புறநானூற்றில் அதியமான் – ஔவையாரின் நட்பு, கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார் நட்பு, பாரி – கபிலர் நட்பை நட்பின் இலக்கணமாக எடுத்துக்கொள்ளலாம். வள்ளுவர்,

**"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கோட்டின்றி**
**ஒல்லும்வாம் ஊன்றும் நிலை"** (குறள், 789)

என்னும் திருக்குறளின் வழி நட்பின் சிறப்பை உணர்த்துகிறார். இதனடிப் படையில், ஈரம் கசிந்த நிலம் நாவலில், தங்கப்பக் கவுண்டர் – பெரியசாமி கவுண்டர் ஆகியோரின் நட்பை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

"தங்கப்பக் கவுண்டர் படுத்த படுக்கையாகக் கிடப்பதாக சேதி வருகிறது. போய்விட்டு வரவேண்டும்

என்று பெரியசாமி கவுண்டர் கிளம்பிய போது குப்பனூரிலிருந்து எழவு சேதி கொண்டு வந்தான் தருமன். அப்படியே கிளம்பி போனவர், திரும்பி வந்து அசதியில் படுத்துக் கொண்டார். பெரியசாமி கவுண்டருக்கு, தங்கப்பக் கவுண்டரை இரண்டு நாளைக்கு ஒருமுறை பார்க்காவிட்டால் தூக்கமே வராது. இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்துதான் சோழந்துறைக்குப் போவார்கள், வருவார்கள். அங்கு நடக்கும் வம்பு, தும்புகளையும் அவர்களே சேர்ந்து தீர்த்து வைப்பார்கள். இவர்களுடைய நட்பு பிரிக்க முடியாத நட்பு. எல்லா வேலைகளையும் சேர்ந்தே செய்வார்கள். இத்தகைய சிறப்புமிக்க நட்பைக் கொண்டவர்களாக தங்கப்பக் கவுண்டரையும், பெரியசாமி கவுண்டரையும் இந்நாவலில் ஆசிரியர் காட்டியுள்ளார்.

**காதல்**

உயிரினங்களுக்கிடையே ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, இணைப்பிரியாத அன்பு, அக்கறை, உணர்வு, சேர்ந்து வாழவேண்டும் என்ற ஒரு ஆசை தான் காதல் என்று கூறுவர். காதல் என்பது வலுவான ஈர்ப்பு மற்றும் உணர்ச்சி ரீதியான இணைப்பின் உணர்வைக் குறிக்கிறது.

இரு மனங்கள் ஒன்றுப்பட்டு, ஒற்றைத் தன்மைக் கொண்ட அன்பாக பரதிபலிப்பது காதல் ஆகும். அந்த காதல் சாதி – மதம், ஏழை – பணக்காரர் என்ற எவ்வித எதிர்ப்பார்ப்பும் இன்றி, ஒருமித்த கருத்துக்களால் ஏற்படுவது ஆகும். தமிழ் இலக்கியங்கள் இரண்டு முக்கிய மையக் கருப்பொருளாக கொண்டு இயற்றப்பட்டவை. அவை, காதல், வீரம் என்பனவாகும். காதலை மையமாகக் கொண்டது அக இலக்கியம் என்றும், வீரத்தை மையமாகக் கொண்டது புற இலக்கியம் என்றும் வரையறையைக் கொண்டனர். அவற்றில் காதல் என்ற அகவாழ்க்கையை அதிகமான புலவர்கள் பாடியுள்ளனர். காதலின் சிறப்பைப் பற்றி,

**“மால்வரை இழிதரும் தூவென் அருவி**
**கல்முகைத் ததும்பும் பனிமலர்ச் சாரல்,**
**சிறுகுடிக் குறவன் பெருந்தோள் குறுமகள்**
**நீரோரன்ன சாயல்,**
**தீயோரன்ன என் உரன் வித்தன்றே”**

**(குறுந்தொகை, *95*)**

என்னும் குறுந்தொகைப் பாடல், காதல் கொண்ட தலைவனும், தலைவியும் களவொழுக்கத்தில் இருக்கும்போது யாருக்கும் தெரியாமல் சந்திப்பதும், அவர்களுக்குத் தோழி உதவுவதும் என்றாக அவர்களின் காதல் வாழ்க்கையை எடுத்துரைக்கிறார். இதுபோன்றதான காதல் வாழ்க்கையை இந்நாவல் ஆசிரியரும் ஈரம் கசிந்த நிலம் நாவலில் இடம்பெறும் கண்ணுசாமி, அம்மணி என்னும் காதல் பாத்திரங்களின் வாயிலாக எடுத்துரைக்கிறார்.

‘மாலை மயங்க இன்னும் நேரமிருக்கிறது. கூதல் காற்று கொஞ்சம் வேகமாக வீசியது. அம்மணியிடம் என்ன பேசுவதென்றே தெரியவில்லை கண்ணுசாமிக்கு. அவளைக் கடைசியாக பார்த்து மூன்று மாதங்கள் ஆயிற்று. கடைசியாக காளி கோயில் சாட்டிய கடைசி நாளில் திணைமாவைக் கையில் திணித்துவிட்டு போனவளை அப்போது தான் பார்த்தான் கண்ணுசாமி.

கண்ணுசாமியை பார்த்த அம்மணி, ‘என்னையும் சைக்கிளில் உட்கார வைத்துகொண்டு, ஊருக்கிட்ட எறக்கியுட்டுரு’ என்று கேட்க, கண்ணு சாமி அது அவ்வளவு சரியாகத் தோன்ற வில்லை என்று இருவரும் நடந்தே சென்றார்கள். வழியில் நடந்து போகும்போது கண்ணுசாமியிடம் அம்மணி நீ யார் என்று கேட்க, அதற்கு

கண்ணுசாமி நேரம் வரும்போது கூறுகிறேன் எனப் பதில் அளித்து சென்றான்.

அதற்குப் பின் இருவரும் வெள்ளிக் கிழமை தோறும் கோயிலில் சந்திப்பது உண்டு. அப்போது பேசி இருவரும் நட்புக் கொண்டனர். ஒருநாள் கண்ணுசாமி தான் யார் என்பதை கூறி, இதை யாரிடமும் நீ கூறக்கூடாது என்றான். அதற்கு அம்மணியும் 'என் உசுரே போறதுன்னாலும் ஒரு வார்த்தை வாயிலிருந்து வராது' என்றாள்.

"வெத்தலெ போடுவியா?"

"இல்லே"

"என்னய்யா, ஆம்பளெ நீ? வெத்தலெ போடாம.

இந்தா! நானே மடிச்சுக் குடுக்கறேன், போட்டுப்பாரு! எப்படி சிவக்குதுன்னு"

அம்மணி மடித்து கொடுத்த வெற்றிலையை மென்ற கண்ணுசாமிக்கு நாக்கும் கடைவாயும் சுரீரென்று எரிந்தது. உடனே வெற்றிலையை வேகமாக துப்பிவிட்டு, அம்மணியின் முகத்தைப் பார்த்தான் கண்ணுசாமி.

அம்மணி கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்தாள். கண்ணுசாமிக்கு கண்களில் எரிச்சலால் நீர் பதுங்கியது.

"யோவ்! இனிமே அப்படிச் செய்யமாட்டே!

எப்பவும் என் நெனப்பு ஒனக்கு இருக்கட்டும்னுதா இப்படிச் செஞ் சேன், மனசுல தப்பா வெச்சுக்காதே, வெள்ளிக் கிழமெ காளி கோவிலுக்குப் பொழுதிருக்கறப்பவே வந்துரு! வருவியா?"

"ம்"

"வாயெத் தொறந்து சொல்லுய்யா"

"வர்றேன்! வர்றேன்! போதுமா?"

நீண்ட நாட்களுக்குப் பின் சந்தித்தவர்கள், தங்களின் எதிர்ப்பாரா சந்திப்பின் மூலம், இருவர் இடையிலும் காதல் மலர்கிறது. தங்களின் காதலின் சோதனையாக அம்மணி வெற்றிலைப் போட தெரியாம கண்ணுசாமிக்கு கொடுத்து, அதன் மூலம் தங்கள் காதலின் ஆழத்தை அறிகிறாள். காதலுக்காக எதையும் செய்ய தயங்காத பாத்திரமாக கண்ணுசாமி வருகிறான். இந்த இருவரின் காதல் வெளிப்பாடுகளை ஆசிரியர் இந்நூலில் வெளிக்காட்டியுள்ளார்.

## திருவிழாக்கள்

மரபார்ந்த மக்களின் அடிப்படை பண்பாடாகத் திகழ்வது திருவிழாக்களே ஆகும். திருவிழாக்கள் ஒவ்வொரு சமூக மக்களின் நம்பிக்கை சார்ந்த பண் பாடாக இருக்கிறது. ஒரு சமூகத்தின் புலப்பாட்டுப் பண்பாடாக இருப்பவை விழாக்களே. இந்த புலப்பாட்டு பண்பாடானது மக்களின் உணர்வுகள், கருத்துகள், எண்ணங்கள், நடத்தை முறைகள் ஆகியவைகளின் வாயிலாக வெளிப்படுகின்றன. அனைத்து இனத்தை சேர்ந்த மக்களும் சேர்ந்து கொண்டாடப்படுவது திருவிழா ஆகும்.

பழங்காலத்தில் இந்திர விழா மிகச்சிறப்பாக கொண்டாடப் பட்டுள்ளது. இந்த விழாவில் தேவர் களும், மன்னர்களும், அரசர்களும், பல்லாயிரக்கணக்கான மக்களும் கலந்து கொண்டுள்ளனர் என்பதை இலக்கியங்களின் வழி அறியலாம். விழாக்கள் மக்களுக்கு புத்தாக்கத்தையும், புத்தெழுச்சியையும், பெருமகிழ்ச்சியையும் அளித்தன எனலாம். அதனால், விழாவினை உள்ளூர் மக்களின்றி, சுற்று வட்டார மக்களும் திரண்டு வந்து கண்டு களித்தனர். பழம்பெருமைகளை கொண்ட மூதூர் விழாவில் உள்ளூர் மக்களும், வெளியூர் மக்களும் அதிகளவில் கூடியதைப் பதிற்றுப்பத்தின் பின்வரும்

பாடலடிகளின் வழி அறியலாம்.

"முழவு இமிழ் மூதூர் விழவுக் காணூஉ பெயரும்" (பதிற். 30:20)

என்றும் நற்றிணையில்,

"ஆடு இயல் விழவின் அழுங்கல் மூதூர்" (நற். 10:2)

என்றும் பல சான்றுகளை கொண்டு, பண்டைய காலங்களில் மக்கள் திருவிழாக்களை பெருமகிழ்ச்சியாக கொண்டாடியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. இதே போன்றதான திருவிழாவை பற்றி, ஈரம் கசிந்த நாவல் வழி ஆசிரியர் எடுத்துரைப்பதை அம்மணி என்ற பாத்திரத்தின் மூலமாக காணலாம்.

"வாழைப் பூ தலையில் இடிக்கிற மாதிரி பச்சைப் பந்தலுக்கு முன்னால் நின்றிருந்தாள் அம்மணி. ஊர்ப் பெண்களும், உறவுகளும் குழந்தைகளோடு அங்கும் இங்குமாகப் போய் வந்தார்கள். அவர்களின் கலகலப்பு சொல்லி முடியாது. போதாதற்கு குமரன் சவுண்ட் சர்வீஸ் குழாய்கள் அலறிக்கொண்டிருந்தன. திடிரென பாப்பாத்தியும், பவானியும் அம்மணியையும் கும்மியடிக்க அழைத்தனர். பெரியசாமி கவுண்டர் போங்க பெண்டுகளா! என்று சொன்னதும், பெண்கள் கூடி கும்மி யடிக்க ஆரம்பித்தனர். அதில் அம்மணி வட்டத்திற்கு நடுவில் நின்று பாடினாள்.

"மண்குதிரை ஏறி வந்தா மாமன்மவெ"

"ஆமா மாம மவ"

"மரிகொழுந்து வாங்கி வந்தா மாமன் மவெ"

"ஆமா மாம மவ"

"மல்லிகைப்பூ எங்கேயின்னா அத்தே மவ ஆமா அத்தே மவ"

"மனசுக்குள்ளே இருக்குதுன்னா அத்தே மாவ"

"ஆமா மாம மவ"

"மனசவுட்டு எடுக்கச் சொன்னா அத்தை மவ"

"ஆமா அத்தெ மவ"

என்றவாறு திருவிழாவில் பெண்கள் அனைவரும் சேர்ந்து கும்மியடித்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர். திருவிழாக்களில் பலவகையாக ஆட்டங்கள் ஆண் களாலும், பெண்களாலும் நிகழ்த்தப் பெறும். அந்த வகையில் இந்த நாவலில் அந்த மக்களின் விழாக் கொண்டாட்டத்தை ஆசிரியர் அழகுற எடுத்துரைக்கிறார்.

## முடிவுரை

தமிழர்கள் பண்பட்ட வாழ்வினையே வாழ்ந்துள்ளனர் என்பதை அவர்களின் பண்பாடுகளின்வழி அறிந்துகொள்ளலாம். தமிழர்களின் பண்பாட்டில் சிறந்து விளங்கியது, விருந்தோம்பல் பண்பாடும், அறப் பண்பாடும் ஆகும். நட்பு, காதலில் பண்பாடு மீறாமல் இருந்து வந்துள்ளனர் என்பதை பண்டைய இலக்கியங்களின் வாயிலாகவும், தற்போதைய நவீன இலக்கியங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம். மரபு மாறாத நவீன இலக்கிய ஆசிரியரான சி.ஆர்.ரவீந்திரன் அவர்கள் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளை தம் நாவல்கள் வாயிலாக எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

## சான்றாதார நூல்கள்


1. பக்தவத்சல பாரதி, பண்டைத் தமிழ்ப் பண்பாடு
2. ஆ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும்
3. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள்
4. இராமரத்தினம், குறுந்தொகை உரை
5. மு.வ., திருக்குறள் உரை
6. சி.ஆர்.ரவீந்திரன், ஈரம் கசிந்த நிலம் (நாவல்)

# சங்க இலக்கியத்தில் இசைக்கலை

– முனைவர் தி.சங்கரநாராயணன்
உதவிப்பேராசிரியர், வீணைத்துறை
ஸ்ரீசத்குரு சங்கீத வித்யாலயம் இசைக்கல்லூரி,
மதுரை

## முன்னுரை

கலை என்பது மனித இனத்திற்கான அழகியல் உணர்வாகும். இக்கலை உணர்வு, உள்ளத்தால் உணர்ந்து உருவாக்கப்படுவது. உணர்வுகளுடன் கூடிய கற்பனை உணர்வே கலை யாகப் பிறக்கிறது. மனிதனுள் தோன்றும் கலைப் படைப்புத்திறனே சமூகத்தின் பண்பாடாகவும் உருப்பெறுகிறது. மக்களின் வாழ்வை வளப்படுத்தியவைகளில் ஒன்று கலைச்செல்வம் ஆகும். அக்கலைச் செல்வங்கள் சங்க கால மக்களின் வாழ்வோடு தொடர்புடையதாக இருந்தது. மனித மனத்தில் உதித்த கலைத் திறனே இசைக்கலையாக, கட்டிடக் கலையாக, ஓவியக்கலையாக, சிற்பக் கலையாக உருப்பெற்றது. இவ்வாறு கால வளர்ச்சியில் கலைகளும் படிப்படியாக வளர்ந்த தோடு, மனிதப்பண்பாட்டையும் வளரச்செய்தது. இப்பின்னணியில் சங்க காலத்தில் இசைக்கலையும், அக் கலையானது அவர்தம் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் காணப் படுகிறது.

## இசைக்கலை

பறவைகள், விலங்குகளின் ஒலிகளைக் கேட்ட மனிதன் தானும் அதுபோலவே ஒலியினை எழுப்பினான். அவ்வொலிகளை முறைப் படுத்தியபொழுது இசை தோன்றியது. சங்ககால மக்களின் வாழ்வியல் பற்றிய செய்திகளை எடுத்துரைப்பது இலக்கியங்கள். இது காதலையும், வீரத்தையும் எடுத்துரைப்பதோடு மட்டு மின்றி கலையையும் வெளிப்படுத்துகிறது.

மக்களின் இன்ப துன்ப உணர்விற்கு அடிப்படையாக திகழ்வது இசையாகும். இசையினைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது "துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா"[1] என்று பாரதிதாசன் தன் கவிதையின் வழி வெளிப்படுத்துகிறார். "தமிழ் இசை உள்ளத்தோடு உணர்வோடு வாழ்க்கையோடு பொருந்தியது. அதனால் இது இசை என்னும் பெயரைப் பெற்றது"[2] என்று குடந்தை ப.சுந்தரேசனார் கூறுகிறார்.

சங்காலத்தில் மக்கள் விளை யாட்டு, உழைப்பு, நோய், வறுமை பொழுதுபோக்கு ஆகியவற்றில் பண் இசைத்து மகிழ்ந்துள்ளனர். நிலத்திற்கேற்ற வகையில் பண்வகைகள் இருந்ததை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

## பண்

பண் என்பது இசையோடு நெருங்கிய தொடர்புடையது. இனிமை யான இசையைத் தருவது பண். ஒலி உருவ அமைப்பு என்று அழைக்கப்படுவது பண். இத்தகைய பண் பற்றி, "பாவோடு இணைதல் இசை என்றார்

பண்ணென்றார் மேவார் பெருதான எட்டாலும் பாவாய் எடுத்தல் முதலா இருநான்கும் பண்ணப் படுத்தமையால் பண் என்று பார்" (பஞ்ச.மரபு. வெண்பா. 50) என்ற பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. பாடலின் பொருள் அசை, சீர் அளவோடு பொருந்தி எட்டு வகை மெய்ப்பாடுகளுக்கேற்பப் பண்கள் பொருந்தியிருக்க வேண்டும்.

இசைக்குரிய நரம்புகளாக குரல், துத்தம், கைக்கிளை, உழை, விளரி, தாரம் என்னும் ஏழு நரம்புகளைப் பற்றி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, நிலங்களில் காலை, மாலைப் பொழுதுகளில் பண்கள் வாசிக்கும் வழக்கம் இருந்துள்ளன. பெரும் பண்களாகக் குறிஞ்சிக்குக் குறிஞ்சிப்பண், முல்லைக்குச் சாதாரிப்பண், மருதத்திற்கு மருதப்பண், பாலைக்குப் பஞ்சுரப்பண் இருந்தன என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

மேலும் நைவளம், ஆம்பல், சீகாமரம், படுமலை, விளரி, நட்டராகம், காஞ்சிப்பண்களும் வழக்கில் இருந்துள்ளன. சங்க இலக்கியத்தில் பரிபாடல் பண்ணோடு பாடப் பட்டுள்ளது. இவற்றில் உள்ள 24 பாடல்களில் 11 பாடல்கள் பாலை என்னும் பண்ணிலும், ஐந்து பாடல்கள் நோதிறம் என்னும் பண்ணிலும், ஐந்து பாடல்கள் காந்தாரம் என்னும் பண்ணிலும் பாடப்பட்டுள்ளன.

சங்ககால மக்கள் காலை, மாலை, பகல், இரவு நேரங்களில் பண்களைப்பாடி மகிழ்ந்தனர். விடியற் காலையில் மருதப்பண்ணும், மாலையில் செவ்வழிப்பண்ணும், நள்ளிரவில் குறிஞ்சிப்பண்ணும், பகற்காலத்தில் நைவளப்பண்ணும் இசைத்த செய்திகள் சங்க இலக்கியத்தின் வழி புலனாகின்றது.

### குறிஞ்சிப்பண்

குறிஞ்சிப்பண் மலைகளில் வாழ்ந்த மக்கள் பாடும் இசை. இப்பண் தெய்வங்கள் மற்றும் மக்களை மகிழ்விக்கும் கருவியாக இருந்துள்ளது. இரவில் ஊர்க்காவல் புரியும்போது குறிஞ் சிப்பண்ணானது பாடப்பட்டுள்ளது.

மகளிர் தங்களின் இன்பத்தைத் தெரிவிக்கக் குறிஞ்சிப் பண்ணைப் பாடியுள்ளனர் என்பதை,"மகளிர் யாம நல்யாழ் நாப்பணின்ற முழவின் மகிழ்ந்தனர் ஆடிக் குண்டுநீர்ப்" (ம.கா.583–585) என்று மதுரைக்காஞ் சியின் அடிகள் குறிப்பிடுகின்றன. இசையின் ஓசைக்கேட்டு விலங் கினங்களும் மயங்கியதை அகநானூற்றில், "ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட" (அகம்.102) என்ற பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. ஒரு நிலத்திற்குரிய பண்ணை மற்றோர் நிலத்தினரும் பாடியுள்ளதை, "குறிஞ்சிப் பரதவர் பாட" (பொருநர்.215) என்ற பாடலடி எடுத்துரைக்கிறது.

குறிஞ்சி நிலப்பெண் பாடிய குறிஞ்சிப் பண்ணைக் கேட்டு தன் உள்ளத்தைப் பறிக்கொடுத்த யானை, தின்று கொண்டிருந்தத் தினைக்கதிரை உண்ணாமல் நின்றதை புலப்படுத்துகிறது.

### காஞ்சிப்பண்

காஞ்சிப்பண் பேயோட்டப் பயன்படுவது. விழுப்புண் பட்டவர்களைப் பேய்கள் நெருங்காமல் இருக்க இப்பண் பாடப்பட்டதை, "வேம்பு சினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும்" (புறம்.296–1) என்று வெள்ளைமாறன் இயம்புகின்றார்.

### மருதப்பண்

சங்க காலத்தில் காலைப்பொழுதில் பாடப்படும் பண் மருதப்பண். வைகை

ஆற்றில் பாணர்கள் மருதப்பண்ணைப் பாடினர். அவர்கள் பாடப்பாட மகளிரும் மைந்தரும் ஊடியும், கூடியும், தேடியும், சிதைந்தும் சூடியும், தொழுதும் ஆடி மகிழ்ந்ததால் வையை எச்சிலாயிற்று (பரி.2.69). பாணர்கள் மருதப்பண்ணைப் பாடும் நிகழ்வினை, "சீரினது கொண்டு நரம்பனி தியக்கி யாழோர் மருதம் பண்ணக் காழோர்" (ம.கா. 656–657) என்ற பாடல் அடிகள் கூறுகின்றன. மருதப்பண் பாடப்படும் நேரம் குறித்து மதுரைக்காஞ்சி விளக்கு கிறது.

## ஆம்பற்பண்

'ஆம்பற்பண்' என்பது இரங்கற் ஓசையில் பாடப்படும் பண். இப்பண் மக்களின் துன்பங்களை வெளிப்படுத்தும் விதமாக இருந்துள்ளது. சங்க காலத்தில் ஆநிரைகளை ஓட்டி வீடு திரும்புவதற்கு ஆம்பற்பண்ணின் இரங்கற் இசையானது ஒலிக்கப்பட்டுள்ளது. இப்பண்ணினைப் பற்றி நற்றிணையில், "பெருங்களத்து இயவர் ஊதும் ஆம்பலங் குழலின் ஏங்கிக்" (நற்.113) என்ற பாடல் அடிகள் கூறுகின்றன.

தலைவி தன் துன்பத்தின் காரணமாக வாய்விட்டு அழுவது, ஆம்பற்பண்ணில் புல்லாங்குழல் ஒலியெழுப்புவது போல் இருந்துள்ளதை உணர்த்துகின்றது. மாலை நேரத்தில் ஆயர்கள் ஆம்பற்பண்ணில் இனிய குழல் இசை எழுப்பி ஆநிரைகளை ஓட்டி வீடு வருவதை, "பாம்பு மணிஉமிழ்பல் வயின் கோவலர் ஆம்பல்அம் தீங்குழல் தெள்விளி பயிற்ற" (குறி.221–222) என்று கபிலர் கூறுகின்றார்.

## விளரிப்பண்

நரிகளை ஓட்ட விளரிப்பண் பயன்பட்டுள்ளது. இது பறவை, விலங்குகளிடமிருந்து மனிதனைக் காக்கப் பயன்பட்டது. இதனை, "விளரிக் கொட்பின் வெள்நரி கடிகுவென்" (புறம்.291–4) என்று பரணர் பாடியுள்ளார். இப்பண் இரங்கற்பண் என்றழைக்கப்படுகிறது. இது நெய்தலுக்கு உரித்தான பண்ணாகும். குதிரைகள் பூட்டப்பெற்ற தேரில் உள்ள மணிகளின் ஒலி போன்று விளரிப்பண் இசை இருந்துள்ளதை,"சிறுநா ஒண்மணி விளரி ஆர்ப்பக் கடுமா நெடுந்தேர் நேமி போகிய" (குறுந்.336.3–4) என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

## படுமலைப்பண்

படுமலைப்பண் என்பது பாலை நிலத்தில் பாடப்படும் பண். இப்பண் சிறிய யாழினைக் கொண்டு வாசிக்கப்படுவதை, "படுமலை நின்ற பயம்கெழு சீறியாழ்"(புறம்.135.7) என்று புறநானூறு குறிப்பிடுகிறது. படுமலைப் பண்ணின் ஒலியினைப்பற்றி குறிப்பிடுகையில் "படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்பு எழீஇ அன்ன உறையினை முழவின்" (நற்.139) மழை பெய்கின்ற பொழுது எழும் ஒலியைப் போன்று உள்ளதை வெளிப்படுத்துகின்றன என்று நற்றிணைப் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

## நட்டராகம்

நைவளம் என்பது நட்டராகம் என்னும் பண்ணைக் குறிக்கும். இப் பண்ணானது பாலை யாழில் வாசிக்கப் பட்டதை, "நைவளம் பூத்த நரம்பியைச் சீர்ப்பொய்வளம் பூத்தன பாணாநின் பாட்டு" (பரி.18–20–4) என்னும் பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. நைவளப் பண்ணை, பாலையாழின் முறையறிந்து பாணர்கள் வாசித்தனர்.

## முடிவுரை

மேற்கண்ட கருத்துக்களிலிருந்து சங்ககாலத்தில் இனிமையான இசை யினைப் பண் என்றழைத்தனர். மக்கள் காலை, மாலை, பகல், இரவு நேரங்களில்

பண்களைப் பாடி மகிழ்ந்துள்ளனர். நிலங்களின் அடிப்படையில் குறிஞ் சிப்பண், மருதப்பண், நைவளப்பண் ஆகிய பண்கள் இசைத்த செய்தியைப் பற்றி இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. குறிஞ்சிப் பண்ணானது இரவு நேரங்களில் காவல் புரிவதற்கும், மருதப்பண் விடியற் காலையில் பாடப்படுவதும், ஆம்பற்பண் இரங்கலின் வெளிப்பாடாக இருந்ததை சங்க இலக்கிங்களின் வழியாக அறியலாம்.

## அடிக்குறிப்புகள்

1. பாரதிதாசன் கவிதைகள் – பாரதிதாசன்,
2. இ. அங்கயற்கண்ணி, தமிழிசையியல் வளர்ச்சியில் குடந்தை ப.சுந்தரேசனார் பங்கு – ப.63
3. பஞ்சமரபு, வெண்பா.50

# ஆசாரக்கோவையில் காணலாகும் பண்பாட்டுக் கூறுகள்

நெறியாளர் **முனைவர் உ.கருப்பத்தேவன்,**
உதவிப்பேராசிரியர் (ம) தலைவர் (பொ),
இலக்கியத் திறனாய்வியல் துறை,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை -21.

ஆய்வாளர் **ச.சங்கர லெட்சுமி,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை -21

## முன்னுரை

மனித வாழ்க்கை செம்மை யுடையதாகவும், அமைதி உடைய தாகவும், பயன் உடையதாகவும் அமைவதற்கு ஆன்றோர்கள் காட்டிய, அன்றாட வாழ்க்கையை பின்பற்றுறப்படுவதற்கு உரிய நெறியே அறமாகும். மனிதன் தன்னிடமுள்ள தீய எண்ணங்களை, செயல்களை விடுத்து நல்ல எண்ணங்களையும், செயல் களையும் மேற்கொள்ள வேண்டும் என்பதே அறத்தின் தன்மையாகக் கருதப்படுகிறது. நம் தமிழ் இலக்கியங்கள் மக்கள் பின்பற்றக்கூடிய நற்பண்புகளை வலியுறுத்துகிறது. அவ்வகைளில் அற இலக்கியங்களாகக் கூறப்பெறும் பதிணென் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஆசாரக்கோவையில் பண்பாட்டுக் கூறுகள் எங்ஙனம் காணலாம் என்பதை ஆய்வதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## பண்பாடு என்னும் சொற்பொருள்

மக்களின் சிறப்புகளை அளவிடுவதற்கு அவர்களது நாகரிகமும் பண்பாடும் உறுதுணை புரிகின்றன. ‘நாகரிகம்’ என்பது மக்களின் புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மை, ‘பண்பாடு’ என்பது மக்களின் அகவுணர்வு வளர்ச்சி யின் சீர்மை. மனிதன் தன் அறிவு, ஆற்றல் உள்ளுணர்வுத் திறன்களால் உள்ளத்தைப் பண்படுத்தி அன்பு, அருள், இரக்கம், ஈகை, பொறுமை, ஒழுக்கம், அடக்கம், வீரம், மானம், உண்மை, பிறர்நலம் பேணல், தூய்மையான சிந்தனை, நல்ல செயல்கள், பெரியோர்களை மதித்தல் முதலான பண்பு நலன்கள் மனிதனிடம் இருக்க வேண்டியவைகளாகக் கருதப்படுகின்றன. மேலும் பண்பட்ட உள்ளம் உடையவரே பண்பாடு உடையவராவர். மக்களைப் பண்புள்ளவராக மாற்றுவது இலக்கியமாகும்,

“பண்பெனப்படுவது பாடறிந்து
ஒழுகல்” (கலித்தொகை)

என்கிறது. பண்புள்ளவர்களைச் சார்ந்து உள்ளதனால் தான் இவ்வுலகம் நன் முறையில் இயங்குகிறது என்பார்.

“பண்புடையார் பட்டுண்டு உலகம்
அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மண்” (குறள்- 996)

எனத் திருக்குறள் வலியுறுத்திக் கூறுகிறது.

பண்ஒழுங்குபட்ட ஓசை, இசை யாகும். இந்த இசைக்குப் ‘பண்’ என்பதே (ராகம்) அடிப்படையாகும். இவ்வாறே ஒழுங்குப்பட்ட நடத்தை ‘ஒழுக்கம்’ என்றும் ‘பண்பு’ என்றும் கொள்ளப் படுகின்றது. ஒழுக்கத்தை ஒரு மனிதன் தொடர்ந்து கைக்கொள்ளும்போது அது அவனது இயல்பாகிப் பண்பாகவும் அமைந்து விடுகின்றது. ‘பண்பு’ என்பதற்கு நெய்தற்கலிப் பாடல்

தெளிந்த விளக்கத்தைத் தந்துள்ளது.

"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு
உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப்
பிரியாமை
..........................................................
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது
உயிர்வெளவல்
பொறையெனப் படுவது போற்றாரைப்
பொறுத்தல்" (நெய்தற்கலி.133: 6-14)

## ஆசாரக்கோவை – பண்பாட்டுச் செய்திகள்

நம் அன்றாட வாழ்க்கையில் நாம் காலையில் எழுந்து, நீராடி, உணவு உண்ணுகிறோம். மேலும் அவரவர் வாழ்க்கைக்கும், தகுந்தாற்போல் அவரவர் விருப்பம்போல் காலையில் எழவும், குளிக்கவும், உண்ணவும் செய்கிறார்கள். இந்த அன்றாட வாழ்க்கை முறைகளில் கூட நாம் ஒரு நெறிப்படி நடந்து கொள்ளவேண்டும். என்பதையே பெருவாயின் முள்ளியார் இந்நூலில் பண்பாடாக வலியுறுத்திக் கூறுகிறார்.

மேலும் 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது பழமொழி இளம் பருவம் முதல் நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றினால் நற்பண்புகள் உருவாகி வாழ்வு வளம் பெறும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்நூல் அமைந்துள்ளது. இன்னின்ன செய்யத்தக்கவை, இதனால் இவற்றை செய்யக்கூடாது, என்றும் நீரில் நிழலைப் பார்க்கக் கூடாது. வடதிசையில் தலை வைத்துத் தூங்கக்கூடாது, உண்ணும் போது கிழக்கு நோக்கி அமர வேண்டும் போன்ற ஆசாரங்களை மக்கள் பின்பற்ற வேண்டும் என்கிறார்.

ஆசாரம் (ஆச்சாரம்) என்பதற்கு ஒழுக்கம், பண்பாடு என்பன பொருளாகும். காலையில் துயிலெழுந்து நீராடுவது, உடுப்பது, உண்பது, மீண்டும் உறங்குவது போன்ற வாழ்க்கையின் அன்றாடச் செயல்களை எப்போது எங்கு எப்படிச் செய்ய வேண்டும் எந்தச் செயலை எங்கு எப்படிச் செய்யக் கூடாது என்று காலங்காலமாகச் சமுதாயத்தில் சொல்லப்பட்டு வரும் ஒழுக்கப் பண்பாட்டு முறையை வலியுறுத்திக் கூறுவதால் இந்நூல் ஆசாரக்கோவை என்னும் பெயரைப் பெற்றது. இந்நூலில் நூறு பாடல்கள் உள்ளன. இந்நூலாசிரியர் பெயர் பெருவாயின் முள்ளியார் ஆவார். ஆசாரக்கோவையின் முதற்பாடல் ஆச்சாரமான நல்வாழ்க்கைக்கு நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல், எவ்வுயிர்க்கும் தீமைகள் செய்யாதிருத்தல், கல்வி, ஒப்புரவு, அறிவுடைமை, நல்லினம் சேர்தல் ஆகிய எட்டு ஒழுக்கப் பண்பாடுகள் தேவை என்கின்றது. தீய சிந்தனைகளும் தீய செயல்களும் நரகத்தில் ஆழ்த்திவிடும் (ஆசாரக்கோவை, 37, 38) என முன்னறிவிப்புச் செய்கின்றன. வேள்வி, தவம், விழா, திவசம், அந்தணர், தெய்வ வழிபாடு, பெற்றோர், அன்னதானம், பெண்கள், பசு, பஞ்சபூதம், சூரிய சந்திரர் ஆகியவை இந்நூலில் போற்றப் பெற்றுள்ளன. இந்திரதானமும் ஆகம நூல்களின் வழிநூல்களான தந்திரமும் (ஆசாரக்கோவை,34)கூறப்பெற்றுள்ளன. ஆசாரக்கோவையில் கூறப்படும் ஒழுக்கப் பண்பாடுகள், இந்நூலுக்கு முன்பே பன்னெடுங்காலமாகச் சமுதாயத்தில் இருந்தவையே. இதனை ஆசாரக்கோவை,

"வால்முறை யான்வந்த நான்மறை யாளரை
மேல்முறைப் பால்தம் குரவரைப்
போலொழுகல்
நூல்முறை யாளர் துணிவு"
(ஆசாரக்கோவை.61)

"வாய்வதில் தந்தையும் தாயும்

கைதொழுது எழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை"
(ஆசாரக்கோவை, 2-4)

எனவரும் பாடல்களில் வலியுறுத்து வதைக் காணலாம்.

"அந்தணர் வாய்மொழிகேட்டும்"
(திருமந்திரம், 1:21:1)

என்னும் திருமந்திர வாக்கிற்கேற்ப, ஆசாரக்கோவையும் பிராமணர்களின் சொற்படி வாழவேண்டும் என்பதை,

"... ... ... தொலைவில்லா
அந்தணர்வாய்ச் சொல் கேட்டுச் செய்க
அவர்வாய்ச்சொல்
என்றும் பிழைப்பது இல"
(ஆசாரக்கோவை, 92:2-4)

எனக்கூறுகின்றது. திரிகடுகமும் (பா.64) பிராமணர்களின் சொற்கேட்டு வாழவேண்டும் என்கின்றது. புற நானூற்றுப் பாடல்,

"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையோரும் பேணி"
(புறம்.9:1-2)

எனவும், பட்டினப்பாலை,

"நல்லானோடு பகடு ஓம்பியும்
நான் மறையோர் புகழ்பரப்பியும்க"
(பட்டினப்.202-203)

எனவும், பசுக்களையும் பெண்களையும் பிராமணர்களையும் நோயாளிகளையும் போற்றிப் பாதுகாக்கும் தமிழர் பண்பாட்டை வலியுறுத்துகின்றன. நீராடாமல் உணவு உண்பவர்கள் அரக்கர்களுக்குச் சமம் (ஆசாரக்.18), நின்று கொண்டே உணவை உண்ணக் கூடாது (ஆசாரக்.23:1), மனிதப் பிறப்பின் மாண்பினை உணர்ந்தவர்கள் யாருக்கு முன்பும் ஆடையில்லாமல் இருக்கமாட்டார்கள் (ஆசாரக்.36:3–5) எனக்கூறும் ஆசாரக்கோவையின் பாடல்கள் அன்றைய சமணத்துறவிகளை ஏற்க மறுக்கின்றன. சங்கம் மருவிய இருண்டகாலத்தில் (கி.பி.100–கி.பி.600) நிலவிய மக்களின் அறியாமை இருளைப் போக்கிச் சுடர்விட்டுத் தோன்றியவை இந்நூல்கள் என அறிதலே முக்கியமானது. மொத்தமாக இவை 3250 பாடல்கள் கொண்டவை" **(சி.டி.சங்கரநாராயணன், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் : ஓர் அறிமுகம், கங்கை புத்தக நிலையம், சென்னை, 2008, பதிப்புரை)** என்னும் கூற்றால் அறியலாம் என பண்பாட்டு நோக்கில் தமிழிலக்கிய வரலாறு என்னும் ஆய்வேட்டில் உ.கருப்பத்தேவன் கூறியுள்ளதால் அறியலாகின்றது. (பக்–90–91)

## ஒழுக்கம் பிழையாதவர் அடையும் உறுதித்தன்மைகள்

ஒழுக்கத்திலிருந்து நீங்காதவர்கள் எட்டு வகையான உறுதிப்பொருட்களை அடைவர் என ஆசாரக் கோவை கூறுவன,

"பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்" (ஆ.கோ. 2)

என்னும் பாடலில் நல்லபிறப்பு, நீண்ட நெடிய வாழ்வு, செல்வம், வனப்பு, நிலத்திற்கு உரிமை, சொல்வன்மை, கல்வி, நோயில்லா தன்மை போன்ற எட்டு உறுதிப் பொருள்களும், ஒழுக்கம் பிழையாதவர் அடையும் உறுதித் தன்மைகளாகும் என்கிறார் முள்ளியார்.

## பெரியோர் முன் செய்யின் பழியாவன

பெரியவர்கள் முன் நாம் செய்யக் கூடாத செயல்கள் குறிந்து ஆசாரக் கோவை கூறுகையில் அரசன் முன் சிரித்தல், கொட்டாவி விடுதல், காறி உமிழ்தல், தும்முதல், உயர்ந்த இடத்தில் அமர்தல், வெற்றிலை பாக்குப் போடுதல், தகுதி இல்லாதவற்றைப் பேசக் கூடாது, உறங்கவும் கூடாது என்று குறிப்பிடுவதைக் காண முடிகிறது

அப்பாடல் வருமாறு,

"உமிழ்வும் உயர்ந்துழி ஏறலும் பாக்கும்
வகையில் உரையும் வளர்ச்சியும் ஐந்தும்
புணரார் பெரியா ரகத்து" (ஆ.கோ. 70)

மேலும்,

"நகையொடு கொட்டாவி காறிப்புத்தும்மல்
இவையும் பெரியார்முன் செய்யாரே செய்யின்
அசையாது நிற்கும் பழி" (ஆ.கோ. 73)

எனப் பெருவாயின் முள்ளியார் கூறுகிறார்.

## அறிவுடையார் செயல்கள்

"பொய்குறளை வெளவல் அழுக்கா
நிவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார் - சிந்;திப்பின்
ஐயம் புகுவித்து அருநிரயத்து உய்த்திடும்
தெய்வமும் செற்று விடும்." (ஆ.கோ. 38)

என்னும் பாடலின் மூலம் ஆசிரியர் கூறுவன பொய்சொல்லல், கோள் சொல்லுதல், பிறர் பொருளைக் கவர்தல், பொறாமை கொள்ளல் என்ற நான்கினையும் அறிவில் சிறந்த சான்றோர்கள் செய்யமாட்டார்கள் என ஆசாரக்கோவை எடுத்தியம்புகிறது.

## விருந்தினர்க்கு ஊணொடு செய்யும் சிறப்பு

தமிழ்ப்பண்பாட்டில் தலைசிறந்த அறமாகக் கருதப்படுவது விருந்தோம்பல் பண்பாகும் விருந்தினர்க்கு ஊணுடன் செய்யும் சிறப்பு விருந்தாக,

"முறுவல் இனிதுரை கால்நீர் மணைபாய்
கிடக்கையோடு இவ்வைந்து மென்ப
தலை சென்றார்க்கு
ஊணொடு செய்யும் சிறப்பு"
(ஆ.கோ. 54)

என்னும் பாடலின் மூலம் விருந்தினர்க்கு செய்யும் சிறப்பாக ஆசிரியர் கூறுவன புன்முறுவலுடன் கூடிய இனிய சொல்லும், காலைக் கழுவ நீரும், அமர மனையும், படுக்கப்பாயும், தங்குவதற்கு தகுந்தாற் போல் இடமும் என்ற இவை ஐந்தும் தம்மிடம் வந்த விருந்தினர்க்கு ஊண் உணவுடன் செய்யும் சிறப்பாகும் எனக் குறிப்பிடப்படுகிறது.

## அறம்செய்ய வேண்டிய நாள்கள்

விருந்தோம்பல் மட்டுமின்றி, விருந்திடும் நாளாகவும் ஆசாரக்கோவை கூறுவது யாதனின்,

"கலியாணம் தேவர் பிதிர்விழா வேள்வியென்ற
ஐவகை நாளும் இகழா தறஞ்செய்க
பெய்க விருந்திற்கும் கூழ்" (ஆ.கோ.48)

என்னும் பாடலின் மூலம் தன்னுடைய திருமணநாளிலும் தேவரின் சிறப்பு நாளிலும், பிதுர்களுக்குச் சிறப்புச் செய்யும் நாளிலும், விழா நாட்களிலும், வேள்வி இயற்றுறும் நாளிலும் என இவ்வகைப்பட்ட ஐந்து காலந்திலும் தப்பாது. ஈ.கை அறம் செய்து விருந்தினர்க்குச் சோறு இடுதல் நன்று அதுவே அறம் என பெருவாயின் முள்ளியார் கூறுகிறார். மேலும்,

"செல் விருந்(து) ஓம்பி வருவிருந்து
பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு" (குறள் -86)

ஆசாரக்கோவை கூறும் ஊண் விருந்து மட்டுமின்றி, தன் இல்லத்திற்கு வந்த விருத்தினரை உபசரித்து மனமகிழ்வோடு வழியனுப்பிய பின், மீண்டும் விருந்தினர் வரமாட்டாரா என எதிர்ப்பார்த்துக் காத்திருப்பவனை, தேவலோகத்திலுள்ள தேவர்களுக்கு நல்விருந்தினன் ஆவான் என வள்ளுவரும் விருந்தோம்பலின் சிறப்பைக் கூறுகிரார்.

## மனைவி செய்ய வேண்டுவன

மனைவியானவள் நல்லறத்தோடு விருந்திட்டு வருபவள் மட்டுமின்றி தன் இல்லம் சிறக்க எவ்வாறு இருக்க வேண்டும் என ஆசாரக் கோவை கூறுகிறது,

"காட்டுக் களைந்து கலங்கழீஇ இல்லத்தை

**ஆப்பிநீ ரெங்கும் தெளித்துச் சிறுகாலை**
**.............................................................**
**நல்லது உறல்வேண்டு வார்". (ஆ.கோ.46)**

என்னும் பாடலின்வழி ஒரு மனைவி யானவள் தன் கணவனோடு இணைந்து இல்லறம் நடத்துகையில் சூரிய உதயத்திற்கு முன் எழுந்து வீட்டினைப் பெருக்கி, குப்பைகளைப் பெருக்கி, வாசலில் சாணநீர் தெளித்து கோலமிட்டு, நீர் இறைக்கும் பாத்திரங்களை முழுதும் நீர் நிரப்பி, தன் குடும்பத்தினர்க்காக சமைக்கும் போது இன்முகத்தோடும், எப்பொழுதும் மனைவியானவள் தலையில் பூச்சூடி இருந்தால் செல்வம் பெருகும் என்றும் "இவ்வாறு இருந்தாள் வீடு சிறக்கும்" என பெருவாயின் முள்ளியார் மூலம் தெளியலாகிறது.

## சான்றோர்க்குச் செய்யும் ஆசாரம்

**"கால்வாய்த் தொழுவு சமயம் எடுத்திருப்பு**
**ஆசாரம் என்பர் குரவர்க்கு**
**சாரத்தால் சொல்லிய மூன்று" (ஆ.கோ.62)**

என்னும் பாடலின் சான்றோருக்கு செய்யும் ஆசாரமாக ஆசிரியர் கூறுவது யாதெனின் சான்றோர் காலில் வணங்கி தொழுது நன்று எனினும், அவரை கண்டால் எழுந்து நிற்பதும் அவருக்குச் செய்யும் ஆசாரம் என நல்லோர் கூறுவர். இவை இவையே சான்றோர்க்கு செய்வன என நூலின் வழியே அறியமுடிகிறது. மேலும் சான்றோர்முன் பேசும் முறைமைப் பற்றியும் ஆசாரக் கோவை கூறுகிறது.

**"தொழுதாலும் வாய்புதைத் தானும் அஃதன்றிப்**
**பெரியார் முன் யாதும் உரையார் பழியவர்**
**கண்ணுளே நோக்கி யுரை" (ஆ.கோ.97)**

எனும் பாடலின் மூலம் தெளிவது யாதெனின் பெரியோர் முன் எதையேனும் சொல்ல விரும்பினால் வணங்கி, எழுந்து நின்று, வாயைப் புதைத்து நின்றேனும் உரைப்பாரே அன்றி, வேறு வகையாய்ச் சொல்லார். எனவே அவர்க்கு முன் குற்றம் உண்டாகாதபடி ஆராய்ந்து பேச வேண்டும் என ஆசாரக் கோவை கூறுகிறது.

## பாவச்செயல்கள்

நம் முன்னோர்கள் சில செயல்களை பாவச் செயல்களாக கருதுகின்றனர். அந்தச் செயல்களை மனிதன் செய்யக் கூடாது. அவை பிறர் மனைவியை விரும்புதல், கள் குடித்தல், திருடுதல், சூதாடுதல், கொலை செய்தல் என்ற ஐந்தும் மனிதனாலும் நினைக்கத் தகாத பாவங்கள் அப்பாவங்களை எண்ணுவோர் இகழப்படுதல் மட்டுமன்று நரகப்பயணம் மேற்கொள்வார் என்பதனை,

**"பிறர்மனை கள்களவு சூது கொலையோடு**
**அறனறிந்தார் இவ்வைந்து நோக்கார் -**
**திறனிலரென்று**
**எள்ளப் படுவதூஉ மன்றி நிரயத்துச்**
**செல்வழி யுய்த்திடுத லால் (ஆ.கோ. 37)**

என்ற பாடல் எடுத்துரைக்கின்றன. பிறர் மனைவியைப் பார்ப்பது, கள் குடிப்பது, சூதாடுவது, களவு, சூதுக்கொலை இந்தச் செயல் களைப் பாவச் செயல்களாக நம் முன்னோர்கள் கருதுகின்றனர்.

## முடிவுரை

மனிதனை மனிதனாக அடை யாளம் காட்டுவது பண்பாடாகும் மனிதனை விலங்கினின்றும் வேறு படுத்திக் காட்டுவதும் காலத்திற்கேற்ற பண்பாடே ஆகும். இப்பண்பாடு காலத்திற்குக்காலம், நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் என வேறுபடுகிறது. அவ்வகையில் ஆசாரக்கோவையானது மனிதனை இன்னது செய்ய வேண்டும், இவற்றைச் செய்யக்கூடாது. என்னும் ஆசாரங்களைத் தொகுத்துக் கூறியுள்ளது என்பதில் ஒழுக்கம் பிழையாதவர் அடையும் உறுதித்தன்மைகள், பெரியோர் முன் செய்யக் கூடியது, செய்யக்கூடாதது,

அறிவுடையோர் செயல்கள்; ஒரு மனைவியானவள் தன் கணவனுக்கு செய்ய வேண்டிய கடமைகள், அறங்கள் பற்றியும் இவையனைத்தும் எவ்வாறு பண்பாடாகிறது என்பதைப் பற்றியும் இக்கட்டுரையில் ஆசாரக் கோவையின் மூலம் அறிந்து கொண்டோம்.

## பயன்பட்ட நூல்கள்

1) ஆசாரக் கோவை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை–17. பதிப்பு 2022

2) திருக்குறள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை–17. பதிப்பு 2022

3) மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி, ஸ்ரீராம் பதிப்பகம், சென்னை–63.

4) கருப்பத்தேவன். உ., பண்பாட்டு நோக்கில் தமிழிலக்கிய வரலாறு, MKU/RUSA, Phase & 2, ஆய்வேடு, 2024.

# பெரும்பாணாற்றுப்படையில் பரிசில் பெறுதலும் உணவுப் பண்பாடும்

– முனைவர் த.சங்கீதா எம்.ஏ.எம்.எட்.பி.எச்டி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
பெரிகலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மண்ணிவாக்கம். சென்னை - 600048.

## முன்னுரை

சங்க காலத்தில் மக்கள் சமுதாயம் மற்றும் கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சிறப்பான சமூகமாக வாழ்ந்துள்ளார்கள். உணவு, உடை, உறைவிடம், தொழில், தெய்வம், கொடை, ஒற்றுமையுணர்வு, பண்டமாற்றம் போன்ற பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட சிறப்பான சமுதாய வாழ்வை மேற்கொண்டிருப்பதை அறியமுடிகிறது. இன்றைய பெண்கள் வாகனங்களை ஓட்டுவது போலவே அன்றைய காலத்திலும் பெண்கள் வண்டிகளை ஓட்டியுள்ளனர். அதற்குத் தகுந்த சான்றுகளாக அமைவது சங்க இலக்கியங்களில் காணப்படும் பாடல்களில் அமைந்துள்ள செய்திகளாகும்.

## வறுமை போக்கும் வள்ளல்

பெருவறம்கூர்ந்த கானம் கல்லெனக்
கருவி வானம் துளி சொரிந்தஆங்கு,
பழம் பசி கூர்ந்தஎம்இரும் பேர்
ஒக்கலொடு வழங்கத் தவாஅப்பெரு வளன்எய்தி
வால் உளைப்புரவி யொடுவயக் களிறு முகந்து கொண்டு,
யாம் அவணின்று விருதும் பாடல்

(25.பெரும்பாண்) ப.56அடி(1)

வறுமைஎன்பதுஎல்லாகாலத்திலும் மக்களிடம் காணப்படும் மிகப்பெரிய சமுதாய குறையாகும் அக்காலத்திலும் வறுமையோடு பசியால் வாடிய மக்கள் இருந்தனர். அவர்களின் குறை போக்க வள்ளல் இளந்திரையன் மாபெரும் சுற்றுச்சாரோடு குறையாத அளவற்ற செல்வங்களையும் வெண்மையான ‘தலையாட்டம்‘ என்னும் அணிகலனால் ஒப்பனை செய்யப்பட்ட குதிரையுடன் வலிமையான யானைகளையும் நிரம்பப் பெற்றுக் கொண்டு பாணர்கள் அவனுடைய நாட்டிலிருந்து வருவதாகக் கூறியுள்ளதிலிருந்து எதிர் வரும் பாணருக்கு இனித் துன்பமில்லை என்று கூறுவதும், இளந்திரையனின் கொடை கொடுக்கும் பண்பாட்டையும் அறியமுடிகிறது. மழைமேகம் இடம் பொருள் அறியாது பொழிவதைப் போல இளந்திரைய மன்னனும் மக்களின் வறுமையைப் போக்கியுள்ளான்.

## சேர நாட்டு நல்லியக் கோடன்

சேரநாடு செழிப்புடையது. அங்கு எருமைகள் கொழுத்த மீன்கள் நொறுங்கும்படி வயல்களில் நடந்து சென்று செங்கழுநீர் பூவை உண்ணும், மிளகு படர்ந்த பலா மரநிழலில் காட்டு மல்லிகையாகிய படுக்கையில் கிடக்கும்.காற்றுக்கு கொடி அசையும் மஞ்சளின் மெல்லிய கிளைகள் அதன் முதுகைத் தடவும். செழுமை மிகுந்த நாடுகளையும், வலிய தோளினையும், ஓடுகின்ற தேரினையும் உடைய சேரனது வஞ்சி மூதூரில் கிடக்கும் பரிசுகளோ நல்லியக்கோடன் கொடுக்கும்

பரிசினைவிடக் குறைவுடைது. நல்லியக்கோடான் காலத்தில் அவன் நாட்டில் கிடங்கில் பொற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய ஊர்கள் சிறந்து விளங்கியுள்ளன. ஆம்பூரில் கிடைக்கும் உணவு வகைகள் சிறப்பிடம் பெறுகிறது. நெய்தல் நிலத்தில் வாழ்வோர் மீன் உணவையே மிகுதியாக உட்கொள்வார்கள். காய்ந்த குழல் மீனைச் சுட்ட உணவை ஒவ்வொரு இடத்திலும் பெறுவீர்கள் என்று பாணனை ஆற்றுப் படுத்துவதை உணர முடிகிறது. இதனை,

"வறல் குழல் சூட்டின் வயின்வயின்
பெருகுவீர்"

என்ற அடியின்வழி அறியலாம்.

## காஞ்சி காவலனின் சிறப்பு

காஞ்சிநகர்த் தலைவனாம் தொண்டைமான் இளந்திரையன் இடம் பரிசு பெற்ற பெரும்பாணன் எவரிடமும் பரிசு பெறாத எதிர்ப்படும் பெரும்பாணனிடம் பின்வருமாறு கூறப்படுகின்றது.

"பொழிமழை துறந்த புகைவேய்
குன்றத்துப் பழுமரம் தேடும் பறவை போல
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து
திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண
(19-22) பெரும்பாணாற்றுப் படை பக்.(39)
அடி(2)

தொண்டைமான் மன்னனிடம் சென்றால் உன் வறுமை அகலும் என்றும், வேறு இடம் செல்லத் தேவையில்லை என்றும் ஆற்றுப்படுத்துகின்றான் பாணன்.

## பெரும்பாணாற்றுப் படையில் மக்களின் உணவு

காஞ்சிநகருக்குச் செல்லும் வழியின் நிகழ்வுகள், ஐந்து நில மக்களின் தொழில், உணவு, யாழின் வர்ணனை, இளந்திரையன் ஆட்சி சிறப்பு கொடைத் தன்மைகள் ஆகிய அறியமுடிகின்றன. நெல் அரிசி, உடும்புக்கறி, தினை அரிசி, வரகு அரிசி, வெந்நல் அரிசி, ஊன் உணவு, கருப்பஞ்சாறு, வெல்லம், கள், கருடச் சம்பா அரிசி, மாதுளங்காய் பொரியல், மாவடு, நறுமணமுள்ள மோர் அவர்களது உணவு வகைகளாக இருந்ததை நாம் அறியமுடிகிறது. இக்காலங்களில் மக்கள் பலவிதமான உணவுகளை விரும்பி எடுப்பதைப் போலவே அன்றைய காலகட்ட மக்களும் பல விதமான உணவுகளைச் சமைத்து உண்டு வாழ்ந்தனர் என்பதை பெரும்பாணாற்றுப்படை பாடல் மூலம் அறியமுடிகிறது.

## சங்க கால மக்களின் வீடு

வறகுத் தட்டையால் வேயப்பட்ட குடில்,

"முட்டில் பைங்கொடி நுடங்கும் வாயில்"
(338) பெரும்பாண். ப.(107)அடி(3)

வரகுத் தட்டையால் வேயப்பட்ட அழகான குடில்களை மக்கள் அன்று பயன்படுத்தினர் என்பதைக் கூறுகிறது.

## பண்டமாற்றுமுறை

அங்கு வாழ்ந்த முல்லை நிலத்து மக்கள் தயிர், மோர் இவற்றைக் குறிஞ்சிநில மக்களிடம் கொடுத்து நெல்லைப் பெற்று வந்தனர். நெய்யை விற்று பசு, எருமை முதலானவற்றை வாங்கினர். அதன் மூலம் அவர்களது பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டனர். அயல்நாட்டு வாணிகம் குறித்த செய்திகளும் காணப்படுகிறது. வாணிகத்தில் யவனர் சிறப்பிடம் பெற்றனர். அவர்கள் பாவை விளக்கு, அன்னப்பறவை ஆகியவற்றை இறக்குமதி செய்துள்ளனர். தொண்டை நாட்டு துறைமுகங்களுக்குக் குதிரைகளும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. உள்நாட்டு வாணிகம் பற்றிய குறிப்புகளும் உள்ளன. கழுதையும்,

*மிளகு முதலிய பண்டப் பொதிகளைச் சுமந்து வரிசையாகச் சென்று உள்ளது.*

**மாணிக்க குன்றம் மழை சுமந்து அன்ன**
**ஆரைவேய்ந்த அறை வாய்ச் சகடம்"**
*பாடல் 50 பெரும்பாண். ப.(62) அடி(4)*

*உப்பு ஏற்றப்பட்ட வண்டிகளை எருதுகள் இழுத்துச் சென்றுள்ளன. அக்கால மக்கள் வாழ்க்கையில் எருது, கழுதை இவற்றைப் பழக்கப்படுத்தி தங்களது விவசாயத்திற்கும், ஏற்றுமதி தொழிலுக்கும் பயன்படுத்தியதை அறியமுடிகிறது. கொடைச் சிறப்பு: பொற்றாமரைப் பூ, குதிரை, பொன்னேரி மாலை பெரும் செல்வம் ஆகியவற்றை இளந்திரையன் கொடையாக அளித்துள்ளான். பழைய கந்தல் ஆடைகளை நீக்கி பாலாவி அன்ன மென்மையான உடைகளைத் தந்துள்ளான். பலவகை இறைச்சிகளையும் இடைமுறியாத சோற்றையும், இனிப்புகளையும், வெள்ளிப் பாத்திரங்களில் பரிமாறச் செய்துள்ளான்." இதனை,*

**"மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்**
**தானாவிரிப் பிற்றானின்றூட்டி**
**மங்குல் வானத்துத் திங்களேய்க்கு**
**மாடுவண்டி மிராவழலவிர் தாமரை."**
*பெரும்பாண். பாடல்480. ப.(51).அடி(5)*

*என்னும் பாடலடிகளால் பண்டமாற்று முறை இருந்ததையும், மக்கள் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையான சமுதாயஅமைப்பில் வாழ்ந்து வந்தனர் என்பதை உணரமுடிகிறது.*

## மகளிர் ஓட்டும் வண்டி

**"நாடகமகளிர் ஆடு களத்து எடுத்த**
**விசிவீங்கு இன் இயம்கடுப்பக் கயிறு பிணித்து,**
**காடி வைத்த கலனுடையமூக்கின்**
**மகவுடை மகடூஉப் பகடு புறம்துரப்ப"**
*பெருப்பாணற்று.பா(55)பக்.62.அடி(6)*

*நாடகத்தில் பெண்கள் ஆடுகளத்துக்கு எடுத்துவந்த, இறுக்கிக் கட்டப்பட்ட, இனிய இசை தரும் மத்தளம் போலக்கயிற்றால் கட்டிய ஊறுகாய்ச் சாடி வைத்த முன்புறத்தில், குழந்தையை சுமந்தபடி அமர்ந்திருக்கும் உமணப்பெண், வண்டியை இழுத்துச் செல்லும் எருதினை, அதன் முதுகில் அடித்து ஓட்டினாள். அக்காலத்தில் பெண்களும் பல நிலைகளில் வளர்ச்சி பெற்று இருந்தனர்..*

## தேக்கு இலையில் சுவையான உணவு

**ஓடாத்தானை, ஒண்தொழில் கழல் கால்,**
**செவ் வரை நாடன்,சென்னியம்எனினே**
**தெய்வ படையின்தேக்கு இலைக்குவை இஃதும்**
**பை தீர் கடும்பொடு பதம் மிகப் பெறுகுவிர்**
**(பெரும்பாண்-பாடல்105)பக்(70)அடி(7)**

*"வாடாத தும்பைப் பூச்சூடிய போர்த் தொழிலின்வல்ல வீரர் தலைவனும் புறமுதுகிடாத படையுடன் ஒளிபொருந்திய வேலைப்பாடுடைய வீரக் கழல் அணிந்தவனும் செம்மையான மலை நாட்டை ஆள்பவனுமான தொண்டைமான் தெய்வத்திற்குப் பலியிட்டுக் கொடுக்கப்படும் படையல் போல் தேக்கு இலையில் குறித்துத்தருவர் ! செழிப்பற்ற உங்கள் சுற்றத்தாருடன்,அப் புழுக்கல்உணவினைநிறையப்பெறுவீர் கள்.*

*புல்லரிசி, தினையரிசி, வரகரிசி, மூங்கில் அரிசி உள்ளிட்ட அரிசி வகைகளுடன் மான், ஆடு, கறிவற்றல் போன்ற இறைச்சி வகைகளையும் ஏலம், மிளகு, பட்டை, இலவங்கம் முதலான வாசனைப் பொருட்களையும் இட்டுப் புழுக்கச் சமைப்பதே புழுக்கல் ஆகும். தமிழர் தம் இல்ல உணவு முறையே கடல் வணிகம் வாயிலாகப் பிற நாடுகளுக்குப் பரவி, தற்போது 'பிரியாணி' என்னும்*

பெயரில் தாயகம் வந்துள்ளதாகக் கருதுவர்.

## முடிவுரை

தொன்மைச் சமூகத்தில் மனிதன் நெருப்பை கண்டறிந்த பின் உணவு சமைக்க தொடங்குகிறான். கூடி இணைந்து வாழ்கிறான் இலக்கியங்களில் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளை பாடல்கள் வழியாக வரலாற்றுப் பதிவுகளாக நமக்கு கிடைக்கின்றன. மக்களிடம் காணப்பட்ட உணவு முறைகளும் ஆடைகளும் அரசன் செய்த சிறப்புகளும் பாணர்களின் வாழ்வு நிலையும், ஒற்றுமை உணர்வும், மற்றும் இக்காலங்கள் போலவே அன்றைய காலகட்டங்களிலும் பெண்கள் தங்களது குழந்தைகளைப் பராமரிப்பதும் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருப்பதும், வாகனங்களை இன்று ஓட்டுவது போல் சங்க காலப் பெண்கள் மாட்டு வண்டிகளை ஓட்டு வதையும் அறியமுடிகிறது. அன்றைய காலகட்டத்தில் அசைவ உணவாக இருந்த கறி உணவு கடல் கடந்து சென்று இன்று பிரியாணி என்று மாற்றம் பெற்றுள்ளதையும் மன்னர்கள் சிறந்த கொடை வள்ளலாகவும் வாழ்ந்துள்ளனர். ஐவகை நிலத்து மக்களும் பண்டமாற்று முறையை மேற்கொண்டுள்ளனர் என்பதையும் இவ்வாய்வுகளின் மூலம் அறியமுடிகிறது..

## துணை நூற்பட்டியல்:

1. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41–பி சிட்கோ இண்டஸ்ட்ரீஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600050.

2. பெரும்பாண் ஆற்றுப்படை, உரையாசிரியர் சோ மகாதேவன், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியில் பணிகள் கழகம், சென்னை 600006, இரண்டாம் பதிப்பு: 2023.

# பண்பாடு: அன்றாடம் வாழ்க்கையின் வாழ்வியல் விழுமியங்கள்

**முனைவர் மு. சண்முகம்,**
கௌரவ விரிவுரையாளர்; தமிழ் உயராய்வுத்துறை,
திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி (நிலை - 1),
விருத்தாசலம் - 606 001, கடலூர் மாவட்டம்,

## சாதியற்ற குமுகம் (சமுகம்)

*"அந்தணர், அரசர், அளவர், இடையர், குயவர், உப்பு வணிகர், உழவர், எயினர், கடம்பர், கடைசியர், கடையர், கம்மியர், கிளமர், கிணைஞர், குறவர், குறும்பர், கூத்தர், கொல்லர், தச்சர், துடியர், தேர்ப்பாகன், நுளையர், பரதவர், பறையர், பாடினி, பாணர், புலையர், பூண்செய் கொல்லர், பூவிலைப் பெண்டிர், பொது விலைப்பெண்டிர், பொருநர், மழவர், மறவர், யாழ்ப் புலவர், யானைப் பாகர், யானை வேட்டுவர், வணிகர், வலைஞர், வேடர் போன்ற பல் தொழிற் பிரிவினர் பழங்காலங்களில் இருந்ததாகப் பதிவுகள் உள்ளன. ஆயினும் சாதிப் பிரிவுகள் இருக்கவில்லை. இத்தொழிற் பிரிவினர்களிடையே பகைமை இருந்ததாகப் பதிவுகள் உள்ளன. சாதிப் பிரிவுகள் இருக்கவில்லை."*

*(தமிழகப் பெண்கள் செயற்களம்., (மு.ப.) தி.பி. 2044, (கி.பி.2013), தமிழர் வரலாறு (2), பழந்தமிழர் காலம், சென்னை, தமிழகப் பெண்கள் செயற்களம்). ப.59*

## அறிமுகம்

*அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்! என்பது போலவே; ஒவ்வொரு உயிரினங்களுக்குமான பண்பாட்டினைப் புரிந்துகொள்ள முடியமாமல், கடந்து போக முடியாது. சமுதாய வாழ்க்கையின் புரிதலை உணர்ந்து; அவற்றின் வழியே கடைப்பிடித்தல், பண்பாட்டுத் தத்துவத்தின் விழுமியங்களாகும். உலக நடைமுறையும், சமுதாயத்தின் நெறிகளையும் ஒத்து நடப்பதே உயர்ந்த "பண்பாடு" எனப்படுகின்றது. கல்வியைக்கற்றவன் அதனைக் கற்றதோடு இருந்து விடாமல் உலகத்து நியதிகளை ஏற்று உலகத்தோடு ஒத்து வாழ வேண்டும். பண்பாட்டின் வகைமைகளைக் கற்றுக் கொண்டவனாய் இருத்தலே பண்பாட்டு மரபினைக் போற்றி வருகின்ற மனிதர்களின் வழக்காறுளே "பண்பாட்டின்" முதன்மைத் தன்மைகளாய் நிலைத்திருக்கின்றது. அத்தகைய பண்பாட்டின் விழுமியங் களைப் பற்றி இக்கட்டுரை விளக்கு கின்றது.*

## நாட்டார் வழக்காற்றியலில் பண்பாடு

*மனிதர்களின் வாழ்க்கையில் பண்பாடென்பது உடலின் சதையினைப் போலவே நிலைத்திருக்கின்றன. தூய்மைகள் என்பது அவற்றிற்காக வழி கோலுகின்றன. வசிக்கின்ற இடத்தின் தூய்மை, சுவரெழுப்புதல், வீடுகட்டுதல், காலையில் தினந்தோறும் தெருவிலே மாட்டின் சாணம் தெளித்தல், தெருவினை சுத்தப் படுத்துதல், கோலங்கள் இடுதல், அழகிற்காக செம்மண் பட்டை தீட்டுதல், சில ஆண்டுகள் கழித்து, வீட்டிற்கு புத்தம் புது*

ஓலையினை பதியம் போட்டு கட்டுதல், முதலான பல வழிகளிலும் நாட்டுப்புறத் தன்மைகளே மேலிடுகின்றன. அவைகளே இரண்டாயிரமாண்டுகள் கடந்தும், மக்களிடையே பண்பாடுகளாவும், சடங்குகளாகவும், அன்றாடம் நிகழ்த்துகின்ற விழுமியங்களாகவும் புழக்கத்தில்; காலங்களைப் போலவே நிலைத்திருக்கின்றன.

பண்பாடு, வேள்விகள், நம்பிக்கைகள் முதலான சடங்கு களினையும் திருவிழாக்களில் புழங்கி வருகின்றன. சிந்து சமவெளி, அரப்பா, கீழ்வளை, தொண்டி, முசிறி, மொகஞ் சதாரோ போன்ற பலவிதமான இடங்களிலும் மாந்தர்களின் பண் பாட்டின் எச்சங்களே நிலைத்துள்ளன. விருந்தினர்களை வரவேற்கின்ற உரிமங்கள் தொட்டு, மகடூஉ முன்னிலை, நடுகல் வழிபாடு, தெய்வச் சடங்குகள், வாழ்வியலில் கதைக்கின்ற தொன்மக்கதைகள், புராணக் கதைகள், வேடிக்கைக் கதைகள், இதிகாசக் கட்டுக் கதைகள், பில்லி, சூனிய மந்திர – தந்திரக் கதைகள், மறைவாய் சொன்ன பழங்கதைகள், மூத்தோரின் சொற்கள் முதலானவைகளும் நாட்டார் வாழ்வியலில் பண்பாட்டுக் கதைகளாகவும் நிலைத்திருக்கின்றன.

வண்ணம் தீட்டுதல், மண்பானைச் சட்டிச் செய்தல், தேரினை இழுத்து மக்களின் வழிபாட்டிற்காகச் செல்லுதல், முதுகிலே முள்குத்துதல், அலகு இழுத்தல் முதலான பலவற்றில் பண்பாட்டுச் சடங்குகளாகவே கடைப் பிடித்து வருகின்றனர். அர்ச்சுனன் தபசு மரமேறுதல், திருமணம் நடப்பதற்காகச் சடங்கு சாஸ்திரங்கள் செய்தல், மாடு பிடி சண்டை, இராமர் – சீதா கல்யாணம், முக்தி (மோட்சம்) யடைதல் முதலான பலவற்றினையும் வாய்மொழிக் கதைகளாகவும், சடங்குகளாகவும் நிகழ்த்தி வருகின்றனர்.

மக்களின் உடல்நிலை, வயது நிலைகளைக் கவனம் கொள்ளாமல்; காட்டுமிராண்டி சமுகத்தினர்கள் வழிபாடு செய்து வருகின்றனர்.

## ஏட்டிலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள் :

இலக்கிய வெளி சூழ்நிலைகளால் ஆனதுதான் பண்டைய சமுதாயம். தொன்று தொட்டு மூத்த குடி என்பதினைப் போலவே; தொல் வெளி களோடும், மூத்தோர் குழுவின் இலக்கிய இலக்கண பண்பாடுகளையும் நிரம்ப பெற்றிருக்கின்றது தான் பண்டைய சமுதாயமாகும்.

சமுதாயம் என்பது குடும்ப அமைப்பு முறையினை ஒத்ததாகும். தந்தை என்தந்தை, நுந்தை தந்தை என்று பாட்டன்களைக் கூறி வாழ்ந் திருப்பதாக புறநானூற்றுப் (290) பாடல் குறிப்பிட்டுள்ளதையும் உணர முடிகின்றது. கூடவே பாட்டியினைக் குறிக்க “வயதான கிழவி” என்றும் பரிபாடலில் 10 வது பாடலில் 37 வது வரியில் குறிப்பிட்டுள்ளனர்.

தந்தையினைக் குறிக்க “எந்தை” என்று குறிப்பிட்டுள்ளதினையும் குறுந்தொகை நாற்பதாவது (2 வரிகள்) பாடலிலும், ஐங்குறுநூலில் 261 வது பாடலில் (3வது வரிகளிலும்) பாடி யுள்ளனர். “நுந்தை” என்றும் (நற்றினை 202 பாடல் 8 வது வரி) கலித்தொகை 85 வது பாடலில் 25–வது வரிகளிலும் பாடியிருக்கின்றனர். “தந்தை” என்று நற்றிணையில் எட்டாவது (8) பாடலில் – 4 வது வரிகளிலும் அழைத்துள்ளனர். “அத்தன்” என்று குறுந்தொகை 93 வது பாடலிலும், கலித்தொகையில் 115 வது பாடலில் 8 வது வரிகளிலும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் தந்தையினை “ஐ“ என்றும்,

"என்னை" என்றும் அழைத்துள்ளதினை நற்றிணை 136 வது பாடல் 4 வது வரிகளிலும் புறநானூற்று இருநூற்று எழுபத்தொன்பது (279) பாடலில் 3 வது வரியிலும் குறிப்பிட்டுள்ளனர். "நும்முன்" என்றும் புறநானூற்றில் நூற்றியெழுபத்தி நான்கு (174) 18 வது வரிகளில் அழைத்துள்ளதினையும் காண முடிகின்றன. மேலும் முதல்வனைக் "கோ" என்று அழைத்துள்ளதினையும் கலித்தொகையால் அறிய முடிகின்றது.

## மக்களைக் குறிக்கின்ற உறவு முறைச் சொற்கள்

குடும்பம், அலுவலகம், காவல் துறை, மருத்துவத்துறை, சுற்றுப்புறத் தூய்மைப் பணியாளர்கள் முதலானவர்களை அழைக்கின்ற விதமும்; பண்பாடு, சடங்கு, நாகரிகங்கள் போன்ற பலவகைகளைப் பற்றியும் குறித்திருக்கின்றனர். உலகிலே முதன்மை நூலான தொல்காப்பியச் சொல்லதிகாரத்திலே உறவு முறையினைப் பற்றிக் (நூற்பா.277) கூறப்பட்டுள்ளன. "கணவனைக் குறிக்கவும்", "மனைவி"யைக் குறிப்பிடவும், "அண்ணன், "தம்பி" யினைக் குறிப்பிடவும், "அக்கா, தங்கை" (நுங்கை, நுவ்வை, தங்கை), மகனைக் குறிக்க (புதல்வன், மகன், சிறாஅன், (எவ்வை), சிறுவர், செல்வன், செம்மல், மைந்தர், சேய், சேஎய், பெயரன், இளையோர், மகாஅன்) இவ்வாறாகவும் அழைத்திருக்கின்றனர். மகளைக் குறிக்க சங்கப் பாடல்களில் "மகன்" என்றே தொன்னூற்றெட்டு இடங்களில் குறிப்பிட்டுள்ளனர். "மகள்" என்னும் பெயரே "பெண்", "தலைவி", "விறலி", "தோழி" எனவும் "இளையோள்" என்றும் குறிக்கப்பெற்றுள்ளன.[1]

## சமுதாயப் பண்பாடு கலை வரலாறு

சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம் உயரிய பண்பாட்டினைக் கொண்டிருந்தது. நடையுடை, பழக்கவழக்கம், வாழ்க்கை முறை, நாகரீகம், நோக்கம், எண்ணம் ஆகிய அனைத்தும் உயரிய குறிக்கோள்களைக் கொண்டிருந்தன. சமூகப் பண்பாடு மிகுந்ததாயுமிருந்தது. பிற சமுதாயப் பண்பாடுகளைவிட குறிப்பிட்டுக் கூறக் கூடிய அளவிற்கு மேம்பாடு உற்றிருந்தது. காதலை இலட்சியமாகக்கொண்ட அகவாழ்க்கையிலும் பண்பாட்டு மேன்மைகள் போற்றப் பெற்றுள்ளன.

பண்டையத் தமிழரின் புகழ் மரபினைப் பற்றிக் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன் குறிப்பிட்டுள்ளதே, மக்களின் இனம், வழக்காறு, பண்பாடு, கலை, வரலாறு , உள்ளத்து உணர்ச்சிகளாலான கலையியல்பு வெளிப்பாடுகள் முதலானவைகளைச் சிறப்பாக எடுத்துரைக்கின்றன.

"இந்திரர்க்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் சுயநலம் கருதி அதனைத் தாமே உண்ணார்; புகழ் வருகின்றது எனின் தம் உயிரையும் கொடுப்பர். பழிவரும் எனின் இந்த உலகமே பரிசாகக் கிடைப்பதனாலும் அதனைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். பிறர் அஞ்சும் தீயனவற்றைத் தாமும் கண்டு அஞ்சுவர்"[2] என்பது அவரு பாடல் கருத்தாகும்.

## தமிழரின் பண்பாட்டுப் பதிவுகள்

தமிழர்களின் வரலாற்றுப் பதிவென்பது "பண்பாட்டு மரபாகவே விளங்குகின்றன. மன்னர் அவையில் மூத்தோர்கள் ஒருங்கு கூடி அவைக்களப் புலவராக மட்டுமன்றி, பூமியின் பண்பாடு, கலையியல், ஆராய்ச்சியியல், மனக்கணக்கு முதலான வாழ்வியல் தொன்மங்கள் வரையிலும் சிறப்புடன் விவாதிக்கப்பட்டுள்ளன.

அரிக்கமேடு, கீழடி முதலான தொல்லியல் சான்றுகள் வரையிலும் பண்பாட்டிற்கான காட்சி; படிமங்கள் அமைந்துள்ளன. சோழர்காலக்

கட்டிடங்கள், பல்லவர் காலக் கலை அழகியல் சிந்தனைகள் முதலானவைகளும் மக்களின் பண்பாடுகளோடவே காணப்படு கின்றன. வணிகச் செயல்பாடுகள், தமிழகம் தந்த குட முழவம் முதலானவைகளோடு கற்சிலைகளும், மதில் அரண்களும் தமிழர் பண்பாடு களின் உன்னத நிலையைக் காட்டுகின்றன.

ஒரு நாட்டு மரபின் சகல – வியூகங்களை அழிக்க நினைப்பவர்கள்; முதன் முதலில் அந்நாட்டிலுள்ள நூலகங்களை அழித்ததைப் பற்றியும் பல வரலாற்று பாடங்கிளிலும் படித்திருக் கின்றோம்.

ஆலயங்களில் நூலகங்கள் செயல் பட்டதையும், இவைகள் காலங்களைப் போலவே கடந்து "ஆவணக் காப்பகங் களாக" மாறியுள்ளதையும் தெரிந்து பண்பாட்டு மரபினையும் காப்பாற்றி வருகின்றோம்.

## முடிவுரை

பண்பாடு, சடங்கு, கோயில், கலை, வாழ்வியல் இன்றி மக்கள் இல்லை. மக்களின் வசிப்பிடங்களே கோயில், பள்ளிக் கூடம், மரம், வால் பாறைகளாக இருந்தாலும் பண்பாடென்பது மூச்சுக் காற்றாகவே மக்களிடம் நிலைத்திருக்கின்றன. "பண்பனெப் படுவது பாடறிந் தொழுகல் " எனும் வகையிலே வாழ்வின் முழுப் பயணமும் நிலைத்துள்ளன.

## குறிப்புகள்

1. தமிழகப் பெண்கள் செயற்களம்., தமிழர் வரலாறு (தொகுதி–2), பழந்தமிழர் காலம், பக் – 113 – 114).
2. கு.சேதுராமன்., தமிழகச் சமுதாயப் பண்பாட்டு கலை வரலாறு, ப–80.

## பார்வை நூல்கள் :

கணியன் பாலன்., (மு.ப) 2024, தமிழ் மொழி, சென்னை, நியூ செஞ் சுரி புக் ஹவுஸ்.

சண்முகம்.மு., (மு.ப) 2024, குமுகம்: தெய்வ நம்பிக்கைகளும் வழிபாடு சடங்குகளும் (ஆய்வுக்கட்டுரை – ISSN – ஆய்விதழ்) நாகர்கோயில்.

சேதுராமன். கு., (மு.ப) ஜூலை.2017, தமிழகச் சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

தமிழகப் பெண்கள் செயற்களம்., (மு.ப) தி.பி. 2044 (கி.பி.2013), தமிழர் வரலாறு (தொகுதி–2), பழந்தமிழர் காலம் (கழகக் காலம்), சென்னை, தமிழப் பெண்கள் செயற்களம்.

பாலசுப்ரமணியன் குடவாயில்., (மு.ப) 2022, தமிழர் பண்பாட்டுப் பதிவுகள், தஞ்சாவூர், அன்னம்.

பாலசுப்ரமணியன் குடவாயில்., (மு.ப) ஆகஸ்ட். 1978, குடவாயிற் கோட்டம், தஞ்சாவூர், அன்னம்.

பாலசுப்ரமணியன் குடவாயில்., (மு.ப) 2014, கலையியல் ரசனைக் கட்டுரைகள், தஞ்சாவூர், அன்னம்.

மகாராசன்., (மு.ப) செப்.2018, தமிழர் எழுத்துப் பண்பாட்டு மரபு, திருவண்ணாமலை, ஆதி பதிப்பகம்.

# ஆற்றுப்படை நூல்களில் உணவுப் பண்பாடு

**பா. சதீஷ் குமார்**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் இலக்கியத்துறை,
வித்யாசாகர் கலை அறிவியல் கல்லூரி,
உடுமலைப்பேட்டை - 642126,
திருப்பூர் மாவட்டம்.

பழந்தமிழர்களின் வரலாற்றைப் பல நிலைகளில் எடுத்துரைப்பது சங்க இலக்கியம் ஆகும். சங்க இலக்கியம் பழந்தமிழர்கள் வாழும் இடங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பாகுபடுத்தி அவர்களுக்குத் தேவையான வாழ்வியலைக் கட்டமைத்திருக்கிறது. வாழ்வியலின் இன்றியமையாத ஒன்று உணவு, பத்துப்பாட்டு ஆற்றுப்படை நூல்களான பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை போன்ற நூல்களில் காணப்பெறும் உணவு குறித்தான செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பொருநராற்றுப்படையில் உணவு வகை

பழந்தமிழர்களின் சிறப்பம்சம் விருந்தினர்களை வரவேற்று விருந்தோம்பு வதாகும். விருந்தின் சிறப்பினைப் பல இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. அரசன் முதல் ஆண்டி வரை விருந் தோம்புவது பழந்தமிழர்களின் சிறப்பு. விருந்தில் மாமிசம், மதுபானம் சிறப்பான இடம் வகிக்கின்றன. கரிகாற் சோழன் தம் நாட்டிற்கு வந்த பாணறக்கு இரும்புச் சட்டத்திலே கோத்துத் தீயிலே சுட்டெரித்து நல்ல கொழுத்த செம்மறியாட்டின் மாமிசத்தையும், மதுவையும் கொடுத்தான் என்ற செய்தி,

"துராஅய் துற்றிய துருவை
அம்புழுக்கின்
பராமரை வேவைப் பருகு எனத்தண்டி"[1]
(பொருநராற்றுப்படை-103-104)

"இழையணி வனப்பின் இன்னிகை மகளிர்
போக்கு இல் பொலங்கலம் நிறையப்
பல்காங்
வாக்குபு தரத்தர"
(பொருநராற்றுப்படை-85-87)

என்னும் பாடலடிகளில் கூறப் பெற்றுள்ளன.

சோழ நாட்டில் வாழும் மக்கள் மாமிச உணவு மட்டுமல்லாமல் சைவ உணவையும் உண்டனர். நிமிர்ந்த சோற்றோடு பால்விட்டு, பொரிக் கறிகளோடும், புளிக்கறிகளோடும் சைவ உணவு உண்டனர் என்பதற்கு,

"முரவை போகிய முரியா அரிசி
விரல் என நிமிர்ந்த நிரல் அமைபுழுக்கல்
பரல்வரைக் கருளை காடியின் மிதப்ப"
(பொருநராற்றுப்படை-113-115)

என்னும் பாடலடிகள் சான்றளிக்கின்றன.

## பெரும்பாணாற்றுப்படையில் உணவு வகை

பெரும்பாணாற்றுப்படை தொழில்வழிப் பிரிவினரின் அடிப் படையில் உணவு வகைகளைப் பாகுபடுத்துகிறது.

### எயினர்கள்

எயிற்றியர் எறும்புப் புற்றுக்களில் சேர்ந்து வைத்திருந்த புல்லரிசியைத் தேடி எடுத்து உலக்கையில் குற்றிக் கொழித் தெடுப்பார்கள். அவற்றை அடுப்பில் வைத்துச் சமைத்துச் சோறாக்கினர். அச்சோற்றை உப்புக்கண்டத்தின் துணை கொண்டு உண்டனர் என்பது அறியப் படுகின்றது.

"முரவு வாய்க்குழிசி மூரி அடுப்பேற்றி
வாராது அட்டவாடுன் புழுக்கல்"
(பெரும்பாணற்றுப்படை -99-100)

வில் பிடித்து வேட்டையாடும் வேடர்கள் நாய்களால் பிடித்துக் கொண்டு வந்த உடும்புப் பொறியலுடன் செந்நெல் சோற்றை உண்டனர். இதனை,

"கவல் விளைநெல்லின் செவ்விதழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்
வறைகால் யாத்தது"
(பெரும்பாணற்றுப்படை -130-133)

என்னும் பாடலடிகளால் அறியலாம்.

### உழவர்கள்

பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் நிலமுள்ள உழவர் (உயர்ந்த வகுப்பினர்) நிலமற்ற உழவர் (தாழ்ந்த வகுப்பினர்) என்ற பாகுபாடு இருந்து வருகிறது. இவர்களுடைய உணவு வகையிலும்வேறுபாடுஇருந்தது.தொண்டை மண்டலத்தில் நெல் விளைவது குறைவு. புன்செய் விளைச்சலே அதிகம். அங்கு வாழ்ந்த உழவர்கள் வரகரிசிச் சோற்றைப் பழுக்கிய அவரைப் பருப்புடன் உண்டனர்.

"அவரை வான் புழுக்கட்டிப் பயில்வுற்று
இன்சுவை மூரல் பெறுகுவீர்"
(பெரும்பாணற்றுப்படை-195-196)

இது, ஏழை உழவர்களின் இயற்கை யான உணவினைப் பதிவு செய்கிறது. சொந்த நிலமுள்ள உழவர்கள் வேளாளர்கள் எனப்பட்டனர். இவர்கள் நுங்கு, பலா, இளநீர், சேப்பம் இலையுடன் கூடிய நல்ல கிழங்கினை உணவாக உண்டனர் என பெரும்பாணாற்றுப்படை பதிவு செய்கிறது.

### இடையர்

முல்லை நிலத்தில் வாழும் இடையர்கள் ஆடு மாடுகளாகிய செல்வம் உடையவர்கள். இவர்களுடைய உணவு,

"பசுந்தினை மூரல் பாலொடும்
பெறுகுவீர்"
(பெரும்பாணற்றுப்படை-168)

தானியங்களும் திணைச்சோறும் எனக் கூறப்பெற்றுள்ளன.

### அந்தணர்

பெரும்பாணாற்றுப்படை பதிவு செய்யும் அந்தணர்களின் உணவு 'இராஜான்னம்' எனப் பெற்ற உயர்ந்த நெற்சோறு, பாற்சோறு, பருப்புச்சோறு, மாதுளம் பிஞ்சைப் பிளந்து மிளகுப்பொடியும், கறிவேப்பிலையும் கலந்து பசும்வெண்ணெயில் வேக வைத்த பொரியல், வடுமாங்காய், மாங்காய் சாதம், புளியஞ்சாதம் என்பன ஆகும்.

"சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து
உருப்புறு பசுங்காய்ப் போழொடு கறி கலந்து
கஞ்சம் நறுமுறி அளைஇப் பெந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த"
(பெரும்பாணற்றுப்படை.310-316)

### சிறுபாணாற்றுப்படையில் உணவு

ஓய்மா நாட்டின் சிற்றூர்களான எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் போன்ற ஊர்களில் வாழும் மக்களின் உணவுகள் பலதரப்பட்டன. எயிற்பட்டினத்து நெய்தல் நில மக்கள் மீன் உணவை மிகுதியாக உண்டனர்.

"வறல் குழல் சூட்டின் வயின் வயின்
பெறுகுவர்" சிறுபாணாற்றுப்படை-168)

வேலூரில் வாழும் வேடர் குலப்பெண்கள் இனிய புளிக்கறியையும், விரும்பத்தக்கச் சோற்றையும் ஆமானுடைய சூட்டிறைச்சியையும் உணவாக எடுத்துக் கொண்டனர்,

"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமா சூட்டின் அமைவரப் பெறுகுவீர்"
(சிறுபாணற்றுப்படை-175-177)

ஆமூரில் வாழும் உழவர்கள் வயலில் பிடித்த நண்டையும், பீர்க்கங் காயையும் வெண்மையான சோற்றுடன் உண்டனர்.

"அவைப்பு மானரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையோடு
பெறுகுவீர்"
(சிறுபாணற்றுப்படை-194-195)

## கூத்தராற்றுப்படையில் உணவு

முல்லை நிலத்தில் வாழும் இடையர்கள் தங்களின் உணவாக பாலும், பாற்சோறும் உண்டனர்.

"பல்யாட்டு இனநரை எல்லினின் புகினே
பாலும் மிதவையும் பண்ணாது
பெறுகுவீர்" (கூத்தராற்றுப்படை-416-417)

சிற்றூர்களில் வாழும் மக்களின் உணவாக நெய்யிலே வெந்த மாமிசத்தின் பொரியலையும், திணைச் சோற்றையும் உணவாக உண்டனர்.

"நெய்க்கண் வேவையோடு
குரூஉக்கன் இறடிப் பொம்மல் பெறுகுவீர்"
(கூத்தராற்றுப்படை-168-169)

## நிறைவுரை

ஆற்றுப்படை நூல்களின் வாயிலாகப் பழந்தமிழர்களின் உணவு பற்றிய எண்ணற்ற செய்திகள் கிடைக்கின்றன. இதில் உணவு பற்றிய செய்திகள் இன்றியமையாதவை.

ஐவகை நில மக்களின் உணவுமுறைகள் சுட்டப்பெற்றுள்ளன.

பழந்தமிழர்கள் இனக்குடிகளின் உணவுமுறை சூழலுக்கேற்ப மாறு பட்டுள்ளன.

அசைவ உணவையே பலதரப்பட்ட மக்களும் விரும்பி உண்டனர் என்ற செய்தியை அறியமுடிகின்றது.

அந்தணர்கள் சைவ உணவு 'இராஜான்னம்' என்று குறித்தனர்.

# பழந்தமிழர் பண்பாட்டில் ஏறு (கலித்தொகையை முன்வைத்து)

நெறியாளர்
**முனைவர் ஜெ.கோகிலா,**
உதவிப்பேராசிரியர்,
செந்தமிழ்க்கல்லூரி,
மதுரை.

ஆய்வாளர்
**பா.சரோஜினி தேவி,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க்கல்லூரி,
மதுரை.

## முன்னுரை

தொல்காப்பியம் தொடங்கி சங்க நூல்கள் அனைத்திலும் உயிரினங்கள் குறித்த செய்திகள் அதிகளவு காணப்படுகின்றன. குறிப்பாக மக்களுடைய வாழ்க்கையில் விலங்குகள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. தொல்காப்பியர் ஒவ்வொரு விலங்கிற்கும் மரபுப் பெயர்களில் இளமைப்பெயர், ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர் என பட்டியலிட்டுக் காட்டுகிறார். இதன் அடிப்படையில் கலித்தொகையில் "ஏறு" என்ற ஆண்பால் பெயர் எவ்வாறு, எந்தெந்த விலங்கிற்குப் பயன்படுகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மரபுப்பெயர்கள்

தொல்காப்பியர் தம் காலத்தில் வழங்கிய உயிரினங்களின் பெயர்களை நூல் முழுவதும் கூறியிருந்தாலும் சிறப்பாக மரபியலில் விளக்குகிறார். ஆண்பால் பெயர்களைப் பட்டியலிடும் இடத்தில் பறவைகளில் ஆணிற்கும், விலங்குகளின் ஆணிற்கும் பொதுவாக அமையும் பெயர்களைக் குறிப்பதாக

**"எருதும், ஏற்றையும், ஒருத்தலும், களிறும்,**
**சேவும், சேவலும், இரலையும், கலையும்...."**
(தொல்.மரபியல்.1501)[1]

என்னும் நூற்பாக அமைகின்றது.

## "ஏறு" எனும் பெயர்பெறுவன

"ஏறு" என்றும் ஆண்பால் பெயரைப் பன்றி, புல்வாய், உழை, கவரி எனும் நான்கிற்கும் உரியது என்கிறார் தொல்காப்பியர். இதனை,

**"பன்றி, புல்வாய், உழையே, கவரி**
**என்று இவை நான்கும் ஏறு எனற்கு உரிய"**
(தொல் - மரபியல் 1538)[2]

என்ற நூற்பாவால் விளக்குகிறார். மேலும், ஏற்றை என்ற சொல்லானது ஆற்றல் மிக்க வலிமை வாய்ந்த ஆண் இனம் அனைத்திற்கும் உரியது,

**"ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கு எல்லாம்**
**ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப"**
(தொல்.மரபியல். 1549)[3]

என்ற நூற்பாவிலிருந்து ஏறு என்ற சொல் மாட்டின் ஆணிற்கும், சுறா, எருமை, மான் இவைகளின் ஆண்பால் பெயரையும் உணர்த்தி வருவதை கலித்தொகையின் வாயிலாக அறிய முடிகின்றது.

## "ஏறு" – சொற்பொருள் விளக்கம்

"ஏறு" என்ற சொல்லுக்கு "உயர்ச்சி, பசு, சிங்கம், எருமை முதலியவற்றின் ஆண், ஆண்சுறா, ஆண்சங்கு, பனை முதலிய மரத்தின் ஆண்"[4] என்று தமிழ்ச் சொல்லகராதி விளக்கம் தருகிறது.

விலங்கின் ஆண்மரபாக "களிறு, போத்து, கலை, கடுவன், பகடு, சே,

ஒருத்தல், தகர், ஏறு, உம்பல், ஏமட்டை, மா, ஒரி, சேவல்"[5] என்று பிங்கல நிகண்டும் விளக்கம் அளிக்கிறது. மாட்டினத்தின் ஆணினைக் குறிக்க "காளை" என்ற சொல்லையும் பயன் படுத்தி வருகிறோம்.

## காளையின் வகைகள்

வாழ்வியல் பண்பாட்டோடு கலந்த ஏறுதழுவுதலில் பல்வேறு வகையான காளைகளை முக்கூடற்பள்ளு எடுத்தியம்புகிறது. அவை, "குடைக் காம்பன், செம்மறையன், குத்துக்களம்பன், மோழை, குடைச்செவியன், குற்றாலன், கூடுகொம்பன், மடப் புல்லை, கரும்போரான், மயிலை, கழற்சிக் கண்ணன், மட்டைக்கொம்பன், கருப்பன், மஞ்சள் வாலன், படைப்புப் பிடுங்கி, கொட்டைப்பாக்கன், கருமறையன், விடத்தலைப் பூநிறத்தான், வெள்ளைக்காளை"[6] போன்ற பல்வேறு காளைகளின் பெயர்களை வரிசைப்படுத்திக் காட்டுகிறது.

## கலித்தொகையில் காளைகள்

கலித்தொகையில் குறிப்பாக முல்லைக்கலியில் பல்வேறு காளைகளின் பெயர்கள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு காளையும் நிறம் மற்றும் குணத்தின் அடிப்படையில் அமைந் தவையாக அமைகிறது.

சாம்பல் நிறம்கொண்ட காளை

செம்புள்ளி உடைய வெள்ளைக்காளை

கருநிறக்காளை (சந்திரன் சுழி உடையது)

கரிய நிறக்காளை

செவலைக்காளை

வெள்ளைக்காளை

குரால் காளைகள்

புகர்வகைக்காளை

போன்ற கலித்தொகையின் பல்வேறு காளைகளின் பெயர்கள் பல பாடல்களின் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

## சுறா ஏறு

தலைவன் பரத்தையின் பொருட்டு தலைவியைப் பிரிந்து இருத்தலையும், தலைவனின் பிரிவால் தலைவி இரங்கி இருத்தலையும் எடுத்துரைக்கும் இப் பாடலில், பரத்தை செருக்கினால் தன்னை எள்ளி நகையாடுவது தெரிந்தும், அப்பரத்தை யார் என்று அறிந்து கொள்ள முயன்ற தலைவியின் அறியாமை நகைப்பிற்குரியது.

> **"நறாஇதழ் கண்டன்ன செவ்விரற்கு ஏறுபச்**
> **சுறாஏறு எழுதிய மோதிரம் தொட்டாள்**
> **குறியறிந்தேன்"** (கலி - 84)

என்ற பாடலில் ஆண்சுறா பொறிக்கப் பட்ட மோதிரம் பரத்தையால் தலைவனுக்கு அணியப்பட்டதைத் தலைவி கண்டு வருந்துவதையும் அணிகலன்களின் வடிவம் பற்றிய தமிழரின் சிந்தனையையும் அறியலாம்.

மாலைநேரமானது கொல்லக்கூடிய காமநோயைத் தருவதைப் போல மீன்களைக் கொல்லும் தன்மையுடைய ஆண்சுறா கடற்கரை எங்கும் நிறைந்து பிறர் இயங்க முடியாதவாறு காவல் செய்கின்றது.

> **"கொல்லேற்றுச் சுறவினம் கடிக்காண்ட மருள்மாலை**
> **அல்லல்நோய் செய்தான்கன் சென்றார்"**
> (கலி - 123.)

பிரிந்த தலைவன் தலைவிக்கு மாலை நேரமானது தீராத வருத்தத்தைத் தரகூடியது. இத்தகைய காமநோயைத் தந்த தலைவனைக் காண தலைவி விருப்பம் உற்றதையும், தன் மனத்தை ஆற்றுப்படுத்திக் கொண்டமையையும் ஆண்சுறா கடலில் உலவும் நேரத்தையும்

கணக்கிட்டு வைத்திருந்த்தையும் காணமுடிகிறது.

### எருமை ஏறு

எருமை இனத்தின் ஆணினத்தைக் குறிக்கும் எருமை ஏற்றுப் பாடல்களும் இடம்பெறுகின்றன. ஏறுதழுவுதலில் ஆற்றல்மிக்க காளையை அடக்கி வெற்றிபெறும் வீரன் தெய்வத்திற்கு ஒப்பானவன் என்றும், அவனே சிறந்த ஆண்மகன் என்றும் கூறப்பெற்றுள்ளன.

"ஏற்று எருமை நெஞ்சம் வடிம்பின
இடத்திட்டுச்
சீற்றமோடு ஆருயிர் கொண்ட ஞான்று..."
(கலி - 108)

இளைஞன் ஒருவன் காற்றினைப்போல பாய்ந்து வரும் காரிக்காளையை ஊற்று நீரைக் தடுப்பவன் போல எளிமையாக அடக்கி சவாரி செய்கிறான். இந்தச் செயலானது காண்பவருக்கு உயிர் வாங்கும் எமன் எருமைக் கடாவில் வருவதுபோல அச்சப்படுத்தும் செயலாக இருக்கிறது.

### பெற்றம் ஏறு

முல்லை நில மக்களின் திருமணச் சடங்குகளில் ஏறுதழுவுதல் முதன் மையான நிகழ்வாக அமைகிறது. காளையை அடக்குவதற்கு அஞ்சு பவனை எந்த ஆயர் மகளிரும் மணந்து கொள்ள மாட்டாள் என்ற செய்தியும் ஏறுதழுவுதலை ஏறுகோடல், ஏறுசாடல், ஜல்லிக்கட்டு. மஞ்சுவிரட்டு என பல பெயர்களில் அழைக்கப்படுவதையும், இங்கு "ஏறு" என்பது பெற்றங்களின் ஆண் ஏற்றினையே குறிக்கும் என்பதையும் அறியலாம்.

"ஆர்கலி உவகையர் ஒருங்குடன் கூடித்
தீதின்று பொலிகெனத் தெய்வக் கடிஅயர்மார்"
(கலி.105)

என்ற பாடலடிகளில் ஏறுதழுவுதல் திரு விழாவில் ஆடு, மாடுகளை மேய்க்கும் ஆயர்கள் தம்முள் கலந்து பேசி பலவகை ஏறுகளைக் களத்தில் நிறுத்தினர் என்ற செய்தியையும், தங்களுக்குள் ஒற்றுமை உணர்வும், திருவிழாக்களின் போக்கையும் இப்பாடலால் அறிய முடிகிறது.

### கலித்தொகையில் ஏற்றின் வேறுபெயர்கள்

கலித்தொகையில் ஏறு என்ற சொல்லானது பத்தொன்பது பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

ஏறு என்ற சொல்லானது ஏற்று, ஏற்றின், ஏற்றினை, கொல்லேறு, வெள்ளேறு, நல்லேறு, பல்லேறு, ஏற்றை என்று பல பெயர்களில் வந்துள்ளது.

இருப்பினும் ஏற்றினைக் குறிக்கும் சொற்களாக ஏளர், எருது, காளை, திமில், மருப்பு, கோடு, கொம்பு, இமில் போன்ற பல்வேறு சொற்கள் கலித்தொகையில் இடம்பெற்றுள்ளன.

அந்தந்த இனத்தினைக் குறிக்கக் கூடிய எருமைஏறு, சுறாஏறு, மடமான் ஏறு போன்ற சொற்களும் காணப் படுகின்றன.

கோள், விடையோள், பிணி என்ற சொல் ஏறு தழுவுதலையும்

கதழ்விடை என்ற சொல் விரைந்து நடக்கும் காளையையும்

பாண்டில் என்பது எருதையும்,

காளை என்ற சொல் ஏற்றினையும் குறித்துக் கலித்தெகைப் பாடல்களில் பயின்று வந்துள்ளன.

### முடிவுரை

ஆண்மையைத் தாங்கிப் பிடிக்கும் பெண்மையின் பெருமைமிகு வாழ்வியலை எடுத்தியம்பும் நூலாக கலித்தொகை விளங்குகிறது. மக்களின் வாழ்வியலில் கடவுள் வழிபாடு, நம்பிக்கை, திருவிழாக்கள் தொடர் பான பண்பாட்டுச் செய்திகளும்

இடம்பெறக்கூடியதாக விளங்குகின்றன. இல்லற வாழ்வியல் இடம்பெறக்கூடிய பிரிவையும், இல்லற வாழ்விற்கு வித்திடும் ஏறுதழுவுதலையும் முதன்மையாக கொண்ட நூலாகவும், பழங்காலத் தமிழர் தம் வீரமாண்பை எடுத்துரைக்கும் நூலாகவும் கலித்தொகை அமைகிறது. ஏறு தரும் வீரம் என்ற அடிப்படையில் அமைந்த பண்பாட்டுப் பதிவுகளாக கலித்தொகையில் இடம்பெறும் முல்லைக்கலிப் பாடல்களின் செய்திகள் உள்ளன.

## துணைநூற்பட்டியல்

சுப.அண்ணாமலை (உ.ஆ) – சங்க இலக்கியம் மூலமும் உரையும் (கலித்தொகை), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

சு.இலம்போதரன் (பா.ஆ)– பழைய தமிழ் அகராதி, பிங்கல நிகண்டு, வசந்தா பதிப்பகம், சென்னை.

தமிழண்ணல் (உ.ஆ) – தொல்காப்பியம், செல்லப்பா பதிப்பகம், மதுரை.

திவான் பஹதூர் ச.பவானந்தம் பிள்ளை – தமிழ்ச் சொல்லகராதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

கவிஞர் ஆ.முத்துவேலன் (தொ.ஆ) – ஏறுதழுவுதல் சோழவந்தான் முத்தையாப்புலவன், வசந்தா பதிப்பகம், சென்னை – 88.

# சிற்றிலக்கியங்களில் பண்பாட்டுச் சிந்தனைகள்

**முனைவர் ஜெ.போ.சாந்திதேவி**
முதல்வர் (பொ.,),
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

இலக்கியம் மனிதவாழ்க்கையை விளக்கிக்காட்டும் காலக்கண்ணாடி போன்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுந்த இலக்கியம் அக்காலத்தின் வாழ்வியல் நடைமுறைகளை விளக்கிக் காட்டுவனவாக விளங்குகின்றது. அவற்றில் சிற்றிலக்கியங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. வாழ்வியலை விளக்கிக் காட்டும் சமுதாய பணியில் பேரிலக்கியங்களைவிடச் சிற்றிலக் கியங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. இக்கட்டுரையில் வாழ்வியல் பற்றியும் வாழ்வில் இருக்க வேண்டிய நிலைகள் பற்றியும் ஆய்வதே நோக்கமாகக் கருதப்படுகின்றது.

## பண்பாடு என்பதன் பொருள்

பண்படுவது பண்பாடு, பண்படுதல், சீர்படுதல் அல்லது திருந்துதல் என்பதாம். நிலத்தை பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலம் எனறும் திருந்திய தமிழை பண்பட்ட செந்தமிழ் என்றும் திருந்திய உள்ளத்தை பண்பட்ட உள்ளமென்றும் கூறுவது வழக்கம்.

பண்பாடு பல பொருட்களுக்கு உரியதேனும், நிலமும் மக்கள் உள்ளமும் பற்றியே பெருவழக்காக பேசப்படும் ஆங்கிலத்தில் (Culture) என்னும் பெயர்ச்சொல் சிறப்பாக நிலப் பண்பாட்டையும் உளப் பண் பாட்டையும் குறிப்பதாக உள்ளது.

பண்டைய காலத்தில் நாகரிகம் என்னும் சொல்லை பண்பாடு என்னும் பொருளிலும் ஆண்டனர். அதனாலேயே பண்பாட்டு குணம் ஆன கண்ணோட்டத்தை நாகரீகம் என்கிறார் திருவள்ளுவர்,

**“பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்”**

எனும் குறள் மூலம் அறியலாம்.

## வாழ்வியலில் நிலைகள்

வாழ்வியல் நோக்கில் இருக்க வேண்டிய நிலைகள் என்று பார்க்கையில் இரண்டு நிலைகள் குறிப்பிடப்படுகிறது. ஒன்று இறைநிலை மற்றொன்று மனிதநிலை.

**‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையும்
தெய்வத்துள் வைக்கப் படும்’**

என்பது வள்ளுவரின் வாக்கு. வையத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்வியல் சிந்தனைகள் அவசியமாகிறது. வாழ்க்கை அன்புடையதாகவும் பண்புடைய தாகவும் பயனுடையதாகவும் விளங்க உயரிய சிந்தனைகளும் உயரிய செயல்களும் அடிப்படையானவை. வாழ்கின்ற மக்களுக்கும் வாழப்போகும் மக்களுக்கும் வாழ்ந்தவர்கள் பாடமாக அமைய வேண்டும். இதனை நன்கு உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள் அவர்களுடைய வாழ்வியல்

சிந்தனைகளை நம் இலக்கியங்கள் நன்கு உணர்த்துகின்றன.

## சிற்றிலக்கியங்கள்

பிரபந்தம் என்ற வடமொழிச் சொல்லினையே சிற்றிலக்கியம் என்றனர். தமிழில் சிற்றிலக்கியங்கள் 96 வகையாக வழங்கப்படுகிறது. இலக்கியத்தில் புதிய மரபுகள் உருவாவது இயல்பானதாகும். எனவே பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியம் ‘விருந்தே தாம் புதுவது கிளந்த யாப்பினன் மேற்றே’ என்கிறது.

முதன்முதலில் பன்னிரு பாட்டியலே சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்தது. சிற்றிலக் கியங்களின் பாடுபொருளாக ‘சிற்றின்பமும் பேரின்பமும்‘ அடங்கி யுள்ளன. பொதுவாக இறைவன், அரசன், வள்ளல், ஆசான் ஆகியோரின் சிறப்பினை எடுத்துரைத்தலே சிற்றிலக்கியங்களின் பணி எனலாம். இதன் காலம் நாயக்கர் காலம் என்றும் கூறப்பட்டுள்ளது.

## இறைநிலை

ஒரு சமுதாயம் முன்னேற்றம் பெற வேண்டுமானால் அச்சமுதாய மக்கள் இறைச்சிந்தனை உடையவர்களாகத் திகழவேண்டும். நாட்டுக்குத் தலை வனான மன்னனைப் புகழ்வது போல உலகத்தின் தலைவனும் முதல்வனும் ஆன இறைவனை நாம் புகழ வேண்டும் என்ற நோக்கத்தில் சில நூல்களும் சிற்றிலக்கியங்களும் தோன்றி யுள்ளன. எடுத்துக்காட்டாக நவமணி மாலை, இரட்டைமணி மாலை, மும்மணிக்கோவை, மும்மணி மாலை, நான்மணிமாலை, தூது, உலா போன்ற சிற்றிலக்கியங்கள் பக்தி தழுவியன வாகவும் திகழ்ந்து வருகின்றன.

## தெய்வநிலை எய்தல்

மண்ணில் மனிதராகப் பிறந்து தெய்வநிலை அடைபவர்களையும் இலக்கியங்களில் காணமுடிகிறது.

“மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
வாரி வாரி வழங்கும்போது வள்ளலாகலாம்”

என்ற பாடலடிகள் இங்கு நினைவு கூரத்தக்கவை. மனிதராகப் பிறந்தவர்கள் சிலருக்கே இந்த நிலை கிட்டும். அந்தவகையில் சிற்றிலக்கியங்கள் குறிப்பிடும் மன்னனை இங்குக் குறிப்பிடலாம். தெய்வ வாழ்வு வாழ்வோருடைய வாழ்க்கையைத் தன் பொருட்டு அமையாது பிறர் பொருட்டு அமையும் அது பொதுநலம், மனிதநலம், மனித குலம் ஆகியவற்றிற்கு அமையும். இவர்கள் வாழப்பிறந்தவர்கள் இதனைத் ‘திருநாவுக்கரசரும் மனிதப்பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே’ என்று பாடியுள்ளார். தெய்வ வாழ்வு வாழ அனைவராலும் முடியாவிட்டாலும் முயற்சிக்க வேண்டும் என்று சிற்றிலக்கிய நூல்கள் எடுத்துரைக்கின்றன.

## அரசநிலை

மன்னராட்சிக் காலத்தில் சமுதாயத்தின் மூத்த தலைமகனாக விளங்கும்சிறப்புடையவனானமன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டும் சிற்றிலக்கியங்கள் தோன்றின. 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஏறத்தாழ 35 வகைச் சிற்றிலக்கியங்கள் அரச சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

‘வீர வெட்சி மாலை
வெற்றிக் கரந்தை மஞ்சரி
போர்க்கெழு வஞ்சி
காஞ்சி மாலை
நொச்சி மாலை
உழிஞை மாலை
தும்பை மாலை
வாகை மாலை’

என வரும் எட்டுவகைச் சிற்றிலக்கியங்கள் அரச சமூகத்தில் ஒவ்வொரு வகைப் போருக்கும் ஒவ்வொரு வகையான

பூவைச் சூடிக்கொள்ளும் மரபை உணர்த்துகின்றன. 'கண்படைநிலை' அரசன் உறங்குவதை எழுவதை விழித்து என்றும் சிறப்பித்து சிறப்பித்துத் 'துயிலெடைநிலை' என்றும் சிற்றிலக்கியங்கள் பாடப்பட்டன. அரசனின் பத்துவகை அங்கங்களைச் சிறப்பிக்கும் நிலையில் 'தசாங்கம்' தசாங்கத்தில் 'சின்னப்பூ' என்று பல சிற்றிலக்கியங்கள் உள்ளன.

### மகளிர் நிலை

சமுதாயத்தில் பெண்கள் முக்கிய இடம்பெறுகின்றனர். அவர்கள் அறிவாற்றல் உடல்நலம் போன்றவற்றைப் பேணும் வகையில் பல விதமான விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர். 'கழங்கு', 'அம்மானை', 'ஊசல்' ஆகிய விளையாட்டுக்கள் பெண்களுக்குரியன வாகவும் இருப்பதனைக் காணமுடிகிறது. தோழியர் பலர் கூடி ஒருவர் மாறி ஒருவராகத் தொங்கவிடப்பட்ட ஊஞ் சல் ஏறி பாட்டுடைத்தலைவர் புகழப் படுவதை 'ஊசல்' எனும் சிற்றிலக்கியம் விளக்குகிறது. மேலும் கும்மிப்பாட்டு, ஒயிற்கும்பி. பந்தடிப்பாட்டு, குரவைப் பாட்டு,வள்ளைப்பாட்டு.பாவைப்பாட்டு இன்னபிற சிற்றிலக்கிய நூல்கள் மகளிரின் விளையாட்டுச் சிந்தனைகளையும். இறைச்சிந்தனைகளையும் எடுத்துரைக் கின்றன. இவற்றின் மூலம் சமுதாயத்தில் மகளிர் பல விளையாட்டுக்களை ஒற்றுமை உணர்வுடன் நிகழ்த்தியதை பல சிற்றிலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

### திருமண நிலை

சமுதாயத்தில் ஓர் ஆடவன் இரண்டு மனைவிகளைத் திருமணம் செய்துகொள்ளும் நிலையினைப் 'பள்ளு' இலக்கியத்துள் 'ஏசல்' பகுதி சான்றுகளாக உள்ளதனை அறியலாம். இருமனைவியருக்கிடையே உரிமைப்பூசல் நிகழ்வதும் ஏசல் எழுவதும் தவிர்க்க முடியாது என்று சிற்றிலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. ஏசல் நிகழ்த்தும் இரு பெண்களும் வெவ்வேறு சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். உரிமைப்பூசலின்உச்சகட்டம் சமயப்பூசலாகும். ஒவ்வொரு சமயமும் அங்கே ஏசல் நிகழ்த்தும் இருவரின் தீவிரமான சாடுதலுக்கு உட்படுகிறது. இங்கே உரிமைப்பூசல் காரணமாக நாட்டுவளத்தினை,

> "காயக்கண்டது சூரிய காந்தி
> கலங்கக் கண்டது வெண்தயிர்க் கண்டம்
> மாயக்கண்டது நாழிகை வாரம்
> மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
> சாயக் கண்டது காய்நிலைச் செந்நெல்
> தணிப்பக் கண்டது தாபதர் உள்ளம்
> தேயக்கண்டது உரைத்திடும் சந்தனம்
> சீவலமங்கை தென்கரை நாடே"

என்று இளையபள்ளி பாடுவதாகப் பள்ளு இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

### சமுதாய நிலை

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களிடையே வறுமையும் ஏழ்மையும் ஓங்கி நின்றபொழுதும் அந்த மக்களின் நல்வாழ்வு பொருட்டு எழுந்த இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள். அவற்றில் குறிப்பிடத்தக்கது பள்ளு இலக்கியம். இது உழவர்களது வாழ்க்கை நிலையினைச் சித்திரிப்பதாக அமையும் அழகிய நூலாகும். பாமர மக்களுக்கு முதன்மை கொடுத்து உருவாக்கப் பெற்ற இலக்கிய வகைகளுள் நொண்டி நாடகம், பள்ளு, குறவஞ்சி முதலியன அடங்கும். இவ்விலக்கியங்கள் அம் மக்களின் வாழ்வியல் நெறிகளை எடுத்துக்காட்டுகின்றன.

உற்சாகமாகப் பாடிக்கொண்டே நீரிறைக்கும் தொழிலாளர்கள் நிலையை ஏற்றப்பாட்டு எனும் இலக்கியமும் ஆறுகளையும் ஏரிகளையும் கொண்டு சேர்க்கும் ஓடத் தொழிலாளர் நிலையை ஓடப்பாட்டு எனும் இலக்கியமும்

கடலில் இசையோடு எதிர்நீச்சல் நிலையில் கப்பலைச் செலுத்தும் நிலையைக் கப்பல் பாட்டு என்ற இலக்கியமும் மக்களின் தொழிலையும் வாழ்வியலையும் புலப்படுத்துகின்றன.

## முடிவுரை

தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கிய வித்தானது சங்ககாலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து ஏழாம் நூற்றாண்டில் கோவையாக உருவெடுத்து எட்டாம் நூற்றாண்டில் உலாவாகி ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து பதினோறாம் நூற்றாண்டில் தூதாகப் பூத்து பதினாறாம் நூற்றாண்டில் பள்ளு இலக்கிய மாகிப் பல்வேறு சிறப்புக்களைப் பெற்றுள்ள சிற்றிலக்கியங்கள் சமுதாயச் சிந்தனைகளையும் சமுதாய அறங் களையும் உடைய பண்பாட்டுச் சிந்தனைகளை உணர்த்தும் நோக்கில் தமிழ் இலக்கிய உலகில் தமக்கென ஒரு தனிஇடத்தைப் பெற்றுள்ளது எனில் சாலப் பொருந்தும்.

# இளையான்குடி மாறனாரின் மனைவி

**முனைவர் த.சிவசங்கரி**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி
கடலூர்

பெரியபுராணம் மனித வாழ்வின் உன்னதமான பக்தி நெறியை அறிந்து கொள்ள உதவும் அரிய காப்பியம் ஆகும். எண்ணுதற்கரிய சோதனைகளைத் தாங்கி இறைத் தொண்டு ஒன்றையே சிந்தையில் எண்ணி சிவப்பேறு பெற்ற அடியவர்களின் வரலாற்றினை பெரியபுராணம் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

சேக்கிழாரால் படைக்கப்பட்டு, **"திருத்தொண்டர் மாக்கதை"** என்று பெயர் பெற்ற பெரியபுராணத்தில் திருவெண்காட்டு நங்கை, இளையான்குடி மாறனாரின் மனைவி, திருநீல கண்டரின் மனைவி ஆகியோரின் மாண்புகள் சிறந்து நிற்கின்றன. அடியார்களின் நோக்கம் நிறைவு எய்துவதற்கு அடிநாதமாக விளங்கிய அவரவரின் மனைவியர் ஆற்றிய தொண்டுகள் பலவாகும். அவ்வகையில் சிறப்பெய்திய இளையான்குடி மாறனாரின் மனைவியின் மாண்புகள் குறித்து இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது

## இளையான்குடி மாறநாயனாரின் செல்வநிலை

அறுபத்து மூன்று நாயன் மார்களில் ஒருவர் இளையான்குடி மாறனார். சிவகங்கை மாவட்டம் இளை யான்குடியில் பிறந்தவர். இந்த நகரம் இயற்கை வளத்தோடும், அருள் வளமும் பரிபூரணமாக நிரம்ப பெற்றது ஆகும். இளையான்குடியில் பிறந்த காரணத்தால் இளையான்குடி மாறனார் என்று அழைக்கப் பெற்றவர். பெருத்த வளம் உடைய மாறனார் எப்பொழுதும் இறைச் சிந்தனையில் உள்ளவர். இளையான்குடி மாறநாயனாரும் அவரின் மனைவியும் வள்ளுவர் கூறும் விருந்தோம்பல் அறத்தை நன்கு உணர்ந்து, அதன்படி ஒழுகுபவர்கள். உழவுத்தொழிலால் நிறைந்து அளித்தலிலும், அன்பர்களிடத்து அன்பின் மேன்மையால் நிறைவு எய்துதவிலும் மன நிறைவு எய்தும் இயல்பினர். பொருள் பெற்றவருக்கு பயன் அதனைப் பிறருக்கு கொடுத்து மகிழ்வதில் தான் உள்ளது.

"ஏரின் மல்குவ ளத்தி னால்வரும்
எல்லை இல்லதொர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யார்"

என்கிறார் சேக்கிழார். செல்வமும், அன்புள்ளமும் ஒருங்கே அமையப்பெற்ற இளையான்குடி மாறனார் அவற்றைப் பெற்றதன் பயனை முழுமையாக அடைந் திருந்தார் என்கின்றார் பெரியபுராண ஆசிரியர். விருந்தினராக அடியவர்கள்; வருவதே தம் தவப்பயன் என்று எண்ணி வாழ்பவர் இளையான்குடி மாறனார். செல்வத்தின் பயன் காரணமாக, சிவபெருமானுடைய அடியவர்கள் என்னும் முறைமையால் தம்மை நாடி வருவோரை எதிர்கொண்டு வரவேற்று இனியமொழிகளைச் சொல்லும் தன்மையினர் அவர்.

"கொண்டு வந்தும னைப்புகுந்துகு
குலாவு பாதம்வி ளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை"

இப்பாடலடிகளை,

"அகனமர்ந்து ஈதலின் நன்றே, முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்"

என்ற குறளுடன் ஒப்பிடலாம்.

மாறனார் அடியவர்களை வரவேற்று, கோலமிட்ட பலகையில் அமரச் செய்து பாதம் வணங்கி, மிக விருப்பத்தோடு நாளும் வரவேற்றார்.

"செல்வம் மேவிய நாளி லிச்செயல்
செல்வ தன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குர வான போதிலும்"

செல்வம் பெருகியிருந்த காலத்தில் மட்டுமல்லாது துன்பத்தை விளைவிக்கும் வறுமை உண்டானபோதும், தமக்குரிய உண்மையான பக்தியினால் விருந்தோம்பல் பண்பினைச் செய்வ தென்பதை யாவர்க்கும் அறிவிக்க இறைவன் நினைக்கின்றார். இதனால் இவரின் செல்வம் மெல்ல மெல்லக் குறைகின்றது. நாள்தோறும் நிலைமை திரிய விரைவில் வறுமை நிலையை அடைகின்றார்.

"இன்னவாறுவ ளஞ்சு ருங்கவும்
எம்பிரான் இளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குத
லின்றி யுள்ளன மாறியும்"

மழைக் காலத்தில் ஓர் இரவில், தனியாக வந்து அடக்கமுடியாத பசி வாட்டுகிறது என்று வந்த அடியாரை எதிர்கொள்கின்றார் மாறனார். அடியாரின் மேல் இருந்த ஈரத்தைப் போக்க, தக்க ஆசனம் கொடுத்து அவர் மனம் நிறைவு கொள்ளும் பொருட்டு தன் மனைவியாரை நோக்கி தபோதனார் பசியில் உள்ளார். இதனை போக்க வழி என்ன என்று தெரியவில்லை என்கின்றார்.

சிவனடியார் எங்கு வந்தாலும், எவ்பொழுது வந்தாலும் 'இல்லை' என்னாது விருந்து படைத்து உபசரிப்பதை தன் கொள்கை எனக் கடைப்பிடித்து வந்த நாயனார் செய்வது அறியாது கலங்கியபொழுது, இளையான் குடி மாறனாரின் மனைவியின் செயல் சிந்திக்க வைக்கின்றது.

"மாது கூறுவள் மற்றொன்றும் காண்கிலேன்
ஏதி லாரும் இனித்தகு வாரில்லை
போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயலென்று"

இளையான் குடி மாறனார் அடியவரை உண்பிப்தற்கு வேறு வழி இல்லை, இனி கொடுப்பவரும் இல்லை காலமும் கழிந்து நள்ளிரவு ஆயிற்று. தீவினைனாகிய எனக்கு இனிமேல் செய்யத்தக்க செயல் ஒன்று மில்லை என்று கலங்குகின்றார்.

அடியவரை உண்பிப்பதற்கு வழி தெரியாத நிலையில் இளையான்குடி மாறனாரின் மனைவிக்கு ஓர் அரிய போதனை தோன்றுகிறது. பகற்பொழுதில் வயலில் விதைத்திருந்த முளைப்பதற்கு உரிய நெல்லை வாரிக் கொண்டு வந்தால் அதனைக் கொண்டு தக்கவாறு உணவு சமைக்க முடியும் என்று கூறினார். இது தவிர வேறு வழி இல்லை என்று வருந்திக் கூறினார்.

"செல்லல் நீங்கப் பகல்வித்தி யசெந்நெல்
மல்லல் நீர்முனை வாரிக்கொ டுவந்தால்
வல்ல வாறமு தாக்கமும் ஆகுமற்
றல்ல தொன்றி யேனென் றயர்வுற"

"இரும்தோம்பி இல்வாழ்வதெல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்னும் வள்ளுவரின் வாக்கும் நினைக்கத்தக்கது. வந்த அடியவருக்கு அமுது செய்விப்பது இல்லானின் கடமை ஆதலால் அதனைச் செய்ய இயலாத நிலை குறித்து வருந்துகிறார். பின்

பகலில் வயலில் விதைத்த நெல் பற்றிய நினைவு வந்ததும் அதைக்கொண்டு வர செய்து சமைக்கலாம் என்ற எண்ணத்தை நாயனாரிடம் கூறுகின்றார். இவ்வாறு கணவனின் தொண்டிற்கு இடையூறு வந்த காலத்தில் அதைத் திறம்பட நேர் செய்த பெருமை அவரின் மனைவியை சாரும்.

'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா'

என்ற கவிமணியின் கவிதைக்கேற்ப செயல், சிந்தனை, வாழ்வியல், பண்பாடு, அறம் எனப் பலதிறத்தில் வாழ்ந்து காட்டிய பெண்களைப் பெரியபுராணத்தில் பல திறப்பட்ட பண்பாட்டுக் கூறுகளைச் செயல்பாடுகளாகச் சித்தரித்துக் காட்டிய சிறப்பு சேக்கிழாருக்கே உண்டு. அவ்வகையில் ஒருவனுக்குத் தன் பகைவர் முன்பு ஏறுபோல் நடக்கும் பெருமிதநடை அவன் மனைவியாலேயே வாய்க்கப்படும் என்பதை,

"புகழ்புரிந்த தில்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பிடு நடை"

என்று கூறுகின்றார் வள்ளுவர். மேலும் வாழ்க்கைத் துணையாக அமைந்த பெண்ணின் சிறப்பைக் கூறும்போது,

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை"

என்ற குறளில் வாழ்க்கைத் துணையாக அமையும் பெண்ணின் முக்கியத்துவம் இடம் பெறுகிறது. இவற்றால் ஒழுக்கமும், இல்லறத்தை பேணும் திறமும் உடைய பெண்ணால் குடும்பம் உயர்வடையும் என்பதற்கேற்ப இளையான் குடி மாறநாயனாரின் செயல் உயர் நிலைமை அடைவதற்கு அவரின் மனைவியே முக்கிய காரணமாகின்றாள்.

அடியார்க்கு அமுது படைப் பதையே சிவத்தொண்டாகக் கொண்ட இளையான்குடி மாற நாயனாரைச் சோதிக்க இறைவனே அவருக்குக் கடுமையான வறுமையைக் கொடுத்து கொட்டிய மழையில் இரவில் பசியுடன் வர என்ன செய்வதன்று திகைத்த நாயனாருக்கு அவர் மனைவியார் கழனியில் நாற்றுவிட்ட நெல்லைக் கொணரச் செய்து வறுத்துக் குற்றி அரிசி ஆக்கிய நிகழ்வு,

"வந்தபின் மனைவி யாரும்
வாய்தலின் நின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில்
சோற்றினையலம்பி யூற்றி
வேந்தழல் அடுப்பின் மூட்ட
விறகில்லை யென்ன மேலோர்
அந்தமின் மனையில் நீடும்
அலக்கினை யறுத்து வீழ்ந்தார்"
"முறித்தவை அடுப்பின் மாட்டி
முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் அரிசி யாக்கி
வாக்கிய உலையிற் பெய்து"

என்று வரும் பாடல்களில் மூலம் கூறப்பெற்றுள்ளன.

இளையான்குடி மாற நாயனார் வயலிற்கு சென்று நெல் விதைகளை வாரிக் கொண்டு வருவதை எதிர் நோக்கி அம்மையார் வீட்டு வாயிலில் காத்திருந்தார். இத்தன்மை அவரின் அன்பின் பத்தியன்மையை காட்டுகிறது. இவர்தம் கணவரிடத்து கொண்ட அன்பு மேம்பாட்டை அடியவரிடத்து கொண்டிருந்த பக்தி மேம்பாட்டையும் ஒருங்கே காட்டுகின்றன. மேலும் மனையிடத்து பெற்ற அலக்குகளை எடுத்து அடுப்பில் சேர்த்து முறை நெல்லை விதையை முதலில் அரிசியாக்கும் பக்குவத்திற்கு விரும்பி உண்ணக் கூடிய இனிய திருவமுது செய்வதற்கு முனைந்தார்.

"வெறுப்பில்இன் அடிசி லாக்கி
மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கனி யென்செய் கோமென்
நிறைஞ்சினார் கணவ னாரை"

இளையான்குடி மாறநாயனார் வயலிற்கு நெல் விதைகளை வாரிக் கொண்டு வருவதை எதிர் நோக்கி அம்மையார் வாயிலில் காத்திருந்தார். இத்தன்மை அன்பு மேம்பாட்டையும், பக்தியையும் ஒருங்கே காட்டுகின்றது. நாயன்மாரும் அவர் தம் மனைவியாரும் விருந்தோம்பலைத் தங்கள் இல்லறக் கடமையாகக் கொண்டு பெருமை பெற்றவர்கள். இல்லறம் என்பது இரு சக்கரங்களில் பூட்டப்படும் வண்டியைப் போன்றது. ஆணும், பெண்ணுமான இரு சக்கரங்களும் ஒருமித்துச் சென்றால்தான் இல்லறம் இயல்பாகும். வறுமையுற்ற காலத்தில் வந்த அடியாரின் பசி தீர்க்க மனைவி சொற்படி மழைக்கால இரவில் வயலுக்குச் சென்று விதைத்த நெல்மணிகளைத் துழாவி எடுத்து வருகின்றார். தோட்டத்தில் பறித்த கீரையுடன் விதைநெல் அரிசியை கொண்டு அடியாருக்கு அமுது படைக்க விழைகின்றார். இருவரும் கருத்து ஒருமித்து வறுமையிலும் தங்கள் இல்லறக் கடமையைச் செய்து இறைவனின் ஒருவடிவைக் காணும் பேறு பெற்றனர்.

மனைத்தக்க மாண்புடைய வளாகி, இல்லறம் பேணித் தனக்கும் தன் குடும்பத்துக்கும் நல்லதை நல்குபவர்கள் பெண்கள். அவ்வகையில் சிறந்தவர் இளையான்குடி மாறனாரின் மனைவி ஆவார். தன் குடும்பச் சிறப்பு வெளிப்பட்டு நிற்கக் காரணமாகப் பெண்கள் விளங்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பெரியபுராண மகளிரின் வாழ்வியல் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இவர்களின் பெயர் சுட்டப்படவில்லை ஆயினும், இன்னாரின் மனைவி என அடையாளம் கண்டு போற்ற முடிகிறது.

# மொழியியல் நோக்கில் தமிழரும் குறும்பரும்

- முனைவர் ப. சுரேஷ்குமார்
உதவிப்பேராசிரியர்
அறிஞர் அண்ணா கல்லூரி
கலை மற்றும் அறிவியல்
கிருஷ்ணகிரி - 635115

## ஆய்வுச்சுருக்கம்

உலகில பல்வேறு இனங்கள் உண்டு.அவற்றுள் குறும்பர்; இனமும்; ஒன்று. குறும்பர் என்பவர்கள் குறுநில மன்னர், பழமையான சாதியார், வேடர், இடைச்சாதியில் முரட்டுக்கம்பளி நெய்யும் பிரிவினர், பள்ளச்சாதியில் ஒரு பிரிவினர், அருவாளர் என பல்வேறு கருத்துகள் உள.குறும்பு என்பது (அரண்) அரணை ஆட்சி செய்பவர். ஆடு மேய்க்கும் தொழிலைச் செய்பவர். ஆடு; மேய்க்கும் போது வாங்குஅருவாள் வைத்து இருப்பது வழக்கமாகும்.

## குறும்பர்களின் தோற்றம்

குறும்பர்கள் கருநிறமும் குள்ளமான உருவமும் ஒற்றை நாடி உடலும் பெற்ற தோற்றத்தில் இருளர் களைப்போல் விளங்குகிறார்கள். இவர்களின் தலை மயிர் தடிப்பாகவும் சுருண்டும் இருக்கும் தலையைச் சுற்றிப் புதர்போல் பரவி முளைத்தருக்கும் பெண்கள் ஒரேயொரு துணியை ஆடையாக அணிகின்றனர் மார்பை மூடும்படியாக அக்குகளைச் சுற்றி அத்துணியை முடிந்து கொள்கின்றனர்.

## குறும்பர்களின் மொழி

குறும்பர்களின் மொழி மலை யாளம், கன்னடத்தோடு நெருங்கிய தொடர்புடைய தென்றும், சிதைந்த கன்னடமே அம்மொழி என்றும் கூறுகின்றனர். திராவிட மொழிராய்ச்சி வல்லுநரான கால்டுவெல் குறும் மொழியைச் சிதைந்த மொழி என்று கூறுகின்றார். குறும்பர்களில் புனாய்க் குறும்பர், முள்ளுக்குறும்பர், பெட்டக் குறும்பர், ஜேனுக்குறும்பர் என நான்கு வகையான குறும்பர் இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

## புறநானூற்றில் குறும்பர்

தமிழர்களின் வீரத்தை மையமாக கொண்டு திகழும் இலக்கியமான புறநானூறு குறும்பர் இனமக்களைப் பற்றிப் பதிவு செய்துள்ளது. குறும்பர் என்பவர் அரணுக்குப் புறத்தே போர் செய்பவர். தன் கணவன் போருக்குச் சென்றால் அவன் திரும்பி வரும்வரை மனைவி தன் தலையில் பூச்சூடாமல் இருப்பது மரபாக பின்பற்றியதை நொச்சிநியமங் கிழார் என்ற புலவர் புறநானூற்றில் பாடியுள்ளார்,

**"நிறப்படைக்கு ஓல்கா யானை மேலோன்
குறும்பர்க்கு எறியும் ஏவல் தண்ணுமை
நூண் உடை மாக்கட்கு இரங்கும் ஆயின்
எம்மினும் பேர் எழில் இழந்து வினை எனப்
பிறர்மனை புகுவன் கொல்லோ?
ஆளியன தானே பூவிலைப் பெண்டே"**

(புறம்.293)

அரணுக்கு வெளியே இருந்து போர் செய்யும் பகைவரை எதிர்த்துப் போரிடுவதற்கு வருமாறு, போருக்கு அஞ்சி நாணி இருக்கும் ஆண்களுக்கு கட்டளையிடும் பறையின் முழக்கம்

கேட்பதால் ஆண்கள் அனைவரும் போருக்குப் போவார்கள்.என்னைப் போன்ற வீரக்குலப் பெண்கள் பூச்சூட மாட்டார்கள். இந்தப் பூ விற்கும் பெண், எங்களை விட அதிகமாகப் தோற்றப் பொலிவிழந்து காணப்படுகிறாள். போருக்குப் போகாதவர்கள் இருக்கும் வீடுகளுக்குப் பூ விற்பவள் போவதால் அவள் இரங்கத்தக்கவள். தன் கணவன் போருக்குச் சென்று திரும்பி வரும்வரை மனைவி தன் தலையில் பூச்சூடாமல் இருப்பது மரபாகும்.

## தமிழ் – குறும்பர் உறவுப் பெயர்கள் வேறுபாடு

அக்கா என்பதை அக்க எனவும், அண்ணன் என்பதை அண்ணா எனவும், அண்ணி என்பதை அத்திக எனவும், அத்தை என்பதை அத்தி எனவும், அப்பா என்பதை அப்பா எனவும், அம்மா என்பதை அம்மா எனவும், சித்தப்பா என்பதை சிக்கப்பா எனவும், சித்தி என்பதை சிக்கம்மா எனவும், தங்கை என்பதை தங்கி எனவும், தம்பி என்பதை தம்மா எனவும், தாத்தா என்பதை **அஜ்ஜா** எனவும்,பாட்டி எனபதை **அஜ்ஜி** எனவும், பெரியப்பா என்பதை தொடப்பா எனவும், பெரியம்மா என்பதை **தொடம்மா** எனவும் மாமா என்பதை மாவா என்றும் அழைத்து வருகின்றனர்.

## தமிழ்– குறும்பர் தானியப் பெயர்கள் வேறுபாடு

அரிசி என்பதை அக்கி எனவும், அவரைப்பருப்பு என்பதை அவரைப் பெலா எனவும், இலவங்கம் என்பதை இலவங்கா எனவும், உருளைக்கிழங்கு என்பதை ஆலுக்கெட்ட எனவும், உளுத்தம் பருப்பு என்பதை உத்தப்பெலே எனவும், உளுவல் என்பதை உருளி எனவும், எள்ளு என்பதை எள்ளு எனவும், கடலை என்பதை கள்ளே எனவும், கடுகு என்பதை சாசுவ எனவும், கம்பு என்பதை கம்பு எனவும், கரும்பு என்பதை கப்பு எனவும், கல்லைப் பருப்பு என்பதைக் கல்லப்பேலே எனவும், காராமணி என்பதை அல்சந்ரா எனவும், கிராம் என்பதைக் கிராம் எனவும், கிழங்கு என்பதைக் கெழங்கு எனவும், கேழ்வரகு என்பதை ராகி எனவும், கோதுமையைக் கோதுமை எனவும் சாமையை சாமைஅங்கி எனவும், சீரகம் என்பதை ஜிரகா எனவும், சோளம் என்பதை ஜோளா எனவும், தினை என்பதைத் தெனை. எனவும், துவரைப் பருப்பு என்பதை தொவரா பெலா எனவும், நூக்கல் என்பதை நைவுக்கோல் எனவும், நெல் என்பதை நெல்லு எனவும், பச்சைபயிறு என்பதை அசுறுபெலா எனவும், பட்டாணி என்பதை கள்ளே எனவும், பட்டை என்பதைப் பட்ட எனவும், பாசிப் பருப்பு என்பதைப் பெசில்ப் பெலே எனவும், மக்காச்சோளம் என்பதை முசுல் சோளா எனவும், மிளகு என்பதை மெனுசு எனவும், வரகு என்பதைப் பரகு எனவும், வெண்டக்காய் என்பதை பெண்டக்காய் எனவும், வேர்க்கடலை என்பதைக் கள்ளேக்காய் என்றும் வழங்குகின்றனர்.

## தமிழ் – குறும்பர் விலங்குப் பெயர்கள்:

ஆடு என்பதைக் குரி எனவும், எருமை என்பதை எம்ம எனவும், எலி என்பதை இலி எனவும், கரடி என்பதைக் கெரடி எனவும், கழுதையைக் கத்த எனவும், காட்டெருமையைக் காட்டெம்ம எனவும், குதிரையைக் குதரே எனவும், குள்ளநரியைக் குள்ளெரி எனவும், சிங்கம் என்பதைச் சிங்கா எனவும், சிறுத்தையைச் சிறுத்தைஎனவும், நாய் என்பதை நாய் எனவும், நீர்யானையை நீரு ஆன எனவும், பசுவை அசு எனவும், பன்றியை அந்தி எனவும், புலியை உலி எனவும், பூனையை. ஊஐனு எனவும், மாடு என்பதைத் தனா

எனவும், மான் என்பதை மான் எனவும், முள்ளம்பன்றியைக் காடாந்தி எனவும், யானையை ஆன எனவும் வழங்கி வருகின்றனர்.

## தமிழ் குறும்பர் தாவரப் பெயர்கள் வேறுபாடு

அத்தி மரத்ததை அத்தி மர எனவும், அரசமரம் என்பதை ராகி மர எனவும், ஆலமரம் என்பதை ஆலமர எனவும், எலந்த மரம் என்பதை எலந்த மர எனவும், கொய்யா மரம்; என்பதை ஜமக்காய் மர எனவும், சப்போட்டா. மரம் என்பதைச் சப்போட்டா மரம் எனவும், சீத மரம் என்பதை சீதக்க மர எனவும், தென்னை மரம என்பதை தெகினிக்க மர எனவும், நாக மரம் என்பதை நாக மர எனவும், நெல்லி மரம் என்பதை நெல்லிமர எனவும், பனை மரம் என்பதை என்பதை அனமர எனவும், புங்கை மரம் என்பதை ஒங்கே மர எனவும், புளிய மரம் என்பதை உனிச்ச மர எனவும், மாமரம் என்பதை மாவின மர எனவும், வாழைமரம் என்பதை பாழ மர எனவும், வேப்பமரம் என்பதைப் பேவின மர எனவும் வழங்கி வருகின்றனர்.

## தமிழ் – குறும்பர் செடிப்பெயர்கள் வேறுபாடு

கீரையைச் சொப்பு எனவும், சிக்கடிக்காச் செடியை சிக்கிடி கிடாஎனவும், செம்பருத்திச் செடியைச் செம்பருத்தி கிடா எனவும், தக்காளி; செடியை தக்காளிக் கிடா எனவும்; துவரைச் செடியைத் தெவரக்கிடா எனவும், பூச்செடியை ஊவுக் கிடா எனவும் மிளகாய்ச்செடியை மெசினிக் காகிடா எனவும், ரோஜா செடியை ரோஸா கிடா எனவும், வெண்டக்காய் செடியைப் பெண்டுக்கா கிடா எனவும் வழங்கி வருகின்றனர்.

## தமிழ்– குறும்பர் காய்ப் பெயர்கள் வேறுபாடு

அவரைக்காய் என்பதை அவரகாயி எனவும், உருளைக்கிழங்கு என்பதை உருளுகெனுசு எனவும், கத்திரிக்காய் என்பதைப் பாரனக்காயி எனவும், சுரைக்காய் என்பதை சொரக்காயி எனவும் துவரைக்காய் என்பதைத் தொவரக்கா எனவும், தேங்காய் என்பதைத் தெகினிக்கா எனவும், நூக்கல என்பதை நைவுக்கோல் எனவும், புடலங்காய் என்பதை ஈரக்கா எனவும், பூசணிக்காய் என்பதை கும்பளக்காயி எனவும், மாங்காய் என்பதை மாவினிக்கா எனவும், வெண்டக்காய் என்பதைப் பெண்டக்காயி எனவும் வழங்கி வருகின்றனர்.

## தமிழ் – குறும்பர் பழப்பெயர்கள் வேறுபாடு

ஆப்பிளை ஆப்பிள் என்றும், ஆரஞ்சை ஆரஞ்சு எனவும், திராட்சையைத் திராட்சை எனவும், பப்பாளியைப் பரங்கி அன்னு எனவும், பலாப்பழம் என்பதை பலாஅன்னு எனவும், பேரிச்சம்பழம் என்பதைப் பேரிச்சம் பழம் எனவும் மாம்பழம் என்பதை மாவினன்னு வாழைப்பழத்தை பலேன்னு எனவும் வழங்கி வருகின்றனர்.குறும்பர் இன மக்கள் பழங்களை அன்னு என்று பொதுவாகக் கூறுவர். சில பெயர்களுக்கு தமிழ்ப் பெயர்களில் உள்ளவாரே பயன்படுத்தியுள்ளனர்.

## முடிவுரை

உறவுமுறைப் பெயர்கள் தமிழ் மொழி போன்று அமைந்துள்ளன. பல்வேறு தானியங்களைப் பயிரிட்டதன் மூலம் பாரம்பரிய உணவுகளைப் பாதுகாத்த நிலையை அறிய முடிகின்றன. பண்டையத் தாவரங்களை இளந்தலை

முறையினருக்கு அறிமுகப்படுத்தியதைக் காண முடிந்தன. வேட்டைத்தொழில், விவசாயத்தொழில், பகுத்துண்ணல், தேன் எடுத்தல் பக்திநெறியின் தனித் தன்மைகளை மேலாய்வு செய்யப்பட வேண்டும்.

## பார்வை நூல்கள்


சக்திவேல் சு – தமிழ்மொழி வரலாறு

பக்தவச்சலபாரதி, தமிழகப் பழங்குடிகள்

இராசேந்தரன்.ம – மெக்கன் சுவடிகளில் தமிழகப் பழங்குடி மக்கள்

காந்தி க – தமிழர் பழக்கவழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்

# அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் நிகழ்காலத்தில் ஊடகங்களின் தேவையும் பாதிப்பும்

நெறியாளர்
**முனைவர் ந.கிருஷ்ணவேணி,**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கும்பகோணம் -612002

ஆய்வாளர்
**க.செங்கொடி**
முனைவர் பட்டஆய்வாளர், தமிழ்த்துறை,
கும்பகோணம்.-612002

## ஆய்வுச்சுருக்கம்

அண்டனூர் சுராவின் சிறுகதை தொகுப்புகளில் செவ்வகப்பந்து, தொடர்பு எல்லைக்கு உள்ளே, விளம்பரதாரர் நிகழ்ச்சி, வாசகர் வட்டம் என்னும் சிறுகதைகளில் ஊடகங்களினால் சமுகத்தில் மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களையும் பாதிப்புகளையும் பண்பாட்டு பதிவுகளாக வெளிப்படுத்திய தன்மையை விளக்குவதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாகும்.

## கலைச்சொற்கள்

பிராமிஸ்–சத்தியம், சன்மானம் – வெகுமதி, ஜோக்ஸ் – நகைச்சுவை, பிரசுரம்–நூற்பதிப்பு, பேட்டி – நேர்காணல், முகூர்த்தம் – நேரம், பிராக்டிஸ் – பயிற்சி செய்தல், ஆடியன்ஸ் – பார்வையாளர்கள், செலக்சன் – தேர்வு செய்தல், கோச்சர் – பயிற்சியாளர், நிசப்தம் – ஒலியின்மை.

## முன்னுரை

இலக்கியம் மனித இனத்தின் அனைத்துலக மொழியாகும். அது குறிப்பிட்ட பண்பாட்டு வரையறை களையும் கட்டுபாடுகளையும் கடந்து அனைத்துலக மனிதர்களையும் இணைக்கும் பாலமாகத் திகழ்கிறது. மொழியைக் கருவியாக் கொண்டு தன்னுடைய உட்பொருளையும் வாழ்க்கைக்கு கொடுத்து உதவுகிறது.

“இலக்கியத்தைப் பொதுவாக ஒரு சமுக நிறுவனமாகக் கருது கின்றனர். பேச்சு மனிதனால் வெளிப் படுவது போல சமுதாயம் வெளிப் படுவதே இலக்கியம்” என்று இலக்கியத்திற்கான விளக்கத்தை அ.ச.ஞானசம்பந்தன் கூறுகிறார்”. **(இலக்கிய கலை ப_17)** தனிமனிதனைத் தயாராக்கும் பல கூறுகளுள் ஒன்றாக இலக்கியம் இருக்கிறது. “தனிமனித வளர்ச்சிக்கும் பண்பாட்டு உயர்வுக்கும் தேவையான இலக்கியங்களை படைக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது” என்று இலக்கியத்தின் இன்றியமையாமையை எடுத்துரைகிறார். ஆ.ஜெகதீசன். **(இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள் ப_16)** அந்தவகையில் தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டு பதிவுகள் தொன்றுதொட்டே பொதிந்துள்ளன. தற்கால படைப்பாளிகளும் தங்களுடைய நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரைகளில் வெளிப்படுத்துகின்றனர்.

## சிறுகதை

கதை சொல்வது மரபு ரீதியான ஒன்று. மனிதன் தன் அனுபவங்களை அடுத்தவர்க்கும் அடுத்த தலைமுறை யினருக்கும் கூறுகிறான். இதனையே கதை என்கின்றனர். பழையனவற்றை கதை என்றும் சிறுகதையாகத்

தோன்றியதைப் புனைகதை (FICTION) என்று கூறுவர். இதனைத் தொல்காப்பியம் "பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி" (கு.சுந்தரமூர்த்தி, தொல்காப்பியம் பொருள் ப_529) எனக் கூறுகிறது. சிலப்பதிகாரத்தில் வரும் தேவந்தி கதை, மணிமேகலையில் இடம்பெறும் ஆபுத்திரன், ஆதிரை, காயசண்டிகை ஆகியோரின் கதைகள் சிறுகதைத் தன்மையில் அடங்கும். சீவகசிந்தாமணியின் இலம்பகம் (பிரிவு) ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறுகதை எனலாம். பெரியபுராணமும் பல சிறு சிறுகதைகளின் தொகுப்பு என்று கூறலாம்.

சிறுகதைகள் ஊடகங்கள் பற்றிய தகவல்களை எடுத்துரைக்கின்றன. அந்த வகையில் அண்டனூர் சுரா தன் சிறுகதைகளில் சமுதாயத்தில் ஊடகங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பற்றிக் கூறியுள்ளார்.

### ஊடகவியல்

ஊடகவியலானது வேறுபட்ட பார்வையாளர்களைக் கொண்ட பல்வேறு வடிவங்களில் உள்ளது.இந்த ஊடகத்துறையே அரசுகளின் செயல் பாடுகளை வெளிவுலகிற்கு காட்டும் பொறுப்பைக் கொண்டுள்ளது.அரசு மட்டுமன்றி பொதுமக்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரின் நன்மை, தீமைகளை வெளிப்படையாகக் காட்டு கின்றன. ஆகையால் தான் இத்துறையை ஜனநாயகத்தின் நான்காவது தூண் என வர்ணிக்கின்றனர். "ஒரு ஒற்றை வெளியீடு (ஒரு செய்தித்தாள் பொன்றது) பலவிதமான ஊடக வடிவங்களைக் கொண்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு வடிவங்களில் நாளிதழாகவோ ஒரு பத்திரிகையாகவோ அல்லது ஒரு வலைதளமாகவோ இருந்து ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு பார்வை யாளர்களைக் கொண்டுள்ளது" (HARCUP ப_9 2009).

### ஊடக வகைகள்

தகவல்தொடர்பு ஊடகங்களின் மூலமாகப் பொதுமக்களின் தொடர்பு மிக எளிமையாக மாறிவிட்டது. சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஊடகங்களின் தேவை மிக இன்றியமையாததாகும். உலகத்தை ஒரு குறுகிய எல்லைக்குள் கொண்டு வருவதே தகவல் தொடர்பு ஊடகங்களின் தலையாய நோக்கமாகும். இத்தகைய தொடர்பு ஊடகங்களை அவை செயல்படும் தன்மையின் அடிப்படையில்

1. மரபுவழி ஊடகங்கள்
2. அச்சுவழி ஊடகங்கள்
3. மின்வழி ஊடகங்கள்
4. மின்னணுவழி ஊடகங்கள்

என நான்காக வகைப்படுத்தலாம்.

## அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் ஊடகங்களின் தாக்கங்கள்

இருபதாம் நூற்றாண்டின் சிறுகதை படைப்பாளர்களில் அண்டனூர் சுராவும் ஒருவர். இவர் இன்றைய சமுதாயத்தில் ஊடகங்களினால் சிறுவர்கள், இளம் பெண்கள், இளம்வாசகர்கள், நடுத்தர குடும்பங்கள் போன்றோர் பாதிக்கும் சூழ்நிலை உள்ளதை ஆசிரியர் செவ்வகப் பந்து, தொடர்பு எல்லைக்கு உள்ளே, விளம்பரதாரர் நிகழ்ச்சி, வாசகர் வட்டம் என்னும் நான்கு சிறுகதைகள் வாயிலாகக் கூறியுள்ளார்.

## இதழ்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள்

வார இதழ்களில் சிறுகதைகளை எழுதிவரும் சிறுகதை எழுத்தாளருக்கும் புதியதாக வார இதழ் தொடங்க உள்ள ஒருவருக்கும் இடையே நடைபெறும் உரையாடலை மையமாகக் கொண்டது வாசகர் வட்டம் சிறுகதை. தொடக்கத்தில்

நன்றாகச் சிறுகதைகளை எழுதி வந்த சிறுகதை ஆசிரியர்கள் பின்னாட்களில் இளைஞர்களின் மனத்தைச் சஞ்சலப் படுத்தும் வகையில் கவர்ச்சிகரமான கதைகளை எழுதி வருகின்றனர். இதை தவறு என்று அவரிடம் உணர்த்துகிறார். புதிதாக இதழ் தொடங்கும் நபர் எழுத்தாளர்களை விட வாசகர்களுக்கே சமுதாய சிந்தனை உண்டு என்பதை ஆசிரியர் கூறுகின்றார்.

*அந்தக் கதைக்கு கொடுத்திருந்த ஓவியம் படு ஜோர்"*

*"அடுத்து நீங்க எழுதபோற கதை என்னஜீ? பிராமிஸ் அதுவும் எ சர்டிபிகெட் கதை தானா? இப்ப அது மாதிரி கதை தானுங்களே வாசகர்கள் விரும்பி படிக்கிறாங்க" (அண்டனூர் சுராவின் "மழைக்குப் பிறகான பொழுது" சிறுகதைத் தொகுப்பு ப_98)*

புதிதாக இதழ் தொடங்கும் நபர் அவர் தொடங்கும் வார இதழ்களின் வாயிலாக இளைஞர்களைச் சமுதாயத்தில் நன்மை புரிபவர்களாக இருக்க வேண்டும் என எண்ணுகிறார். ஏனெனில் அவர் முன்பு வாசகராக இருந்தவர்.

*"ஆமாம்ஜீ. உங்க எழுத்துகளைச் பூசித்த நீண்டகால வாசகன் நான். தொடக்கத்தில் திரும்பத்திரும்ப படிக்கிற கதை எழுதின நீங்க, இப்பவெல்லாம் யாரும் பார்த்திருவாங்களோன்னு திரும்பித்திரும்பி பார்த்துகிட்டே படிக்கிற மாதிரி கதை எழுதுறீங்களே ஏன்ஜீ...? சிறுகதைகளை சிறுகதைகளாகவே இருக்க விடுங்க அதை "குட்டி"கதையா மாத்தி சிறுகதை வாசகர் வட்டத்தை அழிக்காதீங்க." (மேலது ப_109)*

## தொலைக்காட்சியின் இன்றைய நிலை

பெண்களுக்கான பாதுகாப்புச் சட்டங்கள் எவ்வளவோ கொண்டு வரப்பட்டாலும் சில வேளைகளில் சில இடங்களில் பெண்களுக்குத் தகுந்த பாதுகாப்புக் கிடைப்பதில்லை என்பதையும், தொலைக்காட்சி போன்ற சில ஊடகங்களில் பெண் களைக் கவர்ச்சிப் பொருளாக்கிக் காட்டு கின்றனர். தொலைக்காட்சியின் சில நிகழ்ச்சிகளில் அந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்குபவர்களின் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகளே தரமில்லாமல் இருப்பது வருத்தம் அளிப்பதாகவே உள்ளது.

*"கல்பனா... இப்ப நீ கிழி கிழி கிழினு கிழிச்சிட்ட என்றவாறு கைக்கொட்டிக் கொண்டு வந்தாள் தொகுப்பாளினி. கல்பனா தனது ஆடைகளை வேகமாக கவனித்தாள். நல்லவேளை ஆடைகள் கிழியாமலிருந்தன." (அண்டனூர் சுராவின் "திற" சிறுகதைத் தொகுப்பு ப_104)*

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிற்கு கல்பனா என்ற பெண் சென்றிருக்கிறாள். அங்கு பாட்டு பாடும் நிகழ்வில் முதல் பரிசு பெற்று வெற்றி அடைகிறாள். ஆனால் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி மக்களிடையே ஆர்வத்தை மூட்டி அவரவர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க வைத்து பணம் சம்பாதிக்கின்றனர்.

*"பஸ்ட் பிரைஸ் யாருனு தெரியுமா? யாரு மேம்? யாராக இருக்கும்? நானாகத்தான் மேம் இருக்கும். நீ தான்." (மேலது ப_111) இந்தப் பத்து லெட்சத்தையும் என்ன செய்ய போறே? உங்களுக்கிட்டயே கொடுக்கலாமென இருக்கேன் மேம். அப்படியா எஸ் மேம் ஏன்? அவ்ளோ பணத்தையும் நீங்களே வச்சிக்கிருங்க மேம். வச்சிகிட்டு, எங்கள கவர்ச்சிப்பொருளா சித்தரிக்காம மான மரியாதையோடகொஞ்சம் வாழ விடுங்க மேம். ப்ளீஸ் மேம் ப்ளீஸ்..." (மேலது ப_120)*

## கைப்பேசியால் ஏற்படும் தீமைகள்

பழங்காலத்தில் சிறுவர்கள் அனைவரும் ஒன்றாக கூடி விளையாடி மகிழ்ந்தனர். அவ்விளையாட்டுகளாவன; தாயம், பொம்மை விளையாட்டு ,பந்து விளையாட்டு போன்றவையாகும். ”ஒரு கல்லினைப் பிள்ளையராக பாவித்துக் கொள்வர். அதனைப் பந்தால் எறிந்து வீழ்த்துவது பிள்ளையார் பந்து ஆகும். இதனை இரு அணிகளாக பிரிந்து விளையாடுவர்” (சு.சண்முகசுந்தரம் நாட்டுப் புறவியல் ப_131). ஆனால் இன்றைய காலத்தில் சிறுவர்கள் தனித்தனியாக கைப்பேசியை வைத்து விளையாடிக் கொண்டிருக்கின்றனர். அபிமன்யூ மற்றும் தினேஷ் ஆகிய இருவரும் மட்டைப்பந்தாட்டத்தில் சிறந்தவர்களாவர். ஒரு நாள் அபிமன்யூ அம்மா அவனுக்கு பழைய விலையில் கைப்பேசி வாங்கி தந்தார். அன்றிலிருந்து அவன் எப்போதும் கைப்பேசியுடனே இருப்பான். அவனைச் சுற்றி எப்போதும் சிறார் கூட்டம் இருக்கும்.

“செல்லக்கிளி கைப்பேசியை அபிமன்யூவிடம் கொடுத்தவுடன் முதலில் அதற்குள் மட்டைப்பந்து விளையாட்டு இருக்கிறதா…? என்று தான் முதலில் பார்த்தான். இருப்பதைக் கண்டதும் அவன் கொண்ட மகிழ்ச்சிக்கு அப்பப்பா… மட்டைப்பந்து வீர்ர்கள் முதல் சதம் அடிக்கையில் அடையும் மகிழ்ச்சித்தான் அப்போது அவனுக்கு” (அண்டனூர் சுராவின் “திற” சிறுகதைத் தொகுப்பு ப_36

## முடிவுரை

காட்டு மிராண்டியாகத் திரிந்த மனிதனுக்கு நாகரிகம் பெறப்பெற, பண்பாடு வளர வளரத் தொடர்பு தேவைப்பட்டது. தனது தேவைகளை அவன் நிறைவு செய்யப் பல்வேறு கருவிகளைக் கண்டுபிடித்தான். புதிய கண்டுபிடிப்பிகளால் உலகம் சுருங்கி விட்டது. எதிர்காலத்தில் மனிதனின் அனைத்து தேவைகளையும் இயந்திர மனிதர்களே செய்துவிடுவார் .மனிதன் ஒவ்வோரு கோள்களுக்கும் சென்று வர முடியும். புதிய கண்டுபிடிப்புகள் சமுதாய முன்னேற்றத்திற்க்கும். உலக சமாதானத்திற்கும் பொருளியல் வளர்ச்சிக்கும் விரைவான தகவல் தொடர்பிற்கும் பயன்பட வேண்டும். ஆனால் இன்றைய சமுதாயத்தில் மேற்குறியவற்றை பாதிக்கும் அளவிற்கு தகவல் தொடர்புகளான ஊடகவியல் உள்ளது என்பதை அண்டனூர் சுராவின் சிறுகதைகள் வாயிலாக அறிய முடிகின்றது

## தொகுப்புரை

1. நவீன இலக்கியங்கள் ஊடகங் களைப் பற்றி கூறியுள்ளதை அறிய முடிகின்றது.
2. சிறுகதைகளில் ஊடகங்கள் ஏற்படுத்தும் தேவைகளையும் பாதிப்புகளையும் அறிய முடிகின்றது
3. தகவல் தொடர்புகளான இணையம், தொலைக்காட்சி, அலைபேசி ஆகியவற்றால் இளைய தலைமுறையினர் பாதிக்கப் படுவதை அறியமுடிகிறது.
4. இன்றைய சமுதயத்தில் ஊடகத் தினால் பெண்கள், சிறுவர்கள் பாதிக்கப்படுவதை அண்டனூர் சுராவின் படைப்புகளின் வாயிலாக அறியமுடிகிறது.

## துணை நூற்பட்டியல்


1. அண்டனூர் சுரா., ‘திற’ வெற்றிமொழி வெளியீட்டகம் எண்.9, இந்தியன் வங்கிக் கீழ்த்தளம் ஹோட்டல் டான்பின் அருகில் சத்திரம் தெரு திண்டுக்கல்.

2. அண்டனூர் சுரா, மழைக்குப் பிற்கான பொழுது, குழந்தை இயேசு கோவில் அருகில் புதுக்கோட்டை சலை தஞ்சாவூர். 2012

3. கார்த்திகேசு.சிவதம்பி, தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை. 2013

4. கிருட்டிணசாமி.வெ. தகவல் தொடர்பியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ஆகஸ்ட் 15–1992

5. சண்முகசுந்தரம்.சு., நாட்டுப் புறவியல், காவ்யா பதிப்பகம் சென்னை – 1975, மூன்றாம் பதிப்பு : டிசம்பர்–2003

6. சுந்தரமூர்த்தி.கு., தொல்காப்பியம் பொருளதிகாரம், அண்ணமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம், 1985.

7. ஞானசம்பந்தன்.ச.அ., இலக்கியக் கலை, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2010.

8. நீதிவாணன், தமிழ் இலக்கிய வரலாறு, சரஸ்வதி பதிப்பகம், சென்னை.

9. பாலசுப்ரமணியன்.சிற்பி., புதிய தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி_3, நவீன இலக்கியம் சாகித்ய அகாதெமி, சென்னை.

10. ஜெகதீசன்.ஆ., இலக்கியத்தில் மனித உரிமை கோட்பாடுகள், தாமரை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2008

**இணைய முகவரி:**

www.tamilvu.org–tamil virtual university.

www.tamilvu.org–tvu courses.

a.m.wikipedia.org.

https://en.m. wikipedia.org.

https:www.selfstudys.com.

# "சித்திரை வீதியில் ஹைக்கூ தேர்" பண்பாட்டுச் சிந்தனைகள்

**முனைவர் மு.செந்தில்குமார்**
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை - 01

*09.06.2024* ஆம் நாளில் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் 'தமிழ் ஹைக்கூ' மூன்றாம் உலக மாநாடு நடைபெற்றது. பல்வேறு நாடுகள், மாநிலங்கள், மாவட்டங்களிலிருந்து துளிப்பாக் கவிஞர்கள், ஆர்வலர்கள் பங்கேற்றனர். துளிப்பாக்கள் தொடர்பான கருத்தரங்குகள், அனுபவப்பகிர்வுகள், நூல் வெளியீடுகள் நடைபெற்றன. இதன் தொடர்ச்சியாக மாமதுரைக் கவிஞர்கள் எழுதிய துளிப்பாக்களை மட்டும் இந்து தமிழ் திசை நாளிதழின் துணை ஆசிரியரும் ஹைக்கூ முன்னோடியுமான மு.முருகேஷ் அவர்களும் மேனாள் கலால் துறை அதிகாரியும் கவிஞருமான சகா(எ)கஜேந்திரனும் தொகுத்து வெளியிட்டனர். அத்தொகுப்பில் அடங்கிய பண்பாட்டுச் சிந்தனைகளை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## எள்ளல்

இயற்கைச் சமநிலை மாறுபாட்டினால் பருவகாலங்களில் பொழிய வேண்டிய மழை, குளிர், வெய்யில், பருவம் தவறி தடுமாற்றத்தை ஏற்படுத்துகிறது. திடீரென நிலச்சரிவு, சுனாமி, நிலநடுக்கங்கள் ஏற்பட்டு பேரிடர்பாடுகளை ஏற்படுத்துகின்றன.

பெருவெள்ளம்
படுக்கையின்றி அலைகிறது நதி
நகர வீதிகளில். *(சகா - ப - 06)*

மக்கள் தொகைப் பெருக்கத்தினால் நெருக்கடியான தெருக்கள், வீடுகள், அமைக்கப்பட்டு சிறிதுநேரம் பெய்கின்ற மழைநீர் கூட கடந்து செல்ல முடியாமல் வீதிகளில் பெருக்கெடுத்து ஓடுவதைக் காணமுடிகிறது. ஒரு காலத்தில் திறந்த வெளிகளில் தாராளமாக ஓடிய மழை நீர் இன்றைக்குக் கடந்து செல்ல முடியாமல் கட்டிடங்களுக்குள் நுழைந்து பெருமளவு சேதங்களையும், துயரங்களையும் ஏற்படுத்துவதைக் கவிஞர் நுண்மையாக எள்ளல் செய்கிறார்.

அரசியல் பிரமுகர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுநல அமைப்பினர் அனைவருக்கும் பேச்சுக் கலை அவசியமானது. பேசிப் பேசியே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய நிகழ்வுகள் உலகம் முழுவதும் உண்டு. இந்தியாவில் சற்று அதிகம் பொய்யான வாக்குறுதிகள், கொள்கைகள், திட்டங்களை நேர்த்தியாகப் பேசி மக்களை நம்பவைக்கும் ஆட்கள், அமைப்புகள் இன்றளவும் இருக்கின்றன. இவற்றால் எப்பயனும் இல்லை. காலத்தை வீணாக்கி உபயோகமற்றுப் பேசி, வீணாக் கலைவதைச் சுட்டுகிறார். கவிதையில் எதுகை, மோனை இயல்பாக வந்துள்ளது.

பேசித் தீர்க்கிறோம்
பேசித் தொலைக்கிறோம்
பேசி கலைகிறோம் *(ஸ்ரீரசா - ப - 16)*

பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக மத்திய, மாநில அரசுகள் ஏராளமான நிதியை ஒதுக்கீடு செய்து திட்டங்களைச் செயல்படுத்துகின்றன. பொதுச் சுகாதாரம் என்பது எல்லா இடங்களிலும் தூய்மையாய் இருப்பதும், தூய்மையாய் வைத்துக்கொள்வதுமாகும்.

தீராத நோயுடன்
அரசு மருத்துவமனை
கட்டடங்கள் (பா.மகாலெட்சுமி -ப-30)

பொது மக்களின் நோய்களைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட அரசு மருத்துவமனைகளே தீராத நோயுடன் இருப்பதாகக் கூறி வியப்பினை ஏற்படுத்துகிறார். மூன்றாவது வரியில் துளிப்பாவின் உயிர்ப்பைத் தருகிறார். மருத்துவமனையிலுள்ள மருந்து, மாத்திரைகள் நோய்களைத் தீர்க்கின்றன. மாற்றுக் கருத்தில்லை. மருத்துவ மனையை தூய்மையாக வைத்திருக்க வேண்டிய பொதுமக்கள் மருத்துவ வளாகத்தை அசுத்தமாக்கி குறிப்பாகக் கட்டிடங்களைத் தீராத நோயுடன் வைத்திருப்பதாகப் பொதுமக்களைச் சாடுகிறார்.

இந்தியாவின் விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சி விரைவானதாய் உள்ளது. வியத்தகு சாதனைகளை உலக நாடுகள் போற்றுகின்றன. பல சாதனைகள் இருப்பினும் சில வேதனைகளும் இருப்பதை மறுப்பதற்கில்லை.

நிலவில் ஏவுகணை
ஆழ்துளைக் குழாயில்
குழந்தை. (பா.மகாலெட்சுமி - ப -40)

நிலவியல் ஆய்வுகளுக்காக இந்திய அரசு பல கோடி ரூபாய்கள் ஒதுக்கி ஆய்வுப்பணிகளை மேற்கொள்கிறது. அதே இந்தியாவில் ஆழ்துளைக் குழாயில் விழுந்த குழந்தையை சேதாரமில்லாமல் விரைந்து காப்பாற்ற முடியவில்லை. தொழிற்சாலைக் கழிவுக் கிடங்குகள், சாக்கடைகளில் ஏற்படும் பிரச்சனைகளைச் சீராக்க இன்றளவும் மனிதர்களே பயன்படுத்தப்படுகினறனர். நச்சு வாயுக் கசிவினால் மனிதர்கள் பலியாவதைப் பின்னணியாகக் கொண்டு கவிதை பேசுகிறது.

சராசரி மனிதர்களின் கடைசி நம்பிக்கைப் புகலிடமாய் இருப்பது நீதிமன்றங்கள். நீதிமன்றங்களின் செயல் பாடுகள் வெளிப்படையாக இருக்கிறதா என்பது இன்றைக்கும் கேள்விக்குறியாய் இருக்கிறது. இயற்கையைப் பேணிக் காத்திட வேண்டுமென்று பல தீர்ப்புக்களை வழங்கியுள்ள பல நீதி மன்றங்களின் அமைவிடங்கள் சர்ச்சைக்குள்ளதாய் உள்ளது.

ஏரியில் நீதிமன்றம்
கண்ணீரில்
நீதி தேவதை (பசுமலை பாரதி - ப-34)

விவசாய விளைநிலங்கள், ஏரியாக இருந்த நீர்நிலைகளில் அரசாங்கக் கட்டிடங்கள் பலவும் அமைக்கப்படுகின்றன. சமூகநீதி, இயற்கைச் சமநிலைகளைப் பற்றி பேசும் நீதிமன்றங்கள் நீதி தேவதை கண்ணீர் வடித்ததாகக் கூறுவது நீர்நிலைகள்மீது அக்கறை கொண்ட பதிவாகும்.

விலங்குகள் நலவாரியம், வனவிலங்குச் சட்டங்கள் உருவாக்கப் பட்ட பிறகும் விலங்குகள் மீதான வன்முறைகள் பல வடிவங்களில் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. வீட்டில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகள் மீது அளவுகடந்த நேசம் காட்டும் மனிதர்களே இடையூறாக இருப்பது முரணாகும்.

வெட்டுண்ட கிடாய்
விழித்துப் பார்த்தது
காவல் தெய்வத்தை
(பசுமலை பாரதி - ப-35)

வீட்டில் வளர்க்கப்பட்ட ஆடு இறைவனின் பெயரில் நேர்த்திக் கடனுக்காக வெட்டப்படுகிறது. தன்னைக் காக்க வேண்டிய காவல் தெய்வம் கைவிட்டதாக வெட்டப்பட்;ட கிடாய் குற்றுயிராக ஏக்கத்தோடு பார்க்கிறது. எள்ளலும், உயிருணர்வும் கலந்த கவிதை.

'நண்பர்கள் கைவிட்டாலும் நல்ல நூல்கள் ஒருபோதும் கை விடாது' என்னும் வார்த்தைகள் அனுபவித்தவர்களுக்கு மட்டுமே விளங்கும். பல்வேறுபட்ட ஊடகங்களின் வருகை புத்தகங்களின் விற்பனையை முடக்கியுள்ளது. மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சியினைத் தொடங்கி தமிழக அரசு நன் முயற்சிகளைத் தொடங்கியிருப்பது ஆறுதலாய் உள்ளது.

**புத்தக கண்காட்சியில்**
**விற்றுத் தீர்ந்தன**
**நொறுக்குத் தீனிகள்**
**(கம்பம் புதியவன் - ப - 44)**

மன நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு சுற்றுலாச் செல்வதுபோல் புத்தகக் கண்காட்சிக்கு மக்கள் வருகிறார்கள். வந்தவர்களின் பெரும்பாலான நேரங்கள் அவர்களுக்குப் பிடித்த மானவர்களின் பட்டிமன்றங்கள், கலை நிகழ்வுகளில் நேரத்தைச் செலவிடுகிறார்கள். கண்காட்சியில் இருக்கின்ற நொடிப்பொழுதிலும் நொறுக்குத்தீனிகளை அசைபோடாமல் இருப்பதில்லை. கண்காட்சி முடிந்தவுடன் புத்தக விற்பனைத் தொகையினை சொல்லும் நிர்வாகம் நொறுக்குத்தீனிகள் விற்பனையான தொகையினை ஒரு போதும் சொல்வதில்லை. புத்தகங்களின் விற்பனையை விட நொறுக்குத் தீனிகளின் விற்பனை அதிகம் என்பதனைக் கவிஞர் நுண்மையாய் சுட்டுகிறார்.

மூலநூல்: "சித்திரை வீதியில் ஹைக்கூ தேர்" – அகநி வெளியீட்டகம் – அம்மையப்பட்டு – வந்தவாசி

# சிறுபாணாற்றுப்படையில் புலவர்களின் பண்பாடு

**முனைவர் மா.செல்வத்தரசி**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க்கல்லூரி, மதுரை

தமிழர்களின் வாழ்க்கை என்பது பரிணாம வளர்ச்சி கொண்டது. சங்ககாலத்தில் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழும் வாழ்க்கை இருந்திருக்கிறது. அவற்றில் மிக அதிகமாக வெளிப்படு பவர்கள் புலவர்கள். இவர்கள் மன்னனை நாடிச் சென்று அவனைப் புகழில் ஏற்றி ஆடி பாடி மகிழ்வித்து வாழும் வாழ்க்கையினை வாழ்ந்துள்ளனர். மன்னர்களை வாழ்த்தும் போது வலுவின்றி பண்பாடு சிதையாமல் தம் ஆளுமையுடன் மன்னனின் ஆளுமை யினையும் காத்து வந்துள்ளனர். சங்க இலக்கியப் பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படையில் நல்லியக் கோடனை வாழ்த்தி பரிசில் பெற புலவர்கள் கையாண்ட உத்திகள் கட்டுரையாக அமைகிறது.

## சிறுபாணாற்றுப்படை

ஆற்றுப்படை நூல்களில் ஒன்று சிறுபாணாற்றுப்படை. இது பத்துப்பாட்டு நூல்களின் வகையைச் சார்ந்தது. ஓய்மான் நாட்டு மன்னன் நல்லியங்கோடனை பாடியது. பரிசில் பெற்ற ஒருவன் பரிசில் பெற விளையும் மற்றொருவனை ஆற்றுப்படுத்தியது சிறுபாணாற்றுப்படை என்றாகிறது. நத்தத்தனார் என்ற புலவரால் பாடப்பட்டது. ஆற்றுப்படுத்துதல் தொடர்பான கருத்தியல்கள் மேலோங்கி உள்ளது. வறுமையில் வாடுபவனை தனது வறுமையினை போக்குவதற்கான வழிதேடுதல் என்பதுகூட ஆற்றுப்படுத்தல் ஆக அமைந்திருக்கலாம். புலவர்கள் அறிவிலும் ஆளுமை பண்பிலும் உயர்ந்திருப்பினும் யாருடைய மனதையும் காயப்படுத்தியவர்கள் அல்ல சமூகச் சூழலுக்கு ஏற்ப தாடிச் செல்லும் புலவனை பாடுவதற்கு மற்ற வள்ளல் களையும் புகழ்ந்து விட்டு தனக்குத் தேவையான புலவனை நாடி வாழ்த்தும் உத்திகளே சிறுபாணாற்றுப்படையில் காணப்படுகிறது.

## புலவர்கள் கையாண்ட உத்திகள்

சிறிய யாழினை மீட்டிக்கொண்டு அதில் பாலை பண்ணைப் பாடி கொண்டு வரும் இரவலன் ஆகிய பாணனிடம் பரிசில் பெற்ற ஒருவர் ஆற்றுப்படுத்தும் விதமாக அமைகிறது. சேர நாட்டின் வஞ்சிநகரத்தின் வளம் உயர்வு உடையது எவ்வாறெனின்,

“கொழுமீன் குறைய ஒதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை”
(சிறுபாண்., 41-42)

பருத்த மீன் துண்டாகுமாறு மிதித்துக் கொண்டு சென்று சென்ற எருமை மிளகுக் கொடி படர்ந்த பலாமர நிழலில் மஞ்சள் செடிகளும் மல்லிகை கொடிகளும் நிறைந்த படுக்கையில் அசை போட்டு தூங்குகிற சேர நாட்டை உடையவன் சேர மன்னன் ஆவான். இவன் இமயத்தில் விற்கொடியை நாட்டியவன். வலிமையான

தோளை உடையவன். குட்டநாட்டு தலைவனாகிய மன்னன் வஞ்சி நகரில் வசித்து வருகிறான். இத்தகைய இயற்கை நிறைந்து வளமுடைய அவன் தரும் பரிசு மிகச் சிறியதாகும் என்கிறான்.

### பாண்டியனின் கொற்கை

பாண்டிய மன்னன் தென்னகத்தை ஆளக்கூடியவன். அவன் அணிந்துள்ள மாலை நுணா மரத்தை அறுத்துச் செய்யப்பட்டது. நெற்றியில் பல இழைகள் மூலம் செய்யப்பட்ட பூ மாலையைச் சூடியவன். உப்பு வணிகப் பெண்ணிடம் தாம் பெற்ற பிள்ளைகள் போலான குரங்குகள் அவனது குழந்தைகளுடன் விளையாடியது. பகைவர் நிலத்தைப் போர் மூலம் கைகொண்டவன். வலிமைமிக்க தேரினை உடையவன். பாண்டியன் நெடுஞ்செழியன் தமிழ் நிலைபெற்று விளங்கியதால் மனம்கிழ்வுடைய தெருக்களைக் கொண்டவன் அவன் தரும் பரிசும் சிறிதாகும்.

### சோழனின் உறையூர் வளம்

உறையூர் இயற்கை வளம் நிறைந்தது. நீர் நிலைகள் வற்றாது காணப் பட்டது. தும்பிகள் தன் பெண் தும்பிகளைத் தழுவிக்கொண்டே சீகாமரம் என்னும் பண்ணினைப் பாடிக் கொண்டே இருக்கும். மருத நிலம் சூழ்ந்த கிழக்குத் திசையைத் தமது ஆளுகையாகக் கொண்ட குலவழியில் தோன்றியவன். குலம் என்பது, “ஒரு மூதாதையரிடமிருந்து வந்தவர்கள். ஒரு ‘கால்வழிக் குழுவினர்’ என்றழைக்கப்படுபவர். மூதாதையரிடமிருந்து தொடரும் உறவுக்குழுவானது,‘குலம்‘ என்று குறிக்கப் படுகிறது.” என்கிறது வாழ்வியல் களஞ் சியம்.பகவனின் மாயக்கோட்டையினை அழித்தவன் தன் குடிமக்கள் அங்கிருந்து வேறெங்கும் தரும் பரிசும் சிறியதாக இருக்கும்.

ஒரு நாட்டு மன்னனின் வீரம், அவன் புகழ், நாட்டின் இயற்கை வளம் இவற்றை உயர்வாகக் கூறி இவற்றில் சிறிதளவேனும் குறைவற்ற அவன் தரும் பரிசு சிறிது என்கிறார். இதில் மன்னனின் கொடை குறுகியது என்றுதான் மட்டும் செல்வ செழிப்புடன் வாழ்தல் போதாது தன்னைப்போல் வரும் ஒரு இரவலரும் உயர்வடைய வேண்டும் என்ற உயர்வான எண்ணம் புலவரிடம் வெளிப்படுகின்றது.

### புலவர்கள் புலமையில் கடையேழு வள்ளல்கள்

தமிழ் மக்கள் தம் பண்பாட்டியல் நினைவலைகளுடன் கலந்தவர்கள் கடையேழு வள்ளல்கள். இன்றும் கடையேழு வள்ளல்கள் வரிசையில் எவர் ஒருவரும் இடம் பெறவில்லை. அத்தகைய வள்ளன்மைத் தன்மை இருப்பினும் அவர்களின் கொடை தன்மையும் கூட சிறிதாகவே உள்ளதாக க்குறிப்பிடுகிறார் புலவர்.

ஆவியர் குலத்தில் தோன்றியவன் பேகன். வலிமையும் நற்குணமும் பெருந்தன்மையும் கொண்டவன். மலை நாட்டுத் தலைவனாகிய பேகன் காலத்தால் பெய்த மழையால் மயில கவியதைக் கண்டு அது குளிரால் நடுங்குவதாகக் கருதி தன் போர்வையை நல்கியவன். வள்ளலை அவனது வள்ளல் தன்மையினை தனக்குற்ற ஒரு குளிர் நிலையில் புலமைத் தன்மையினை மயில் மீது ஏற்றிப் பாடி இருக்கலாம் என கருதப்படுகிறது. இவன் அளித்த கொடையாயினும் என்று முடிவுராது எழுவரையும் எடுத்து இயம்பியமையை அறிய முடிகிறது.

பறம்பு மலைக்கு அரசனாகிய பாரி, தன் நாட்டின் வளமும் அதன் இயற்கை இயல்பும் மிகுந்துள்ளது. பறம்பு என்பது வளம் கொஞ்சம் குறைவானதாகவே

நாம் உணர்ந்து வருகிறோம். வழியில் கிடைத்த முல்லைக்கொடிக்கு தேரையே வழங்கினான் என்கிறார் புலவர்.

காரி என்ற வள்ளலும் வேலினையும் தொடியினையும் வழங்கியவன் என்று அவனது பெருமை உரைக்கப்படுகிறது. இவர்களது வரிசையில் ஆய் வைரக் கல்லையும் நாகம் கொடுத்த ஆடை யினையும் ஆலமர்செல்வனாகிய சிவபெருமானுக்குக் கொடுத்தான். அதியமான் ஔவைக்கு வழங்கியது தன் உடம்பின் மீது அக்கறை கொள்ளாது தமிழ் மொழியாளரான புலமைத் திறம் கொண்ட ஔவைக்கு வழங்கியவன். நள்ளி, ஓரி ஆகியோரின் கொடைப் பண்பும் சிறந்தது தான்.

ஆயினும் இவர்களது கொடைத் திறனை விடவும் உயர்ந்தவன் ஒருவன் உள்ளான். அவனைப் பாடுவதே எண்ணமாகக் கொண்ட புலவர்கள் முன்னொட்டாக ஏனைய புலவர்களைப் பாடியது அவர்களது ஆளுமைப் பண்பை வெளிப்படுத்துகிறது.

## நல்லியக் கோடன்

இரவலனைக் கண்ட பாணன் ஒருவன் ஓவியர் குலத்தில் தோன்றியவன் நல்லியங்கோடன். அவன் கொடைப்பாரத்தை உலகமே அறியும். அவனை நாடிச் செல்வதற்கு முன்பு அவர்கள் வறுமை,

**"................... இந்நாள்**
**திறவாக் கண்ண சாய்செவிக் குருளை**
**கறவாப் பால்முலை கவர்தல் நோனாது**
**புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்"**
***(சிறுபாண்., 130-132)***

எனக் கூறப்படுகின்றது.

கண் விழிக்காத நாய்க்குட்டிகள் தன் தாய் நாயின் முகையில் பசியாற்ற கடித்தது. ஆனால் உண்பதற்கு ஏது மில்லாத நாய் வலி தாங்காது தன் குட்டி நாய்களை குறைத்தது. சமைக்கும் இடத்தில் கயிற்றால் கட்டி கூரை சரிந்து விழாது காத்துக்கொண்டோம். ஆனால் அதிலும் காளான்கள் பூத்திருந்தன வறுமையின் பசியால் கிணை கொட்டும் பெண் குப்பையில் முளைத்த வேளைக் கீரையே உப்பில்லாமல் சமைத்து பிறர் காண நேர்ந்ததால் அவர்களது சொற்களுக்கு நாணி,

**"குப்பை வேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து**
**இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன்மிசையும்**
**அழிபசி வருத்தம் வீடப் பொழிவுகள்"**
***(சிறுபாண்., 137-140)***

என உண்டோம்.

கதவடைத்து உண்டோம். அப்படியிருந்த நாங்கள் இன்று பெரிய தேர்னையும் சிறிய கண்ணுடைய யானைகளையும் பெற்று நல்லியங்கோடனின் அரண்மனையில் இருந்து வருகிறோம் என்றனர்.

பரிசில் பெற்ற பாணர் பரிசில் பெற விளைந்த பாணரை ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது. செல்லும் வழியும் அதன் இடர்பாடுகளை கடப்பதற்கு கடந்தமை குறித்தும் எடுத்துரைத்தனர். இவ்வாறு தாங்கள் சென்ற வழியில் எயில் பட்டினத்தில் நுளையர் மகள் காட்சி வடிகட்டிய கள்ளினை பரதவர்கள் எங்களுக்குக் கொடுத்தனர். குழல்மீன் கருவாட்டினையும் உங்கள் விறலியரும் உண்டு மகிழலாம் என்றான். வேலூரில் எயினர் குலப் பெண்கள் புளிக்கறி இட்ட சோறும் இறைச்சியும் தரப் பெறுவீர்கள். ஆமூரில் அரிசியில் அமைத்த உணவை நண்டின் கலவையுடன் தந்தனர். நீங்களும் உண்ணலாம் என்றனர். இன்று நாம் உண்ணும் இறைச்சி பிரியாணி போன்று அன்றே நண்டு பிரியாணியும் இருந்திருக்கிறது என்பது

வெளிப்படுகிறது. இவற்றையெல்லாம் உண்டு விட்டுச் செல்லுங்கள் அவன் ஊரும் அருகில் தான் உள்ளது என்றான்.

## நல்லியங்கோடனின் ஆளுமைப் பண்பு

ஆளுமை என்பது ஒருவரிடம் இருந்து வெளிப்படும் நற்கருத்து, நற் செயல்கள் ஆகியவை ஆகும். "ஆளுமை என்பது உள்ளமும் அதனுடைய செயல்களும் இணைந்து தோன்றக்கூடிய ஒரு கூட்டுத் தொகுதி" என்கிறார் மாக்டூக்ஸ். நல்லியங்கோடன் அகம் புறம் இரண்டிலும் சிறந்து விளங்கக் கூடியவன். செய்நன்றி அறிதல், தீயவர்களுடன் பழகாமை, எப்போதும் இனிமையானவன், நல்லியங்கோடான் அச்சம் கண்டு அவனை பணியும் பகைவருக்கு இரக்கம் காட்டுபவன், பெண்களால் விரும்பக்கூடியவன், அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கக் கூடியவன், பரிசில் பெற வந்தவர்களின் சிறப்பையும் தகுதியையும் தேவையும் அறிந்து வழங்கக்கூடியவன், அவன் அரசவையில் சான்றோர், வயவர், பெண்கள், இரவலர் ஆகியோருக்கு இடையில் அமர்ந்திருக்கக் கூடியவன்.

## நல்லியங்கோடனின் பரிசில்கள்

நல்லியங்கோடான் எங்களை எதிர் அழைத்துச் சென்றான் அவன்,

"..................மாசில்
காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ"

(சிறுபாண்., *235,236*)

மூங்கிலின் உள்ளே உள்ள பட்டையை உடைய மென்மையான ஆடையை உடுக்கத் தந்தான். மயக்கம் தரும் கள்ளினையும் வீமன் எழுதிய சமையல் நூல் முறையினின்று சிறிதும் வலுவாது சமைத்த உணவினை சூரிய ஒளி மிகுந்த பாத்திரத்தில் உணவை உண்ணச் செய்தான். போர்வை, எருதுகள், பாகனுடன் யானை, குதிரை, அணிகலன்கள் ஆகியவற்றை பரிசில்களாக வாங்கிச் செல்க என அனுப்பி வைத்தான். இத்தனை சிறப்புக்கு உரிய நல்லியங்கோடனிடம் நீங்கள் சென்றால் இத்தகைய பரிசுகளைப் பெற்று வரலாம் என்று ஆற்றுப்படுத்தினர்.

## முடிவுரை

பண்பாடு ஒவ்வொருவரிடமும் காணப்படும்; அது வெளிப்படும் விதத்தில் அமைகிறது என்பதனை பரிசில் வழங்குதல் மூலம் எடுத்துரைக்கப்பட்டது அதிலும் புலவர் பெருமக்கள் தங்கள் படைக்கும் இலக்கியத்திற்கு எத்தகைய தனித்துவத்தை கொடுக்க வேண்டுமோ அத்தனையும் சிறுபாணாற்றுப்படையில் வெளிப்படுகிறது.

# ஆரல்வாய்மொழி பெயர்காரணம்

**முனைவர் தி.செல்வலதா**
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
முஸ்லிம் கலைக்கல்லூரி,
திருவிதங்கோடு.

முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டத்தில் அமைந் துள்ளது ஆரல்வாய்மொழி. திருநெல் வேலியிலிருந்து குமரி மாவட்டத்திற்குள் நுழையும் போது அதன் வாயிலில் அமைந்த ஊர் ஆரல்வாய்மொழி. இந்த ஊர் மேற்கு தொடர்ச்சி மலையின் தென்கோடியிலுள்ள கணவாயை சார்ந்த ஊராகும். குமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைவதற்கு முன்னர் இங்குச் சுங்கச்சாவடி இருந்தது. மாவட்ட தலைநகர் நாகர்கோவிலிலிருந்து பதின்மூன்று கி.மீ தொலைவில் ஆரல்வாய்மொழி உள்ளது.

## ஆரல்வாய்மொழி பல பெயர்களும் அதன் காரணங்களும்

கோட்டை வாயிலாக ஆரல்வாய்மொழி இருப்பதால் வெளி நாட்டவரை அறிய ஓர் வாய்மொழி வாக்கியம் சொல்லவேண்டுமாம் “ஆரைவாய்மொழிக் கோட்டையிலே உழக்காழாக்குநெல்லுக்கு ஏழு வாழைப் பழம்” என்று வரக்கூடியவர்களை சொல்லச் செய்வதில் அவர்கள் “ழ” சரியாக சொல்லாமல் “ஆறுவாமொளிக் கோட்டையிலே உளக்காளாக்கு நெல்லுக்கு ஏளு வாளைப்பளம்” என்று கூறுவதில் வெளிநாட்டவர் என்று அறிந்து கோட்டைக்கு உள்ளே விடாமல் இருந்தனர் பகைவர்களையறிய இதுவும் ஓர் வழிதான்.

ஆரல்வாய்மொழிக்கு ஆலவாய் என்ற பெயர் பொருந்தும் என கூறப்படுகிறது. ஒவ்வொரு ஊருக்கும் பல காரணங்களால் பெயர் உண்டாகும். தஞ்சன் என்னும் அசுரன் இருந்தவூர் தஞசாவூர், இராமன் ஈசுவரனைப் பூசித்த ஊர் இராமேசுவரம், கன்னி தவஞ் செய்யும் ஊர் கன்னியாகுமரி. இவ்வாறு பற்பல காரணங்களால் ஊர்களுக்கு பெயர் விளங்கும். மதுரையில் வந்து தரிசித்து தேவாராம் பாடிய சம்பந்தரும், அப்பரும் அவ்வூருக்குரிய பல பெயர்களிலும் ஆலவாய் என்ற பெயரையே பெரிதும் போற்றினர்.

“அந்தமிழ் புகழ் எந்தை யாலவாய்
பந்தியார் கழல் சிந்தை செய்மினே”

“அம்பொன் ஆலவாய் நம்பனார்கழல்
நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே”

“ஆலவாயாவது மிதுவே”

“திரு ஆலவாயான் திருநீறே”

“தென்னாலவாயில் உறையும் எம்மாதியே”

என்று ஞானசம்பந்த சுவாமிகள் கூறியுள்ளார்.

அப்பர் சுவாமிகள் “ஐயனே ஆலவாயிலப்பனே அருள்செய்வாயே” “தென்கூடல் திருவாலவாய் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே” என்று பாடினார். மதுரை மீனாட்சி சோமசுந்தர மூர்த்தி ஆரல்வாய்மொழியிலும்

உள்ளதால் ஆலவாய் என்ற பெயருடன் அழைக்கப்பட்டது.

## ஆரைவாய்மொழி

ஆரைவாய்மொழி என்ற பெயரே பண்டைகாலம் முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆரை – மதில் (ஆரல்) அரண் என்று பொருள்படும். அரண், ஆரை, ஆரல் மூன்று சொற்களும் ஒரே பொருளைக் குறிப்பதால் ஆரை வாய்மொழி என்றே கூறப்பட்டது. பழைய ஓலை பிரமாணங்களிலும், தேவஸ்தான பழைய ஓலைப் பிரமாணங்களிலும் கல்வெட்டுகளிலும் ஆரை வாய்மொழியென்றே கூறப் பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக

1. கொல்லம் 985 ம் ஆண்டு வைகாசி மாதம் 32.– ம் தேதி நாஞ்சில் நாட்டு ஆரைவாய்மொழியில் வனமூர்த்தி ஆறுமுகத்திற்கு ஓலை பிரமாணம் அரசாங்கம் முத்திரையுள்ளது.
2. கொல்லம் 944 ஆவணி 24–ம் தேதியில் ஆரைவாய்மொழியில் – ஓலைபிரமாணம்
3. கொல்லம் 926ல் ஆவணி 31ல் ஆரைவாய்மொழி – ஓலைப் பிரமாணம்
4. 1021–ம் ஆண்டு வைகாசி 29ல் ஆரைவாய் மொழியில் நம்பியாருக்கு அகரம் கட்டிக் கொடுத்தனர் – ஓலைபிரமாணம்
5. திருவாங்கூர் ஆர்க்கியாலஜிக்கல் ஸீரியஸ் வால்யூம் 6 பக்கம் 97 முதல் 99 வரை அகலிகையூற்றுக் கல்வெட்டு பற்றி கூறப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டு கொல்லம் 872ம் ஆண்டு 17–ம் தேதி இரவிவர்மன் மகாராஜா காலத்திலுள்ளது.

> “நாஞ்சிநாட்டு ஆரைவாய்மொழியில்
> நல்ல குட்டி ஆண்டாரேன் அகலி
> கையூற்றங்கரையில் தம்பிரான்
> இரவிவர்மரான சிறைவாய் மூத்த தம்
> பிரான் தாணுவுக்குச் சோமவாரம்

என்னும் அகலிகையூற்று கல்வெட்டில் இவ்வூருக்குஆரைவாய்மொழி என்ற பெயரே கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டுக்களில் ஆரல்வாய் மொழியின் பல்வேறு பெயர்கள்

* பெருமாள்புரம் மாரியம்மன் கோவில் பாலத்தின் கிழக்கு ஆலமரத் தடியில் உள்ள சுமைத் தாங்கி கல்வெட்டில் மட்டும் தான் அரண்வாய்மொழி என்ற பெயர் உள்ளது.
* கொல்லம் 1069 (கிபி.1894)–ம் ஆண்டு ஆரல்வாய்மொழி பெரிய குளத்திலுள்ள முதல் கிணற்றின் உள்பகுதி கல்வெட்டில் ஆரல்வாய் மொழி என்ற பெயர் கூறப்பட்டது.
* கொல்லம் 1017 (கிபி 1842)ம் ஆண்டு ஆரல்வாய்மொழி வடக்கூர் மீனாட்சியம்மன் கோவில் தெப்ப குளத்தின் அருகிலுள்ள மடை கல்வெட்டில் அரவாய்மொழி என்ற பெயர் உள்ளது.
* கொல்லம் 1009 (கி.பி)1834)– ம் ஆண்டு ஆரல்வாய்மொழி வணிகர் தெருவிலுள்ள ஒரு சுமைதாங்கி கல்லில் ஆரைவாய்மொழி என்ற பெயர் காணப்படுகிறது.
* குமரி மாவட்டத்தில் மிகவும் பழைமை வாய்ந்த கல்வெட்டாக (கி.பி765–816)ஆரல்வாய்மொழியை சார்ந்த மாறஞ்சடையன் கல்வெட்டு காணப்படுகிறது. இது ஒரு நடுகல் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு பேராசிரியர் சுந்தரம்பிள்ளையால் ஆரல்வாய்மொழி வடக்கு

மலைப்பகுதியில் கண்டெடுக்கப் பட்டது. இந்த கல்வெட்டில் ஆரல் வாய்மொழிக்குக் கரைக்கோட்டை என்ற பெயர் கூறப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டு தற்போது பத்மனாபபுரம் அரண்மனைக் காட்சி கூடத்தில் உள்ளது. கல்வெட்டுக்களிலுள்ள ஊர் பெயர்கள், பெயர்க் காரணம் மற்றும் பின்னணியையும் ஆராயும் போது மக்களின் வாழ்க்கைநிலை, பொருளாதாரநிலை, அரசியல் சூழல் உள்ளிட்ட பல்வேறு செய்திகளை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

ஆரல் – மதில் கோட்டை வாயிலிலிருக்குமிடம் என்று கூறப் படுகிறது அரன்வாழ்மொழி – சிவபெருமான், சாஸ்தா முதலிய தெய்வங்கள் வாழ்கின்ற இடம் என்றும் கூறப்படுகிறது. அரண்வாய்மொழி அரண் – கோட்டை, மதில், மலை என பொருள்படும். கோட்டை வாயிலின் வழியென்றும் கூறுவர். மலைவாய் (கணவாய்) வழியிலிருக்கும் ஊர் என்றும் கூறலாம். இவ் ஊரின் பெயர் இப்போது பேச்சு வழக்கில் ஆறாம்போளி என்று சொல்லப்படுகிறது. இது ஆரவாய்வழி அல்லது ஆரைவாய்வழி என்பவற்றின் திரிபாக இருக்கக்கூடும். ஆரல் ஆரை என்னும் சொற்களுக்கு மதில் என்னும் பொருளுண்டு.கோட்டை போன்று முப்புறமும் சூழ்ந்த பொதிய மலைத் தொடரில் அமைந்துள்ளமையால் இவ்வழி ஆரல்வாய்வழி அல்லது ஆரை வாய்வழி என்று பெயர் பெற்றிருக்கலாம்.

அரைவாய் என்பது கணவாய் என்னும் பொருளுடைய சொல்லாகும். அறைவாய் வழி என்பதே அரவாய்வழி, ஆரவாய் வழி என்று படிப்படியாகச் மாறி ஆரல்வாய்மொழி என்னும் பெயரை கொண்டதாக கூறப்படுகிறது. பொழில் என்னும் ஈற்றுச் சொல்லே மொழி என்று மாறி இருக்க கூடும். ஆறாம்பொழி என்ற பெயர் தபால் நிலையம், வங்கி போன்றவற்றில் கூறப்பட்டு வந்தது தற்போது ஆரல்வாய்மொழி என்ற பெயர்தான் கூறப்படுகிறது.

## ஆராய்ந்த நூல்கள்:


1. பத்மநாபன் பிள்ளை, ஆரல் வாய்மொழி வரலாறும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலும், சித்திரை விலாச நூலக வெளியீடு, ஆரல்வாய்மொழி,1943
2. சு.சிவா, கல்வெட் டுக்களில் உழைப்பும் கூலியும் (கல்வெட்டுக் கட்டுரைகள்), நெய்தல் பதிப்பகம், சென்னை,2017
3. சோமலெ, கன்னியாகுமரி மாவட்டம், பாரத் பதிப்பகம், சென்னை, 2016
4. Travancore Archaeological Series IV
5. The Travancore State Manual Vol.I, Vol.III, New Delhi 1989
6. Gazetteers of India, Kanyakumari District,M.Gopala Krishnan, Government of Tamilnadu, Madras 1995

# சிறுபஞ்சமூலம் கூறும் மக்கள் பண்பாடு

**முனைவர் பே.மஹேஸ்வரி,**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்முத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

**பா.தினேஷ்குமார்,**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

## முன்னுரை

அறநூல்களில் ஒன்றாக விளங்குவது சிறுபஞ்சமூலம் ஆகும். பஞ்ச என்றால் ஐந்து என்றும், மூலம் என்றால் வேர் என்றும் பொருள்படும். ஐந்து சிறிய வேர்களால் செய்யப்படும் மருந்து மக்களின் உடல் நோயைப் போக்குகிறது. இம்மருந்து போல், மக்களின் மனநோயைப் போக்கக்கூடிய ஐந்தைந்து கருத்துகளை உடைய வெண்பாவினால் அமைக்கப்பட்ட நூல் சிறுபஞ்சமூலம் ஆகும். இந்நூலினை இயற்றியவர் காரியாசான் என்னும் ஆசிரியர் ஆவார்.

பண்பாடு என்பது மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், நடத்தைகள், வாழ்வியல் முறைகள், காலமாற்றங்கள் என்ற பல காரணிகளைச் சார்ந்து அமைந்துள்ளது. கி.பி ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த சிறுபஞ்சமூலம் என்ற இந்நூலில் கூறப்பட்டுள்ள மக்கள் சார்ந்த பண்பாடுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சமயமும் பிற நம்பிக்கைகளும்

மக்கள் தங்களை மீறிய ஆற்றல் ஒன்று இயற்கையில் உண்டு என்றும், இந்த ஆற்றலைக் கடவுள் என்றும் நம்பினர். ஒருவரிடம் சேருகின்ற செல்வத்திற்குக் காரணம் செல்வக் கடவுளான திருமகள் ஆவார். பெண்களின் சிறப்பைக் கூறுகின்ற சிறுபஞ்சமூலம் பாடலில், வீட்டில் செல்வத்தைத் தருகின்ற திருமகளை வணங்கி வழிபட்டு வாழ்வது சிறந்த பெண்களின் சிறப்பியல்புகள் ஆகும். இச்செய்தியை,

**.... ..... ...... திருவாக்குந்**
**தேய்வதையும் என்ஞான்றுந் தேற்ற வழிபாடு**
**செய்வதே பெண்டிர் சிறப்பு.**
**(சிறுபஞ்சமூலம்-41, 2-4, பக்கம்-76)**

என்ற மேற்காணும் பாடலடிகளின் மூலம் மக்கள் தங்கள் வீட்டில் கடவுளை வழிபட்டதை அறியமுடிகின்றது. செல்வத்தைக் கொடுக்கின்ற திருமகள் தாமரை மலரில் வாழ்கின்ற தன்மை யினைக் கூறும் பாடலாக,

**...... ...... பூந்திருவே யாயினும்**
**தன்வரைத் தாழ்ந்தல் அரிது.**
**(சிறுபஞ்சமூலம்-43, 3-4, பக்கம்-77)**

என்னும் இப்பாடலடிகள் அமைந்துள்ளன. தன்னிடம் சேருகின்ற செல்வங்களுக்கெல்லாம் காரணம் திருமகள் என்பதை உறுதி செய்யும் விதமாக நான்மணிகடிகையில்,

**நில்லெனவும் நில்லா உயிரனைத்தும்**
**- நல்லாள்**
**உடம்படின், தானே பெருகும், கெடும்**
**பொழுதில்**
**கண்டனவும் காணா கெடும்.**
**(நான்மணிக்கடிகை-41, 2-4, பக்கம்-69)**

என்ற பாடல்வரிகளில் விளம்பினகனார், உயிரனைத்தும் பிறக்கும் பொழுது பிறக்க

வேண்டாம் என்று கூறினாலும் நிற்காது, உடலைவிட்டு உயிர்போகும் பொழுது போகவேண்டாம் என்று நிறுத்தினாலும் நிற்காது. அதுபோல, திருமகள் தம்மைச் சேரும்பொழுது செல்வம் அதிகரிக்கும், பிரிந்துச் செல்லும் பொழுது செல்வமும் அழிந்துவிடும் என்று கூறப்பட்டுள்ளன.

நாம் புரியும் நன்மைகளைப் பொருத்து அடுத்த பிறவியில் நன்மையும், முன்பு செய்த தீமையைப் பொருத்து இப்பிறவியில் தீமையும் நமக்கு நிகழ்கிறது என்ற நம்பிக்கையை மக்கள் கொண்டிருந்தனர். துன்பம் தரக்கூடிய அடுத்த பிறவியிலிருந்து விடுதலை அடைவதற்கு உரிய வழிமுறைகளைக் கூறுகின்ற வகையில்,

**கள்ளான்சூ தென்றும் கழுமான், கரியாரை**
**நள்ளான் உயிரிரங்க நாவாடான் - நள்ளானாய்**
**ஊன்மறுத்துக் கொள்ளானேல் ஊனுடம்**
**பெருஞ்ஞாறுந்**
**தான்மறுத்துக் கொள்ளான் தளர்ந்து.**
**(சிறுபஞ்சமூலம்-19, பக்கம்-66)**

என்ற இப்பாடல் அமைந்துள்ளது. இங்குப் பிறர் பொருளை விரும்பாதவன், சூதாட்டத்தில் கலந்துகொள்ளாதவன், கயவருடன் நட்புப் பாராட்டாதவன். வன்சொற்கள் கூறாதவன், எல்லா உயிரினங்களுக்கும் நண்பனாக, ஊன் உணவினை உண்ணாதவன், என்ற சிறப்புடையவர்கள் தசையோடு கூடிய அடுத்தபிறவியை எடுக்கமாட்டார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## வாழ்வியல்

மனிதனின் நடத்தைகள் மற்றும் செயல்பாடுகளைப் பொருத்து வாழ்வியலை அகம், புறம் என இரண்டு வகையாகப் பிரிப்பர். குடும்பம், இல்லற ஒழுக்கம், கணவன் மற்றும் மனைவி பின்பற்றவேண்டிய கடமைகள், விருந்தோம்பல் முதலியவற்றை அக வாழ்வியலுக்குள் அமைப்பர். குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமைவதற்குக் காரணமாக விளங்கும் மனைவியின் பண்புநலன்களை ஆசிரியர் கூறுமிடத்து,

கணவனின் வருவாய்க்குத் தகுந்தவாறு தனது செலவுகளை அமைத்துக்கொண்டு, உறவினர்களைப் பகைத்துக்கொள்ளாமல் தன்னோடு பேணிப்பாதுகாத்து, விருந்தினரை உபசரித்து, அடக்கம் உடையவராக, பிறரை விரும்பாத தன்மையுடையவராக, நற்குணங்களால் நிரம்பி, நாணம் உடையவராக வாழ்வது சிறந்த மனைவியின் பண்புகளாகும் என்பதை,

**வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்**
**வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்**
**-திருவாக்குந்**
**(சிறுபஞ்சம -41,1-2,ப-76)**

**பேணடக்கம் பேணாப் பெருந்தகைமை**
**பீடுடைமை**
**நாணொடுக்கம் என்றைந்தும் நண்ணிறாப்**
**பூணொடுக்கம்(சிறுபஞ்-43,1-2,பக்77)**

என மேற்காணும் பாடல் வரிகள் அமைந்துள்ளன. அகத்தைப் போன்றே வாழ்வியலுக்குத் தேவையான வீரம், போர், அரசர்பண்புகள், துறவின் இன்றி யமையாமை, என்பவை பற்றிய புறக் கருத்துக்கள் நிறைந்துள்ள நூலாகவும் சிறுபஞ்சமூலம் உள்ளது.

நாட்டை ஆளும் அரசருக்கு அரணாக அமைவன, நீருடைய நீண்ட அகழியும், அடர்ந்த காடும், சேற்று நிலமும், வானத்தைத் தொடுகின்ற மலையும், சிறப்புடைய குடிமக்களும் ஆவர். இக்கருத்தினை விளக்கும் பாடலாக,

**நீண்டநீர் காடு களர்நிவந்து விண்தோயும்**
**மாண்ட மலைமக்கள் உள்ளிட்டு - மாண்டவர்**
**ஆய்ந்தன ஐந்தும் அரணா உடையானை**
**வேந்தனா நாட்டல் விதி.**
**(சிறுபஞ்சமூலம்-49,பக்கம்-1318)**

என்னும் அமைந்துள்ளது. அரசரைப் போன்று போர்க்களத்தில் போர்புரியும் வீரர்கள் பின்பற்றிய போர் மரபுகளாவன. வீரருக்குப் பயந்து தோற்றோடுகையில் உடை யினைப் போகவிட்டவர்கள், புல் பறித்து வாயிலிட்டு மூடர்போல் நடந்து கொள்பவர், ஓடுகின்ற நீரில் புகுந்து ஒளிந்து கொள்பவர், கையில் போர்க் கருவிகள் இல்லாதவர் என்ற ஐவரையும் உயர்ந்த வீரர்கள் விட்டுவிடுவர் என்ற புறச்செய்தியை,

**உடையிட்டார் புன்மேய்வார் ஓடுநீர் புக்கார்**
**படையிட்டார் பற்றேதும் இன்றி - நடையிட்டார்**
**இவ்வகை ஐவரையும் என்றும் அணுகாரே**
**செவ்வகைச் சேவகர் சென்று.**

(சிறுபஞ்சமூலம்-39,பக்கம்-75)

என்னும் பாடல் கூறுகிறது. போர் வீரர்களுக்கு உரியபோர் மரபுகள் இவைபோன்று இன்னும் பல உள்ளன. அவை தாம் போர்புரியப் போவதை முன்னதாகவே முரசறைந்து தெரிவித்து விட்டுப் போரில் பங்கு பெறாதோர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று கூறும்,

**ஆவும் ஆன் இயற் பார்ப்பன மக்களும்,**
**பேண்டிரும் பிணியுடையீரும், பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்**
**பொன் போல் புதல்வரைப் பெறாஅதீரும்,**
**எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின்.**

(புறநானூறு-9,1-5,பக்கம்-25)

என்னும் புறநானூற்றுப் பாடலில், போர்புரிகின்ற இடத்திற்குச் செல்கின்ற பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி கூறுகின்ற கூற்றாக, பசுவும், பசுவைப்போன்ற பார்ப்பனரும், பெண்களும்,நோய்வாய்ப் பட்டவர்களும், புதல்வர்களைப் பெறாதவர்கள் என்ற பலரும் கேட்பீராக, நாங்கள் எங்கள் அம்பு களைப் பயன்படுத்திப் போர்புரிய உள்ளோம். நீங்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று போருக்குரிய அறப்பண்பு நிறைந்தவர்களாக சங்ககாலம் மற்றும் சங்கம் மருவிய காலத்தைச் சார்ந்த வீரர்கள் விளங்கியதை அறியமுடிகின்றது.

## மனிதநேயம்

மனிதனை, மனிதனாக அடை யாளம் காட்டுவது அவனிடம் உள்ள கொடை, ஈகை, கொல்லாமை, அறம், உதவுதல் போன்ற பண்புகளாகும். இல்லையென்போர்க்கு இல்லை என்று கூறாமல் கொடுத்தலும், துன்பப்படும் உயிர்களின் துன்பத்தைப் போக்குவதும், உயிர்களை உயிர்களாக மதித்தலும் சிறந்த மனிதநேயப் பண்பாகும்.

எவ்வித பிரதிபலனும் எதிர் பாராமல் கொடுத்தலே கொடை, உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவினைக் கொடையாகச் சிறையில் வைக்கப்பட்டவருக்கும், முன்னோர் களுக்காக நோன்பிருப்பவர்களுக்கும், நோய் வாய்ப்பட்டவருக்கும், உணவின்றி ஒருநாள் உண்ணாது மறுநாள் உண்பவருக்கும், பலநாட்கள் உண்ணா நோன்பிருப்பவர்களுக்கும் என்று கூறப்பட்ட பலருக்கும் கொடுப்பவர் நாட்டிற்கு அரசராவார் என்ற கருத்தை,

**சிறைக்கிடந்தார்; செத்தார்க்கு நோற்பார் பலநாள்**
**உறைக்கிடந்தார் ஒன்றிடையிட் டுண்பார் - பிறைக்கிடந்து**
**முற்றனைத்தும் உண்ணா தவக்கீந்தார் மன்னவராய்க்**
**கற்றனைத்தும் வாழ்வார் கடந்து.**

(சிறுபஞ்சமூலம்-69,பக்கம்-89)

என்னும் பாடல் தெளிவு படுத்துகிறது. உணவின் முக்கியத்துவம் அறியாதவர்களுக்குக் கொடுத்தால் உணவு வீணாகிவிடும். எனவேதான் உணவின் முக்கியத்துவத்தை உணர்ந்

தவர்களுக்குக் கொடுப்பது சிறந்த கொடையாகும். மணிமேகலைக் காப்பியத்தில் வரும் ஆபுத்திரனும் உணவினை யாருக்கெல்லாம் கொடுத்தார் என்பதை,

**காணார் கேளார் கால்முடப் பட்டோர்**
**பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்**
**யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி**
**உண்டொழி மிச்சிலுடன் டோடுதலை**
**மடுத்துக்.**
(மணிமேகலை-13.111-114)

என்னும் பாடலடிகள் கூறுகின்றன. இங்கு ஆபுத்திரன் தன்னிடம் உள்ள உணவினை, கண்தெரியாதவர், காதுகேளாதவர், கால்முடமானோர், பாதுகாக்க யாரும் இல்லாதவர், நோய்வாய்ப்பட்டோர் என்ற பலரையும் அழைத்து உணவு கொடுத்து உண்ணச்செய்த பின்பு மீதமுள்ள உணவினைத் தான் உண்ணும் உயர்ந்த கொடையாளராகத் திகழ்ந்துள்ளான் என்பதை, அறிய முடிகின்றது.

பிறஉயிரைத் தன் உயிர்போல் எண்ணிப் பேணிப்பாதுகாப்பது, நாம் மனிதன் என்ற உயர்நிலையில் இருப்பதற்குச் சான்றாகும். உயிரினத்தின் உடலிலிருந்து உயிரானது துடிதுடித்துச் செல்லும்படி கொல்லாமை என்பது அனைவருக்கும் மிகுந்த நன்மையைத் தரும், என்ற செய்தியை உயிர் நோவக் கொல்லாமை நன்று (சிறுபஞ் சமூலம்–37) என்றும், உயிர்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்துகின்றவர் பெரிய பாவம் செய்தவராவார் என்பதனை,

**கொன்றான், கொலையை உடன்பட்டான்**
**கோடாது**
**கொன்றதனைக் கொண்டான் கொழிக்**
**கங்கால், - கொன்றதனை**
**அட்டா, னிடவுண்டான் ஐவரினும்**
**ஆகுமெனக்**
**கட்டெறிந்த பாவங் கருது.**
(சிறுபஞ்சமூலம்-68,பக்கம்-89)

என்னும் பாடலில், உயிரைக்கொன்றவன், ஒருகொலைக்கு உடந்தையாகஇருந்தவன், கொலைசெய்யப்பட்ட ஊனினை விலைக்கு வாங்கியவன், அவ்வூனைச் சமைத்தவன், ஊன்உணவினை உண்டவன் என்று கூறப்படுகின்ற அனைவருக்கும் உயிர்கொலை புரிந்த பாவம் வந்துசேரும், அதனால், எந்த உயிரையும் துன்புறுத்தாமல் அதனதன் வழியில் வாழவிட்டு நாமும் வாழ்வது சிறந்த வாழ்க்கையாகும்.

## பொருளாதாரம்

வாழ்வின் இன்றியமையாத் தேவை களான உணவு, உடை, இருப்பிடம் என்ற மூன்றையும் பெறுவதற்குப் பொருள் அடிப்படையாகும், இப்பொருட்தேவை அவரவர் மேற்கொள்ளும் தொழிலைப் பொறுத்து அமைகின்றது. ஒருவர் செல்வராவதையும், ஏழையாவதையும் முடிவுசெய்யும் தொழிலில், முக்கியமான உழவுத்தொழில் புரியும் உழவரின் பண்புகள் பற்றியும்,

**நன்புலத்து வையடக்கி நாளுமா**
**டோபோற்றிப்**
**புன்கலத்தைச் செய்தெருப் போற்றியபின்**
**- இன்புலத்தின்**
**பண்கலப்பை யென்றிவை பாற்படும்**
**பானுழவோன்**
**நுண்கலப்பை நூலோது வார்.**
(சிறுபஞ்சமூலம்-58.பக்கம்-84)

என்னும் கூறப்பட்டுள்ளது. இப்பாடலில் உழவுத்தொழிலில்சிறந்த உழவன் என்பவர், விளைநிலத்தில் உள்ள வைக்கோலைச் சேர்த்துவைப்பார். உழுவதற்குரிய ஏரையும், உழுமாடுகளையும் போற்று வார். புன்செய் நிலத்தை நன்செய் நிலமாகத் திருத்தி எருவிடுவார். கலப்பையைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்துபவராகவும் திகழ்பவராவார் என்பதை அறியமுடிகின்றது.

இளம்வயதில் அறவழியில் தொழில்புரிந்து ஈட்டிய செல்வத்தை, முதுமை வரும் என்பதை உணர்ந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறின்றிச் செல்வத்தைச் செலவு செய்தபின்பு, முதுமையடைந்தவராக ஆனதும், முன்பொருகாலத்தில் செல்வராக இருந்தோம் என்று வருந்துபவர் தாம் இரண்டு கால்களையுடைய எருதிற்கு நிகராகவர் என்று விளக்கப் பட்டுள்ளன.

**பூதரே முன்பொருள் செய்யாதார் - ஆதரே**
**துன்ப மிலேம்பண்டு யாமே வனப்புடையேம்**
**என்பார் இருகால் எருது.**

(சிறுபஞ்சமூலம்-18.2-4.பக்கம்-66)

## முடிவுரை

சங்கம் மருவிய காலத்தைச் சார்ந்த மக்களிடத்தில் செல்வத்தலைவியான திருமகள் பற்றியும், மறுபிறப்பு, சொர்க்கம், நரகம் பற்றிய நம்பிக்கைகளும் இருந்தன. மற்றும் இல்லற ஒழுக்கங்கள், அரசருக்கு இன்றியமையாதவைகள், போர் மரபுகள் பற்றிய செய்திகளும் இருந்தன என்பதும் கூறப்பட்டுள்ளன.

இத்துடன் உயிர்களைக் கொல்லாமை, கொடை போன்ற மனிதநேயப் பண்புகளும், பொருளீட்டுவதற்காக தொழில் புரிவதன் முக்கியத்துவமும், உழவரின் கடமைகளும் சிறுபஞ்சமூலம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ள பண்பாடுகளாக இக்கட்டுரையில் விளக்கப் பட்டுள்ளன.

## துணைநின்ற நூல்கள்


*அரவாணன்.க.ப – சிறுபஞ் சமூலம் (மூலமும் தெளிவுரையும்) (உரையாசிரியர்) தமிழ்க் கோட்டம், சென்னை, 2010.*

*கௌமாரீஸ்வரி. எஸ் – பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (மூலமும் உரையும்) (தொகுப்பாசிரியர்) சாரதா பதிப்பகம், சென்னை – 2009.*

*தமிழ்ப்பிரியன், ஆசாரக் கோவை, நான்மணிக்கடிகை (மூலமும் உரையும்)(உரையாசிரியர்) கற்பகம் புத்தகாலயம். சென்னை– 2012.*

*பாலசுப்பிரமணியன். கு.வெ. – புறநானூறு (மூலமும் உரையும்) விசுவநாதன்.அ நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2017.*

*வேங்கடசாமி நாட்டார். நா.மு மணிமேகலை (மூலமும் உரையும்), துரைசாமி பிள்ளை.சு., (உரையாசிரியர்), சாரதா பதிப்பகம், சென்னை, 2011.*

# கவிவேந்தரின் கவிதைகளில் திருமணம் பற்றிய பதிவுகள்

**முனைவர் சு. தீபா,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி, காந்திநகர்,
காட்பாடி, வேலூர்- 632006.

## முன்னுரை

மனித சமுதாயத்தில், மனிதர்கள் காண முற்படும் பிம்பங்களில் திருமணம் என்னும் சடங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. மனித மனங்களில் சில தூண்டல் மற்றும் துலங்கல்களின் வடிகாலாக அமைவது திருமணம். இந்த நிலைப்பாட்டை நெறிப்படுத்தும் சடங்காகவே திருமணம் என்னும் செயல்பாடு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. சமூகத்தைக் கட்டமைக்கும் காரணிகளில் குடும்பம் எனும் அமைப்பு மிக முக்கியமானது. அந்த குடும்பக் கட்டமைப்பு, திருமணத்தைப் பொறுத்துத் தான் அமைகிறது. திருமணங்கள் மனித சமூகத்தின் தனிப்பட்ட மதிப்பீடு. ஆனால், இந்த மதிப்புமிக்க திருமணங்கள் இப்போதெல்லாம் மனத்தை வருடுவதாக இல்லை. நெருடுவதாகவே அமைகின்றது. கவிஞர் மேத்தாவின் கவிதைகளில் திருமணம் குறித்த செய்திகள் நிஜங்களை முன்னிறுத்தும் நிழல்களாகத் திகழ்கின்றன. அத்தகைய சிந்தனைகளையே இக்கட்டுரை முன்னிறுத்துகிறது.

## திருமணம் என்பது

தமிழ் சமூகத்தில் ஆதி நாட்களில் திருமணம் என்ற சொல் இடம் பெறவில்லை. ஒருமித்த அன்பு கொண்ட தலைவன் தலைவியரிடத்தில் உண்மைத் தன்மையில்லாத போது, பொய்யும் வழுவும் தோன்றிய போது கரணம் என்னும் திருமண சடங்கு உருவானது. தொல்காப்பியத்தில் திருமணம் என்னும் கட்டமைப்பு உருவாவதற்கு காரணமாக அமைகின்றது,

> "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப"
> (தொல் - பொருள் - நூ - 143)

## கவிஞர் மேத்தாவின் கவிதைகளில்

இரு மனங்கள் இணையும் திருமணம் ஒரு சடங்காக, விழாவாக, தெய்வீகமாக, நட்புக்காக எனப் பல பரிமாணங்களைப் பெற்றாலும், திருமணம் என்ற சொல் எல்லோரும் கவனிக்கத்தக்க இடத்தில்தான் இருக்கிறது. இப்போதெல்லாம் நினைத்த நேரத்தில் திருமணம் செய்வதும், நினைத்த நேரத்தில் அந்த பந்தத்தை முறித்துக் கொள்வதும் என பலரது வாழ்க்கை இயங்குகிறது. திருமணம் என்பது காட்சி பொருள் ஆகிறது. ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்பதெல்லாம் காற்றோடு காற்றாகக் கலந்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும். அந்த அளவிற்குத் திருமணமும், திருமண உறவும் விவாதப் பொருளாக மாறி இருக்கிறது. கவிஞர் மேத்தா, பெருமைமிகு திருமணங்கள் குறித்த செய்திகளைத் தமது கவிதைகளில் பதிவு செய்திருப்பதைக்

காண முடிகிறது.

## திருமண மேடை

திருமண மேடை என்பது ஒவ்வொரு ஆணுக்கும், ஒவ்வொரு பெண்ணுக்கும், உரிய பருவத்தில் நிகழும் கனவாகும். ஒருவேளை பெண்களுக்கு, தான் நினைத்த வாழ்க்கை வாய்க்காது போனால், மரணமே கிடைக்கிறது.

**"கல்யாண மேடையில்**
**அலங்கரிப்பதற்காகக்**
**கனவுகள் கண்ட கன்னிப்பூக்கள்**
**சவப்பெட்டியின் மேனியில்**
**சரிந்து விழுந்தன!"**

**(கண்ணீர்ப் பூக்கள் ப.39)**

சிலருக்குத் திருமண வயது கடந்து போனால், வாழவும் முடியாது, சாகவும் இயலாது தவித்துப் போவதையும் கவிஞர் தம் கவிதைகளில் பதிவிட்டிருக்க காணலாம்.

## முதிர்க்கன்னிகள்

சமுதாயத்தில் பெரும்பான்மை பெண்களுக்குத் திருமணம் என்பது அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திணிக்கப்படுகிறது. சிலருக்கு அது எளிதில் அமைந்து விடுகிறது. சிலருக்குக் காலம் தாமதிக்கிறது. மற்றும் சிலருக்கு அத்திருமணம் கிட்டாமலும் போய் விடுகிறது. அத்தகையவர்களை, இந்தச் சமூகம் விமர்சிக்கும் விதம் இதயங்களை நொறுக்கிவிடுகிறது. கவிஞர் மேத்தா தம்முடைய கவிதையில் அதனை மிக நேர்த்தியாக குறிப்பிடுகிறார்.

**"திரைகளை விலக்கி**
**ஒரு பார்வை பார்த்துவிட்டு**
**ரதங்கள் போயின ராஜ வீதிகளில்**
**எங்கள் முகங்கள் நசுங்க நசுங்க**
**எட்டிப் பாருங்கள்**
**இதயத்தில் இருக்கிற காயங்களை!**
**உங்கள் முகம் கூட உள்ளே**
**தெரியலாம்!"**

**(என்னுடைய போதிமரங்கள் ப. 83)**

என்ற வரிகளில், கடந்து போகும் அத்தனை பேரும் திருமணத்தின் பெயரால்பெண்பார்த்து,வேண்டாமென விலக்கிக் காயப்படுத்தியவர்கள் என்பதைக் கவிஞர் பதிவு செய்கிறார். இப்படித் தாமதிக்கும் திருமணத்தால், காலங்களைக் கட்டாயமாகக் கடந்து செல்லும் பெண்களின் மனநிலையைக் கவிஞர் மேத்தா குறிப்பிட்டிருக்கும் விதம் தனித்தன்மையானது.

## கடந்து போகும் இளமை

ஆணாயினும் பெண்ணாயினும் திருமணம் எனும் நிகழ்வை இளமைக் காலத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நம் முன்னோர்கள், 'பருவத்தே பயிர் செய்' என்றார்கள். திருமணம் தாமதமானால் இளமை கடந்து போகும். அது ஆணுக்கு பெரிய பாதிப்பைத் தந்துவிடாது. ஆனால், பெண்ணுக்கு அது அமைந்துவிட்டால் அவளுடைய வாழ்வை வேதனைக்கு வார்த்து விடும் என்பதனை,

**"பூக்களிலே நானுமோர்**
**பூவாகப் பிறந்தாலும்**
**பொன் விரல்கள் தீண்டலையே**
**பொன் விரல்கள் தீண்டலையே**
**நான் பூமாலை ஆகலையே!"**

**(கண்ணீர்ப் பூக்கள் ப. 44)**

என்பதைக் குறிப்பிடுகிறார் கவிஞர் மேத்தா. திருமணம் என்பது பெண்களுக்கு மட்டும் கட்டாயத் திணிப்பாகிறது. அது, இருந்தாலும் தொல்லை தான்... இல்லையென்றாலும் தொல்லைதான்... சில நேரங்களில் இந்தத் திருமணங்கள் வரதட்சணைகளால் நிறைவடைகிறது என்பதையும் கவிஞர் பதிவு செய்கிறார்.

## வரதட்சணை விசாரணைகள்

திருமணத்தை முன்னிறுத்தி பெண் பார்க்கும் படலம் நடைபெறும். அது முடிந்த பிறகு உலவும் பேச்சுகள்

விசாரணைகளாகும்.

**"வந்த பெரியவர்கள் மட்டும்**
**விலைதரச் சொல்லி**
**விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்...**
**வேருடன் பிடுங்கிப் போக!"**
**(மு.மேத்தாவும் படைப்புகளும் ப.198)**

என்று குறிப்பிடுகிறார் கவிஞர். மற்றொரு கவிதையில்,

**"வரதட்சணை பாக்கிகள்**
**வந்து சேரவில்லையென்று**
**கணவன்மார்கள் கடுங்கோபத்தோடு**
**வீதியில் தூக்கி வீசி எறிகிறார்கள்!**
**நகைகளையல்ல - மனைவியை!"**
**(மு.மேத்தாவும் படைப்புகளும் ப.198)**

என்று குறிப்பிடுகையில் அது வரதட்சணையின் திணிப்புகளை அறிய முடிகிறது. திருமணம் என்பது இளமைக் காலக் கனவு என்பது பொதுவான பதிவு. அது கல்யாணச் சந்தை என்று குறிப்பிடப்படுவதையும் நாம் மறந்து விடக்கூடாது.

**"தங்கமே என்று தந்தையும் தாயும்**
**கொஞ்சியதால் தானோ அந்த**
**உயிருள்ள தங்கங்கள் தங்க நகைகேட்டுத்**
**தண்டிக்கப்படுகிறார்கள்!"**
**(மு. மேத்தா கவிதைகள் ப.108)**

திருமணம் ஆபரணத் தேவைகளின் அணி வகுப்பாவதைக் கவிஞர் மேத்தா பதிவு செய்கிறார். இப்படியெல்லாம் போராடிச் செய்யும் திருமணம் எல்லோருக்கும் நிறைவை தந்து விடுவதில்லை என்பதையும் கவிஞர் குறிப்பிடக் காணலாம்.

## தாலிப் பாலங்கள்

திருமண பந்தத்தில் குடும்ப அமைப்பில், ஒரு பெண் தாயாக, மனைவியாக, மருமகளாக எனப் பல வடிவங்களில் தன் பிறந்து வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் அன்பினால் பாலம் அமைக்கிறாள். அதனைத் தாலிப்பாலம் எனும் புதுமைச் சொல்லாடலாகக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

**"மனச்சுமைகள் அதிகமாகும் போது**
**தாங்க முடியாத தாலிப்பாலங்கள்**
**தகர்ந்து போகின்றன!"**
**(கண்ணீர்ப் பூக்கள் ப.44)**

மற்றொரு கவிதையில்,

**"தாலிக் கயிறுகளே**
**தூக்குக் கயிறாகிறது!"**
**(என்னுடைய போதிமரங்கள் ப.83)**

என்கிறார் கவிஞர். திருமணம் என்பது எத்தனை பொறுப்பு மிக்கது என்பதை மேற்கண்ட வரிகளெல்லாம் உணர்த்துகின்றன.

## முடிவுரை

திருமணம் என்பது கொளற்குறி மரபினோர்க்கு, கொடைக்குறி மரபினோர் கொடுப்பக் கொள்வதாகும். ஒரு ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் மனம் ஒருமித்தால் சில சமயம், கொடுப்போர் இன்றியும் திருமணம் நிகழ்ந்து விடும். இப்படி விரும்பியும் விரும்பாமலும் செய்யும் திருமணங்கள் பெரும்பான்மையினருக்கும் வலி களையும் வேதனைகளையும் தருவதாக தான் அமைகின்றது. இந்த இயல்பு நிலைகளைத் தான் கவிஞர் மேத்தாவும் தமது கவிதைகளில் காட்டுகிறார். சராசரி மக்களின் வாழ்க்கையில் திருமணம் என்னும் நிகழ்வும், அதற்கான செயல்பாடுகளும் கட்டாயத் திணிப்பாகவே அமைந்து விடுகிறது. பெரும்பான்மை மக்களுக்கு இத்திருமணம் எனும் நிகழ்வு பூச் சொரியும் மகிழ்ச்சியைத் தந்து விடுவ தில்லை. மரண தண்டனையை விதித்து விடுவதுமில்லை. ஆழ்குழிக்கும் அதற்கு மேலான பகுதிக்கும் இடையில் ஆடிக்கொண்டிருக்கும் விழுதாகி ஆட்டுவிக்கிறது என்றால் அது மிகையில்லை.

## பயன்படுத்திய நூல்கள்


*தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர். 2008.*

*கண்ணீர்ப் பூக்கள், மு. மேத்தா, கவிதா பப்ளிகேஷன்ஸ், சென்னை. 2017.*

*என்னுடைய போதிமரங்கள், கவிஞர் மு. மேத்தா, திருமகள் நிலையம், சென்னை, பதிப்பு– 2008.*

*மு. மேத்தாவும் படைப்புகளும், (ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பு), மு. சாதிக் பாட்ஷா, ராஜா வெளியீடு, திருச்சி, 2012.*

*மு. மேத்தா கவிதைகள், கவிதா பப்ளிகேஷன்ஸ், சென்னை. 2007.*

# கோட்பாட்டு நோக்கில் தன்வரலாறு

**முனைவர் அ.நந்தினி,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-625 001.

## ஆய்வு நோக்கம்:

எந்தவொரு இலக்கிய வகையாக இருந்தாலும் அதற்கான கோட்பாடுகள் அந்த இலக்கிய வகையினை வைத்தே உருவாக்கப்படுவதுண்டு. தன் வரலாறு என்னும்; வகைமைக்கும் கோட்பாட்டு அடிப்படையிலான விளக்கங்கள், விமர்சனங்கள் இருக்கின்றன. மேலும் அவ்வடிப்படையில் பார்க்கும்போது அந்த வரலாற்றின் தனித்தன்மைகளையும், போதாமைகளையும், அனுபவங்களையும் அறிந்துகொள்ள வழிகள் உள்ளன. எனவே தன்வரலாறுகளைக் கோட்பாட்டின் நோக்கில் அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## திறவுச் சொற்கள்:

ஆசிரியன் – கதைசொல்லி – வாசகன் – சுயசரிதை – பிரதியாக்கம் – மன்னிப்பு – கிறித்துவ ஆன்மீகவாதி – மானுடம் – இந்திய இலக்கியம்.

## முன்னுரை:

தன்வரலாறு என்னும் இலக்கிய வகை தற்காலத்தே பலராலும் விரும்பப்படும் வகையாக வளர்ந்து வருகிறது. ஒரு தனிமனிதனின் வாழ்க்கை அதிலும் பல்வேறு வகையான சாதனைகளையும், சோதனைகளையும் செய்தவர்களின் வாழ்க்கை என்பது அக்காலத்திய அந்நாட்டின் அல்லது அவர்கள் வாழ்ந்த பகுதியின் வரலாறாக எண்ணிப் பார்க்கத் தக்கதாகும். எந்தவொரு இலக்கியவகை தோன்றினாலும் அதனை அடிப்படையாக வைத்து அதன் இலக்கணத்தை வரையறை செய்து அது ஏற்கப்பட்டபின் கோட்பாடாகப் பரிணாமம் பெறுகின்றது. அவ்வகையில் தன்வரலாற்றின் வரலாற்றையும், அதன் கோட்பாட்டுப் பின்புலத்தையும் விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## தன் வரலாறு – கோட்பாடு – வரலாறு

காலம், இடம், சூழல் மற்றும் சமூகக் கட்டமைப்பு ஆகியவற்றைப் பொறுத்து வரலாறு நெடுக பற்பல இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. அவ்வாறு படைக்கப்பட்ட இலக்கியங் களை உருவம், உள்ளடக்கம் முதலிய வற்றின் அடிப்படையில் தொகுத்து வகைப்படுத்தவும், அவ்வாறு வகைப்படுத்தப் பட்டவற்றை புரிந்துணர்ந்து வளப்படுத்தவும் 'கோட்பாடுகள்' (இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் என்பதைப் போல) உருவாக்கப்படுகின்றன. 'தன் வரலாறு' எனும் வகைமையும் இதற்கு விதிவிலக்கல்ல. தன்வரலாற்றை எழுதுவதற்குக் காலந்தோறும் எழுத்தாளர்கள் தங்களுக்கு உகந்த வடிவங்களைப் பயன்படுத்தினர். பயண அனுபவங்கள், நாட்குறிப்புகள், நினைவுப் பதிவுகள், சுயசித்திரங்கள், புனைவுகளற்ற தன்வரலாறு, தன்வரலாற்றுப் புனைவு

(தன்வரலாற்று நாவல்) என சம காலத்தில் சமூக வலைதளங்கள் மற்றும் வலைப்பூவில் எழுதுதல் வரை இப்போக்கு நீட்சியடைந்து வருகிறது. இவற்றில் எது தன்வரலாறு? எனும் கேள்வி எழுவது இயல்பானதே. அதற்கு விடை காணவும், அதனை இனங் காணவும் கோட்பாடுகள் துணை புரிகின்றன.

"உலகத்தின் தன்வரலாறுகளை ஆய்வு செய்த நிபுணர்கள் மூன்று கருத்துக்களைக் கூறி அவை தன் வரலாறுகளில் இருந்தே ஆகவேண்டும் என்கிறார்கள். தன்வரலாற்றில்,

1. "ஆசிரியன் (Author) இருக்க வேண்டும்.
2. கதைசொல்லி (Narrator) இருக்க வேண்டும்.
3. கதாநாயகன் (Protogonist) இருக்க வேண்டும்.

நூல் என்ற கருத்தாக்கத்துக்கு அதை ஆக்கியவன் தேவையாகிறான்"[1] என்று தன்வரலாற்றின் மூன்று அடிப்படைக் கூறுகளை எடுத்துரைக்கிறார் தமிழவன். இவர் குறிப்பிடும் 'ஆசிரியர், கதை சொல்லி, கதாநாயகன்' எனும் மூன்று கருத்துருக்கள் ஒரு நாவலுக்கோ, அல்லது தன்வரலாற்றுப் புனைவிற்கோ, ஒரு வாழ்க்கை வரலாற்றுக்கோ பொருத்த மானதாக அமையலாம். இவை மூன்றும் நாவலிலும், தன் வரலாற்றுப் புனைவிலும், வாழ்க்கை வரலாற்றிலும் வேறுபட்டும் அமையும். (பின் நவீனத்துவம் வரலாற்றைப் பெருங்கதையாடல் என்கிறது). ஆனால் தன்வரலாற்றில் மூன்றும் வேறுபட வாய்ப்பில்லை. அப்படி வேறுபட்டால் அது 'தன்வரலாறு' ஆகாது. ஒரு வகையில் 'ஆசிரியன் – கதைசொல்லி – கதாநாயகன்' இவை மூன்றும் இணையும் புள்ளியே 'தன்வரலாறு' ஆகிறது.

தன்வரலாறு என்பது ஒரு தனிமனிதரின் வாழ்க்கை என்றாலும் அது ஒரு குடும்பத்தின் வழக்காறாக, சமூக வரலாறாக, அரசியல் வரலாறாக, கடந்த காலத்தின் ஒரு சில குறிப்பிட்ட அசைவியக்கங்களைச் சித்திரிப்பதாக அமைகின்றது. தன்வரலாற்றில் 'கடந்த கால நினைவுகள்' முக்கியத்துவம் உடையவை ஆகும். கடந்த கால நினைவுகளைக் குறிப்புகளாக எழுதுவது நினைவுக் குறிப்புகள் ஆகும். இவை பெரும்பாலும் 'பொது வாழ்க்கை' சார்ந்ததாக அமையும். ஆனால், தன் வரலாற்றில் அதன் ஆசிரியனின் தனிப்பட்ட வாழ்க்கை முதன்மை பெறும்.

"நிஜ வாழ்வில் குறிப்பிட்ட மனிதன் ஒருவன் தன் வாழ்க்கைப் பாதையினைத் திரும்பிப் பார்த்துச் செய்யும் அலசல் இது. உரைநடையில் அமைந்த இப்பதிவில் தன் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து அலசுவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். அதிலும் குறிப்பாக தன் ஆளுமை அல்லது குணநலன்கள் கடந்து வந்த வரலாற்றுச் சுவடுகள் அலசப்படும்"[2] என்று பிரெஞ்சு அறிஞர் ஃபிலிப் லெ ஜேன் (philippe le juene) தன்வரலாற்றுக்கான அடிப்படைக் கூறுகளை வரையறுக்கிறார்.

ஒரு தன்வரலாற்று நூலை எழுதுபவனுக்கு 'நேர்மை' மிகவும் இன்றியமையாத அம்சம் என்பதனைப் பல அறிஞர்களும் சுட்டிக் காட்டுகின்றனர். "தன்வரலாறு படைப்பவருக்கும் வாசகருக்கும் எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்று ஏற்படுகிறது என்கிறார் ஃபிலிப் லெழேன். இந்த ஒப்பந்தம் வெளிப் படையாகவும் இருக்கலாம், மறைமுக மாகவும் இருக்கலாம். இச்செயலில் முக்கிய அம்சமாக நம்பகத்தன்மை

இடம்பெறுகிறது. எழுத்தாளர் அல்லது எடுத்துரைப்பாளர் அல்லது கதைமாந்தர், நேர்மையுடன் தன் வாழ்க்கையினை விவரிக்க வேண்டும். வாசகரோ அவர்மீது நம்பிக்கை வைத்து முழுமையாக அப்பிரதியினை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். ஆனால், இந்த ஒப்பந்தம் தன்வரலாற்றுப் புனைவுக்குப் பொருந்தாது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தன்வரலாற்றில் மூன்று 'நான்'கள் இடம்பெறுவர். எழுத்தாளர், எடுத்துரைப்பாளர், முக்கியக் கதாப்பாத்திரம் என மூவரும் ஒருவராகவே இருந்தாலும் காலத்தால் வேறுபட்டிருப்பர். இந்த மூன்று 'நான்'களும் சங்கமித்து அவர்களுள் ஒத்திசைவு வேண்டும் என்பதும் தன்வரலாற்று ஒப்பந்தத்தின் விதிமுறைகளில் ஒன்றாகும்."[3]

தன்வரலாற்றை எழுதும் ஓர் எழுத்தாளனுக்கு திறந்த மனம், வெளிப்படைத்தன்மை, நேர்மை உள்ளிட்டவை முன்நிபந்தனைகளாக வலியுறுத்தப்படுகின்றன. எனினும் இத்தகைய முன்நிபந்தனைகளைத் தன்வரலாற்று எழுத்தாளர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்வதில்லை. அவர் தமக்குத் தாமே பொய் கூறுகிறார். அதுமட்டுமல்ல. சில நேரங்களில் வாசகரை ஏமாற்றவும் முயற்சிக்கிறார் என்பன போன்ற குற்றச்சாட்டுகள் 'தன் வரலாற்று' வகைமையினை நோக்கி முன்வைக்கப்படுகின்றன. ஒருவகையில் முழுமையான நேர்மை, முழுமையான வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட கறாரான முன்நிபந்தனைகள் ஓர் எழுத்தாளனுக்கு அசாத்தியமானதும் சவாலானதாகவும் அமைகிறது.

தன்வரலாற்று ஒப்பந்தத்தை முன்மொழிந்த ஃபிலிப் லெழன், இந்த ஒப்பந்தத்தின்படி எழுதப்பட்ட தன்வரலாற்றுப் பதிவுக்கு 1782–ஆம் ஆண்டு பிரஞ்சு சிந்தனையாளர் ழான் ழாக் ரூசோவின் 'கன்ஃபெஷன்ஸ்' (குற்ற ஏற்புகள்) எனும் நூலினை முன் மாதிரியாகக் குறிப்பிடுகிறார். இவர் தனது நூலின் தொடக்கத்தில்,

"முழுமையான உண்மையை யுடைய மனிதன் ஒருவனை என் சக மனிதர்களுக்குக் காட்டப் போகிறேன். அந்த மனிதன் நானாக இருப்பேன்' என்று ழான் ழாக் ரூசோ பிரகடனம் செய்கிறார். மனித இயல்பினை அப்பட்டமாக எடுத்துரைக்கப் போவதாகக் கூறுகிறார். நான் செய்தவை இவைதான், நான் நினைத்தவை இவைதான், நான் இருந்தது இப்படித்தான் என எதையும் மறைக்காமல் கூறப்போவதாகவும் உறுதியளிக்கிறார். தன் பிரதிக்கான நம்பகத்தன்மைக்கு வலுச்சேர்க்கும் விதமாக, இப்பதிவினை இறைவனின் பார்வைக்கு உட்படுத்துகிறார். பல நூற்றாண்டுகளுக்கு முன் சேந்த் அகஸ்தேன் (Saint Augustin) தான் கிருத்துவராக மாறும்முன் தான் இழைத்த அத்தனை குற்றங்களையும் ஒளிவுமறைவின்றி ஏற்று இதே தலைப்பில் படைத்த நூலினை முன்மாதிரியாகக் கொள்கிறார்."4 ரூஸோ தனது தன்வரலாற்றில் தன்னை சுயபரிசோதனைக்கு உட்படுத்து கிறார். நேர்மையோடும் தனது வாழ்வை அலசுகிறார். உண்மைத் தன்மையோடு எடுத்துரைக்கிறார். அவரது கடமையும், பொறுப்புணர்வும், வாய்மையும் நூலுக்கான இருத் தலையும், தன்வரலாற்றின் நம்பகத் தன்மையினையும் உறுதி செய்வதாக அமைகிறது. அத்துடன் வாசகரின் நம்பிக்கையினைப் பெறவும் அதனை உறுதிப்படுத்தவும் வழிவகுக்கிறது. எனவே ஒரு 'தன்வரலாற்று' நூலின் நிலைத்தன்மை என்பது அதன்

நம்பகத்தன்மை மற்றும் அதன் ஆசிரியனின் வாய்மை ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது எனலாம்.

புதுக்கவிதை, உரைநடை (சிறுகதை, புதினம், கட்டுரை...) என இலக்கிய வெளியில் புதிய திறப்புகளை ஏற்படுத்திய மேற்குலகம் 'தன்வரலாறு' இலக்கிய வடிவத்திலும் முன்னோடியாகத் திகழ்கிறது. "தன்வரலாறு என்பது ஒரு நவீன இலக்கிய வகைமை. கூட்டு அடையாளங்களிலிருந்து தனிமனித உணர்வும் அடையாளமும் முகிழ்க்கும் வரலாற்றுத் தருணத்திலேயே சுயசரிதை என்ற இலக்கிய வடிவம் தோன்ற முடியும். அவ்வகையில் இது முக்கிய நவீனத்துவ இலக்கிய வடிவமாகும். 'சுயசரிதை எழுதுவது மேற்கே உரிய விசித்திர வழக்கம். மேற்கின் செல்வாக்கில்லாத எவரும் கிழக்குலகில் சுயசரிதை எழுதியதாக எனக்குத் தெரியவில்லை' என்றார் 'சத்திய சோதனை' எழுதிய காந்தி. தனித்துவமானதொரு தன்னிலையின் பிரதியாக்கமே சுயசரிதை எனலாம்"[5] என்கிறார் ஆ.இரா.வேங்கடாசலபதி. அவர்தம் கூற்று தன்வரலாறு எனும் இலக்கிய வடிவத்தின் வரலாற்று அடித்தளத்தை விளக்குவதாக அமைகிறது.

புனித அகஸ்டின் (Saint Augustin) இயற்றிய 'பாவமன்னிப்பு' எனும் நூலை 'முதல் தன்வரலாறு' என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். யூத வரலாற்றாசிரியர் ஃபிளேவிஸ் ஜோசஃபஸ் (Flavius Josephus) இயற்றிய விட்டா (Vita, கி.பி.99) மற்றும் கிரேக்க அறிஞர் லிபானியஸ் இயற்றிய ஒரேசன் (Oration, கி.பி.374) ஆகியவை மிகவும் பழமையான 'தன்வரலாறுகள்' ஆகும். தொடக்க காலத் தன்வரலாறுகள் 'மன்னிப்பு வேண்டும்' தன்மையில் அமைந்திருந்தன. தொடக்ககால தன் வரலாற்று ஆசிரியர்கள் தங்கள் பாவச் செயல்களைப் பாசாங்கின்றி வெளிப்படுத்தியதன் மூலம் அவர்கள் அவற்றிற்கு மன்னிப்பு கோர முடியும் என்று எண்ணினர். இன்றைக்குச் சடங்குத் தன்மை பெற்றுவிட்ட 'பாவ மன்னிப்புக்' கோருதல் எனும் சமயக் கருத்துரு இத்தகையதொரு பழம் மரபின் நீட்சியாகக்கூட இருக்கலாம்.

ஆங்கிலேயக் கிறித்தவ ஆன்மீகவாதி ஒருவரால் எழுதப்பட்ட 'தி புக் ஆஃப் மார்ஜரி கெம்பே' (The Book of Margery Kempe, 1438) ஆங்கிலத்தில் வெளிவந்த தொடக்க காலத் 'தன்வரலாறாகக்' கருதப்படுகிறது.

"Lord Herbert of Cherbury's 1764 memories

John Bunyan's Grice Abounding to the chief sinners in 1666

Jarena Lee's The Life and Religious Experience of Jarenal Lee (ஓர் ஆப்பிரிக்க – அமெரிக்கப் பெண் எழுதிய இந்நூல், உலக வரலாற்றில் முதன் பெண் தன்வரலாறாகக் கருதப்படுகிறது)

முதலியவை ஆங்கில மொழியில் வெளிவந்த மேலும் சில தன்வரலாற்று நூல்கள் ஆகும். இவ்வாறு "Super Summar"[6] இணையதளத்தின் வழியாக தன் வரலாற்று இலக்கியத்தின் தோற்ற வரலாற்றை அறியமுடிகிறது.

ஆங்கிலத்தைப் போன்று பிரெஞ்சிலும் 'தன் வரலாற்று' இலக்கியத்திற்கென ஒரு வரலாறு உள்ளது. "16–ஆம் நூற்றாண்டில் மோத்தா... (Montaigne) எனும் மானுடம் போற்றிய சிந்தனையாளரின் நீண்ட கட்டுரைகளில் தன்வரலாற்றுப் பதிவுகள் இடம்பெற்றன. 17–ஆம் நூற்றாண்டில் 'தன்னை'ப் பற்றி சிந்திக்கும் செயல் வெறுப்புக் குள்ளானது. எனவே தன்வரலாற்றுப் பதிவுகள் வெளிவர வாய்ப்பில்லாமல் போனது. 18–ஆம் நூற்றாண்டில் ழான் ழாக்ஸ் ரூசோ

(Jean Jaques Rousseau) எழுதிய 'குற்ற ஏற்புகள்' (கன்ஃபெஷன்ஸ்), 'தனித்த பயணியின் கனவுகள்' ஆகிய நூல்களின் வெளியீடுகள் தன்வரலாறு என்னும் இலக்கிய வகைமையின் தொடக்கமாக அமைந்தது. 19–ஆம் நூற்றாண்டில் லமார்த்தீன் (Lamartine), ஷத்தோ பிரியான் (Chetabriand) ஸ்தாந்தால் (Stendhal), ழோர்ழ் சந்த் (Georges Sand), அல்ஃப்ரெத் தெ முய்சே (Alfred de Musset), குயில்தாவ் ஃப்லோபேர் (Gustave Flaubert) எனப் பல இலக்கிய அறிஞர்களின் படைப்புகளால் இந்த வகைமை மீண்டும் வாசகர்களின் ஆதரவைப் பெற்றது. இருபதாம் நூற்றாண்டில் ழான் போல் சார்த்தர் (Jean Paul Sartre), சிமோன் தெ பொவ்வார் (Somon de Beauvoir), நத்தாலி சரோத் (Nathalie Sarraute), ழான் பெரெக் (Jean perec) எனப் பலருடைய இலக்கியப் படைப்புகள் மூலம் இந்த வகைமை புகழ்பெற்றது."[7]

ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் தோன்றி வளர்ந்த 'தன்வரலாறு' இலக்கிய வகைமை காலப்போக்கில் பிற மொழிகளிலும் தலைகாட்டத் தொடங்கியது. 20–ஆம் நூற்றாண்டு முதல் தன்வரலாறு எனும் இலக்கிய வகைமை பரவலான வாசகர்களின் கவனத்தை ஈர்ப்பதாக வளர்ச்சியடைந்து வருகிறது. பெரும்பாலும் ஆங்கிலத்தில் எழுதப்படும் தன்வரலாறுகள், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் தன் வரலாறுகள்தான் உலகளாவிய வாசகர் கவனத்தைப் பெறுகின்றன.

மேலும், 'இந்திய இலக்கியம்' எனும் பரப்பில் வைத்து 'தன்வரலாற்றின்' இலக்கிய வரலாற்றை அணுக முயற்சிப்பது மேற்குறித்த சிக்கலுக்கு வழிவகுக்கும். ஏனெனில், பல மொழிகள், பல்வேறுபட்ட தன்மைகளை உடைய கலாச்சார பண்பாட்டுக் கூறுகள், வேறுபட்ட நிலவியல் அமைப்புகள் என இந்தியப் பரப்பானது ஒரு மாதிரி (Model) உலகமாக (துணைக்கண்டமாக) இருக்கிறது. அது மட்டுமல்லாமல் உலகச் செம்மொழிகளின் பட்டியலில் கூட ஐந்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. ஒவ்வொரு மொழியிலும் 'தன்வரலாறு' இலக்கிய வகைமைக்கான தனித்ததொரு இலக்கிய வரலாறு இருக்கக்கூடும். எனினும் காந்தியின் 'சத்திய சோதனை' நேருவின் சுயசரிதை, கலாமின் 'அக்னிச் சிறகுகள்' முதலிய நூல்கள் புகழ்பெற்ற இந்தியத் தன்வரலாறுகளாக இந்தியக் கவனம் பெற்றுள்ளன. இந்திய மொழிகளில் வங்க மொழிக்கு அடுத்த நிலையில் தமிழ் மொழியில் அதிக எண்ணிக்கையிலான தன்வரலாற்று இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. தமிழ் மொழியின் தொன்மையும், நவீன வளர்ச்சிக்குத் தக்கவாறு அது தன்னைத் தனித்துவத்தோடு தகவமைத்துக் கொள்ளும் தன்மையும் இடம் பெறுகின்றன.

## முடிவுரை:

தன்வரலாறு என்னும் இலக்கிய வகைமை உலக மொழிகள் பலவற்றுள்ளும் இன்று தனித்ததொரு அடையாளத்தைப் பெற்றுள்ளது. அதன் தொடக்கம் பழங்காலம் என்றாலும், அதற்கான இலக்கணமும், வரையறைகளும் பிற்காலத்தில்தான் உருவாக்கம் பெற்றுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு தற்காலத்தே தன்வரலாற்றிற்கான கோட்பாடுகள் உருவாகியுள்ளதை மேலேகண்ட கருத்துக்களின் வழியாக அறியமுடிகிறது.

## குறிப்புகள்:

1. தமிழவன் (தொ.ஆ – க.ஆ.), தன்வரலாறு – ஓர் இலக்கிய வடிவம், பக்.14–15

2. வெங்கட சுப்புராய நாயகர், சு.ஆ.(க.ஆ), மேலது., ப.30

3. மேலது, ப.31

4. மேலது, ப.32

5. வேங்கடாசலபதி, ஆ.இரா, பாரதியின் சுயசரிதைகள் – கனவு, சின்னச் சங்கரன் கதை, ப.10

6. https://www.supersummary.com/autobiography/

7. வெங்கட சுப்புராய நாயகர், சு.ஆ.(க.ஆ), மு.கூ.நூ, பக்.29–30

# மூதுரை நீதிநூல் உணர்த்தும் நேர் மற்றும் எதிர்மறைக் கருத்துக்கள்

**முனைவர் பா.நேருஜி**
உதவிப் பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி
தமிழ் உயராய்வுமையம்
மதுரை- 01.

தமிழ் நீதிநூல் இலக்கியங்களில் மூதுரை ஒளவையாரால் இயற்றப்பட்டது. இது பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் மூதுை ர (மூது+உரை) என அழைக்கப்படுகிறது. இதற்கு வாக்குண்டாம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதன் கடவுள் வாழ்த்துப் பாடல் வாக்குண்டாம் (வாக்கு + உண்டாம்) என்று வழங்கப்படுவதால் இப்பெயரில் அழைக்கப்படுகின்றது. இந்நூலில் 31 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலும் ஒரு தனிக்கருத்தை வலியுறுத்துகின்றது. இவ் ஆய்வுக் கட்டுரை மூதுரை நீதி நூலில் புதைந்துள்ள நேர் மற்றும் எதிர்மறைக் கருத்துக்களை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. நேர்மறை என்பது நல்லதே நடக்கும், அனைத்தும் சரியாக நடக்கும், நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்று எண்ணங்களை வளர்ப்பது போன்றவை எனலாம். எதிர்மறை என்பது நேர்மறைக்கு எதிரான எண்ணங்களை வளர்ப்பது. தாழ்வு மனப்பான்மை, ஏற்றுக் கொள்ள முடியாதது, சந்தேகம் கொண்ட ஒரு போக்கு போன்றவை எனலாம்.

## நல்லமனம் உருவாகும்

முழுமுதற் கடவுளான விநாயகர் பவளம் போன்ற திருமேனியையும் தும்பிக்கையையும் உடையவர். அவரது பாதங்களை மலர் கொண்டு வழிபாடு செய்பவர்களுக்குச் சொல்வளம் உண்டாகும். நல்லமனம் உருவாகும். செல்வத்தரசி இலக்குமியினால் செல்வம் உண்டாகி உடல் நலமும் உண்டாகும். என்பதனை, ‘வாக்குண்டாம் நல்லமன முண்டாம் மாமலராள் நோக்குண்டாம்’ என்ற கடவுள் வாழ்த்துப் பாடல் கூறுகின்றது.

## பிறருக்கு உதவுதல்

பிறருக்குச் செய்யும் உதவியானது திரும்பக் கிட்டுமா என்று கவலைப்பட வேண்டாம். அது நிலைத்து வாடாமல் வளர்ந்த தென்னைமரமானது, தனது அடி வேரால் உண்டநீரை இனிய சுவையுடைய இளநீராக்கி உச்சியிலே தருவதைப் போல பிறருக்குச் செய்த உதவி தவறாமல் வந்து சேரும் என்பதனை ‘நின்று தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்’ என்று கூறுவதால் உணரமுடிகின்றது. அதேபோல் நல்லவருக்குச் செய்த உதவியானது கல்லின் மேல் எழுதிய எழுத்துப் போல் நிற்கும். ‘நல்லார் ஒருவர்க்குச் செய்தஉபகாரம் கல்மேல் எழுத்துப் போற் காணுமே’ என்று கூறப்படுகின்றது.

## மேன்மக்கள் குணம்

நல்லகுணமுடைய மேன்மக்கள் செல்வத்தில் குறைந்தாலும் குணத்தால் மேன்மக்களாய் இருப்பர். பாலானது காய்ச்சப்பட்டாலும் நிறங்குறையாது. அதன் சுவையில் குறையாது. சங்கு

சுட்டாலும் வெண்மைதரும். இதனை ‘கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே, சங்குசுட்டாலும் வெண்மைதரும்’ என்பர். கல்தூண் பெரும் பாரம் தாங்க நேர்ந்தால் அது வளையாமல் பிளந்து முறியும். அதுபோல் மானக்கேடு வரும்போது உயிரை விடத் துணிந்த மானம் உடையோர் பகைவரைக் கண்டுபணிவாரோ? பணியார் என உயத்துணரலாம்.

### நல்லாரைக் காண்பதுவும் நன்றே

நல்லவர்களைப் பார்ப்பதும் நன்று. நல்லவர்களுடைய சொல் கேட்பதுவும் நன்று. நல்லவரது குணங்களைப் புகழ்ந்து பேசுவதும் நன்று. அந்த நல்லவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று. ‘நல்லார் ஒருவர் உளரேல்’ நெல்லுக்கு இறைத்த நீர் கால்வாய் வழி ஓடி, அங்கே இருக்கும் புல்லுக்கும் கசிந்து போவதைப் போல் இயற்கையான இந்த உலகில் நல்லவராக ஒருமனிதர் இருப்பாரானால் அவர் பொருட்டு எல்லார்க்கும் (தீயவர்க்கும்) மழை பெய்யும்.

### குளம் – உறவு

நீர் வற்றிய குளத்திலிருந்து நீங்கிப் போகும் நீரிலே வாழும் பறவைகளைப் போல் துன்பம் வரும்போது நீங்கி விடுபவர் உறவினர் அல்லாதவர். குளத்தில் நீர் வற்றினாலும் இருக்கும் கொட்டியும், அல்லிக்கொடியும், குவளைக் கொடியையும் போன்று துன்பத்திலும் பங்குகொள்பவர்களே உறவாவர்.

### சீரியபொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும்

சிறப்புடைய பொன்னாலாகிய குடம் உடைந்தாலும் அது பொன்தான். அவை போலவே நற்பண்புக்கு உடையவர் செல்வத்தால் நலிந்தாலும் நற்பண்பு களால் மேலானவராக இருப்பர். நமக்குத் தொடர்பில்லாத மலையில் இருக்கும் மருந்து (நாட்டு மருத்துவம் மற்றும் சித்தமருத்துவம் ஆகியவற்றிற்கு மலைகளில் உற்பத்தியாகிற மூலிகைகள் மருந்தாகின்றன) நோய் தீர்ப்பது போல, நமக்குத் தொடர் பில்லாத அயலவர்கள் மருந்தாக உதவி செய்வர். நற்குணமும் நற்செயலும் உடைய மனையாள் வாழும் வீட்டில் இல்லாத ஒன்று இல்லையென்ற நிலையே இருக்கும்.

### சீரொழுகு சான்றோர் சினம்

சிறந்த வழியில் நடக்கும் சான்றோரின் கோபம், வில்லைப் பிடித்து நீரைப் பிளக்கவரும் பிளவுகள் போல் உடனேயே நீங்கும். ‘கற்றாரைக் கற்றாரே காமுறுவர்’ நல்லதாமரைப் பூக்கள் நிறைந்த குளத்தில் சிறந்த அன்னப் பறவைகள் சேர்ந்து வாழ்வதைப் போல், கற்ற அறிஞர்களைக் கற்றவரே விரும்புவர். ‘கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு’ ஒரு நாட்டின் மன்னனையும் குற்றமில்லாமல் படித்த வனையும் ஆராய்ந்து பார்த்தால், மன்னனைவிடக் கற்றவனே சிறப்புடைய வனாவான். மன்னனுக்கு அவனது நாட்டில் மட்டுமே பெருமையும் சிறப்பும் உண்டு. கற்றவனுக்குப் போகிற நாடெல்லாம் பெருமையும் சிறப்பும் உண்டு.

### தார்வேந்தர் கெட்டால் மனம் சிறியராவரோ

சந்தனமரத்தினது மென்மையான கட்டை தேய்ந்து போனாலும் வாசனை யில் குறைவுபடாது. அதுபோல மாலை யணிந்த மன்னர் செல்வக் குறைவால் நலிந்தபோதும் உள்ளத்தால் சிறியவராவாரோ? ஆகார் என்பது புதைநிலைப் பொருளாகின்றது.

### திருமகள் வரும் போதுவரும்

தழுவி நிற்கிற இனிய சுற்றமும், மேன்மையான செல்வமும் அழகிய

உயர்ந்த குடிப்பிறப்பும் திருமகள் வந்துசேரும்போது வரும். 'தீங்கு செய்பவர்க்கும் உதவுவர் அறிவுடையார்' மரமானது தன்னை அடியோடு வெட்டும் வரையிலும் குளுமையான நிழலைத் தந்து வெயிலை மறைக்கும். அதுபோல அறிவுடையார் தமக்குத் தீங்கு செய்பவர்க்கும் தம்மாலான உதவியைச் செய்வர்.

## குலத்தளவேயாகும் குணம்

நீரின் உயரத்திற்கு ஏற்ப அல்லிக் கொடி இருக்கும். அதுபோல ஒருவர்க்கு அவர் கற்ற நூலின் அளவே அறிவு அமையும். செய்த தவத்தின் அளவே செல்வம் அமையும். பிறந்த குடும்பத்திற்கு ஏற்பவே குணம் அமையும்.

## கடல் பெரிதுமண்ணீரும் ஆகாது

சிறிய மகிழம்பூ இனிய மணம் உடையது. பெரியகடலின் அருகே ஊறும் சிறிய ஊற்று நீர் குடிநீராகவும் ஆகிவிடும். ஒருவர் உடலால் சிறியவர் என்று எண்ணி அவரை மதியாமல் இருக்க வேண்டாம். 'தம்தம் விதியின் பயனே பயன்' ஆழமான கடல் நீரை ஒரு படியைக் கொண்டு முழுகும் படி அழுத்திமொண்டாலும் நான்கு படிநீரை ஒருபடிமொள்ளாது (முகக்காது, மோக்காது). தோழி, அதுபோலச் செல்வமும் அதை ஆளத் தகுந்த கணவனும் வாய்த்தாலும், அவரவர் செயல் வினைகளின்படியே பலன் தரும். 'கரவார் கரவிலாநெஞ் சத் தவர்' தண்ணீர்ப் பாம்பானது தன்னிடம் நஞ்சில்லையென்பது தெரிந்து பயப்படாமல் வெளியே கிடக்கும். வஞ் சனை இல்லாத நெஞ்சத்தவர்கள் தம்மை மறைக்கமாட்டார்கள்.

## எதிர் மறையால் சுட்டடப்படும் கருத்துக்கள்

நல்லவர் அல்லாத ஈரம் இல்லா நெஞ் சுடையார்க்குச் செய்த உதவியானது, தண்ணீரில் எழுதப்பட்ட எழுத்திற்கு ஒப்பானது. 'இளமையில் வறுமை' நாட்பூத்த காலத்தில் பூத்த இன்பத்தைத் தரும் இளமைக் காலத்தில் வறுமை வந்துவிட்டால் அது துன்பத்தைத் தரும். துன்பத்தைத் தரும் முதுமைக் காலத்தில் இனிய பொருளும் துன்பமே தரும். அதுபோல காலமல்லாத காலத்தில் பூத்த நல்ல பூவைப் போலவே அனுபவிப்பவன் இல்லா மங்கைப் பருவத்தை உடையவளின் அழகும் பயன்பாடாவாம். நட்புக்குத் தகுதி இல்லாத கீழான குணமுடையோரோடு நட்புக் கொண்டாலும் அவர் நண்பராக மாட்டார்கள். இதனை 'அளவளவாய் நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்' என்று கூறப்பட்டுள்ளது.

## பருவத்தால் அன்றிப் பழா

கிளைத்துத் தழைத்த நீண்டு உயர்ந்த மரங்கள் யாவும் பழுக்கும் பருவகாலம் வந்தாலன்றிப் பழுக்கமாட்டா. அதுபோல எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் கூடிவரும் காலம் வந்தாலன்றி எச்செயலும் கைகூடாது. 'அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா'.

## தீயாரைக் காண்பதுவும் தீதே

தீயவர்களைப் பார்ப்பதும் தீது. பயனற்ற தீயவர் சொல் கேட்பதுவும் தீது. தீயவர்களின் குணங்களைப் பேசுதலும் தீது. தீயவரோடு கூடி இருப்பதுவும் தீது. 'துணைவலிமை' முன்னே முளைப்பது அரிசியே ஆனாலும், உமி நீங்கிப் போனால் முளைக்காது. அதுபோல் வலிமை உடையார்க்கும் துணைவலிமை இல்லாமல் எடுத்துக் கொண்டசெயல்கள் முடியாது.

## நன் மரம்

கிளைகளாகவும் கொம்புகளாகவும் காட்டினிலே நிற்கும் அந்த மரங்கள் எல்லாம் நல்லமரங்கள் அல்ல. சபை நடுவே ஒருவர் நீட்டிய ஓலையைப்

படிக்க முடியாமல் நின்றவனும், ஒருவரின் கருத்தைக் குறிப்பால் தெரிந்துகொள்ள முடியாதவனும் நல்ல மரங்களாவார்.

## கல்லாதான் கற்ற கவி

காட்டிலே ஆடுகின்ற மயிலைக் கண்ட வான்கோழி தன்னை மயிலாக நினைத்துத் தானும் தன் அழகற்ற சிறகை விரித்து ஆடினாற் போல், கல்வி கற்காதவன் கற்ற கவியைச் சொல்வதாகும்.

வரிகளையுடைய வேங்கைப் புலிக்கு நஞ்சு நோயைத் தீர்த்த விஷ முறி மருத்துவனே அப்புலிக்கு இரையானது போல் நன்மை அறியா அற்பர்களுக்கு செய்யும் உதவி, கல்லின் மேல் எறியப்பட்ட மண்பானையைப் போல் அழிந்து போகும். மண்ணினால் செய்யப்பட்ட குடமானது உடைந்து விட்டால் அதனால் எந்தப் பயனும் இல்லை. நற்பண்புகள் இல்லாதவர் செல்வத்தில் குறைந்தாலும் கீழோராகவே இருப்பர். கல்லின் மேல்; எறியப்பட்ட மண்பானை போன்று பயனற்றோர் ஆவர்.

## ஓடுமீன் ஓடஉறுமீன் வருமளவும்

கொக்கானது, நீரிலே ஓடும் சிறுமீன்களை ஓட விட்டுப் பெரியமீன் வரும் வரையிலும் அடங்கி இருப்பதைப் போன்று அடக்கமானவர்களை அறிவு இல்லாதவர்கள் என்று எண்ணி அவர்களை வெல்ல நினைக்க வேண்டாம்.

## உடன்பிறந்தே கொல்லும் வியாதி

உடம்புடன் பிறந்தநோயே உடலை அழிப்பதுபோல், உடன் பிறந்தவர்கள் மற்றும் உறவினர்கள் ஆகியோரை மட்டும் நம்பவேண்டாம். மனைவி கடுமையான சொற்களைப் பேசுபவளாக இருப்பின் அந்தவீடு புலி வாழும் புதராகும். கயவர் கடும் கோபத்தினால் வேறுபடும் போது கல்லின் பிளவைப் போலாவர். பொன்னினுடைய பிளவை ஒத்தவரும் அவ்வாறு ஒத்தவரே. இடுகாட்டில் (இடுகாடு – பிணம் புதைக்கும் இடம்) உள்ள பிணத்தைக் காக்கை விரும்புவது போல் கல்வியில்லாத மூடரை மூடரே விரும்புவர். ‘முற்பருவத்தில் செய்தவினை’ நல்ல பயனைப் பெறலாம் என நினைத்துக் கற்பக மரத்தை அடைந்தோர்க்கு அது கொடிய கசப்புடைய எட்டிக்காயைக் கொடுக்குமானால், அதற்குக் காரணம் முற்பிறப்பில் செய்த தீவினையாகும். ஆகவே, மனமே! நீ நினைத்தவாறு ஒன்றும் நடக்காது. (முற்பிறப்பில் என்பதை வாழ்க்கையின் முன் பருவத்தில் என்று கூட எடுத்துக் கொள்ளலாம் அது பொருத்தமாகவும் இருக்கும்).

## மெல்லிய வாழைக்குத் தான் ஈன்றகாய் கூற்றம்

படிக்காத மக்களுக்குப் படித்து உணர்ந்தவரின் உறுதியான சொல் எமனாகும். தருமநெறி இல்லாத மக்களுக்கு அறமே எமனாகும். மெல்லிய வாழைக்கு அதன் காய்கள் அடங்கிய வாழைத்தாரே எமனாகும். கணவனோடு இல்வாழ்க்கையில் ஒத்துப் போகாத மனைவியே எமனாகும். திருமகள் பிரியும்போது அவளோடு தழுவிநிற்கிற இனிய சுற்றமும், மேன்மையான செல்வமும் அழகிய உயர்ந்த குடிப்பிறப்பும் எல்லாமே போய்விடும். பெரிய இதழ்களை உடைய தாழம்பூவுக்கு மணம் இல்லை. கடல் பெரிதானாலும் அந்தநீர் உடல் கழுவ ஆகாது. நல்ல பாம்பானது நஞ்சைத் தான் வைத்திருப்பதை அறிந்து மறைந்திருக்கும். அதேபோன்று நெஞ்சில் வஞ்சனை உடையவர் தம்மைத் தாமே மறைத்திருப்பர்.

## தொகுப்புரை

மூதுரை நீதிநூலில் கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே, சங்கு சுட்டாலும் வெண்மைதரும், நீரளவே யாகுமாம் நீராம்பல், தான் கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு, கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு போன்ற கருத்துக்களை உணர்த்துவதற்கு கல்மேல் எழுத்து, தண்ணீர் மேல் எழுத்து, பால், சங்கு, கல்தூண், அல்லிக்கொடி. நெல்லுக்கு இறைத்தநீர், அரிசி, உமி, தாழம் பூ, மகிழம் பூ, கடல், ஊற்றுநீர், மரம், மயில், வான்கோழி, வேங்கைப் புலி, மண்பானை, கொட்டி, அல்லி, குவளைக்கொடி, பொற்குடம், படி, புலி, வில், தாமரை, அன்னப்பறவை, காடு, இடுகாடு, காக்கை, நல்லபாம்பு, தண்ணீர் பாம்பு, வாழை, வழைத்தார், சந்தனமரம் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன. சிறந்த கருத்துக்களை உள்ளடக்கிய மூதுரை நீதிநூல் அனைத்து மக்களிடமும் எளிமையாகக் கருத்துக்களைக் கொண்டு செல்லும் வகையில் அமைந்துள்ள தன்மை போற்றுதலுக்குரியது.

# கலித்தொகைப் பண்பாட்டில் ஈகையும் விருந்தோம்பலும்

நெறியாளர்
**முனைவர் தி. ஆனந்தவள்ளி**
உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சேலம் - 636 016.
(பெரியார் பல்கலைக் கழகம்
இணைவு பெற்றது)

ஆய்வாளர்
**திருமதி. நா. பகுஷியா பேகம்**
(பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்)
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சேலம் - 636 016.
(பெரியார் பல்கலைக் கழகம்
இணைவு பெற்றது)

## முன்னுரை

எந்தவொரு இலக்கியமும் மக்கள் வாழ்க்கையில் இருந்து மலர்கிறது. அதனால்தான் இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. இலக்கியத்தின் பாடு பொருளாக அமையும் வாழ்க்கையே பண்பாட்டை வெளிப்படுத்தும் வாயில். எனவேதான் தமிழ் இலக்கியங்கள் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளை இனம் காண்பதற்கு சான்றாக அமைந்துள்ளன. அதில் தனிச்சிறப்புடன் திகழ்வது சங்க இலக்கியமாகும். ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் சமூகப் பின்னணியையும் வாழ்க்கை நெறிமுறையையும் சங்க இலக்கியங்கள் மூலமே அறிய முடிகிறது. சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை நூல்களுள் கலிப்பா வகையில் அமைந்த அகப்பொருள் நூல் கலித்தொகை. அந்நூலில் பல்வேறு பண்பாட்டு மரபுகள் அமைந்துள்ளன. அவற்றுள் ஈகை மற்றும் விருந்தோம்பல் பண்புகளை இக்கட்டுரையின் வாயிலாகக் காணலாம்.

## கலித்தொகையில் பண்பாட்டு நிகழ்வுகள்

கலித்தொகைத் சங்கத் தமிழரின் பண்பாட்டுக் கருவவூலமாகத் திகழ் கின்றது. பண்பாட்டு நிகழ்வுகள் சங்க காலம் தொட்டு இன்று வரை நடைபெறுவதை விளக்கும் வகையில் கலித்தொகையின் ஐந்து திணைகளிலும் அந்தந்த நிலத்திற்கான பண்பாட்டு நிகழ்வுகள் பல்வேறு இடங்களில் விரவிக் காணப்படுகின்றன. தமிழர்களின் பண்பாட்டில் வாழ்வோடு இணைந்த அறமாக ஈகையும், தமிழர்களின் தலையாய மரபாக விருந்தோம்பலும் இடம்பெற்றுள்ளதை கலித்தொகை குறிப்பிடுகின்றது. மேலும் திருமணம் போன்ற நல்ல நிகழ்ச்சிகளை நடத்தும்போது நல்ல நாள் பார்த்தல், அறமல்லாத செயல்கள் செய்தால் இயற்கையாக நடைபெறும் செயல்கள் நடைபெறாது என்று நம்பிக்கை வைத்தல், நல்ல நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டி தெய்வ வழிபாடு நிகழ்த்துதல், பெண்கள் தை நீராடுதல், தாம்பூலம் தரித்தல், ஏறு தழுவுதல் போன்ற பல பண்பாட்டு மரபுகளையும் சுட்டிக்கட்டுகின்றன.

## பண்பாடு

பண்பு என்பதன் சொல் அடியாக உருவானதே பண்பாடு. மனம், சொல், செயல்களால் பிறருக்கு தீங்கு செய்யாது, பொது நலத்துடன் வாழ்வது, உள்ளத்தளவால் திருத்தம் பெற்று ஒழுக்கத்துடன் வாழ்வது, மற்றும் பிறரின் நல்லியல்புகளை அறிந்து அதற்கேற்றவாறு நாமும் நல்லொழுக்கத்

துடன் நடந்து கொள்வது இவைகளையே பண்பாடு என்று கூறலாம். அதாவது பண்படுவது பண்பாடு ஆகும். இதனையே கலித்தொகை,

**"பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்"** *(கலி - 133:8)*

என்று விளக்கம் தருகிறது. மக்கள் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களும், சமுதாய நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் பண்பாட்டு மரபுகளாகப் போற்றப்படுகின்றன.

### ஈகை (கொடை) பண்பு

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஒரொக் கும்மே**
**செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்பேம் எனினே தப்புந பலவே**
*(புறம் - 189:6-9)*

எனும் புறநானூற்று வரிகளில் உள்ள "செல்வத்துப் பயனே ஈதல்" என்பதைக் காலந்தோறும் இலக்கியங்கள் இயம்பி வந்துள்ளன. எனவேதான் தமிழ் மக்களின் தலையாய பண்புகளுள் முதன்மையானது ஈகைப் பண்பு.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.**
*(குறள் - 231)*

கொடைத் தன்மையும், குன்றாத புகழும் தவிர வாழ்க்கைக்கு ஆக்கம் தரக்கூடியது வேறெதுவும் இல்லை. அதனால் தான் பல இலக் கியங்கள் ஈகையைப் பற்றிப் பேசுகின்றன. அதில் கலித்தொகையும் ஒன்று. தமிழர்களின் ஈகைக் குணத்தைப் பற்றிக் கூறும் கபிலர்,

**"இடும்பையால்**
**இன்மை உரைத்தார்க்கு அதுநிறைக்கல் ஆற்றாக்கால்**
**தன்மை துறப்பான் மலை"**
*(கலி-43:25-27)*

என்று கூறுகின்றார். அதாவது தலைவனிடம் வறுமையால் வாடுகின்ற வறியவர்கள் வந்தால் அவர்களின் வறுமையைப் போக்கி, அவர்களை நிறைவடையச் செய்வான். அவ்வாறு செய்யவில்லை எனில் தன் உடலையே துறப்பான் என்று கலித்தொகை கூறுவதால் தமிழர்களின் ஈகைப் பண்பாட்டின் தன்மையை அறிய முடிகிறது.

### விருந்தோம்பல் பண்பு

விருந்தோம்பும் பண்பு தமிழர் களுடன் கூடவே பிறந்த ஒன்றாகும். மாற்றாரின் பசியறிந்து, அவர்களது பசியை ஆற்றுவதை அறங்கள் எல்லா வற்றுள்ளும் சிறந்தது என்ற மிக உயர்ந்த கொள்கையை உடையவர்கள் தமிழர்கள். இது தமிழர்களின் மிகச்சிறந்த பண்புகளுள் போற்றுதற்குரியது ஆகும். விருந்தோம்பல் தமிழர்களின் தலையாய மரபாகவும் இல்லறத்தின் சிறப்பாகவும் கருதப்படுகின்றது.

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.**
*(குறள் - 82)*

இவ் விருந்தோம்பல் கலித் தொகையில் பல்வேறு இடங்களில் பின்வருமாறு பேசப்பட்டுள்ளன.

**"மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பி"** *(கலி - 8:21)*

என்னும் பாடல்வழி மன்னவனின் நல் லாட்சியில்தான் விருந்தினரைப் பேண முடியும் என்பதை அறியமுடிகிறது,

தமிழர்களின் கடனாகக் கருதப் பட்ட விருந்தோம்பலின் சிறப்பினைக் கூறுமிடத்து, இளவேனில் தூதாக வந்ததால் அதனையும் அழைத்து அதற்கு விருந்தானவற்றைச் செய்வோம் வா என தோழிக் கூறுவதாகவும் கீழ் வரும் பாடல் உள்ளது.

**"தன் அருவி நறு முல்லைப்**
**போது அரக் கொள்ளும் கமழ் குரற்கு**

என்னும் -

தூது வந்தன்றே, தோழி!
துயர் அறு கிழவியோடு; அயர்ந்தீகம்
விருந்தே" (கலி - 32:16-19)

ஊடல் தீர்க்கும் வாயில்களுள் விருந்தினர் வருகையும் ஒன்றாகும். பரந்தையிடம் சென்று மீண்ட தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்க்க விருந்துடன் வருகின்றான்.

"விருந்து எதிர்கோடலின் மறப்பல்"
(கலி - 75:17)

எனும் பாடல் வரி அழகாக விளக்கு கின்றது. விருந்தோம்பலின் சிறப்பினை பல்வேறு இலக்கியங்களும் காட்டு கின்றன.

## முடிவுரை

இங்ஙனம் பண்பாட்டின் மரபான ஈகையையும் விருந்தோம்பலையும் விளக்கும் கலித்தொகை யாவர்க்கும் தீங்கு செய்பவன் இறுதியில் கெட்டு ஒழிவான், அறிவற்றவர் தம் இறுதி பற்றியும் முதுமை பற்றியும் எண்ண மறந்து விடுவர், நிலவு நாள்தோறும் தேய்வது போல இளமையும் அழகும் தேயும், நேர்மையற்ற முறையில் தேடிய பொருள் இம்மையிலும் மறுமையிலும் பகையே தரும், சோம்பல் இல்லாதவன் செல்வம் நாள்தோறும் வளரும் மற்றும் பொருள் இல்லாதவன் நடத்தும் இல்லறம் இன்பம் தராது என பல்வேறு வாழ்வியல் உண்மைகளையும் எடுத்துச் சொல்லி இக்கால மாந்தரின் மனச்செம்மையையும், முதிர்ச்சியையும் காட்டுகின்றன.

## துணைநூற் பட்டியல்

கலித்தொகை மூலமும் உரையும், அ. விசுவநாதன், பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2004.

புறநானூறு, புலியூர்க்கேசிகன் உரை, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2010

திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், 2009.

# தமிழர் உணவுப் பண்பாடு

– ம. பாரதி
முனைவர்பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி, பு.முட்லூர்
சிதம்பரம்

தமிழர்களை உலகறியச் செய்தது அவர்களின் பண்பாடு ஆகும். ஒரு மக்களின் பண்பாடு என்பது அவர்களின் அடிப்படை வாழ்வாதாரங்களில் இருந்து உருவானது. அப்படி தோன்றிய பண்பாட்டு அசைவுகள் இன்னும் தமிழக மக்களிடத்தில் இன்று பல நூற்றாண்டுகள் கடந்தும் அழியாமல் சிற்சில மாற்றங்ளுடன் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

தமிழர் பண்பாடு என்று நோக்கும் போது மக்களின் வாழ்க்கை முறையின் மேம்பாட்டையே குறிப்பிடுகின்றனர். அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் அடிப்படையான செயல்களே நாளடைவில் பண்பாடாக உருப்பெற்று நிற்கின்றது. தமிழர்கள் கண்டறிந்த உடை, வழிபாடுகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள், உணவு முறைகள், வேளாண்மைகள் மற்றும் அவை சார்ந்தவையே பிற்காலத்தில் மக்களின் பண்பாடாகச் செழித்தது.

தமிழர் பண்பாடானது பலவித மாற்றத்திற்கு உட்பட்டிருந்தாலும் இன்றும் எந்த விதமான மாற்றத்திற்கும் இசையாமல் நிற்பதில் உணவுப் பண்பாடு குறிப்பிடத்தக்கது ஆகும். தமிழர் பண்பாடுகளில் ஆகச்சிறந்த பண் பாடாகவும் உணவுப் பண்பாடு உயர்ந்து நிற்கிறது.

மனிதன் வேட்டையாடி உண்ணுதலைத் தவிர்த்துப் பயிரிட்டு உண்ண ஆரம்பித்ததே பண்பாட்டின் தொடக்கப் புள்ளியாகும். மனிதர்கள் உணவினை அவர்கள் வாழும் இடத்திற்கு ஏற்றவாறு பயிரிட்டும் பதப் படுத்தியும் உணவுகளை உண்டு வாழ்ந்து வந்துள்ளனர்.

ஒரு சமூகத்தின் உணவு முறையும் பண்பாடும் அவர்கள் இருக்கும் இடமான நிலத்தை மையப்படுத்தியே அமைந்தது.

“உணவு எனப்படுவது நிலத்தோடு
நீரே”(புறநானூறு - 18)

சங்க கால மக்கள் இதனை மிக நுட்பமாக அறிந்திருந்தனர். தமிழர் நாகரிகம், கலாச்சாரம், உடை, உணவு, தொழில் என்று அனைத்தும் தோன்றக் காரணமாக இருந்த நிலத்தை முதற்பொருளாகக் கருதினர். முதற் பொருளான நிலத்திலிருந்து பிறகு வகுக்கப் பட்டதே கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் ஆகும்.

சங்க இலக்கியங்களிலும் இந்த மூன்று பொருள்களை வைத்தே புலவர்கள் மக்களின் வாழ்வியலையும் பண்பாடுகளையும் சிறப்பித்துக் கூறி யுள்ளனர். அம்மூன்று பொருட்களை மையப்படுத்தித் தான் தமிழரின் உணவுப் பண்பாட்டினை இக்கட்டுரை விளக்க முயல்கிறது.

## முதற்பொருளும் உணவும்:

"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்
தோரே"(தொல்காப்பியம் அகம் -4)

எனத் தொல்காப்பியர் நிலத்தையும் பொழுதினையும் முதற்பொருளாகக் கூறுகிறார். சங்க காலத்தில் மக்கள் நிலைத்தினை ஐந்தாகப் பிரித்து இருந்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவை ஆகும். இந்த ஐந்து நிலத்ததிற்கும் ஏற்றவாறு அதற்கெனத் தனித்தனி உண வினையும் பண்பாட்டினையும் மக்கள் கொண்டிருந்தனர்.

குறிஞ்சி நிலம் மலை சார்ந்த பகுதி என்பதால் அங்கு விளைந்த தினை, தேன், இறைச்சி போன்ற உணவுகளையே அந்நில மக்கள் உண்டு வாழ்ந்தனர். இதனை,

"தேனினர் கிழங்கினர் ஊன் ஆர்வட்டியர்
சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கி"
(மலைபடுகடாம்: 153-154)

என மலைபடுக்கடாம் பாடலடி வழி அறியலாம்.

முல்லை நில மக்கள் வரகு, சாமை, பால், பாலிலிருந்து எடுக்கப்படும் தயிர், வெண்ணெய், நெய் ஆகிய உணவுகளையும் உண்டு வந்துள்ளனர். இதனை,

"வருகுவை ஆயின் தருகுவின்
பாலன"(அகநானூறு : 54-19)

என்று தம் வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு வரகரிசினையும் ஈயலையும் அதில் தயிரையும் சேர்த்து கலந்து கொடுத்தனர் என்பதனை அகநானூறு கூறுகிறது.

மருதநில மக்கள் வெண்நெல், செந்நெல், தானியங்கள் என்று தமக்கு வேண்டிய உணவினைத் தானே பயிரிட்டு வாழ்ந்து வந்துள்ளனர்.

"கொள்ளொடு பயுறுபால் விரைஇ
வெள்ளிக் கோல் வரைந்தனன வாலவிழ் மிதவை
வாங்குகை தடுத்த பின்றை."
(அகநானூறு - 37: 12-14)

நெய்தல் நிலம் கடல் சார்ந்த வாழ்வியல் ஆகும். அதனால் அம்மக்கள் கடலில் கிடைத்த மீன், கருவாடு, முத்து போன்ற பொருள்களைப் பண்டம் மாற்று முறையில் மாற்றி அதன் மூலம் கிடைத்த உணவை உண்டு வந்துள்ளனர்.

"உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு
அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து
கொழுமீன் தடியொடு குறுமகள்
கொடுக்கும்"(அகநானூறு - 60: 4-6)

என்ற பாடல் வழி அறிந்துகொள்ளலாம்.

சங்க இலக்கியத்தில் பாலையை ஒரு வறண்ட நிலமாகவே காட்டியுள்ளனர். அங்கு எந்தவித உணவினைப் பயிரிடவும் விதைக்கவும் முடியாததால் அங்கு இருக்கும் மக்கள் அவ்வழியில் செல்லும் மக்களிடத்தில் அவரது பொருள் களையும் உணவுகளையும் கவர்ந்து உண்டு வாழ்ந்துள்ளனர் என்பதை,

"கோடை நீடலின் வாடுபுலத்து உக்க
சிறு புள் உணவு நெறிப்பட மறுகி
நுண்பல் எறும்பி கொண்டு அளைச்
செறித்த வித்தா வல்சி வீங்கு
சிலை மறவர் பல் ஊழ்
புக்குப் பயன் நிரை கவர"
(அகநானூறு - 377:1-5)

தமிழர் நிலத்திற்கேற்ப உண வினைப் பிரித்து வைத்திருந்தாலும் அதனை அனைத்து நேரங்களிலும் உண்ண வில்லை.

"உண்பவை நாழி உடுப்பவை
இரண்டே" (புறநானூறு - 212)

முதற்பொருளில் மற்றொன்றான பொழுதினையும் சார்ந்தே சங்ககால மக்கள் உணவினை உண்டுள்ளனர்.

காலத்திற்கு ஏற்றவாறு உணவு முறையையும் வைத்திருந்தனர். காலமறிந்து நேரமறிந்து உண்ணும் உணவு முறையினைப் பழந்தமிழர் "உணவே மருந்து" வாழ்ந்தனர். தமிழர் உணவினை உணவாக மட்டுமில்லாமல் உயிருக்கு நோய் வராமல் தடுக்கும் ஒரு மருந் தாகவும் பயன்படுத்தினர்.

## கருப்பொருளும் உணவும்

சங்ககால மக்கள் கருப் பொருளினைத் தெய்வம், விலங்கு, பூ, மரம், பண், தொழில் எனப் பிரித்து வாழ்ந்தனர். கருப்பொருளுக்கும் உணவுக்கும் தொடர்புடையவை தெய்வ வழிபாடுகள், உணவால் உண்டான தொழில்கள், பின்பு உண்ட களிப்பில் மக்கள் பண் இசைத்து கொண்டாடியதைப் பற்றிய செய்திகள் ஆகியன இலக்கியத்தில் காணக் கிடைக்கின்றன.

தமிழிர் உணவினையும் தெய்வத் தையும் ஒன்றாகவே கருதினர். தாம் வேளாண்மை செய்த உணவினைத் தெய்வத்துக்குப் படைப்பதை நேர்த்திக்கடன் எனச் சங்ககாலம் முதல் பின்பற்றி வந்துள்ளனர். அதனைச் செய்யாவிட்டால் பெரும் பிழையாகவும் கருதியுள்ளனர்.

"பழங்கடன் உற்ற முழுங்குவாய்ச்
சாலினி"(சிலம்பதிகாரம் -வேட்டுவ வரி)

என்று வேட்டுவர்கள் தன் குல தெய்வமான சாலினிக்கு நேர்த்திக்கடன் (பழங்கடன்) செய்ய மறந்ததால் அவர்கள் வறுமையுற்றனர் என்பதை இளங்கோவடிகள் தமது சிலப்பதிகார பாடல் வரிகளில் விளக்குகிறார்.

தெய்வ வழிபாடுகளில் ஒன்றாகக் கருதப்படுவது முருகனின் வெறியாட்டு நிகழ்ச்சியாகும். இந்நிகழ்வு நடக்கும் போது ஆட்டினைப் பலி கொடுத்துள்ளனர்.

"மறிக்குர வறுத்துத் திணைப்பிரப்
பிரீஇ"(குறுந்தொகை - 263)

சங்ககால மக்கள் முருகனை வணங்கியதோடு கொற்றவையும் வழிபட்டு வந்துள்ளனர். தமிழர் கொற்றவையைப் போர்களுக்குச் செல்லும் முன் வழிபாடு செய்து பலி கொடுத்தால் வெற்றி நிச்சயம் என்று நம்பினார். வெற்றியை ஈட்டித் தருவதால் அவளுக்கு உயர்ந்த பலியினைக் கொடுத்தனர். அதனாலே கொற்றவையை "உயர்பலி பெறும் தெய்வம்" என்றும் வழங்கி வந்துள்ளனர் என்பதை,

"உயர்பலி பெறூஉம் உருகெழு
தெய்வம்" (அகநானூறு - 66:7)

என்று அகநானூற்று பாடல் விளக்குகிறது.

## உணவும் பிரிவும்

சங்ககால மக்கள் உணவினைத் தமக்கு ஏற்றவாறும் தெய்வ வழிபாட்டிற்கு ஏற்றவாறும் பிரித்து வைத்திருந்தனர். எனவே அந்தணர், அரசர், வீரர், பெண்டிர், நிகழ்ச்சிகள், விரதம் எனத் தனித்தனி உணவு வழக்கத்தினையும் கொண்டிருந்தனர். போரில் வெற்றிப் பெற்று திரும்பிவரும் மறவர்களுக்கும் அவர்களின் தலைவனுக்கும் கள்ளினையும் ஆட்டுக்கிடாய்களையும் சமைத்துக் கொடுத்தனர்.

"நறவும் தொடுமின் விடையும் வீழ்மீன்
உழையோர் தன்னினும் பெருஞ்
சாயலரே"(புறநானூறு - 262)

பெண்கள் உண்ணும் உணவானது பல பிரிவுகளாக இருந்துள்ளன. அவற்றை பெண்கள் உணவு, கைம்மை பெண்கள் உணவு, பெண்களின் விரத உணவு என்று வகைமைப் படுத்தியுள்ளனர்.

"உண்ணா தடுக்கிற பொழுதுபல கழிப"

(பதிற்றுப்பத்து - 68:6)

என்ற பாடல்வரி தலைவி தன் தலைவன் வேலை முடித்து வீடு திரும்பும் வரை உணவைத் தவிர்த்து. தலைவன் வீடு திரும்பிய பின் ஒன்றாக உணவினை அருந்தினாள் என்பதனைப் புலப் படுத்துகிறது.

## உணவும் தொழிலும்

தமிழர் உணவுச் சமைத்தலை ஒரு கலையாகக் கருதினர். உணவினைப் பக்குவப்படுத்தல், உணவு பொருளைப் பண்டமாற்றம் செய்தல் என உணவுத் தொழிலினைச் செய்து வந்தனர். உணவுகள் செய்பவரை "அட்டிலோன்" என்றும், அடிசில் முறைகள் செய்பவரை "வாலுவன்" என்றும் குறிப்பிடுகின்றனர். இதனை,

**"அட்டிலோனே அம்மா**
**அரிவை"** (நற்றிணை - 120:9)

**"நெறியந்து கடிவாலுவன்"**
(மதுரைக்காஞ்சி - 36)

சங்க கால மக்கள் தங்களுக்குக் கிடைத்த உணவினை மிக நுண்ணிய முறையில் பக்குவப்படுத்திப் பாது காத்தனர். அம்மக்கள் நெல், தானியங்கள், மாங்காய், நெல்லிக்காய் மற்றும் மீன்களை உலர்த்தியும் காயவைத்தும் பயன்படுத்தினர்.

**"புலவுமீன் உணங்கல் படுபுள் ஒப்பி"**
(நற்றிணை - 331:4)

**"செந்திணை உணங்கல் தொகுக்கும்"**
(நற்றிணை - 344:4)

நற்றிணை பாடல்களில் மீன்களை உலர்த்தியதையும் செந்நெல்லினைக் காயவைத்தையும் கூறப்பெற்றுள்ளன. மேலும், அகநானூறு நெல்லினைக் காயவைத்து பக்குவப்படுவத்தில் சிறந்து விளங்கிய ஊரினைக் குறிப்பிடுகின்றது.

**"பழம்பல் நெல்லின் ஊனூா ராங்கல்"**
(அகநானூறு - 220:13)

என உணவினைப் பக்குவப்படுத்திப் பாதுகாத்த பின் அடுத்த நகர்வாகத் திட உணவினை நீர் உணவாக மாற்றும் தொழிலையும் கண்டறிந்தனர். இதனை,

**"வினைகழை பிழிந்த அத்தீஞ்**
**சோற்றோடு"** (அகநானூறு - 137:21)

என்று கரும்பினைச் சாறு பிழிந்து கனிச் சாறாக மாற்றிப் பருகியதை அகநானூற்றுப் பாடல் விளக்குகிறது. அப்படி கரும்புகளைப் பிழியும் சாலையின் சத்ததினை,

**"விசய படூஉம் புகைசூழ் ஆலைதொறும்**
**கரும்பின் தீஞ்சாறு விரும்பின் மிசைமின்"**
(பெரும்பாணாற்றுபடை - 259:62)

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

தமிழர்கள் உணவினைச்சேகரித்தும் பதப்படுத்தியும், அதன் நிலை மாற்றியும் தனக்கு வேண்டியதை வைத்துக் கொண்டு மீதி உணவு ப்பொருளைப் பண்டம் மாற்று முறைக்குக் கொண்டு சென்றனர். தன்னிடம் உள்ள பொருளினைக் கொடுத்து தனக்குத் தேவையான வேறொரு பொருளைப் பெற்று வந்தனர்.

**"நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்**
**சேரி விலைமாறு கூறலின் மறைய"**
(அகநானூறு - 140:7-8)

இந்த பண்டமாற்று முறையே மக்களின் வாணிபத் தொழிலுக்கு முன்னோடியாக விளங்கியது.

## உரிப்பொருளும் உணவும்

உரிப்பொருளே ஒரு திணையின் ஒழுக்கமாகக் கருதப்படுகிறது. திணையின் ஒழுக்கமே பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம் முதலியவற்றைத் தீர்மானிப்பதாகும். தமிழர் உணவுப் பண்பாடு என்றாலே முதலில் வருவது

விருந்தோம்பல் ஆகும்.

விருந்தோம்பல் என்பது தமிழரின் ஆகச்சிறந்த பண்பாடாகச் சங்க காலம் முதல் இன்றுவரை மக்களிடத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்து வருகிறது. விருந்தோம்பலில் பெண் களுக்கே பெரும் பங்கு உண்டு.

"அல்லிலாயினும் விருந்து வரின் உவக்கும்
முல்லை கற்பின் மெல்லியல்".
(நற்றிணை-142: 9-10)

பெண்கள் வீட்டிற்கு வரும் விருந்தினரை அன்பாகவும் மரியாதையுடனும் வழிபட்டனர்.

இலக்கியங்களில் விருந்தோம்பல் என்பது விருந்தினர்க்கு மட்டுமல்லாமல் எளிமையான மக்களுக்கும் வழங்கப் பட்டுள்ளன.

"வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விழைவன
யாவையே"(கம்பராமயணம் பால காண்டம் 67)

தலைவன், தலைவி களவில் இருந்து கற்பு வாழ்க்கைக்குச் செல்பவர் தம்முடைய முதல் கடமையாக விருந் தோம்லேயே செய்கின்றனர். தலைவன், தலைவி இருவரும் தன் சுற்றதாரையும் எளிமையான மக்களையும் உணவிட்டுக் காப்பதே தலையானதாகக் கருதி யுள்ளனர்.

"இருந்தோம்பி இல்வாழ்க்கை எல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"
(திருக்குறள் - 81)

குறஞ்சி நிலத்தில் வாழும் குறவர்கள் தம் வீட்டிற்கு வரும் விருந்தினர்க்குத் தம்மிடம் உள்ள தினையரிசிச் சோற்றையும் இறைச்சியும் மனமகிழ்வுடன் வழங்கினர்.

"நும்இல் போல கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இளிய கூறி
பரூஉக்குறு பொழிந்த நெய்க்கண்
வேவையொடு
குருஉக்ககண் இறடிப் மொ்மல்
பெறுகுவீர்" (மலைபடுகடாம் : 168-169)

## இரப்போர்க்கு உணவு அளித்தல்

தமிழர் தம் வாழ்க்கையில் இரவலர்க்கு உணவு அளித்தல் என்பது விருந்தோம்பலுக்கு இணையாகவே கருதியுள்ளனர். சங்க காலத்தில் இரவலர் என்ற சொல்லாடல் உண்டு. ஆனால், இரத்தல் என்ற சொல்லோ பண்பாடோ கிடையாது. இரவலர் என்றால் பொருளாதார நிலையில் குறைவு கொண்டிருக்கும் பாணர்களே ஆவார்.

பாணர்கள் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்த வரும்போது அவர்கள் வறுமை நிலை பெற்றிருந்ததால் அவர்களுக்குப் புத்தாடைகள், நறுமணப் பொருட்கள், உணவளித்தல் போன்றவற்றை மன்னர் களும் செல்வந்தர்களும் செய்துள்ளனர்.

"நோக்கு நுழைகல்லா நுண்மைய
பூக்களித்து
அரவு உரி அன்ன அறுவை நல்கி
உயர்ப்பிடம்
பெறாஅது ஊன்மனிந்த"
(பொருநராற்றுப்படை - 34)

இப்பாடல் வரிகள் கரிகாலன் தன்னிடம் வந்த பாணர்களுக்கு ஆடையும் உணவினையும் வழங்கிய பண்பாட்டினைப் பொருநராற்றுபடைப் புலவர் கூறியுள்ளார்,

"வரகுத் தினையு முன்னவை யெல்லாம்
இரவன் மாக்க ளுணக் கொளத்தீர்ந்தென்"
(புறநானூறு - 339:9)

என்ற புறநானூற்றுப் பாடல் பாணர் களுக்கு வரகையும் தினையையும் தீர்ந்து போகும் அளவிற்குக் கொடுத்துள்ளனர் என்பதைப் புலப்படுத்துகிறது.

இரத்தல் என்றால் பிச்சை என்று

பொருளாகும். இரத்தல் என்பதைத் தமிழர் ஓர் இழிந்த செயலாகவே கருதி யுள்ளனர். இன்றைய காலங்களிலும் "நீ படிக்காம பிச்சையெடுக்க தான் போற" என்ற சொல்லாடல் மக்களிடத்தில் வசை யாகவே காணப்படுகிறது. சங்க கால மக்களும் இரத்தல் ஒரு மானக்கேடானச் செயலாகவே கருதியுள்ளனர். இதனை,

**"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்தது இல்"**

**(திருக்குறள் - 1066)**

ஆனாலும் இரத்தல் தமிழரிடத்தில் கலந்ததற்கு முக்கிய காரணமாக விளங்குபவர்கள் சமணர்கள் ஆவர். சமணர்கள் தான் உணவிற்காகப் பிச்சை எடுத்து வாழ்ந்தனர். இதனை,

**"காவிசேர்க்கன் மடவார் கண்டோடிக் கதவடைக்கும் கள்வனானேன்"**

என்ற பாடலில் திருநாவுக்கரசர் தான் சமணராக இருக்கும் பொழுது பிச்சை எடுத்து உண்டதைக் குறிப்பிடுவதால் அறியலாம்.

## தொகுப்புரை

தமிழர் வாழ்க்கை முறையின் உயர்நிலையே பண்பாடாகும். சங்க இலக்கியங்களும் மக்களின் பண்பாட்டு படிநிலைகளையே சிறப்பித்து கூறுகின் றன.

தமிழரின் உணவு முறையே முதல் பண்பாடாகும். வேட்டையாடி உண்ணுதலில் இருந்து வேளாண்மை செய்யத் தொடங்கியதே பண்பாட்டின் தொடக்கமாகும். வேளாண்மை செய்ய உதவிய நிலத்தினை மக்கள் அவர் களின் முதற்பொருளாகக் கருதினர்.

அதன்பின் உணவினை உருவாக்கிய இயற்கையைக் கடவுளாகவும் அவ் உணவினைப் பாதுகாக்கத் தொழில் முறைகளையும் கண்டறிந்து அதனைக் கருப்பொருளாகவும் கொண்டனர்.

தனக்கு வேண்டிய உணவினைச் சேகரித்த பிறகே மக்கள் பண்பாட்டு வளர்ச்சியில் ஈடுபட்டனர். அப்படி பண்பாடுகளில் செயல்பட தொடங்கிய பின்பே மக்கள் நிலத்தினைத் திணைகளாகவும் அதற்கெனத் தனி வாழ்வியல் ஒழுக்கங்களையும் வகுத்தனர். இதனை மக்கள் உரிப்பொருளாகவும் வைத்தனர்.

எனவே மக்களின் பண்பாடானது முதல் கரு உரிப்பொருள்களைக் கொண்டே அமைந்துள்ளது. மேலும், உணவுப் பண்பாடினையும் இதனை மையமாகக் கொண்டே வகுத்துள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.

## பயன்பட்ட நூல்கள் :


நமசிவாயம். சே: தமிழர் உணவு

பரமசிவன். தொ: அறியப்படாத தமிழகம்

கே. கே. பிள்ளை : தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்

திருஞானசம்பந்தம்.ச : தொல் காப்பியம் பொருளதிகாரம்

மா. பரமசிவன் : அகநானூறு மூலமும் உரையும்

அ. விசுவநாதன் : புறநானூறு மூலமும் உரையும்

# புறநானூறு வெளிப்படுத்தும் தமிழர் பண்பாடு

**முனைவர் இரா. பிரியதர்சினி,**
இணைப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழ் ஆய்வுத்துறை.
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த).
மதுரை.

## முன்னுரை

பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தின் மதிப்புகள், நெறி முறைகள். மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். ஒரு சமுதாயத்தின் சிறப்புத் தன்மையைப் பண்பாடு எனலாம். பழந்தமிழர் பண் பாட்டில் சிறந்திருந்தனர் என்பதை இலக்கியப் பதிவுகள் காட்டுகின்றன. பழந்தமிழர் போற்றிய பண்பாட்டினை வரலாற்றுக் களஞ்சியமான புறநானூறு வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைக்கப்படுகிறது.

## புறநானூற்றில் மறம்

புறநானூற்றில் மறம் என்பது பல நிலைகளில் வெளிப்படுகிறது. “மறம் என்ற தமிழ்ச் சொல்லில் தீரம், வீரம், சினம், சீற்றம், வலிமை, ஆற்றல், வெற்றி, அமர், அழித்தல், கொல்லல் எனப் பத்து பண்புகளும் அடங்கி இருக்கிறது” (https://ta.wikipedia.org).

## மறத்தில் அறம்

தனது எதிரியின் மீது படை எடுத்துச் சென்று பகையை அழிக்கும் சீற்றத்திலும் பழந்தமிழர் அறத்தைக் கைவிடவில்லை. “ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு” (உலக நாடுகளின் பழமொழிகள். ப. 180) என்கிறது பழமொழி. “சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி“ (குறள் 306) என்கிறார் வள்ளுவர். சினம் கொண்டால் சரியாகச் சிந்திக்க முடியாததால் செய்யும் செயலும் தவறாகவே இருக்கும். இதன் அடிப்படையிலேயே சினம் தவிர்க்கப்பட வேண்டியது என்கிறார்கள் சான்றோர்கள். ஆனால் பாரதி, “ரெளத்திரம் பழகு“ (பாரதி, ஆத்திச்சூடி, ப. 234) என்கிறார். பழந் தமிழரிடம் இருந்தது பாரதி கண்ட ரௌத்திரமே. அநீதிகளைக் கண்டு எழும் நியாயமான சினமே பழந்தமிழர் கொண்டிருந்தனர். எனவேதான் சினம் கொண்ட நிலையிலும் அவர்கள் நிதானத்தை இழக்கவில்லை.

“ஆவும் ஆணியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிலும் பிணியுடை யீரும்...”
(புறம். பா.9)

என்று போருக்கு எச்சரிக்கை விடுக்கும் அறத்தைப் பழந்தமிழர் போற்றினர். பகைநாட்டைச் சேர்ந்தவரே என்றாலும் இயலாமையில் உள்ளோரிடம் கருணை யுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற மனிதநேயத்தை அறிந்து பழந்தமிழர் செயல்பட்டமை அவரது வீரத்திற்கு வலிமை சேர்த்ததாகவே அமைந்தது.

## வீரம்

பராக்கிரமமான மன வலிமை, எச்சூழ்நிலையிலும் தளராத மனம், ஆயிரம் பேர் எதிர்கொண்டாலும் ஒற்றை ஆளாய் நின்று எதிர்க்கும் திறனே வீரம் எனப்படுகிறது. “அச்சமில்லை அச்ச மில்லை அச்சமென்பது இல்லையே“ (பாரதியார், பா.எ. 94) என்ற பாரதியின்

வரி அஞ்சாமை என்ற பண்பிற்கு மெருகேற்றுகின்றது. பாண்டியன் நெடுஞ்செழியனை இளையவன் எனக் கருதி எதிர்த்து வந்த பகைவர்களைக் கண்டு அஞ்சாமல் சூளுரைத்தான்.

"அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசுமொடு
ஒழுங்கு அகப்பட என் ஆயின்
பொருந்திய" (புறம்., பா.எ.72)

இச்சூளுரை பாண்டியனின் குடி ஓம்பல், புலவர்களை மதித்தல், வள்ளல் தன்மை ஆகிய பண்புகளை விளக்குவதாக உள்ளது. இச்சூளுரையில் இருக்கும் உறுதித் தன்மை எதிரிகளுக்கு எச்சரிக்கை செய்வதாகவும், தன்னைச் சார்ந்தவர்களுக்கு நம்பிக்கை தருவதாகவும் அமைந்திருந்தது.

"பொருதும் என்று தன்தலை வந்த
புனை கழல் எழுவர் நல்வலம் அடங்கு"
(புறம்., 76)

என்ற பாடல் வரிகள் ஒரு இளைஞனை சேர, சோழ வேந்தர்கள், ஐம்பெரும் வேளிர்கள் ஆகிய எழுவர் எதிர்க்க, அஞ்சாது அவர்களை எதிர்த்து வெற்றியும் அடைந்த வீரனாக தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் இருந்துள்ளான் என்பதை அறிய முடிகிறது.

## தீரம்

"ஈன்று புறம் தருதல் என்தலைக் கடனே" (புறம்.பா.எ.312) என்ற பொன்முடியார் கூற்றில் மிகப்பெரிய அறிவியல் உண்மை மறைந்துள்ளது. "அபிமன்யு" வரலாறும், பொன்முடியார் கூற்றும் உரைக்கும் அறிவியல் உண்மையானது கருவுற்ற ஒரு தாயின் மனநிலையும், சூழ்நிலையும் குழந்தையின் ஆளுமையில் குறிப்பிடத் தகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்பதே ஆகும். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" (புலமைப்பித்தன்) என்ற திரையிசைப் பாடலும் நம் பாரம்பரியமான தாலாட்டும் பிள்ளை வளர்ப்பில் தாயின் பங்களிப்பு பெரிது என்பதையே வலியுறுத்துகின்றன.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்
தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"
(குறள். 69)

இதுபோன்ற ஒரு தாய் தன் ஒரே பாலகனைப் போர்க் கோலம் பூண்டு போருக்கு அனுப்பும் தீரத்தைப் புறநானூற்றுப் பாடல் வரிகள்

"கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே....."
(புறம். பா.எ. 289)

எனக் கூறுகின்றன. தன் தந்தையையும் கணவனையும் நாட்டிற் காகப் போரில் இழந்த பிறகும் தனது ஒரே பாலகனைப் போருக்கு அனுப்பிய தாயின் தீரம் எதையும் துணிவுடன் செயல்படுத்தும் திறனாகும்.

## ஊரும் உறவும்

செப்டம்பர் 11, 1893ஆம் ஆண்டில் நடைபெற்ற சிகாகோ மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் தன் சொற்பொழிவைத் தொடங்கும் போது அமெரிக்க சகோதர! சகோதரிகளே!! என்றார். விவேகானந்தரின் இத்தொடக்கம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" (திருமூலர்) என்ற வாசகம் ஒற்றுமையைக் குறிக்கிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனார் வரியானது ஐக்கிய நாட்டு சபையில் எழுதப்பட்டுள்ளது. உலக மக்கள் அனைவரையும் தன் உறவாகவும் உலகம் முழுமையும் தன் உயிராகவும் நேசிக்கும் பரந்த மனப்பான்மை இன்றைய அறிவியல் உலகிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. மனிதநேயத்தின் இலக்கணமாக இவ்வரி

உள்ளது.

"எல்லோரும் இன்புற் றிருக்க
நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றும் அறியேன்
பராபரமே" (பராபரக்கணணி, 221)

என்ற தாயுமானவர் பாடல் தேசிய சிந்தனையுடன் இருப்பதும் நோக்கத் தக்கதாகும். "எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்" (பாரதியார் பாடல், ப.150) என்ற பாரதியின் பாடலும், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (குறள்.972) என்ற வள்ளுவரின் வாக்கும் 'எல்லோரும்' என்ற உணர்வைத் தருகிறது. காலந்தோறும் படைக்கப்பட்ட இலக்கியங்களில் 'நாம்' என்ற குரல் ஒலித்துக் கொண்டே இருப்பதைக் காண முடிகிறது. இது தமிழரின் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது.

## பகுத்துண்ணல்

இவ்வுலகம் இயங்கக் காரணம் சான்றோர்கள் இவ்வுலகில் உள்ளதால் தான் என்கிறார் புலவர் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி. "சிறியகள் பெரினே எமக்கு ஈயும் மன்னே

பெரியகள் பெரினே
யாம்பாடத் தானமகிழ்ந்து உண்ணும்
மன்னே" (புறம்., பா.எ. 235)

இப்பாடல் நெடுமான் அஞ்சி யின் வள்ளல் தன்மையைப் புகழ்ந்து ஔவையார் பாடியதாகும். நெடுமான் அஞ்சி தன்னை நாடி வருபவர்களுடன் பகிர்ந்துண்டு வாழும் அற்புத வாழ்வை புறநானூறு காட்டியுள்ளது. "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல்" (குறள். 322) என வள்ளுவரும் பகுத்துண்ணலைப் பறை சாற்றுகிறார்.

அமிழ்தம் இயைவதாயினும் இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே"
(புறம்., பா.எ. 182)

என்ற வரிகள் அமிர்தமே என்றாலும் தனித்துண்ணும் வழக்கம் இல்லாத தமிழரின் பண்பைப் பறைசாற்றுகின்றன.

## விருந்தோம்பல்

"விருந்து என்றால் புதுமை" எனப் பொருள் கூறுகிறது தொல்காப்பியம். கால்நடையாக வரும் விருந்தினர்களை வரவேற்று, உபசரித்து ஓம்புதல் விருந்தோம்பல் ஆகும். விருந்தோம்பல் தமிழரின் தலைசிறந்த பண்பாடு ஆகும். எனவேதான் வள்ளுவர் 'விருந்தோம்பல்' எனத் தனி அதிகாரமே வகுத்துள்ளார். பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் பழந்தமிழரின் விருந்தோம்பல் குறித்துப் பதிவிட்டுள்ளன.

"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விரும்பினன்"
(புறம். பா.எ. 101)

என்ற பாடலின் மூலம் அதியனின் விருந்தோம்பல் பண்பை ஔவையார் புகழ்துரைப்பதைக் காண முடிகிறது. "விருந்தும் மருந்தும் மூன்று வேளை" (உ.ப.,ப.29) என்கிறது பழமொழி. ஆனால் அதியனோ எத்தனை நாள்கள் சென்றாலும் முதல் நாள் போலவே வரவேற்பான் என்கிறது இப்பாடல்.

## மானம் பெரிதெனப் போற்றல்

மான உணர்வில் தமிழர் சிறந்து இருந்தனர். உயிரை விட மானமே பெரிதாகப் போற்றி வாழ்ந்திருந்தனர்.

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்" (குறள்.969)

என்ற குறள் தமிழரின் மான உணர்வைப் பறைசாற்றுகிறது.

"தோன்றின் புகழொடு தோன்றுக" (குறள்.236) என்ற குறளுக்கு ஏற்ப புகழோடு வாழவே விரும்பினர் பழந்தமிழர். புகழுக்காக உயிரையும் கொடுப்பார் என்பதை "புகழ்எனில் உயிரும் கொடுக்குவர்" (புறம்.182)

என்ற வரி கூறுகிறது. "அஞ்சுவது அஞ் சாமை பேதமை" (குறள. 428) என்கிறது வள்ளுவம். எதற்கு அஞ்ச வேண்டும் என வினா எழுப்பினால் பழி, பாவங்களுக்கு அஞ்ச வேண்டும் என்ற விடையே கிடைக்கிறது. "பழிஎனில் உலகுடன் பெறினும் கொள்ளலர்" (புறம். 182) என்ற வரி பழிக்கு விலையாக உலகமே கிடைத்தாலும் அச்செயலை வெறுத்து விலகும் பண்பை வெளிப்படுத்துகிறது. பகைநாட்டு சிறையில் தாமதமாகத் தரப்பட்ட நீரைப் பருக மறுத்து வடக்கிருந்து உயிர்விட்ட செய்தியையும், குழந்தை இறந்து பிறந்தாலும், பிறக்கும் பொழுது குறைப் பிண்டமாகப் பிறந்தாலும் அவற்றை முழு ஆள் அல்ல என்று கருதி வாளால் வெட்டிய பின்பு மண்ணில் புதைக்கும் வழக்கம் இருந்ததையும்,

> "குழவி இறப்பினும் ஊன் தடி பிறப்பினும்
> ஆள் அன்று என்று வாளின் தப்பார்......."
> (புறம்.74)

என்ற புறநானூற்றுப் பாடல்வரிகள் கூறுகின்றன. விழுப்புண் படாது இறப்பது இழிவு எனக் கருதி விழுப்புண் உண்டாக்கியே புதைக்கும் மரக்குடி மரபில் மான உணர்வு வெளிப்படுவதைக் காண முடிகிறது.

## முடிவுரை

பழந்தமிழர் மறத்தில் சிறந்தவர் களாக இருந்துள்ளனர். மறத்தில் அறம் போற்றும் உயரிய பண்பும் இவர்களிடம் இருந்துள்ளது. புதியவர்களான விருந் தினரை ஓம்பும் பண்பில் சிறந்தும் பகுத் துண்ணும் பண்பில் உயர்ந்தும் தமிழர் விளங்கியுள்ளனர். மான உணர்வில் உயர்ந்து விளங்கியுள்ளனர் என்பதையும், வீரம், விருந்தோம்பல், மானம் என பண்பாட்டின் சிகரமாக பழந்தமிழர் வாழ்ந்திருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றன.

## துணை நின்ற நூல்கள்

1. மாணிக்கவாசன் (உ.ஆ.), புறநானூறு, உமா பதிப்பகம், சென்னை.
2. வரதராசனார், மு. (உ.ஆ.) திருக்குறள், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை.
3. பாரதியார், பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. பாலகுரு, பட்டி. கே., உலக நாடுகளின் பழமொழிகள், கலா ஆப்செட் காலண்டர், சிவகாசி.

# தேரிக்காட்டு மக்களின் வாழ்வியலும் பண்பாடும் - (கண்ணக்குமார விஸ்வரூபன் படைப்புகள்)

நெறியாளர் :
**பேரா.வை.இராமராஜபாண்டியன்,**
புலத்தலைவர்,
இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

ஆய்வாளர்:
**மு.பிரியதர்ஷினி,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

## முன்னுரை

மக்களின் வாழ்க்கை முறையினை அறிந்து கொள்வதற்குப் பண்பாடு மிகவும் இன்றியமையாததாகும். கண்ணக்குமார விஸ்வரூபன் தன்னைச் சார்ந்த தேரிக்காட்டு மக்களின் வாழ்க்கை முறையினை தனது படைப்புகளில் பதிவு செய்துள்ளார். மக்கள் வாழும் பகுதியில் உள்ள நிலத்தின் தன்மை, அந்நில மக்களின் தொழில் முறை, உணவு முறை முதலான செய்திகளை எடுத்துரைத்துள்ளார். படைப்பாளரின் படைப்புகளின் வழி தேரிநில மக்களின் பண்பாட்டு வாழ்வை இவ்வாய்வுக்கட்டுரை வெளிக் கொணரவுள்ளது.

## பண்பாடு

பண்பாட்டினை மனிதர்கள் பல இடங்களில் பல சூழல்களிலிருந்து கற்றுணர்கின்றனர். மக்களின் வாழ்க்கை முறை அனைத்தையும் ஒட்டு மொத்தமாக கொண்டு செயல்படக் கூடியதே பண்பாடு ஆகும். பண்பாடு குறித்து பக்தவத்சல பாரதி பின்வருமாறு கூறுகிறார். "பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த நிலையில் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைக் குறிக்கிறது. மனிதன் பிறந்த நாள் முதற்கொண்டு இறக்கும் நாள் வரை அவனது பண்பாட்டைச் சமூகவயமாக்கல், பண்பாட்டுமயமாக்கல் மூலம் கற்கின்றான். கற்பிக்கும் நிறுவனம் பெற்றோர்களாகவோ, குடும்ப மாகவோ, ஒப்பார் குழுவாகவோ, பிற நிறுவனங்களாகவோ இருக்கின்றன." (பண்பாட்டு மானிடவியல் ப–142) என்று தன் நூலில் சுட்டியுள்ளார். இதன்வழி பண்பாடு என்பது மனிதன் தான் அறிந்த வழக்கலாறுகளைத் தன் வழிமுறையினருக்கு கொண்டுசெல்லும் நடத்தை சார்ந்தது என்பதை உணர முடிகிறது.

## தேரி நிலம்

மணல் குன்றுகளாகவும் மேடுகளாகவும் இருப்பதைத் தேரிநிலம் என்று அழைப்பர். தேரி நிலத்தை நா.இராமச்சந்திரன் முன்னுரை பகுதியில் "இம்மணல் தேரிகளுக்கென்று சில தனித்தன்மைகள் உள்ளன. தென்மேற்குப் பருவக் கற்றால் இந்நிலப் பகுதி மேடாவதும், பள்ளமாவதும் அடிக்கடி நிகழும். சில வேளையில் உயரங்குறைவான தேரிக்காட்டின் சில பகுதிகள் காற்றின் தன்மைக்கு ஏற்ப, பெரிய மணல் மேடாக மாறிவிடுவதும் உண்டு. இது மணல் மேடுகள் இடம் விட்டு இடம் மாறுவது போன்று தோற்றமளிக்கும். தேரிக்காட்டின் மண்ணுக்கு மழை நீரை வெகுகாலத்துக்குத் தக்க வைக்க இயலாது. எனவே செழிப்பான பகுதி என்று தேரிகளை குறிப்பிட இயலாது."

(தேரியாயணம் ப–6) என்று கூறியுள்ளார். இந்நிலம் பயிர் சாகுபடியின் அத்தியாவ சியமாகிய ஈரப்பதத்தைச் சேமிப்பு அற்றதாக உள்ளமையால் அந்நிலத்தில் வளர்ந்து வரும் உடை மரங்களை மட்டுமே தங்களின் வாழ்வாதாரமாக கொண்டு வாழ்ந்து வரும் அம்மக்களின் வாழ்வியல் நிலைப்பாட்டினைப் படைப்பாளர் எடுத்துக் கூறியுள்ளார்.

தேரிக்காட்டில் காணப்படக் கூடிய மண்ணின் தன்மையானது மற்ற மண்ணிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தன்மை உடையது என்பதை, “கருநிறமான நிலத்தைக் கொண்டிருந்த ‘கரிசல்’ நிலப்பகுதிக்கு மாறாக செந்நிறமான நிலத்தைக் கொண்ட நிலப்பகுதிகள் தமிழ்நாட்டில் ஆங்காங்கே உள்ளன. மழை பெய்வதால் ஏற்படும் ஈரப்பதத்தை நீண்ட நாட்கள் தக்க வைத்துக் கொள்ளும் ஆற்றல் கரிசலுக்கு உண்டு. ஆனால் இதற்கு நேர்மாறாக ஈரப்பதத்தை விரைவில் இழந்துவிடும் தன்மை கொண்டது செம்மண் நிலம்” (தேரிக்காட்டு இலக்கியங்கள் ப–2) எனும் கூற்றின் வழி தெளியமுடிகிறது. தேரியில் காணப்படக் கூடிய மண்ணானது ஈரப்பதத்தை தக்க வைத்துக் கொள்ள இயலாத செம்மண் தன்மையது என்பதை அறிய முடிகின்றது.

சிலப்பதிகாரத்தில் மதுரை காண்டப் பகுதியில் குறிஞ்சியும் முல்லையும் திரிந்து உருவாகக் கூடிய நிலத்தின் தன்மை கூறப்பெற்றுள்ளன.

“முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல் இயல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”
(சிலப்பதிகாரம் ப-186)

குறிஞ்சியும் முல்லையும் தன்னுடைய தன்மையினை இழந்து உருவாகும் பகுதியே பாலை என்று எடுத்தியம்புகிறது. இதனைப் போன்றே காலச்சூழலின் பரிணாமத்தில் இத் தேரிக்காட்டு மண்ணும் பாலையின் தன்மையினைப் போன்ற வேளாண் முறைக்கு உபயோகமற்றதாகக் காட்சியளிப்பதைக் கண்ணக்குமாரனின் படைப்புகளில் காணமுடிகின்றன.

## தேரி மக்களின் தொழிலும் உணவும்

தேரிகாட்டின் நிலப்பகுதியினை அம்மக்கள் தங்களின் பயன்பாட்டிற்குரிய பொருட்களோடு பொருத்தி பாகுபடுத்தி யுள்ளமையை படைப்புகளில் காணமுடிகிறது. ஒத்தைப்பனைப் பாதை, ஒழுகுப் பனைப் பாதை, மூணு பனைப் பாதை, வட்டாலுப் பாதை என்று அந்நிலத்திற்கே உரித்தான பனைக்காடுகளின் தன்மையைக் கொண்டு வழித்தடத்தை அந்நிலமக்கள் குறிப்பிடுகின்றனர். இப்பகுதிகளில் கிடைக்க கூடிய விறகுகளை வெட்டி விற்று அதனை வாழ்வாதாரமாக கொண்டு தேரிக்காட்டு மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். “ஒரு வாரம் பத்து நாட்களென தொடர்ந்து ஒரு பாதையில செல்பவர்கள். அந்தப் பாதையில் விறகு சற்று தட்டுப்பாடானதும். வேறு பாதைக்குக் கால்களை திருப்பி விடுவார்கள்.”(தேரியாயணம் ப–17) தேரி நில மக்களின் தொழில் என்பது விறகு வெட்டுதல் என்பதை, “நான்கு கை விறகுகளையும் அந்த ஒரே உடையில் வெட்டி விடலாம் தான்ஞ்! ஆனால் உடை மொட்டையாகிப் போகும்..! அப்படி மொட்டையடிக்க அவர்கள் விரும்புவதில்லை..! அதனால் ஆங்காங்கே அலைந்து திரிந்துஞ் உடைக்குக் கால்க்கை, அரைக்கை கம்புகளாய் வெட்டுவார்கள்..! யாராவது அப்படி அலையச் சோம்பல்பட்டு ஒரே உடையை ஒட்டுமொத்தமாய் வெட்டித் தள்ளுவதைப் பார்த்துவிட்டால்.. மடுவ

அறுத்துப் பாலுக் குடிக்கித மடமுட்டி வேலையச் செய்யாதீய..! ஒடக்கி அஞ்சாறு கொப்புகள வெட்டி ஒடயப் பொழச்சிருக்கவுட்டாத்தான்..நாமும் அதுகள நம்பி ஆயுசுக்கும் பொழச்சிக்க முடியும்...!" (தேரியாயணம் ப–23) எனும் வரிகள் உணர்த்துகின்றன. மேலும், தேரிநில மக்கள் அப்பகுதியில் உள்ள உடை மரங்களை நம்பித் தன் வாழ்வாதாரத்தை நகர்த்திச் செல்லும் தன்மையினையும், அதனைத் தவிர்த்த வேறு நிலைகளில் தங்களின் வாழ்க்கையை இட்டுச் செல்லும் பாங்கினை அறியாத தன்மையினையும் படைப்பாளரின் வரிகள் சுட்டிச் செல்கின்றன.

தேரியில் வாழ்ந்துவரும் மக்கள் உண்ணும் உணவின் நிலைப் பாட்டினைப் படைப்பாளர், "வழக்கமாக ஒரு மணிக்கெல்லாம் ஊர் நுழைந்து விடுவார்கள். வந்த வேகத்தில் குடிசைக்குள் போய்ஞ்பானைக்குள் புளித்து நுரையடித்துக் கிடக்கும் பழைய அன்னப் பால் தண்ணியில் நாலுவாய் அண்ணாந்து ஊற்றிஞ் தளர்ச்சி யடைந்தக் கால்களுக்குச சற்று தெம்பினை ஏற்றிக் கொண்டு... மீண்டும் கட்டினைத் தலையிலெடுத்து நாச ரேத்திற்கு ஓடுவார்கள்." (தேரியாயணம் ப–34) என்று காட்சிப்படுத்தியுள்ளார். அம்மக்கள் விறகினை விற்று அதில் கிடைக்கக்கூடிய அன்றைய வருவாயினை வைத்துக் கொண்டு அவ்வப்பொழுதுகளைக் கழித்து வருவதனை அறியமுடிகிறது.

## தேரி மக்கள் உணவுக் கலையங்களை மண்ணில் புதைத்தல்

தேரிக்காட்டிற்குள் விறகு வெட்டச் செல்பவர்கள் தங்களின் உணவுக் கலையங்களை மற்ற உயிரினங்களிடம் இருந்து பாதுகாப்பதற்காக மண்ணின் அடியில் புதைத்துச் செல்வதனை, "கஞ்சிப் பாத்திரங்களை வெளித் தெரியும்படி வைத்து விட்டுப் போனால் காட்டு மாடுகளும், காக்கைக் கூட்டங்களும் வந்து பாத்திரங்களைக் கொட்டிப் பாழ்படுத்தி விடும். மேலேயிருக்கும் பாத்திரங்களை மட்டுமல்ல அலட்சியமாய் மேலோட்டமாய் புதைக்கும் பாத்திரங்களையும் கூட அவைகள் கொம்புகளாலும், அலகுகளாலும் தோண்டிக் குதறி நாசம் செய்து விடும். இப்படியெல்லாம் நடந்துவிடக் கூடாது என்பதற்காகதான் இந்த பத்திரமான மண் புதைப்பு" (தேரியாயணம் ப–21) என்று படைப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார். இக்கூற்று, உழைப்பினை நம்பி பிழப்பு நடத்தும் அம்மக்களின் வாழ்க்கை ஒரு நிச்சயமற்றச் சூழலில் சூழல்வதனையும், அன்றாட அடிப்படைத் தேவைகளைக் கூட போராட்டத்தோடு நகர்த்திச் செல்வதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

## மக்கள் பயன்படுத்தும் காலணி

தேரி மக்கள் தேரிக்காட்டின் சுடுமணலில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள ஓலைப் பட்டைகளிலிருந்து செருப்பினை செய்து அணிவதனை, "செருப்புப் பிஞ்சிப் போச்சின்னு நேத்தே சொல்லியிருந்தா ஒடனே ஒனக்குப் புதுச் செருப்பு மொனஞ்சித் தந்துரப்பேனம்மா...! கோடி முடிந்தது போக மீதம் கிடந்த ஓலை இணுக்குகளைக் கொண்டு துரிதமாய் இரு செருப்புகளை முனைந்து கொடுத்தாள்" (தேரியாயணம் ப–25) என்று மகளிடம் உரையாடும் தாயின் குரலின் வழி அறியமுடிகிறது. இதன்வழி இயல்பாக அன்றாட வாழ்வியலை நகர்த்திச் செல்லும் மக்களின் கூட்டத்திற்கு இடையில் தன் அடிப்படைத் தேவைகளைப் பெறுவதில் கூட சிக்கல் மிகுந்த வாழ்க்கையை இத்தேரிக்காட்டு மக்கள் வாழ்வதனைப்

படைப்பாளர் தன் படைப்புகளில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முடிவுரை

தேரி மக்களின் பண்பாட்டினை தனது நூலில் பதிவு செய்துள்ள தேரிக் காட்டு இலக்கியவாதி கண்ணக்குமார விஸ்வரூபன், தேரி நிலத்தின் தன்மை மற்ற மண்ணிலிருந்து முற்றிலும் வேறுபட்டு இருப்பதைத் தன் படைப்புகளில் எடுத்தியம்பியுள்ளார். தொழில் முறையில் மரங்களை முழுவதுமாக அழிக்காமல் காத்து வந்த வழிமுறைகள், தேரி மக்கள் உண்ட உணவுகள், அவ்வுணவினை அம்மக்கள் பாதுகாத்து உண்ட தன்மை, தேரிநில மக்கள் அன்றாட வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள இன்னல் என பன்முகத் தரவுகளைத் தன் படைப்பில் பதிவு செய்துள்ளார். பண்பட்ட வாழ்க்கையினைப் பண்பாடு என்பர். இத்தேரிமக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்து கொண்டு வாழ்வியலை நகர்த்தி செல்லும் போக்கே அம்மக்களின் பண்பட்ட வாழ்க்கையாக கண்ணக்குமாரன் படைப்புகள் எடுத்தியம்புகின்றன.

## பார்வை நூல்கள்:


1. கண்ணக்குமார விஸ்வரூபன் – தேரியாயணம்,பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.
2. பக்தவத்சல பாரதி– பண்பாட்டு மானிடவியல், அடையாளம், திருச்சி.
3. தமிழண்ணல் – தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
4. மாணிக்கவாசகன்.ஞா – சிலப்பதிகாரம் தெளிவுரை, உமா பதிப்பகம், சென்னை.
5. கோபாலகிருஷ்ணன். வெ, கண்ணன். மு (தொ.ஆ) – தேரிக் காட்டு இலக்கியங்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை.

# நெல்லை வட்டாரத் தாலாட்டுப் பாடல்களில் பண்பாட்டுக் கூறுகள்

**முனைவர் தி.பிருந்தா,**
நூலகர்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - 01

## முன்னுரை

பொதுமக்களாலேயே படைக்கப் பட்டு, பொதுமக்களிடையே வழங்கிப், பொது மக்களை இன்புறுத்துகின்ற பொது மக்கள் இலக்கியமாக நாட்டுப்புற இலக்கியம் இருப்பதால், சமுதாயத்தின் உண்மையான பண்பாட்டினை அறிய உதவும் சிறந்த ஆவணங்களாக அவை திகழ்கின்றன. தாலாட்டுப் பாடல்கள் ஏட்டில் எழுதப்படாதவை. கட்டுரை யாளரின் தந்தைவழிப் பாட்டி, திருமதி சீனியம்மாள் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆனைகுளம் என்னும் கிராமத்தில் 1930–இல் பிறந்தவர். பள்ளிக் கல்வியோ இலக்கியப் பயிற்சியோ இல்லை யெனினும், 'கற்றிலனாயினும் கேட்க' என்னும் வாக்கிற்கிணங்க தாலாட்டுப் பாடல்களைக் கேள்வி ஞானத்தின் மூலமாக பிறர் வாய்மொழி வாயிலாகக் கேட்டதை நினைவில் நிறுத்தியும், சொந்தமாக இட்டுக்கட்டியும் பாடுவதில் சிறந்தவர். 1993–ஆம் ஆண்டு அவர் தாலாட்டுப் பாடுவதை ஒலிப்பதிவுக் கருவியில் பதிவு செய்து, பாடக் கேட்டறிந்த தாலாட்டுப் பாடலினை முதன்மை ஆதாரமாகக் கொண்டு நெல்லை வட்டாரத் தாலாட்டுப் பாடல்களில் இடம் பெற்றிருக்கும் பண்பாட்டுக் கூறுகள் இக்கட்டுரையின்வழி ஆராயப் பட உள்ளன.

## தாலாட்டு

குழந்தை வளர்ப்பில் முதன்மையுற்று விளங்குபவர்கள் பெண்கள். எனவே தாலாட்டுப் பாடல்கள் பெண்களின் சொத்தாகவே அமைந்துவிட்டன. "தாயின் அன்பையும், சேயைச் சுற்றி எழும் கற்பனையையும் பாடலாக வழங்கும் பாட்டுருவம் தாலாட்டாகும்"[1] என்பார் நா.வானமாமலை. "தாயின் எண்ணச் சுமைகளை இறக்கி வைக்கப் பயன்படும் தாங்கியாகவும், அவளுடைய பெருமைமிக்க மாண்புகளை விளக்கும் கற்பனைக் கோட்டைகளாகவும் தாலாட்டுப் பாடல்கள் திகழ்கின்றன"[2] என்கிறார் மா.கோதண்டராமன். குழந்தையைத் தூங்க வைப்பதற்காக இனிய மெட்டுடன் பாடும் பாடலாகிய தாலாட்டானது தமிழில் 'ராராட்டு', 'ரோராட்டு', 'தாராட்டு' எனப் பலபெயர்களில் சுட்டிக் காட்டப்பட்டாலும், திருநெல்வேலி வட்டாரப் பகுதியில் இதனை 'ரோராட்டு' என்றே அழைக்கின்றனர்.

## தாலாட்டின் தொடக்கம் – ஒலிக்கு இசை கூட்டித் தாலாட்டும் மரபு

குழந்தையின் அழுகை ஒலியைக் கட்டுப்படுத்த முதலில் தாய் வெற்றுச் சொற்களுக்கு இசைகூட்டி ஒலி எழுப்புவது தாலாட்டின் தொடக்கமாக அமைந்துள்ளது. 'ஆராரோ ஆரிரரோ ஆரிரரோ ஆராரோ' எனப் பாடலைத்

தொடங்கியதும் குழந்தை தன் அழுகை ஒலியை நிறுத்தி, இன்னொலியைக் கேட்டு உறங்க முற்படுகிறது. குழந்தை கருவில் இருக்கும்போது கேட்கும் திறன் உருவாகிவிடுகிறது. செ.அன்னகாமு என்பவர், “சிசுக்களுக்கு ஆரம்பத்தில் செவியுணர்வுதான் கூர்மையாகவும், ஆழமாகவுமுள்ளது என்பது மனநூல் வல்லுநர்களின் முடிவு. ஆகவே, தாயின் பாட்டிலுள்ள இசை இன்பத்தைக் குழந்தை பருகுகிறது”[3] என்று குறிப்பிடுகிறார்.

## தாலாட்டின் அளவும் உருவாக்கமும்

குழந்தை தூங்கும்வரை தாலாட்டுப் பாட வேண்டிய கடப்பாடு தாலாட்டுபவருக்கு உள்ளது. குழந்தை உறங்கிவிட்டால் தாலாட்டுப் பாடலும் இடையிலேயே நின்று விடுகிறது. குழந்தையைத் தோளில் போட்டும், தொட்டிலில் இட்டும் தாலாட்டும்போது தாலாட்டுப் பாடல்கள் தோளின் அசைவுகளுக்கும் தொட்டிலின் அசைவுகளுக்கும் தகுந்தாற்போன்று தாளகதியோடு பிறக்கின்றன. இப்பாடல்கள் தாய்வழிக் கற்றல், உறவினர் பாடுவதைக் கேட்டல், கேட்டல் மூலம் கற்றல், கேள்வி ஞானம், இட்டுக்கட்டும் திறன், புராண, இதிகாரக் கதைகளின் தாக்கம் போன்றவற்றால் புதிது புதிதாக உருவாக்கம் பெறுகின்றன.

## தாலாட்டில் புராண, இதிகாசச் செய்திகள்

தொலைக்காட்சிகள், திரைப் படங்கள் போன்றவற்றின் தாக்கம் இடம்பெறுவதற்கு முன்பே நாட்டுப்புற மக்களிடையே புராண, இதிகாசக் கதைகளின் தாக்கம் இருந்து வந்தது. இவற்றின் தாக்கத்தினை தாலாட்டுப் பாடல்களில் காணமுடிகிறது. சூரியன், சந்திரன், வேலவர், சொக்கர், ராமர், சீதை, அர்ச்சுனர், வீமன், இதிகாச மாந்தர்கள், தெய்வங்கள், இயற்கைச் சக்திகளைத் தாலாட்டில் குழந்தையோடு தொடர்புபடுத்திப் பாடும் பாங்கினைக் காணமுடிகிறது. குழந்தையைக் கடவுளருடன் ஒப்பிட்டும், உறவுமுறை கூறியும் பாடுவதையும், அப்பாடல் வரிகளில் சமயக் குறிப்புகள் இடம் பெறுவதையும் பின்வரும் பாடலடிகள் சுட்டுகின்றன. “அல்லி மகனோ/ என் கனியே நீ அரிராமர் பெத்த கண்ணோ/ அரிராமர் தங்கையர்க்கும்/ என் கனியே நீ ஆச மருமகனோ/ சீத மகனோ/ என் கனியே நீ ஸ்ரீராமர் பெத்த கண்ணோ/ ஸ்ரீராமர் தங்கையர்க்கும்/ என் கனியே நீ செல்ல மருமகனோ/ வள்ளி மகனோ/ என் கனியே நீ வேலவரு பெத்த கண்ணோ/ எங்க குலம் மங்காம/ என் கனியே நீ ராசகுல வம்சமோ/ ராராரோ ராரிமுத்தோ/ என் கனியே நீ ராமருக்கோர் சுண்டுமுத்தோ/ பால்போல் நிலவடிக்க/ பரமசிவன் பந்தடிக்க/ பரமசிவன் அடிக்கும் பந்த/ என் கனியே நீ பகு(பகிர்)ந்தடிக்க வந்த கண்ணோ/ ஈக்கிப் போல் நிலவடிக்க/ ஈஸ்வரனார் பந்தடிக்க/ ஈஸ்வரனார் அடிக்கும் பந்த/ என் கனியே நீ எது(எதிர்)த்தடிக்க வந்த கண்ணோ” நாட்டுப்புறத் தாய், தெய்வமின்றி எந்தச் செயலும் நடைபெற இயலாது என்ற அசையா நம்பிக்கை உடையவளாக இருப்பதால் இயற்கையான உடற்கூறு நிகழ்வுகளையும் தெய்வச் செயலாகப் பாவிக்கிறாள். எனவேதான் தாலாட்டுப் பாடல்களில் இறைச் செய்திகளும், புராண இதிகாசச் செய்திகளும், எல்லாத் தெய்வங்களோடும், தெய்வ நிகழ்வுகளோடும் குழந்தையை ஒப்பிட்டுப் பாடும் நோக்கம் அதிகம் காணப்படுகிறது எனலாம். கடவுளே தன் வீட்டில் குழந்தையாகப் பிறந்தது போன்று மகிழ்ந்தும், கடவுளருடன் சேர்ந்து சரிசமமாகத் தன் குழந்தையும் விளையாடுவதாகவும் பெருமிதத்துடன் பாடும் பண்பாட்டினைக் காண முடிகிறது.

### தெய்வம் துணையிருக்கும்

குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும்போது குழந்தையைத் தெய்வம் தொட்டிலின் கீழே காவல் காத்துத் துணைநிற்கும் என்னும் நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடையே காணப்படுகிறது. "தொட்டிலு பிள்ளைக்கு/ தொ(து)ணையிருப்பா மாரியம்மா/ கட்டிலு பிள்ளைய/ காத்திருப்பா காளியம்மா" என்னும் பாடல் வரிகள் காளியம்மன், மாரியம்மன் போன்ற சிறுதெய்வ வழிபாடு குறித்துச் சுட்டுகிறது.

### பிள்ளைச்செல்வம் என்னும் வரம்

பிள்ளைச் செல்வம் வேண்டித் தவமிருந்து குழந்தையை வரமாகப் பெற்றதாகத் தாலாட்டில் குறிப்பிடுவது தாயின் உச்சபட்ட ஆனந்தத்தினை வெளிப்படுத்துகிறது. 'பேர் சொல்லப் பிள்ளை வேண்டும்' என்பர். இன்னாரின் பிள்ளை என்று தன்னுடைய பெயரைச் சொல்லிக் குலம் மங்காமல் வாழையடி வாழையாய்க் குலம் தழைக்க வந்த குழந்தையைத் தாலாட்டில் பாராட்டிச் சீராட்டி மகிழ்வதைக் காணமுடிகிறது. "பிள்ளையில்ல யின்னுசொல்லி/ என் கண்ணே நான் முல்லையில பூவெடுத்து/ முல்லைக் கரையினிலே/ என் கண்ணே நீ முளச்சு வந்த பாலகனோ/ கல்லக் கொண்டு கனியெறிஞ்சு/ என் கண்ணே உங்களப்பா மாய காளிகூட வாதாடி/ வில்லக் கொண்டு பட சாய்க்கும்/ என் கண்ணே நீ விஜயன் மருமகனோ/ வெகுநா(ள்) தவமிருந்து/ என் கண்ணே புள்ள வரம் வேணுமின்னு/ மாடிப் படியிறங்கி/ என் கண்ணே நானுருகி நிக்கயிலே/ சேர் திறந்து நெல்லளக்க/ என் கண்ணே நீ செல்வம் பிறந்தீயோ/ மாரியம்மன் கோயிலிலே/ என் கண்ணே நான் மனஞ்சடச்சு நிக்கயிலே/ மழத் துளியா வந்தீயோ/ என் கண்ணே நீ மனக்கவல தீ(ர்)த்த கண்ணோ/ விளக்கிலிட்ட எண்ணெய் போல்/ என் கண்ணே நான் வெந்துருகி நிக்கயிலே/ கலத்திலிட்ட பாலுப்போல/என் கண்ணே நீ கண்ணுறக்கம் தந்தவனோ/ சித்தாறு வத்தி/ சிறுகடலும் பாசிபத்தி/ வத்தாத்து தண்ணியிலே/ வந்த மணிவிளக்கோ/ எங்க குலம் மங்காம/ என் கண்ணே நீ அடுத்தறிய வந்தவனோ" என்னும் பாடல் வரிகள்மூலம் பிள்ளைப்பேறு இல்லாமல் வருத்தத்தில் இருந்தவளின் துன்பம் துடைத்து இன்பத்தை அள்ளித் தரத் தெய்வத்தின் கருணையால் கிடைத்த வரமாகவும் பொக்கிஷமாகவும் குழந்தையைக் கொண்டாடி மகிழ்வதை அறியமுடிகிறது. 'மாடி வீடு', 'சேர் திறந்து நெல்லளத்தல்' ஆகியவை செல்வ வளம் மிக்க வீட்டிற்குக் குறியீடாகின்றன. எத்துணை செல்வம் இருந்தாலும் பிள்ளைச் செல்வத்தை மட்டுமே ஈடு இணையற்ற பெருஞ் செல்வமாக எண்ணும் தாயின் மனத்தை அறியமுடிகிறது. சங்க இலக்கியப் பனுவலான புறநானூற்றில் இடம்பெறும்

**"படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணும்**
**உடைப் பெருஞ் செல்வராயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டுந்தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடைய யடிசின் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை யில்லோர்க்குப்**
**பயக்குறை இல்லை தாம்வாழு நாளே"[4]**

என்னும் பாடல்வரிகள் இங்கு மனங்கொள்ளத்தக்கது. பிள்ளை இல்லாத காரணத்தால் மனமுடைந்து போன தாய், தாய்மைப்பேறு வேண்டித் தெய்வத்தை வழிபடுகிறாள். அவளது வருத்தத்தை நெஞ்சுருகியும், மனம் சலிப்படைந்தும், விளக்கிலிட்ட எண்ணெயினைப் போல் வெந்து போனதாக உவமித்தும் பாடி வெளிப்படுத்துகிறாள். இவற்றை யெல்லாம் தீர்க்க வந்த பிள்ளையின் வரவினைக் கடவுள் தந்த வரமாகக் கருதி மகிழ்வதை அறியமுடிகிறது.

### வருணனை

தாலாட்டுப் பாடலில் 'எண் கண்ணே', 'என் கனியே', 'என் அரசனே' ஆகிய சொல்லாட்சி தொடர்ந்து வருவதைக் காண முடிகின்றன. சிப்பிக்குள் முத்துப்போல் தாய் தன் வயிற்றில் குழந்தையைச் சுமந்து பெற்றெடுக்கிறாள். மதிப்புமிக்க முத்தாகவும் தங்களது வீட்டில் மட்டுமின்றி உறவினரிடையேயும் சொத்தாகவும் குழந்தை திகழ்வதை, "முத்துலயும் முத்தோ/ என் கண்ணே நீ முருக வெளஞ்ச முத்தோ/ ஆரா(ய்ந்த)ஞ்ச முத்தோ/ என் கண்ணே நீ அலகடலும் ஆண்ட முத்தோ/ பெத்தய்யா முத்தோ/ என் கண்ணே நீ பெரியப்பா பால்கொ(கு)டமோ/ சித்தப்பா வீட்டுக்கும்/ என் கண்ணே நீ தூண்டா மணிவெ(வி)ளக்கோ" என்ற பாடலடிகள் குழந்தையின் அழகை விலையுயர்ந்த பொருளான முத்தோடு ஒப்பிட்டுக் கூறுவதைக் காணலாம். இல்லத்திற்கு இனிமை சேர்க்கும் குழந்தையை இனிப்புச் சுவையுடைய பழங்களுடன் ஒப்பிட்டுப் பாடும் வழக்கமும் காணப்படுவதை, "பாலோ பழமோ/ என் கனியே நீ பஞ் சாமிருதமோ/ தேனோ தினைமாவோ/ என் கனியே நீ தித்திக்கும் மாங்கனியோ/ வாழைப் பழமோ/ என் கனியே நீ வைகாசி மாம்பழமோ/ கொய்யாக் கனியோ/ என் கனியே நீ கொஞ்ச வந்த ரஞ்சிதமோ" என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன. மேலும், குழந்தையைக் கரும்பென விளித்துப் பாடுவதை, "கட்டிக் கரும்போ/ என் கனியே நீ கணுவோடும் பூங்கரும்போ/ பிஞ்சிக் கரும்போ/ என் கனியே நீ பிரிஞ்சாடும் பூச்சரமோ" என்ற வருணனை வாயிலாக அறிய முடிகிறது.

### ஒப்பனை

'கண்ணுக்கு மை அழகு' என்பர். கண்களுக்கு மையிடுதல் தொன்று தொட்டு தொடர்ந்து வரும் பழக்கமாக அமைகிறது. 'உண்கண்' என்ற சொல்லாட்சி இதன் செல்வாக்கை விளக்கும். 'அஞ்சனம்' என்று மையைக் குறித்து வழங்கும் சொல்லும் பழந்தமிழக வழக்கில் வழங்கி வருகின்ற செய்தியை, "காதல் மிக்குழிக் கற்றவும் கைகொடா/ ஆதல் கண்ண கத்து அஞ்சனம் போலும்"[5] என அறியமுடிகின்றது. மையைக் கண்ணில் இட கருவிகள் இருந்தன என்பதும் மையினை மருத்துவ முறையில் தயாரித்தனர் போன்றனவும், "அஞ்சனக் கோலி னாற்றா நாகமோ"[6] என்ற பாடலடிமூலம் அறிய முடிகின்றது. குழந்தையின் கண்ணிற்கு மையெழுதுவதை, "உறங்குதோர் கண்ணுக்கு/ என்னேரசானுக்கு (என் அரசனுக்கு) ஓ(வீ)ல கொண்டு மையெழுதி/ தூங்குதோர் கண்ணுக்கு/ என்னேரசானுக்கு (என் அரசனுக்கு) துரும்பு கொண்டு மையெழுதி/ காணத்தூர் நல்லெண்ண/ கண்கரிக்குமின்னு சொல்லி/ சீல(ஸ்ரீவில்லிபு)த்தூர் நல்லெண்ணக்கி/ உங்களப்பா சீட்டெழுதி விட்டாக" என்னும் தாலாட்டு வரிகள் குழந்தையின் கண்களுக்கு எந்தக் கேடும் வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தூய்மையான நல்லெண்ணெய் கலந்த மையினைக் கண்ணுக்கு ஓலை, துரும்பு கொண்டு கண்களுக்கு மை தீட்டிக் குழந்தைக்கு ஒப்பனை செய்து அழகுபார்ப்பதைச் சுட்டுகின்றன.

### அணிகலன்

சிறுகுழந்தைகளுக்கு 'கிண்கிணி' என ஒலிக்கும் காலணியை அணிந்ததால் அதற்கு 'கிண்கிணி' என்று பெயர் வந்ததாகக் கூறுவர். பிஞ்சுக் கால்களால் உதைத்தும், தவழ்ந்தும், குறுநடை ஓடித் திரிந்தும் இருக்கின்ற குழந்தைக்குக் காலில் சிலம்பு/ தண்டை/ கொலுசு அணிவித்து

மகிழ்கின்றனர். "காடெல்லாம் பிச்சி/ கரையெல்லாம் செண்பகப் பூ/ நாடெல்லாம் மணக்குதய்யா/ நல்லமகன் போற பாத/ சீரார் செ(சி) லம்போச/ செல்லமகன் காலோச/ நடக்கயில ஓசையிடும்/ நல்லமகன் காலோச" என்று பாடுவதிலிருந்து அறியமுடிகிறது. மேலும், "மாமனார் புஞ்சயில/ மானெறங்கி மேயுறதும்/ மான வெரட்டய்யா/ மணிச் சலங்க ஓசையோட/ பையா வெரட்டய்யா/ உங்க மாமம்(ன்) போட்ட பதக்கங்க ஓசையோட" என்னும் மேற்கூறிய வரிகளில் குழந்தையின் சலங்கை ஓசைச் சிறப்பு மட்டுமின்றி மாமன் அணிவித்த பதக்கத்தினைக் குறிப்பிடப்பட்டு மாமனின் பெருமை பேசப்படுவதையும் காணலாம்.

## தொட்டிலிலிட்டு குழந்தையை ஆட்டுதல்

தாலாட்டுப் பாடலைத் 'தொட்டில் பாட்டு' எனக் கூறுவது பொருத்தமாகும்.

குழந்தைக்கான புழங்கு பொருட் களில் முதன்மையாக விளங்குவது தொட்டில் ஆகும். இத்தொட்டிலை ஆட்டுவதன் மூலமாகவே தாலாட்டுப் பிறக்கிறது. குழந்தையின் சிறப்பை அதிகப்படுத்திக் கூறும் விதமாக, தொட்டில் சிறப்பித்துப் பாடு பொருளாகின்றது. பிறந்த குழந்தைக்குச் சிறப்புமிக்க தொட்டில் செய்து அழகுபடுத்துவதும், குழந்தையைத் தொட்டிலிலிட்டு ஆட்டும் வழக்கமும் பண்டுதொட்டே இருந்துள்ளதை, "தங்கங் கடஞ்சு/ தங்கத்த தூண்நிறுத்தி/ வெள்ளி உருக்கி/ வெள்ளியில தொட்டில் கட்டி/ இன்னாரு பிள்ளயின்னு/ இருத்தாட்டு பெண்டுகளே/ பச்ச இலுப்ப வெட்டி/ பால் வடிய தொட்டில் கட்டி/ தொட்டிலுல போட்டாட்டு/ துரமகன வச்சாட்டு/ வச்சாட்டச் சொல்லியல்லோ/ வரிசையிட்டார் உங்களப்பா" என்னும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

## அழுகையின் காரணம் கேட்டல்

தாய்க்கு அழும் குழந்தையின் குரல்கூட அழகுதான்போலும். குரலில் இனிமை கொண்ட பறவையாம் கிளியைத் தன் குழந்தையின் குரலுக்கு உவமையாக்கி குணக்கிளியே, கிளி மூக்கே என்று விளித்துப் பின்னர் யாரடித்தார்? ஏனழுகிறாய்? என்று காரணம் கேட்பதாகப் பாடலடிகள் அமைந்துள்ளதை, "வாழைப் பழத்தை/ மதுரங்கிளி கொத்துதுன்னு/ கிலுகிலுப்பை பெட்டி கொண்டு/ கிளி விரட்ட வந்த கண்ணோ/ கிளி விரட்ட வந்தவரு/ என்அரசனைக் கிளிமூக்க யாரடிச்சா?/ யாரடிச்சா நீயழுத/ என் கண்ணே உன் வாயெல்லாம் தேனூற/ பின்ன ஒரு மரமாம்/ பின்னப் பூக்கும்பூ ஆயிரமாம்/ பின்னப் பூ கொய்ய வந்த/ என்அரசனைக் கொ(கு)ணக்கிளிய யாரடிச்சா?/ வடக்க ஒரு செந்தாமர/ பல லட்சம் பூ பூக்கும்/ நூத்திலொரு பூவெடுத்து/ நீ முடிப்பிக்க வந்தவனோ/ முருங்க பூ நெ(நி)றமோ/ முத்தொளிபோல் நித்திரையோ" என்ற வரிகளின்வழி அறியமுடிகிறது.

## தந்தையின் சிறப்புகள்

இன்றைய தந்தைவழிச் சமுதாயத்தில் குழந்தையின் முதற்பெயர் சுருக்கம் தந்தையின் பெயர் அடிப்படையிலே அமைகிறது. தாயுடன் பிறந்த ஆண்களை மாமன்மார்கள் என்பர். தாலாட்டில் குழந்தையின் தாய்மாமன் குறித்து சிறப்பித்துப் பாடுவது மரபு. தாய்மாமன் பெருமை பாடாத தாலாட்டுப் பாடல்கள் இல்லை எனலாம். தன் வீட்டுப் பெருமையை விட்டுக் கொடுக்காதவர்கள் பெண்கள். பொதுவாக, தாய் குழந்தைக்குத் தாலாட்டும்போது தந்தையைக் காட்டிலும் தாய்மாமன் பெருமைகள் மிகுந்திருக்கின்றன. ஆனால் இங்கு,

முதன்மை ஆதாரமாகக் கொண்ட திருமதி சீனியம்மாள் அவர்களின் தாலாட்டானது, தன்னுடைய மகன் வயிற்றுப் பேரன், பேத்திகளுக்குப் பாடுவதாக அமைந்திருந்தமையால், தாலாட்டுப் பாடும்போது கல்வி, பேச்சுத்திறன், செல்வ வளம், தொழில் திறமைகள் மற்றும் வீரம் எனப் பல பெருமைக்குரியவராகக் குழந்தையின் தந்தை (தன் மகன்) பெருமை பேசப் படுவதை காணலாம். தாலாட்டுப் பாடுபவரின் உறவுமுறைக்கேற்ப இவ்வரிகள் மாற்றிப் பாடப்படுவதைப் பின்வரும் பாடலடிகளால் அறியலாம். "மன்னன் மகனோ/ நீ மகராசா பேரரசோ/ புள்ள மகனோ/ நீ புண்ணியனார் பேரரசோ/ செம்பு விளக்கி/ உங்களப்பா சீனிகொண்டு பல்விளக்கி/ ஆரங்கொண்டு முகந்துடைக்கும்/ அதிகாரி உங்களப்பா/ மாலை கொண்டு முகந்துடைக்கும்/ மகராசன் உங்களப்பா/ பூக்கொண்டு முகந்துடைக்கும்/ புண்ணியனார் உங்களப்பா/ பட்டுத் துணி உடுத்தி/ உங்களப்பா துரமகங்க உள்புகுந்து/ சபை நிறஞ்ச வாய்பேசும்/ சம(ர்)த் தர் துரை உங்களப்பா/ காரைவீடாம் கச்சேரியாம்/ உங்களப்பாவுக்கு கை நெறஞ்ச புத்தகமாம்/ தாள் நெறஞ்ச வல்லவெட்டாம்/ உங்களப்பா துரை களோட சேர்ந்திருப்பார்/ காலை ரயிலேறி/ உங்களப்பா கல்கத்தா போயிறங்கி/ காரு திறந்து/ உங்களப்பா சீட்டுமேல உக்காந்து/ சாஞ்சிருந்து கணக்கெழுதும்/ சமத்தர் துரை உங்களப்பா/ உசந்திருந்து கணக்கெழுதும்/ உத்யோகத்தார் உங்களப்பா/ மதுரைக்கு வடகிழக்கே/ மாடொயர சீமையில/ தரிசாக் கெடக்குதுன்னு/ மதுர மீனாட்சியம்மை தனிச்சம்பா நெல்வெதச்சா/ பாக்குப்போல் நெல் வௌஞ்சு/ மதுர மீனாட்சியம்மைக்கு பட்டணம்போய் சூடேத்தி/ மாடு கட்டி சூடடிச்சா/ மணல்பிரியுமின்னு சொல்லி/ யானை கட்டி சூடடிக்கும்/ வீம துரை உங்களப்பா/ குதிரை கட்டி சூடடிச்சா/ மணல்பிரியுமின்னு சொல்லி/ சிங்கம் கட்டி சூடடிக்கும்/ சீமத் துரை உங்களப்பா/ இருசாப் பணஞ்செலுத்தி/ உங்களப்பா இங்கிலீசு ஏடெடுத்து/ போறாக உங்களப்பா/ பூமதுர ஏலங் கேக்க/ சாப்பிட்டு கைகழுவி/ உங்களப்பா சகுனம் பாத்து வண்டியேறி/ போறாக உங்களப்பா/ புதன்கிழமை (ஸ்)டேசனுக்கு/ மாடக்கடை வீதியில/ உங்களப்பா வைரமணி தூண்நிறுத்தி/ தங்கக் கடை போட்டு/ உங்களப்பா சந்திரரோ சூரியரோ/ ஆவுர வெட்டி/ உங்களப்பா அதிக நிலந்திருத்தி/ பூச்செண்டா நாத்து நடும்/ புண்ணியரோ உங்களப்பா/ மஞ்சப் பொதி ஏத்தி/ உங்களப்பா மத்தியான வண்டியேறி/ மஞ்சப் பொதி மணக்கும்/ மந்திரியோ உங்களப்பா/ பருத்தி பொதி ஏத்தி/ உங்களப்பா பகலயிலே வண்டியேறி/ பருத்தி பொதி மணக்கும்/ பரமசிவன் உங்களப்பா/ இஞ்சிப் பொதி ஏத்தி/ உங்களப்பா இளநேர வண்டியேறி/ இஞ்சிப் பொதி மணக்கும்/ இந்திரரோ உங்களப்பா/ ஆனை விக்கும் வர்த்தகராம்/ உங்களப்பா சேனைக்கெல்லாம் அதிகாரியாம்/ அத்திமரம் குத்தகையாம்/ உங்களப்பாவுக்கு அஞ்சு லட்சம் சம்பளமாம்/ சாம்புத் தலை முழுக்காம்/ உங்களப்பாவுக்கு சர்க்கார் உத்யோகமாம்/ இடிபோல் முரசடிக்க/ மதயானை நின்னு போர்போட/ கூட்டத்து அரசரோட/ சண்டை செய்வார் உங்களப்பா/ மானாம் மயில்கூடாம்/ உங்களப்பாவுக்கு மதுரை கிளிக்கூடாம்/ சென்னைபட்டணம் ஹைகோர்ட்டாம்/ செயிச்சிருவார் உங்களப்பா/ ஆர வண்டியேறி/ உங்களப்பா ஆலங்குளம் போயிறங்கி/ ஆள்பாத்து பேர்போடும்/ என் கண்ணே அதிகாரி உங்களப்பா/ முத்தளக்க நாழி/ முதலளக்க பொன்னாழி/ சீராட

*செப்பும்/ சிறுகைக்கு மோதிரமும்/ பால் குடிக்க கிண்ணி/ பழம் திங்கச் சேணாடு/ கொண்டைக்கு குப்பி/ முகம் பார்க்கக் கண்ணாடி/ பட்டுச் சின்னச் சட்டை/ பொன்னால எழுத்தாணி"* என்ற வரிகளின்வழி குழந்தையின் தந்தை கைநிறையப் புத்தகங்கள் வைத்திருக்கும் படிப்பறிவுள்ள புத்திசாலி, நீதிமன்றத்திற்குச் சென்று வாதாடி வெற்றி பெறும் பேச்சுத்திறமை மிக்கவர்; இதிகாசத்தில் வரும் பீமனின் வீரத்திற்கு நிகரான வீரம் கொண்டவர்; பலவகைப்பட்ட தொழில்கள் செய்பவர், ஆர வண்டி, கார், இரயில் போன்ற வாகனங்களில் பயணிக்கக்கூடியவர்; தங்கம், பட்டு போன்ற விலை உயர்ந்த பொருட்களைத் தரும் செல்வவளம் மிக்கவர்; 'அரசு உத்தியோகம் பார்ப்பவர், துரைகளுடன் சேர்ந்திருப்பவர், அதிகாரி' போன்ற சொற்களால் பெருமித உணர்ச்சி வெளிப்படக் காணமுடிகிறது.

## தொகுப்புரை

தாய்மையின் பொங்கிவரும் மகிழ்ச்சியின் வெள்ளப்பெருக்கே தாலாட்டாகும். தாலாட்டுப் பாடல்கள் எதுகை, மோனை, இலக்கிய நயம், உவமையழகு, தடையில்லா நடைப்பெருமை, சொல்லாட்சி, ஓசை இனிமை, பொருட்சிறப்பு உள்ளிட்ட பல்வேறு தன்மைகளைக்கொண்டுள்ளன. கேள்விஞானம், இட்டுக்கட்டும் திறன், புராண இதிகாசக் கதைகளின் தாக்கம் போன்றவற்றால் தாலாட்டுப் பாடல் வளர்கிறது என்பதைக் காணமுடிகிறது. அக்கால மக்களின் வாழ்க்கை முறையை, எண்ண வெளிப்பாட்டை, சிந்தனைத் திறனை, இக்கால மக்கள் அறிந்துகொள்ள முடிகிறது. தந்தையின் சிறப்புகளைக் கூறும்போது தந்தை வீரம் நிறைந்தவராகவும், செல்வம் நிறைந்தவராகவும் சித்திரிக்கும் எண்ணப் போக்கு வெளிப்படக் காணமுடிகிறது. தாலாட்டுப் பாடல்களில் காணப்படும் மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவையும், வீட்டு உபயோகப் பொருட்கள், அணிகலன்கள், ஒப்பனைப் பொருட்கள், பாத்திரங்கள், வாகனங்கள் ஆகியனவும் மனித நாகரிகத்தை வெளிப் படுத்தக்கூடிய வாழ்வியல் கூறுகளாகும்.

## பயன்கொண்ட நூல்கள்


1. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.81
2. மா.கோதண்டராமன், நாட்டுப்புறப் பாடல்கள், ப.45
3. செ.அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள், ப.64
4. புறநானூறு, பாடல் எண்.188
5. சீவகசிந்தாமணி, பாடல் எண் 1632:1–3

# அகநானூற்றில் பழந்தமிழர் பண்பாடு

**முனைவர் பூ.பூங்கோதை**
இணைப்பேராசிரியர், துறைத்தலைவர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

*உலக இலக்கிய வகைமைகளுள் தமிழின் சங்க இலக்கியங்களுக்கென தனிச்சிறப்புண்டு. தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம், மனித மாண்பு ஆகியவற்றை எடுத்துரைக்கும் ஒரு வரலாற்று கருவூலமாகச் சங்க இலக் கியங்கள் திகழ்கின்றன. சங்ககால அரசர்களின் வரலாறு, சங்ககால மக்களின் வரலாறு, சங்ககாலப் புலவர் களின் வரலாறு முதலான செய்திகள் விரிவாக இவ்விலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஒரு சமுதாயத்தை நிர்ணயிக்கும் அளவு கோல்கள் பலவற்றுள் பண்பாட்டுக் கூறுகள் இன்றியமையாதவையாகும். ஆசிரியப்பாவால் அமைந்த நானூறு பாடல்களைக் கொண்ட கொண்ட நூல் அகநானூறு. இந்நூலுக்கு 'நெடுந்தொகை' என்ற வேறு பெயரும் உண்டு. களவு, கற்பு என்ற இரு ஒழுக்கத்திலும் அமைந்து முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் ஆகிய திணைப்பாடல்களைக் கொண்டது. எனவே பண்டைய தமிழர் திருமணம், விருந்தோம்பல், பண்டைத் தமிழர் சமயம், பழக்க வழக்கம், நம்பிக்கைகள், கலைகள் போன்ற பழந்தமிழர் பண்பாடுகளை அகநானூற்றின் வழி எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## பண்பாடு – விளக்கம்

*ஆங்கிலச் சொல்லாகிய 'கல்சர்' (Culture) என்ற சொல்லிற்கு பொருள் தரும் வகையில் 'பண்பாடு' என்ற சொல் வழக்கில் வழங்கப்பட்டு வருகிறது. 'பண்படு' என்ற வினைச் சொல்லிலிருந்தே 'பண்பாடு' என்னும் பெயர்ச்சொல் தோன்றியது. 'பண்படு' என்பது பக்குவப்படு, சீர்ப்படுத்து, திருத்தமுறு என்னும் பொருள்களைத் தருகிறது.*

*"கல்சர்' என்ற ஆங்கிலச் சொல்லை முதன்முதலில் உருவாக்கபவர் பேக்கன் என்பவர் ஆவர். எமெர்சன் என்பவர் அச்சொல் குறிக்கும் பொருளை விரிவாக விளக் கினார். அவர் 'அமெரிக்க அறிஞர்' என்ற தலைப்புடைய சொற்பொழிவில் இயற்கை, இலக்கியம், செயல்கள் ஆகிய வற்றின் தாக்கங்களினால் பண்பாடு வளர்ச்சியுறும் திறத்தை ஆராய்கிறார்' (செ.பழனிச்சாமி, புறநானூற்றில் தமிழர் பண்பாடு, 1989, பக்.15)*

*கலைக்களஞ்சியத்தில் 'பண்பாடு' என்பதற்கு கீழ்க்கண்ட விளக்கங்கள் காணப்படுகின்றன.*

*"மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்துவது பண்பாடே. பண்பாடு மக்களின் கலைகளிலும் காவியங்களிலும் காணப்படும். இது பாரம்பரிய வாயிலாக ஒரு சந்ததியாரிடமிருந்து அடுத்த சந்ததியாருக்கு வந்து சேர்வதன்று; கல்வியாலும் பயிற்சியாலும் கிடைப்பது. ஆனால் பாரம்பரியமோ கல்வி அல்லது பயிற்சி பெறுவதற்கான ஆற்றலை*

அளிப்பதாகும்" (கலைக்களஞ்சியம் தொகுதி – 6, பக்690–691)

இவ்வாறு மனிதனை தன்நிலையிலிருந்து உயர்த்துவதுதான் பண்பாடு என்றும்,மனிதன் கலைகள்,காவியங்களில் மூலம் பண்பாடு வெளிப்படுகிறது என்றும், கல்வி பெறுவதற்கும் பண்பாடு அடிப்படையாக அமைகிறது என்றும் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

பண்பு என்னும் சொல் சங்க இலக்கியங்களிலும் பல இடங்களில் காணப்படுகின்றது. புறநானூற்றில்,

**"பாடறிந்து ஒழுகும் பண்பினாரே"**
**(புறம்,பா-197)**

என்ற தொடர் இடம்பெறுகின்றது அஃதாவது சிறிய ஊரையுடைய மன்னனாக இருந்தாலும் என்னிடத்துச் செய்யும் முறைகளை அறிந்து நடக்கும் குணத்தினையுடையோர் காண்' என்பது பொருள் ஆகும். இங்கு 'பண்பினார்' என்பது குணமுடையவர் என்ற பொருளைக் குறிக்கும். கலித்தொகையில் பண்பு என்னும் சொல்,

**"பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்"**
**(கலி, பா.133)**

இவ்வடியில் 'பண்பு' என்னும் சொல்லுக்கு மக்கட்பண்பாகிய உலக ஒழுக்கத்தை அறிந்து ஒழுகுதல் என்பது பொருளாகும்.

## ஈதல்

தன்னை நாடிவரும் வறியவர்க்கு ஈதல் வேண்டும் அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும், அப் புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு."**
**(குறள் 231)**

செல்வத்தின் பயனாக மற்றவருக்கு கொடுத்துதவும் பண்பினைக் கூறுகிறது புறநானூறு,

**"செல்வத்துப் பயனே ஈதல்" (புறம் 189)**

இதற்கேற்ப அகநானூற்றிலும் ஈதல் பண்பு பற்றி விவரிக்கப்பட்டுள்ளன.

தலைவன் பொருள் தேடுவதற்காகத் தலைவியை விட்டுப் பிரிந்த செல்கிறான். இதனால் தலைவனைப் பிரிந்த வருத்தத்தில் தலைவி நிலைகொள்ள, தலைவியைத் தேற்றும் தோழியானவள்,

**"இல்லோர்க்கு இல்'' என்று இயைவது கரத்தல்**
**வல்லா நெஞ்சம் வலிப்ப, நம்மினும்"**
**(அகம், 53)**

தன்னைத் தேடி பொருள் இரந்து கேட்பவர்களுக்கு இல்லை என்று கூறும் வலிமை நெஞ்சம் இல்லாத் தலைவன் பொருள் மீது கொண்ட பற்றினால் மட்டுமல்ல, ஈதலே ஒருவனின் கடமையாகும் என்பதை நினைவில் கொண்டுதான் பிரிந்துள்ளான். ஆதலால் வருவான். வருந்தாதே என்கிறாள். தலைவியைப் பிரிந்து பொருள் தேடி வந்து அதனை பிறருக்கு கொடையாகக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தலைவனின் ஈகை பண்பு தோழியின் கருத்தால் அறியப்படுகிறது.

## விருந்தோம்பல்

சங்கத்தமிழர்கள் பெரிதும் போற்றும் அறம் விருந்தோம்பலாகும். விருந்தோம்பலுக்கென்றே தனியொரு அதிகாரத்தை அமைத்துள்ள திருக்குறள் இப்பண்பாட்டின் சிறப்பைச் சுட்டுகிறது. பிரிவு பற்றிய இலக்கணம் கூறும் தொல்காப்பியம் பொருள் வயிற்பிரிவையும் பிரிவு வகைகளுள் ஒன்றாகச் சுட்டுகிறது. அவ்வாறு தலைவன் பொருள்தேடிச் சென்றது தம் வாழ்க்கையை நடத்துதற்கு மட்டுமின்றி தம்மை நாடிவரும் விருந்தினரை உபசரித்தலுக்குமே ஆகும். மற்ற

உயிர்களையும் தம்முயிர் போல ஒக்கக்கருதி ஓம்பும் மனிதநேயத்திற்கு அடிப்படையாவது விருந்தோம்பல் பண்பாகும். மனிதநேயத்தின் முதல் அடையாளமாகக் கருதப்படுவதும் இதுவேயாகும். இவ்விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கியவர்கள் சங்கத் தமிழர்கள் ஆவர்.

வினைமுற்றி மீளும் தலைவன் பாகனிடம் தனது மனைவியைப் பற்றிக் குறிப்பிடும்போது 'விருந்தயர் விருப்புடையவளாக இல்லத்தில் இருக்கிறாள்' என்கிறான். விருந்து செய்தல் வேண்டி சிறந்த பொருளை ஈட்டி வருதல் தலைவனுக்குரிய கடமையாக அமைந்தது.

"செழுநகர் நல்விருந்து அயர்மார் ஏமுற
விழுநிதி எளிதினின் எய்துக தில்ல"

(அகம், பா ,2025)

சங்க கால மக்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக மட்டுமல்லாது விருந்தினருக்கு உணவு கொடுப்பதற் காகவும் பொருளீட்டச் செல்லுதல் அக்காலத்தின் தலைசிறந்த பண்பாட்டுப் பதிவாக அமைகின்றது.

"செல்விருந் தோம்பி வருவிருந்து
பார்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

## வணிகம்

ஒரு நாட்டின் உயர்வுக்குக் காரணமாக அமைவது அந்நாட்டின் தொழில் வளம் எனலாம். தொழில் வளம் அந்நாட்டின் புகழினை மட்டுமல்லாது பண்பாட்டினையும் வெளிப்படுத்தும். தமிழர் மிகப் பழங்காலத்தில் பிற நாட்டவருடன் கடல்வழி வாணிகத் தொடர்பு மேற்கொண்டிருந்தனர். தமிழகத்திற்கும் அயல்நாட்டிற்கும் கடல்வழி பயணத்தால் தொழில்வளம் சிறப்பு பெற்று நாகரிகம் வளர்ச்சியடையத் தொடங்கின. சுமேரியா, உரோம், சீனா போன்ற நாட்டுடன் நாம் வாணிகத் தொடர்பு. கொண்டுள்ளோம் என்பதற்குச் சங்க இலக்கியச் சான்றுகள் உள்ளன.

சங்க கால மக்கள் தன்னுடைய நிலத்தில் விளைந்த பொருட்களை மற்ற நிலத்து மக்களிடம் கொடுத்து தனக்கு வேண்டிய பொருளைப் பெற்று வந்தனர். இம்முறை பண்டமாற்று முறை எனப்பட்டது. இவ்வாறு வாழ்ந்த மக்கள் தன் பொருட்களை பிற நாடாகிய அயல்நாட்டிற்கும் அனுப்பி தங்கள் வாணிகத் தொடர்பை வளர்க்கத் தொடங்கினர்.

தோழி தலைவியினிடத்தே மீனை விற்றுக் கொண்டுவந்த நெல் இருக்கிறது. தயிர் இருக்கிறது. தயிர்ச் சோறு உண்ணத் தருவோம். வடநாட்டு மக்கள் கொண்டுவந்து தந்த சந்தனக் கல்லில், குடநாட்டில் விளைந்த சந்தனக் கட்டையைத் தேய்த்துச் சந்தனம் பூசி விடுவோம் என அகநானூற்றுப் பாடலில்,

"பசு மீன் நொடுத்த வெண் நெல் மாஅத்
தயிர் மிதி மிதவை ஆர்த்துவம் நினக்கே;
வடவர் தந்த வான் கேழ் வட்டம்"

(அகம், பா,340)

தமிழ்ப் பண்பாடமடுச் செழுமை கூறப்பெற்றுள்ளன..

## பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்ந்து வரக்கூடிய ஒன்று பழக்கவழக்கம், 'பழக்கம்' என்பது தனிமனிதனிடம் அமைந்த நடத்தையைக் குறிப்பதாகும். தனி மனிதனாலும், சமுதாயத்தாலும் சேர்ந்து உருவாக்கப்பட்டவைதான் இப்பழக்க வழக்கங்கள். இப் பழக்கவழக்கம் இன்று நேற்று தோன்றியதல்ல, பழங் காலத்திலிருந்தே மக்களிடம் வழங்கி வருவதாகும்.

சங்க கால மக்கள் கடவுள் உறையும் இடமாக மரத்தைக் கருதி வழிபட்டு வாழ்ந்தனர். இயற்கையை இறைவனின் சக்தியென்றும் நினைத்திருந்தனர். மலை, கடல், மரம் இவற்றில் இறைவன் உள்ளதாக நினைந்து அதனை வழிபட்டதாகச் சங்க இலக்கியங்களில் உள்ளன.

இயற்கையில் ஒன்றாகிய மலையில் கடவுள் உறைவதாக நினைத்து மக்கள் வழிபட்டனர்.

**"பாம்புக் கடுப் பன்ன தோப்பி வான்கோட்டுக்
கடவு ளோங்குவரைக் கோக்கிக் குறவர்"**
**(அகம் பா.348)**

மக்கள் நீர்த்துறையிலும் தெய்வத்தை வழிபட்டனர்.

**"அணங்குடைப் பனித்துறை கைதொழு
தேத்தி" (அகம் பா.240)**

மரத்தையும் இறைவனாக கருதி வழிபட்டனர்

**"கடவுண் மரத்த முண்மிடை குடம்பைக"**
**(அகம் பா.270)**

கடவுள் உறையும் இடமாக வேப்ப மரமும் ஆல மரமும் இருந்துள்ளன.

இன்று நாம் நாள், நேரம், கணிக்கும் விதமும், அன்று மக்கள் நேரம் கணிக்கும் விதமும் முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. சங்க கால மக்கள், நேரத்தைக் கணிக்க, நாழிகை வட்டிலைப் பார்க்கும் வழக்கத்தை மேற்கொண்டனர்.

**"நிலனும் விசும்பும் நீரியைந் தொன்றிக்
குறுநீர்க் கன்னல் எண்ணுந ரல்லது"**
**(அகம் பா.43)**

என்பது நிலமும் விசும்பும் நீரால் இயைந்து ஒன்றுபட நாழிகை வட்டிலால் நேரம் குறித்தறிபவர் திகைக்க, சூரியனைப் பார்த்தும் அறிய முடியாமல் இருண்டு மழை பொழிந்தது என்ற பொருளிலிருந்து அக்கால மக்கள் சூரியன், தண்ணீர், அந்தி மல்லி, மணல் கடிகாரம் போன்றவற்றால் நாழிகைப் பார்த்து வந்தனர் எனவும் இவ்வழக்கங்கள் இன்றளவும் கிராமத்து மக்களிடம் இருந்து வரும் வழக்கமாகக் காணப்படுகின்றன எனவும அறியமுடிகின்றன.

## நிமித்தம்

இன்றையச் சூழலிலும் மக்களில் சிலர் சகுனம் பார்க்கின்றனர். பூனை குறுக்கே சென்றால் போகக்கூடாது என்றும், நரி முகத்தில் விழிக்க வேண்டும், காக்கைக் கரைந்தால் விருந்தினர். வருவார் என்றும், தும்மினால் யாரோ நினைக்கிறார்கள் என்றும், நாக்கைக் கடித்துக் கொண்டால் நம்மை யாரோ கடிந்து கொள்கிறார்கள் என்றும் நம்பிக்கை கொள்கிறோம். பல்லி தலையில் விழுந்தால் கலகம் வரும், கைம்பெண் முன்னே வருதல் கூடாது போன்றவை தீய நிமித்தங்கள் என்றும், மகளிர்க்கு இடக்கண் துடித்தல், ஆண்களுக்கு வலதுகண் துடித்தல், தும்மல் வருதல், நற்கனவு காண்பது போன்றவை நன்னிமித்தங்களாகவும் சொல்லப்படுகின்றன. இப்பழக்க வழக்கமும், நம்பிக்கைகளும் இன்று நேற்று தொடங்கியது அல்ல, பழங்கால மக்களிடையே வேரூன்றிக் காணப்பட்ட ஒன்று எனலாம். பல்லி சகுனம் பற்றி கலித்தொகையின்,

**"மல்லியும் பாங்கொத் திசைத்தன"**
**(கலி, பா.11)**

என்ற அடிகளால் அறியலாம். தலைவன் பொருளீட்டச் சென்றுள்ளான். அவன் வருகையை எதிர்கொண்ட தலைவியின் கண்கள் கலங்குகின்றன. என் தலைவன் எந்தத் தீங்கும் இல்லாமல் வருவார் என்றால், என் கண்கள் கலங்க தேவையில்லையே! ஆனால் என் கண்கள் மாறாக, கலங்குகின்றனவே. என் தலைவனுக்கு ஏதேனும் துன்பம்

ஏற்பட்டு இருக்குமோ என கண்கள் கலங்குவதைத் தீய சகுனமாக நினைத்து வருந்துகிறாள்.

**“அழல மன்னோ தோழியென் கண்ணே”**
**(அகம் பா.375)**

## சடங்குகள்

சடங்கு என்பது மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வரன்முறை ஆகும். மனிதனும் மனித சமூகமும் வாழ்க்கையை நெறிப்படுத்த ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்கம் என்றும் இதனைக் கூறுவர். ‘புனிதத் தன்மையின் பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பே சடங்கு’ என்றும், ‘நம்பிக்கைகளின் அடிப் படையில் மக்களால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் புனிதச் செயல்களே சடங்குகள்’ என்றும் சடங்கு குறித்துப் பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. மனிதனின் பிறப்பில் தொடங்கி இறப்பில் முடியும் பழக்க வழக்கங்களில் ஒன்று சடங்குகள். இச்சடங்கு மக்களின் மன உணர்வுகளை ஒன்றுபடுத்தக் கூடியதாக அமைகிறது.

உடன்போக்கில் தலைவனுடன் சென்ற தலைவியை நினைந்து வருந்திய தாய், தன் மகளுக்கு “சிலம்புகழி நோன்பு” செய்யவில்லையே என வருந்துகிறாள். இது தாய்வீட்டில் திருமணத்திற்கு முன் செய்யப்படும் ஒருவித சடங்கு முறையாகும்.

**“அருங்கடி வியனகர்ச் சிலம்புங் கழியாள்”**
**(அகம் பா.35)**

இதனை அக்காலத் திருமண முறையாகவும் கொள்ளலாம்.

## முடிவுரை

பண்டைத் தமிழர்கள் பண்பட்ட வாழ்வினை வாழ்ந்து சிறந்தவர்கள் என்பதனை சங்க இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. ஈகை, விருந் தோம்பல், வணிகம், பழக்க வழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், நிமித்தங்கள் ஆகியன் தமிழர்களின் பண்பாட்டிற்குச் சான்று பகர்வனவாய் அமைவதை அகநானூற்றுப் பாடல்கள் வாயிலாக இவ்ஆய்வுக் கட்டுரையில் விளக்கப் பெற்றுள்ளன.

# வள்ளுவரின் மேலாண்மைச் சிறப்புகள்

**முனைவர் சு.மலர்விழி,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை - 01.

## முன்னுரை

**“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”**

என்று வள்ளுவரைப் பெற்றதால் புகழ்பெற்றது இவ்வையகம் என்பார் பாரதியார். திருவள்ளுவர் தனது தெளிந்த கல்வியாலும், கூர்ந்த மதி நுட்பத்தாலும் உலகியலையும், மக்களின் பழக்க வழக்கங்களையும், கலாச்சார நிகழ்வுகளையும் நன்கு ஆராய்ந்து அவற்றைத் தம் உள்ளத்துள் நிலைநிறுத்தி இரண்டடிகளாகத் திருக்குறள் என்னும் நீதிக்களஞ்சியத்தை உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும் வகையில் குறள் வெண்பாவில் அமைத்துள்ளார்.

## குடிமகனின் செயல்பாடுகள்:

ஒரு மனிதனின் செயல்பாடுகள் குறித்து அவனது ஆளுமைத் திறனை உணரலாம். முன்னோர்களின் செல்வங்கள், நிறைந்து காணப்படுகிறது என்றெண்ணி சோம்பியிருத்தலைப் போல, எம்மிடம் ஒரு பொருளும் இல்லை என்றெண்ணி வறுமையால் சோம்பியிருப்பவரைக் கண்டால் நிலமகள் தன்னுள் சிரிப்பாள் என்பதை

**“இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்.” (குறள்:1040)**

என்னும் குறளால் அறியலாம். மேலும் சமுதாயத்தில் உயர்ந்த புகழும் கிட்டாமல் போய்விடும். வாழ்வில் மனிதன் என்பவன் சுறுசுறுப்புடன் இயங்க வேண்டும் என்பதை இதன் வாயிலாக அறியலாம். மனிதன் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுகின்ற பொழுது அதனைப் பற்றிக் கவலைப்படாது எண்ணித் துணிதல் வேண்டும். ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும் முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும் என்பதை,

**“தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.” (குறள்:619)**

என்பார் வள்ளுவர். நாட்டை ஆளும் அரசனாயினும் உழவுத் தொழில் புரியும் குடிமகனாயினும், தன் தொழிலின் திறன், தன் ஆற்றல், மாற்றானது ஆற்றல். இருவருக்கும் துணையானவரின் ஆற்றல் யாவற்றையும் அறிந்து செயல்பட்டால் வெற்றி பெறலாம். இதனை,

**“வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணை வலியும் தூக்கிச் செயல்”.**

**(குறள்:471)**

என்றார்.

## மனிதவள மேலாண்மை

அன்புடையவர் பிறரது துன்பம் கண்டு வருந்தும் சிறப்புடையவர். தம்மிடம் உள்ள பொருளைத் தாம் மட்டும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் கொள்ளாமல் அதை அனை வருக்கும் பயன்படும் அளவில் பயன்

படுத்துவர். எந்த உயிர்க்கும் தீமை செய்யாமையும் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதுமே அவர்களின் உள்ளத் தன்மையாக விளங்குகிறது.

"அன்பிலார் எல்லாம் தமக்கும் உரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு". (குறள்:72)

எல்லோரிடமும் நட்பாகப் பழகும் தன்மையே, இன்பம் மட்டுமல்லாது சிறப்பும் பெற்று வாழ அன்பே அடிப் படையாகும். அன்பில்லாத நெஞ்சம் வறண்ட பாலை வனத்திற்கு ஒப்பாகும் என்றும், அன்பு கொண்டு வாழும் மனிதனே உயிருள்ள மனிதன் எனவும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

## ஆளுமையின் மேலாண்மை

ஒரு மனிதனின் ஆளுமையை மேம்படுத்தும் கூறுகளில் மேலாண்மைச் சிந்தனை மிக அவசியமாகிறது. மேலும், ஆளுமை நிலைப்பாட்டை மரபணுக்கள் உறுதி செய்வது உண்மையாகும். உடல் நலம், உளநலம், பண்புநலம், நடத்தை இவையனைத்தையும் பாதிக்கும் கூறுகளில் மரபணுக்களின் பங்கு முக்கியமானது. மனநலத்தின் மாண்பினை 'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' (குறள்:457) என்ற குறளால் உணரலாம். ஆளுமைத் திறன் உடையோன் பிறரைக் கட்டுப்படுத்தும் பலம் மிக்கவனாகத் திகழ்வான். இவனிடத்து இருக்கும் பண்பானது உயர்வுடையதாக இருக்கும் இவன் எச் செயலையும் காலம் தாழ்த்தாது செய்யக் கூடியவனாக இருப்பான். கல்வியாற்றல் மிக்கவனாகச் செயல் துணிவு மிக்கவனாக வாழ்வான். இத்தகையோன் உலகை ஆளும் பண்பு மிக்கவனாக இருப்பான் என்பதை,

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு" (குறள்:383)

என்னும் குறள் சுட்டிக் காட்டுகிறது.

## மேலாண்மைச் செய்திகள்

'நாடு' என்னும் அதிகாரத்தில் சில குறட்பாக்களில் மேலாண்மைச் செய்திகள் வருவதைக் காணலாம்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" (குறள்:737)

ஊற்றும் மழையுமாகிய இருவகை நீர் வளமும், தக்கவாறு அமைந்த மலையும் அந்த மலையிலிருந்து ஆறாக ஓடும் நீர் வளமும், வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புகளாகும்.

"பணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"
(குறள்:738)

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு" (குறள்:739)

முயற்சி செய்து தேடாமலேயே தரும் வளத்தை உடைய நாடுகளைச் சிறந்த நாடுகள் என்று கூறுவர். தேடி முயன்றால் வளம் தரும் நாடுகள் சிறந்த நாடுகள் அல்ல. இவை மேலாண்மைக்குச் சிறந்த சான்றுகளாகும்.

## செல்வத்தால் உண்டாகும் மேலாண்மை

மேலாண்மை என்பது பிறரைக் கட்டுப்படுத்தக் கூடிய பலம் அல்லது ஆதிக்கம் என்பர். இத்தகைய தன்மை பெற வேண்டுமெனில் ஒருவனுக்குச் செல்வம் என்பது மிகமிக அவசியமாகும்.

செல்வம் என்பது ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளுக்கு மேற்பட்ட செல்வம். அந்தச் செல்வம் நண்பர் களைப் பெருக்கிக் கொள்ளவும், உற்றார் உறவினர்களின் துன்பத்தைத் துடைக்கவும் பயன்பட வேண்டும் அவ் வகையில் செல்வத்தின் பயனைத் திருவள்ளுவர்,

"சுற்றத்தால் சுற்றப்பட்ட ஒழுகல் செல்வம்தான்
பெற்றதால் பெற்ற பயன்" (குறள்:524)

என்கிறார். சுற்றத்தாரால் சுற்றப்படும் படியாக அவர்களைத் தழுவி அன்பாக வாழ்தல் ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் பெற்ற பயனாகும். என்று மேற்கண்ட குறளுக்கு மு.வ உரை கூறுகின்றார்.

## முடிவுரை

மனிதன் உலகப் புகழ் அடைய நற்பண்பும், ஆளுமைத் திறனும், கல்வியிற் சிறந்தவனாக, எச்செயலிலும் ஆக்கமும், ஊக்கமும் பெற்றவனாய் வாழ்தல் வேண்டும் என்றும், உலகச் செயல்கள் அனைத்திலும் உயர்வுடையவனாக இருப்பவன் சிறந்த மேலாண்மைச் சிந்தனை உடையவனாகப் புகழ்பெற்று வாழலாம் என்றும் வள்ளுவர் தன் குறளின் வாயிலாக வலியுறுத்தியுள்ளார்.

# புனித அந்தோணியர் ஆலயத் திருவிழாக்கள்

**முனைவர் சு.மலர்விழி,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - 01.

**ஷி.ராபர்ட் டென்னிசன்,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - 01.

## முன்னுரை

ஆலயம் என்பது இறைவன் வாழும் இல்லம். மேல்உலகத்தில் இறைவனின் தரிசனமும், பூலோகத்தில் ஆலயமுமே பக்தர்களுக்கு மிகப்பெரிய இன்பத்தைத் தரக்கூடியதாகும்.

முற்காலத்தில் நாடோடியாக வாழ்ந்து வந்த மனிதன், நாகரிகம் அடைந்த பின்னர், கூட்டமாகச் சேர்ந்து வாழத் தொடங்கினான். ஒவ்வொரு கூட்டத்தினரும் தங்கி வாழ்ந்த இடங்கள் தனித்தனி ஊர்களாக அமைந்தன. ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு சிறப்புடையனவாக அமைந்தன. அவ்வகையில் அமைந்த தனித்தனி ஊர்களில் வாழ்ந்த மக்கள் ஒன்றுகூடி வழிபட அவர்கள் அமைத்ததுவே ஆலயமாகும்.

## வழிபாடு

இயற்கை பேரழிவு ஏற்படுத்தும் அச்சத்திலிருந்தும், பிணிகள் மற்றும் துன்பங்களிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இறைவனை மனிதர்கள் வணங்கத் தொடங்கினார்கள். இதனால் 'வழிபாடு' தோன்றியது.

> "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு"[1]

என வான்புகழ் வள்ளுவர், தான் எழுதியுள்ள திருக்குறளில் கூறியுள்ள வாறு, உலகத்திலுள்ள எல்லாவற்றிற்கும் இறைவன் முதலாக இருக்கின்றான். உலகத்தைக் கொண்டு அதை உண்டாக்கினவரை நாம் எண்ண வேண்டும் என்பதால், இறைவனின் உலக படைப்பு, சக்தி, ஆற்றல் என அனைத்தையும் எண்ணி மக்கள் இறைவனை வழிபடலாயினார்.

## வழிபாட்டின் தொடக்கம்

**"தனக்கு நலன் அளிக்கவும், தனக்கு வரும் தீமையை அழிக்கவும் வல்ல ஆற்றல் தனக்கு அப்பால் உள்ளது என்ற நினைவே வழிபாட்டின் தொடக்கம்"** என சுப. அறவாணன்தான் எழுதியுள்ள "மரபு வழிபாடு" நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மனிதன் தன் சக்திக்கு விஞ்சிய வற்றைக் கண்டு மலைத்தான், திடுக் கிட்டான், பயந்தான். இந்நிலை நீங்க வேண்டுமானால் இறைவனை வழிபட வேண்டும் என்று எண்ணினான். இத்தகைய இறைவழிபாடு வாழ்க்கையில் இன்றியமையாததாகும். வீடுபேறு பெறவும், பழிதீர் செல்வங்களைப் பெறவும் வழிபாடு நடைபெறுகிறது என்றால் அது மிகையாகாது.

> "தேவர் குறளும் திருநாள் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும் கோவை
> திருவா சகமும் திருமூவர் சொல்லும்
> ஒருவா சகம் என்று உணர்"[2]

என நீதிநூல்களில் நல்வழியில் ஔவையார் மூதாட்டி, வள்ளுவ தேவனாரின் திருக்குறளும், சிறப்புடைய நான்கு வேதங்கள் கூறும்

இறுதிப்பொருளும், அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவர் இயற்றிய தேவாரமும், பதஞ்சலி முனிவர் கூறிய யோக சூத்திரமும், மாணிக்க வாசகரின் திருக்கோவையார் திருவாகம் போன்றவையும், திருமூலர் பாடிய திரு மந்திரமும் பரம்பொருள் ஒன்றைப் பற்றியே எடுத்துரைக்கின்றன என்று கூறியுள்ளதற்கிணங்க கடவுளை அனைத்து மதத்தினரும் வழிபடத் தொடங்கினர்.

## வழிபாட்டின் நோக்கம்

காலையில் எழுந்தவுடன் இறைவனைத் தொழுவதால் மனிதனுக்கு நன்மைகள் கிட்டும் என்று மனிதர்கள் நம்புகின்றனர்.

**“தினசரி வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களும், துயரங்களும் அடங்கி, உள்ளத்தில் அமைதி உண்டாவதற்குப் பிரார்த்தனையை விடச் சிறந்த வேறு வழியில்லை”** என கே.கே. இராமலிங்கம் எழுதியுள்ள “பொன்மொழிக் களஞ்சியம்“ என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கடவுளை வழிபட்டு நம் வேண்டுதல்களை அவரிடம் சொல்லும் போது அதனை கடவுள் ஏற்று அதற்கேற்ற உதவி செய்வார். வழிபாடு என்பது இறைவனைச் சிறைப்படுத்த இதயம் கையில் எடுக்கும் பிரம்மாஸ்திரம் ஆகும்,

“செபம் மனசும் மனசும்
பரிமாறிக் கொள்ளும் காதல்
நீர்த்துப் போகா இதயத்தேடலின்
தொடர் தேடல்
இறைவனைச் சிறைப்படுத்த
இதயம் கையில் எடுக்கும்
பிரம்மாஸ்திரம்”[3]

என தமிழ்ப் புதுக்கவிதைகளில் கிறித்துவ விழுமியங்களில் கவிஞர் இ.இயேசு அந்தோணி கூறியுள்ளவாறு வழிபாட்டின் நோக்கத்தை உணர முடிகிறது. பக்தியை மக்களிடையே வளர்ப்பதற்கும் வழிபாடு பயன்படுகிறது.

## கிறிஸ்துமஸ் விழா

உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் சிறப்பு மிக்க பண்டிகை கிறிஸ்துமஸ் பண்டிகையாகும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் பண்டிகையாகும். உலகத்திலுள்ள மனிதர்களின் பாவங்களை மீட்க வந்த இயேசு அவதரித்த பண்டிகை. உலகம் முழுவதும் டிசம்பர் 25ஆம் தேதி இவ்விழா கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் டிசம்பர் முதலாம் தேதியே தொடங்கி விடுகிறது. ஐராவதநல்லூர் புனித அந்தோணியார் ஆலயத்திலும் கிறிஸ்துமஸ் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. கிறிஸ்துவர்கள் டிசம்பர் முதலாம் வாரத்தில் ஐவுளிக் கடைகளில் துணி எடுத்து, புத்தாடை தைக்கக் கொடுத்து விடுவார்கள். இரண்டாம் வாரத்தில் வீடுகளுக்கு முன் ஸ்டார் கட்டுவார்கள். ஒரு சில வீடுகளில் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு குடில் ஜோடனை செய்வார்கள்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கத் தெருவாரியாக மக்கள் அனைவரும் ஒன்று கூடி கிறிஸ்து பிறப்பு பாடல்களைப் பாடி ஒவ்வொருவர் இல்லத்திற்கும் சென்று இனிப்புகள் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்குவர். ஒருவர் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமிட்டு உடன் செல்வார். பாடகர் குழுவினர் வாத்தியக் கருவிகளோடு பாடிச் செல்வர்.

கிறிஸ்துமஸ் விழாவிற்கு ஒரு வாரம் முன்னதாகப் புனித அந்தோணியார் ஆலயத்தில் குடில் ஜோடனை தொடங்கி டிசம்பர் 24ஆம் தேதி காலை நிறைவுறும். ஆலயம்

அழுகுற ஜோடனை செய்யப்பட்டு ஆலயத்திற்கு முன்பு பெரிய ஸ்டார்கள் தொங்க விடப்படும்.

ஆண்டுதோறும் டிசம்பர் 24ஆம் தேதி நள்ளிரவு 11.30மணிக்கு கிறிஸ்துவின் நள்ளிரவுத் திருப்பலி நடைபெறும்.

கிறிஸ்துமஸ் விழாத் திருப்பலி நடைபெறும் போது,

"கன்னி ஈன்ற செல்வமே - இம்
மண்ணில் பிறந்த தெய்வமே
கண்ணே மணியே அமுதமே
என் பொன்னே தேனே இன்பமே
எண்ணம் மேவும் வண்ணமே
என்னைத் தேடி வந்ததேன்
ஆரிரோ ஆரிரோ"[4]

என ஆலய கீதங்களில் உள்ள கிறிஸ்து பிறப்பு பாடலையும்,

"மங்களம் மங்களம் ஜெய மங்களம்
கிறிஸ்து யேசு நாதனுக்குச் சுப மங்களம்
ஆதி இறைவனுக்கு அளவில்லா மங்களம்
மேதினியை மீட்க வந்த மைந்தனுக்கு மங்களம்
ஆவி வடிவிலான தேவனுக்கு மங்களம்
பூமியில் நிலை பெற்ற இறைவனுக்கு மங்களம்"[5]

எனப் "புதிய பெத்லகேம் குறவஞ்சி"யில் உள்ள கிறிஸ்து பிறப்பு பாடலையும் கிறிஸ்துமஸ் திருவிழா திருப்பலிக்குப் பாடுவர்.

வந்துள்ள கிறிஸ்த்தவர்கள் அனைவரும் கிறிஸ்துமஸ் விழாவினை முன்னிட்டு மகிழ்ச்சி பொங்கப் இப்பாடல்களைப் பாடுவார்கள்.

## புத்தாண்டு விழா

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்னும் முதுமொழிக்கேற்ப ஆண்டுதோறும் ஜனவரி மாதம் முதல் நாள் புனித அந்தோணியார் ஆலயத்தில் புத்தாண்டு விழா புத்துணர்ச்சியுடன் கொண்டாடப்படுகிறது. டிசம்பர் மாதம் 31ஆம் தேதி நள்ளிரவு 11:00 மணிக்கு நன்றி வழிபாடும், 11:45 மணிக்கு புத்தாண்டு திருப்பலியும் நடைபெறும்.

நள்ளிரவு 11:00 மணிக்கு நடை பெறும் நன்றி வழிபாடில்,

"நன்றியால் துதிபாடு
நம் இயேசுவை
நாவாலே என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர்"[6]

என்று ஆலயகீதங்களில் உள்ள நன்றிப் பாடலைப் பாடி மக்கள் அனைவரும் கடந்த ஆண்டு தம் குடும்பங்களுக்கு செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி சொல்வார்கள்.

நள்ளிரவு 11:45 மணிக்கு தொடங்கும் புத்தாண்டு திருப்பலியில் மக்கள் அனைவரும் திருப்பலித் தொடக்கத்தில்,

"புதிய உலகம் படைத்திடுவோம் வாருங்கள்
புதிய வாழ்வில் நிலைத்திடுவோம் வாருங்கள்
அன்பர் இயேசு தலைமையில்
அவரின் அன்புப் பாதையில்
கள்ளமில்லா உலகைப் படைப்போம் வாருங்கள்"[7]

என்று ஆலயகீதங்களில் உள்ள புதிய உலகம் படைத்திடுவோம் என்னும் பாடலைப் பாடி மகிழ்வார்கள்.

நள்ளிரவு 12:00 மணிக்கு புத்தாண்டு பிறக்கும் வேளையில் இளைஞர்கள் ஆலயத்திற்குமுன் உள்ள வளாகத்தில் ஒன்றுகூடி,

"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்
பொது உடைமைக் கொள்கை
திசையெட்டும் சேர்ப்போம்

புனிதமோ டதைளங்கள் உயிரென்று
காப்போம்"[8]

எனப் பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ள கவிதையில் கூறியுள்ளவாறு புதியதோர் உலகம் செய்வோம் என்னும் மன உறுதிப்பாட்டுடன் வெடிகளை வெடித்துப் புத்தாண்டை வரவேற்பார்கள்.

புத்தாண்டுத் திருப்பலிமுடிவில் மக்கள் அனைவரும்,

"மனிதம் மலர்ந்திட வேண்டும்
மனித மாண்புகள் உயர்ந்திட வேண்டும்
இன்றமையின் சாயலே மனிதம் மனிதம்
- அதன்
நிறைவினில் இறைமை மலருமே"9

என்று ஆலய கீதங்களில் உள்ள பாடலைப்பாடி இப்புத்தாண்டில் மனிதர்கள் மனத்தில் மனிதம் மலர்ந்திட வேண்டும். மனித மாண்புகள் உயர்ந்திட வேண்டும் என இறைவனிடம் வேண்டி வீடு திரும்புவார்கள். வீடு திரும்பும் போது ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வார்கள்.

## விபூதி புதன்

ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் மூன்றாவது அல்லது நான்காவது புதன்கிழமை விபூதிப் புதனாக அனுசரிக்கப்படுகிறது. அதற்கு முந்தையதினம் கடந்த ஆண்டு குருத் தோலை ஞாயிறு அன்று வழங்கிய குருத்தோலைகளை மக்களிடமிருந்து வாங்கி விபூதியாக்கி மறுநாள் விபூதி புதன் அன்று திருப்பலியில் குருவானவர் ஜெபம் பண்ணி மக்கள் நெற்றியில் அந்த விபூதியை பூசி விடுவார்.

விபூதி புதன் திருப்பலியில் பங்கு பெறும் மக்கள் அனைவரும்,

"மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய்
மண்ணுக்கு திரும்புவாய் மறவாதே என்றும்
மறவாதே மறவாதே மனிதனே"[10]

என ஆலய கீதங்களில் உள்ள பாடல் வரிகளில் கூறியுள்ளவாறு ஆதியில் இவ்வுலகில் முதல் மனிதனை கடவுள் மண்ணிலிருந்தே உருவாக்கினார். அவன் மரபுவழி வந்த மனித இனம் ஒரு நாள் மீண்டும் மண்ணுக்கே திரும்பி மண்ணில் புதைபடவேண்டும் என்பதை நினைவு கூர்கின்றனர்.

மேலும் விபூதிப் புதன் திருப்பலியில் பங்குபெறும் மக்கள் அனைவரும்,

"கருணை தெய்வமே கண்பாரும்
என் பாவங்களை நீர் பொறுத்தருளும்
உடலும் மனமும் அறிவும் ஒன்றுசேர்ந்து
உம்மை வெறுத்தனையா
தேவ கட்டளை வழியை மனம்
பன்முறை அறிந்தே வெறுத்தனையா
பாவச் சேற்றை வாழ்வில் எம்
வாழ்வே கொண்டு நிறைந்தனையா"[11]

என ஆலய கீதங்களில் உள்ள பாடல் வரிகளில் கூறியுள்ளவாறு கருணை தெய்வமே, எங்களை கண்பாரும். நாங்கள் செய்த பாவங்களை பொறுத்தருளும் என மனதுருக்கத்துடன் இறைவனிடம் மனம் வருந்தி வேண்டுகின்றனர். விபூதி புதன்கிழமையிலிருந்து கிறித்தவர்கள் 40 நாட்கள் தவக்காலம் அனுசரிக்கின்றனர்.

## சிலுவைப் பாதை

கிறிஸ்த்தவ மக்கள் தவக் காலத்தில் 40 நாட்களில் வெள்ளிக்கிழமை தோறும் விரதம் இருந்து அன்று மாலை 6.00 மணிக்கு ஆலயத்தில் நடைபெறும் சிலுவைப்பாதை என்னும் வழிபாட்டில் கலந்து கொள்வார்கள். சிலுவைப் பாதையில் 14 ஸ்தலங்களில் இயேசுவின் பாடுகளை நினைவு கூர்ந்து தாங்கள் செய்துள்ள பாவங்களுக்காக மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு 14 ஸ்தலங்களிலும் 14 பாடல்கள் பாடுவார்கள். சிலுவைப் பாதை

வழிபாடு நடைபெறும் போது, அதில் கலந்து கொள்ளும் மக்கள்,

"எங்குபோகிறீர் இயேசு தெய்வமே
எனக்காய் சிலுவையைச் சுமக்கும் தெய்வமே
குற்றம் எதுவும் இல்லா தேவனே
எம் குறையை தீர்க்கவே மரணம் ஏற்றீரே
பிறர் சுமத்தும் குற்றத்தைச் சுமக்க
அருள் தாரும்"[12]

என ஆலயகீதங்களில் உள்ள பாடல் வரிகளுக்கேற்ப எனக்காக என் பாவத்திற்காக சிலுவை சுமக்கும் இயேசு தெய்வமே, பிறர் என் மீது சுமத்தும் குற்றத்தை பொறுத்துக் கொள்ளும் மனத்தைத் தாரும் என மனம் வருந்தி இறைவனிடம் வேண்டுகின்றனர்.

## புனித வியாழன்

தபசு காலத்தில் ஆறாவது வாரம் புனித வியாழன் அன்று மாலை இயேசு வாழ்ந்தபோது தன்னுடைய 12 சீடர்களையும் பந்தியமரச் செய்து, உங்களுள் ஒருவன் என்னை காட்டிக் கொடுப்பான் என்று கூறி, அப்பத்தை எடுத்து தம் சீடரிடம் இதை வாங்கி உண்ணுங்கள், ஏனெனில் இது என் உடல் கிண்ணத்தை எடுத்து, இதை அனைவரும் பருகுங்கள். ஏனெனில் இது உடன்படிக்கைக்கான என் இரத்தம் என்றார்.

மேலும் தன்னுடைய 12 சீடர்களின் பாதங்களையும் இயேசு கழுவி, நான் உங்களுடைய பாதங்களை கழுவியது போல நீங்களும் பிறருடைய பாதங்களைக் கழுவுங்கள் என்றார். இந்நிகழ்ச்சியை நினைவுகூறும் வகையில் புனித வியாழன் திருப்பலி நடைபெறுகிறது. அன்று நடைபெறும் மாலைத் திருப்பலியில் 12 ஏழை ஆண்களின் பாதங்களைத் தண்ணீர் ஊற்றிக் குருவானவர் கழுவி பாதங்களையும் முத்தமிட்டு அவர்களுக்கு வேஷ்டி, துண்டு, ரொட்டிகள் வழங்குவார்.

## புனித வெள்ளி

இயேசு கிறிஸ்துவை கொல்கத்தா என்னுமிடத்தில் சிலுவையில் அறைந்த பின் வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணி; முதல் 3.00 மணி வரை அந் நாடெங்கும் இருள் உண்டாயிற்று. மாலை 3.00 மணிக்கு இயேசு, "ஏலோபி, ஏலோபி" என்று உரக்க கத்தி ஆவி துறந்தார். இயேசு இறந்த அந்த வெள்ளிக் கிழமையைக் கிறிஸ்துவர்கள் புனித நாளாக அனுசரிப்பதால் அன்றைய தினம் "புனித வெள்ளி" என அரசு விடுமுறையாக அறிவித்துள்ளது. அன்றைய தினம் கிறிஸ்த்தவர்கள் விரதம் இருந்து ஆலயத்தில் மாலை 5.00 மணியளவில் பெரிய சிலுவைப் பாதை வழிபாடில் ஜெபம் கலந்து சொல்வார்கள். அந்த சிலுவைப் பாதை வழிபாடில் மக்கள் அனைவரும்,

"ஆணி கொண்ட உன் காயங்களை நான்
அன்புடன் முத்தி செய்கின்றேன்
உந்தன் மேனி கொண்ட காயம்
எந்தன் பாவ வாழ்வின் சாபம்
இனி வாழும் காலம் மாற்றியமைப்பேன்
உறுதி கொண்டேன் தெய்வமே"[13]

என ஆலய கீதங்களில் உள்ள பாடல் வரிகளுக்கேற்ப ஆலயத்தில் உள்ள 14 ஸ்தலங்களிலும் தாங்கள் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி இறை இயேசுவிடம் வேண்டுவார்கள்.

## ஈஸ்டர் பெருவிழா

தபசு காலத்தின் ஆறாவது வாரம் இறுதி நாள் ஞாயிறு அன்று இயேசு இறந்த மூன்றாம் நாள் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்ததை நினைவு கூறும் வகையில் ஈஸ்டர் பெருவிழா கொண்டாடப்படுகிறது, முந்தைய நாள் சனி நள்ளிரவு 11.00 மணிக்கு சிறப்பு வழிபாடும் 12.00 மணிக்கு பெருவிழாத் திருப்பலியும் ஆலயத்தில் நடைபெறும். இத்திருப்பலி முடிவில் மக்கள்

அனைவரும்,

"உயிர்த்தார் கிறிஸ்து உயிர்த்தார் - இந்த
உலகையே உய்த்து விட்டார்
வென்றார் கிறிஸ்து வென்றார் - இன்று
அலகையே வென்று விட்டார்
ஆர்ப்பரிப்போமே ஆனந்திப்போமே
அல்லேலூயா பாடுவோம்"14

என்று ஆலய கீதத்தில் உள்ள இப் பாடலைப் பாடி மகிழ்வார்கள்.

## முடிவுரை :

ஆலயங்கள் மக்களுக்கு ஏற்படும் துன்பங்கள் ஆபத்துகள், ஏமாற்றம், கவலை என வாழ்வின் அனைத்து நிலைகளிலும் நம்பிக்கை ஊட்டுவதோடு, பொதுவாக மனித குலத்திற்கு நல்லதை நல்கும் பாங்குடையதாகத் திகழ்கிறது. பாவம் நீங்கி நன்மை செய்து நற்கதி அடைய மனமாற்றம் நல்கும் கடவுளின் இல்லமாக இவை விளங்குகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. *குறள் கு.எ. 1, ப.11*
2. *கீர்த்தி, நீதிநூல்கள், நல்வழி, பா.எ. 40, ப.162*
3. *சி. மணிவளன், தமிழ் புதுக் கவிதைகளில் கிறித்துவ விழுமியங்கள் ப.84*
4. *அந்தோணி பாப்புசாமி, ஆலய கீதங்கள், பா.எ. 685, ப.381*
5. *சி. மணிவளன், புதிய பெத்லகேம் குறவஞ்சி, ப.25*
6. *அந்தோணி பாப்புசாமி, ஆலய கீதங்கள், பா.எ. 457, ப.257*
7. *மேலது, பா.எ. 70, ப.39*
8. *வீ.வீ.கே. சுப்புராசு, பாரதிதாசன் கவிதைகள், பா.எ. 58, ப.131*
9. *அந்தோணி பாப்புசாமி, ஆலய கீதங்கள், பா.எ. 416, ப.233*
10. *மேலது, பா.எ. 712, ப.395*
11. *மேலது, பா.எ. 710, ப.394*
12. *மேலது, பா.எ. 737, ப.409*
13. *மேலது, பா.எ. 733, ப.407*
14. *மேலது, பா.எ. 741, ப.416*

# சங்க இலக்கியத்தில் கொல்லரின் தொழில் முறைகள்

**முனைவர் ஜெ.ராஜசெல்வி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
காமராஜ் கல்லூரி,
தூத்துக்குடி.

## முன்னுரை:

பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் கூறுகளை அறிய அவர்கள் வாழ்ந்த காலத்தில் காணப்படும் இலக்கியங்கள், கல்வெட்டுகள், ஓவியங்கள், நாணயங்கள், சிற்பங்கள் போன்றவை துணைபுரிகின்றன. அவற்றுள் முதன்மையாகத் திகழ்வது இலக்கியங்கள். தமிழில் தோன்றிய சங்க இலக்கியங்கள் தனிச்சிறப்புடையன. இவ் விலக்கியங்கள் மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டவை.

இலக்கியம் என்பது சமுதாய அமைப்பின் பிரதிபலிப்பு. வாழ்வியல் கூறுகள் என்பது அகம், புறம் என இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. அகத்தில் இல்லற ஒழுக்கங்கள் கூறப்படுகின்றன. புறத்தில் அகம் அல்லாத பிற செய்திகள் கூறப்படு கின்றன. புற வாழ்வியலில் வீரம், கொடை, தொழில், மனிதநேயம், அறம் போன்றவை காணப்படுகின்றன. அவற்றுள் தொழில்கள் மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. சங்க காலப் பொருளியல் வாழ்வில் கொல்லர்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். அக்கொல்லர் தொழில்களைப் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## கொல்லர் வகையினர்

சங்க காலத்தில் பல்வேறு உலோகங்கள் காணப்பட்டன. அனைத்திற்கும் பொன் எனும் பொதுப் பெயர் வழங்கப் பட்டது. இரும்பு, பொன், செம்பு, வெள்ளி, வெண்கலம் போன்ற உலோகங்களை உருக்கி மக்களுக்குத் தேவையான பயன்பாட்டு பொருளைச் செய்பவர்கள் கொல்லர்கள் எனப்பட்டனர். கொல்லர்கள் கம்மியர் என்றும் அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு உலோகத்தினைக் கொண்டும் கொல்லர்கள் அழைக்கப்பட்டனர்.

உலோகம் – கொல்லர் பெயர்

இரும்பு – இரும்புக்கொல்லர்

பொன் – பொன் செய் கொல்லர்

செம்பு – செம்பு செய் கம்மியர், செம்புக் கொட்டிகள்

வெண்கலம் – கஞ்சக்காரர்

எனப் பல வகைப் பெயர்கள் காணப் பட்டாலும் கொல்லர் எனும் பொதுப் பெயரே வழக்கிலிருந்தது.

## கொல்லரின் கடமை

சங்கத்தமிழர் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே எனப் போர்முனையில் நின்று போர் புரிவதனைப் பெருமிதமாகக் கருதினர். அத்தகைய போருக்குத் தேவையான வில், வாள், ஈட்டி போன்ற போர்க்கருவிகளை

வடிவமைத்து கொடுப்பவர் இரும்பு செய் கொல்லர் ஆவார்.

"வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே "[1] (புறம்-312)

என வரும் பாடல் வரிகள் போர்க் கருவி களைச் செய்து கொடுப்பது கொல்லரின் கடமை என்பதை உணர்த்துகிறது. போர்க்கருவிகள் மட்டுமின்றி மக்களுக்குப் பயன்படும் பொருட்களையும் கொல்லர்கள் செய்து கொடுத்தனர். குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுவதற்கும், தானியங்களை அறுவடை செய்வதற்கும், மரம் வெட்டு வதற்கும், வில், வேல், அம்பு, அரிவாள், கோடாரி போன்ற கருவிகளைப் பயன்படுத்தினர்.

"கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின் நிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவு
தொறும்"[2] (புறம்-36)

என்ற பாடலடிகள் கோடாரி கொல்லர் களால் செய்யப்பட்டதைக் கூறுகின்றன.

## ஏழு ஊருக்கு ஓர் கொட்டில்

கொல்லர்கள் போர்க்கருவிகளோடு பழுதான கருவிகளைச் செப்பனிடுதல், மழுங்கிய கருவிகளைக் கூர்மையாக்குதல் போன்ற தொழில்களையும் செய்துள் ளனர். ஏழு ஊர்களில் உள்ள மக்களுக்குத் தேவையான பொருளைச் செய்ய கொல்லுத்தொழில் கொட்டில் இருந்தள்ளது.

"ஏழுர்ப் பொதுவினைக்கு ஓர்ஊர் யாத்த
உலை வாங்கு மிதிதோல்"[3] (குறு-172)

என்ற பாடல் வரிகள் கொல்லரின் உலைத் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்த்து கிறது.

## இரும்புக்கொல்லர்:

இரும்புசெய் கொல்லர் கருங்கைக் கொல்லர், கருங்கை வினைஞர், வேல் வடிப்பான் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர். கொல்லன் உலைக்களத்தில் தீ மூட்டும் போது கரியை எடுத்து உலையிலே போடுவதானாலும், வெப்பத்தின் காரணமாகவும் கொல்லரின் கைகள் கரிய நிறமுடையதாக இருந்தன, இரும்பைக் காய்ச்சிச் சம்மட்டியால் ஓங்கி அடிப்பதானாலும் கொல்லரின் கைகள் உரம் ஏறிச் சுரசுரப்பாகக் காணப்பட்டன. இதனால் இவர்கள் 'கருங்கைக் கொல்லர்' எனப்பட்டனர்.

"நசைவர்க்கு மென்மை அல்லது பகைவர்க்கு
இரும்பயன் படுக்குங் கருங்கைக்
கொல்லன்"[4] (புறம்-170)

என வரும் பாடிலடிகளால் இரும்புக் கொல்லரைக் கருங்கைக் கொல்லர் என்று அழைக்கப்பட்டதனை அறிய முடிகிறது.

"இரும்பு வடித்தன்ன மடியாமென் தோற்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்"[5]
(பெ.பா.ஆ 222-223)

என்ற பாடல்வரிகள் இரும்புக் கொல்லரைக் கருங்கை வினைஞர் என்று குறிப்பிடு கிறது.

"கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின்
எனவே"[6] (புறம் -180)

என வரும் பாடல்வரிகள் இரும்புக் கொல்லரை வேல் வடிப்பவன் என்றும் கூறுவதனைக் காணமுடிகிறது.

## உலைக்களம்

கொல்லர் தொழில் புரியும் இடம் உலைக்களம் எனப்பட்டது. இவ்வுலைக்களத்திலுள்ள துருத்தி, குறடு, உலைமூக்கு, கரி, சம்மட்டி, உலைக்கல், அரம் போன்ற கருவிகள் இரும்புப்பொருட்கள் செய்வதற்குப் பயன்பட்டன. உலைக்களம் பூமிக்கு

அடியில் அமைக்கப்பட்டது. உலைக் களத்தைக் குறிக்கக் 'கொற்றுறை' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டது.

"பகைவர்க்கு கோடுநுனி சிதைந்து
கொற்றுறைக் குற்றிய மாதோ
வென்றும்"[7] (புறம் -95)

என்ற புறநானூற்றுப் பாடல்வரியால் கொல்லன் உலைக்களம் கொற்றுறை என அழைக்கப்பட்டதனை அறியமுடிகிறது.

## பொன் செய் கொல்லர்:

பொன்னை உருக்கி அணிகலன் களையும் உண்கலன்களையும்; செய்பவர்கள் பொற்கொல்லர்கள் எனப் பட்டனர். காதணி, கையணி, இடையணி, தலையணி, ஆரம் எனப் பல அணிகலன்களைக் கலை நயத்துடன் செய்தனர். பொற்கொல்லர் அணி கலன்களைச் செய்ய 'அரம்' என்ற கருவியைப் பயன்படுத்தினர்.

"அரம் போழ்ந் தறுந்த கண்நேர்
இலங்குவளை"[8] (ம.கா -316)

எனும் பாடலடி அரம் எனும் கருவியைப் பயன்படுத்தி அணிகலன் செய்ததனைக் கூறுகிறது.

"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானே அரசன் யானே கள்வன்"[9]
(சிலம்பு -வழக் காதை 74-75)

எனச் சிலம்பு பொன்செய் கொல்லனைப் பாடுவதனைக் காணமுடிகிறது.

## பொன்னணி இழைதல்

அணிகலனின் பகுதிகளைத் தனித் தனியாகச் செய்து பின் பொடி ஊதிப் பற்ற வைப்பர். பற்ற வைத்த இடம் நிறத்தால் மாற்றமடையும். அம் மாற்றத்தைப் போக்கி அணிகலனை ஒரே நிறமுடையதாக மாற்ற ஊது உலை யிலிருந்து எடுத்த அணிகலனில் நீரை ஊற்றி ஒரே நிறமுடையதாக மாற்றுவர்.

"காலவை சுடு பொன் வளைஇய ஈர்
அமை சுற்றொடு
பொடி இழற் புறம் தந்த செய்வுறு கிண்கிணி
உடுத்தவை கைவினைப் பொலிந்த காசு
அமைபொலங்காழ்"[10] (கலி-85)

என்னும் பாடலடிகளில் அணிகலன் செய்முறை விளக்கப்படுகிறது.

"மாண உருக்கி நன்பொன்தணி உறீஇ"[11]
(கலி -117)

பொன்னில் மணிகளைப் பதித்தும் அணிகலன்களைச் செய்துள்ளனர்.

"கருங்கால் வேங்கை நாள் உறு புதுப்பூ
பொன்செய் கம்மியன் கைவினை
கடுப்ப"[12] (நற் - 25)

என்னும்பாடலடிகள்பொற்கொல்லரைப் பொன்செய் கம்மியன் என்று குறிப்பிடு கின்றன.

## பொன்–தரம் ஆராய்தல்

சங்க காலத் தமிழர் பொன்னின் தரம் அறியும் திறனைப் பெற்றிருந்தினர். பொன்னின் தரம் அறிவதற்கு உரைக் கல்லைப் பயன்படுத்தினர். பொன்னின் தரமறிபவர்கள் பொலந்தெரி மாக்கள் என்று அழைக்கப்பட்டனர்.

"நறுந்தாது ஆடிய தும்பி பசுங்கேழ்ப்
பொன்னுரை கல்லின் நல்நிறம்
பெறூஉம்"[13] (நற் - 25)

என்ற பாடல் உரைக்கல்லின் மூலம் பொன்னின் தரம் ஆராயப்பட்டதைக் கூறுகிறது.

"பொலந்தெரி மாக்கள் கலங்கஞ்
ரொழித்தாங்கு"[14](சிலம்பு ஊர்காண்
கா-203)

என வரும் பாடலடி பொற்க் கொல்லர்க்குப் பொலந்தெரி மாக்கள் என்ற பெயர் வழங்கப்பட்டதைக் கூறுகிறது.

## செம்புக் கம்மியர்

இரும்பு, பொன் ஆகிய உலோகங் களைக் கொண்டு பொருட்கள் செய்யும்

கொல்லர்கள் இருந்ததைப் போல செம்பு வெண்கலம் முதலிய உலோகங் களை உருக்கிப் பயன்பாட்டுப் பொருட் கள் செய்பவர்களும் இருந்தனர். வெண் கலத்தை உருக்கிக் கலன் செய்பவர் 'கஞ்சக்காரர்' என்றும் செம்பினால் கலன் செய்பவர் 'செம்புக்கொட்டி' என்றும் அழைக்கப்பட்டனர்.

" --- - - - - - -- --கம்மியர்
செம்பு சொரி பானையின் மின்னி"[15]
(நற் - 153)

எனச் செம்பினால் பானை செய்ததனைக் கூறுகிறது.

## உண்கலன்

சங்க காலத்தில் உணவு உண்ணு வதற்குக் கலங்கள் பயன்படுத்தப்பட்டன. மட்கலங்கள் மட்டுமின்றிப்பொன், வெள்ளி (வெண்பொன்) போன்ற கலங் களும் பயன்படுத்தப்பட்டன.

"விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டித்"[16]
(சி.பாண் 244-245)

எனச் சிறுப்பாணாற்றுப்படை பொற்கலனில் உணவு உண்டதைக் குறிப்பிடுகிறது.

உணவு மட்டுமின்றி நீர்மப்பொருட் களையும் பொற்கலனில் ஊற்றிப் பருகி யுள்ளனர்.

"யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகரத்து ஏந்தி நாளும்"[17]
(புறம் -56)

என்ற அடிகள் பொன்னால் செய்யப் பட்ட கலனில் கள் ஊற்றிக் குடித்தனைக் குறிப்பிடுகின்றன.

## முடிவுரை

சங்க காலத்தில் பல்வேறு வகையான தொழில்கள் காணப் பட்டன. ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு சிறப்பினைப் பெற்றிருந்தது. கொல்லர் தொழில் மக்களின் புற வாழ்வில் பெரும்பங்கு வகித்தது. கொல்லரால் செய்யப்பட்ட போர்க் கருவிகள் அரசர்களின் வெற்றிக்குத் துணைப்புரிந்தன.

கொல்லர்கள் அரசர்களால் பெரிதும் மதிக்கப்பட்டனர். மக்களின் அன்றாட வாழ்வில் பயன்படும் பயன்பாட்டுப் பொருட்களும் கொல்லரால் செய்யப்பட்டன. வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லரின் கடமையாக இருந்தது. அதனால் கொல்லரின் வாழ்வியல் சிறப்பான தாகக் காணப்பட்டது. பிற கொல்லரைக் காட்டிலும் பொன்செய் கொல்லர்கள் மக்களிடம் பெரும் மதிப்பினைப் பெற்றிருந்தனர்.

## தொகுப்புரை

உலோலங்களைக் கொண்டு தேவையான பொருட்கள் செய்பவர்கள் கொல்லர் எனும் பொதுப்பெயரால் அழைக்கப்பட்டுள்ளனர். இரும்பு, பொன், செம்பு, வெண்கலம் என வெவ்வேறு உலேகத்தைப் பயன்படுத்திப் பொருட்கள் செய்தவர்களுக்கு அவ்வுலோகத்தால் சிறப்புப் பெயர்கள் காணப்படுகின்றன. இரும்புக் கொல்லரின் கடமை போர்க்கருவிகள் செய்தல் என்பதனை அறிய முடிகிறது. கொல்லர் உலைக்களத்தில் பயன்படுத்தியுள்ள கருவிகளின் பெயர்கள் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. கொல்லரின் கைகள் வலிமை மிக்கவையாகக் காணப்பட்டன. பொற்கொல்லர் பொன்னை உருக்கி அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய அணிகலன்களைச் செய்துள்ளனர். உரைக்கல்லின் மூலம் பொன்னின் தரம் கணிக்கப்பட்டது. செம்பை உருக்கிப் பொருட்கள் செய்தவர்கள் கம்மியர் என்றழைக்கப்பட்டனர். இரும்பு, பொன், வெள்ளி போன்ற உண் கலன்களின் பயன்பாடும் மக்களிடம் அதிகமாகக்

காணப்பட்டமையை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

## அடிக்குறிப்பு:

1. புறநானூறு (புலியூர்கேசிகன்) பா.எண் – 31 அய்யனார் பதிப்பகம், காரனை புதுச்சேரி, கூடுவாஞ்சேரி –2016
2. மேலது., பா.எண் –36
3. குறுந்தொகை (புலியூர்கேசிகன்) பா.எண் –17 ஜீவா பதிப்பகம், சென்னை – 2017
4. புறம் பா.எண் –170 அய்யனார் பதிப்பகம், காரனை புதுச்சேரி, கூடுவாஞ்சேரி – 2016
5. பெரும்பாணாற்றுப்படை அ.எண் –222–223 பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற்பகுதி) உ.ஆ வி.நாகராசன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
6. புறநானூறு பா.எண் –180 அய்யனார் பதிப்பகம் காரனை, புதுச்சேரி – 2016
7. மேலது., பா.எண் –95
8. மதுரைக்காஞ்சி அ.எண் 316 பத்துப் பாட்டு மூலமும் உரையும் (இரண்டாம் பகுதி) ) உ.ஆ வி.நாகராசன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
9. சிலப்பதிகாரம் வழக்குரைக்காதை அ.எண்–74–75 உ.ஆ மாணிக்க வாசகன், உமா பதிப்பகம், சென்னை.
10. கலித்தொகை (புலியூர்கேசிகன்) பா.எண் – 85 திருமலா பப்ளி கேஷன்ஸ், சென்னை, மு.ப. – 2017
11. மேலது, பா.எண் –117
12. நற்றிணை (வேங்கடராமன் ப.ஆ) பா.எண் –25, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 2004
13. மேலது, பா.எண் –25.
14. சிலம்பு ஊர் காண் காதை அ.எண் ––203 உ.ஆ மாணிக்க வாசகன், உமா பதிப்பகம், சென்னை.
15. நற்றிணை பா.எண் –153 நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
16. சிறுபாண்ணாற்றுப்படை அ.எண் –243–244 பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற்பகுதி) (உ.ஆ ) இரா.மோகன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
17. புறநானூறு பா.எண் – 56, ஜீவா பதிப்பகம், சென்னை– 2016..

# கி.ராஜநாராயணின் படைப்புகளில் பண்பாட்டுப் பதிவுகள்

**முனைவர் சு.மலர்விழி,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை - 01.

**ப.ராஜலெட்சுமி,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - 01.

## முன்னுரை

கோவில்பட்டி வட்டார மக்களின் வாழ்வியலைத் தனது கதைகளில் பதிவு செய்தவர் கரிசல் இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படும் கி.ராஜ நாராயணன் ஆவார். இவரை இனக்குழு அழகியலின் முன்னோடி என்று அழைப்பர். மனிதனின் உணவு உடை மற்றும் உறைவிடம் இவற்றின் அடிப்படையில் பண்பாடு அமைகிறது. மக்களின் வாழ்க்கையானது பல்வேறு நம்பிக்கைகள், சமயச் சடங்குகள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு இயங்குகிறது. இவை அனைத்தும் பண்பாட்டுக் கூறுகளாக உள்ளன. கி.ராஜ நாராயணன் படைப்புகளில் கரிசல் இன மக்களின் பண்பாட்டுப் பதிவுகள் அதிகமாக காணப்படுகிறது. அவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## கரிசல் பண்பாடு

கரிசல் மக்களின் வாழ்க்கையை அடிப்படையாக கொண்டு இலக்கியம் படைத்திருக்கும் கி.ராஜநாராயணன் எழுத்துக்களில் கரிசல் பகுதி மக்களே இடம் பெறுகிறார்கள். மனிதர்களின் வாழ்வில் முக்கியமானது எது என்பது பற்றிய எண்ணங்களுக்கு வெவ்வேறு நேரங்களில் மக்கள் நடந்து கொள்ளும் முறையும் பண்பாட்டு கூறுகளும் வெளிப்படுத்துகின்றன. சமூக அமைப்பின் அடித்தளத்தின் வழியாக பண்பாடு உருவாக்கம் பெறுகின்றது. இதனை காந்தி என்பவர் பண்பாடு என்பது அகவளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. ஒரு சமுதாயத்தில் உள்ள மக்களின் வாழ்க்கை முறையினை பண்பாடு என்பர் (தமிழர் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் பக் – 1) எனப் பதிவு செய்துள்ளனர். “பண்படுவது பண்பாடு பண்படுதல், சீர்படுதல் அல்லது திருத்துதல், திருந்திய நிலத்தைப் தமிழைப் “பண்பட்ட செந்தமிழ்” (தனிப்பாடல்) என்றும் திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்“(பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும் பக் – 13) என மிக விளக்கமாக பண்பாடு குறித்து மொழி ஞாயிறு தேவநேய பாவாணர் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள குறிப்பிட்ட கூறுகள் பிறருக்கு அடையாளம் காட்டுகின்றன. இவை எல்லாம் சமூகத்தின் உணவு முறை, ஆடை, சமயம், அலங்காரம், பழக்கவழக்கங்களில் வெளிப்படுகின்றன. முக்கியமாக, தமிழர்கள் ஆடை அணியும் முறை, அலங்காரம் மற்ற சமூகத்தினர் மதிக்கும் வகையில் காணப்படுகிறது.

## தெய்வ வழிபாடு

அந்த அம்மாளின் மகள் பேர் துளசி, ஒரே மகள் பிறக்கும் போதே அவளுக்குத் தலைமுடி கொடுக்காப்புளி

பிஞ்சுகள் மாதிரி சுருள் சுருளாய் இருக்குமாம். அந்தக் குழந்தைக்கும் முடி மீது அவ்வளவு பிரியமாம். கூந்தலை முடிக்காமல் அவிழ்ந்து கிடந்தாலும் ஒரு அழகு அது காற்றில் விலகி பாதி முகத்தை மூடினால் அது ஒரு அழகு எத்தனை வகை வகையாகத்தான் முடிந்து முடிந்து பார்க்கிறது முடிந்தாலும் அழகு, முடிப்புக் கலைந்தாலும் அழகு, அவள் நின்றால் கூந்தல் தலையில் விழும். குதிங்கால் அளவு போக மீதியைப் பல தடவ நாங்கள் கத்தரித்து விட்டு விடுவோம். அது கூட அவளுக்குப் பொறுக்காது! அவளைக் குளிப்பாட்டி விடுகிறது. குடும்பத்தோடு ஒரு வேலை உயரமும் நீளமுமாக உள்ள கண்விட்டுக் கட்டிய பனைநார்க் கட்டிலின் நீளக் கோடியில் அவள் உட்கார்ந்து கொள்வாள். கட்டிலின் நீளத்தில் நிறைகூந்தல் அலைபுரளும். தேங்காய் நெய்யினால் கூந்தலைத் தடவுவது ஒரு பாடு. சீயக்காயைக் கொதிக்க வைத்து வடிகட்டிய நீரினால் தேய்த்து, சுத்தமான நல்ல தண்ணீரை ஆறவைத்து நகவெதும்பலில் ஊற்றி அலசுவது ஒரு பாடு. ஒரு நாள் வழக்கமாக அவள் குளித்து முடித்து கட்டிலில் உட்கார்ந்து தலையை சிக்கெடுத்துக் கொண்டிருந்தாள். தெருவில் திடீரென்று நாய்கள் குலைக்கிற சத்தம் கேட்டது. புழக்கடைத் தோட்டத்தின் வழியாக ஏழெட்டுப் பேர், உயரமான குதிரைகள் மேல் சவாரி செய்த படியே நாங்கள் குளிக்கும் இடத்துக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் துலுக்கர்கள் என்று கண்டதும் வீட்டுக்குள் ஓடத் தொடங்கினேன். துளசியால் ஓட முடியவில்லை. அவர்கள் கையில் சிக்காமல் இருக்க மறுக்கி ஓடும்போது அவளுடைய கூந்தலே அவளுக்கு வினையாக கால்களில் சிக்கித் தடுமாறிவிழுந்து விட்டாள். நாங்கள் வீட்டுக்குள் நுழைந்தவர்கள் அவளைக் காப்பாற்ற திரும்பி அந்த இடத்துக்கு வந்தோம். அப்போது அம்மாள் மேலே சொல்ல முடியாமல் கஷ்டப்பாட்டாள். அவளுடைய உதடு கோணி மூக்கடித்துடித்து கண்கள் கொப்பளித்தது. அப்போது அவள் என் மகள் துளசி பதிவிரதா தெய்வங்களின் பெயர்களைப் பலக்கச் சொல்லிக் கூப்பிட்டாள் நாள்களும் எங்களை அறியாமல் அவள் சொன்ன பெயர்களை உரக்கச் சொன்னோம். அப்போது ஒரு அதிசயம் கண்மூடித் திறப்பதற்குள் நடந்து முடிந்து விட்டது. தடுமாறிக் கீழே விழுந்த புண்யவதி துளியின் கூந்தலை அந்தச் சண்டாளன் பிடித்துக் கொண்டான். அப்போது அந்த இடத்தில் பூமி பிளந்து அவளைத் தன்னுள் வாங்கிக் கொண்டு அதே வேகத்தில் மூடிக்கொண்டது. இதைக் கண்ட துலுக்கர்கள் நடுங்கினார்கள். கூந்தலைப் பிடித்தவன் அப்படியே தன் கையோடு பிய்த்து வந்த கூந்தலை உதறிவிட்டு எல்லோருமே குதிரைகள் மேல் ஏறி ஓடித் தப்பிவிட்டார்கள் அந்த இடத்தில் தலையில் நீளமாக ஒரு விரிவு மட்டும் தெரிந்தது. அதில் வாயை வைத்து துளசி அம்மா எங்கள் தாயே என்று கத்தினோம். மண்ணில் காதுகளை ஒட்ட வைத்துக் கேட்டோம். திரும்பத் திரும்ப அவள் பெயர் சொல்லி அம்மாள் சொன்னாள். எங்கே வருவாள் துளசி? பூமாதேவி அவளை அழைத்துக் கொண்டாள். அவள் தெய்வமாகிவிட்டாள். அந்த துலுக்கன் கையிலிருந்து உதறி எறிந்து விட்டுப் போன கூந்தலும், அவள் மறைந்த இடத்தலிருந்து எடுத்த பிடிமண்ணும் பெட்டியில் வைத்து துளசியை அன்றிலிருந்து தெய்வமாக வழிபட்டனர்.

## உணவு முறை

பூமியில் சில இடங்களைத் தோண்டும் போது மண் மணம் கமழும் பருத்த கோரைக் கிழங்குகள்

தின்பதற்குக் கிடைக்கும். உண்பதற்கு வளமான காட்டு கீரைவகைகள் அவர்களுக்கு ஏராளமாகக் கிடைத்து வந்தன. அவர்கள் தங்களிடம் மீதமுள்ள நவதானியங்களைச் சமைத்து உண்டு விடாமல் பத்திரப் படுத்தி வைத்திருந்தார்கள் பலநாள் பயணவழி சுமந்து நம்பிக்கோடு கொண்டு வந்த தானிய மணிகளை உண்ணாமல் மண்ணில் விதைப்பதற்குப் பத்திரப் படுத்திக் கொண்டு இந்த மாதிரியான உணவுகளையே உண்டு வாழ்ந்தார்கள்.

ஒரு பள்ளத்திலுள்ள தண்ணீர் குடிப்பதற்கு அமிர்தமாக இருந்தது. மண் கலந்த அந்த தண்ணீர் அவர்களுக்கு ஒரு வேளைப் பசியைத் தாங்கும் சக்தியையும் தெம்பையும் கொடுக்கும்.

உணவுக்காக பறவைகளையும் பிராணிகளையும்வேட்டையாடினார்கள் கள்ளிப் புதருக்குள் எங்கே கண்டாலும் ஏராளமான தேன் தட்டுகள் காணப் பட்டன. இதனால் அவர்களுக்கு சட்டி சட்டியாகத் தேன் கிடைத்தது. தீயில் பக்குவமாக வாட்டப்பட்ட மாமிசத் துண்டுகளை தேனில் தோய்த்து உண்டார்கள்.

## மருத்துவம்

சோற்றுக் கற்றாழையை உரித்து தண்ணீரில் அலசி அதன் கசப்பை நீக்கி உண்டார்கள். இது திவ்யமான உணவு வயிற்றிலுள்ள சகல நோய்களையும் போக்கக் கூடியதாக இருந்து வந்தது.

கொழுத்த சாலைப்பாம்பின் தோலை உரித்து அதன் கொழுப்பை எடுத்துக் காய்ச்சி "பாம்பு நெய்" தயாரித்து வைத்துக் கொள்வார்கள் மருந்துக்கு.

முள்ளெலிகளைப் பிடித்து அதன் சதைகளை எடுத்து வாட்டி உப்பிட்டு குழந்தைகளுக்குக் கொடுத்துவிட்டு அதன் முட்கள் நிறைந்த தோலை நிழலில் காயவைத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொள்வார்கள். குழந்தைகளின் குன் இருமலுக்கு மருந்தாகக் கொடுப் பார்கள்.

முயல்களை அறுக்கும் போது அதன் இரத்தத்தைப் பெண்கள் பழைய துணிகளில் படிய வைத்துக் கொள் வார்கள் அதைத் தலையில் தோய்த்துக் குளித்தால் கூந்தல் அடர்த்தியாகவும் நீளமாகவும் வளரும் என்று சொல்வார்கள்.

## அணிகலன்

நாகார்ஜுன மலையில் வீரம் நிறைந்த ஒரு ராட்சதப் பெண் இருந்தாளாம். அவளை அடக்க யாராலும் முடியவில்லையாம். அழகும் வீரமும் கொண்ட ஒரு பிராமணன் அவளை அடக்கி அவளுடைய மூக்கில் தொறட்டியைப் போட்டு அவளை இழுத்துக் கொண்டு வந்ததால் அந்தத் தொறட்டியையே அவள் ஆபரணமாக விரும்பிப் போட்டுக் கொண்டாளாம். ஆகவே தான் அவர்களுடைய சந்ததியாராகிய நமது பெண்டுகள் இன்றும் மூக்கில் தொறட்டி என்ற ஆபரணத்தை அணிந்து கொண்டி ருக்கிறோம் என்கிறார்கள்.

கம்மவார் என்ற பெயர் வந்ததற்கான காரணம் காது வளர்த்து வளையம் போன்ற 'கம்ம' என்ற காது ஆபரணத்தை இந்தப் பெண்கள் அணிந்து கொள்வதால் இப்பெயர் வந்தது என்று கூறுகின்றனர்.

## சடங்கு முறைகள்

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சடங்குகள் மனிதன் உறவுகளை இணைக்கும் கருவியாகக் கூட காணப்படுகின்றன. மக்கள் தங்கள் வாழ்வியல் மற்றும் பொருளாதார தேவைகள் இரண்டையும் சரி செய்ய கடவுளைத் தேடுகின்றனர்.

## திருமணச் சடங்குகள்

அதிகளவிலாக மேற்கொள்ளப் படும் சடங்குமுறை திருமணச் சடங்கு முறைகள் ஆகும். திருமணச் சடங்கு முறைகளாகப் பெண்பார்த்தல், பூவைத்தல் பரிசம் போடுதல், விளை யாட்டுகள். மாப்பிள்ளை விருந்து, சாந்தி முகூர்த்தம். ஆடி மாதத்தில் புதுமணத் தம்பதியினரைப் பிரித்து வைத்தல் மாறுபட்ட திருமண சடங்கு போன்றவை முக்கியம் ஆகும். இவை அனைத்தும் நேர்த்தியாக பின்பற்றப்படுகின்றன.

## நம்பிக்கைகள்: பூப்போட்டுப் பார்த்தல்

மனிதர்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது தாம் நடத்தப் போகும் காரியத்திற்கு உத்தரவு தருதல் பொருட்டு பூப்போட்டு பார்க்கும் வழக்கம் இன்று காணப்படுகிறது. 'கோபல்ல கிராமம்' புதினத்தில் மங்கத் தாயாக கூறும் கதையில் சென்னா தேவியை பெண் கேட்டு வந்திருக்கும் துலுக்கர்களிடம் இருந்து தப்பித்துச் செல்ல முடிவெடுக்கிறார்கள். சென்னா தேவியின் பாட்டி பூஜையறைக்குச் சென்று திருப்பதி மலை இருக்கும் திசையை நோக்கி திருமாலை நினைத்துப் பூப்போட்டு பார்க்கிறார்கள் அதன் மூலம் முடிவெடுப்பதைக் காணமுடிகிறது. குடும்பத்தார் எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்க பாட்டி குத்து விளக்கைப் பிரகாசமாகத் தூண்டினாள், திருப்பதி மலை இருக்கும் திசையை நோக்கி ஓ ஏடு கொண்டலவாடா ஸ்ரீனிவாச மூர்த்தி என்று உரக்கச் சொல்லி பூமியில் விழுந்து நமஸ்கரித்தாள். எழுந்திருந்து இரண்டு வெற்றிலையை எடுத்து ஒன்றில் செவ்வரளிப் பூவையும் இன்னொரு இலையில் பிச்சிப்பூவையும் திருந்துளாயையும் வைத்து கட்டி குலுக்குஜீட் போட்டாள். மங்கத்தாயாரு என்று பெயர் சொல்லி பாட்டி என்னை அழைத்தாள் நான் போய் விளக்கு நாச்சியாரை விழுந்து கும்பிட்டு அதில் ஒன்றை எடுத்துப் பாட்டியிடம் கொடுத்தேன். பாட்டி அதைப் பிரிப்பதை எல்லோரும் ஆவலோடு பார்த்தோம். பிரித்த வெற்றிலையில் பிச்சிப்பூவும் திருந்துளாவும் இருந்தது. பகவானே நீ என்ன நெனச்சிருக்கே என்பது உனக்குத்தான் தெரியும். எங்களுக்கு ஒன்னும் தெரியலேயே அப்பா என்று பாட்டி அழுது கொண்டே அதைத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டு பெரியப்பாவிடம் கொடுத்தாள். என்று பூப்போட்டுப் பார்த்து அதன் மூலம் தீர்மானித்தலைப் பற்றிக் கூறப்படுகிறது.

## முடிவுரை

கரிசல் நில மக்களின் பண்பாடு தனித்துவம் வாய்ந்ததாக இருந்தது. கரிசல் மக்களின் பண்பாடு, தெய்வ வழிபாடு, உணவுமுறை, மருத்துவம், அணிகலன், சடங்கு முறைகள். திருமணச் சடங்கு முறைகள், நம்பிக்கை பூப்போட்டு பார்த்தல் ஆகியவை கி.ராவின் படைப்புகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## துணை நூற்பட்டியல்

1. கோபல்ல கிராமம் (கி.ராஜ நாராயணன்) காலச்சுவடு கிளாசிக் வரிசை.
2. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் (1980) சு.காந்தி உலக தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை.
3. பண்டைத் தமிழ் நாகரிகமும் பண் பாடும் – செண்பகா பதிப்பகம், தேவநேயப் பாவாணர், சென்னை.
4. தமிழக வரலாறும் பண்பாடும் – வே.தி. செல்வம் மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# புறம் காட்டும் போர்நெறிப் பண்பாட்டுக் கூறுகள்

**முனைவர் பா. ராஜன்,**
M.A, M.Ed, M.Phil, Ph.D, NET, SET,
உதவிப் பேராசிரியர்,
சுயநிதிப்பிரிவு, தமிழ்த்துறை,
அருள் ஆனந்தர் கல்லூரி,
கருமாத்தூர், மதுரை.

## முன்னுரை

எட்டுத்தொகை நூல்களில் அக இலக்கியங்கள் என்பது தலைவன், தலைவி இருவருக்கிடையே நிகழும் காதல், ஊடல், கூடல், ஆகியவற்றைக் குறிப்பதாக அமைந்துள்ளது. புற இலக்கியங்கள் என்பது அரசியல் சார்ந்த நிகழ்வுகளான போர், கொடை, ஆட்சித்திறன் ஆகியவற்றைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளன. இதில் போர் என்பது வீரத்தை நிலைநாட்டக் கூடியதாக மட்டுமல்லாமல் மன்னர் களின் பெருமைகளையும,; அவர்களின் சிறப்புக்களையும் எடுத்துக் கூறக் கூடியதாகவும் இருக்கிறது. போரிடாத நாட்களைப் பிறவாத நாட்களாக எண்ணி யுள்ளனர், என்பதால் பண்டையத் தமிழ் மன்னர்கள் போருக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர். என்பதையும், போர்ப் பண்பாட்டுக் கூறுகளையும் புற இலக்கியங்களின் வாயிலாக ஆராய்வாதாக இக்காட்டுரை அமைகிறது.

## தமிழர் பண்பாடு

பண்பாடு என்பது பண்படுதல் என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. பண்படுதல் என்றால் சீர் படுத்துதல் அல்லது திருத்துதல் எனப் பொருள்படுகிறது. நிலத்தைப் பண் படுத்துதல் என்றால், பயிர் செய்யத் தக்கவாறு களைபிடுங்கி, வரப்பு வெட்டி, உழுது, பரம்படித்தல் போன்றவை சீர்படுத்துதல் என்பதற்குப் பொருளாம். அது போல மனிதர் பண்படுவது பண்பாடாகும். மக்களின் அறிவு நலம், ஒழுக்க உயர்வு, கொள்கை நலம், பண்பு நலம், வாழ்க்கை நலம், போர் செய்வதற்கு முன் தன் மனத்தையும், போர்க்களத்தையும் சீர்படுத்துதல் என்பதேபண்பாடாகும்.உலகில்பல்வேறு விதமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கென்று ஒவ்வொரு விதமான பண்பாடு காணப்படுகிறது. அவற்றுள் தமிழர்களின் போர் பண்பாட்டுக் கூறுகள் சிறப்பு மிக்கது என்றால் அதுவே நம் பெருமையாகும்.

## போர் விளக்கம்

போர் என்பது உலகளாவிய தொடர்பு கொண்டது. அது ஒரே நாட்டுக்குள்ளோ அல்லது இரு வேறு நாடு களுக்கு இடையிலோ நடைபெறும் சண்டையாகும். போர் என்பதற்கு “யுத்தம்”[1] என்று பொருள் தருகிறது கழகத் தமிழ் அகராதி. யுத்தம் என்பது மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அமைதியைக் கெடுக்கக் கூடிய ஒன்று என்பர்.

## போர் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்

உலகின் தவிர்க்க முடியாத ஒன்றாக அன்று முதல் இன்றுவரை இருந்து வருகின்ற போர் பற்றி அறிஞர்கள் பலர் தம் கருத்துக்களைப்

பதிவு செய்துள்ளனர்.

"போர் என்பது வேறு வழிமுறைகளில் நடக்கும் தொடர்ச்சியான அரசியல் ஊடுதொடர்பு"[2] என்கிறார் கார்ல்வொன் குலோவாவிட்ஸ். "போர் என்பது ஒரு உலகளாவிய தோற்றப்பாடு என்றும் அதை நடத்தும் சமூகத்தைப் பொறுத்து அதன் வடிவமும், வீரச்செயலும் வரையறுக்கப் படுகின்றன"[3] என்பார் ஜான்கீகன்.

"போராவது அரசியலோடு தொடர்புடை ஒரு நிகழ்ச்சியாகும்"[4] என்கிறார் வ.சுப. மாணிக்கம். "சமுதாயம் ஏற்று அனுமதிக்கின்ற இரண்டு குழுக்களிடையேயான வன் செயற்பகைமையே போர் எனச் சமுதாயவியலார் கூறுவர்"[5] என விளக்கம் தருகிறார் தங்க. கந்தசாமி. இவ்வாறு அறிஞர்கள் பலர் போர் பற்றிய தங்களின் கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளனர். இதன் மூலம் போர்; என்பது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காகச் செய்யப்படும் செயல் என்பதை உணரமுடிகின்றது.

## தமிழரின் போர் பண்பாட்டுச் சிந்தனைகள்

தமிழர்கள் காதலையும் வீரத்தையும் தங்களது இரு கண்களாகவே பாவித்து வந்தனர். நம் முன்னோர்கள் காதலுக்கும் வீரத்துக்கும் கொடுத்த முக்கியத்துவத்தைப்போல் வேறு எந்த நாட்டவரும் கொடுக்கவில்லை என்பதற்கு நமது இலக்கியங்களும், இலக்கணங்களும் சான்றுகளாகின்றன.

புறவாழ்வில் மிக முக்கியப் பங்கு வகிப்பது போர் ஆகும். மன்னர்கள் மட்டுமல்ல குடிமக்களும் தங்களது வீரத்தை வெளிக்காட்டுவதற்குப் போரை ஒரு கருவியாகப் பயன்படுத்தி இருக்கின்றனர். போரின் மூலம் ஒருவனை அழித்தலும் தோற்றுப் போதலும் இயற்கை என்றே வரையறுத்துள்ளனர். இதனைத் தமிழர்களின் புற இலக்கிய நூலான புறநானூறு,

**"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்**
**புதுவது அன்றிவ் வுலகத்து இயற்கை"[6]**

என்கிறது. போரிடுவதற்குக் கருவிகள் முக்கியம் அதைவிட அந்தக் கருவிகளைப் பாதுகாத்து வைத்தல் முக்கியம் பண்டைய மன்னர்கள் தங்களது கோட்டையில் படைக் கருவிகளைப் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். சேர மன்னன் தனது கோட்டையில் ஐயவிதுலாம் என்னும் போர்க் கருவியைப் பாதுகாத்து வைத்திருந்ததை,

**"கோடு உறழ்ந்து எடுத்த கொடுங்கன் இஞ்சி**
**நாடு கண்டன்ன கணை துஞ்சு விலங்கல்**
**துஞ்சு மரக் குழாம் துவன்றிப் புனிற்று மகள்**
**பூணா ஐயவி துலீக்கிய மதில்**
**நல்லெழில் நெடும்புதவு முருக்கிக் கொல்லுலபு"[7]**

என்ற அடிகள் மூலம் பதிற்றுப்பத்து உணர்த்துகிறது.

போருக்கு மிக முக்கியம் பலம் பொருந்தியப் படைவீரர்கள்; அந்தப் படைவீரர்களை மனமகிழ்ச்சியோடும் அவர்களை வறுமையில் வாடவிடாமலும் வைத்திருந்தால் எத்தகைய படையையும் அவர்கள் வெற்றி கொள்வார்கள் என்பதனை,

**"சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்**
**இல்லாயின் வெல்லும் படை"[8]**

என்கிறது திருக்குறள். இவ்வாறு போர்நெறி பற்றிய பண்பாட்டுச் சிந்தனைகளைத் தமிழிலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

## போரும் தமிழர் வாழ்வும்

போர் சார்ந்த வாழ்வு என்பது புறவாழ்வாகும். புற வாழ்வில் மனிதன் மேற்கொள்ளும் செயல்பாடுகளே அவனுக்கு வெற்றி, புகழ் போன்ற பெருமைகளை ஈட்டித் தருகின்றன.

ஆட்சித்திறன், கொடைப் பண்பு போன்றவை புற வாழ்வின் சிறப்பாகக் கருதப்பட்டாலும் பண்டையக் காலத்தில் போரின் மூலம் கிடைக்கும் வெற்றிச் சிறப்பையே மன்னனும் மக்களும் மிகச் சிறப்பாகக் கருதி இருக்கின்றனர்.

பண்டையக் காலத்தில் போர் என்பது மக்கள் வாழிவியலின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறது. "போர் என்பது அக்காலத்தில் வாழ்வின் ஒரு பகுதியாகவும், சிலருக்குப் போரே வாழ் வாகவும் அமைந்திருக்கிறது"[9] என்பார் தமிழண்ணல்.

பண்டைய தமிழ்ச் சமூகம் மக்களின் வாழ்வில் போர் என்பது இன்றியமையாத ஒன்றாகவே இருந்திருக் கிறது. அவர்கள் எந்நேரமும் போர் மன்றத்தில் தொங்கும் முழவு காற்றுப் பட்டு அசைந்து அதன் மூலம் ஒலி எழும்பினால் கூட அதனைப் போர்ப் பறை என நினைத்து வீரர்கள் மகிழ்ந்திருக்கின்றனர் என்பதை,

**"பொதுவியல் தூங்கும் வீசியுறு தண்ணுமை**
**வளிபொரு தெண்கண் கேட்பின்**
**அது போர் என்னும் எண்ணையும் உளனே"[10]**

என்னும் புறப்பாட்டு உணர்த்துகிறது. மக்கள் மட்டுமல்ல மன்னனுக்கும் எந்நேரமும் போர்பற்றிய நினைவே இருந்திருக்கிறது. இரவிலும் அவன் உறங்காமல் போர் பண்பாட்டுச் சிந்தனையோடு இருந்திருக்கின்றான். என்பதை,

**"மாண்டமர் நசையொடு கண்படை பெறாஅது"[11]**

என்கிற முல்லைப்பாட்டின் அடி உணர்த்துகிறது.

விழுப்புண் பெறாத நாட்களை எல்லாம் வீணான நாட்களாகவே கருதி இருக்கின்றனர் தமிழர்கள். மன்னன் போர் அறிவித்து விட்டுப் பறவைகளின் தீ நிமித்தம் காரணமாகப் போரைத் தவிர்த்து விட்டால் போர் நின்று போனதை எண்ணி வீரர்கள் மனம் வருந்தி இருக்கின்றனர். மேலும் தங்களுடைய வலிமை வாய்ந்த தோள்களைத் தட்டி, 'செத்தால் போரில் எதிரிப் படையோடு சண்டையிட்டுச் சாகவேண்டும்' என்கிற மறப்பண்போடு இருந்திருக்கின்றனர் என்பதை,

**"உட்பகை ஒரு திற பட்டெனப் புட்பகைக்**
**கேவான் ஆகலின் சாவோம் யாம் என**
**நீங்கா மறவர் வீங்கு தோள் புடைப்ப"[12]**

என்னும் புறப்பாடல் உணர்த்துகிறது. இச்சான்றுகளால் தமிழர்கள் தங்கள் வாழ்வின் பெரும் பகுதியைப் போருக்காகவே செலவிட்டிருப்பதை அறியமுடிகிறது.

## தமிழ் மன்னர்களின் மரபும், பண்பாடும்

"அரசர்களாகப் பிறந்ததன் பயனே போர் செய்தலாகும்"[13] (அ.ச.ஞான சம்பந்தன். அகமும் புறமும் ப.249) என்ற கருத்துக்கு உரிமையுடையவர்களாக வாழ்ந்தனர் நம் தமிழ் மன்னர்கள். தமிழ் மன்னர்கள் நல்ல உடற்கட்டு வாய்ந்தவர்களாக இருந்தனர். மிக்க இளமை தொட்டே யானையேற்றம், வில்வித்தை, படைக்கலப்பயிற்சி, போர்க்களப் பயிற்சி போன்ற மரபார்ந்த பயிற்சி பெற்று தங்கள் உடலை வலிமை யாக்கினர்.

**"களிறு கடைஇய தாள்**
**கழல் உரீஇய திருந்தடிக்**
**கணைபொருது கவிவண் கையால்**
**கன் ஒளிர்வரூஉங் கவின்சாபத்து**
**மாமறுத்த மலர் மார்பின்**
**தோல் பெயரிய எறுழமுன்பின்"[14]**

(புறம்.7)

எனவரும் புறப்பாட்டின் அடிகளை எல்லாத் தமிழ் மன்னர்கட்கும்

பொதுவான இலக்கணமாகக் கொள்ளலாம். நாடு சிறியதாகலானும், போர் புரிந்து வெற்றிகண்டு எஞ்சுபவரே வாழத் தகுதி உடையவராய் இருந்தமையானும் தமிழ் மன்னர் சிறந்த போர் வீரராகவே விளங்கினர். மிகப் பழங்காலத்தில் தத்தம் தகுதியாலும், பரம்பரை உரிமையாலும் அரசுக்கட்டில் பெற்றனர் தமிழ் மன்னர்கள். நல்ல உடல் வலிமை பெற்ற தமிழ் மன்னர்களின் அறிவும், உள்ளமும் செம்மையுடையதாக இருந்தன.

**"அறிவும் ஈரமும் பெருங்**
**கண்ணோட்டமும்"**[15] (புறம். 20)

**"ஓடுங்காவுள்ளத்து ஓபா ஈகை"**[16]
(புறம். 8)

**"பிறர்படி கூறுவோர் மொழிதே றலையே**
**நீமெய் கண்ட தீமை காணின்**
**ஒப்பநாடி அச்சுக ஒறுத்தி"**[17] (புறம்.10)

**"வேண்டியது விளைக்கும் ஆற்றலை"**[18]
(புறம். 38)

என்னும் இவ்வடிகள் அரசனது மரபார்ந்த அறிவு மேம்பாட்டையும், உள்ள நெகிழ்ச்சியாகிய ஈகைநெறி போன்ற பண்பாட்டுக் கூறுகளையும் வெளிப்படுத்துகிறது.

**"ஆவும் ஆனியற் பார்ப்பன் மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர் பெறாஅ தீரும்**
**எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்என**
**அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்"**[19]

தமிழ் மன்னர்கள் தாம் போரிடுங் காலத்தில் தம்முடைய பண்பாட்டிலிருந் சிறிதும் மாறுபடவில்லை. போர் புரியத் தொடங்கும் முன்னரே பகைவருடைய நாட்டில் உள்ளவர்களைப் பாகாப்பான இடங்களை நோக்கிச் செல்லுமாறு எச்சரிக்கும் நற்பண்புடையவர்கள். பசுக்களும்,பசுத்தன்மைபெற்ற அந்தணர்களும், பெண்டிரும், பிணியுடையவர்களும், பிதிர்க்கடன் இறுக்கும் பொன்போல் புதல்வர் பெறாதவர்களும் யாம் போர் தொடுக்கப் போவதால், உடனே உமக்குப் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று மறைந்து கொள்ளுங்கள் என்று பறை அறிவிப்பர் இம்மன்னர்கள் எனில் நம் தமிழ் மன்னர்களின் போர்நெறிப் பண்பாட்டையும், வழிவழி வழங்கி வரும் மரபையும் அறிய இதுவும் ஒரு சான்றாக அமைந்துள்ளது.

தமிழ் மன்னர்கள் போரின் போது பகைவர்களை வாள் கொண்டு பனங்குலைகளெனத் தலைகளைத் துமித்தெறிதலே தொழிலெனப் பேணினர் போலவே சங்கத் தமிழரை அறியாத மறவுணர்வுகளாலும், கொல்லுலையாகக் கருதுதல் பிழையாகும். ஈரமும், வீரமும், இன்னோரின் இயல்புகள். போரே வாழ்வெனக் கருதித் திசை திசையாக மண்ணாசை வேட்கையோடு அக் காலத்தவர் அலைந்துமிலர். அடங்காச் செருக்குற்று அடர்ந்து வந்தவரிடம் பணிந்து வழிமொழிந்து ஒழுகியதுமிலர்.

தமிழரைப் போரில் எவரும் வீழ்த்தி அவரை ஒடுங்கப் பணித்து மதுகை குறைத்த நிகழ்ச்சி வரலாற்றில் இல்லை, தமிழரிடைக் கலந்து அவர்தம் மொழியும் பண்பாடும் பயின்று பேணி அவற்றைத் தம்முடையதாக்கி, அவற்றில் தம்முடைய மரபுகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் கலந்து ஊடுருவல் நிகழ்த்துவதன் வாயிலாகத் தமிழரை வீழ்த்திய முயற்சிகளே பலவாகும் என்று தொல்காப்பியம் முதற்கொண்ட பன்னூல்களும் இதற்குச் சான்று பகர்கின்றன.

பகைநாட்டினர் தன் நாட்டு எல்லைகளில் பசுக்கூட்டங்களை வரிசையாக அமரவைப்பர். படையெடுத்து வரும் வேந்தன் பசுக்களுக்கு எந்த ஊறும் விளைவிக்கக் கூடாது.

அந்நிலையில் பசுக்கூட்டங்களை அகற்றுவது மிக அரிதான நிலையாக உள்ளபோது, தன் நாட்டில் இருக்கும் நல்ல வலிமையான காளைகளை ஓட்டி வந்து பசுக்கூட்டங்களுக்குக் காளைகளின் மீது ஈர்ப்பு ஏற்பட்டு, காளைகளின் பக்கம் செல்லவே படை வீரர்கள் தங்கள் பயணத்தைச் சிறப்பாக மேற்கொண்டனர். கடினமான செயல்களையும் எளிதாகக் கையளும் போர்நெறிப் பண்பாட்டு முறைகளையும், ஆநிரைகளுக்கு ஊறு விளைவிக்கா வண்ணம் போர்நெறி மரபுகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் நம் மறவர்கள் பின்பற்றினர் என்பதை இதன் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகிறது.

## முடிவுரை

தமிழர்களின் போர்நெறி மரபும், பண்பாட்டுக் கூறுகளும்; சிதைந்து அழிந்துவிடும் தன்மையினைப் பெற்ற தில்லை. அவை காலத்தால் என்றும் நிலைத்து நிற்கும் ஆற்றல் பெற்றதாக விளங்குகிறது. தமிழ் மறவர்கள் ஒவ்வொரு நிலையிலும், தங்கள் அடையாளங்களைப் பதிவுசெய்து வந்துள்ளனர் என்பதைப் புற நூல்கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. தமிழர் களின் மரபையும், பண்பாட்டையும் சீர்குலைக்கும் செயல்கள் நடைபெறு மாயின், தமிழர்கள் ஒன்றுகூடி அவற்றை மீட்டெடுக்கும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்குகின்றனர் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

## துணைநின்ற நூல்கள்


1. கழகத் தமிழ் அகராதி, ப.723
2. Carel Ven Glosatvish, On War, P.18
3. John Keehan, History Of Warfare, P.12
4. வ.சுப. மாணிக்கம், சங்க நெறி, ப.76
5. தங்க. கந்தசாமி, போரியல் அன்றும் இன்றும், ப.3
6. புறாநானூறு, பா.எண்:76
7. பதிற்றுப்பத்து, இரண்டாம் பத்து, பா.எண்:16
8. திருக்குறள், எண்:769
9. தமிழண்ணல் (க.ஆ.), இந்திய இலக்கியச் சிற்பிகள், ஔவையார், ப.30
10. புறநானூறு, பா.எண்:89
11. முல்லைப்பாட்டு, அடி–67
12. புறநானூறு, பா.எண்.68
13. அ.ச. ஞனசம்பந்தன், அகமும் புறமும், ப.249
14. புறநானூறு, பா.எண்:7
15. மேலது, பா.எண்:20
16. மேலது, பா.எண்:8
17. மேலது, பா.எண்:10
18. மேலது, பா.எண்:38
19. மேலது, பா.எண்:5

# நாச்சியார் திருமொழியும், நம்ம வீட்டுக் கல்யாணமும்..

**- தர்மத்தூரணி இரா.இராஜேஷ்குமார்.**
நிறுவனர், ஆதிஇலெமூரியத் தமிழ் மன்றம்,
சங்கரன்கோவில்.
தென்காசி மாவட்டம் - 62 78 62

பண்பாடு என்பது நமது பகுதிகளில் இன்றளவும் சொல்லப்படும் "கண் கண்டதக் கை செய்யணும்ல" என்பது போன்ற விழுமியங்களின் விளைச்சலையே குறிக்கிறது.

மனிதன் தன் வாழ்வியல் சூழலில் தனக்கு உகந்த முறையில் தனக்கான நெறிகளை வகுத்தான். அதனைச் சடங்கு, சம்பிரதாயம் என்ற பெயரில் இறையியலோடு இணைத்து இன்றியமையாததாக மாற்றினான்.

உண்மையில் இன்று நாம் மூட நம்பிக்கை என்ற பெயரில் மூடத்தனமாகத் தள்ளிவிட்டுப் போய்க்கொண்டிருக்கும் ஏதோ ஒரு சடங்கு முறையில் சமூகத்தின் நலன் விரும்பி புகுத்தப்பட்ட அறிவியல் ஒன்றின் அந்திமம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இருப்பினும் உடல் குளிர்ச்சிக்காகவும் வாசனைக்காகவும் பூசப்பட்ட சந்தனம் இன்று மங்கலத்தின் அடையாளமாக சுப நிகழ்வுகளில் சந்தனம் குங்குமம் பூசிக்கொள்ள வேண்டும் என்ற சம்பிரதாயத்திற்கான அலங்காரப் பொருளாகச் சுருங்கி போனது எதார்த்தமே.

இன்று வரையிலும் முன்னோர்கள் சொல்வதே முடிவு சபையோர் சொல்வதே சரி என்ற மரபைப் பின்பற்றும் தமிழ்ப் பண்பாட்டுச் சமூகத்தில் இன்றிலிருந்து சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பே இந்து மதத்தின் வைணவ வழிபாட்டு முறையின் ஆகச்சிறந்த திவ்ய தேசமாக விளங்கக்கூடிய ஸ்ரீவில்லிபுத்தூர் திவ்ய தேசத்தில் அவதரித்த ஸ்ரீஆண்டாள் நாச்சியார் தனது மணாளனாக முல்லை நில மூத்தோன் கண்ணனை மனம் உருக வேண்டிப் பாடிய "நாச்சியார் திருமொழியில்" வாரணம் ஆயிரம் என்ற திருப்பதிகத்தில் தனது கனவாக வெளிப்படுத்திய திருமண வழிபாட்டு முறைகள் சற்றேறக் குறைய அல்லது மிகச் சரியாக இன்னும் அதே முறையில் நமது வீட்டுத் திருமணங்களில் பின் பற்றப்படுவதை நாம் கவனித்து இருக்க முடியும்.

நமது முன்னோர்கள் வாழ்வின் ஒவ்வொரு அடிப்படை நிகழ்வுகளுக்கும் மிக நுண்ணிய நாம் கவனிக்க தவறிய அறிவியல் முறையை வகுத்து வைத்துள்ளனர் என்பதை இன்று புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளோம் அதன்படி இன்னும் நமது திருமண முறைகளில் உறவுகளுக்கும் அவர்களுக்கான உரிமைகளுக்கும் நாம் தருகின்ற முக்கியத்துவமும், அங்கீகாரமும் இன்று நேற்றல்ல ஆண்டாள் நாச்சியார் காலத்திலும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே வழக்கத்தில் இருந்து வந்திருக்கக்

கூடும் என்பதை வருகின்ற வார்த்தைகள் எடுத்து இயம்பும் என்பதே இதன் நோக்கம்.

பரந்து விரிந்த இந்த பரத கண்டத்தினுடைய பண்பாட்டு முறைகளில் அந்தந்த இடங்களில் வாழ்கின்ற மக்களினுடைய வாழ்வியல் சூழல்களுக்கு ஏற்ப திருமண வைபோக மானது அதனுடைய சடங்கு முறைகளில் அவரவர் சமூகத்திற்கு ஏற்ப தனித்தன்மையோடு விளங்கிக் கொண் டிருக்கிறது என்பது நாம் அறிந்ததே.

முறைப்படியாக ஒரு திருமணம் என்பது இரு வீட்டாருடைய சம்மதத் தோடு மணமகன் மணமகள் இன்னார் என்று பேசி முடிவு எடுக்கப்பட்டு அதற்கேற்ற திருமண நாள் பஞ்சாங்கம் படிக்கக்கூடிய அந்தணர் அல்லது சோதிடரின் ஆலோசனைப் படி குறிக்கப்பட்டு உற்றார் உறவினர்கள் பெரியவர்கள் தோழர் தோழியர்கள் என புடை சூழ வந்திருந்து திருமண பந்தலில் மணமக்களை வாழ்த்தி வயிறார அறுசுவை உணவு உண்டு அவரவர் தாம் விரும்புகின்ற பரிசுப் பொருட் களையும் ஆசீர்வாதங்களையும் திருமணச் சீராக அளித்து கூடியிருந்து குதூகலமாக கொண்டாடுவர்.

அதனை நாலாயிர திவ்ய பிரபந்தத்தின் நாச்சியார் திருமொழி வாரணம் ஆயிரம் என்ற ஆறாவது பதிகத்தில் கலி விருத்தத்தில் இயல்பான வர்ணணைகளோடு எடுத்துக் காட்டுகிறது.

மணமகளை தனது மணாட்டியாக ஏற்றுக் கொள்ள மாண்போடு செல்கின்ற ஒரு மணாளன்

“வாரண மாயிரம் சூழவ லம்செய்து,
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்,
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்,
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ”

தான் மட்டுமின்றி ஆயிரம் யானை களையும் தன்னுடைய ஆயிரம் தோழர்களால் அலங்கரித்து மணவாளன் பெண் நிச்சயிக்க வருவதாக பாடப் படுகிறது.

இன்றும் திருமண நிச்சய தார்த்தத்தில் உறவுகளுக்கு எவ்வளவு முக்கியத்துவமோ அது போல மணமகன் மணமகளுடைய தோழர் தோழியர் களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது.

மணமக்களை குதிரையிலோ, திறந்த மகிழுந்து வாகனங்களிலோ மேள தாளம் முழங்க ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகிறது.

“இந்திர னுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந் தென்னை மகட் பேசி மந்திரித்து”

கண்ணன் சார்பாக ஆண்டாளை பெண்கேட்டு இந்திரன் முதலான தேவர்கள் எல்லாம் வந்திருந்து அவளைத் திருமண நிச்சயம் பேசி முடிப்பதாக பாடலின் விளக்கம். அவ்வாறே இன்றும் திருமண நிச்சயத்தை ஊரின் நாட்டாண்மைக்காரர் முன்னிலையில் மணப்பெண்ணுடைய தாய் மாமா, மைத்துனர்கள், சகோதரர்கள், மணமகனுடைய தாய் மாமா, மைத்துனர்கள், சகோதரர்கள் விருப்பம் மற்றும் கருத்துகளைக் கேட்டறிந்து சபையின் முன்பாக சீர்வரிசை முறைகளை அவரவர் விருப்பத்திற்கேற்ப வெளிப்படுத்தி இருவீட்டு மண

மக்களுடைய தாய் மாமன்மார்கள், சம்பந்திகள் ஒருவருக்கொருவர் வெற்றிலை, பாக்கு மாற்றி சந்தனம் குங்குமம் திலகம் இட்டு மாலை சூட்டித் திருமணத்தை நிச்சயக்கிறார்கள். அதன் பின்னர்

**"மந்திரக் கோடியு டுத்திம ணமாலை,**
**அந்தரி சூட்டக்க னாக்கண்டேன் தோழீ நான்"**

என்பது போல 'அந்தரி' என்று அழைக்கப்படும் கண்ணனுடைய தங்கையாக ஆயர்பாடிப் பட்டணத்தில் பிறந்த துர்க்கை மணமகன் சகோதரியாக ஆண்டாளுக்கு மாலையிட்டு புதுத்துணி உடுத்திவிடும் முறைப்படியே இன்றும் மணமகனுடைய உடன் பிறந்தவள் அல்லது அதற்கு முறையானவள் சபையோரிடம்அனுமதிபெற்றுபெண்ணுக்குக் சந்தன குங்கும திலகமிட்டுப் புதுத்துணி உடுத்தி மாலை சூடி அலங்கரிக்கும் நிகழ்வுகளைக் காண்கிறோம்.

இதனை தென்பகுதிகளில் 'மஞ்சனை பூசுதல்' என்று அழைப்பர்.

**"மத்தளம் கொட்டவ ரிசங்கம் நின்றூத,**
**முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்,**
**மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து,என்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான்"**

அலங்கரித்த பந்தலின் கீழ் மங்கலகரமான மேள வாத்தியங்கள் இசைக்கப் பிரியமான வலம்புரிச் சங்கம் முழங்க முத்துக்களால் அலங்கரிக்கப் பட்ட பந்தலின் கீழ் திருமணம் நடப்பது போல இன்றும் திருமண மேடை என்பது திருமாங்கல்யம் சூடக்கூடிய மனை என்பது திவ்யமான தெய்வீக முறையில் அலங்கரிக்கப்படுகிறது.

**"வாய்நல் லார் நல்ல மறையோதி மந்திரத்தால்,**
**......................**
**......................**
**தீவலம் செய்யக்க னாக்கண்டேன் தோழீநான்"**

அந்தணர்கள் வேத மந்திர முழங்க திருமாங்கல்ய கயிறுசூடிப் பின் மண மேடையில் வளர்க்கப்படுகின்ற அக்னி குண்டத்தை மணமகன் மணமகளுடைய திருக்கரம் பற்றிச் சுற்றி வரக்கூடிய மரபு இன்றளவும் உள்ளது.

**"...........**
**..........**
**செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி,**
**அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ நான்"**

மணமகன் மணமகளுடைய பாதம் பற்றி அம்மியின் மீது கால் வைத்து மெட்டி எனப்படும் கால் விரல்களுக்கான மோதிரத்தை முதன் முதலாகச் சூடுகின்ற வைபோகம் மங்கலகரமானதாகவும் மைத்துனர்களுக்கு கலகலப்பானதாகவும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாகவும் விளங்குகிறது.

**"குங்கும மப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து,**
**மங்கல வீதி வலம்செய்து மணநீர்,**
**அங்கவ னோடு முடன்சென்றங் கானைமேல்,**
**மஞ்சன மாட்டக்க னாக்கண்டேன் தோழீ நான்"**

திருமணம் முடிந்த பின்பாக திறந்த நிலை மகிழ்ந்துகளிலோ குதிரையின் மீதோ திருமண ஊர்வலம் நடக்கிறது. இன்றளவும் கிராமப்புறங்களில் மணமகன் மணமகளுக்கு மைத்துனர் முறை உள்ளவர்கள் வெண்குடை பிடித்து வர ஊர்வலமாக சென்று கிராமங்களில் உள்ள அத்தனை தெய்வங்களையும்

வணங்கி ஆசிர்வாதம் பெறுகின்ற முறை உள்ளது.

வீட்டுக்கு வருகின்ற பொழுது ஆரத்தி எடுத்து சந்தனம் குங்குமம் பூசி வரவேற்று மகிழும் ஆரவாரம் அளவிடர்க்கரியது.

இவ்வாறு உறவுகள் புடை சூழ திருமண நிச்சயம் செய்து முறைப் படியாக அந்தணர்கள் முன்னிலையில் அலங்கரித்த பந்தலில் உற்றார் உறவினர்கள் ஆசிர்வாதத்தோடு திருமணம் முடித்து கைத்தலம் பற்றி தீவலம் வந்து வெண்குடை பிடித்து திருமண ஊர்வலம் வரும் காட்சிகளை பண்பாட்டுத் தொடர்ச்சியின் நிகழ்ச்சியாக நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் கோதை நாச்சியாருடைய வாரணம் ஆயிரம் மிகச் சிறப்பாகவே எடுத்து இயம்புகிறது.

இன்றும் நமது வாழ்வியல் முறை பண்பாட்டுப் பழமையின் சுவடு பற்றி நீண்டு கொண்டிருக்கிறது என்பதற்கும் நாச்சியார் திருமொழியும்,நம்ம வீட்டு கல்யாணமும் ஒன்றுதான் என்பதற்கும் வைணவ திருமணங்களில் இன்றளவும் முக்கிய நிகழ்வாக வாரணம் ஆயிரம் இசைக்கப்படுவதற்கு காரணம் உள்ளது என்பதற்கும் இது ஒரு மிகத் திண்ணமான சான்றாகும்.

# இன்குலாப் கவிதைகளில் தொன்மச் சிந்தனைகள்

**முனைவர் அ.நந்தினி,**
உதவிப் பேராசிரியர், நெறியாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை-625 001.

**வெ.ரேவதி,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - 625 001.

## ஆய்வுச் சுருக்கம்

காலங்காலமாக மக்களால் நம்பப்படும் செய்திகள் தொன்மம் என்ற பெயரினைப் பெறுகின்றன. இத்தொன்மங்கள் தோன்றுவதற்கும், தொடர்வதற்கும் மக்களின் நம்பிக்கை காரணமாகின்றது. வரலாறு என்பது வெற்றி பெற்றவர்களின் புகழை, குடிப்பெருமையை, நடந்த நிகழ்வைத் தெரிவிக்கச் செய்யும் எழுத்தியல் முயற்சியாகும். மேலேகண்ட தொன்மமும், வரலாறும் பெண்ணை ஆணுக்கு இணையாகப் பார்க்காதவை என்பதோடு அவற்றால் பெண்ணின் நிலை கட்டுப்படுத்தப்பட்டன என்பதும் உண்மையாகும். எனவே அவற்றைக் கேள்விக்கு உட்படுத்துவது தேவையான தாகும். அவ்வகையில் இன்குலாப் கவிதைகள் பதிவு செய்துள்ள தொன்மம் பற்றிய செய்திகளை இனங்காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## திறவுச் சொற்கள்

தொன்மம் – வரலாறு – குடிப் பெருமை – ஆணாதிக்கம் – பரோ – பாலியல் சுரண்டல் – தேவரடியார் – பதிவிரதன் – கற்புநெறி – வரலாற்றுத் திரிபு.

## முன்னுரை

வரலாறும் தொன்மமும் நெருங்கிய உறவுடையவை. ஏனெனில் இரண்டும் கடந்தகாலம் மற்றும் நம்பிக்கை சார்ந்த கருத்தியல்களை அடிப்படையாகக் கொண்டவை. இரண்டிற்குமான ஒரே வேறுபாடு வரலாறு எழுத்து மொழியாக இருக்கும்; தொன்மம் வாய்மொழியாக இருக்கும். இரண்டுமே சார்புத் தன்மையுடையவை. குறிப்பாகத் தந்தைவழிச் சமூக அமைப்பின் 'ஆணாதிக்கச் சார்புத்தன்மை உடையவை' எனலாம். சில வரலாற்றுப் பாத்திரங்களையும், தொன்மம் மற்றும் புராணப் பாத்திரங்களையும் தம் கவிதைகளுக்கான பாடுபொருளாக எடுத்துக் கொள்ளும் கவிஞர் இன்குலாப் அவற்றை பெண்ணிலை நோக்கிலிருந்து கவிதையாக்குகிறார். இன்குலாப் கவிதைகளில் பதிவுபெற்றுள்ள வரலாறு மற்றும் தொன்மங்களைக் பெண்ணிய நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தொன்மமும் வரலாற்றுப் பதிவுகளும் – பார்வைகளும்

தொன்மம் என்பது காலப் பழமையுடன் தொடர்புடையதாக அறியப்படுகிறது. அதனால்தான்,

> "தொன்மை தானே உரையொடு
> புணர்ந்த பழமை மேற்றே"[1]

என்று தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார். இதற்கு உரை கண்ட நச்சினார்க்கினியர்,

"தொன்மையாவது உரையோடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய

பொருள்மேல் வருவன. அவை இராமசரிதமும், பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின் மேல் வருஞ் செய்யுள்"[2] என்கிறார். இந்தியாவைப் பொருத்தவரை இதிகாசங்களாக எண்ணப்படும் இராமாயணம், மகாபாரதம் என்பவற்றோடு வேறு பல செய்திகளும் தொன்மங்களாக நிலவி வருவதை அறியலாம். இந்நிலைகள் உலகம் முழுமைக்கும் பொதுவானதாக அமைவதைக் கீழ்க்கண்ட எகிப்து பற்றிய பதிவுகள் காட்டுகின்றன.

எகிப்திய வரலாறு பரோக்களின் வரலாறாகவும், பிரமிடுகளின் பிரம்மாண்டங்களாகவும் அதிசயிக்கப் பட்டு வருகிறது. ஆனால் அவைகள் அதிசயங்கள் அல்ல; அவற்றை அசிங்கங்கள் என தமது 'பிரமிடுகள்' (பக்.21–40) எனும் நெடுங்கவிதையில் பதிவு செய்கிறார். அடிமைகள், அடிமைப் பெண்களின் வியர்வையிலும், கண்ணீரிலும், இரத்தத்திலும்தான் இந்த அதிசயங்கள் ஒளிவீசுகின்றன என கவிஞரின் பதிவினூடே அறிய முடிகிறது.

**"கிழட்டு பரோ உனது**
**உடைகளைக் கிழித்துவிட்டு**
**தொட்டிலில் குழந்தையைப்**
**போடுவது போலக்**
**கட்டிலில் போட்டு**
**உன்னைக்**
**கட்டியணைக்கையில்**
**மெல்லிய திரைகளுக்கு**
**வெளியே நிற்கும்**
**என்**
**கண்ணில் வளர்ந்த கோபங்களைத்தானே**
**நீ -**
**ஆடையாக எடுத்து**
**அணிந்து கொண்டிருப்பாய்!"**

**(ஒவ்வொரு, ப.32)**

என பரோ கால அடிமைப் பெண்ணின் குரலில் அப்பெண்ணின் மனக்குமுறலைப் பதிவு செய்கிறார் கவிஞர். பரோ காலத்து அடிமைப் பெண்கள் உழைப்புச் சுரண்டல், பாலியல் சுரண்டலுக்கு ஆளானார்கள் எனும் உண்மை இதன்வழி புலனாகிறது. அவமானச் சின்னமாகப் பார்க்கப்பட வேண்டிய கல்லறைகளை அதிசயங்களாகக் கற்பித்திருப்பதுதான் ஆணாதிக்கச் சமூகத்தின் வரலாற்றுச் சாதனையாகும்.

உருவாக்கப்படும் தொன்மங்களில் வரலாறு குறைக்கப்பட்டு. கற்பனைகள் அதிகமாக்கப்படுவதால் அவற்றை நாம் எளிதில் மீட்டுருவாக்கம் செய்யலாம். இதனை, "தொன்மம் புனிதத்தன்மை மிக்கது. தொன்மங்கள் இயற்கை உருவெளியின் தோற்றம், தெய்வங்கள் ஆகியவை பற்றிய தொல்பழங்கால மனிதனின் நம்பிக்கைகளை எடுத்துரைக் கின்றன. மேலும், மனித சக்திக்கு அப்பாற்பட்ட கடவுள் தன்மையோடு இணைந்த கற்பனைகளாக அமைந்து காலந்தோறும் விரிகின்றன. தொன்மங் களில் கடவுளரும், உயர் மனிதர்களும் (Principal Characters) கதைமாந்தர்களாக அமைகின்றனர். தொன்மங்களில் வரலாற்றுத் தன்மை குறைவு"[3] என்பதற் கேற்பவே கீழ்வரும் செய்திகள் அமைகின்றன.

கவிஞரின் 'ஸ்ரீ ராஜராஜேச்சுவரியம்' (பக்.51–54) எனும் கவிதையில் ராஜராஜசோழன் காலத்தில் நிலவிய 'பெண்ணடிமைத்தனம்' குறித்த பதிவு இடம்பெறுகிறது. தமிழ்ப் பெருமையின் குறியீடாக ராஜராஜசோழன் பார்க்கப் படுகிறான். அவன் ஆட்சி பொற்கால ஆட்சி என தமிழ்ப் புத்தியில் பதிய வைக்கப்பட்டுள்ளது.

**"தேவடியாளாக்கப்பட்ட**
**நம் தாய்மார்களின்**
**ஒவ்வொரு மார்பகமும்**
**பந்தங்களாய் மூளட்டும்"**

**(ஒவ்வொரு, ப.53)**

ராஜராஜனின் பொற்கால ஆட்சியில்தான் நிறுவனப்படுத்தப்பட்ட விபச்சார முறை (தேவரடியார் முறை) கொண்டுவரப்பட்டது எனும் உண்மை யினை இக்கவிதையில் கவிஞர் பதிவு செய்கிறார். இதனை,

"இந்த தேவரடியார்கள் கோயிலுக்கே சொந்தமானவர்கள். அவர்கள் திருமணம் செய்யக்கூடாது. குழந்தைகள் பெறலாம். இந்த தேவதாசி முறையை சோழப்பேரரசு பெரிய கண்டுபிடிப்பாகவும் பெருமிதமாகவும் செய்தது"[4] என்ற தி.சு.நடராசனின் கருத்தும் உறுதிசெய்கிறது. எனவே ஒவ்வொரு பேரரசுகளும் ஏதோ ஒரு வடிவில் / பல வடிவங்களில் பெண்ணடிமைத் தனத்தினைப் பேணி வந்திருக்கின்றன என்பதனைக் கவிஞரின் கவிதைகள் உணர்த்துகின்றன.

இந்திய மண்ணில் 'இராமன்' ஒரு பதிவிரதன். சில குழுக்களால் 'ராம ராஜ்ஜியம்' என வரலாற்று முகம் கற்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் புராணப் பாத்திரம். ராமாயணம் எனும் புராணம் வரலாறு என நம்ப வைக்கப்படும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காகவே அயோத்தியில் 1991–ஆம் ஆண்டு 'பாபர் மசூதி' இடிக்கப்பட்டது. அங்கே ராமர் கோவில் கட்ட வேண்டும் என்கிற அறைகூவலோடு 'கரசேவை' நடத்தப் பட்டது. மசூதியை இடித்தப்பின் 'இராம ராஜ்ஜியத்தின்' அடையாளச் சின்னங்கள் கிடைத்தன என்கிற பிரச்சாரம் முன் வைக்கப்பட்டது. இந்நிகழ்வினால் பொறுமையிழந்த கவிஞர்,

**"இல்லாமற் போனது -**<br>
**இராமன் கொப்பூழ்க்கொடி**<br>
**அறுத்த**<br>
**கத்தி;**<br>
**அவனைத் தாலாட்டிய**<br>
**அரண்மனைத் தொட்டில்**<br>
**கூனியை அடித்த கல்லும்**<br>
**இராவணனை அழித்த**<br>
**வில்லும்"** **(ஒவ்வொரு, ப.55)**

என்று சாடுகிறார். இவர்களால் போற்றப்படும் ராமன் 'கூனி' எனும் ஊனமுற்ற பெண்ணை கல்லால் அடித்துக் கொடுமை புரிந்தவன். அது மட்டுமல்லாமல் தனது சொந்த மனைவியைச் சிதையில் ஏற்றி பெண் வன்கொடுமை புரிந்தவன். வரலாறு களைப் போலவே புராணங்களிலும் 'ஆணாதிக்கம்' புரையோடிக்கிடக்கின்றன என்பதனைக் கவிஞரின் கவிதைகள் பதிவு செய்கின்றன. இதற்கு மாற்றாகப் படைக்கப்படுவதே பெண்ணின் குரலாக, பெண்ணின் மொழியாக அடையாளப்படுத்தப்படுவதை,

"ஆண் புனைவுகளை உடைப் பதில் ஆண்–நரமாமிசன், இரவு மிருகம், ஜடப்பொருள், ஆந்தை என்பதாகப் படிமமாகவும், குறியீடாகவும் ஆக்கி யுள்ளமை பெண்மொழிக்கான தனித்த உத்திகள் எனலாம். பேண் புனைவுகளை உடைப்பதில் ஆண், பெண் பாலியல் உறவு, பாலியல் உறுப்புகள், மாதவிலக்கு போன்றவை இலக்கியமாக்கியுள்ளதில் கையாளப்படும் அப்பட்டமான மொழிப் பிரவேசம் பெண்மொழி என்று அடையாளப்படுத்துகிறது"5 என தே.ஞானசேகரன் சுறுவதற்கேற்ற தொன்மம் சார்ந்த பெண்மொழியைக் கவிஞர் பயன்படுத்தியுள்ளதை இனிக் காணலாம்.

வரலாறுகளையும் புராணங் களையும் பெண்ணிலை நோக்கில் கவிதையாக்கியுள்ள கவிஞர், தமிழ்ச் சமூகத்தில் பன்னெடுங்காலமாக நிலவிவரும் கண்ணகி தொன்மத் தினையும் பெண்ணிலை நோக்கில் கவிதையாக்கியுள்ளார்.

*1981 உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி, மதுரைக்கு அருகில் கோவலன் பொட்டல் என்ற இடத்தை தோண்டினார்கள். அங்கு கிடைத்த ஓர் எலும்புக் கூட்டை கோவலனுடையது என்று பிரச்சாரம் செய்தார்கள். இதனை எள்ளி நகையாடி கவிஞர் 'தோண்டிகளுக்கு ஒரு வேண்டுகோள்' (பக்.147–149) எனும் கவிதையினை ஆக்கியுள்ளார்.*

“ஒரு முலை இழந்த
திருமா பத்தினியின்
எலும்புக் கூடு கிடைக்காவிட்டாலும்
எறிந்த ஒரு முலை
பத்தினி தெய்வத்தின்
திருமுலை யாதலால்,
கற்புச் சூடு தணியாமல்
ஒரு நெருப்புப் பந்தாய்
இங்கே பூமிக்கடியில்
புகைந்து கொண்டிருக்கலாம்.
தொண்டால் தமிழ் வளர்க்கும்
தோண்டிப் பெருமக்களே!
நம்பிக்கை இழக்காமல்
தோண்டிக் கொண்டே இருங்கள்!
கற்பின் அற்புதமும்
தமிழின் கன்னித் தன்மைபோல்
காலங் கடந்தது என்பதை ‘ஆராய்ச்சியால்
நிறுவ...
தோண்டிப் பெருமக்களே!
தோண்டிக்கொண்டே இருங்கள்”
(ஒவ்வொரு, ப.149)

*'கற்பு' என்கிற கற்பிதம் பெண்களுக்கு மட்டுமேயானதாகத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கற்பிக்கப்பட்டு வருகிறது. தந்தை வழித் தோன்றலாகிய தனியுடைமைக் கொள்கையின் கோட்பாடே 'கற்பு'. எனவேதான் பெண்ணியலாளர்கள் 'கற்பு' எனும் கொள்கையினை பெண்ணடிமைத் தனத்தின் சின்னமாகக் காண்கின்றனர்.*

*கண்ணகி தொன்மத்திலும், சிலப்பதிகாரக் காப்பியத்திலும் இக் 'கற்புக்' கொள்கையே பத்தினி தெய்வ வழிபாடாக வியந்தோதப்படுகிறது. 'பத்தினி' எனும் புனித பிம்பமும் பெண்மைக்கு மட்டுமே உரித்தானதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. கண்ணகியை விட்டு விலகி மாதவியோடு வாழச் சென்றவன் கோவலன். அவன் மீண்டும் கண்ணகியோடு வாழ வருகிறான். கற்பு நெறி தவறிய கோவலனின் கொலைக்கு அவனால் வஞ்சிக்கப்பட்ட கண்ணகி நீதி கோருகிறாள். போராட்டம் நடத்துகிறாள். பத்தினித் தெய்வமாக உயர்வடைகிறாள். தமிழ் ஆராய்ச்சியின் பெயரால் சமகாலத்தில் கோவலனுக்கு மீண்டும் உயிரூட்டப்படுகிறது. இதன் மூலம் 'கற்பு' என்கிற தந்தைவழிச் சமுதாயத்தின் கதையாடல் தொடர்ந்து நிலைநிறுத்தப்படுகிறது. எனவேதான் கவிஞர் தமிழ் (அதிகார) அறிவுச் சமூகத்தையும், அரசியல் சமூகத்தையும் பார்த்து 'தோண்டுக தோண்டிகளே!' என்று எள்ளி நகையாடுகிறார்.*

*பெண் என்றால் அடங்கி வாழ்வள் என்ற ஆணாதிக்க வரலாறு உண்மையானதில்லை என்பதற்கு கண்ணகியின் வாழ்வே சான்றாக அமைந்துள்ளது. அவளது சீற்றத்தை முதன்மைப்படுத்தாமல் கற்பே முதன்மைப்படுத்தப்படுவது தவறான போக்காகும். கவிஞர் சிற்பி,*

“திங்கள் விளையாடுமோர் திருமுகம் தீயெழச்
சீறுகண் ணகியர் நாடு”[6]

*என்பதும் மேலேகண்ட இன்குலாப்பின் கருத்தியலுக்குச் சான்று பகர்வதாக அமைந்துள்ளது.*

## முடிவுரை

- *தொன்மம் சார்ந்த சிந்தனைகள் பழமையானவை என்பதோடு, அவற்றைஇலக்கியங்கள் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளதைக் காண*

முடிகிறது.

- தொன்மங்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதன் வாயிலாக அதனை வரலாறாக ஆக்கும் முயற்சிகள் தொடர்கின்றன.
- எகிப்தின் பரோவாக இருந்தாலும், இந்திய ராமனாக இருந்தாலும் அவர்கள் சார்பாகக் கட்டியெழுப்பப்படும் கருத்துக்கள் பெண்ணை அடிமையாக்குவது அல்லது அவளைச் செயல்பட விடாமல் முடக்குவதாக இருப்பதை அறியமுடிகிறது.
- கண்ணகி போன்ற பெண் பாத்திரங்களும் அவர்களின் அறச்சீற்றத்தால் அடையாளப் படுத்தப்படாமல் கற்பு என்று உருவாக்கம் பெற்ற புனிதத்தால் மூழ்கடிக்கப்பட்டதை உணர முடிகிறது.
- இன்குலாப்பின் கவிதைகள் தொன்மங்களைப் பதிவு செய்துள்ளன. என்றாலும் அவை உருவாக்கும் கருத்துக்கள் பெண் நிலை சார்ந்த, பெண் மொழியை, பெண்ணின் உள்ளக் குமுறலை எடுத்துரைக்கும் உரைகல்லாகத் திகழ்வதை உணரமுடிகிறது.

## குறிப்புகள்

1. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூ.எ.239.
2. நச்சினார்க்கினியர்(உ.ஆ), தொல் காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூ.எ.239.
3. அ.ச.ஞானசம்பந்தன், கம்பன் புதிய பார்வை, ப.8.
4. தி.சு.நடராசன், தமிழகத்தில் வைதீக சமயம், ப.225.
5. தே.ஞானசேகரன், பெண் வழக்காறுகள் பெண்ணியக் கோட் பாட்டுப் பார்வை, ப.15.
6. சிற்பி, புன்னகை பூக்கும் பூனைகள், கவிமுகம், ப.344.

## துணைநின்ற நூல்கள்


1. தே.ஞானசேகரன், பெண் வழக்காறுகள் பெண்ணியக் கோட்பாட்டுப் பார்வை, நியூ செஞ் சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை–2014.
2. தி.சு.நடராசன், தமிழகத்தில் வைதீக சமயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை – 2008.
3. சிற்பி பாலசுப்பிரமணியம், சிற்பி கவிதைத் தொகுப்புகள்–1, நியூ செஞ் சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை– 2011.

# நற்றிணையில் ஐந்திணை மக்களின் உணவு முறைகள்

**முனைவர் தா.லதா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 002

## முன்னுரை

சங்ககால மக்கள் தங்களது அடிப்படையான தேவைகளில் முதன் மையானதான உணவினைத் தாங்கள் சார்ந்து வாழும் பகுதிகளுக்கு ஏற்ற வகையில் அமைத்துக் கொண்டனர். ஐந்து வகையான நிலப்பாகுபாட்டின் அடிப்படையில் அவர்களின் உணவுமுறை அமைந்திருந்தது. உதாரணமாக குறிஞ்சி நில மக்கள் மலைப்பகுதிகளில் கிடைக்கும் திணை, கிழங்குகள் இவற்றை உண்டனர். முல்லை நில மக்கள் ஆநிரைகளைத் தங்களின் வாழ்வாதரமாக கொண்டிருந்த காரணத்தினால் பால்,தயிர்.வெண்ணெய் இவற்றொடு இறைச்சியையும் உணவாகக் கொண்டனர். மருதநில மக்கள் தங்களின் உழைப்பினால் கிடைத்த விளைச்சலில் கிடைத்த அரிசி, பால் உணவு, இறைச்சி இவற்றை உண்டனர். நெய்தல் நில மக்கள் கடலில் கிடைக்கும் மீன் மற்றும் கடல் சார்ந்த உயிரினங்களை முதன்மை உணவாகக் உட்கொண்டனர். பாலைநில மக்கள் வேட்டையாடுதல் மூலம் கிடைத்த இறைச்சிகளை உணவாக எடுத்துக் கொண்டனர்.

## ஆய்வின் கருதுகோள்

நற்றிணை சுட்டும் இனக்குழு மக்களின் வாழ்வாதரங்களின் அடிப் படையில் அவர்கள் பயன்படுத்திய உணவு முறையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வுச் சுருக்கம்

சங்ககால மக்கள் நிலத்தின் அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் தேன், பால், இறைச்சி இவற்றைத் தவறாமல் உட்கொண்டதையும் மகிழ்ந்திருக்கும் போது கள் உண்டு களித்ததையும் இக்கட்டுரையின் வழி ஆராயலாம்.

## தரவுச்சொற்கள்

1. இறாஅல் – தேனடை
2. புள் – பறவை தேனீ
3. மந்தி – பெண் குரங்கு
4. பறழ் – குரங்கின் குட்டி
5. விளர் – கொழுப்பு நிறைந்த
6. முளவு மான் – முள்ளம் பன்றி
7. தீம்பிழி – கள்
8. பாட்டம் – மேகம், மழை
9. அரியல் – கள்

## பால் உணவு

நற்றாய் உடன்போக்கு மேற்கொண்ட தலைவி தனது இல்லத்தில் இருக்கும் பொழுது. உணவு உண்ண மறுக்கும் சிறுகுழந்தையைப் போல் இருப்பாளே. தற்பொழுது அறிவு முதிர்ச்சியடைந்து உடன்போக்கு மேற் கொண்டாளே என்று வியப்பதாக அமைந்துள்ள பாலை பாடலில்

“பிரசம் கலந்த வெண் சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒரு கை ஏந்தி

புடைப்பின் சுற்றும் பூந் தலைச்
சிறு ழிகுலீல்
'உண்' என்று..." (நற்.110: 1-4)

நரைத்த கூந்தலையுடைய முதுமை யுடைய செவிலியர் தேன் கலந்தது ஒத்த நல்ல சுவையும் இனிய வெண்ணிறப் பாலுணவை விரிந்த ஒளிபரப்பிய பொற்கலத்தில் இட்டனர். கலத்தில் இட்ட உணவை ஒரு கையில் ஏந்திக் கொண்டு. உண்ண மறுக்கும் தலைவியை பூவினை ஒத்த கோலால் அடித்து உண்ணச் செய்தனர் என்பதன் மூலம் பாலுணவு என்பது சாதாரணமாக மக்கள் உண்ணும் உணவாக இருந் திருப்பதை அறிய முடிகிறது.

## தேனும் பாலும்

தீம்பாலை உண்ணச் சலித்தவள் காட்டிடைச் சுரநெறில் தலைவனோடு போனதை எண்ணி செவிலித்தாய் புலம்பும் பாலைப் பாடலில்

"......................................
யானும் தாயும் மடுப்ப, தேனொடு
தீம்பால் உண்ணாள் வீங்குவனள் விம்மி
நெருநலும் அனையள் மன்னே"
(நற்.179: 5-7)

என் இளமகள் மான் போலும் மையலைச் செய்யும் பார்வையோடு நானும் செவிலித்தாயும் 'தேனோடு கலந்த பாலைப் பருகுவாய்' என்று கூறிய பொழுதும் உண்ணாமல் அழுபவளாய் இருப்பாள். இன்று அத்தன்மை நீங்கி, உடன்போக்கினை மேற்கொண்டதை நினைத்து அஞ்சுகிறேன் எனக் கூறுகிறாள்.

## தேன்

குறிஞ்சி நில மக்கள் தேனை உண்டு மகிழ்ந்ததை

"கரும்பு உண விரிந்த கருங்கால்
வேங்கைப்
பெருஞ் சினைத் தொடுத்த கொழுங்கண்
இறாஅல்
புள்ளுற்றுக் கசிந்த தீம் தேன் கல் அளைக்
குறக் குறுமாக்கள் உண்ட மிச்சிலைப்
(நற். 168: 1-4)

வண்டுகள் உண்ணுமாறு மலர்ந்த கரிய அடிப்பகுதியைக் கொண்ட வேங்கை மரத்தின் பெரிய கிளையிலே தொடுத்த கொழுவிய கண்களையுடைய தேனடையில் தேனீக்கள் மொய்த்தலால் தேன் கசிந்து கல்லின் குழிகளிலே வடியும். குறவர்களின் இளமகள் அதனை வழித்து உண்பர். அவர் உண்டது போக எஞ்சியதை மெல்லிய தலைமையையுடைய மந்தியின் வலிய குட்டிகள் சென்று உண்ணுகின்ற நல்ல மலைக்குத் தலைவன் எனக் குறிப்பிடுவதன் மூலம் குறச்சிறுவர்கள் உண்டது போக எஞ்சியதைக் குரங்குக் குட்டிகள் நக்கி உண்ணும் என்பது உயர்திணை அஃறிணைப் பாகுபாடின்றி அனைத்துயிரும் இன்புறும் வளமிக்க மலை என்பது புலனாகிறது.

## மாமிச உணவு

தலைவி சமைக்கவும். இனிதுண்டு உடனிருத்தலை தலைவன் எப்பொழுதும் விரும்புவான். ஆனால் தன்னை விரும்புவருக்கு பொருளை அருளவும், தனக்குரியவரைத் தேற்றவும் பொருள் வேண்டுமென்பதற்காகப் பிரிந்து பொருள் தேடச் செல்லும் தலைவனின் மனநிலையைத் தோழி எடுத்துரைப்பதாக அமைந்துள்ள இப்பாடலில்

"எல்லி வந்த நல்இசை விருந்திற்கு
கிளர் இழை அரிவை! நெய் துழந்து அட்ட
விளர் ஊன்அம்புகை எறிந்த நெற்றி
சிறு நுண் பல்வியர் பொறித்த
........................................" (நற். 41: 7-10)

இரவின் நல்ல புகழை உடைய விருந்தினர் இரவில் வந்த பொழுது விருந்தினர் உண்பதற்கு நெய்யை அளாவ விட்டுக் கொழுவிய ஊனைச் சமைத்த தலைவி எனச் சுட்டப்

படுவதால் விருந்தினரை நன்கு உபசரிக்க வேண்டுமென்பதற்காக நேரம் கூட பார்க்காமல் இரவிலும் இன்முகத்தோடு மாமிசம் சமைத்து நல்விருந்து படைத்தனர் என்பதை அறிய முடிகிறது.

## இறைச்சி – ஊன்

இறைச்சியை சங்ககாகல மக்கள் உண்ட செய்தியைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

இறைச்சியைப் பொரிக்கும் ஒலியை உடைய முன்பக்க வீடு என்ற செய்தியை

**"ஊன் பொரிக்கும் ஒலி முன் முன்றில்**
**(பட்டினப்பாலை 177)**

என்ற தொடரால் அறிய முடிகிறது. மேலும்,

**"உடும்பு கொலீஇ வரி நுணல் அகழ்ந்து**
**நெடுங் கோட்டுப் புற்றதது ஈயல் கெண்டி**
**எல்லு முயல் எறிந்த வேட்டுவன்"**
**(நற்:59 1-3)**

தலைவி வாழும் ஊர் எத்தகையது எனக் கூறும் முல்லைத் திணைப் பாடலில் காடு சூழ்ந்த நாட்டில் உடும்பைக் கொன்றும், வரித்த தவளையை அகழ்ந்து எடுத்தும், நெடிய கோடுகளைக் கொண்ட புற்றுகளை வெட்டி. அதில் உறைந்திருக்கும் ஈசல்களை தோண்டி எடுத்தும் பகலில் முயலை வேட்டையாடியும் வாழும் வேட்டுவர்கள் தங்கியிருக்கும் ஊர் எனக் குறிப்பிடப்படுவதல் உடும்புக் கறி. முயல்கறி, தவளைக்கறி இவற்றொடு ஈசலையும் உணவாக உண்ணும் பழக்கம் முல்லைத்திணை மக்களிடம் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

### ஈயல்

புற்றுக்களில் இருக்கும் ஈசலைப் பிடித்து அதனுடைய சிறகினை உதிர்த்து, காயப்போட்டு உண்ணும் வழக்கம் இருந்ததை

**"ஈயல் பெய்த அட்ட இன்புளி**
**வெம்சோறு" (அகம் 394:5)**

மற்றொரு குறிஞ்சித் திணைப்பாடலில்

**"கானவன் எய்த முளவு மான் கொழுங்குறை**
**தேம் கமழ் கதுப்பின் கொடிச்சி, கிழங்கொடு**
**காந்தள் அம் சிறுகுடிப் பகுக்கும்**
**ஓங்கு மலைநாடன்" (நற் 856: 6-10)**

காட்டில் கானவன் அம்பெய்திக் கொணர்ந்த முள்ளம் பன்றியின் கொழுத்த தசைப்பகுதியைக் கிழங்கொடு கொடிச்சியானவள் சிறுகுடியினர் பலருக்கும் பகுத்துக் கொடுக்கும் உயர்ந்த மலைக்குரிய தலைவன் என்பதால் முள்ளம் பன்றியின் இறைச்சியை, கிழங்கோடு சேர்த்து உண்டுள்ள செய்தியை அறியமுடிகிறது.

மற்றொரு பாடலில் தலைவன் மேல் தலைவி ஊடல் கொள்கிறாள். ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் வரவேண்டுமென தலைவன் எதிர்ப் பார்கிறான். காரணம் தலைவி கோபம் தீர்ந்து சமைக்க முற்படுவாள் என்பதை மருதத்திணைப் பாடல்

**"சிறுதாழ் செறித்த மெல் விரல் சேப்ப"**

வாளை மீனைக் கொணர்ந்து அடி படுத்திருத்தலின் உண்பதற்கு ஏதுவான வகையில் நறுக்கினாள். கண்களில் புகை எழும்பும் படியாக அதனைச் சமைத்தாள் என்ற செய்தியின் மூலம் மருத நில மக்களின் தலையாய உணவு மீன் என்பது புலப்படுகிறது

## கள் உண்ணுதல்

பனங்கள்ளை மக்கள் அருந்துவதைப் பட்டினப்பாலை, அகநானூறு இவற்றிலும் காணலாம். நற்றிணையிலும் நெய்தல், குறிஞ்சி முல்லைத் திணைப்பாடல்களில் கள் அருந்திய குறிப்பு இடம் பெற்றுள்ளது.

**"வேட்டம் பொய்யாது வலைவளம் சிறப்ப**
**பாட்டம் பொய்யாது பரதவர் பகர**
**இரும் பனந் தீம் பிழி உண்போர் மகிழும்"**
**(நற்றிணை 38:1-3)**

மீன் வேட்டைக்குச் சென்ற பரதவர் வலை வளத்தினால் கிடைத்த மீன்களை பிறநாட்டிற்குச் சென்று விற்பர். பொருளைப் பெற்றுக்கொண்ட மகிழ்வில் கரிய பனைமரத்தின் இனிய பிழிவான கள்ளை உண்டு மகிழ்வர் என்றும்,

**"திண்திமில் பரதவர் ஒண் சுடர்க் கொளீஇ**
**.......................................**
**.......................................**
**கடல்மீன் தந்து, கானற் குலைஇ**
**ஓங்கு இரும் புன்னை வரி நிழல் இருந்து**
**தேம் கமழ் தேறல் கிளையொடு மாந்தி"**

*(நற்.388:4-8)*

பரதவர்கள் இரவு நேரத்தில் வேட்டைக்குச் செல்வர். வேட்டையில் கடலிலிருந்து பெற்ற மீன்களைக் கடற்கரைச் சோலையின் நிழலில் குவித்துத் தேன் மணம் வீசும் தெளிந்த கள்ளைத் தம் சுற்றத்தாருடன் உண்பர் எனவும்,

காட்டில் வாழும் வேட்டுவன் உடும்பு. தவளை. ஈயல் முயல் ஆகியவற்றைப் பிடித்து வருவான். அவற்றை பிடித்தலால் உண்டான களைப்பை கள் குடித்து ஆற்றுவான் என்னும் செய்தியானது,

**".......................................**
**பல்வேறு பண்டத் தொடை மறந்து இல்லத்து**
**இரு மடைக் கள்ளின் இன் களி செருக்கும்"**

*(நற் 59:5-6)*

என்ற இப்பாடல் வரிகளில் கூறப் பட்டுள்ளது.

மற்றொரு பாடலில் தலைவனை தோழி பகற்குறியில் வருமாறு சொல்லும் பொழுது சிறுகுடியில் அமைந்திருக்கும் ஊரில் உள்ள உறவினர் சீற்றம் கொண்டவர் என்றும்

**".......................................**
**எருவை நீடிய பெரு வரைச் சிறுகுடி**
**அரியல் ஆர்ந்தவர் ஆயினும்"**

*(நற்றி 156: 7-8)*

மலைப்பக்கத்தில் அமைந்துள்ள ஊரினைச் சார்ந்த சிறுகுடியின் அமைந்த கள்ளை மிகுதியாகப் பருகியவர் ஆயினும். சினம் கொள்வதில் மிகப் பெரியவராய் உள்ளனர் என்று கூறி இரவு குறியைத் தவிர்ப்பதாக அமைந்துள்ளது.

வேலை முடித்த அசதியில் மகிழ்ந்திருக்கும் பொழுதும், இரவு நேரத்திலும் கள் குடித்தமையைக் காணலாம்.

## தொகுப்புரை

சங்ககால மக்கள் தங்களுடைய உணவுசார் தேவைகளைத் தங்களுடைய நிலத்தின் அடிப்படையில் தாங்களே பூர்த்தி செய்து கொண்டனர். உடலுக்கு வலிமை தரும் இயற்கை உணவுகளான தேன். பால் இவற்றையும் கடலிலிருந்து கிடைக்கும் இயற்கை உணவுகளையும் வேட்டையாடி கிடைத்த இறைச்சி உணவுகளையும் உண்டு இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்துள்ளனர்.

## துணைநூற் பட்டியல்

### முதன்மை நூல்

1. நற்றிணை, உரையாசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை – 600 098

### துணைமைநூல்

1. அகநானூறு, உரையாசிரியர் ரா.வேங்கடாசலம், காசி விசுவநாதன் வெளியீடு, பாகனேரி, த.வை.இ. தமிழ்ச்சங்க வெளியீடு

2. பட்டினப்பாலை உரை.ஆ., பொ.வே. சோமசுந்தரனார், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,

# ஓரான் பாமுக்கின் 'பனி' நாவலில் குர்ஆனும் இசுலாமியமும்

நெறியாளர்: **முனைவர் செள.வீரலெக்ஷ்மி,**
இணைப்பேராசிரியர்,
மொழிபெயர்ப்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

ஆய்வாளர்: **வெ.வடிவேல்,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
மொழிபெயர்ப்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## ஆய்வுச் சுருக்கம் (Abstract)

ஓரான் பாமுக் தம் 'பனி' என்னும் நாவலில் அரசியல் சிந்தனைகளை துருக்கிய வரலாற்றுப் பின்புலத்தில் முன் வைத்துள்ளார். எனினும் இந்நாவலில் மதம் சார்ந்த இசுலாமிய மத அரசியல் தனித்துவத்துடன் அவரால் முன்னெடுத்துக் செல்லப்பட்டுள்ளன. பெண்களின் முக்காடு மத அரசியலின் அடையாளமாகின்றது. மதச் சார்பற்ற அரசாங்கம் முசுலீம் பெண்கள் 'முக்காடு' அணிவதைத் தடை செய்கின்றது. இதனால் ஏற்படும் மோதல்கள் கதைப் பின்னலாக உள்ளன. இதனை விளக்கிக் காட்டும் ஒரு சான்றுப் பகுதியே இந்த ஆய்வுக் கட்டுரையாகும்.

## முன்னுரை

ஓரான் பாமுக்கின் நாவல் படைப்புக்களில் வெளிப்படையாக அரசியல் பேசும் நாவல் "பனி" ஆகும். அவர் இந்நாவலில் மதச் சார்புக்கும் மதச்சார்பின்மைக்கும் இடையிலான மோதலை துருக்கியின் எல்லைப்புற நகரமான கார்ஸின் அரசியல், மத நிலைப்பாடுகளின் பின்புலங்களில் வெளிப்படுத்தியுள்ளார். 'குர்ஆன்' சிந்தனைகள் இந்நாவலில் பரவலாக விவாதிக்கப்பட்டுள்ளன. இந்நாவலை மாரீன் ஃப்ரீலி (Maureen Freely) என்பவர் துருக்கிய மொழிகளிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அந்த ஆங்கில நாவல் மொழி பெயர்ப்பை ஜி.குப்புசாமி தமிழாக்கம் செய்துள்ளார். இந்நாவலில் வரும் வாஹித் சுஸ்மி (Vahit Suzme) என்ற சலீம் ஃபெஸ்மெக்கன் (Salim Fesmekan) பேராசிரியர் நூரியில் மாஸ் (Nuriyilmaz) ஆகியோர் உரையாடல்களிலிருந்து அறியலாகும். குர்ஆன் வலியுறுத்தும் மதச் சிந்தனைகளின் சாரத்தை ஆராய்ந்து விளக்குவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கும் போக்குமாக அமைகின்றது.

## கடிஃபே, கா உரையாடல்

'பனி' என்னும் இந்நாவலின் கதைத் தலைவன் பெயர் 'கா' என்பதாகும். அவனது முழுப்பெயர் கரீம் அலாகுஷோலு என்பதாகும். 42 வயதான அவன் கவிஞன்; பத்திரிக்கையாளன்; திருமணம் ஆகாதவன், ஜெர்மனியில் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்த அவன் துருக்கியின் இஸ்தான்புல் நகரத்திற்கு வந்து அங்கிருந்து எர்ஸுசரும் சென்று பேருந்தில் கார்ஸ் நகரத்திற்கு வருகின்றான். அந்நகரத்தில் தற்கொலை செய்து கொள்ளும் முஸ்லீம் பெண்களைப் பற்றித் தகவல்களைச் சேகரித்துப் பத்திரிகைக்கு ('ரிபப்ளிக்கன்' பத்திரிகை) அரசியல் கட்டுரை ஒன்றை எழுது வதற்காக ஒரு பனிக்காலத்தில் பேருந்தில் பயணிக்கின்றான். இதிலிருந்துதான் இந்நாவலின் கதை தொடங்கி நகர்ந்து செல்கின்றது. கார்ஸ் நகரில் 'கா' வின் வகுப்புத் தோழியும்

முக்தார் பேயை மணந்து பின்னர் மணவிலக்குப் பெற்றவளுமான இபெக் (கதைத் தலைவி) வாழ்ந்து வருகின்றாள். 'கா' அவளை 'நியூ லைஃப் பாஸட்ரி ஷாப்பில்' சந்தித்து மனம் திறந்து உரையாடுவதோடு தான் அவளை மணந்து கொள்ள விரும்புவதையும் கூறுகின்றான். இபெக்கின் தங்கையின் பெயர் கடிஃபே; அவளது தோழி தெஸ்லைம் என்பவள் இசுலாமிய பக்தி மார்க்கத்திலிருந்து வெளியே வந்து தற்கொலை செய்து கொள்கின்றாள். அது குறித்து 'கா' கடிஃபேயிடம் "மானுடப் பிறவிகள் இறைவனின் மகத்தான படைப்புகளாவார்கள். தற்கொலை மதவிரோதமானது."[1] தெஸ்லைம் தற்கொலை சரியா எனக் கேட்கின்றான். அதற்கு கடிஃபே "தெஸ்லைம் தற் கொலை செய்து கொண்டாள் என்று வைத்துக் கொண்டால், அவள் ஒரு கொடும் பாவகாரியத்தைச் செய்திருக்கிறாள் என்று சொல்வது சாத்தியம். புனித குர்ஆனின் நிஸா செய்யுளில் இருபத்தி ஒன்பாதவது வரியைப் புரட்டிப் பார்த்தால் தற்கொலை என்பது விலக்கப்பட்டது என்பதைத் தெளிவாகக் காண்பீர்கள்"[2] என்கின்றாள். ஆனால் கடிஃபே மதசார்பற்ற 'கா' விடம் (நாத்திகன்) இசுலாமிய மத நம்பிக்கையை விவாதிக்க மறுக்கின்றாள். "புனிதக் குர்ஆன் என்பது இறைவனின் வாக்கியம். இறைவன் ஒரு தெளிவான, நிச்சயமான கட்டளையை விதிக்கிறாரென்றால் அற்பமானிடர்கள் அதனைக் கேள்வி கேட்பது கூடாத செயல். அவள் குரலில் தன்னம்பிக்கை தூக்கலாகத் தெரிந்தது. அதற்காக விவாதங்களுக்கு நமது மதம் இடமளிப்பதில்லையென்று கருதிவிடாதீர்கள். ஆனால் ஒரு நாத்திகனோடு, ஒரு மதசார்பற்ற ஆசாமி யோடு எனது நம்பிக்கைகளைப் பற்றி விவாதிக்க நான் தயாராக இல்லை"[3] என்னும் கடிஃபே கூற்றில் இதனை அறியலாம்.

பேராசிரியர் நூரியிலமாஸ் – வாஹித் சுஸ்மி என்ற சலீம் ஃபெஸ்மெக்கான் உரையாடலில் குர்ஆன் வாஹித் சுஸ்மி என்பவன் தொகாட்டிலிருந்து கார்ஸ் நகரத்திற்கு வந்து நியூ லைஃப் பாஸ்ட்ரி ஷாப்பில் பேராசிரியர் நூரியிலமாஸ் (கல்வியியல் கல்லூரி இயக்குநர்) என்பவரைக் கண்டு உரையாடுகின்றான். வாஹித் சுஸ்மி தன்னை 'பதாகை' என்னும் இசுலாமிய வானொலியின் செய்திளைக் கேட்பவன்; படிக்காதவன் என அறிமுகம் செய்து கொண்டு பேராசிரியரிடம் நாம் நம் துருக்கி தேசத்தை அவமதிப்பவர்களை, இசுலாமிய மக்களுக்குத் துரோகம் செய்பவர்களை கொண்டாடிக் கொண்டிருப்பது சரியா? நீங்கள் ஒரு யூதரா? நாத்திகரா? எனக் கேட்கின்றான். பேராசிரியர் தான் ஒரு முசுலீம்; எல்லாப் புகழும் இறைவனுக்கே (Glory be to God) என்கின்றார். வாஹித் பேராசிரியரிடம் புனித் நூல் குர்ஆனும் இசுலாமிய மதமும் நிர்ணயித்த விதிப்படி முக்காடு அணிந்து வரும் பெண்களை உங்கள் கல்லூரியில் அனுமதிக்க மறுப்பது ஏன்? எனக் கேட்கின்றான். மதநம்பிக்கை கொண்டவர்களுக்கு அநீதி இழைப்பவர்களைப் பற்றிய செய்திகளை ஒலிபரப்புவதே "பதாகை" வானொலியின் முக்கியப் பணியாகும். பேராசிரியர் தனக்கு மதநம்பிக்கையும் கடவுள் மீது பயமும் உண்டு என்கின்றார். வாஹித் பேராசிரியரிடம்,

"கடவுள் மீது உங்களுக்குப் பயம் இருந்தால். புனிதக் குர்ஆனைக் கடவுளின் செயல் என்று நீங்கள் நம்பினால் "சொர்க்க ஒளி" (Heavenly Light) என்ற தலைப்புள்ள அந்த அழகான முப்பத்தொன்றாவது செய்யுளைப் பற்றி உங்கள் கருத்துக்களைக்

கூறுங்கள்" எனக் கேட்கின்றான். அவனிடம் பேராசிரியர் இந்த செய்யுள் பெண்கள் தம் தலைகளை மட்டுமல்ல, முகங்களைக் கூட மறைத்துக் கொள்ள வேண்டுமென்று மிகத் தெளிவாக உரைக்கிறது. இதைக் கேட்ட வாஹித் இறைவனின் இந்தக் கட்டளைக்கு மாறாக தலையை மறைத்துக் கொண்டு வரும் மாணவிகளை நீங்கள் வகுப்பிற்குள் அனுமதிக்க மறுப்பது ஏன்?[4] எனத் துருவிக் கேட்கின்றான். பேராசிரியர் வாஹித்திடம் நாம் ஒரு மதச் சார்பற்ற நாட்டில் வாழ்கின்றோம். மதச்சார்பற்ற அரசாங்கமே பெண்கள் முக்காடு அணிந்து பள்ளிக்கு வருவதைத் தடை செய்துள்ளது என்கின்றார். மதச் சார்பற்ற அரசில் மதமும் நிர்வாகமும் தனித் தனியானவை என்ற பேராசிரியர் விளக்கத்தைக் கேட்ட வாஹித் அரசாங்கம் விதிக்கும் ஒரு சட்டம் இறைவனின் கட்டளையை ரத்து செய்யுமா? எனக் கேட்கின்றான். மேலும் அவன் பேராசிரியரிடம், "மதச்சார்பின்மை" என்ற வார்த்தைக்குக் "கடவுளற்ற" என்பதா? பொருளெனக் கேட்கின்றான். துருக்கி அரசாங்கத்தின் தலைமையிடம் அங்காராவில் உள்ளது. வாஹித் தொகாட்டில் மாத்லைட் ஹமாமுக்கு அருகிலுள்ள ஹேப்பி ஃபிரண்ட்ஸ் தேநீர் கடையில் பணியாற்றும் ஊழியன். அவன் கல்வி மற்றும் மதச் சுதந்திரம் பற்றிய துருக்கியின் அரசியலமைப்புச் சட்டத்தைக் கடுமையாக விமர்சித்து அங்காராவிலிருந்து வரும் அரசியல் உத்தரவுகள் இறைவனின் கட்டளையா? எனப் பேராசிரியரிடம் கேட்கின்றான்.

"புனித் குர்ஆனின் அத்தியாயங் களான 'நம்பிக்கை வாய்ந்த இனத்தார்' (Confederate Tribe) மற்றும் 'சொர்க்கஒளி' (Heavenly Light) யில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் இறைவனின் வாக்கியங்களுக்குக் கீழ்படிந்து நடந்தமைக்காக அந்த பரிதாபமிக்க மாணவிகளை நீங்கள் நடத்திய விதத்தை யோசித்துப் பார்க்கும்போது உங்களுக்கு மனசாட்சி உறுத்துவதே கிடையாதா?"[5] என்னும் வாஹித்தின் கேள்விக்கு 'கள்வர்களின் கரங்களைத் துண்டித்து எறிய வேண்டும் என்று கூட குர்ஆன்' கூறுகிறது எனப் பேராசிரியர் இசுலாமியப் பெண்களின் சுயகௌரவத்தையும் திருடர்களையும் ஒப்பிட்டுப் பதில் கூறினார். இதனால் சினங்கொண்ட வாஹித் அமெரிக்காவின் கருப்பின முசுலீம் பேராசிரியர் மார்வின்கிங் (Marvin King) கூறிய, "தம்மை முழுவதும் மறைத்துக் கொண்டிருக்கும் இஸ்லாமியப் பெண்கள் மீது வன்புணர்ச்சி ஏறக் குறைய நடப்பதேயில்லை என்றும், இஸ்லாமிய நாடுகளில் பெண்கள் மீது இழைக்கப்படும் பாலியல் வன்முறை என்பது கேள்விப்பட்டிராத வொன்றாக இருப்பதாகவும் குறிப்பிடப் பட்டிருக்கிறது"[6] என்னும் புள்ளி விவரத்தைக் கூறினான். தம்மை முழுவதும் மறைத்துக் கொண்டிருக்கும் பெண், அந்த உடைத்தேர்வின் மூலம் "என்னைத் துன்புறுத்தாதே" என்னும் பிரகடனத்தை முன்வைப்பதாக வாஹித் விளக்கம் கொடுத்தான். மேலும் அவன் முக்காடு அணிந்த பெண்களின் கல்வி உரிமையை மறுப்பது அவர்களை விளிம்பு நிலைக்குத் தள்ளுவதாகவும் எனப் பேராசிரியர் நூரியில்மாஸை எச்சரித்தான். துருக்கியில் நீலம் போன்ற பயங்கரவாத இஸ்லாமிய அரசியல் வாதிகள் பெண்கள் முக்காடு அணிவதை எதிர்க்கவில்லை.

அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் ஆடை சுதந்திரத்தினால் பெண்கள் விபச்சார நிலைக்குத் தள்ளப்பட்டதையும் வாஹித் நூரியில்மாஸிடம் கூறினான். வாஹித் சுதந்திரமான மனிதன். அவன்

எந்த இசுலாமிய அமைப்புக்களிலும் உறுப்பினர் இல்லை. வன்முறையை எதிர்த்துப் போராடும் போராளியாகிய அவன் மனித உரிமைகளை மதிப்பவன்.

## 'முக்காடு' – வெளிநாட்டுச்சக்திகள்

துப்பாக்கியால் தன்னை வாஹித்து சுட்டுக் கொன்று விடுவான் எனப் பயந்த பேராசிரியர் நூரியல்மாஸ், "வெளிநாட்டுச் சக்திகள் இவையனைத்திற்கும் பின்னால் இருக்கக் கூடுமென்று உனக்குத் தோன்றிய தில்லையா? துருக்கியைப் பலவீனமாக்குவதற்கு, துண்டாடுவதற்கு 'முக்காடு' விஷயத்தை அவர்கள் எப்படி அரசியலாக்குகின்றனர் என்று நீ பார்க்கவில்லையா?"[7] என வாஹித்திடம் கேட்கின்றார். தன் மனைவி முக்காடு அணிவதாகவும், அங்காராவில் பப்ளிக் ரிலேஷன்ஸ் படிக்கும் தன் மகள் முக்காடு அணிவதில்லை என்றும் பேராசிரியர் கூறுகின்றார். துருக்கியில் தொண்ணூறு விழுக்காடு பெண்கள் முக்காடு அணிகின்றனர். ஐரோப்பியர்கள் துருக்கியப் பெண்கள் முக்காடு அணியாவிட்டால் அவர்களை மனிதப் பிறவிகளாக நடத்தத் தொடங்கி விடுவார்களா? என வாஹித் மீண்டும் பேராசிரியரிடம் அழுத்தமாகக் கேட்கின்றான். வாஹித் நூரியில்மாஸை **'மிலேச்சப் பிசாசு'** எனக் கடுமையாக சாடுகின்றான். அவர் ஒரு ஆசிரியர் என்பதையும் மறந்து, தன்னளவில் 'முக்காடு' அணிவதன் புனிதத்தையும் இசுலாமியத்தின் மேன்மைகளையும் அவரிடம் எடுத்துக் கூறிப் பலவாறு விவாதிக்கின்றான்.

முசுலீம் பெண்கள் முக்காடு அணிவது அவர்களைக் கிண்டல், வன்புணர்ச்சி, அவமதிப்பு ஆகிய வற்றிலிருந்து பாதுகாக்கின்றது. அழகிப் போட்டிகளில் மற்ற பெண்களோடு போட்டியிடும் அநாகரித்திலிருந்து அசிங்கங்களிலிருந்து முக்காடு அணிவது முசுலீம் பெண்களைப் பாதுகாக்கின்றது. இவ்வாறு வாஹித் எடுத்துக் கூறியும் பேராசிரியர் நூரியில்மாஸ் மனம் வருந்த வில்லை; அப்பெண்களுக்காக தான் இரக்கப்படுவதாக மட்டுமே கூறினார். இதைக்கேட்ட வாஹித்,

"எதற்கு நான் துன்பப்பட வேண்டும்? ஒரு மிலேச்சப் பிசாசை அழித்தொழிப்பதற்காக அல்லாமல், எதற்காக இந்தக் கொடும் பனியில் இரண்டு நாட்கள் பயணம் செய்து வந்திருக்கப் போகிறேன்? புனித குர்ஆன் கூறுவதைப் போல இறை நம்பிக்கை யுள்ளோர் மீது துன்பம் இழைக்கும் எந்த வல்லாளனையும் கொல்வதுதான் என் கடமை. ஆனால் உங்களுக்காக நான் பரிதாபப்படுவதால் ஒரேயொரு கடைசி வாய்ப்பை உங்களுக்கு வழங்கப் போகிறேன். முக்காடு அணிந்த பெண்களின் அங்கிகளை அகற்ற உத்தரவிட்ட போது ஏன் உங்கள் மனசாட்சி உறுத்தவில்லை யென்பதற்கு ஒரேயொரு காரணம் – கூறுங்கள். நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். உங்களைச் சுடமாட்டேன்"[8] என நூரியில்மாஸை இறுதியாக வேண்டிக் கேட்டுக் கொண்டான். அவர் பதில் தர மறுத்தமையால்,

"பேராசிரியர் நூரியில்மாஸ் ஆகிய நான் ஒரு நாத்திகன்.... நான் செய்த எல்லா விஷயங்களுக்காகவும் நான் வெட்கப்படுகிறேன். இறந்து போகத் தகுதியானவன் தான் நான் என்பதை அறிகிறேன். கருணைமிகு இறைவன் என்னை மன்னிப்பார் என்ற நம்பிக்கையில்"[9] என வாஹித் தான் அவருக்காக எழுதிய மரணவாக்கு மூலத்தை அவரைப் படிக்கச் செய்து, உங்கள் மரணம் என் துப்பாக்கியால்தான் என்பதால்தான் "இறைவன் உங்களை நியூலைஃப் பாஸ்ட்ரி ஷாப்புக்குள்

நுழைய வைத்துக் கொண்டிருக்கிறார். இறைவனே உங்களை மன்னிக்கப் போவதில்லையென்றால் நான் ஏன் மன்னிக்க வேண்டும்? உங்கள் கடைசி வார்த்தையைக் கூறுங்கள் "இறைவன் மகத்தானவர்" என்று கூறுங்கள்"[10] என்று கூறவைத்துத் தன் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விடுகின்றான்.

## முடிவுரை

அன்றை துருக்கியில் மதச் சார்புக்கும், மதச் சார்பின்மைக்கும் நடைபெற்ற மோதல்களே ஓரான்பா முக்கின் "பனி" என்னும் நாவலின் கதைக்கருவும் கதைப்போக்குமாகும். மதச்சார்பு என்ற நிலையில் இந் நாவலின் 'குர்ஆன்' வலியுறுத்தும் இசுலாமியச் சிந்தனைகள் பரவலாக முக்கியத் துவத்துடன் பேசப்பட்டுள்ளன. அவற்றை விவாதிப்பதற்காகவே இந் நாவலில் பேராசிரியர் நூரியில் மாஸ், வாஹித் சுஸ்மி என்ற சலீம் ஃபெஸ்மெக்கான் ஆகியோர் கதை மாந்தர்களாகப் படைக்கப் பெற்றுள்ளனர். இசுலாமியத்திற்கு எதிராக செயல்பட்டதால் பேராசிரியர் நூரியில்மாஸ் கொலை செய்யப் படுகின்றார்.

## பயன்பட்ட நூல்

ஓரான் பாமுக், 'பனி' (துருக்கிய நாவல்), தமிழில் ஜி.குப்புசாமி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2018.

# பண்டைய அரசர்களின் வீரப்பண்பாடு

**வளர்மதி**
இணைப்பேராசிரியர்,
ஸ்ரீமீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
மதுரை.

## முன்னுரை

“கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி” தமிழர் குடி. வீரத்தின் விளைநிலங்களான தமிழர்கள் காலந் தோறும் பல்வேறு காரணங்களால் போர்வாழ்க்கை கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். தமிழர்களில் அரசன், தனிமனிதன், புலவர்கள், பெண்கள், குழந்தைகள் எனப் பலரும் வீரத்துடன் திகழ்ந்துள்ளனர் எனப் பழந்தமிழ் இலக்கியங்கள் பகர்ந்துள்ளன. அதனடிப் படையில் பண்டைய அரசர்களின் வீரப் பண்பாட்டைப் பற்றி ஆய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## வீரம்–சொற்பொருள் விளக்கம்

வீரம் என்பது (Bravery, courage, valor) துணிவான ஓர் உணர்வு ஆகும். வீரம் என்றால் வலிமை என்று பொருள். தான் சந்திக்கும் ஒவ்வொரு சவாலையும் சந்தித்து வலி, ஆபத்து, எதிர்பாரா நிகழ்வுகள், எதிர்ப்பு எனப் பலவற்றைக் கடந்து வெற்றி காண முயல்வதே வீரமாகும். அதுமட்டுமன்றி சரி என்று பட்டதை யார் தடுத்தாலும் சிரம் தாழ்த்தாது செய்து முடிப்பதே வீரம் ஆகும்.

‘புதியதோர் உலகு செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்‘ என்று பாவேந்தர் பாரதிதாசன் கூறியிருப்பினும் போர்கள் முடிந்த பாடில்லை. ‘வாழ்க்கையே போர்க்களம் வாழ்ந்துதான் பார்க்கணும் போர்க்களம் மாறலாம் போர்கள் தான் மாறுமோ’ என்றும் ‘சுற்றும் வரை பூமி சுடும் வரை நெருப்பு போராடும்வரை மனிதன்’ என்றும் வைரமுத்து கூறுவது குறிப்பிடத்தக்கது. பழங்காலத்தில் அறப்போராகவும் மறப்போராகவும் இருந்த போர்கள் தற்போது வஞ்சகப் போர்களாக, பயனற்ற முடிவில்லாத போர்களாக இருந்து வருகின்றன. இருப்பினும் போர்களுக்கு அடித்தளமாக விளங்குவது வலிமைகொண்ட வீரமே எனலாம். பண்டைத் தமிழகத்தில் போர்களுக்கு ஒரு நெறி வகுத்து வீரமும் விவேகமும் தம்மிரு கண்களாகக் கொண்டு பழந்தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். போரில் உயிர்விடுவதைப் பெரும்பேறாகத் தமிழர் கருதியதைக் கவியரசு கண்ணதாசன், ‘அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா ஆறிலும் சாவு நூறிலும் சாவு தாயகம் காப்பது கடமையடா’ என்று வீரத்தின் இலக்கணத்தைக் குறிப்பிடுகின்றார். இது தமிழராகிய திராவிடர்க்குப் போர் என்ற ஒன்று தவிர்க்க முடியாதது என்பதை நமக்கு உணர்த்துகிறதல்லவா. இதனை, “ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவது அன்று. உலகத்து இயற்கை” (புறம்.76) என்று புறநானூறும் கூறுகிறது.

"சான்றோர் செய்யுட்கள் காட்டும் சமுதாயமும் சமுதாய இலட்சியங்களும் வீரயுகம் எனப்படும் வரலாற்றுக் காலப்பகுதியைச் சேர்ந்தன' தமிழர் வாழ்வும் வழிபாடும் என்ற நூலில் க.கைலாசபதி. உலகின் பல்வேறு பகுதி களிலும் வீரயுகமென்ற ஒரு வரலாற்றுக் காலம் நிலவியமையைக் கூறி இவற்றுள் காலவொழுங்கில் போரின்றேல் வீரர் களின் சீர் வாடிவிடும் என்றும் படையின்றேல் மன்னர் சீர் வாடிவிடும் என்றும் நான்மணிக்கடிகை கூறுகிறது. அதாவது,

**"போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த**
**வேரின்றி வாடும் மரமெல்லாம்-நீர்பாய்**
**மடையின்றி நீள் நெய்தல் வாடும்**
**படையின்றி மன்னர்சீர் வாடி விடும்"**
**(நான்மணிக்கடிகை, பா.44)**

என்ற பாடல் வழி போர், படை ஆகியவைகளின் முக்கியத்துவங்களைக் காணலாம். வீரத்தின் அடிப்படையில் தோன்றுவது போர்களாகும். போர்கள் தோன்ற அடிப்படைக்காரணங்கள் மண்ணாசை, பெண்ணாசை எனலாம். பிற்காலக் காப்பியங்களான இராமா யணமும் மகாபாரதமும் இவ்வாறு தோன்றியவை என்பது நாம் அறிந்ததே.

## பழந்தமிழ் இலக்கியத்தில் வீரத்தின் இலக்கணம்

பழந்தமிழ் இலக்கியங்கள் வீரத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளன. தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்கள் வெட்சி முதல் பாடாண் வரையிலான திணைகள் போர் குறித்தச் செய்திகளை அரசன், தனிமனிதன், புலவன். மகளிர், குழந்தைகள் என வீரத்தின் விளைநிலங்களைத் திணை வாயிலாக வெளியிடுகின்றன. போர் தோன்றக் காரணம் யாது என ஏங்கல்ஸ் கூறுவதை முனைவர் க.கைலாசபதி (தமிழர் வாழ்வும் வழிபாடும்) தமது நூலில் மேற்கோளாகக் கையாண்டுள்ளார். அதாவது 'முற்காலத்தில் ஆடுமாடுகளை வளர்ப்பது, விவசாயம் செய்வது, குடிசைக் கைத்தொழில்கள் செய்வது முதலிய துறைகளில் உற்பத்தி பெருகியது. இதனால் மனிதனின் உழைப்புச் சக்தி தனது தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்ய முடிந்தது. ஒவ்வொரு குலத்தைச் சேர்ந்த உறுப்பினனும், ஒவ்வொரு குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தினனும் செய்து வந்த வேலை அதிகரித்துக் கொண்டே வந்தது. இன்னும் அதிகமாக உழைப்புச் சக்தி இருந்தால் நல்லது என்று விரும்பினார்கள். இவ்விருப்பத்தைப் போர் நிறைவேற்றி வைத்தது. போரில் பிடிபட்டவர்கள் எல்லோரும் அடிமை களாக ஆக்கப்பட்டனர். ஆகவே அன்று நிலவிய பொதுவான வரலாற்று நிலையில் மாபெரும் சமுதாய வேலைப் பிரிவினை உழைப்பின் உற்பத்திச் சக்தியை உயர்த்தி அதாவது பொருட் செல்வத்தை அதிகப்படுத்தி உற்பத்தித் துறைகளையும் விஸ்தரித்து, அவற்றின் உடனிகழ்ச்சியாக அடிமை முறையையும் உண்டாக்கியது. எனவே இம்மாபெரும் சமுதாய வேலைப்பிரிவினையில் இருந்து முதன்முதலாகச் சமுதாயம் மாபெரும் வர்க்கப் பிரிவினைக்கு ஆளாயிற்று. தலைமக்கள்–அடிமைகள். சுரண்டுகிறவர்கள், சுரண்டப் படுகிறவர்கள் என்று இரு வர்க்கங்கள் உண்டாயின. இது எம்மை நாகரிகத்தின் வாயிற்படிக்குக் கொண்டு வந்து விடுகிறது' (ப.29 பாவை பிரிண்டர்ஸ்(பி) லிட்., ராயப்பேட்டை, சென்னை–600 014. மூன்றாம் அச்சு, செப்டம்பர் 1999)என்று ஏங்கல்ஸ் குறிப்பிடுவதிலிருந்து இதனை அடிப்படையாகக் கொண்டுதான் பண்டைத் தமிழகத்திலே போர்கள் நடைபெற்றது என்றும் அப்போர்களின் விளைவாகத்தான்; தலைவர்கள் தோன்றியிருப்பார்கள் என்பதையும் அதனால் அரசுகள் தோன்றியிருக்கலாம்

என்பதையும் நம்மால் ஊகிக்க முடிகிறது. அதுமட்டுமல்லாமல் போர்களிலே தலைவருக்காக அல்லது மன்னருக்காக இறப்பது சிறந்தசெயல் என்று புலவர்கள் வேறு பிரசாரம் செய்தனர். 'வேந்து விடுதொழில்' என்று அதனைக் கூறினர். வேந்தனுக்காகப் போரிட்டு இறந்தவர்களை உயர்த்திப் பாடுவதன் மூலம் வீரமரணத்தின் விழுமியப் பண்பை நாட்டில் பரப்பினர். 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூலில் வி.கனகசபைப்பிள்ளை பின்வருமாறு கூறியுள்ளார். (மேற்கோள், மேலது., ப.30) 'மன்னனது படையர் குழுவில் ஒரு பகுதியாகப் பாணரும் பொருநரும் வீரரது போர் வேட்கையை வளர்த்து அதற்கு உரமிட்டனர். வெற்றியை இலட்சியமாக்கினர். அமைதியான நேரங்களிலே மன்னனையும் அவனைச் சூழ்ந்தோரையும் தமது வீரமிக்கப் பாடல்களினால் மகிழ்வித்தனர். அம்மன்னரின் மூதாதையர் ஈட்டிய வெற்றிகளை நினைவில் நிறுத்தினர். யுத்த காலத்திலே போர் வீரரோடு தாமும் போர்க்களம் சென்று போர் வீரரை உற்சாகப்படுத்தியதோடு அருஞ்செயல்கள் ஆற்றும்படியும் ஆசை காட்டினர்' என்பதிலிருந்து போர்கள் தோன்றக் காரணங்களையும், தலைவர்கள் மற்றும் அரசர்கள் உருவாகக் காரணத்தையும் நம்மால் அறிய முடிகிறது.

வீரத்தை ஐந்து நிலைகளில் காணலாம். அவை, 1.அரச வீரம் 2.தனிமனித வீரம் 3.புலவர் வீரம் 4.மகளிர் வீரம் 5.குழந்தை வீரம் என்பனவாகும். இவற்றில் அரச வீரம், புலவர் வீரம், மகளிர் வீரம் பற்றிக் காணலாம்.

## அரசவீரம்

அரசன் என்பவன் "படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு"[5] என்று அரசனுக்குரிய சிறப்பினை வள்ளுவர் எடுத்துரைக்கிறார். நமது நாட்டில் அரசர்கள் என்று கூறுவோமானால் அவர்கள் சேர, சோழ, பாண்டிய நாட்டரசர்கள். அவர்கள் எப்போது தோன்றினார்கள் என்று கூறுவது என்பது எளிதன்று. அவர்கள் பழமையான அரச மரபினர் என்று மட்டுமே கூற முடியும். வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாஸ்திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவை இவர்களைப் பற்றிப் பேசுவது கொண்டு இவர்கள் கிறித்துவுக்குப் பன்னெடுங்காலம் முற்பட்டவர்கள் என்று கொள்ளலாம்.

"மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியும்
மும்முரசு முத்தமிழு முக்கொடியு-மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்"

என்னும் திருவள்ளுவமாலைச் செய்யுளை ஒட்டிப் பெயர், மலை, நாடு, நகர், முரசு, தமிழ், கொடி, குதிரை, மாலை என்னும் பத்தும் அரச உறுப்புகள் எனக் கூறுவர். இப்பத்தும் கொண்டவர்கள் மூவேந்தர்கள். மூவேந்தரும் முச்சுடரை முக்குலங்களாகக் கூறி வந்துள்ளனர். பாண்டியர் திங்கட்குலம் என்றும், சோழர் கதிரவக்குலம் என்றும் சேரர் நெருப்புக்குலம் என்றும் வழங்கப்பட்டு வந்துள்ளனர். அரசச்சின்னங்களான குடை, வாள், முரசு, குதிரை, கொடி முதலானவை அவர்களது வீரச்சிறப்பிற்குப் பெரிதும் துணைபுரிந்தன எனலாம். உதாரணமாக ஒன்றைப் பற்றிக் காணலாம். குடை என்பது அரசச் சின்னங்களுள் முதன்மையானது ஆகும். குடை என்பதும் கோல் என்பதும் அரசாட்சி என்பதைக் குறிக்கும் ஆகு பெயராகக் கொள்ளலாம். சான்றாக, தலையாலங்கானத்துச் செருவென்ற

பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னை எதிர்த்துப் போரிட்டுத் தன்னை வெல்லக் காத்திருப்போரால் தனக்கு அழிவு நேருமாயின் தன் மக்களிடையே வஞ்சினம் கூறி ஒரு பாடல் பாடுகிறார். "நகுதக்கனரே நாடு மீக்கூறுநர்..." எனும் கவிதையில்,

**"அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு**
**ஒருங்குப்படே னாயின் பொருந்திய என்நிழல்**
**வாழ்நர் செல்நிழற் காணாது கொடியன்**
**எம்இறையெனக் கண்ணீர் பரப்பிக் குடிபழி**
**தூற்றங் கோலேன் ஆகுக மாங்குடி**
**மருதன் தலைவ னாக உலகமொடு**
**நிலைஇய பலர்புகழ் சிறப்பின் புலவர்**
**பாடாது வரைகஎன் நிலவரை"** (புறம்.72)

என்று வஞ்சினம் கூறுகையில் கூடப் புகழுக்கு ஏங்கும் தன்மையும் மாங்குடி மருதனார் தமிழ்ச்சங்கத்தின் புலவனாக இருந்த தன்மையினையும் நம்மால் அறிய முடிகிறது.

அரசர்களைப் புலவர்கள் தெய்வங்களுக்கு நிகராக ஒப்பிட்டுத் தலைமக்களுக்கு மேலான நிலையில் வைத்துள்ளனர். திருவள்ளுவர் "முறை செய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு இறையென்று வைக்கப் படும்" (குறள்.388) என்று குறிப்பிடுகிறார். அரசர்களை முருகன், சிவன், மாயோன், பலராமன் முதலிய தெய்வங்களை எல்லாம் மக்களின் பண்புகளை விளக்கப் பழந்தமிழிலக்கியத்தில் புலவர்கள் உவமித்துப் பாடியுள்ளனர். புறநானூற்றில் (23, 16–17) கல்லாடனார் என்னும் புலவர் "ஆலங் கானத் தமர்கடந் தட்ட கால முன்ப" என்ற பாடலில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை இயமனுடன் ஒப்பிட்டுப் பாடுகிறார். இங்கு பாண்டியனின் வீரம் இயமனின் செயலுக்கு ஒப்பிடப்படுகிறதென்றால் அவன் போர்க்களத்தில் பகைவர்களை எப்படிக் கொன்று குவித்தான் என்பது வெள்ளிடைமலை. அதுமட்டுமன்றி மன்னரின் குலப்பெருமையைப் பாடும்பொழுது ஆக்கிரமிப்பையும் முன்னோர் செயல் முறைகளோடு இயைபு படுத்திக் காட்டினர். சான்றாக, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கிளைச் சமூகங்கள் பலவற்றை அழித்துப் பாண்டிய நாட்டை உருவாக்கிய மன்னருள் ஒருவன். ஏழுவேளிர்களான யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும், சோழன் இராஜசூய யாகம் வேட்டப் பெருநற்கிள்ளியும், எழினி, எருமையூரன், திதியன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற இரு பேரரசுகளையும், ஐந்து குறுநில மன்னர்களையும் ஆலங்கானம் என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் வென்றடக்கியவன். அவனது போர்ச் செயல்களுக்கும் ஆதிபத்தியத்திற்கும் சமாதானம் கூறுவது போலப் பாடுகிறார் புலவியனார் எனும் சங்கப்புலவர்.

சேர, சோழ, பாண்டியர் மூவரும் சங்க காலத்தில் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் என்பது யாவரும் அறிந்தது தான். இவர்களில் சோழ மன்னர் கொங்கரை அடக்கும் பொருட்டு யானைப்படைகளை உடைய பேளர் என்னும் ஊரின் தலைவனாகிய பழையன் என்னும் சேனாதிபதியிடத்து வேற்படையைப் பெற்று வைத்திருந்தனர். பழையனின் வேற்படைமுன் நிற்பவர் தப்பாது அழிவர் என்பதை நற்றிணைப்(10.5–8) பாடலில் பின்வருமாறு விளக்குகிறார்.

**"இன்கடுங் கள்ளி னிழையணி நெடுந்தேர்ச்**
**சோழர் கொங்கர்ப் பணீஇயர்**
**வேண்கொட் டியானைப் பேளர் கிழவோன்**
**பழையன் வேல்வாய்த்து அன்ன"**

என்ற வரிகளில் விளக்குகிறார்.

இரவலர்க்குப் பரிசாகத் தேர்களைக் கொடுக்கின்ற வள்ளல்தன்மை உடையவர் சோழர். அவர்களுக்குரிய ஊர் குடவாயில். இதனை "தேர்வண் சோழர் குடந்தை வாயில்"(நற்.379–7) என்பதிலிருந்து வெற்றியின் சிறப்பில் பெற்றப் பொருள்களை மற்றவர்க்கு வழங்கும் ஈகை கொண்டவர்கள் மன்னர்கள்.

### சேரமான் கணைக்காலிரும்பொறை

பகைவரை வென்று அவர் பல்லைக் கொணர்ந்து தமது கோட்டை வாயில் கதவில் பதித்து வைத்தல் பண்டை வழக்கு. சேரமான் கணைக்காலிரும்பொறை மூவன் என்பானைப் போரில் வென்று அவனது பல்லைப்பிடுங்கித் தொண்டிக் கோட்டை வாயிற் கதவில் பதித்து வைத்தலை நற்றிணையின் 18(2–5)வது பாடல் விளக்குகிறது.

"மூவன்..................
முழுவலி முள்ளெயி றழுத்திய கதவிற்
கானலந் தொண்டிப் பொருநன் வென்வேல்
தெறலருந் தானைப் பொறையன் பாசறை"

என்ற வரிகளின் மூலம் சேரனின் வீரத்தை நம்மால் உணரமுடிகிறது.

குட்டுவன் என்பான் சேர மரபினன். குட்ட நாட்டை ஆண்ட சேரமன்னர்களைக் குட்டுவர் என்று அழைத்தனர். குட்டநாட்டை ஆண்ட குட்டுவன் என்ற சேரமன்னன் பகை வேந்தரைப் போர்க்களத்தில் கொன்று வெற்றி முரசினை முழங்கும் ஆற்றல் பெற்றவன் என்பதனையும் நற்றிணை பின்வருமாறு விளக்குகிறது.(395–4–5)

கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் குட்டுவன்
வேந்தடு களத்தின் முரசதிர்ந்து"

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன.

### சிற்றரசர்களின் போர்ச்சிறப்பு

மலையமானுக்கும் ஆரியருக்கு மிடையே நடந்த முள்ளூர்ப் போர்; மலையமான் திருமுடிக் காரி திருக்கோவலூர்ப் பக்கத்தை அரசாண்டவன். இவன் காரி எனவும் கூறப்படுபவன். கடையெழு வள்ளல்களுள் ஒருவன். இவன் பரியேறிச் சென்று இராப்பொழுதில் பசுக் கூட்டத்தைக் கவர்ந்து வந்தமையை,

"மாயிரு முள்ளூர் மன்னன் மாவூர்ந்து
எல்லித் தரீஇய இனநிரைப் பல்லான்
கிழவரின்"(291-7-9)

என்ற பாடல் வரிகள் பகைவரிடம் போர் தொடுப்பதற்குக் காரணம் என்பதையும் பண்டைய போர் முறையையும் அறிய முடிகிறது. மேலும் (170–6–8) இவன் அரசாண்ட நாளில் பெரும்படையோடு வடக்கிலிருந்து ஆரியர் தமிழ்நாடு புகுந்து திருக்கோவலூரை முற்றுகையிட்டனர். அதுகண்ட பாரி அஞ்சாது எதிர்த்துப் போர் செய்ய ஆரியர் ஆற்றாராய்ப் பின்வாங்கி ஓடலாயினர்.

"ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது
ஒருவேற்கு ஓடி யாங்கு"

என்ற வரிகளின் ஆரியர் மலையமானோடு போர்த்தொடுத்தற்குரிய காரணம் இப்பாடலில் காணப் படவில்லை. ஆரியரின் பசுக்கூட்டத்தை மலையமான் திருமுடிக்காரி கவர்ந்து வந்துவிட்டமையால், அதை மீட்பதற்காக ஒருகால் ஆரியர் படையெடுத்திருக்கலாம் என்று நம்மால் ஊகிக்க முடிகிறது.

### பறந்தலைப் போர்

அன்னி சோழநாட்டைச் சேர்ந்த சிற்றரசன். இவன் வேளிர் மரபினனாகிய திதியனுக்குரிய காவல் மரமாகிய புன்னையை வெட்டிச் சாய்த்தனன்.

அது காரணமாகத் திதியனுக்கும் அன்னிக்குமிடையே குறுக்கைப் பறந் தலையில் போர் நடைபெற்றது.

**"அன்னியும் பெரியன் அவனும் விழுமிய**
**இருபெரு வேந்தர் பொருகளத் தொழிந்த**
**புன்னை விழுமம்" (நற்:180-5-8)**

**நன்னன்**

இவன் பூழி நாட்டையாண்ட ஒரு சிற்றரசன். சேரர் பரம்பரையைச் சேர்ந்தவன். இந்நன்னனது பூழி நாடும் பிறவும் கொங்கண தேச மெனப்படும். "கோண்கான நன்னன் நன்னாட்டு" (நற்:391–6)எனக்கூறப்படும். இச்சிற்றரசன் பிண்டன் என்னும் அரசனோடும் வேறுபல அரசர்களோடும் போர்செய்து வெற்றி பெற்றவன். அப்பிண்டன் முதலானோருடைய உரிமை மகளிரைப் பற்றி வந்து அம்மகளிர் தலையை மழித்து அக்கூந்தலைக் கயிறாகத் திரித்து அக்கயிற்றாலே பகைவரின் யானையைப் பிணித்து வைத்தான். இதனை,

**"பொற்புடை................**
**விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்**
**வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்**
**கூந்தல் முரற்சியின் கொடிதே"(நற்:270-7-10)**

என்ற பாடல் வழி அறிய முடிகிறது. மன்னன் என்பவன் இன்னநாளில் தான் முடிசூட வேண்டும் என்ற வரையறை இல்லை. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஐம் படைத்தாலி அணிந்த பருவத்திலே முடி சூடியுள்ளான். கரிகாலனும் இளமை யிலேயே முடிசூடினான் என்கிறது பழமொழி நானூறு (21) மன்னனின் முடிசூட்டு விழாவினை ஆண்டுதோறும் கொண்டாடினர். அவ்விழாவினை மண்ணுமங்கலம் என்றழைத்தனர். பிறந்தநாள் விழாவினை நாள்மங்கலம் என்று அழைத்தனர். மன்னனின் அவையானது நாளோலக்கம், அவை, வேட்டவை, நாள்மகிழிருக்கை எனக் குறிக்கப்படுகிறது. இதனைச் சிலப்பதிகாரம் 'பெருநாள் இருக்கை' என்று குறிப்பிடுகிறது. உறையூரிலிருந்த அவை, நீதிக்கும் அறத்திற்கும் பெயர் பெற்றதாக இருந்தது. அதனால் தான் மனுநீதிச்சோழனையும், சிபிச்சக்கரவர்த்தியையும் நம்மால் அடையாளம் காண முடிகிறது. இதனை நற்றிணை(400), புறநானூறு(39)ஆகிய பாடல்கள் உணர்த்துகின்றன.

**முடிவுரை**

மனிதன் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை வீரப்பண்பாடு தமிழர்களின் வாழ்வில் ஒன்றாகக் காணப்பட்டு வருகிறது. தொல்காப்பியர் போருக்கு இலக்கணம் வகுத்ததோடு அதற்கு மலர்களை அடையாளமாகவும் சூட்டி செயல்பட்டு வந்துள்ளதைக் காட்டியுள்ளார். சங்கநூல்களில் ஒன்றான புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் முதலிய நூல்கள் போர் பற்றி விளக்கியுள்ளன. இது தமிழரின் வீரப் பண்பாடாகும். இன்றும் எல்லைப் பிரிவினை போன்றவை இதனடிப் படையில் தோன்றிவருவது கண்கூடாகும்.

# மகளிரின் வளையல் பண்பாடு

**முனைவர் ச.வனிதா**

உதவிப் பேராசிரியர்,

தமிழியல் துறை

தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கல்லூரி,

மயிலாடுதுறை- 609001

## முன்னுரை

தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டில் வளையல் பண்பாடு மிகவும் இன்றியமையாத ஒரு நிகழ்வாக இருந்திருக்க வேண்டும். காரணம் சங்க இலக்கியங்களிலும் பிற பக்தி இலக்கியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் களவு நெறியில் தலைவனைக் கண்டு இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த காலையும் மீண்டும் சந்திப்பு நிகழாது போனால் பிரிந்த நிலையிலும் தலைவிக்குப் பசலை வந்து விடும். இதன் அறிகுறியாகப் புலவர் தரும் குறிப்பு அவளின் கை வளையல் தானே கழன்று விழுந்தன என்பதுதான். அதனால் மகளிரின் தொன்மையான பண்பாடு வளை அணிதல். எனவே தமிழ் இலக்கியங்களில் மகளிரின் வளையல் பண்பாட்டை வெளிப்படுத்துவது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்களின் வாழ்வியல் பண்பாட்டோடு தொடர்புடையதாகவே வளையல் அணியும் பண்பாடு அமைந்துள்ளது. பெண்களின் அடையாளப் பாட்டிலும் தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் வளையல் அணியும் பண்பாடு உள்ளது. ஆனால் ஒவ்வொரு இனத்திற்குத் தக்கவாறு அணிகின்றனர். தங்கம், தந்தம், சங்கு, ஐம்பொன், கண்ணாடி, பிளாஸ்டிக் என்று பல்வேறு கனிமங்களாலும் செய்யப்படுகின்றன. திருமணம் போன்ற விழாக்காலங்களில் கைநிறைய வளையல் அணியும் பழக்கம் உள்ளது. மற்ற நாட்களில் குறைந்த எண்ணிக்கையில் அணிகின்றனர். மண் வளையல் எனப்படும் கண்ணாடி வளையல்களை அணியும் போதும் சித்திர வேலைப்பாட்டுடன் அமைந்த கண்ணாடி வளையல்களை அணியும் போதும் மகளிரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தமிழ்ப் பண்பாட்டில் இன்னும் ஒருபடி மேலே போய் திருவிழாக் காலங்களில், திருவிழாக் கடைகளில் வளையல் வாங்கி அணிவதை இன்பமாகக் கருதுவர். அதுவும் முறையாக உள்ள ஆடவன் தேர்ந்தெடுத்துக் கொடுக்கும் வளையல்களை மனமகிழ்ச்சியோடு அணிந்து மகிழ்வர்.

‘வளையல்’ என்ற சொல் இந்திச் சொல்லான பங்க்ரி என்பதிலிருந்து வந்தது. இதற்கும் கண்ணாடி என்று பொருள். தமிழில் ‘தொடி’ என அழைப்பர். தெற்காசியா முழுவதும் வளையல் அணியும் பண்பு உள்ளது. இது தொல்பொருள் ஆய்வாளர்கள் கருத்துப்படி கி.மு.2500க்கு முன்பே இருந்தது என்பதை சிந்துச்சமவெளி நாகரிகம் உணர்த்துவதும் ஈண்டு கவனிக்கத்தக்கது. தமிழ்நாட்டுப் பெண்கள் தங்கத்தில் வளையல் அணிவதை விரும்புவர். மணப்பெண்கள் நிறைய எண்ணிக்கையிலான வளையல்களை அணிவதை அதிர்ஷ்டமாகக் கருதுவர். வளையல் உடைந்தால் அபசகுனமாகவும்

பார்ப்பர். அதனால் வளையலை உடையாமல் பாதுகாத்துக் கொள்வர். தாங்கள் அணியும் ஆடைக்கு ஏற்ற வண்ணங்களில் வளையல் அணியும் பாங்கும் மகளிருக்கே உரிய மரபாகி விட்டது. தங்க வளையல்கள் எல்லா விதமான உடைகளுக்கும் ஏற்றத்தையும் மதிப்பையும் தரும் என்றும் கருது கின்றனர். திருமணமான பெண்கள் கையில் வளையல் இல்லாது இருப்பதை அபசகுணமாகக் கருதுவதும் உண்டு.

தமிழக மகளிரைப் பொறுத்த அளவில் பண்டையக் காலத்தில் சங்கு வளைகளை அணிந்திருந்த குறிப்புகள் கிடைத்திருக்கின்றன. பூம்புகார் போன்ற பகுதிகளிலும் நெய்தல் நிலப் பகுதிகளிலும் சங்குகள் அதிக அளவில் கிடைத்ததால் அவற்றை அறுத்து வளையல்கள் செய்து அணிந்து மகிழ்ந்தனர். பெரும்பாலும் இலக்கியங்களில் தொடி என்ற சொல்லால் வளையல் அழைக்கப்பட்டது. கருவுற்ற தாய்மார்களுக்கு மிகவும் முக்கியமான விழாவாகக் கொண்டாடப்படுவது வளைகாப்பு விழா. இதுவும் வளையலை முதன்மைப்படுத்தியே கொண்டாடப் பெறும் மகளிரின் மங்கல விழாவாகும். மகளிரின் மங்கலப் பொருட்களில் ஒன்றான வளையல் கைகளுக்கு அழகை அளித்தது என்பதை கலித்தொகை முன்மொழிந்துள்ளது. "தொடி செறி யாப்பும் அமை அறி முன்கை"[1] என்பதாலும் "அகன்தொடி செறிந்த முன்கை ஒலிநுதல்"[2] என்று நற்றிணையும் வெளிப்படுத்தியுள்ளன.

வெள்ளை நிற வளையலை அதாவது சங்கு வளையலை யாவரும் விரும்புவர் என்ற குறிப்பு அகநானூற்றில் இடம்பெறுகிறது "யாவரும் விழையும் பொலன்தொடி பகல்வளை"[3] என்றே உள்ளமை அறியத் தக்கது. வளைந்த வால்போல் உள்ள வடிவத்தையும் "வால்வளை"[4] என்று அடையாளப்படுத்தியுள்ளதால் அறியலாம். "அரம்போல் அறுத்தகண் நேர் இலங்கு வளை"[5] என்று வளையலின் வனப்பும் மொழியப்பட்டுள்ளது. "அரம் போழ் அவ்வளை தோள் நிலை நெகிழ"[6] என்றவிடத்து வளையல் என்றே ஆளப் பட்டுள்ளது.

சங்கு வளையல்களில் வலம்புரிச் சங்குக் கிடைப்பது அரிது என்பர். அதில் வளையல் செய்து போடுபவர்கள் பெரும்பாலும் மன்னர்களின் தேவியர். அந்த நிகழ்வும் நெடுநல்வாடையில் பாண்டிமா தேவியின் அணிகலன்கள் குறித்தக் குறிப்பில் பொன் வளையல் களுடன் வலம்புரி வளையல்களையும் அணிந்திருந்தாள் என்பதை,

**"பொலற்கொடி தின்ற மயிர்வார் முன்கை**
**வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து"[7]**

என்ற குறிப்பு எண்ணத்தக்கது.

முல்லைப்பாட்டில் மகளிரின் விளக்கேற்றும் நிகழ்வை உரைக்கும் நப்பூதனார். சிறிய வளையல்களை முன் கையில் அணிந்த வளையல்கள் அசை யும்படி விளக்கேற்றினர் என்று ஓவியக் காட்சியாகத் தந்துள்ளார்.

**"குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து**
**இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்"[8]**

குறுந்தொகையில் சிறைக்குடி ஆந்தையார் பாடலில் வேட்டையாடித் திரியும் செந்நாய் பாலை நிலத்தில் தரையைத் தோண்டி ஊறிய நீரை உண்டு, பின்னர் எஞ்சியவற்றை அப்படியே விட்டு விட்டுச் சென்றது. அந்நீரெல்லாம் காட்டு மல்லிகையால் நிறைந்து அழுகியது. அத்தகைய நீரை என்னுடன் வளையணிந்த கையை யுடைய தலைவியும் உண்டு களித்தால். அது போன்ற வழிகளில் என்னுடன் வருவதையும் விரும்பிவளாக இருந்தாள் என்று குறிப்பிடும் பரிபாடலில் வளை அணிந்த குறிப்பு இடம்பெற்றுள்ளது.

"வளையுடைக் கையால் எம்மொடு உணீஇயர்"[9] குன்றியன் இயற்றிய மருத நிலப் பாட்டில் "ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்"[10] என்று இடம் பெற்றுள்ளதால் நெல் வயல்களில் வளையணிந்த மகளிர் வண்டல் என்னும் சிறு வீடு கட்டி விளையாடினர் என்பதை வெளிப்படுத்தியுள்ளதாகவும் வளையணிதல் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

நற்றிணையில் தலைவி ஒருத்தி செய்யும் செயல் வழி ஓர் அருமையான நிகழ்வைப் பதிவு செய்துள்ளார் கணக்காயனார் என்னும் புலவர். தலைவன் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் நீட்டிக்கின்றான். அதனால் உள்ளத்தாலும் உடலாலும் மெலிகின்றான். இதனைக் கண்ட தோழி தலைவனை நோக்கி உரைத்த செய்தியாக்கத்தில் தலைவியானவள் மிகவும் மெலிந்து தோள் வாடிக் காணப் படுவதை, மறைப்பதற்காகத் தன் வளையல்களைக் கைகளில் மாற்றி மாற்றி இடுகிறாள். இதனால் வளையல்கள் கழன்று விழுவதை மாற்றவே தன் உடம்பில் ஏற்பட்ட களைப்பால் இது நிகழ்ந்ததாக மெய்ப்பாடு செய்கிறாள் என்று வளையல் கழன்று விழும் அளவிற்கு மெலிந்து விட்டாள் எனக் காட்டியுள்ள சிறப்பு எண்ணத்தக்கது. இதனை,

**"தொடிபழி மறைத்தலின் தோள் உய்த்தனவே**
**வடிகொள் கூழை ஆயமொடு ஆடலின்**
**இடிப்பும் மெய்யது ஒன்று உடைத்தே**
**கடிக்கொள்**
**அன்னை காக்கும் தொல் நலன் சிதையக்**
**காண்தொறும் கலுழ்தல் அன்றி ஈண்டு நீ"**[11]

என்பதால் அறிய முடிகிறது.

திருமணத்திற்குப் பொருள் ஈட்டச் சென்ற தலைவன் பிரிந்ததனால் தலைவி மெலிவடைகிறாள். தோழி அவளை ஆற்றுவித்தாள். ஆனாலும் தலைவியின் நெஞ்சம் தலைவன் பால் சென்றது. அதை மற்றொரு உயிராக எண்ணி அது மீண்டும் தன்னிடத்தில் வந்து சேருமா? என்னை அடையாளப்படுத்திப் பார்க்குமா? என்ற கேள்விகளை முன்வைத்து தோழியிடத்தில் கூற்று நிகழ்த்துகிறாள். அப்போது என் கை வளையல்கள் கழன்று விழுமாறுச் செய்து விட்டுச் சென்றவன் தலைவன் என்ற குறிப்பினால் பிரிவினால் தலைவி அணிந்திருந்த வளையல்கள் கழலும் என்று காட்டியுள்ளார்.

**"கண்களி பெறூஉம் கவின் பெறு காலை**
**எல்வளை நெகிழ்ந்தோர்க்கு உறீஇயர்"**
**சென்ற நெஞ்சம் செய்வினைக்கு உசாவாய்**
**ஒருங்கு வரல் நசையொடு வருந்துங்**
**கொல்லோ"**[12]

என்பதால் அறியமுடிகின்றது.

இவ்வாறே நற்றமனாரின் நற்றிணைப் பாட்டிலும் வாடிய மேனியாலும் தோள்களாலும் கை வளையல்கள் கழன்றன என்று பதிவு செய்துள்ளார். இதனை,

**"தோளே தொடி கொட்டபு ஆனாகண்ணே**
**வாள் ஈர் வடியின் வடிவிழந் தனவே**
**நுதலும் பசலை பாயின்று திதலை"**[13]

என்று இடம்பெற்றுள்ளதால் உணர முடிகின்றது. இவ்வாறு பல பாடல் களிலும் தலைவன் பிரிவால் தலைவிக்கு ஏற்பட்ட மெலிவு நோயான பசலை வந்தால் உடல் மெலிவதோடு அவள் அணிந்திருந்த கை வளையல்கள் தானே கழன்று விழுந்து விடும் என்பதால் வளையல்கள் அணிந்த குறிப்பு எண்ணத்தக்கது. குற்றாலக் குறவஞ் சியில் இறைவன் உலா வந்த போது வசந்த வல்லி அவர் மீது மையல் கொண்டாள். பின்னர் அதனால் ஏங்கிய வழி கை வளையல்கள் கழன்றன என்ற குறிப்பும் எண்ணத்தக்கது. கலித்தொகை,

அகநானூறு, ஐங்குறுநூறு போன்ற சங்க இலக்கியங்களில் வளையல் அணிந்த நிலையும் தலைவியின் மெலிவால் கழன்று விழுந்த நிகழ்வும் பல பாடல்களில் சொல்லப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தின் பாட்டுடைத் தலைவியான கண்ணகியும் சிலம்புடன் கை வளையல்களையும் உடைத்தாள். என்ற செய்தியும் ஈண்டு நினைத்துப் பார்க்கத்தக்கது.

## தொகுப்புரை

பெண்களின் மங்கலப் பொருட்களில் ஒன்றான வளையல் அணியும் பண்பாடு தொன்மைமிக்கக் காலத்திலேயே இருந்துள்ள ஒரு பழக்கம் ஆகும். தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியா முழுக்கவே இந்தப் பண்பாடு இருந்துள்ளது. ஆசியா முழுவதும் பரந்த ஒரு பண்பாடாகவே இருந்துள்ளமையையும் அறிய முடிகிறது. சிறுமி முதல் திருமண மகளிர் வரை யாவரும் வளையல் அணிந்திருந்தனர். வளையல் ஒரு மகிழ்ச்சியின் அடையாள மாகவும் பார்க்கப்பட்டது. கை நிறைய வளையல்களை மங்கல நாட்களில் குறிப்பாக, திருமண நாட்களில் அணிந்து மகிழ்ந்துள்ளனர். மரம், மண், கண்ணாடி, தந்தம், சங்கு, பிளாஸ்டிக் போன்ற கனிமங்களால் செய்யப்பட்ட வளையல்களை விடவும் தங்கத்தில் வளையல் அணிவதை மகளிர் பெரிதும் விரும்பினர். வளையல் அணிவதை எவ்வாறு மங்கலமாக நினைத்தார்களோ அவ்வாறே அது உடைந்து போனால் அதை அபசகுனமாகவும் கருதினர். களவுக் காலத்தில் தலைவன் பிரிந்து சென்றால் தலைவி மெலிவடைவாள். அப்போது காட்டப்படும் ஒரு குறியீடு கைவளையல்கள் தானே கழன்று விழும் என்பதாகும். ஆக, தமிழர் பண்பாட்டில் மகளிரின் மங்கலப் பொருள் அணிவதில் வளையல்கள் மிகப் பெரும் புரட்சியை செய்துள்ளமையை அறிய முடிகிறது. தமிழ்ப் பண்பாட்டில் தொடர்ந்து வரும் பண்பாடாகத்திகழ்ந்து வருவதும் எண்ணத் தக்கதாகும். மகளிரின் உச்சபட்ச விழாவாக அமையும் வளை காப்பு விழா என்பது மகளிரின் பண்பாட்டு விழாவின் அடையாளம் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

## குறிப்பெண் விளக்கம்

1. *கலித்தொகை, 54–3*
2. *நற்றிணை பா. எண்.77*
3. *அகநானூறு பா.எண்.16–5*
4. *மேலது, பா.எண்.90–16*
5. *மதுரைக் காஞ்சி, பா.எண்.316*
6. *அகநானூறு, பா.எண்.125–1*
7. *நெடுநல்வாடை, பா.அடி. 141–142*
8. *முல்லைப்பாட்டு, பா.அடி.45–46*
9. *குறுந்தொகை பா.எண்.56–3*
10. *மேலது, பா.எண்.238–3*
11. *நற்றிணை பா.எண்.23*
12. *மேலது, பா.எண்.56*
13. *மேலது, பா.எண்.133*

# கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்துக் கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும்

**– ச.வாசுதேவன்**

*முனைவர்ப் பட்ட ஆய்வாளர்,*
*இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர் - 613 010*

## முன்னுரை

*பண்பட்ட காலச் சூழலில் மக்களின் மகிழ்விற்காகவும் பண்பாட்டு விழுமியமாகவும் விளங்கியவை கலைகளாகும். கலைகளைத் தனது தொழிலாகக் கொண்டு நிகழ்த்தி வரும் ஆளுமையாளர்களாக இருப்பவர்கள் கலைஞர்கள். கலைஞர்களின் வாழ்வியல் பண்பாட்டின் உச்சமாக விளங்கிய காலம் சங்க காலம். தனித்தனிப் பாடல்களாக பாடப்பட்டவைகளில் பத்துப்பாட்டு எனும் தொகுதி உள்ளடங்கும் இதில் ஆற்றுப்படை இலக்கியங்களாக சுட்டப்படுபவை ஐந்து ஆற்றுப்படை நூல்களிலேயே அடி வரையறைகளால் பெரிய நூலான கூத்தராற்றுப்படை மன்னனிடம் இருந்து பரிசில் பெற்ற கூத்தன் மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டது. தொல்காப்பியம் ஆற்றுப்படைக்கான இலக்கணம் கூறும் பொழுது கூத்தர் என்னும் மரபு வழிக்கலைஞரில் இருந்து தொடங்குகிறார். தொல்காப்பியர் சுட்டும் ஆற்றுப்படை இலக்கணங்களுக்கு உட்பட்டு பெருங்கௌசிகனாரால் பாடப்பட்ட கூத்தராற்றுப்படையில் குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் திறம்பட விளக்குவது இக்கட்டுரையின் முதன்மை நோக்காகும்.*

## கூத்தராற்றுப்படையும் கலைஞர்களும்

*கூத்தராற்றுப்படை கூத்தர் பொருநர் பாணர் விறலியர் ஆகிய கலைஞர்களின் வகைகளைப் பட்டிய லிட்டு குறிப்பிடுகின்றது. கூத்தரின் வாழ்வியல் தெளிவாக விளக்கப்பட்டு இருக்கின்றன. கூத்தர்கள் கலைகளையும், இசைக்கருவிகளை இசைப்பதையும் தங்களது அன்றாட வாழ்வியலின் பணியாகவே மேற்கொண்டுள்ளனர். கூத்தர்கள் கூத்து நிகழ்த்துபவர்களாகவும் கூத்தினை மன்னனிடம் நிகழ்த்தி காட்டிப் பரிசு பெறுபவர்களாகவும் வரையப்பட்டுள்ளனர். சங்க இலக்கிய செவ்வியல் மரபில் பண்களுக்கு என்றே தனி இடம் வழங்கப்பட்டு இருக்கிறது. கூத்தர்கள் நாடகம் நடிப்பவர்களாகவும் பாணர்கள் யாழ் மீட்டிப் பாடுபவர் களாகவும் விறலியர்கள் ஆடிப்பாடி மகிழ்விப்பவர்களாகவும் காண்பிக்கப் பட்டிருக்கிறார்கள். நிகழ்த்துக் கலைஞர்களின் பண்பாட்டு ஆவணப் பதிவாக மலைபடுகடாம் விளங்கு கின்றது. கூத்தன் தான் கூற வரும் கருத்தினை முன்னமே திறம்படத் தொகுத்து விளக்குவதை.,*

**ஆற்றின் அளவும் அசையுணர் புலமும்**
**வீட்டு வளன்சுரக்கும் அவன்**
**நாடுபடுவல்வல்சியும்**
**மலையும் சோலையும்மாப் புகழ் காணமும்**
**தொலையா நல்லிசை உலகம் உடு நிற்ப......**
**(மலைபடு :)**

என்ற பாடல் அடிகள் எடுத்துரைப் பதைக் காணலாம். "கூத்தர் என்பவர் தனிக்கூத்திலும் கதை தழுவி வரும் கூத்திலும் வல்லவர்" என்கிறார் மா.ராச மாணிக்கனார். (பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக் : 45) அவரே, "பொருநர் என்பவர் ஏர்க்களம், போர்க்களம் சென்று பாடும் கூத்தர்" எனவும் கூறுகின்றார். (மேலது, பக் : 45)

கூத்தரை மலைபடுகடாம் கொடிச்சியர், கோடியர் எனும் சொல் கொண்டு வழங்குகின்றது.

விறலியரின் குரல் திறத்தை.,

"இரும்புது கஞலிய இன்குரல் விறலியர்"
(மலைபடு : 358 அடி)

என்கிறது மலைபடுகடாம். தொல் காப்பியம் ஆற்றுப்படைக்கான இலக்கணத்தைக் கூறுகின்றது. அவை.,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சிஉறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறாக் அறிகுரீஇ
சென்ற பயனெதிர் சொன்ன பக்கமும்"
(தொல்.புறத் : 36)

கூத்தராற்றுப்படையில் குறிப் பிடப்படும் கூத்தரும் விறலியும் முழவு, பெருவங்கியம், யாழ் போன்ற இசைக் கருவிகளைக் கொண்டு அரசனை வாழ்த்தி போற்றும் மரபினராக இருந்து உள்ளனர் என்பதை.,

"நெடுங்கடைத் துவன்றி முன்றிலை அணுகி
முரசு இருப்பவும் தூம்பு இமிரவும்
விறலியர் யாழின் நரம்போடு புணர்ந்து"
(மலைபடு : அடிகள்)

எனும் பாடல் அடிகள் உணர்த்து கின்றன. கூத்தராற்றுப்படை நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலைப் படம் பிடிப்பதோடு மட்டுமல்லாது அவர்களின் பண்பாட்டினையும் கலை மரபுப் பதிவுகளையும் ஆவணப்படுத்தி தன்னுள் பதிவுசெய்துள்ள கலைக்களஞ் சியமாகவும் விளங்குவதைக் காணலாம்.

## கூத்தராற்றுப்படை குறிப்பிடும் இசைக் கருவிகளும் இசைக்கும் கலைஞர்களும்

கூத்தராற்றுப்படை மக்களின் வாழ்வியல் குறித்துப் கூறும்பொழுது பலவகைப்பட்ட ஓசையைப் பற்றியும் கூறுகின்றது. அதிலும் குறிப்பாக கொடிச்சியர் (கூத்தர்) பாடல் பாடி புலியால் ஏற்பட்ட காயத்தை ஆற்றும் பண்பாட்டின் விழுமியத்தையும் குறிப் பிட்டுள்ளது. மலைபடுகடாம் கூத்தரை கோடியர் என்ற பெயரால் வழங்கு கின்றது. இசைக்கருவிகளை இயங்கள் என்னும் சொல்லைக் கொண்டு பதிவு செய்கின்றார் மா.ரா (பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக் : 529)

பெரிய வகையான இசைக் கருவிகளை நெடும்பல்லியங்கள் என்றும், சிறிய வகையான இசைக்கருவிகளை குறும்பல்லியங்கள் என்றும் அழைப்பர். (மேலது, ப.529) ஆயகலைகள் அறுபத்து நான்கில் இசைக்கருவிகள் மூன்றாவதாக உள்ளது. சமணர் நூல்களில் ஆடவர் கலைகள் எழுபத்திரண்டு என்றும் பெண்களுக்கு உரிய கலைகள் அறுபத்து நான்கு என்றும் கூறப்பட்டுள்ளன. (தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, ப.492)

நன்னன் சேய் நன்னனை கூத்தர்கள் காணச் செல்லும்போது அவர்கள் இசைக்கருவிகளை மூட்டை கட்டி எடுத்துச் சென்றனர் என்றும் அக்கருவிகளை நான்கு வகையாக வகைப்படுத்தி உரையாசிரியர்கள் உரை கண்டுள்ளனர் எனபது தெளிவு. அவை., தோற்கருவி, துளைக்கருவி நரம்புக்கருவி, கஞ்சக்கருவி.

## கூத்தராற்றுப்படை குறிப்பிடும் தோற்கருவிகள்

தோற்கருவிகள் என்பவை ஆவின், மறி, கலைமான் ஆகிய விலங்குகளின் தோலால் செய்யப்படும்

இசைக்கருவிகளாகும். நன்கு இறுகி வார்பிடிக்கப்பட்ட மத்தளம் எல்லா கருவிகளுக்கும் அடிப்படையானது. சிறுபறை (ஆகுளி) சல்லிகை, கரடிகை (தட்டைப்பறை) மாக்கிணை, ஒரு கண் மாக்கிணை என்னும் பறை, பதலை, எல்லரி, முழவு, உடுக்கை, பம்மை (பம்பை) போன்ற கருவிகளைப் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

இவ்விசைக்கருவிகள் பற்றி.,

**“விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவோ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்”**
**(மலைபடு, *2 - 4* அடிகள்)**

எனும் பாடலடிகள் கூறுகின்றன. மத்தளம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒரு பகுதி கண், மறுபகுதி தொப்பை (வயிறு). சமகாலத்தில் தெருக் கூத்துக்குப் பயன்படும் முக்கியமான இசையாக்கருவியாகவும் மத்தளம் (மிருதங்கம்) உள்ளது.

## கூத்தராற்றுப்படை குறிப்பிடும் துளைக்கருவிகள்

துளைக்கருவிகள் என்பவை, காற்றின் இயக்கத்தால் ஒலி தரும் கருவிகள். காற்றினை அடிப்படையாகக் கொண்டது. இவ்இசைக்கருவிகள் பண்ணுக்குப் பயன்படும் பண் கருவிகளாகும். பண்கள் திணையை மையமிட்டதாகும். திணைசார் மக்களின் பயன்பாட்டிற்கு உரியது. துளைக் கருவிகள் பற்றிய நுட்பமான விடயங்களை இசைத்தமிழ் இலக்கிய இலக்கணங்கள் வகைப்படுத்தினாலும் மலைபடுகடாம் பல்வேறு கருவி வகைகளை குறிப்பிடுகின்றன.

குழல், வங்கியம், தூம்பு, நெடுந்தூம்பு, குறுந்தூம்பு, நெடுவங்கியம் (யானையின் துதிக்கையினை ஒத்தது), ஊது கொம்பு (மாட்டின் கொம்பினை அடிப்படையாகக் கொண்டது) ஆகிய இசைக்கருவிகளின் வகைகள் பற்றிய பதிவுகள் உள்ளன.

**“கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பி
இளிப்பயிர் இமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது......”**
**(மலைபடு, *6 - 8* அடிகள்)**

## கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நரம்புக் கருவிகள்

நரம்பினைக் கொண்டது நரம்புக் கருவிகளாகும். நரம்புக் கருவிகளை இந்நூல் குறிக்குமிடத்து யாழ் எனும் ஒரு கருவியை மட்டும் பதிவு செய்கின்றது. யாழின் இயல்புகளைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது. பெருங்கௌசிகனார் இசைத்தலை ‘தொடுதல்’ என்னும் சொல்லைக்கொண்டுகையாண்டுள்ளார். யாழ் நான்கு வகைகளை உடையது. அவை பேரியாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், மகரயாழ். இதில் பேரியாழ், சீறியாழை மட்டும் மலைபடுகடாம் குறிப்பிடு கின்றது. யாழ் பாணர்களின் வாசிப்புக் கருவியாக உள்ளது. இசையையும் கூத்தையும் வளர்த்துப் போற்றிய குடியினர் பாணர் என்கிறார் நர்மதா. (ஆடற்கலையும் தமிழ் இசை மரபுகளும், பக் : 24) யாழ் பண் கருவியாகும். யாழை வருணிக்கும் இந்நூல் மற்ற இசைக்கருவிகளைக் காட்டிலும் இக்கருவிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. யாழை பொன்நிறம் பூட்டப்பட்ட தோலைக் கொண்டு போர்த்தியுள்ள நிலையைக் காண முடிகின்றது. யாழின் தன்மைக்கேற்ப நல்யாழ் என்னும் சொற்றொடரை பல இடங்களில் ஆற்றுப்படை குறிப்பிடுகின்றன. அவை.,

“மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா”.....
**(மலைபடு, *534 - 535* அடிகள்)**

என்றும்.,

**களங்கனி அன்ன கதழ்ந்து கிளர் உருவின்
வணர்ந்து ஏந்து மருப்பின் - வள் உயிர்ப்
பேரியாழ்.... (மலைபடு, 36 - 37 அடிகள்)**

என்றும் பதிவுகள் உள்ளன.

## கூத்தராற்றுப்படை குறிப்பிடும் கஞ்சக் கருவிகள்

கஞ்சக் கருவிகள் என்பவை பித்தளை, உலோகங்கங்களால் ஆக்கப் படுவது. பித்தளையை (கஞ்சம் – வெண்கலம்) தகடாக வடித்து உருவாக்கப் படுவது இக்கருவி. இதனை தாளம் என்பர். கூத்துக் கலைஞருக்கு மத்தளமும் தாளமும் இருகண்களாகும். தாளத்தை மலைபடுகடாம் பாண்டில் என்று குறித்துள்ளது. இதனை உலோகத்தாளம் என்பார் நச்சினார்க்கினியர். (மலைபடு, பக் : 59) இதனை.,

**நுண் உருக்கு உற்ற விளங்கு அடர்ப்
பாண்டில்" (மலைபடு, 4 அடி)**

என்கின்றது.

## முடிவுரை

கலைஞர்களுக்குப் பண்பாடும், கலையியலும் அன்றாட வாழ்வில் கடைபிடிக்கும் தலையாய தொழிலாக விளங்கின. கூத்தறாற்றுப்படையே அதற்கு சான்றாதாரம். தமிழ்ப் பண்பாட்டுப் பெட்டகமான பத்துப் பாட்டில் கூத்தறாற்றுப்படை கூறும் நிகழ்த்துக் கலைஞர்களின் வாழ்வியல் தனித்துவ செவ்வியல் தன்மை பெற்றிருப்பினும், இசையை மருந்தாகக் கொண்டு காயம் ஆற்றுதல் (இன்றைய பாடம் போடும் முறை), பாட்டுப் பண்பாடு, இசைக்கருவிகளின் அளவு, செய்முறைத்தொழில் நுட்பம், பண்களை கையாளும் திறம் ஆகியவற்றை நோக்குங்கால் சங்ககால கூத்தராற்றுப் படை குறிப்பிடும் கலைஞர்களின் நீட்சியே சமகாலத் தெருக்கூத்துக் கலையின் தொடர்ச்சியாக உள்ளது என்பதை இவ்ஆய்வுக் கட்டுரை தீர்க்கமாய்க் கூறுகின்றது.

## துணைநூற்பட்டியல்

சங்க இலக்கியம் மலைபடுகடாம் (பத்துப்பாட்டு – 2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை.

ஆடற்கலையும் தமிழிசை மரபுகளும், தொ.ஆ சிற்பி பாலசுப்பிரமணியம், 2021, சாகித்திய அகாதெமி வெளியீடு, சென்னை.

தொல்காப்பியம் தெளிவுரை, உ.ஆ ச.வே.சுப்பிரமணியன், 2019, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சங்க இலக்கியம் (பாட்டும், தொகையும்), எஸ்.வையாபுரிப் பிள்ளை, 2012, முல்லை நிலையம், மதுரை

பத்துப்பாட்டு ஆராய்ச்சி, மா.இராச மாணிக்கனார், 2019, சாகித்திய அகாதெமி வெளியீடு, சென்னை

தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, தொ.ஆ பேரா.சண்முகசுந்தரம், காவ்யா வெளியீடு, 2022, சென்னை

மலைபடு கடாம், உ.ஆ ப.சரவணன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், முதல்பதிப்பு : 2022, சென்னை.

# நற்றிணை காட்டும் வாழ்வியல்

**இரா.விக்னேஷ், எம்.ஏ.,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
லதா மாதவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கிடாரிப்பட்டி, அழகர்கோவில், மதுரை-01

## முன்னுரை

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை நம் தமிழர்களுக்கே உரித்தானது. கிமு மூன்றாம் நூற்றாண்டில் இருந்து கிபி மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியைச் சங்ககாலம் என்பர். இக்காலத்தில் தோன்றிய பாட்டும் தொகையும் சங்க இலக்கியங்கள் ஆகும். இலக்கியங்கள் மனித வாழ்வினைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் இவை பொதுவாகப் பண்பாட்டை மட்டும் எடுத்தியம்பும் நூல்களாக இல்லாமல் பண்பாட்டோடு நாகரிக வளர்ச்சியின் அறத்தை வெளிக் காட்டும் அட்சயப் பாத்திரங்களாகத் திகழ்கின்றன. அவ்வகையில் நற்றிணை எண்ணிலடங்கா வாழ்வியல் பண்புகளை எடுத்தியம்புகின்றது. சிறப்போடு வாழ்ந்த சங்ககால மக்களின் வாழ்வியலை நற்றிணைப் பாடல்கள் வாயிலாகப் பதிவு செய்யும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது.

## நற்றிணையில் பண்பாடு

சிறந்த வாழ்க்கைக்கு அடிப் படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப் பாட்டையே பண்பாடு என வரலாற்று அறிஞர்கள் குறிப்பர். மேலும், வள்ளுவப் பெருந்தகை,

> "பண்புடையார் பட்டுண்டு உலகம்
> அஃதின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்" (குறள்.996)

எனும் குறட்பாவில் பண்புடையவர்கள் இருப்பதாலே உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது இல்லையேல் என்றோ மண்ணில் புதைந்திருக்கும் என்கிறார். சங்ககால இலக்கியங்களிலும் அதற்குப் பின்வந்த இலக்கியங்களிலும் பண்பாடு எனும் சொல் இடம் பெறவில்லை. ஆனால் பண்பு என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. 'பண்பு' எனும் சொல் பண்பாட்டையே குறிக்கின்றது என்பதை அறியலாம். பண்பாடு எனும் சொல்லிற்குப் பதிலாகப் 'பண்பு' எனும் சொல் கையாளப்பட்டள்ளது என்பதை,

> "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்"
> (கலித்.133)

எனும் கலித்தொகை பாடல் அடியின் வாயிலாகவும் அறியமுடிகிறது.

> "பாடறிந்து ஒழுகும் பண்பினோரே"
> (புறம்.191)

எனும் புறநானூற்று அடியின் வாயிலாகவும்;

> "இசையினும் குறிப்பினும் பண்பினும்
> தோன்றி" (தொல்.சொல்.297)

எனும் தொல்காப்பிய நூற்பாவின் வாயிலாகவும்,

பண்பாடு என்பது மனித உள்ளத்தோடு தொடர்புடையது; பிறர் உள்ளத்தில் நிலைத்து நிற்பது; காதலின் வெளிப்பாடு; காதலன் மீதும் கணவன் மீதும் நம்பிக்கை கொண்டிருப்பது

முதலானவற்றைக் குறிப்பதாகும். இதனை, நற்றிணைத் தலைவி

"நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என் தோள் பிரிபறி யலரே
................................................
நீரின்றமையா உலகம் போலத்
தம்மின் றமையா" (நற்.1)

எனும் பாடல் அடிகள் மூலம் தன்னகத்தே காதல் கொண்ட தலைவனின் மாண்பு களை எடுத்துரைக்கின்றாள். மேலும், தலைவனானவன் அறத்தின் மகன், அவன் நெடுங்காலம் வாழ வேண்டும் என்பதைத் தலைவி,

"அறவர் வாழி தோழி" (நற்.86)

என்று தோழியிடம் கூறுவதன் மூலம் அறியமுடிகிறது.

## ஆறுதல் கூறும் பண்பு

தமிழர் மரபுகளில் ஆறுதல் கூறும் பண்பு தொன்றுதொட்டு வருகின்றது. தலைவியின் மனம் வாடியிருக்கும் போது தோழி ஆறுதல் கூறுவதை நற்றிணைப்பாடல்,

"அற்சிரக் காலையும்
அரிதே காதலர் பிரிதல் இன்று"
(நற்.5)

எனும் அடிகளின் வாயிலாகத் தோழி தலைவியிடம் உனக்கும் தலைவனுக்கும் பிரிவே கிடையாது. ஆகவே மகிழ்ச்சி யாக இருப்பாயாக என்று ஆறுதல் கூறுகின்றாள்.

## தலைவனின் மாண்புகள்

தலைவன் என்பவன் மாண்பு களைத் தன்னகத்தே கொண்ட வனாகக் காட்சியளிக்கிறான். தலைவன், தலைவி காதலின் இடையே இருவரின் மேன்மை நலன்கள் அதிகமாக எடுத்துரைக்கப்படுகின்றன.

"திருமணி புரையும் மேனி மடவோள்
யார் மகள் கொல் இவள் தந்தை வாழியர்
................................................
தன் திறம் பெறுக இவள் ஈன்ற
தாயே". (நற்.8)

எனும் பாடல் அடிகள் மூலம், பொன் போன்ற மேனி உடையவள் தலைவி. அவளின் அழகினைக் கண்டு இவர் யார் மகள் என்று கேட்கும் அளவிற்கு திறன் வாய்க்கப் பெற்றவள். இவ்வழகு மகளைப் பெற்ற தந்தையும் தாயும் நீண்ட நாள் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றான் என்பதன் மூலம் தலைவனின் மாண்பினை அறியலாம். இதனையே,

"உன்ன பெத்தவள பாத்தா
கோயிலே கட்டு வேண்டி ஆத்தா"
(திரை.)

எனும் திரையிசைப் பாடல் இதன் கருத்தை உள்வாங்கியுள்ள பாங்கினைக் அறிய முடிகிறது.

அன்னை என்பவள் ஆதரவையும் அரவணைப்பையும் வெளிக்காட்டும் ஒரு உன்னத உயிராவாள். அன்பின் உருவம் அன்னை. ஆனால் தலைவன் அன்னையாக இருக்கின்ற திறத்தினை,

"என்கைக் கொண்டு தன் கண் ஒற்றியும்
தன்கைக் கொண்டு என் நல்நுதல் நீவியும்
அன்னை போல இனிய மொழி கூறியும்"
(நற்.28)

எனும் பாடலடிகள் மூலம் தலைவனின் கைகளால் தலைவியின் கண்களை ஒற்றிக்கொள்வது, நுதலை நீவி அன்பைக் காண்பிப்பது, அன்னை போல வருத்தம் நீக்கும் சொற்களைக் கூறுவது போன்ற செயல்களால் தலைவன் தன் அன்னை எனத் தெரிவிக்கின்றாள் தலைவி.

## பெரியோரின் பொறுமை

மனிதனுக்கு அவசியமான ஒன்று பொறுமை. சிறுமை தவிர்த்த பொறுமை வேண்டும். தீமை செய்வோர் இழிவானவர். அவர்களை நல்வழியில்

செலுத்த இயலாது அவர்களே உணர்ந்து செயல்பட்டால் திருந்தலாம் என்பதை நற்றிணை,

**"தீமைக் கண்டார் திறத்தும் பெரியோர்**
**தாமறிந்து உணர்க என்ப மாதோ"**
(நற்.116)

எனும் பாடலடியின் வாயிலாக தீந் தொழில் செய்யும் பாவிகளை நேரில் கண்ட பெரியோர் பொறுமையுடன் அவர்களே திருந்தட்டும் என்று நிற்பர் என்று எடுத்துரைக்கின்றது. இதனையே,

**"திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால்**
**திருட்டை ஒழிக்க முடியாது"** (திரை.)

எனும் திரையிசைப் பாடல் இதன் கருத்தை உள்வாங்கியுள்ளதனை அறிய முடிகிறது.

## சிறந்தது எது?

உயிர் என்பது அனைவராலும் மதிக்கும் தன்மையுடையது. சங்ககால மக்களின் வாழ்வியலைப் பல்வேறு பாடல்களில் குறிப்பிடுகின்றது நற்றிணை. நாணம் என்பது வெட்கம் என்று பொருள்படும் உயிரை விடச் சிறந்தது உலகில் உண்டு என்பதை,

**"உயிரினும் சிறந்தது நாணு"** (நற்.17)

எனும் அடியில் உயிரை விடச் சிறந்ததாகவும் உயர்ந்ததாகவும் நாணம் இருந்துள்ளதை நற்றிணை குறிப்பிடுகின்றது.

**"உயிரினும் சிறந்தன்று நாணே"**
(தொல்.பொருள்.கள.23)

என்று தொல்காப்பியமும்,

**"நலனுடைமையின் நாணுச் சிறந்தன்று"**
(முதுமொழி.சிற.6)

என்று முதுமொழிக்காஞ்சியும் செப்புகின்றன.

## சான்றோர் செல்வம்

பண்டைத் தமிழர்கள் உலகோர் பின்பற்ற வேண்டிய பல உயரிய பண்பு நலன்கள் உடையவராக வாழ்ந்துள்ளனர். தன்னிடம் அடைக்கலமாகச் சேர்ந்தாரின் இடரை நினைத்து அஞ்சி அதனை நீக்குதலும், அவரைக் கைவிடாமல் காக்கும் தன்மையையும் தான் செல்வமாக சான்றோர் கொண்டுள்ளதைப் பின்வரும் நற்றிணை அடிகள் உணர்த்துகின்றன.

**"சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்**
**புண் கண் அஞ்சும் பண்பின்**
**மென்கட் செல்வம் என்பதுவே"** (நற்.210)

இதனை,

**"தவத்தோர் அடைக்கலம் தான்சிறிது ஆயினும்**
**மிகப் பேரின்பம் தரும்"** (சிலம்.அடை)

என்கிறது சிலப்பதிகாரம். அதாவது அற உணர்வுடையோர் தருகின்ற அடைக்கலப் பொருட்களைக் காக்கின்ற செயல் சிறிதளவு ஆயினும் அதனால் பெறுகின்ற இன்பம் மிகப் பெரியது என்பது இதன் பொருள்.

## ஈகைப் பண்பு

பழந்தமிழ்ப் பண்பாடுகளுள் ஈகைப் பண்பாடும் ஒன்று. தேடிய செல்வம் எல்லாம் தனக்கே என்று எண்ணாமல் பிறருக்கும் தந்து மகிழ்க என்பதனை நோக்கமாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர் சங்ககால மக்கள் இதனை,

**"இரந்தோர் மாற்றல் ஆற்றா**
**இல்லின் வாழ்க்கை வல்லாதோரே"**
(நற்.28)

எனும் அடிகள் மூலம் அறியலாம். இல் வாழ்க்கையின் பயன் ஈகை என்பதனை,

**"செல்வத்துப் பயனே ஈதல்"** (புறம்.189)

என்று நக்கீரரும்

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு"** (குறள்.231)

என்று திருவள்ளுவரும்

ஈகை நெறி பற்றியான உண்மைகளை எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.

## விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்பது தமிழ்ப் பண்பாடுகளில் தலையாய பண்பாடாகும். விருந்து என்பதற்கு புதுமை என்று பொருள். புதிதாக வந்திருக்கும் விருந்தினருக்கு நாம் செய்யும் கடமையாகும். இக்கடமையைக் கண்ணியமாக செய்துள்ளனர் சங்ககால மக்கள்.

"விருந்து +ஓம்பல்= விருந்தோம்பல்".

புதிதாக வந்தவரை முகமலர்ச்சியோடு வரவேற்பது இனிமை பயக்கும்.

**"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்லிய**
**குறுமகள்" (நற்.142)**

இரவில் வரும் விருந்தினரைக் கூட இன்முகத்தோடு உபசரிக்கும் பண்பினர் சங்ககால மக்கள் என்று நற்றிணை குறிப்பிடுகிறது.

**"விருந்து விருப்புறூஉம் பெருந்தோட்**
**குறுமகள்" (நற்.221)**

எனும் அடியின் மூலமும் விருந்தினை விருப்பத்தோடு செய்துள்ளதை அறிய முடிகிறது.

**"விருந்தெதிர் கோடலும் இழந்த**
**என்னை" (சிலம்.கொலை.)**

என்று சிலப்பதிகாரத் தலைவி கண்ணகி விருந்தோம்பல் மேன்மையைக் குறிப்பிடுகிறாள். மேலும்,

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்**
**விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**
**(குறள்.81)**

எனும் திருக்குறள் வழியும் தமிழரின் விருந்தோம்பல் மேன்மையை அறிய முடிகிறது.

## முடிவுரை

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்பே தோன்றியவர்கள் தமிழர்கள். அவர்களே உலக மக்களின் வாழ்வியல் நாகரிக முன்னோடியாகவும் பண்பாட்டுக் கருவூலமாகவும் தங்கள் வாழ்க்கையை வாழ்ந்திருக்கின்றனர்.

நாகரிக முன்னோடிகளாகத் திகழும் பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் பண்பு நலன்களை நற்றிணைப் பாடல்கள் பறைசாற்றுகின்றன என்பதற்குச் சான்றாதாரமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. மேலும் நற்றிணைப் பாடலின் திறன் அறிந்தே நல் எனும் அடைமொழியும், தொகை நூல்களில் முதல் நூலாகவும் வைத்துள்ளனர் என்றும் கூற இக் கட்டுரை ஆதாரமாக அமைகிறது.

# இக்கால இலக்கியங்களில் கண்ணதாசன்

**முனைவர்செ.மகேஸ்வரி,**
**M.A., M.Phil., Ph.D., Net.**
நெறியாளர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
கலை மற்றும் மானுட அறிவியல்,
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,
கே.கே.நகர், சென்னை-78.

**திருமதி.ந.விஜயலட்சுமி,** B.Lit, M.A., B.Ed.,
முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)
தமிழ்த்துறை,
கலை மற்றும் மானுட அறிவியல்,
மீனாட்சி உயர்கல்வி மற்றும்
ஆராய்ச்சி நிறுவனம்,
நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,
கே.கே.நகர், சென்னை-78.

இருபதாம் நூற்றாண்டு கவிஞர்களில் சிறந்து விளங்கியவர் கண்ணதாசன் அவர்கள். பொதுவாக திரைப்படப் பாடல்கள் காலத்தால் வென்று நிலைத்து நிற்கக் கூடிய ஆற்றல் உள்ளவை அல்ல. புதிய பாடல்கள் பிறக்கப் பிறக்கப் பழைய பாடல்கள் பின்னுக்கு தள்ளப்பட்டு மறக்கப்படும். ஆனால் கவியரசரின் பாடல்கள் இன்றளவும் நிலைத்து நிற்பதற்கு அவரது அனுபவமும், கவிதை நயமும் தான் காரணமாகும். 5000–க்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும் எழுதியவர். காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் தேசிய கட்சி ஆகியவற்றில் இருந்தவர். அத்தகைய புகழ்பெற்ற கவிஞர் கண்ணதாசனை,

**“மனித உருவெடுத்த மாணிக்க செந்தமிழே!**
**புனித மணம் கமழப் பூத்த கவித் தீந்தமிழே!**
**உருகவல்ல நெஞ்சிலெல்லாம் ஒளி வீசும் செஞ்சுடரே!**
**பெருக வல்ல அமுதப் பெருக்கே கலையமுதே!”**

என்று சௌவுந்தரா கைலாசம் அவர்களால் பாடப்பட்டவர் கவிஞர் கண்ணதாசன்.

## கண்ணதாசனின் வாழ்க்கை

கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா; இவர் தமிழ்நாட்டில் உள்ள காரைக்குடி அருகே சிறுகூடல் பட்டி என்ற ஊரில் சாத்தப்ப செட்டியாருக்கும், விசாலாட்சிக்கும் மகனாகப் பிறந்தார். எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்த கண்ணதாசன் அவர்கள் கவிதை எழுதுவதிலும், திரைப்படங்களுக்கு பாடல்கள், வசனங்கள் மற்றும் கட்டுரைகள் எழுதுவதிலும் சிறந்தவர். இவர் சண்டமாருதம், திருமகள், திரை ஒலி, தென்றல், முல்லை போன்ற இதழ்களில் ஆசிரியராக இருந்தார். கோவை யிலிருந்து ஜூபிடர் பிக்ஸர்ஸ் மேனேஜர் வெங்கடசாமியின் பரிந்துரை யால் கன்னியின் காதலி என்னும் திரைப் படத்திற்குப் பாட்டெழுதும் வாய்ப்பை பெற்றார் கவிஞர் கண்ணதாசன்.

**“கலங்காதிரு மனமே- நீ**
**கலங்காதிரு மனமே- உன்**
**கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே!”**

இப்பாடல்கவிஞர் கண்ணதாசன் எழுதியமுதல் திரையிசைப் பாட்டாக 1948–ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. அதன் பிறகு 1981 வரை பல திரைப்படங்களுக்குப் பாடல்களை எழுதியுள்ளார். இவர் தமிழக அரசின் “அரசவை கவிஞராகவும்” இருந்தார். இவருக்கு ‘சேரமான் காதலி’ படைப்பிற்காக “சாகித்திய அகாதமி விருது” வழங்கப்பட்டது.

## இந்து மதத்திற்கு நாத்திகம்

முத்தையா ஒரு தீவிர நாத்திகர் மற்றும் திராவிட நாத்திக இயக்கத்தை பின்பற்றுபவர். தமிழ் மொழியின் மீதும், கலாச்சாரத்தின் மீதும் மிகுந்த அன்பு கொண்டிருந்த அவர் ஒரு முறை ஆண்டாளின் திருப்பாவையை படித்தார். அதன் மாய கவித்துவத்தை கண்டு வியந்து போனார்.

"தமிழில் கண்ணன்" என்றால் "கிருஷ்ணன்" என்றுபொருள்,

"சமஸ்கிருதத்தில் தாசா" என்றால் "வேலைக்காரன்" என்று பொருள். அதாவது கிருஷ்ணனின் வேலைக்காரன். பிறகு கண்ணன்மீது இருக்கக்கூடிய பற்றினால் தனது பெயரை "கண்ணதாசன்" என்று மறு பெயர் இட்டுக்கொண்டார். பல பரிசோதனைகளுக்கு பிறகு அவர் மீண்டும் இந்து மதத்திற்கு மாற முடிவு செய்தார். இதனால் இந்து மதத்தை பற்றி ஆழமாக தோண்டிஎழுதினார். "அர்த்தம் உள்ள இந்து மதம்" என்ற தலைப்பில் இந்து மதம் பற்றிய புத்தகங் களை எழுதியுள்ளார்.

## கவிஞரின் அழியாக் காவியம்

கண்ணதாசன் அவர்கள் தனது மொழி ஆளுமையினாலும், கற்பனை நயத்தாலும், கருத்துச் செழுமையாலும், எளிய நடைமுறையிலும் தனது இசைப் பாடல்களை காலத்தால் அழியாத காவியங்களை படைத்துள்ளார். கவிஞர் அவர்கள் தான் செய்யக்கூடிய தவறுகளை ஒளிவு மறைவின்றிதனது திரையிசைப் பாடல்கள் வாயிலாகவும், பிற படைப்புகளின் வாயிலாகவும் தனது தவறுகளையும், உண்மைகளையும் தெரிவித்து விடுவார். மேலும் தமிழக சட்ட சபையில் அரசவை கவிஞராக இருந்து புகழ்ப்பெற்றவர் கண்ணதாசன் அவர்கள்.

நான் மனிதரை பாட மாட்டேன்" என்ற அவரது கவிதையின் சில பகுதிகள்

"மானிடரைப் பாடி அவர்
மாறியதும் ஏசுவதென்
வாழ்க்கையான பதிகம்
மலையளவு தூக்கி உடன்
வலிக்கும் வரை தாக்குவதில்
மனிதரில் நான் தெய்வமிருகம்".

இக்கவிதையின் தலையங்கமே நமக்கு ஒரு கதையைச் சொல்கிறது.

## சங்க இலக்கியமும் கண்ணதாசனும்

மக்கள் பெரும்பாலும் சங்க இலக்கியம் முதல் சிற்றிலக்கியங்கள் வரை அறியாதவர்கள். பல கவிஞர்கள் இலக்கிய நயத்தோடு பாடல்களைத் தந்துள்ளனர். ஆனால் கவிஞர் கண்ணதாசனின் பாடல்கள் மிகவும் தெளிவாகவும், தேவைகளின்றி எளிதில் அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் இனிய தமிழ் வார்த்தைகளில் திரையிசைப் பாடல்கள் இலக்கிய நயத்தோடு கூறுகிறார் கவிஞர். இதனை,

"யாயும் ஞாயும் யார் ஆகியரோ
எந்தையும் நுந்தையும் எம் முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அரிதும்,
செம்புலப் பெயல் நீர் போல,
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"
(குறுந்:40)

என்ற குறுந்தொகைப் பாடலை அறியாதவர் பலரும் உண்டு. ஆனால் கண்ணதாசனின் இப்பாடலை அறியாதவர் எவருமில்லை.

"நேற்று வரை நீ யாரோ நான் யாரோ
இன்று முதல் நீ வேறோ நான் வேறோ
காணும் வரை நீ எங்கே நான் எங்கே
கண்டவுடன் நீ இங்கே நான் அங்கே"

என்ற திரைப்பட பாடல் நமக்கு உணர்த்துகிறது.

## சமுதாயநிலை

இன்றையச் சமூக அந்தஸ்தில் பணம் பிரதானமாக மதிக்கப்படுகிறது. பணம் மட்டும் இருந்தால் போதும், எதையும் பெறலாம் என்கிற நிலை சமூகத்தில் மாறிக் கிடக்கின்றது. இதனை,

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்கிறது திருக்குறள்

பணம் இல்லாதவன் பிணம்

என்று சொல்கிறது இந்தச் சமூகம்,

"ஈட்டி எட்டின மட்டுமே பாயும்!
பணமோ பாதாளம் வரைக்கும் பாயும்"

என்கிறது ஒரு நாட்டு பழமொழி!

இன்று பணம் இருந்தால் தானே உயர்வு தருகிறது, கூடவே உறவும் வருகிறது தாயும் பிள்ளையும் ஆனாலும் பணம் இல்லாவிட்டால் வாயும் வயிறும் தனித்தனிதான், பணத்திற்குப்பின்தான் அண்ணன், தம்பி, அக்காள், தங்கை, கணவன், மனைவி, உறவு எல்லாம் என்கிற உண்மை கருத்துகளைத் தம் கவிதை திறத்தில் வெளிப்படுத்திருப்பதை இங்குநாம் காணலாம்.

**அண்ணன் என்னடா தம்பி என்னடா
அவசரமான உலகத்திலே
ஆசைக் கொள்வதில் அர்த்தம் என்னடா
காசில்லாதவன் குடும்பத்திலே!
தாயும் பிள்ளையும் ஆன போதிலும்
வாயும் வயிறும் வேறடா
சந்தைக் கூட்டத்தில் வந்த மந்தையில்
சொந்தம்மென்பதும் ஏதடா?**

என்று பாடி பணம் படைத்த சமுதாயத்தின் போலித்தன்மையைப் பற்றியும், பணம் படுத்தும் பாட்டை பற்றியும், செல்வ செழிப்பின் சேர்க்கையைப் பற்றியும் படம் பிடித்து காட்டி இருப்பது கவிஞரிடம்மட்டுமே காணும் தனித் தன்மையாகும்.

## இறை நம்பிக்கை

மனித வாழ்க்கையில் நம்பிக்கை என்பது மிக முக்கியமானவை. வாழ்நாளில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் நம்மை வாழ வைப்பது நம்பிக்கையே ஆகும். மக்கள் அனைவரையும் பாதுகாத்து வருபவர் இறைவன் தான் என்பதைக் கண்ணதாசன்,

**"நம்பினார் கெடுவதில்லை நான்கு
மறைதீர்ப்பு
நல்லவர்க்கும் ஏழைக்கும் ஆண்டவனே
காப்பு"**

என்று இறை அருளின் சிறப்பினை உணர்த்தியுள்ளார்.

**"உண்மையைச் சொல்லி நன்மையைச்
செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும்
நிலை உயரும்போதும் பணிவு கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்"**

என்று பாடியுள்ளார். வேத வடிவத்தில் இருக்கக்கூடிய இறைவனையும், இறை வடிவத்தில் இருக்கக்கூடிய வேதத்தையும் நம்ப வேண்டும். இவ்வுலகத்தில் மனிதனை தாண்டிய ஒரு சக்தி உள்ளது. அந்த சக்தியிடம்வேண்டிக் கொண்டால் பலனும்கிடைக்கும், மன அமைதியும் உண்டாக்கும் என்று கடவுள் நம்பிக்கை குறித்தும் கூறியுள்ளார்.

திருமூலரின் கருத்துகள் இவர் பாடல்களில் காணப்படுகிறது. மனிதன் தவறு செய்வதற்கு ஆசைதான் மூல காரணமாயிருக்கிறது. ஆசைகள் இல்லாத இடத்தில் குற்றங்கள் குறை கின்றன. குற்றங்களும், பாவங்களும் இல்லாவிட்டால் மனிதனுக்கு இறை அனுபவம் ஏற்படுகிறது. இதனை,

**"ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்"**
**(திருமந்திரம் 2570)**

என்ற பாடல் வரிகளில் திருமூலர் மனிதனுடைய ஆசையை துறந்து குற்றமில்லாத வாழ்க்கையை வாழ வேண்டும்என்றும், இறைவன் மீது ஆழ்ந்த நம்பிக்கையோடுஇருந்து வாழ வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

## நிறைவுரை

கவிஞர் கண்ணதாசனின் தத்துவப் பாடல்கள் மக்களின் இதயங்களைத் தொட்டிருக்கின்றன. மேலும் கவிஞரின் கவிதைகளிலும் திரைப்படப் பாடல்களிலும் ஏராளமான தத்துவங்கள் இருக்கின்றன. சங்க இலக்கியங்களில் தொன்றுத் தொட்டு வந்திருக்கும் சமுதாயமும், இறைப்பக்தியும், தத்துவமும் கண்ணதாசனின் ஒரு சில பாடலின் மூலம் இக்கட்டுரையில் காணலாம்.

## துணைநூற்பட்டியல்

சி. சேதுராமன், திண்ணை, கண்ணதாசனின் கவிதைச் சிறப்புகள், நவம்பர்–18 – 2012.

கீதமஞ்சரி, என் பார்வையில் கண்ணதாசன், ஜூலை–2014.

தா. அமுத ஜோதி, வல்லமை, கண்ணதாசன் கூறும் வாழ்வியல் நெறிகள், அக்டோபர் –2017.

ஆ.விஜயராகவன் (பதி.ஆ.), தமிழ் இலக்கிய இலக்கணம், நூல்ஆக்கம்: அக்னி சிறகுகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

கா.பிரீதா, தத்துவ நோக்கில் செவ்வியல் இலக்கியங்கள், பன்னாட்டு கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு, உயிர்மை பதிப்பகம், தமிழ்த் துறை, செவாலியர் டி. தாமஸ் எலிசபெத் மகளிர் கல்லூரி, சென்னை.

# அகநானூற்றில் கடையேழு வள்ளல்கள்

**முனைவர் கி.வேணுகா**
இணைப்பேராசிரியர் - துறைத்தலைவர்,
ஆங்கிலத்துறை,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

சங்க இலக்கியங்கள் சமுதாய முறைகள், மக்கள் வாழ்வியல், அரசர்களின் ஆட்சிமுறைகள், வாழ்வியில் நெறிகள் போன்றவற்றையும் குறிப்பிடுகிறது. அவற்றில் வரலாற்றுச் செய்திகள் எல்லாத் திணைகளிலும் இடம்பெற்றுள்ளது. பெரும்பாலும் வரலாற்றுச்செய்திகள் உவமைநயமாகவும் உள்ளுறையாகவும் இடம்பெறுகிறது. இவற்றில் நாட்டை ஆளும் அரசர்களின் வீரம், கொடை, ஈகை நிலையை அந்தந்த நில மக்களுக்குத் தோழிக் கூற்றுப் பாடல்களாகவும், பரத்தைக் கூற்று பாடல்களாகவும் தலைவி கூற்றுப் பாடல்களாகவும். வருகின்றன. சங்க காலத்தில் அரசர்களின் ஆட்சி, வாழ்க்கைமுறை, மக்களின் குடிச் சிறப்பு போன்றவற்றை உவமை நயத்துடன் கூறுகிறது. நாட்டின் பழக்க வழக்கங்கள், சமுதாய நிலை, நாகரிகம், பண்பாடு போன்றவைகளை உணர்த்துவது வரலாற்றுச் செய்திகளே. கடையேழு வள்ளல்களும், குறுநில மன்னர்களும் அரசு புரிந்தமையைப் பற்றி அகநானூறு கூறுகிறது. இவை புறநூலுக்கு உரிய கருத்தாக இருப்பினும், அகநூல்களில் உதாரணமாகவும், உவமைகளாகவும், உள்ளுறைகளாகவும் இடம் பெறுகின்றன. அரசர்கள் தனக்கென வாழாமல் நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும், வாழ்ந்ததால், அக்கால மக்களின் சமுதாய நிலைகளையும், அவர்களது ஆட்சிச் சிறப்பையும் அகநூல்களும் உணர்த்துகின்றன. எனவே அகநானூற்றில் வெளிப்படும் கடையேழு வள்ளல்களின் பண்புகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குறுநில மன்னர்கள்

மூவேந்தர் என்றழைக்கப்படும் பெருமை வாய்ந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சிப் பகுதியில் அவர்களுக்குக் கீழ் பல குறுநில மன்னர்கள் சிறுசிறு பகுதிகளுக்குத் தலைவர்களாக விளங்கினர். சில குறுநில மன்னர்கள் மூவேந்தர்களை எதிர்த்து வென்று தமது பகுதிகளைச் சுதந்திரமாக்கிக் கொண்டதும் உண்டு. வேளிர், கோசர் போன்ற குறுநில மன்னர்கள் தமிழகத்திற்கு வட திசையிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்பர். குறுநில மன்னர்களான வேளிர் என்போர் இலக்கியத்தையும், கலையையும் போற்றி ஆதரித்தனர். கொடையில் நிகரற்று விளங்கினர். அவர்களுள் குறிப்பிடத்தகுந்த சிறப்பிற்குரியவர்கள் பாரி, காரி, ஓரி, பேகன், ஆய், அதிகமான், நள்ளி ஆகிய கடை ஏழு வள்ளல்கள் ஆவர்.

## பாரி

பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னர் ஆவார். வேள்பாரி என்றும் குறிப்பிடப்படுகிறார். இவர், தாம்

சென்ற வழியில், தம் தேரைத் தடுத்த முல்லைக் கொடி, தேரை விரும்பியதாகக் கருதி, அது படர்வதற்குத் தனது பெரிய தேரையே அளித்தார் என்பர். பாரியின் வலிமையினையும் வள்ளல் தன்மையையும் கபிலர் புறநானூற்றுப் பாடல்களில் போற்றிப் பாடியுள்ளார். இதனை,

**பாரி பாரி என்று பல ஏத்தி**
**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே.**
**(புறம். 107)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

பறம்பு மலையினையும், அதனைச் சார்ந்திருந்த முந்நூறு ஊர்களையும் ஆண்டு வந்தவன் பாரி. இவனது நண்பர்களாயிருந்த கபிலர். ஔவையார், நக்கீரர் போன்ற புலவர்களும் இவனது ஆளுமைப் பண்பினைப் போற்றிப் பாடியுள்ளனர். வள்ளல் தன்மையும் வற்றாத சிறப்பும் பெற்ற கடையேழு வள்ளல்களில் ஒருவன் என்ற அழியாப் புகழுக்கு உரியவன். இவனது அழியாச் செல்வத்தின் மீது ஆசை கொண்ட மூவேந்தர்களும், இவனது பறம்பைக் கைப்பற்ற பல முயற்சிகள் மேற்கொண்டும் வெற்றி பெற முடியாததால், இறுதியாக சூழ்ச்சியால் வீழ்த்தினர். அதனால் பாரியின் இரண்டு பெண் மக்களையும் கபிலர் கவனித்துக்கொண்டு இறுதியில் மலையமானின் மக்களுக்கு திருமணம் செய்து வைத்து தன் நட்புக் கடமையை நிறைவேற்றினார். என்ற செய்தியை,

**ஆள் இடுஉக் கடந்து, வாள் அமர் உழக்கி**
**ஏந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய**
**கடும் பரிப் புரவிக் கை வண் பாரி**
**(அகம், 78:20-22)**

என்ற பாடலில் அறியலாம். மூவேந்தர் களைக்கூட பலமுறை புறங்காணச் செய்த பாரியின் வீரப்பண்பும் வறியவர்க்கும் புலவர்களுக்கும் அளித்துதவிய கொடைப்பண்பும் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

## காரி

திருக்கோயிலூரைத் தலைநகராகக் கொண்டு மலாட்டை ஆட்சி புரிந்தவர். திருக்கோவிலூர்க்கு மேற்கே தென் பெண்ணையாற்றின் தென்கரை அடங்கிய பகுதியே "மலாடு" ஆகும். இவர் மலையமான் திருமுடிக் காரி என்றும், மலையமான் என்றும், கோவற் கோமான் என்றும் அழைக்கப்படும் வள்ளலாவார்.

காலில் வீரக்க்ழல் அணிந்த சிறந்த வேல் வீரனாகிய காரி, வல்வின் ஓரியைக் கொன்று கொல்லிமலையைச் சேர மன்னர்க்கு உரிமையாக்கியவன். இதனை,

**முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி**
**செல்லா நல்இசை நிறுத்த வல்வில்**
**ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த**
**சேவ்வேர்ப் பலவின் பயன்கெழு கொல்லி,**
**(அகம். 209:12-15)**

என்ற வரிகள் மூலம் காரியின் வீரப் பண்பை அறியலாம்.

## ஓரி

சிறிய மலைகள் உடைய நல்ல நாட்டிற்குத் தலைவராவார். இவர் விற்போரில் வல்லவராதலின், இவ் வள்ளலை '**வல்வில் ஓரி**' என்றும் அழைப்பர். கொல்லி மலைக்கு உரியவன் என்பதை,

**"நல்கினள், வாழியர், வந்தே ஓரி**
**பல்பழப் பலவின் பயம்கெழு கொல்லி."**
**(அகம், 208. 21,22)**

என்ற அடி குறிப்பிடுகிறது. இவன் சிறந்த வில்லாற்றல் உடையவன் என்பதும் வள்ளல் தன்மை உடையவன் என்பதும் அறிய முடிகிறது.

## பேகன்

பொதினி மலைக்குத் தலைவன். மழைவளம் மிக்க அம்மலையின் காட்டில் மயில்கள் திரிந்து கொண்டிருக்கும். ஒருநாள் அப்படித் திரிந்து கொண்டிருந்த ஒரு மயில் அகவியதைக் கேட்டு, அது குளிரால் நடுங்கி அகவியது என்று நினைத்தான். அவரகத்தே அருள் உணர்ச்சி பெருகவே, தமது போர்வையை அம்மயிலுக்குப் போர்த்தினான் என்பர். இதனை,

**"உடாஅ. போரா ஆகுதல் அறிந்தும்**
**படாஅ மஞ்ஞைக்கு ஈத்த எம் கோ**
**கடாஅ யானைக் கலி மானி பேகன்."**

**(புறம்.373)**

என்ற பாடலடியால் அறியலாம்.

மதமிக்க யானைகளும், வலிமை மிக்க குதிரைகளும் கொண்ட அந்தப் பேகன் அளவின்றி அள்ளிக் கொடுப்பவன். இத்தனைச் சிறப்புடைய பேகனின் நாடு வண்டுகள் வீழும் கள்ளினையும் வள்ளன்மையால் மகிழும் மகிழ்ச்சியையும் உடையது. அவனது சுனைகள் நிறைந்த மலையில் பூக்கள் மணங்க கமழும். அருவிகள் ஆர வாரிக்கும் பெருமையுடையது. இதனை

**"வண்டுபடு நறவின் வண்மகிழ்ப் பேகன்**
**கொண்டல் மாமலை நாறி."**

**(அகம். 262: 16-17)**

என்கிறார் பரணர். மேற்கண்ட பாடல் மூலம் பேகனின் கொடை சிறப்பும், நாட்டுவளச் சிறப்பும் தலைவியின் பண்புகளுக்கு ஒப்பாக எடுத்துரைகப் பட்டுள்ளது.

## ஆய்

பொதியமலைச் சாரலில் உள்ள ஆய்குடியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன். இவனை வேள் ஆய் என்றும் ஆய் ஆண்டிரன் என்றும் வழங்குவர். ஒளி பொருந்திய நீல நிறமுள்ள நச்சரவம் ஒன்று இவனுக்கு ஓர் அரிய ஆடையை அளித்ததாம். நாகம் நல்கிய ஒளிமிக்க ஆடையை இவன், ஆலமரத்தின் கீழிருந்த செல்வராகிய சிவபெருமானுக்கு அளித்தார் என்பர். ஆற்றல் மிக்க அஞ்சா நெஞ்சினன். வீரர் பலரை உடையவன். புலவர் பலரால் போற்றப் பெற்றவன். இரக்கம் கொண்டவன் என்பதனை,

**"அம்புடைக் கையர் அரண் பல நூறி**
**நன் கலம் தருஉம் வயவர் பெருமகன்**
**சுடர் மணிப் பெரும் பூண் ஆஅப் கானத்துத்."**

**(அகம். 69:16-18)**

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன. தன்னைத் தேடிவரும் வறியோர்க்குத் துணைவன். புலவர்க்கும் பாணர்க்கும் பரிசுகள் வழங்கிக் காத்துப் போற்றியவன். படைகள் பல கொண்ட பேரரசரால் கூட அணுக இயலாத வீரம் மிக்கவன் என்பதனை இதன் மூலம் அறியலாம்.

## அதியமான்

அதியமான் நெடுமான் அஞ்சி, அதியமான், அதிகைமான், அஞ்சி எனப் பல பெயர்களில் வழங்கப் படுகிறான். இவர் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட குறுநில மன்னன். இவர் ஒருகால் தன் நாட்டு மலையொன்றின் உச்சிப் பிளவின் சரிவில் நின்ற அருநெல்லி மரத்தின் அருங்கனி ஒன்றைப் பெற்றான். அக்கனி, தன்னை உண்டாரை நரை, திரை, மூப்பு இன்றி நீண்ட நாள் வாழ வைக்கும் வலியுடையது. அக்கனியைத் தான் உண்ணாமல் வைத்திருந்து தம்மைக் காண வந்த நல்லிசைப் புலமை சான்ற ஔவையார்க்கு ஈந்து அழியா அறப்புகழ் பெற்ற பண்பாளன். தான் இடும் கட்டளைகளை நிறைவேற்றும் ஆற்றல்மிகு மாவீரர்களையும் தன்னகத்தே கொண்டவன். குதிரைப் படை யினரையும், வேல் படையினரையும் நிறைவாகப் பெற்றவன். பகைவரோடு போரிட்டு ஆநிரைகளைப் பத்திரமாக கவர்ந்து வரும் இயல்பினை உடையவன்.

என்பதை,

"பந்து புடைப்பன்ன பாணிப் பல் அடிச்
சில் பரிக் குதிரை, பல் வேல் எழினி
கெடல் அருந் துப்பின் விடுதொழில் முடிமார்"
(அகம் 105: 9-11)

என்ற பாடலடிகள் மூலம் அஞ் சியின் வலிமையையும் கொடைப் பண்பிணையும் அறியலாம்.

## நள்ளி

நள்ளியைக் கண்டீரக் கோப்பெருநள்ளி எனவும், கண்டிற்கோப் பெருநற்கிள்ளி எனவும், கண்டிரக்கோன், கண்டிரக்கோ எனவும், நள்ளி யெனவும் இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளனர். இவன் தோட்டி என்னும் மலைக்கும் அதனைச் சார்ந்த மலை நாட்டிற்கும் காடுகளுக்கும் தலைவனாக இருந்தவன் என்பர். பாணர் போன்ற இரவலர்க்குப் பொற்படைகளால் அணியப்பட்ட உயர்ந்த தேரினைக் களிற்றுடன் சேர்த்துப் பரிசளிப்பான் கொடுத்து மகிழும் மழை சொரிந்தாற் போன்ற கொடைத் தன்மை கொண்டவன் நள்ளி. இதனை,

"...... இரப்போர்க்கு
இழைஅணி நெடுந்தேர் களிறொரு என்றும்
மழைசுரந் தன்ன ஈகை, வண்மகிழ்,
கழல்தொடித் தடக்கை, கலிமான், நள்ளி."
(அகம். 238. 11-14)

என்ற அடிகள் மூலம் நள்ளீயின் கொடைத்தன்மை அறியமுடிகிறது.

## முடிவுரை

கடையேழு வள்ளல்கள் தம்மை நாடி வந்த வறியவர்களுக்கு வேண்டிய பொருள் கொடுத்து உதவிக் கொடையில் சிறந்த பண்பாளர்களாக கருதப் பட்டமையினை புறச் செய்திகள் பல நமக்கு எடுத்தியம்புகின்றது. அகநானூறு அகம் சார்ந்த ஓர் இலக்கியமாக கருதப்பட்டாலும் தலைவன் தலைவியின் காதல் நிலைகளை எடுத்துரைக்கும் போது தலைவனின் நிலத்தையும், வீரத்தையும் கடையேழு வள்ளல் பண்பு களோடு ஒப்பிட்டு கூறியிருப்பதன் மூலம் வள்ளல்களின் ஆளுமையினை அறியமுடிகிறது.

# சங்ககால மக்களின் தொழில்கள்

**முனைவர் ஜா.ஸ்டெல்லாமேரி**
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
தூயவளனார் தன்னாட்சிக்கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 002.

## ஆய்வுச்சுருக்கம்

உலகில் பல உயிரினங்கள் வெவ்வேறு அறிவு நிலைகளில் உருவாக்கப்பட்டுள்ளன. மனிதஇனம் மட்டுமே இவ்வறிவு வளர்ச்சியில் முதிர்ச்சி யடைந்தவனாகக் கருதப் படுகின்றன. மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் உள்ள உறவுநிலைகளை வேறுபடுத்திக் காட்டுவது பண்பாடு மட்டுமே. பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டும் தொடர்புடையதாக உள்ளது. பண்பாடு பற்றிக் காணும்போது இரண்டு தமிழ்ச் சொற்களை நாம் உற்றுநோக்குதல் அவசியமாக உள்ளன. அவை நாகரிகம், பண்பாடு என்பனவாகும், இன்னைறய சமுதாய வளர்ச்சி நிலையை நாகரிகம், அதாவது நவீனம் (Modern/fahion) என்ற பொருளில் கூறலாம். இதனை அகநிலை வளர்ச்சிகடந்த புறநிலை வளர்ச்சி பற்றியதாக கொண்டால் அவை பண்பாட்டின் அடித்தளமாக அமைகின்றன. எனவே இவை இரண்டும் வேறு வேறு அல்ல இரண்டும் ஒன்று என்பதை தெளிவுப்படுத்தும் வகையில் சங்கால மக்களின் தொழில் வாயிலாக விளக்கமாக எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## கலைச்சொற்கள்

Socialization
Mordern/fashion
Culture

## பண்பாடு விளக்கம்

பண்பாடு என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் எர்வர்ட் டைலர் ஆவார். கி.பி.*1871*ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட ‘தொன்மைப் பண்பாடு’ (Primitive culture) என்னும் நூலில் பண்பாடு பற்றிய விளக்கம் கொடுத்துள்ளார்.

பண்பாட்டை நாகரிகம் என்றே திருவள்ளுவர் கூறுகிறார். பண்பாட்டையும் நாகரிகத்தையும் வெவ்வேறு நிலைகளில் பகுத்துக் காண நாம் முயன்றாலும் புறமெல்லாம் அகவளர்ச்சியின் வெளிப்பாடாகவே உள்ளது என்பதை

> **“பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**
> **நாகரிகம் வேண்டு பவர்** (குறள் : 580)

இதனையே சங்க இலக்கியப் பாடல்களும் தெளிவுப்படுத்துகின்றன.

> **‘முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
> **நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்’**
> **(நற்றிணை: பா. 355)**

சங்கப்பண்பாடு என்பது அகவாழ்வுத் தொடர்புடையதாகவே காணப்படுகிறது. பண்டைய தமிழர்கள் அகப்பண்பாட்டையும் புறப்

பண்பாட்டையும் வேறுபடுத்திக் காண வில்லை என்பதை இவை தெளிவுப் படுத்துகின்றன.

## பண்பாடு பற்றிய வரையறைகள்

பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டமாக சேர்ந்து செயல்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மம் என்பார் சீ.பக்தவச்சல பாரதி.

ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணு வதிலும் பேரவாக் கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும் என்பார் மாத்யூ ஆர்னால்டு.

பண்பாடு என்பது அக வளர்ச்சியைக் குறிப்பது என்பதை வலியுறுத்தி அறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் பண்பாட்டுக்குத் தரும் விளக்கம் ஈண்டுச் சிந்திக்கத் தக்கதாகும் “பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு” என்று விளக்குகிறார்.

## தச்சுத் தொழில்கள்

சங்ககால மக்கள் தட்டுமுட்டுச் சாமான்களையும், வண்டிகளையும், தேர்களையும் செய்துக் கொடுத்தனர். பொருள்களை ஏற்றிச் செல்லத்தக்க திண்ணிய கால்களையுடைய வண்டிகள், சிறார்கள் ஓட்டி விளையாடும் நடை வண்டிகள் ஆகிய பொருள்களைச் செய்து தந்துள்ளனர். வணிகத்தை மேம்படுத்த தமிழர்கள் ‘உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கத்தையும் பல்வேறு உருவங்களையுடைய படகு களையும் செய்துள்ளனர் என்பதைச் சிலம்பு வாயிலாக அறியலாம். இவர்கள் “கலம்புணர் கம்மியர்” என அழைக்கப்பட்டுள்ளனர். வீடுகட்குரிய அழகிய தூண்களையும், வேலைப்பாடு மிக்க நிலைகளையும் திண்ணிய கதவுகளையும் செய்தனர். நிலைகளில் மேலுள்ள உத்திரப்பலகையில் இருபுறமும் செங்கழுநீர்ப் பூக்களை ஏந்திய பிடிகளையும் இடையே திருமகள் உருவத்தையும் அழகுறச் செதுக்கியமைத் துள்ளனர். (நெடுநல்.80–86)

அரசர்கள் பயன்படுத்துகின்ற கட்டில்கள் உள்ளிப்பூண்டுப்போன்ற கடைசலைக் கொண்டிருந்தன. யானைக் கொம்புகளை இருபுறமும் ஒப்பச் சீவிக், கூரிய சிற்றுளியினால் இடையிடையே இலை வடிவம் செதுக்கியமைத்தனர் (நெடுநல்.115–135). சங்கால மக்கள் மரக் கலங்களைப் பயன்படுத்தினர். இதனை அடிப்படையாகக் கொண்டே இன்றும் கப்பல்கள் செய்யப்படுகின்றன.. மனிதனின் சிந்தனையால் பல வடிவங்களில் வேலைப்பாடு மிகுந்த மரச்சாமான் செய்துள்ளனர். இன்று நவீன தொழில்நுட்பங்கள் பல்வேறு வளர்ச்சி நிலைகளை அடைந்தாலும் நமது பண்பாட்டின் அடையாளமாக அமைகின்ற நிலை, கதவு சன்னல் போன்ற பொருட்கள் நம்மை இயற்கையோடு சுவாசம் செய்ய வைக்கின்றது என்பதை தெளிவுப்படுத்துகின்றது.

## கொல்லுத் தொழில்

தமிழர் உலோகத் தொழிலில் மிகவும் மேம்பட்டிருந்தனர். இரும்பு செய்யும் கொல்லரும், பொன் செய்யும் கொல்லரும் தனித்தனியே பேசப் படுகின்றனர். போர்கள் நிறைந்த அக்காலத்தில் வாளும், வேலும் பிற போர் கருவிகளும் செய்ய எண்ணற்ற கொல்லர்கள் தேவைப்பட்டனர்.

கொல்லர்கள் தோல் துருத்தியைக் காலால் மிதித்துத் தீயுண்டாக்கினர். அவர்கள் குறட்டினையும் பயன் படுத்தினர். "மிதியுலைக் கொல்லன் முறிகொடிற்றன்ன கவைத்தாள் அலவன்" என்று பெரும்பாணாற்றுப்படையில் பேசப்படுகிறது (பெரும்பாண்.167–68). கொல்லர்கள் இரும்பைக் காய்ச்சிச் சம்மட்டியால் அடித்தனர்

"கருங்கைக் கொல்லன் இரும்பு விசைத்து எறிந்த
கூடத் திண்ணிசை"

(பெரும்பாண்.437-439)

கொல்லன் உலைக்களத்தில் சம்மட்டியாலடிக்கும்பொழுது தீப்பொறி சிதறுவதுபோல மழைக்காலத்து இரவில் மின்மினி மொய்த்த புற்றினைக் கரடியொன்று அடித்து உடைக்கின்றது என்பதை அகப்பாடலொன்று கூறுகிறது.

"பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்
குறும்பி கெண்டும் பெருங்கை ஏற்றை
இரும்புசெய் கொல்லெனத் தோன்றும்"

(அகம்.72)

## பொற்கொல்லர்

சங்ககால மக்கள் அணிந்த எண்ணற்ற அணிகளைப் பற்றி நாம் அறிந்ததே. கண்ணகியின் காற்சிலம்பின் வேலைப்பாடு ஒன்றே அக்காலக் கொல்லரின் கைத்திறனுக்கு ஏற்ற சான்றாக அமையும்.

சங்க இலக்கியங்களில் பொன் என்ற சொல் தங்கத்தையும், செம்பையும், இரும்பையும் குறிக்கும். பொலன் என்றும் இது பேசப்படும். பண்டையச் சேர நாட்டில் கொடுமணமும் பந்தரும் பொன்னணிகட்குப் பெயர் போன நகரங்களாகும். இவை பற்றிப் பதிற்றுப் பத்தில் பல குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

"கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்"

(பதிற்று.67)

சங்ககாலத்தில் பொன் அணிகலன்களைச் செய்யும் தொழிலாளர்களும் பயன்படுத்திய கருவி களும் சங்கஇலக்கியப் பாடல்களில்; உவமைகளாகவும், சான்றுகளாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரன் திண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்

(நெடுநல்:110-112)

செம்பியன்றன்ன செஞ்சுவர் புனைந்து

(மதுரைக்காஞ்சி:485)

செம்பின் அன்ன பார்ப்புப் பல துஞ்சும்

(ஐங்குறுநூறு:43:2)

மேற்கண்ட பாடல் அடிகள் வெள்ளி, செம்பு போன்றவற்றால் உருவங்கள் பிற கலைப் பொருட்கள் செய்யப்பட்டுப் பயன்படுத்தியுள்ளதை வெளிப்படுத்துகின்றன.

## மண்பாண்டத் தொழில்

உணவுத் தேவைக்காக மனிதன் கண்டுபிடித்த பழைய தொழில்களுள் மண்பாண்டம் வனைதலும் ஒன்றாகும். பெரும்பாண்மையான மக்கள் சமைப்பதற்கு மட்டுமின்றி இறந்த உடலைப் புதைப்பதற்கும் தாழிகள் தேவைப்பட்டன. தொல்லியல் ஆய்வாளர்கள் அக்காலத்து மண் பாண்டங்கள் கருப்பு சிவப்புப் பானை ஓடு (Black and Red ware Shard) என்று அழைக்கின்றனர். இந்தக் கருப்பு சிவப்பு வண்ணமானது, கவிழ்த்து வைத்துச் சுடுகின்ற (Inverted Firing) ஒரு தனிப்பட்ட சுடுமுறைக் கொண்டு பெறப்பட்டதாகும்.

"இருள் திணிந் தன்ன குரூஉத்திரள்
பரூஉப்புகை
அகலிரு விசும்பின் ஊன்றும் சூளை"
(புறம்.228)

## கட்டுமானத் தொழில்

சங்ககால மக்கள் கட்டடங்கள் கட்டப் பல்வேறு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தியுள்ளனர். களிமண் அச்சில் வார்க்கப்பட்டு, பின்பு அதனைச் சுட்டுச் செங்கற்களாக மாற்றிக் கட்டியுள்ளனர். களிமண்ணை நன்குப் பதப்படுத்தி மெல்லிய ஓடுகளாகச் செய்து நெருப்பில் சுட்டு கடினத்தன்மை அடைந்தவுடன் அவற்றை மேற்கூரையாகப் பயன்படுத்தியுள்ளனர். காவிரிப்பூம்பட்டினத்தில் கி.மு.250 ஆம் ஆண்டளவிலேயே சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டடங்கள் கட்டப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. (கே.வி.இராமன் தொல்லியல் ஆய்வுகள், ப.15) என்பதிலிருந்து பழந்தமிழரின் கட்டடக் கலை நுட்பங்களை அறியமுடிகிறது. மேலும் அதன் கிளைத் தொழிலாகச் சுடுமண் உருவங்கள், கற்சிலைகள், செப்புத் திருமேனிகள் செய்வதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்திருக்கின்றன.

"சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பின்"
(பெரும்பாணா.405)

என்ற பாடல் அடியில் செங்கற்களால் கட்டப்பட்ட உயர்ந்த "புறப்படை வீடும்" அதனைச் சூழ்ந்த மதிலும் காஞ்சி மாநகரின் சிறப்பாகும் என விளக்கப் பட்டுள்ளன.

## கல் தொழில்

அம்மி, குழவி, உரல் போன்ற பொருள்களைச் செய்யும் தொழில்கள் சங்ககாலத்தில் நடைபெற்றுள்ளன.

"பாசவலிடித்த பெருங்கா மூலக்கைக்
கடிதிடி
வெரீஇய கமம்சூழ் வெண் குருகு"
(அகநானூறு,141:18-19)

நெல் குற்றி அவல் இடித்தலும் குறிப்பிடப்பட்டுள்ளது. உரல் போன்ற கல் தச்சுத் தொழில்கள் நடைபெற்றுள்ளதையும் அறியமுடிகிறது.

## நெசவுத் தொழில்

சங்ககாலத்தில் தழை ஆடையையும், பட்டு மற்றும் மெல்லிய நூலால் நெய்யப்பட்ட ஆடைகளையும் பயன்படுத்தியுள்ளனர். துகில், கலிங்கம், அறுவை, கச்சு போன்ற சொற்கள் பட்டினப்பாலையில்(90–91) பதிவு செய்யப்பட்டுள்ளன. பரதவப்பெண்டிர் தழைகளால் கோக்கப்பட்ட ஆடைகள் அணிந்தனர். துகில், கலிங்கம் என்ற இரு வகை ஆடைகள் மட்டுமன்றி விலை உயர்ந்த பட்டாடை உடுத்தியதை

"கொட்டைக் கரைய பட்டுடை நல்கி"
(பொருநராற்றுப்படை :155)

என்று முடத்தாமக்கண்ணியார் கூறுகிறார். மேற்கண்ட பாடல்கள் நெசவுத் தொழில்கள் சிறப்புற்றிருந்ததை வெளிப்படுத்துகின்றன.

## முடிவுரை

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்துள்ளனர். அவர்கள் பல்துறை தொழில்களில் தொழில்நுட்ப அறிவு பெற்றிருந்தனர். தங்களுக்குத் தேவையான கருவிகளைத் தாங்களே வடிவமைத்துக் கொண்டனர். இன்றைய நாகரிக வளர்ச்சியில் இந்திய நாடு முன்னிலை வகிக்கின்றது என்றால் அதற்கு அடிப்படை நமது சங்ககால மக்களின் அறிவுநுட்பமே ஆகும். மக்களின் புறவாழ்கையாக அமைந்த தொழில்மயமாக்கல் இன்று நவீனமடைய

அகவயமான பண்பாடே முதன்மையாக அமைந்துள்ளது என்பதை மறுக்க இயலாது.

## துணைநின்ற நூல்கள்


1. உ.வே.சா. குறுந்தொகை, உ.வே.சா நூல் நிலையம், சென்னை, 2009.
2. கதிர்முருகு (உ.ஆ), பத்துப்பாட்டு, சாரதா பதிப்பகம், சென்னை, 2009.
3. தட்சிணாமூர்த்தி.அ, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 2021.
4. பாலசுப்பிரமணியன். கு.வே., அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
5. புலியூர்கேசிகன் உரை, எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை 2020.
6. மணிவளன்.சி, இலக்கியச் சாரல், தென் பொதிகைத் தமிழ்ச்சங்கம் வெளியீடு, தூத்துக்குடி, 2005.
7. ராமன்.கே.வி., தொல்லியல் ஆய்வுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.

# “ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் பண்பு”

நெறியாளர்
**முனைவர் த.மரகதம்**
இணைப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
அரசு கலைக் கல்லூரி, அரியலூர் - 621713

ஆய்வாளர்
**பெ.ஜான்சிராணி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை,
அரசு கலைக் கல்லூரி, அரியலூர் - 621713

## ஆய்வுச் சுருக்கம்

மக்கள் உயிர் வாழ உணவு முக்கியமானது. மனிதனின் முக்கிய மான அடிப்படைத் தேவை உணவு உணவின் மேன்மையை அறிந்த தமிழர்கள் விருந்தோம்பும் பண்பை தம்முடைய வாழ்வியல் அடையாளமாகக் கொண்டுள்ளனர். விருந்தினர்களின் முகம் மலர்வதை கண்டு தம் அகம் மலர்ந்தவர்கள் தமிழர்கள். அரசனாக இருந்தாலும் புலவனாக இருந்தாலும் வறுமை வாட்டிய காலத்திலும் பகுத்துண்டு வாழவேண்டும் என்று கருதிய தமிழனின் நிலைப்பாடு உலகின் தலைசிறந்த உயரிய வாழ்வியலாகும். சங்க இலக்கியங்களில் சரிபாதி உடைய ஆற்றுப்படை இலக்கியங்களில் தமிழர்களின் உயரிய விருந்தோம்பல் பண்பு சிறப்பான முறையில் ஆராயப் பட்டுள்ளது.

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் தொன்மை யான இலக்கிய வரலாற்றைக் கொண்டுள்ளது. அவற்றுள் சங்க இலக்கியங்கள் மக்களின் அகவாழ்வையும் புறவாழ்வையும் படம் பிடித்து காட்டும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன. தமிழர்களின் பண்பாடு ஒரு உயர்ந்த பண்பாடாக போற்றப்படுகின்றது. இல்லற நெறியின் தலையாய நெறியாக விளங்கும் விருந்தோம்பல் பண்பை தமிழர்கள் தம் உயிரினும் மேலாக மதித்தனர். சங்க .இலக்கியமாக போற்றப்படும் ஆற்றுப்படை நூல்களில் மக்கள் முகம் மலர்ந்து விருந்தினர்களை உபசரிக்கும் சிறந்த பண்பை ஆராய்வதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## விருந்தின் இயல்பு

தமிழர்களின் தனித்துவம் மிக்க பண்பாடாக விருந்தோம்பல் அமைகின்றது. புதிதாக நம் வீடு தேடி வருவோரை நாம் விருந்தினர் என்று அழைக்கின்றோம். ஒரு இல்லறத் தலைவியின் தலையாயக் கடமை வீட்டிலிருந்து பொருள்களை காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும். இதனை,

> “இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
> வேளாண்மை செய்தற் பொருட்டு”[1]

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

## விருந்தினர் இயல்பு

விருந்தினர் என்பவர் தம்மை ஒரு முறைக்கு பலமுறை வரவேற்று உபசரிக்கும் மனைகளில் மட்டுமே உண்ண வேண்டும் அதுவே அவருக்கு கோடி நன்மையை தரும் என்பதை,

> “உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார்
> தம்மனையில் உண்ணாமை கோடிபெறும்”[2]

என்ற பாடல் மூலம் உண்க உண்க என்று ஊட்டாதார் மனைகளில் உண்ணாமல் இருப்பதே கோடி பெறும் என்று ஔவையார் குறிப்பிடுகின்றார். மேலும் முகம் மலர்ந்து விருந்தினரை வரவேற்போர் இல்லங்களுக்கு செல்வதே விருந்தினர்க்கு சிறப்பு என்பதை,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"[3]**

என்ற குறள் மூலம் வள்ளுவர் அறிவுறுத்து கின்றார்.

## ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல்

சங்க காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலத்தின்கண் வாழ்ந்த மக்கள் அனைவரும் தங்கள் வீடு தேடி வரும் விருந்தினர்க்கு சிறப்பாக உணவு படைத்து மகிழ்ந்தனர். அக்காலத்தில் புலவர்களுக்கு அரசர்கள் மிக உயர்வான விருந்து கொடுத்து மகிழ்ந்தார்கள். புலவர்கள் அன்று அரசனுக்கு நிகராக அமரும் மதிப்பு பெற்றிருந்தனர். ”பொருநர், பாணர் கூத்தர் என்னும் கலைவாணர்கள் பேரரசரையும் சிற்றரசரையும் கண்டு அவர்களிடம் தம் கலைத்திறனை விளக்கி பரிசில் பெற்று வாழ்ந்தனர். மன்னர்கள் அவர்களை இனிய முகத்துடன் வரவேற்று நல்லுடைகளையும் பலவகை உண்டி வகைகளையும் வழங்கி உபசரித்தார்கள்."4 என்று மா இராசமாணிக்கனார் பத்துப் பாட்டு ஆராய்ச்சி என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

சங்க காலத்தில் விருந்தினர்கள் மன்னர்களின் அரண்மனைகளில் எத்தனை நாள், மாதம், வருடங்கள் தங்கி இருந்தாலும் அரசன் முதல் நாள் அவர்களை எப்படி கவனித்துக் கொண்டானோ அதே அன்புடன் அவர்கள் திரும்பி செல்லும் வரை அவர்களை சிறப்பாக கவனித்துக் கொள்வான்.

## குறிஞ்சி நில மக்கள் உணவு

நன்னனுடைய மலைகளை சேர்ந்த குறிஞ்சி நிலத்தில் வாழக்கூடிய மக்கள் தன் இல்லத்திற்கு வரும் விருந்தினர் களுக்கு தினைச்சோறும் நெய்யில் வெந்த இறைச்சியையும் உண்ணக் கொடுத்தனர். இதனை,

**"பரூஉக்குறை பொழிந்த நெய்கண்
வேவையொடு
குரூஉக்கண் இறடி பொம்மல் பெருகுவீர்"
(மலைபடு பா.அ.168-169)**

என்னும் பாடல் அடி வழியாக அறிய முடிகின்றது. இதை மெய்பிக்கும் வகையில் குறிஞ்சிப்பாட்டு என்னும் நூல்

**"பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி
அடிசில்"[5]**

என இயம்புகின்றது. மேலும் குறிஞ்சி நில மக்கள் பெண் நாய் வாயில் கவ்விக் கொண்டு வந்த உடும்பின் இறைச்சியையும், பன்றியின் இறைச்சி யையும் விருந்தினர்களுக்கு உணவாக உபசரித்தமையை அறிய முடிகின்றது.

## முல்லைநில மக்கள் உணவு

முல்லை நில மக்கள் நெல்லரிசி உணவும் அவரை விதையில் புளியிட்டுக் கரைத்து உலையில் வைத்து எடுத்த புளிக்கறி உணவையும், தினைமாவுடன் நெய்கலந்து செய்த பொருள்களையும். இரவு நேரத்தில் கூத்தர்களுக்கு உண்ணக் கொடுத்தனர். இச்செய்தியை,

**"வேய்கொள் அரிசி மிதலை சொறிந்த
சுவல் விலை நெல்லின் அவரை
அம்புளிக்கூழ்"
(மலைபடு.பா.அ.435-436)**

என்ற பாடல் அடி தெளிவுப் படுத்துகின்றது.

## மருத நில மக்கள் விருந்து

தொண்டை நாட்டில் உள்ள

மருத நிலத்து மக்கள் நெய்சோற்றையும் பெட்டைக்கோழி பொறியலையும் விருந்தினருக்கு கொடுத்தனர். அதோடு தோப்புகளில் வாழக்கூடிய மக்கள் பலாப் பழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு, வள்ளிக் கிழங்கு சோறு முதலியவற்றையும் பாணர்களுக்கு விருந்தாக வழங்கினர் என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

"சோழ நாடு சோற்று வளம் மிக்கது: நல்ல காய்கறிகள் மிக்கது ஆதலின் சோணாட்டார் நல்ல அரிசி சோற்றையும் காய்கறிகளையும் நிரம்ப உண்டிருத்தல் வேண்டும்"[6] என்று மா.இராசமாணிக்கனார் பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்னும் நூலில் விளக்கி யுள்ளார்.

## நெய்தல் நில மக்கள் விருந்து

"நுதி வேல் நோக்கி நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்ப"
(சிறுபாண்.பா.அடி-158-159)

நெய்தல் நிலத்து பரதவர் நுளைச்சி அரித்து தூசு நீக்கி வடிகட்டி தந்த பழைய கள் தெளிவை பாணர்களுக்கு கொடுத்தனர். பாணர்கள் வழிநடந்த வருத்தம் தீர மிகுதியாக கள் தெளிவைப் பருகினர். கள் தெளிவிற்கு இதம் தரக்கூடிய வறுத்த சூடான குழல் மீனின் இறைச்சியையும் உண்ணத் தந்தனர்.

## பாலை நிலத்து விருந்து

ஓய்மான் நாட்டு பாலை நிலத்தில் குடியிருக்கும் எயினர் குல பெண்கள் இனிய புளிக்கறியிட்டு சமைத்த சோற்றையும் சூடான காட்டுபசு இறைச்சியையும் பாணர்களுக்கு கொடுத்தனர் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது. மேலும் தொண்டை நாட்டிலுள்ள பாலை நில எயிற்றியர்கள் கூட விருந்தோம்பும் பண்பில் சிறந்தவர்களாக இருந்தனர் ஆழ்ந்த கிணற்றில் அரிதாக ஊறும் உவர்ப்பு நீரை முகர்ந்து வந்து பழைய விளிம்பு உடைந்து போன மூளிப்பானைகளில் நீரை வார்த்து சமைத்த புல்லரிசி சோற்றை கருவாட்டோடு சேர்ந்து தெய்வத்திற்கு பலியிடுவது போல் விருந்தினர்களுக்கு உணவை இலையில் இட்டு உபசரித்தனர் என பெரும்பாணாற்றுப்படை மொழி கின்றது.

## கரிகாலனின் விருந்தோம்பல்

கரிகாலன் தன் அரண்மனைக்கு தங்கள் கலைதிறமையை காட்டி பரிசு பெற வரும் பாணர்களை வரவேற்று அவர்கள் வந்த களைப்புத் தெளிய அவர் களுக்கு பொற்கிண்ணத்தில் கள்ளை ஊற்றி கொடுக்கின்றான். இதனை,

"போக்கு இல்பொலம் கலம் நிறைய
பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட"
(பொருநர் பா.அ.86-87)

என்னும் பாடல் அடி செப்புகின்றது. மேலும் இறைச்சி பண்ணியம் என்று பலவகையான உணவு பொருள்களை வழங்கி பாணனின் பசியாற்றுவதோடு தாய்பசு கன்றுவை பாலூட்ட அன்போடு நோக்குவது போன்று கரி காலனும் விருந்தினர்களை அன்போடு வரவேற்கின்றான் என்பதை,

"ஈற்று ஆ விருப்பின் போற்றுபு
நோக்கி" (பொருநர் பா.அ.151)

என்ற பாடல் அடி வழியாக அறியமுடி கின்றது.

## நல்லியக்கோடனின் உபசரிப்பு

ஓய்மான் நாட்டுக்கு தலைவனான நல்லியக்கோடன் விருந்தோம்பும் பண்பில் சிறந்தவன். அவன் தன்னுடைய அரண்மனைகளில் பாணர்களுக்கு பாம்பின் விடம் போன்று எளிதில் மயக்கத்தைத் தரக்கூடிய கள் தெளிவை அருந்த தருகின்றான் பின் வீமசேனன் எழுதிய சமையற்கலை நூலில் கூட

கூறப்படாத பலவிதமான உணவு வகைகளையெல்லாம் பாணனின் விருப்பம் போல் பொன்னால் செய்த கலத்தில் இட்டு அருகிலிருந்து ஊட்டு கின்றான் இதனை,

**"விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி**
**ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி"**
**(சிறுபாண் பா.அ.244-245)**

என்னும் சிறுபாணாற்றுப்படை பாடல் அடி வழியாக உணரமுடிகின்றது.

## இளந்திரையனின் விருந்தோம்பல்

விருந்தோம்பல் பண்பில் தன்னேரில்லாதவனாக திகழ்ந்தவன் இளந்திரையன். தன் அரண்மனைக்கு வரும் விருந்தினர்களுக்கு திறமையான சமையல்காரனைக் கொண்டு சமைக்கப் பட்ட இறைச்சி உணவையும் முனை முறியாத அரிசி சோற்றையும் கண்ட சர்க்கரை சேர்த்து செய்த சர்க்கரை பொங்கல் முதலான பலவகையான சுவை படைத்த உணவுகளை மீன்பூத்தது போன்ற வெள்ளியிலான உண்கலங்களில் பரப்பி பிள்ளைகளை தாய் பாசத்துடன் கவனிப்பது போல் இளந்திரையன் விருந்தினர்களை கவனித்தான் என்பதை,

**"மீன் பூத்து அன்ன வான்கலம் பரப்பி**
**மகமுறை மகமுறை நோக்கி முகன் அமர்ந்து**
**ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி"**
**(பெரும்பாண் பா.அ.476-479)**

என்னும் பெரும்பாணாற்றுப்படை பாடல் அடி வழியாக அறிய முடிகின்றது.

## நன்னனின் விருந்தோம்பல் பண்பு

விருந்தோம்பும் பண்பில் ஒப்பற்றவனாக விளங்கியவன் நன்னன். தன்னுடைய அரண்மனையில் பாணர் களுக்கு பெண்நாய் வேட்டையாடி கொண்டுவந்த விலங்குகளின் கொழுத்த தசைகளையும் வெண்மையான நெல்லரிசி சோற்றையும் அன்புகலந்த உள்ளத்தோடு முதல் நாள் பாணர்களை பார்த்த போது இருந்த அதே அன்பு அவர்கள் திரும்பி செல்லும் வரை அந்த அன்பில் பிழை ஏதும் நிகழாத வண்ணம் பாணர்களை கவனித்துக் கொண்டான் நன்னன். இதனை,

**"முடுவல் தந்த பைந்நிணத் தடியொடு**
**நெடுவெள் நெல்லின் அரிசி முட்டாது**
**தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்த**
**பலநாள் நிற்பினும் பெருகுவீர் நில்லாது"**
**(மலைபடு பா.அ.563-566)**

என்ற மலைபடுகடாம் பாடல் அடி குறிப்பிடுகின்றது.

## விருந்தினரை வழியனுப்பும் முறை

விருந்தினர்களை வரவேற்கும் போதும் வழியனுப்பும் போதும் ஏழடி முன்சென்று வரவேற்பதும் ஏழடி பின் சென்று வழியனுப்புவதும் தமிழர் மரபு இப்பண்பு சங்க காலம் முதல் இக்காலம் வரை பின்பற்ற படுகின்றது.

கரிகால் பெருவளத்தான் தன் அரண்மனைக்கு வந்த விருந்தினர்களுக்கு உணவு வழங்கி பல பரிசு பொருள்களை கொடுத்து வழியனுப்புகிறான். அப்போது ஏழடி பின்சென்று அவர்களை வழியனுப்புகிறான். இதனை,

**"காலின் ஏழ் அடிப் பின்சென்று"**
**(பொருநர் பா.அ.166)**

என்னும் பொருநராற்றுப்படை பாடல் அடி வழியாக அறியமுடிகின்றது.

## முடிவுரை

பல்வேறு வகையான பண் பாடுகளை உலகிற்கு அறிமுகம் செய்த தமிழர்கள் விருந்தோம்பல் பண்பிலும் சிறப்புற்றிருந்தனர்.

மனிதன் போதும் என்று கூறுவது உணவை மட்டும்தான். மக்களின் அடிப்படை தேவை உணவு என்பதை அறிந்த தமிழன் வந்த விருந்தினருக்கு வயிறார உணவு படைத்து மகிழ்ந்தான்.

ஏழ்மையிலும் கூட தன் வீடுதேடி வரும் விருந்தினர்களுக்கு இல்லை யென்று கூறாமல் இருப்பதைக் கொடுத்து விருந்தினர் முகம் மலரகண்டு தம் அகம் மலர்ந்தவர்கள் தமிழர்கள்.

சங்க காலத்தில் அரசன், புலவன் என்ற தாழ்வு மனப்பான்மை இல்லாமல் அனைவரும் ஒற்றுமையாக ஒரே நிலையில் மதிக்கப்பட்டனர். அக் காலத்தில் மன்னர்கள் பாணன் பொருநன், கூத்தன் முதலிய கலைஞர் களுக்கு உயரிய கலங்களில் விதவிதமான உணவுபடைத்து தாயினும் மிகுந்த அன்போடு உபசரித்தனர்.

சங்க காலம் முதல் இக்காலம் வரை தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு தலைசிறந்த பண்பாக எல்லோராலும் போற்றப்படுகின்றது.

## சான்றெண் விளக்கம்

பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள் (குறள் எண் – 81)

ஔவையார் தனிப்பாடல் திரட்டு (பா.எண் 41. பக்–61)

பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள் (குறள் எண்.90)

மா.இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி பக் 246.

ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ) குறிஞ்சிப்பாட்டு (பா.அடி.204)

மா. இராசமாணிக்கனார், பத்துப் பாட்டு ஆராய்ச்சி–பக்.247

## துணைநின்ற நூல்கள்

பத்துப்பாட்டு ஆராய்ச்சி, இராச மாணிக்கனார் மா, சாரதா பதிப்பகம் சென்னை– 2022

நச்சினார்க்கினியர் உரையும், பத்துப் பாட்டு மூலமும் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

பரிமேலழகர் உரையும், திருக்குறள் மூலமும் கழகவெளியீடு சென்னை. முதற்பதிப்பு – 1988

புலியூர்கேசிகன் உரையும், ஔவையார் தனிப்பாடல்கள் மூலமும் மங்கை வெளியீடு, சென்னை– 2010

# தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

-- திருமதி.சே.ஜோதி M.A.,M.Phill.,B.Ed.,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஆலம்பட்டி, திருமங்கலம், மதுரை - 625 706

சங்க காலத் தமிழ் மக்கள் தெளிந்த அறிவுடன் கலைத்திறம் வல்ல நல்வாழ்வும் சிறந்த நல்லுணர்வும் திறமான அறிவும் அரிய மரபும் கொண்டிருந்தனர். பகட்டின்மை பெருந்தன்மையோடு கூடிய வாழ்க்கை சுயமரியாதை அழகுணர்ச்சி மாறாத அறிவு போன்றவை பேரளவில் நிறைந்த பன்முக சிறப்பு வாய்ந்தது அவர்தம் வாழ்க்கை. வாழ்க்கையைத் துன்பம் குறைந்ததாகவும் இன்பம் நிறைந்ததாகவும் எளிமை மிக்கதாகவும் மனிதன் இயற்றிக் கொண்ட உயரிய கொள்கையே பண்பாடாகும். தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளை எடுத்தியம்ப முற்படுகிறது இக்கட்டுரை.

## பண்பாடு விளக்கம் :

பண்படுவது பண்பாடாகும். பண்படுதல் என்பது சீர்படுத்துதல் செம்மைப்படுத்துதல் எனப் பொருள்படும். "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்"கலி.பா.133

பண்பாடு என்பது தனிமனித ஒழுக்கத்தையும் தனிமனிதன் என்ற வட்டம் கடந்து குழுவாழ்க்கையையும் ஒருசமுதாயத்தின் அல்லது பெரும் பகுதியின் முதன்மையை விளக்குதல் பண்பாடாகும்.

## விருந்தோம்பல் :

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே இல்லறத்தில் தலையாய நெறியாகும். முன்பின் அறியாத புதிய மனிதர்களை வரவேற்று உபசரிப்பதே விருந்தோம்பல் எனப்படும். தம்முடைய உறவினர்களைப் போற்றி உபசரிப்பது விருந்தோம்பல் அன்று. விருந்து என்ற சொல்லிற்கு புதுமை என்று பொருள் கூறுகிறார் தொல்காப்பியர். "விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" தொல்.பொருள் –

"அட்டிலோளே அம்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே"

நற்.பா.120

என்று தலைவியின் அமைதியை வியந்த தலைவன் பாடியுள்ளதாக நற்றிணையில் கூறியுள்ளதால் அறியலாம். தன் கணவனுடன் ஊடல் கொண்டிருந்தாலும் விருந்தினர் வந்தால் வரவேற்று உபசரிப்பதன் மூலம் தன் ஊடலை மறைத்துக்கொள்வாள் தலைமகள் என்று கூறியுள்ளதை அறியலாம்.

## இல்லற வாழ்க்கை :

இல்வாழ்க்கையில் ஈடுபடும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்றியமையாதது ஒத்த அன்பு. ஒத்த அன்பே காதல் எனப்பட்டது.

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீ யாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே"

குறு.49

என்ற பாடல் வரிகளில் இப்பிறவியில் மட்டுமின்றி மறுபிறவியிலும் அவனே

கணவனாக வேண்டும் என்ற விருப்பம் இருவரின் இணைப்பின் அன்பினை வெளிப்படுத்துகிறது.

### உயர்ந்த சிந்தனை:

சிறந்த வாழ்க்கைக்கு அடிப் படையாக அமைகின்ற உயர்ந்த சிந்தனை களே பண்பாட்டிற்கு அடிப்படையாகும்.

**"நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையாக் கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே"**
**- புறம்-187**

என்ற பாடல் வரியில் ஔவையார் நாடு, காடு, பள்ளம், மலை இவையெல்லாம் பெருமைக்குரியது அன்று எங்கு நல்ல ஆடவர் இருக்கின்றாரோ அந்த நிலமே பெருமைக்குரியது.

### வீரச்சிறப்பு:

போரின்கண் வெற்றி ஒன்றே குறிக்கோளாகக் கருதி போர்புரிந்தாலும் மனித உரிமைகள் மதிக்கப்பட்டு போர்கள் நடைபெற்றன. களத்தில் தோற்று புறமுதுகிட்டு ஓடும் ஒருவனின் மீது தன்வில்லில் உள்ள அம்பை எய்தாது நின்ற வீரத்தமிழ்க்குடி மறவனின் மறப்பண்பினையும் போர் நெறியும் போற்றுதலுக்குரியது.

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆள் அன்று என்று வாளின் தப்பார்"**
**புறம் 74**

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் பிறக்கும் போதே குழந்தை இறந்து பிறந்தாலும் குழந்தையின் முழுவடிவம் அமையாமல் தசைத்தடியாகவே பிறந்தாலும் அவற்றை ஆள் அல்ல என்று எண்ணாமல் வாளால் பிளப்பர். போரில் வீரமரணம் எய்தும் ஒருவனுக்கு நடுகல் எடுப்பது பண்டைய மரபு. இம்மரபை ஒட்டி எழுப்பப்பட்ட நடுகல்லைச் சுற்றி இரும்பாலான வேல் கேடையம் போன்ற ஆயுதங்களை நிறுத்தி அரண் அமைப்பது வழக்கமாக இருந்தது என்பதை

**"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லே பரவின் அல்லது"** **புறம்-335**

என்ற புறநானூற்றுப்பாடல் மூலம் அறியலாம்.

### ஈகைப்பண்பாடு :

பிறருக்குக் கொடுத்துதவும் பண்பு ஈகையாகும். ஒருவன் மிகுதியான செல்வம் உடையவனாக இருந்தால் அச்செல்வம் பிறருக்கு பயன்படும்படி வாழ்தல்தான் சிறந்த வாழ்க்கை தன்னை நாடி பொருள் கேட்டு வந்தவர்களுக்கு பொருள் கொடுத்து உதவுதல் பண்டைய தமிழர் மரபு. பிறருக்கு உதவும் போதுதான் அங்கே செல்வத்தின் பயனை அடைய முடியும். நம்மைச் சார்ந்த அனைவரும் வறுமை இல்லாத வாழ்க்கை வாழ செல்வந்தர்கள் வாரி வழங்குதல் வேண்டும். அதன்படி தமிழன் வாழ்ந்தான் என்பதை

**"உண்பது நாழி உடுப்பவை இரண்டு**
**பிறவும் எல்லாம் ஓரொக்குமே**
**செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்போம் எனினே தப்புந பலவே"**
**புறம் 189**

என்ற நக்கீரனார் பாடலில் ஈகையின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

### தனிமனிதப்பண்பாடு :

பண்பாடு என்பது பண்பட்ட எண்ணமும் சொல்லும் செயலும் ஒருங்கிணைந்து திருந்திய நிலையாகும். எல்லோருடைய இயல்புகளும் அறிந்து ஒத்த நன்னெறியில் ஒழுகுபவர் பண்பாடுடையவர் ஆகின்றார். சங்க காலத்தில் தனிமனித வாழ்க்கையில் நட்பும் பகையும் விருப்பும் வெறுப்பும் அன்பும் அன்பின்மையும் ஆகிய

பல்வேறு உணர்ச்சிகளும் இடம் பெற்றன. ஆனால் சங்கப் புலவர்கள் சமுதாய பொதுமைக்காகவும் பண் பாட்டைக் காப்பாற்றுவதற்காவும் பிறர் பழி தூற்றாமல் தேர்ந்தெடுத்துக் கூறியுள்ளனர். இதனை

“நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓபுமின்”

என்று குறிப்பிடுவதால் அறியலாம்.

**சங்ககால மகளிரின் அரசியலறிவும் பண்பாடும்:**

சங்க காலத்தில் ஆண்கள் பெண்கள் என்ற ஏற்றத்தாழ்வு அற்ற மனநிலையுடன் வாழ்ந்தனர். உழைப் பிற்கும் ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் வழங்கியமையால் பெண்கள் உரிமை யுடன் வாழ்ந்தனர். பெண்கள் கல்வியிலும் புலமையிலும் சிறந்து விளங்கினர். அரசர்களுக்கே அறிவுரை கூறும் பண்பட்டவர்களாகவும் திறமை யுடையவர்களாகவும் விளங்கினர். சங்க காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களுள் தலைசிறந்தவர் ஔவையார் அவர் அதியமானிடம் கொண்ட பற்றே அவரை தொண்டைமானிடம் தூது செல்லத்தூண்டியது. போரை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற அவரது நல்ல பண்பே சந்து செய்வித்தது என்ற உண்மையை அவரது பாடல்களில்

“இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்டிர னோன்காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுரை பியனாக ஒவ்வே யவ்வே
பகைவர் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுரைக் குற்றில் மாதோ வென்றும்
உண்டாயிற் பதங்கொடுத்து
தில்லாயி னுடனுண்ணும்
இலலோ ரொக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைநுதி வேலே”
புறம் -

என்ற பாடலால் அறியலாம்.

ஔவையார் தொண்டைமானிடம் சென்று போரை தடுத்து நிறுத்திய அரசியல் தூது உலக இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. அறம் போற்றிய அரசர்கள் அக்காலத்தில் வாழ்ந்தனர் என்பதும் தொண்டைமான் போரைக் கைவிட்டு அதியனின் வீரத்தை உணர்ந்தான் எனில் பகைவன் எனினும் திறமையும் வீரமும் மிக்கவன் என்பதனை ஏற்றுக்கொள்ளும் தமிழரின் நாகரிகப் பண்பாட்டை அறியலாம்.

**போர் புரிதலில் நாகரிகமும் பண்பாடும்:**

சங்கககாலத்தில் வாழ்ந்த மக்கள் காதலையும் வீரத்தையும் இரு கண்களாகப் போற்றினாலும். வீரத் திற்கே முக்கியத்துவம் கொடுத்தனர். போரிடுவதில் சில அறங்களையும் பின்பற்றினர். போரிடும் முன் பறை யறைந்து பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு அறிவுறுத்தினர். யார் யாரெல்லாம் பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று அறிவிப்பது பண்டைத்தமிழரின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பறை சாற்றுகிறது.

“ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர் பெறாதீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்”

இப்பாடலில் பசு, அந்தணர், பெண்கள், பிணியுடையோர், பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் ஆகியோர் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர். இதனால் பழந்தமிழர் பண்பாட்டின் உன்னத நிலையை அறியலாம்.

சங்கப்பாடல்களின் வாயிலாக பழந்தமிழர்களின் வாழ்க்கையும் பண்பாடும் இன்றைய மக்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

பண்டைத் தமிழர் பண்பட்ட மனதோடும் உயர்ந்த சிந்தனையோடும் வாழ்ந்தனர். விழுப்புண் படாத நாளெல்லாம் வீணான நாளே என்று எண்ணி வாழ்ந்தனர்.

## அடிக்குறிப்பு

1. திருக்குறள் குறள் எண் – 996, 997
2. புறநானூறு பா.எண் – 195, 95
3. நற்றிணை பா.எண் – 205, 120
4. கலித்தொகை பா.அடி – 133–8
5. கலித்தொகை – 133
6. குறுந்தொகை – 322

## பார்வை நூல்கள் :

1. சங்க இலக்கியங்கள், தொகுதி 1, 2, 3 சாரதா பதிப்பகம், சென்னை.
2. அ.தட்சிணா மூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும்
3. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல்
4. தி.சு.நடராஜன் – தமிழரின் பண்பாட்டு வெளிகள்
5. பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

# புறப்பொருள் வெண்பாமாலையில் இடம்பெறும் போர் பண்பாடு

**முனைவர் அ.ஜோதிமணி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மதுரைக் கல்லூரி,
மதுரை.

## முன்னுரை:

உலகில் வாழும் அனைவருக்கும் பண்பாடு என்பது உயர்ந்த ஒன்றாக உள்ளது. பண்பாடு என்ற சொல் சங்க இலக்கியத்தில் பண்பு என்ற சொல்லிலே வழங்கப்பட்டு வந்துள்ளது. கால மாற்றத்திற்குப் பிறகு பண்பாடு என வழங்கப்பட்டு வந்தது. பண்பாடு என்பது பண்பு + பாடு எனப் பிரிந்து பொருள் தரும். பன்னெடுங் காலத்திற்கும் முன்பே உயரிய பண்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தே கொண்ட பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள். அவர் தம் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளில் உயிரினும் மேலான ஒழுக்கத்தைப் போற்றினர். புறப்பொருளே உலக நெறியாக ஓங்கி நிற்பது. தனிமனித வாழ்வைப் பொது உலக வாழ்வில் மேம்படச் செய்வது. புறப்பொருள் வெண்பாமாலையில் போருக்குச் செல்லும் வீரர்கள் கடை பிடித்த பண்பாடுகளை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## நிமித்தம்:

நிமித்தம் (அ) சகுனம் என்பது மக்களின் வாழ்வியல் மரபுகளில் ஒன்றாகும். பண்டைத் தமிழக மக்களிடையே மரபாகச் சில நம்பிக்கைகள் நிலவி வந்திருக்கின்றன. நிமித்தங்கள் எதிர்கால நிகழ்ச்சிகளை முன்கூட்டியே அறிவிக்கும் அறிகுறியாக மக்களால் தொன்றுதொட்டு இன்று வரை நம்பப்படுகிறது.

## நன்நிமித்தம்:

நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் அறிந்து கொள்வதற்காக பூப்போட்டுப் பார்த்தல், பல்லி ஒலி கேட்டல், தும்மல் போன்றவை சகுனம் பார்த்தலாக கொள்ளப்படுகிறது. வெட்சித்திணையில் ஆநிரைகளைக் கவரச் செல்லும் மறவர்கள் தாம் மேற்கொள்ளும் செயலின் நிலையை முன்கூட்டியே அறிவதற்கு கோயிலில் மறவர்கள் கூடியிருந்த பொழுது ஏணியின் கண் உள்ள குடத்துக் கள்ளை நீ எடுத்துக் கொண்டு வா என்று ஒருத்தி கூறிய வார்த்தையைக் கேட்டு நல்ல சொல்லாக கருதி ஆநிரைகளைக் கவரச் சென்றார்கள். இதனை தொல்காப்பியம் ‘பாக்கத்து விரிச்சி’ என்றும் புறப்பொருள் வெண்பாமாலை

**வேண்டிய பொருளின் விளைவுநன்கு**
**அறிதற்கு**
**ஈண்டுஇருள் மாலைச் சொல்லோர்த் தன்று.**
**(வெட்சி-2)**

என்னும் கொளுவிற்கு ஏற்ப

தொழுவில்
**குடக்கள் நீ கொண்டுவா! என்றாள் குனிவில்**
**தடக்கையாய் வென்றி தரும்.**

வெட்சி மறவர்கள் ஆநிரையைக் கவரச் செல்லும் முன் நற்சொல்

கேட்டனர் என்ற செய்தியை உணரலாம். மேலும், முல்லைப்பாட்டிலும் போருக்குச் சென்ற தலைவன் எப்பொழுது திரும்பி வருவான் என்று கோவில் முன் முது பெண்டிர் நற்சொல் கேட்கும் போது அங்கு ஒரு பெண் கன்றுக்குட்டியைப் பார்த்து உன்னுடைய தாய் பசு விரைவில் வரும் என்று கூறுவதைக் கேட்ட முதுபெண்டிர் நற்சொல்லாக கருதினர் என்பதை,

**பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்**
**சிறுதாம்பு தொகுத்த பசலைக் கன்றின்**
(முல்லைப்பாட்டு-*11-12*)

இதன்மூலம் நற்சொல் கேட்கும் பழக்கம் அகம், புறம் இரண்டிலும் இடம் பெறுவதை அறிய முடிகிறது.

### தீநிமித்தம்:

தீச்செயலையும் தீமையைக் காட்டும் குறியினைத் தீ நிமித்தம் எனவும் வழங்குவர். வெட்சி மறவன் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்கக் கரந்தை மறவன் மீட்கச் செல்லும் போது கரிக்குருவி தீய அறிகுறியைக் காட்டியது. அதைப்பொருட்படுத்தாது பகைவருடன் போரிட்டு ஆநிரைகளை மீட்டதை,

**போர்தாங்கிப் புள்விலங்கியோனைத்**
**தார்வேந்தன் தலையளித்தன்று.**
(கரந்தை-*11*)

மறவன் தீ நிமித்தத்தை விலக்கி வெற்றி பெற்றான். இதுபோல செல்வ கடுங்கோ வாழியாதன் என்ற சேர வேந்தன் பகைவரோடு போர் செய்யக் கருதி நிமித்தம் பார்த்த போது உன்ன மரம் கருகி காட்டியது. அதனால் தனக்கு வெற்றியில்லை எனக் கருதித் தவிர்ந்திராது போர் மேற்சென்று வெற்றி பெற்றதை,

**பொன்னின் அன்ன பூவின் சிறியிலை**
**புன்கால் உன்னத்துப் பகைவன் எம்கோ.**
(பதிற்: *61:5-6*)

இதன்மூலம் மனதில் துணிவும், தைரியமும் இருந்தால் மூடநம்பிக் கைகளை உடைத்து வெற்றி பெற முடியும் என்ற பண்பாட்டு நிகழ்வினை அறியலாம்.

### கொற்றவை வழிபாடு:

தாய் வழிப்பாட்டு தமிழ் சமுதாயத்திற்கு முதற்கடவுளாக விளங்குபவள் கொற்றவை. குறிஞ்சிக்குப் புறனாக விளங்கும் வெட்சித்திணையின் பொருட்டு கொற்றவை என்னும் தெய்வத்திற்குத் 'துடிநிலை' எனவும் துடி கொட்டு வீரர்கள் வழிபட்டமையால் 'கொற்றவை நிலை' எனவும் தொல்காப்பியர் கூறுகிறார். வெட்சியில் பகைவருடைய ஆநிரையைக் கவரச் செல்லும் வீரர்கள் வெற்றி தெய்வமாகிய கொற்றவையைப் புகழ்வதை,

**ஒளியின்நீங்கா விறல்படையோள்**
**அளியின்நீங்கா அருள் உரைத்தன்று.**
(வெட்சி-*18*)

வெற்றித் தெய்வமாகிய வெல்லும் போரையுடைய கொற்றவை மகனே என்று

**வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ**
(திரு-*258*)

திருமுருகாற்றுப்படை குறிப்பிடு கிறது. போரின் பொருட்டு போர்களத்தில் வேள்வி செய்து கொற்றவையினை வழிபட்டதை,

**வேள்வியில் கடவுள் அருந்தினை கேள்வி**
**உயர்நிலை உலகத்து ஐயர்இன்புறுத் தினை**
**வணங்கிய சாயல்.** (பதிற் - 70)

இதிலிருந்து போருக்குச் செல்வதற்கு முன் வெற்றி வேண்டி கொற்றவையை வழிபட்ட நிலையினை தெரிந்து கொள்ளமுடிகிறது.

### விளக்கும் வெற்றியும்:

வெற்றிக்கு அறிகுறியாக

விளக்கு காட்டப்படுகிறது. மக்களுக்கு கொடுத்தல் தொழிலால் மேம்பட்டு நிற்பவன் அரசன் அவன் நன்னெறியைக் காட்டும் செங்கோலினை உடையவன். அவ்வரசனுக்குரிய விளக்கு மிகுந்த காற்று வீசும் போது அணையாமல் வலமாகச் சுழன்று ஒளி மிகுந்து எழும். அத்தன்மையால் அரசனுக்கு வெற்றி உண்டாகும் நிலையை எடுத்துக் காட்டுவதை,

**அளப்பரும் கடல்தானையான்**
**விளக்குநிலை விரித்துஉரைத்தன்று.**
(பாடாண்-9)

என்ற கொளுவிற்கு சான்றாக,

**வளிதுரந்தக் கண்ணும் வலம்திரியாப் பொங்கி**
**ஒளிசிறந்து ஓங்கி வரலால் - அளிசிறந்து**
**நல்நெறியே காட்டும் நலம்தெரி கோலாற்கு**
**வெல்நெறியே காட்டும் விளக்கு.**

என்பதிலிருந்து விளக்கு நன்றாக எரிந்தால் நமக்கு நன்மை ஏற்படும் என்ற நம்பிக்கையை அறியலாம்.

## வீரர்களுக்கு உணவு கொடுத்தல்:

'உண்டிக் கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்'– – என்ற மணிமேகலையில் இடம்பெறும் வரிகளுக்கு ஏற்ப மறவர்கள் பகை நாட்டை வென்று தனக்கு அடிமைப்படுத்துவர் என எண்ணிய அரசன் மறவர்களின் முறையறிந்து உணவு வழங்கியதை,

**திறந்தார் தெம்முனை தெறுகுவர் இவர்எனப்**
**பெருஞ்சோறு ஆடவர் பெறுமுறை**
**வகுத்தன்று.** (வஞ்சி-19)

இதன் மூலம் 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்ற பழமொழிக்கு ஏற்ப உணவு கொடுத்த அரசருக்கு உயிரையும் கொடுக்க தயங்காத மறவரின் பண்புகளை உணரலாம். மேலும் போர்க்காலத்தில் மறவர்களுக்கு ஊன்சோறு தருவதும் வழக்கமாக இருந்துள்ளது. அரசன் மறவர்களுக்கு ஒருவகையான உணவு கொடுத்தல் மரபாக உள்ளது.

**ஊன்துடி அடிசில் ஊனும் அரிசியும்**
**குலைய சமைத்த புலவு**
(பதிற்றுப்பத்து - 155)

பதிற்றுப்பத்திலும் அரசன் போர் வீரர்களுக்கு உணவு கொடுத்த செய்தியைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

## மகள் வேண்டலும் – மறுத்தலும்:

போரில் வெற்றி பெற்ற அரசன் தோல்வியுற்ற அரசனின் மகளை மணம் முடிப்பது பண்பாடாக உள்ளது. போரில் வெற்றி கண்ட உழிஞை வேந்தன் அழகு நலம் பொருந்திய நொச்சி வேந்தனின் மகள் மீது ஒரு தலைக் காதல் கொண்டான். மயில் போன்ற சாயலினை உடைய நொச்சியாரின் மகளை மணம் செய்ய விரும்பியதை,

**மயில்சாயல் மகள்வேண்டிய**
**கயில்கழலோன் நிலைஉரைத்தன்று.**
(உழிஞை-25)

தன் மகளை வேண்டும் பகை யரசனுக்கு உழிஞை அரசன் கொடிய பகையினை உடையவன். அவனுக்கு தன் மகளை பெண் கொடுக்க மறுக்கும் செய்தியினை,

**வெம்முரணான் மகள் வேண்ட**
**அம்மதிலோன் மறுத்துரைத்தன்று.**
(நொச்சி-8)

இதுபோல தன் மகளை விரும்பும் வஞ்சியரசனோடு காஞ்சியரசன் மாறு பட்டு நிற்பதை,

**ஏந்திழையாள் தருகஎன்னும்**
**வேந்தனோடு வேறுநின்றன்று.** (காஞ்சி-20)

என்பதன் மூலம் ஒருவனுடைய அழகு, வீரம், ஆண்மை போன்றவற்றை மதிப்பிட்டுப் பெண் கொடுத்தலே அரசருக்கு உரிய மரபாகும். அதனை விடுத்து வலிமையால் கொள்ள

நினைப்பவருக்கு ஒருபோதும் பெண் கொடுத்தலை அரசர் விரும்பார் என்பது தெளிவாகிறது.

**உடன்கட்டை ஏறுதல்:**

கணவனை இழந்த மனைவி தன் கணவரின் சடலம் தீ மூட்டப்படும் போது அந்த தீயில் தன்னை அழித்துக் கொள்ளுதல் உடன்கட்டை ஏறுதல் ஆகும். போரின் கண் இறந்துபட்ட காஞ்சி மறவனை முழங்கி எரியும் தீயிடை வைத்தனர். தன் அன்புக் கணவனை எரிக்கும் அத்தீயினுள் புகுந்து உயிரை மாய்த்துக் கொண்ட நிலையை,

**காதற் கணவனொடு கனைஎரி மூழ்கும்**
**மாதர் மெல்லியல் மலிபுஉரைத் தன்று.**
**(காஞ்சி-19)**

மேலும்

**கயல்ஏர் கண்ணி கணவனொடு முடிய**
**வியல்நெறிச் செல்வோர் வியந்துஉரைத் தன்று. (பொதுவியல்-8)**

இதிலிருந்து முற்காலத்தில் கணவன் இறந்த பிறகு தனித்து வாழ்தலை பெண்கள் விரும்புவதில்லை அதனால் தன் கணவனின் சிதையினுள் தானும் புகுந்து உயிர்விட்டனர். இதுபோல புறநானூற்றுப் பாடலிலும் பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு கணவன் இறந்தவுடன் தானும் உடன்கட்டை ஏறுவதற்காக முயன்ற பொழுது பலரும் தடுத்தனர். ஆனால் பெருங்கோப்பெண்டு தன்னுடைய கணவனின் ஈமத்தீ தனக்குத் துன்பம் தராது. அது குளிர்ச்சி பொருந்திய பொய்கை போன்றது என்று கூறியதை,

**உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ**
**பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்**
**நுமக்கு அரிது ஆகுக தில்ல எம்கஞளம்**
**பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்புஅற**
**வள்இதழ் அவிந்த தாமரை**
**நள்இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே**
**(புறம்-246)**

மேலும்,

**காதலன் இறப்பில் கனைஎரி பொத்தி**
**ஊதுலை குறுகின் உயிர்த்தகத்து அடங்காது**
**இன்னுயிர் ஈவர்.**
**(மணிமேகலை,காதை-2,வரி 42-44)**

மணிமேகலையிலும் உடன்கட்டை ஏறிய பெண்களின் அக்காலப் பண் பாட்டை எடுத்துக்கூறுகிறது.

**முடிவுரை:**

பழந்தமிழரின் உணர்வுகளையும், எண்ணங்களையும் காட்டும் விதமாக இலக்கியத்தில் மட்டுமல்ல இலக்கணங்களிலும் பதிவு செய்யப் பட்டுள்ளது. மக்கள் சிறந்த பண்பாட்டுக் கூறுகளைத் தமக்குள் வகுத்துக் கொண்டு வந்தனர். மறவர்கள் போருக்குச் செல்லுமுன் நிமித்தம் பார்த்தல், தீ நிமித்தத்தைப் பொருட்படுத்தாமல் போருக்கு சென்று வெற்றி பெறுதல், தெய்வ வழிபாடு போரில் வெற்றி பெற்றவர்கள் தோல்வியுற்ற அரசனின் மகளை மணக்க நினைத்தல், போரில் இறந்த வீரர்களுடன் அவர்களின் மனைவியும் உடன்கட்டை ஏறிய பல பண்பாட்டு செய்திகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

# வரலாற்று நோக்கில் தன் வரலாறின் வரலாறு

நெறியாளர்,
**முனைவர் அ.நந்தினி,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-01.

ஆய்வாளர்
**இரா.ஹேமலதா,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை -01.

## ஆய்வு நோக்கம்:

தன் வரலாற்று இலக்கியம் என்பது இன்று பரவலாகப் பேசப்படும் வகையாக மாறியுள்ளது. அதன் தொடக்ககால வெளியீட்டிற்கும், தற்காலச் செயல்பாட்டிற்கும் இடையில்; உருவத்தாலும், உள்ளடக்கத்தாலும் மாற்றங்களைப் பெற்றிருப்பதை அறிய முடிகிறது. பெரிய தலைவர்களால் உருவாக்கம் பெற்ற வரலாறு இன்று சாதாரண மக்களும் எழுதும் நிலையை ஜனநாயகத் தன்மையுடன் கடைப் பிடிக்கின்றது. அவ்வகையில் வரலாற்று அடிப்படையில் தன்வரலாறுகளின் வரலாறுகளை ஆராய்வதாக இக் கட்டுரையின் நோக்கம் அமைந்துள்ளது.

## திறவுச் சொற்கள்:

வரலாறு – புனைவிலக்கியம் – திறனாய்வு – கணவான்கள் – வரையறை – இலக்கணம் – அகராதி – உரைநடை – கற்பனை – வாசிப்பனுபவம் – பிரதி – உலைக்களச் சோதனை – சத்தியம் – சுயவிமர்சனம் – குணவியல்பு – விளிம்பு.

## முன்னுரை

வரலாறு, தத்துவம், கலை, அறிவியல், சமூகம், அரசியல் உள்ளிட்ட பொருண்மைகள் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், எழுதப்பட்ட நூல்கள் மற்றும் கட்டுரைகள் அத்துடன் புனை விலக்கியம், திறனாய்வு, அபுனைவு முதலியவையும் 'இலக்கியம்' (Literature) எனப் பொதுப் பெயரிட்டு வகைப் படுத்தப்படுகின்றன. இந்த வகை மைக்குள் 'தன் வரலாறு' எனும் எழுத்து வகைமையும் உள்ளடங்கும். 'இலக்கியம் என்கிற பொது வகைமையின் கீழ் வகைப்படுத்தப் படுவனவற்றுள் 'தன் வரலாறு' எனும் வகைமை காலத்தால் பின் தோன்றியது எனலாம். எனினும் இவ்வகைமை தனித்ததொரு இலக்கிய வடிவமாக வளர்ச்சி அடைந்து வருவதோடு பல்தரப்பிலான வாசகர்களின் கவனத்தையும் ஈர்த்து வருகிறது.

மனித சமுதாயத்தின் அதிகாரக் குவிமைய உச்சியில் உள்ள கணவான்கள் தொடங்கி சமுதாய வெளியின் எல்லைக்கு அப்பால் துரத்தியடிக்கப்பட்ட விளிம்பு நிலையினர் வரை 'தன்வரலாறு' எழுதியுள்ளனர். எனவே, அது சார்ந்த கோட்பாடுகள், விவாதங்கள், ஆய்வுகள் முதலியவை ஒரு போக்காகத் தலையெடுத்து வளர்ந்து வருகின்றன. தன் வரலாற்றின் வரலாற்றையும், தன் வரலாறுக்கும் வாழ்க்கை வரலாறுக்கு மான வேறுபாடுகள் குறித்தும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தன் வரலாறு – வரையறை மற்றும் இலக்கணம்

'தன்வரலாறு' (awe–tow –bye–awe–grah) என்பது தன்னைக் குறித்து தான் எழுதியது தன்வரலாறு. ஒருவர் தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும், அதனை ஒரு பரந்துபட்ட கலாச்சாரம் அல்லது வரலாற்றுச் சூழலில் வடிவமைக்கவும், தம் சொந்த வாழ்வின் முழுமையையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வாசகருக்குப் புலப்படுத்துவதற்காக எழுதுவது தன்வரலாறு ஆகும்.

'மனிதன் ஒரு சமூக விலங்கு' என்று அறிஞர்கள் குறிப்பிடுவர். விலங்கினங்களில் அதிஅறிவு பெற்ற 'மனித இனம்' கூடி வாழும் பண்பினைப் பெற்றுள்ளது. எனவே 'தனிமனிதன்' என்பவன் சமூக மனிதனாகவே இருக்க முடியும். தனிமனிதனின் வரலாறும் சமூகத் தன்மை கொண்டே அமையும். ஒரு தனி மனிதரின் வரலாற்றைப் பிறிதொருவர் எழுதுவது 'வாழ்க்கை வரலாறு' (Biography) எனும் இலக்கிய வகைமையைச் சார்ந்தது. ஒரு தனி மனிதர் தன் வரலாற்றைத் தானே எடுத்துரைக்கும் பனுவல் (Text) தன்வரலாறு (Auto Biography) எனும் இலக்கிய வகைமையைச் சார்ந்தது. இவ்விரு வகைமைகளுக்கும் பாரதூர வேறுபாடுகள் உள்ளன. முன்னதைவிட பின்னது (தன்வரலாறு – Auto Biography) வரலாற்றின் நம்பகத்தன்மையினை நெருங்கிச் செல்லும் குணவியல்புகளைக் கொண்டுள்ளது எனலாம்.

"ஆட்டோ சுய(தன்) + பயாஸ் (வாழ்க்கை) + கிராபீன் (எழுதுதல்) = தன் (சுய) வாழ்க்கையை எழுதுதல். இது 'ஆட்டோகிராபி' (AutoBiography) என்றும் குறிப்பிடப்படுகிறது."[1]

"autobiography/noun [c,u](pl, autobiographies) the story of a person's life written by that person ஒருவரால் எழுதப்பட்ட அவரது வாழ்க்கை வரலாறு; தன்வரலாறு – autobiographical."[2]

"சுயசரிதை, இலக்கியத்தின் வடிவம், பொதுவாக புனைகதை அல்லாததாகக் கருதப்படுகிறது. ஒரு நபரின் தனிப்பட்ட வாழ்க்கை என்பது இதன் பொருளாகும். பழமையான இலக்கிய வடிவங்களில் ஒன்றான இது, ஒரு தனிமனிதனின் வாழ்க்கையைச் சொற்களால் மீட்டுருவாக்கம் செய்கிறது. இது ஆசிரியனின் வரலாற்றியல் அல்லது தனிப்பட்ட அணுகுமுறையின் புரிதலாக உள்ளது. ஒருவரின் நினைவு களில் தக்கவைக்கப்பட்டவை உட்பட எழுத்தாவணங்கள், வாய்மொழி வழக்காறுகள் முதலிய சான்றுகளைப் பயன்படுத்தி வரையப்படுவது ஆகும்'[3]

என தன்வரலாறு குறித்து ஆங்கில அகராதி மற்றும் ஆங்கிலக் கலைக் களஞ்சியம் இவ்வரையறைகளை முன் வைக்கின்றன.

தன்னைப்பற்றி ஒருவர் எழுதியது 'தன்வரலாறு' என பொதுவாக வகைப் படுத்தப்பட்டாலும் 'தன்வரலாறு' எனும் வடிவம் உரைநடை வடிவில் மட்டும் அமைவது அல்ல என்பது இவ்விடம் கவனம் கொள்ளத்தக்கது ஆகும். ஒருவர் தன்னைக் குறித்து வழங்கும் வாக்குமூலம், ஒருவரது நாட்குறிப்புகள், எழுத்துப் பனுவல்கள், சிறைக்குறிப்புகள், அனுபவப் பதிவுகள் முதலியவை தன்வரலாறு சார்ந்த ஆவணங்களாகத் திகழ்கின்றன. எனினும் தன்வரலாறாக எழுதப்பட்ட பனுவல்கள்தாம் 'தன்வரலாறு' எனும் 'இலக்கிய வடிவமாக' வகைப்படுத்திப் பார்க்கப்படுகிறது. "சுயசரிதை அல்லது தன்வரலாறு என்றால் என்ன என்ற கேள்விக்கு ஒருவர் தன்னைப்பற்றி எழுதுவது என்று கூறலாம். தன்னை,

நான் என்று மொழி அடையாளமாக்கி எழுதலாம். உடனே, ஒரு கேள்வி வரும். நான் என்று எழுதும் போது' (பேசும்போது அல்ல – நான் என்று பேசுவது உரையாடல் ஆகிவிடும்.) முன்னிலையில் நீ என வாசகர்கள் வந்துவிடுகிறார்கள். ஆய்வாளர்கள் grammatical 'I' என்று கூறும் நான் என்பது சம்பிரதாயமான சுயவரலாற்றின் anchor ஆகும். (anchor டி.வி.யில் நிகழ்ச்சிகளை நடத்துபவர்; மற்றும் கப்பலை இழுத்து நிறுத்தும் முள்கரண்டி)"[4] என்று தன்வரலாறு குறித்த பொது இலக்கணத்தை முன்வைக்கிறார் தமிழவன்.

மேற்குலக உரைநடை வளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய புனைவிலக்கிய வடிவங்களான புதினம் (Novel), சிறுகதை (Short stories) முதலிய வற்றைப் போலவே 'தன்வரலாறு' இலக்கிய வடிவமும் தோற்றம் பெற்றது. எனவே, தன்வரலாறுகள் 'உரைநடை'யினைத் தமக்கான இலக்கிய வடிவமாகக் கொண்டுள்ளன. ஒருவகையில் புனைவிலக்கியங்கள் என்பவை 'தன்னனுபவம்' சார்ந்த வெளிப்பாடுகளாக அமைந்திருப்பினும் அவற்றைத் தன் வரலாறுகளுக்கு இணையாகவோ, நெருக்கமானதாகவோ வைத்துப் பார்க்க முடியாது. ஏனெனில், புனைவிலக்கியங்களில் படைப் பாளியின் கற்பனை, வாசிப்பனுபவம், உணர்ச்சி, மதிநுட்பம் முதலியவை தொழில்புரிகின்றன. ஆனால், 'தன்வரலாறு' எனும் இலக்கிய வகைமைக்கு, அப்பிரதிகளின் மனச் சான்று (மனசாட்சி) மிக மிக அடிப் படையானதாக அமைகிறது. முன்னது புனைவின் சாத்தியக் கூறுகளை கற்பனைச் சிறகு விரித்து விசாலமாக்கும் இயல்பினை உடையது. பின்னது 'உண்மையை' உறுதியோடு பற்றி தன் மனக்கடலின் ஆழத்தில் நீந்திச் செல்வதற்கான உலைக்களச் சோதனை ஆகும். எனவேதான் உலகை வியக்கச் செய்த 20–ஆம் நூற்றாண்டு இந்தியரான 'மகாத்மா காந்தி' தனது தன்வரலாற்றிற்கு 'சத்திய சோதனை' என்று பெயரிட்டுள்ளார்.

காந்தி எரவாடா சிறையில் இருக்கும் போது சுயசரிதை எழுதிக் கொண் டிருக்கிறார். அச்சமயம் தெய்வ பக்தியுள்ள அவருடைய நண்பர் காந்தியிடம் அவர் எழுதிக் கொண்டிருக்கும் சுயசரிதைகள் குறித்துச் சில சந்தேகங்களை முன்வைக்கிறார். காந்தியின் நண்பர் காந்தியிடம் எழுப்பிய ஐயங்களும், அதற்கு காந்தி அளித்த விளக்கமும் தன்வரலாறு எனும் இலக்கிய வடிவம் குறித்த புரிதலை வழங்குவதாக அமைகிறது.

"... ... ... மேலும் நீங்கள் என்னதான் எழுதுவீர்கள்? உங்கள் கொள்கைகள் என்று நீங்கள் இன்று கொண்டிருப்பவைகளை நாளைக்கு நிராகரித்து விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அல்லது, இன்று நீங்கள் வைத்திருக்கும் திட்டங்களை நாளைக்கு மாற்றிக் கொள்ளுகிறீர்கள் என்றும் வைத்துக் கொள்ளுவோம். அப்போது, நீங்கள் பேசியவை அல்லது எழுதியவைகளை ஆதாரமாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இருப்பவர்களுக்குத் தவறான வழிகளைக் காட்டிவிட்டதாக ஆகிவிடாதா? சுயசரிதை போன்ற ஒன்றை, இப்போதைக்காவது எழுதாமலிருப்பது நல்ல தல்லவா?' என்று கேட்டார்.

இந்த வாதத்தில் ஓரளவு உண்மை இருக்கிறது என்பதை உணர்ந்தேன். ஆனால், உண்மையில் சுயசரிதை எழுதுவது என்பதல்ல என்

நோக்கம். நான் நடத்தி வந்திருக்கும் சத்திய சோதனைகள் பலவற்றின் கதையைச் சொல்லவே விரும்புகிறேன். என் வாழ்க்கையிலும் இந்தச் சோதனைகளைத் தவிர வேறு எதுவுமே இல்லை. ஆகையால் இக்கதை ஒரு சுயசரிதையாகவே அமையும் என்பது உண்மை. ஆனால், அதன் ஒவ்வொரு பக்கமும் என்னுடைய சோதனைகளைப் பற்றி மாத்திரமே கூறுமானால், அதைக் குறித்து நான் கவலைப்பட மாட்டேன். இந்தச் சோதனைகள் அனைத்தையும் பற்றிய தொடர்ச்சியானதொரு வரலாறு வாசகர்களுக்குப் பலனளிக்காமல் போகாது என்று நம்புகிறேன்�ளூ அல்லது அந்த நம்பிக்கையுடன் என்னை நானே பாராட்டிக் கொள்ளுகிறேன். ராஜீயத் துறையில் நான் செய்திருக்கும் சோதனைகள் இந்தியாவுக்கு மாத்திரமல்ல, ஓரளவுக்கு 'நாகரிக' உலகத்திற்கும் இப்பொழுது தெரிந்தே இருக்கின்றன"[5] என்று குறிப்பிடும் காந்தியடிகள், "என்னுடைய எல்லாக் குற்றங்களையும் தவறுகளையும் வாசகருக்கு அறிவிப்பேன் என்றே நம்புகிறேன். என் நோக்கம், சத்தியாகிரக சாத்திரத்தில் நடத்திய சோதனைகளை விவரிப்பதேயன்றி, நான் எவ்வளவு நல்லவன் என்பதைச் சொல்லுவது அன்று. என்னுடைய நன்மை, தீமைகளை மதிப்பிடுவதில் சத்தியத்தைப் போல அதிகக் கண்டிப்பாக இருக்கவே நான் முயல்வேன்"[6] என்று 'தன்னுடைய வாழ்க்கை' குறித்து தன் எழுத்திற்கு உரிய நிலைப்பாட்டினையும், கொள்கை யினையும் முன்வைக்கிறார்.

ஒருவர் தன்னுடைய சாதனைகளையும், தற்பெருமைகளையும் மட்டும் எழுதிச் செல்வது, நேர்மறையான பக்கங்களை மட்டும் எழுதிச் செல்வது என்பது 'தன்வரலாற்று' இலக்கியத்திற்கு நியாயம் சேர்ப்பதாக எதிர்பார்க்க இயலாது. மேற்குறித்தவற்றை விவரிப்பதிலும், எழுதுவதிலும் எந்தவித இடையூறும் நேரிடாது. தன்னுடைய அந்தரங்கத்தை சுயவிமர்சனம் மற்றும் சமூக நோக்கோடு அதிகபட்ச நேர்மையோடும் மனச்சான்றுடனும் எடுத்துரைப்பதே 'தன்வரலாறு இலக்கியத்தை' ஆக்குவதில் உள்ள சவாலாகும். 'தன்வரலாறு' குறித்த இலக்கணத்திற்கு காந்தியடிகளின் மேற்குறித்த கூற்றுகள் தக்க சான்றுகளாக அமைகின்றன. தன்னைக் குறித்து தன்னால் எழுதப்படும் வரலாற்றுக்கு காந்தியடிகள் தன்னளவில் தன் மனச் சான்றின்படி ஓர் இலக்கணத்தை உருவாக்கிக் கொண்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். எனினும் எழுதப்படுவது எல்லாம் இலக்கியம் ஆகாது. அது போல தன்னைப்பற்றி எழுதுவன எல்லாம் தன்வரலாறு ஆகிவிடாது. எந்தவொரு வகைமையிலான இலக்கியப் படைப்பிற்கும் கறாரான இலக்கணத்தையோ, வரையறை களையோ வகுத்துவிட இயலாது. எனினும் சில பொதுவான அம்சங்கள், அடிப்படைக் கூறுகள், வடிவ மற்றும் உள்ளடக்கத்தின் பண்புநலன்கள் முதலியவை அவ் இலக்கியப் படைப்பின் ஏற்பு மற்றும் நிலைத் தன்மையினைத் தீர்மானிப்பதற்கான அடிப்படைக் கூறுகளாக அமைகின்றன. குறிப்பாக தன்வரலாறு எனும் இலக்கிய வகைமைக்கு 'உண்மையும் நேர்மையும்' உரைகற்களாக அமைகின்றன.

## தன்வரலாறும் வாழ்க்கை வரலாறும்

தன் (தன்னிலை, சுயம்), வரலாறு ஆகிய இரு சொற்களின் இணைப்பு தன்வரலாறு (Autobiography) எனும் கலைச் சொல்லாகும். வாழ்க்கை,

வரலாறு ஆகிய இரு சொற்களின் இணைப்பு 'வாழ்க்கை வரலாறு' (Biography) எனும் கலைச் சொல்லாகும். 'வரலாறு' எனும் அறிவுப்புலம் பரந்து விரிந்த களங்களை உடையது. ஆனால் அதன் முன்னொட்டாக ஏதேனும் ஒரு சொல் இணையும்போது உருவாகும் 'சொல்' ஒரு குறிப்பிட்ட எல்லையினையும் வரையறுக்கப்பட்ட தன்மைகளையும் பெற்றுவிடுகிறது. தன்வரலாறும், வாழ்க்கை வரலாறும் இவ்வகைப்பட்டவையாக அமைகின்றன. தன் வரலாறு, வாழ்க்கை வரலாறு ஆகிய இரு வகையான இலக்கியங்களும் 'தனிநபர்' ஒருவரின் வாழ்க்கையினைப் பதிவு செய்வது என்கிற அடிப்படையில் ஓர் ஒற்றுமை உள்ளது எனினும் 'தன்வரலாறு' என்பது நூலாசிரியன் தானே எழுதுவதாகவோ அல்லது ஓர் உதவியாளரின் துணைகொண்டு எழுதச் செய்வது ஆகும். ஆனால் வாழ்க்கை வரலாறு என்பது வாழ்ந்தவர், வாழ்ந்து கொண்டிருப்பவர் ஒருவரின் வாழ்க்கை குறித்து மற்றொரு ஆசிரியரால் எழுதப்படுவது. இந்த மையப் புள்ளியில் இவ்விரு வகையான இலக்கிய வகைமைகளும் தம்மளவில் பெரிதும் வேறுபடுகின்றன.

"தன்னுடைய வரலாறுக்கும் இன்னொருவருடைய வரலாறுக்கும் வேறுபாடு உண்டு. அது வாழ்க்கை வரலாறு. ஆங்கிலத்தில் Biography. இந்த வடிவத்தில் எழுதுபவரும் எழுதப்படுபவரும் ஒருவராய் இருப்பதில்லை. பையோ கிராபியின் உள்ளடக்கமும், ஆட்டோ பயோகிராபியின் உள்ளடக்கமும் வேறு. வாழ்க்கை வரலாற்றை யாரும் இன்னொருவர் மீது எழுதலாம். ஆட்டோ பயோகிராபி அப்படி அல்ல. யார் எழுதினாலும் அவர் தன்னைப் பற்றி மட்டுமே எழுத வேண்டும் என்ற விதியை நிச்சயமாய்ப் பின்பற்றியே ஆக வேண்டும். என்ன வார்த்தையைப் பயன்படுத்தினாலும் (நான், நீ, அவன் அல்லது ஒரு புனைபெயர்) ஒருவரின் உள்நோக்கிய தகவல்கள் அதில் இருந்தே ஆகவேண்டும். (தன் உள்நோக்கல் என்பது தன் வெளிநோக்கலில் இருந்து மாறுபட்டதாகாது என்பது முக்கியம்)"[7] இவ்வாறு இவ்விரு வடிவங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துரைக்கிறார் தமிழவன்.

ஒரு நபரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது என்பது பல காரணிகளைச் சார்ந்தது. அரசியல், சினிமா, இலக்கியம், சமூகச் செயல்பாடுகள், ஆன்மீகம், விளையாட்டு, தொழில், போராட்டம் முதலிய ஏதேனும் ஒரு துறையில் கோலோச்சியவர், சாதனை படைத்தவர்கள் குறித்து அவர்தம் ஆளுமையால் கவரப்பட்ட வேறொரு நபர்கள் நூலாசிரியர்களாகி அவர்தம் வாழ்க்கை வரலாற்றை எழுதுகின்றனர். நூலாசிரியர் கைக்கொள்ளும் அணுகு முறையைப் பொறுத்து ஒரு நபர் குறித்து எழுதப்படும் வாழ்க்கை வரலாறு நேர்மறையானும் எதிர்மறையானதுமான குணவியல்புகளைப் பெறுகின்றன. சிக்மண்ட் பிராய்டு போன்ற உளவியல் அறிஞர்கள் முன்வைத்த உளவியல் கோட்பாட்டைப் பயன்படுத்தி ஒருவரின் ஆளுமையினை ஆராய்ந்து எழுதும் போக்குகளும் காணப்படுகின்றன.

வாழ்க்கை வரலாறு என்பது ஒருவர் வாழ்ந்த வாழ்க்கை குறித்த மற்றொருவரின் ஆய்வுப் பார்வை முதலியவைகளை உள்ளடக்கியிருக்கும். ஓர் ஆளுமை குறித்து பல நூல்களிலும் இடம்பெற்றுள்ள பதிவுகள், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்டவர்களின் வாய்மொழித் தரவுகள், அந்த ஆளுமை வழங்கிய நேர்காணல்கள், ஆற்றிய உரைகள், அவர் விட்டுச் சென்ற

நாட்குறிப்புகள், கடிதங்கள் முதலிய எழுத்தாவணங்கள் முதலியவை ஒருவரது வாழ்க்கை வரலாறு குறித்து எழுதுவதற்கு உரிய ஆதாரங்களாக அமைகின்றன. ஆனால் தன் வரலாற்றில் எழுதுபவரின் அனுபவங்களும், நினைவாற்றலும் முக்கிய இடம் வகிக்கின்றன.

"வாழ்க்கை வரலாறு அல்லது சுயசரிதை என்பது ஒருவருடைய வாழ்க்கையின் முழுமையான நிகழ்வுகளின் தொகுப்பாகும். இது ஒருவருடைய கல்வி, வேலை, உறவுகள் மற்றும் இறப்பை மட்டும் உள்ளடக்கியதல்ல. மாறாக ஒருவருடைய வாழ்க்கைச் சரித்திரம் என்பது அவருடைய வாழ்க்கை நிகழ்வுகளை ஒருவருடைய அனுபவத்தின் நெருக்கமான விவரங்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை முன்னிலைப்படுத்தி அவர்களின் ஆளுமைத் திறனைப் பற்றி விளக்கமாக வர்ணிப்பதாகும். அது மட்டுமல்லாமல் அத்தகைய ஆளுமையின் பகுப்பாய்வையும் சில நேரங்களில் உள்ளடக்கியிருக்கலாம். வாழ்க்கை வரலாற்றுப் படைப்புகள் பொதுவாக புனைகதை அல்ல, ஆனால் ஒரு நபரின் வாழ்க்கையைச் சித்திரிக்க புனைகதை வழியாகவும் கூறலாம்"[8] என விக்கிப்பீடியா தெரிவிக்கிறது.

தமிழில் செய்யுள் வடிவில் மன்னர்களைப் பாட்டுடைத் தலை வனாகக் கொண்டு பாடப்பட்ட உலா, கலம்பகம், பரணி, பிள்ளைத்தமிழ் முதலிய சிற்றிலக்கிய நூல்கள், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் முதலிய இலக்கியங்களை புனைகதை வழிப்பட்ட வாழ்க்கை வரலாற்று இலக்கியத்திற்கான முன்னோடிகளாகக் குறிப்பிடலாம். உலக இலக்கிய வரலாற்றில் 'வாழ்க்கை வரலாற்று' இலக்கியம் கி.பி.2–ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் குறிப்பிட்டாலும் அது தற்போது உள்ள வடிவில் நிலைபெற்றது கி.பி.17–ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.20–ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் எனக் கருதலாம். இன்றைய சூழலில் உள்ள பல மொழிகளிலும் வெளிவந்துள்ள எண்ணிறைந்த வாழ்க்கை வரலாற்று நூல்கள் மலைபோல் குவிந்துள்ளன. மகாத்மா காந்தி, ஆபிரகாம் லிங்கன், காரல் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், நெல்சன் மண்டேலா முதலிய உலகின் கவனத்தை ஈர்த்த ஆளுமைகளின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் அதிக அளவில் வெளிவந்துள்ளன.

'வரலாறு' என்பது தனிப் பெருந்துறையாக இருந்தாலும் உலக வரலாற்று நிகழ்ச்சிப் போக்குகளில் அதன் இயங்கியலைத் தீர்மானிக்கும் சிறு விசையாக சில பல தனிநபர்கள் திகழ்ந்துள்ளனர். எனவே ஒரு தனிப்பட்ட நபரின் வாழ்க்கை வரலாறு என்பது வரலாற்றின் ஓர் அங்கமாகவும் நிகழ்கிறது. குறிப்பாக முந்தைய காலங்களில் ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதும் போக்கு வரலாற்றின் துணைப்பகுதியாகக் கருதப் பட்டது. 17, 18–ஆம் நூற்றாண்டுகளில் 'வாழ்க்கை வரலாறு' எழுதும் முறை தனித்த வகைமையாக உருப்பெற்றது. "கார்னீலியஸ் நீபோஸ் என்பவர் 'வாழ்க்கை வரலாறு' எழுத்துகளின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப் படுகிறார். இவர் கி.மு.44–ஆம் ஆண்டில் 'எக்லென்ஸியம் கிம்பரேடாரம் விட்டேயி' (லைவ்ஸ் ஆஃப் அவுட் ஸ்டேன்டிங் ஜெனரல்ஸ்) எனும் நூலை வெளியிட்டார். கி.பி.80–ஆம் ஆண்டில் மிகவும் நீளமான வாழ்க்கை வரலாறான 'பாரலல் லைவ்ஸ்' எனும் நூல் புளுடார்ச் என்பவரால் கிரேக்க மொழியில் இயற்றப்பட்டது. கி.பி.121–ஆம் ஆண்டு சியுடோனியஸ் என்பவர்

'டீ விட்டா சீசரம்' எனும் வாழ்க்கை வரலாற்று நூலை இயற்றினார்"[9] இவை தொடக்ககால வாழ்க்கை வரலாற்று நூல்கள் ஆகும்.

20–ஆம் நூற்றாண்டில் வாழ்க்கை வரலாறு எழுதும் கலை பல புதிய தன்மைகளைத் தன்னகங் கொண்டதாக வளர்ச்சியடைந்துள்ளது. வாழ்க்கை வரலாறுகள் எழுதப்பட்ட போது அரசர்கள், துறவிகள், ஆட்சியாளர்கள், இலக்கியப் படைப்பாளிகள் முதலிய சமுதாயத்தில் புகழ் அடைந்தவர்கள், மேல்தட்டினர் உள்ளிட்டோர் மையப் படுத்தப்பட்டனர். தற்போதைய பின்காலனியச் சூழலில் வாழ்க்கை வரலாறு எழுத்தியலானது விளிம்பினை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. சமுதாயத்தின் விளிம்பிற்கு அப்பால் துரத்தியடிக்கப்பட்ட நாடோடிகள், பழங்குடியினர், திருநங்கையர், திருடர்கள், பாலியல் தொழிலாளர்கள் முதலியோர் குறித்த வாழ்க்கை வரலாறுகள் புதிய இனவரைவியல் பனுவல்களாகவும், விளிம்புநிலை வழக்காறுகளாகவும் வெளிவரத் தொடங்கியுள்ளன. இத்தகையதொரு மாற்றம் 21–ஆம் நூற்றாண்டு வாழ்க்கை வரலாற்று வகைமைகளில் நிகழ்ந்துள்ளன. உலக மொழிகள் பலவற்றுள் 'வாழ்க்கை வரலாறு' எனும் வகைமை செழித்து வளர்ந்து வருவதைப் போல தமிழிலும் வளர்ந்து வருகின்றது.

**முடிவுரை:**

தன்வரலாறு என்னும் இலக்கிய வகைமை தற்காலத்தில் தனித்ததொரு அடையாளத்துடன் உருவாகி யுள்ளது. மனிதர்களின் கதைகளை உணரும் மற்ற மனிதர்கள் அதிலிருந்து சில படிப்பினைகளை அறிந்து கொள்கிறார்கள். அவை அவர்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவை அவர்களைப் பக்குவப்படுத்தும் கருவியாகத் திகழ்வதை அறியமுடிகிறது.

**குறிப்புகள்:**


1. https://www.supersummary.com/ auto biography/
2. Oxford – English – English – Tamil Dictionary, p.88
3. https://www.brittanica.com/art/auto biography–literature
4. தமிழவன் (க.ஆ.), தன்வரலாறு – ஓர் இலக்கிய வடிவம், ப.19
5. வேங்கடராஜுலு, ரா., மகாத்மா காந்தியின் சுயசரிதை – சத்திய சோதனை, ப. V–VI
6. மேலது., ப. X
7. தமிழவன் (தொ.ஆ.ரூக.ஆ.), மேலது., ப.14
8. https://ta.m.wikipedia.org/wiki/9.
9. https://medbox.iiab.me/kiwix/wikipedia_ta_all_maxi_2019&12/A%EO%

# ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'எண்வகை திருமணங்கள்'

நெறியாளர்
**முனைவர் பூ.பூங்கோதை,**
இணைப்பேராசிரியர்,
துறைத் தலைவர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

ஆய்வாளர்
**ரா. ஹேமா சிவகா,**
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை

வெண்முரசு நாவலானது மகாபாரதத்தைத் தழுவி தொன்மங்களை மறு ஆக்கம் செய்யும் ஒரு நவீன நாவல். இந்நாவலில் பாரதத்தின் பண்பாட்டு படிமங்களைத் தெளிவாகக் காண இயலும். அவ்வகையில் மக்களின் அகவளர்ச்சியைக் காட்டும் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான திருமணம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்து வாழச் சமுதாயம் ஏற்படுத்தும் ஓர் அமைப்பு முறை. இம்முறையை நால்வேத நெறியினர் எட்டுவகைத் திருமணங்களாக வகுத்துள்ளனர். அவை அறநிலை, ஒப்பு, பொருள்கோள், தெய்வம், யாழோர் கூட்டம், அரும்பொருள் வினை, இராக்கதம், பேய்நிலை போன்ற திருமண முறைகளாகும். இத்தகைய மணங்களை இவ்வாய்வுக் கட்டுரையில் காணலாம்.

## தொல்காப்பியர் நெறியில் எண்வகை மணங்கள்

நால்வேத நெறியினர் வகுத்த திருமணங்கள் எட்டு என தொல்காப்பியர் தம் நூற்பாவில்,

**"அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமகூட்டம் காணுங்காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்"[1]**

என்று குறிப்பிடுகிறார். எண்வகை மணமான அறநிலை (பிரமம்), ஒப்பு (பிரசாபத்தியம்), பொருள்கோள் (ஆரிடம்), தெய்வம், யாழோர் கூட்டம் (கந்தர்வம்), அரும்பொருள் வினை (அசுரம்), இராக்கதம், பேய்நிலை (பைசாசம்) என உரையாசிரியர்கள் தமிழிலக்கிய நெறிக்கு ஏற்ப பிரித்திருப்பது கீழ்கண்ட இறையனார் களவியல் உரை மேற்கோளால் அறியமுடிகிறது.

**"அறநிலை யொப்ப பொருள்கோள் தெய்வம்**
**யழோர் கூட மரும்பொருள் வினையே**
**இராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய**
**மறையோர் மன்ற லெட்டிவை"[2]**

இதில் அறநிலை, ஒப்பு, பொருள் கோள், தெய்வம், என்ற நான்கும் கைக்கிளை எனவும், அரும்பொருள் வினை, இராக்கதம், பேய்நிலை என்ற மூன்றும் பெருந்திணை எனவும், யழோர் கூட்டம் அன்பின் ஐந்திணை எனவும் தமிழர் அக வாழ்க்கைக்கு ஏற்ப பிரிக்கப் படுகிறது.

### அறநிலை (பிரமம்)

**"ஒப்பருக் கொப்பா ரொருபூப் பிரிந்தபின்**
**இன்பான் மதித்தோன்றா வெல்லைக்க ணப்பாற்**
**றருமே போல்கென்று தக்கார்க்குச் சேர்த்தல்**
**பிரம்ம போலும் பெயர்"[3]**

என்கிற அறநிலை மணமானது ஒத்த நல்லொழுக்கம் கொண்ட வேதம் கற்ற பிரம்மச்சாரிக்குக் கன்னியைத் தீமுன் நீர்பெய்துத் தானமாகக் கொடுத்தல்.

வெண்முரசு நாவலில் துரோணர் – கிருபி திருமணம் இவ்வகையைச் சார்ந்ததாகும். “இந்த தர்ப்பையைக் கன்யசுல்கமாகப் பெற்றுக்கொண்டு என்மகள் கிருபியை உன் அறத் துணைவியாக அளிக்கிறேன்”4 என்று எரிகுளம் அமைத்து, வேதம் ஓதி துரோணர் தர்ப்பையாலான மங்கல நாணை கிருபியின் கழுத்தில் கட்டினார். துரோணர் ஒருமுறை கூட கிருபியைத் திரும்பிப் பார்க்கவில்லை. கைத்தலம் பற்றும்போது அவள் கைகளைப் பார்த்திருந்தார். மங்கல நாண் அணிவிக்கையில் நெற்றிவகிடையும் கண்டிருந்தார். ஆனால், அவளை நோக்கி அவர் திரும்பவில்லை. இவ் வகை மணமும் தமிழர் நெறிப்படி கைக்கிளையில் அடங்கும்.

## ஒப்பு அல்லது விதிமணம் (பிரசாபத்தியம்)

விதிமணமானது,

**“கொடுத்த பொருள்வாங்கிக் கொண்டபேர்**
**மடுப்பர் மடுத்தற் கமைந்த - லடுப்போ**
**னிரண்டு மடங்கு பெயத்வ ததுவே**
**யிரண்டா மணத்தியல்பு”**[5]

என்று மணமகன் கொடுக்கும் பரிசத்தினை விட மணமகள் வீட்டார் இருமடங்குச் செல்வம் கொடுத்துப் பெண்ணை மணம் செய்து அனுப்புதல் அல்லது தலைவன், தலைவி இருவரது பெற்றோரும் உடன்பட்டுத் திருமணம் செய்து வைப்பதும் இவ்வகை மணமுறை யாகும். துரியோதனன், துச்சாதனன் திருமணம் தவிர்த்து மற்ற கௌரவர்களின் திருமணமும் நூற்றுவரின் இளையவள் துச்சளையின் மணமும் இவ்வகை திருமணத்தில் அடங்கும். அரசத் திருமணங்களில் பெண்வீட்டார் அதீத செல்வம் கொடுத்து மணம் செய்வதைப், “படகுகள் அனைத்தும் அஸ்தினாபுரிக்கு மகள்கொடைச் செல்வத்துடன் வந்து காத்து நிற்கின்றன. ஏனென்றால், அங்கே களஞ்சியம் நிறைந்து செல்வத்தை அள்ளி முற்றத்தில் குவித்திருக்கிறார்கள்”[7] என்ற வரிகள் உணர்த்துகிறது. மண வுறவில் படைபலமும் நிதிபலமும் பெருக்குவதற்காக ஒப்பு என்கிற விதி மணங்கள் நடைபெறுவதால் இத்தகைய மணமும் கைக்கிளைச் சார்ந்ததாகும்.

## பொருள்கோள் (ஆரிடம்)

தான் செய்ய வேண்டியத் தர்மங்களுக்காகப் பசுக்களைப் பெற்றுக் கொண்டு செய்யும் திருமணத்தைக் கீழ்க் கண்ட பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**“இற்குலத்தோடு ஒப்பானுக் கொடுப்பான் இமிலேறாப்**
**பொற்குளம்பில் பொற்கோட்ட ஆப் புனைந்து - முற்படுத்து**
**வாரிடம்பே ராமுலையை வாழ்க்கைக்கண் வைப்பதுவரை**
**லாரிடம்பே ராகு மதற்கு”**[8]

ஒத்த குலத்துடைய இரு வீட்டாரும் பொன்பூசியக் கொம்புகளை உடைய பசுவையும், அணிமணிகள் புனைந்த காளையின் முன்னர் நீர் பெய்து ஆவை கொடுத்தோ அல்லது பெற்றோ செய்யும் திருமணமாகும். இவ்வகைத் திருமணம் பெரும்பாலும் யாதவக் குலங்களில் நடைபெறும்.

ராதை – அபிமன்யுவிற்கு நடக்கும் திருமணச் சடங்கில் “கன்றுடன் கூடிய வெண்பசுவை ரிஷபானு அளிக்க ராதை அதன் கயிறு பற்றி அவனுக்கு அளித்தாள்”[9] இவ்வகைச் சடங்குகள் கன்று ஏற்புச் சடங்குகளாக ஆயர்குல மணக்கோடலில் நிகழ்கிறது. இதுவும் பொருள்கோள் மணத்தைச் சார்ந்த கைக்கிளைத் திணையாகும்.

## தெய்வம்

வேள்வி செய்பவருக்குப் பெண்ணை அக்னி சாட்சியாகத் தான மாகக் கொடுக்கும் முறை தெய்வ மணமுறை. இதற்கான சான்று பாடல்,

"மெய்பாலைத் பெண்தன்மை
யெய்தியபின் மெல்லியலை
ஒப்ப வுணர்ந்த பொழுதுண்ட
- லொப்பார்க்கு
நெய்தயங்கு தீ முன்னர் நேரிழையை
ஈவதோ
தெய்வப்பே ராகுந் தெரிந்து"[10]

ஒரு பிராமணர் நீர்க்கடன் அளிக்க தனக்கொரு மகன் வேண்டும் என்பதற்காக உத்தாலகரின் மனைவியைத் தானமாகப் பெறுவதை, "நெறிகளின்படி எனக்கு ஒரு மைந்தனைப் பெற உரிமை உண்டு. அதற்கு நான் இவளைக் கொண்டு செல்வதும் சரியே"[11] என்றும் மகனை ஈன்றளித்தல் ஒரு பெண்ணுக்கு எவ்வகையிலும் இளிவல்ல பெருமையே என்று உத்தாலகரும் அவள் மனைவியை அந்த பிராமணருக்குத் தீமுன்னர் கையளித்து விடுகிறார். இத்தகைய மணமுறையும் கைக்கிளையைச் சாரும்.

## யழோர் கூட்டம் (கந்தர்வம்)

மனம் ஒத்த இருவர் தாமே கூடும் கூட்டமாவது,

"உளமலி காதல் களவு எனப்படுவது
ஒருநான்கு வேத்து இருநான்கு மன்றலுள்
யழோர் கூட்டத்தின் இயல்பினது
என்ப"[12]

என்று தொல்காப்பியம் எடுத்துரைக் கிறது. இம்மணமானது தமிழ் மக்களின் அக வாழ்க்கையில் ஒன்றான களவிற்கு இணையானது. இம்மணம் ஆண், பெண் அன்பிற்கு முதன்மை தரக்கூடியது.

அருச்சுணன் – சுபத்திரை இருவருக்கும் நடந்தது கந்தர்வ திருமணம். சுபத்திரைக்கு மணம் நிகழ்த்த நாள் முடிவு செய்து பிற நாடுகளுக்கு முறைப் படி அறிவித்து அரச முறைப்படி மணத்தன்னேற்பு நிகழ்த்தும் வேளையில் அருச்சுணன் சுபத்திரையிடம் "ஆணுக்கும் பெண்ணுக்கும் நடுவே அந்த புரிந்துகொள்ள முடியாத ஒன்று நிகழ்ந்து விடுகிறது. உங்கள் உள்ளத்தில் நான் அமர்த்துவிட்டேன் இளவரசி! இனி பிறிதொரு ஆண் உங்களைத் தொட உங்கள் ஆணவம் ஒப்புக் கொள்ளாது"[13] என்ற கூற்றின் மூலம் காதலை வெளிப் படுத்தி இருவரும் உடலாலும் மனதாலும் இணைகின்றனர். இவ்வாறு இருவரும் உளம் ஒத்து அன்பு கலந்து கூடுகின்ற தமிழ் மரபுவழிபட்ட களவு முறையே யாழோர் கூட்டம் ஆகும்.

## அரும்பொருள் வினை (அசுரம்)

அரிய போட்டிகளில் வென்று மணமகன் மணப்பெண்ணைப் பெறு தலாகும். அவை,

"வில்லேற்றல் வேள்வியைக் காத்தல்
மிகுவலிக்
கொல்லேற்று இயல்குழையைக் கோடல்
என்று - எல்லாம்
அரியன செய்து எய்தின னாயின் அசுரம்
அரியவாம் அந்த மணம்"[14]

என்ற பாடல் மெய்ப்பிக்கிறது. அரசர்கள் தங்கள் மணத்தன்னேற்பில் முடிகொண்ட அனைவரையும் அழைக்கலாம் என்பது தொல் நெறி. அத்தகைய மணத்தன்னேற்பு வீரத்திற்கானப் போட்டி என்பதால் அதில் கலந்து கொண்டு பரிசெனப் பெண்ணை வெல்லலாம். தேவகி – வசுதேவர் திருமணம் இவ்வகை முறையே. "மணத்தன்னேற்பு நெறிகளின்படி போட்டியில் வென்றவனை இளவரசி ஏற்பாள். இதுவே அரசகுல முறை. அதனால் ஏறு தழுவுதலையே மணநெறியாக தேவகர் அறிவித்திருந்தார்"[15] தேவகியின் கழுத்தில் அணிய வேண்டிய மஞ்சள் நூல் ஏற்றின் கொம்பில் கட்டப்பட்டிருக்கும். கம்சர் அந்த ஏற்றினை அடக்கி காளையின் மங்கல நாணைப் பிறித்தெடுத்து,'நண்பன் வசுதேவனுக்காக நான் வென்ற மங்கல

நாண்' என்று தேவகியை வசுதேவருக்கு மணம் செய்து வைக்கிறார். இவ்வகை அசுரமணம் வலிமைக்கே முதண்மை கொடுப்பதால் பொருந்தா காமமாகிய பெருந்திணையைச் சாரும்.

## இராக்கதம்

"பூந்துகிலோ டின்னனவும் மேலிட்டும் கதவடைத்தும்
பாய்ந்து கதந்தா அய்ப் பற்றிக்கொண் - டேந்திழையை
எய்தப் படுவ திராக்கதம் என்பதே
மைதீர்ந்தார் சொல்லும் மணம்"[16]

ஒரு பெண்ணை அவள் இடத்தி லிருந்து தன் வலிமையால் கவர்ந்து வந்து மணம் செய்வது இராக்கதம் என்கிறது. மணக்கொடை ஏற்க விழைவதாக அனுப்புகின்ற தூதுகள் மறுக்கப்பட்டால் அப்பெண்ணின் விருப்பமின்றி அவள் கவர்ந்து வரப்படுகிறாள். பீஷ்மர் காசி நாட்டு சுயம்வரத்தைத் தடைசெய்து அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்ற மூன்று பெண்களையும் தன் வலிமையின்பால் கவர்ந்து வருகிறார். அம்பையை அவள் விரும்பிய காதலனுக்காக அனுப்பி வைத்து, அம்பிகையையும் அம்பாலிகையையும் தம்பியாகிய விசித்திர வீரியனுக்கு மணம் முடித்து வைக்கிறார். சிபிநாட்டு இளவரசி தேவிகையைப் பீமசேனன் கவர்ந்து வந்து தருமருக்குத் திருமணம் செய்துவைக்கிறான். துரியோதனனும் துச்சாதனனும் காசிநாட்டு இளவரசிகளான பானுமதி, அசலையை கவர்ந்து வந்து மணம் செய்து கொள்கிறார்கள். "ஷத்ரியன் பெண் கொள்வதற்கு பெண்ணுள்ளம் உசாவும் வழக்கம் இல்லை"[17] என்பதை இராக்கத மணமுறை தெளிவாக்குகிறது. இவ்வகை மணமுறையில் எந்தநாட்டு இளவரசியை எவர் மணக்கப் போகிறார் என்பதில்தான் அந்நாட்டின் அரசியலே அடங்கியுள்ளது. இத்தகைய மணமுறையும் பொருந்தாக் காமமாகியப் பெருந்திணையைச் சாரும்.

## பேய்நிலை (பைசாசம்)

"துஞ்சல் களித்தல் மயங்குதல் மாழாத்தல்
அஞ்சல் அறிவழித லாதலென் - றெஞ்சினவும்
இன்ன திறத்தா னிழித்தக எய்துபவவேற்
பின்னைப் பசாசமணப் பேர்"[18]

தூக்கத்திலோ, குடி மயக்கத்திலோ, இறந்தோ உள்ள ஒரு பெண்ணைப் புணர்வது பேய்நிலை. விசித்திர வீரியன் இறப்பிற்குபின் சந்ததி வழித் தோன்றலுக்காக அம்பிகை, அம்பா லிகைக்கு நாகரசம் கொடுத்துத் தன்னிலை இழக்க வைத்து மைத்துனர் வியாசருடன் கூட வைத்தல் பேய்நிலை மணமாகும்.

சேதிநாட்டரசன் சிசுபாலன் "யாதவ குலமகளை அவள் விழைவிற்கு மாறாகக் கவர்ந்து சென்று கருகுமணித்தாலியை அறுத்தெறிந்துவிட்டு அவளை விலங் கெனப் புணர்ந்தான். சிசுபாலனின் இந்த செயல் யாதவ குடிகளை நடுங்கச் செய்தது"[19] இத்தகைய மணமும் பொருந்தாக் காமமாகிய பெருந்திணை என்னும் பேய் நிலை ஆகும்.

## முடிவுரை

மகாபாரதத்தின் மறுபுனைவான வெண்முரசு நாவல் குறிப்பிடும் எண்வகை மணமுறைகளில் தமிழர் பின்பற்றியது களவு, கற்பு என இருவகையே. ஆனால் வடவரின் எண்வகை திருமணங்களில் ஐந்திணையுள் அடங்கிய யழோர் கூட்டம் தவிர்த்து, மற்ற திருமணங்கள் கைக்கிளை, பெருந்திணையுள் அடங்கும். இவ்விரு திணையும் முறையான மண வாழ்க்கை அல்லாத வடவரின் திருமண முறைகளாகும்.

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற். 1038

2. இறையனார் களவியல், மேற்கோள் பாடல், சூத்திரம். 1

3. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு ப.141

4. ஜெயமோகன், வெண்முரசு, வண்ணக்கடல் ப.343

5. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு ப.142

6. ஜெயமோகன், வெண்முரசு, வெய்யோன் ப.74

7. மேலது, வெண்முகில் நகரம், ப.976

8. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.142

9. ஜெயமோகன், வெண்முரசு, நீலம், ப.196

10. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.142

11. ஜெயமோகன், வெண்முரசு, இந்திர நீலம், ப.604

12. தொல்காப்பியம், களவியல், நூற்பா.1

13. ஜெயமோகன், வெண்முரசு, காண்டீபம், ப. 604

14. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.143

15. ஜெயமோகன், வெண்முரசு, நீலம், ப.47

16. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.143

17. ஜெயமோகன், வெண்முரசு, இந்திர நீலம், ப.821

18. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.144

19. ஜெயமோகன், வெண்முரசு, பன்னிரு படைக்களம், ப.577